
161991

# வேதாந்த தீபிகை

## 2 - வது ஸம்புடம் :

## விஷயங்களின் அகராதி.


ஓர் புதிய மதம் ... ... ... 1.

கடிதங்கள் :—

    ஓர் நல்ல தர்மம் ... ... ... 370.
    ஓர் புதிய உபஸபை ... ... 372.
    கதிரி ... ... ... ... 284.
    கேவல ஆசாரம் ... ... ... 165,203,236.
    நம்மாழ்வார் திருநாமம் ... ... 326,369.
    பகவத் விஷயம் ... ... ... 125,164.
    பீஷ்மர் ப்ரதிவசநம் ... ... 239.
    ருதுமதீ விவாஹம் ... ... 206,235,285,319,323.
    ஸ்ரீ அஹோபில மடமும் மைஸூர் ப்ரதேசமும் ... ... 239.
    ஸ்ரீ அஹோபில மடமும் ஸிஷ்ய ஸபையும் 207.
    ஸ்ரீ அஹோபில யாத்ரை ... ... 409.
    ஸ்ரீ க்ருஷ்ண, கர்ணாம்ருதம் ... ... 33,80,81.
    ஸ்ரீ மடத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் ... ... 34.
    ஸ்ரீ ராகவன் கணையாழி ... ... 33.
    ஸ்ரீ ராகவனுடைய ப்ரதிசயநம் ... 76,123.

கர்மயோகம் ... ... ... 72.

கேவலாசாரம் ... ... ... 119.

ஜீவாத்மாவின் பகவத் தாஸ்யம் ... ... 154.

திருப்பாவை ஶ்லோகங்கள் ... ... 329.

ப்ரச்நங்கள்

    க்ரஹணத்தின் தத்வம் ... ... 406.
    துளஸீக்ரஹணம்... ... ... 407.

ப்ரமாணங்களின் தத்வம் ... ... 137.

பகவத்கீதாதாத்பர்யம் ... ... ... 347.
பகவத் விஷயம் ... ... ... 29.
பத்ராதிபரின் குறிப்புகள்.
அத்வைத உபந்யாஸங்கள் ... ... 333.
உபாகர்மம் ... ... ... 289.
ஓர் புதிய மதம் ... ... ... 84.
காஞ்சீபுரம் பரிஷத் ... ... 130.
கும்பகோணம் பரிஷத் ... ... 243.
தத்கால ஸங்கங்கள் ... ... 374.
திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி
தேவஸ்தாநம் ... ... 244.
சிஷ்ய ஸபையின் மூன்றுவது
மஹாஸங்கம் ... ... 330,376,415.
நமது புதிய கவர்ணரவர்கள் ... ... 415.
ப்ரஸிடென்ஸி காலேஜ் ஸம்ஸ்க்ருத
ப்ரொபெஸர் ... ... 245.
பாஷா அத்வைதம் ... ... 334.
மதுராந்தக மஹாஸங்கம் ... ... 466.
மன்னார் கோவிலில் ஸ்ரீ அழகியசிங்கர் ... 241.
ராஜ ப்ரதிநிதிக்கு நேரிட்ட அபாயம் ... 465.
ராஜ ப்ரதிநிதியின் தேஹஸ்திதி ... 511.
ஸ்ரீ அழகியசிங்கரின் அஸ்வாஸ்த்யம் ... 512.
ஸ்ரீ அழகியசிங்கரின் ஔதார்யம் ... 42.
ஸ்ரீ அழகிய சிங்கரின் திருமேனி ... 87.
ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஓர்
விஜ்ஞாபநம் ... ... 417.
ஸ்ரீ அஹோபிலம் ... ... 421.
ஸ்ரீ அஹோபில மடம் ... ... 136.
ஸ்ரீ அஹோபில மடமும் சிஷ்ய
ஸபையும் ... ... ... 207.
ஸ்ரீ மடத்தின் சொத்துக்கள் ... 43.
ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ வேதாந்த
தேசிகப்ரதிஷ்டை ... ... 242.
ஸ்ரீ வேதாந்ததீபிகை ... ... 39,286.
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயங்கள் ... 337.
ஸ்வதேச பாஷாபிவ்ருத்தி ... ... 169.
ஸ்வதேச பாஷைகள் ... ... 287.
ஸந்நிதி சிஷ்யர்கள் ... ... 419.
ஸர்வ இந்தியா வைஷ்ணவ ஸமாஜம் ... 245.





பத்ரிகை விமர்சம்—பூர்ண சந்த்ரோதயம் ... 407.
பிராட்டியின் அபயப்ரதாநம் ... ... 67.
பிரிவுகளின் அறிக்கை.
மதிராஸ்-, சைதாப்பேட்டை ... 36,82,128,167,327,413.
பீஷ்மர் ... ... ... ... 111.
புஸ்தக விமர்சம் ... ... ... 367.
மூன்றுவது மஹா ஸங்கத்தில்
அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம் ... 423,471.
ஷை உபஸம்ஹாரம் ... ... 446.
அங்கத்தினர் மீடிங்கு ... ... 460.
1913-ம் ௵ புத்திய நிர்வாஹககமிட்டி ... 463.
எக்ஸிக்யூடிவ் போர்ட்டின் மீடிங் ... 459.
நடைபெற்ற விஷயங்கள் ... ... 458.
ஸங்கத்தின் வரலாறு ... ... 450.
ஸபைக்கு உபகரிப்பவர்களின் விவரம் ... 464.
ஸ்ரீ. உ.வ. வாஸுதேவாசார்யர் உபந்யாஸம் 485.
மைத்ரேயீப்ராஹ்மணம் ... ... 211.
யஜ்ஞங்கள் ... ... ... ... 291.
ருதுமதீவிவாஹம் ... ... ... 150,315.
ருதுமதீவிவாஹம் - அபரார்க்கர் மதம் ... 232.
லக்ஷ்மீ தத்வம் ... ... ... 10,56.
விசிஷ்டாத்வைதம் ... ... ... 45,89,171.
விபீஷணர் சரணாகதி ... ... ... 247.
விபீஷணர் சரணாகதியில் லக்ஷ்மணனபிப்ராயம் 358.
வேதங்களின் நித்யத்வம் ... ... 379.
ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம் ... ... 224,308,393,439,506.
ஸ்ரீ பாகவத தனிஶ்லோகீ ... ... 18,100,183,259,339,401.
ஸ்ரீ ராமாயணத்தில் ஒரு சோத்யம் ... 193.
ஸ்ரீ ராமாயணத்தில் சில விசேஷார்த்தங்கள் 61,106,158,187,218,268.
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பரதாயங்கள் ... ... 277.
ஸுபாஷிதமாலை ... ... ... 282,317.
ஸௌபரி சரித்திரம் ... ... ... 302.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] விரோதிக்ருத் ௵ மாசி ௴. [ஸஞ்சிகை 1.

## ஓர் புதிய மதம்.

மதமென்பது ஜீவேச்வரர்களின் ஸம்பந்தத்தைப் பற்றியும், ஜீவன் மோக்ஷார்த்தமாக நடந்துகொள்ளவேண்டிய விதங்களைப் பற்றியும் நாம் அறிந்திருக்கும் கொள்கைகளுக்குப் பெயராய் வழங்கிவருவது எல்லாரும் அறிந்த விஷயம். அது ஶாச்வதமென்றும், அடிக்கடி மாறுதலடைவதல்லவென்றும் பொதுவாய் மதாபிமானிகள் எண்ணுகிறார்கள். ஏனென்றால், அநாதியாக ஏற்பட்டிருக்கும் வஸ்து ஸ்வபாவங்களும் அதற்கு அநுகுணமான நிவ்ருத்தி மார்க்கமும் ஏகரூபமாயிருக்க வேண்டுமே யல்லது மாறக் கூடியதல்ல. அப்படி ஒவ்வொருவர் இஷ்டப்படி தத்வங்கள் வெவ்வேறு விதங்களானவைகளா யிருந்தால், எது உண்மையான ஸ்வபாவமென்று நிர்ணயிக்க இடமில்லாமற் போய்விடும். பொதுவாய் மாறுதலையடையக்கூடியதை அநித்யமென்றும், மாறுதலில்லாததை நித்யமென்றும் எல்லாரும் சொல்வார்கள். ஜீவனையாவது ஈச்வரனையாவது மோக்ஷத்தையாவது அநித்யமென்று யாரும் சொல்லத் துணியார்கள். அவைகள் அநித்யமானால், அவை ஸம்பந்தமான ஜ்ஞாநத்தையடைய முயற்சியும், மோக்ஷத்தையடையப் பிரயத்நமும் எல்லாம் நிஷ்பலமாகவே சொல்லவரும். பரஸ்பரபிந்நங்களான மதங்களில் உண்மையானது ஒன்றே ஆகவேணும்.

மற்றவைகள் ப்ரமத்தினாலுண்டாயினவென்றே சொல்லப்படவேண்டும். ஜீவனுக்கு ஜந்மங்களுண்டு என்பார்க்கும், ஜந்மம் ஒன்றுக்கு மேல் இல்லை யென்பார்க்கும் ஐகமத்யம் சொல்வது கூடாது. பகவானுக்கு அவதாரமுண்டு என்பார்க்கும், அவதாரங்கள் அஸத்யமென்பார்க்கும் அபிப்ராயபேதம் ஒப்புக்கொள்ளவேணும். எல்லா ஜீவன்களும் ஒன்றே யென்றும் அவைகள் ஈச்வரனைக்காட்டிலும் வேறல்ல வென்றும் சொல்வார்க்கும், ஜீவன்களும் ஈச்வரனும் பிந்ந பிந்ந சைதந்யமென்றும் அவைகளுக்கு ஶேஷஶேஷிபாவ ஸம்பந்தமுண்டு என்றும் சொல்வார்க்கும் ஐகமத்யம் ஸாதிப்பது முடியாத கார்யம். ஆகையால், மதபேதங்களை அநாதரித்து ஒரே மதம் தத்வமென்றும் அதன் ப்ரகாரமே எல்லாமதங்களு மென்றும் சொல்லுகிறவர்கள், சில மதங்களின் ஸாதாரணாம்ஶங்களை முக்யமாய் எண்ணி, பேதமான அம்ஶங்களை அநாதரிப்பதாய்ச் சொல்லப்படவேண்டியவர்கள். பல விஷயங்களில் ஐகமத்யம் அநுகூலமா யிருப்பதுபோல, மதங்களிலும் ஐகமத்யம் ஏற்பட்டால் அநுகூலந்தான். ஆனால், மநுஷ்யர்களின் மநஸ்ஸும் ப்ரவ்ருத்திகளும் பிந்நங்களானபடியால், இதர விஷயங்களிற்போல மதத்திலும் ஐகமத்யம் ஏற்படுவது கஷ்டமாகவே இருக்கும். ஏற்பட்டிருக்கும் வ்யத்யாஸங்களை அபலாபம்செய்து பெயரின் ஸாம்யத்தைக்கொண்டு ஐகமத்யத்தைப் பாவிப்பவர்கள் உண்மையை அறிந்தவர்களல்லர்; அப்படி ஐகமத்யத்தை விரும்புகிறவர்களும் தங்கள் தங்களுக்கு இஷ்டமான மதத்தை ப்ரதாநமாக நினைத்து இதர மதங்களை அதில் அந்தர்ப்பூதங்களாய் எண்ணி ஐகரஸ்யம் சொல்வனதக் காண்கிறோம். அதற்கு உதாஹரணம் - அத்வைதிகள், ஏகாத்மவாதம் சொல்லி ஆத்மபேதத்தையும் உபாஸனைகளையும் சொல்லுகிறவர்கள் ஸகுணோபாஸகர்களென்றும், அவர்களுக்குக் கிரம முக்திதான் கிடைக்கக்கூடும் என்றும், த்வைதம், விஶிஷ்டாத்வைதம் முதலானவை தங்கள் மதங்களின் ஏகதேஶமென்றும் சொல்லி, முடிவில் மதமொன்றே என்று சொல்லுகிறார்கள். விஶிஷ்டாத்வைதிகளோ, ஜீவாத்ம பரமாத்ம பேதத்தை நிஷ்கர்ஷித்து, கேவலம் ஆத்மோபாஸகர்கள் கைவல்யமடைகிறார்கள் என்றும், பரமாத்மோபாஸகர்கள் பரமஸாம்யமாகிய மோக்ஷ மடைகிறார்கள் என்றும் சொல்லி, ஆத்மோபாஸகர்கள் தங்களில் ஏகதேஶிகளென்றும் சொல்லுகிறார்கள். இந்த இருதிறத்தாரும் ஸாங்க்யர்,



முதலானவர்களை ஒவ்வொரு ப்ரகாரத்தினால் தங்களுக்கு ஏகதேஶிகளென்று சொல்வது கூடும். இதனால், அந்தந்த மதங்களின் அவாந்தர பேதங்கள் இல்லாமற் போய்விடவில்லை. அவைகளை இல்லாதனபோல் வைத்து ஸர்வமத ஸாமரஸ்யம் செய்கிறவர்கள் ஆத்மதுஷ்டியைத்தவிர வேறு ஒரு மநோரத பூர்த்தியையும் அடைந்ததாய்ச் சொல்ல இடமில்லை.

மதம் ஶாச்வதமென்று நாம் மேலே சொன்னதைச் சிலர் அங்கீகரிக்காமல் எல்லாத் தேஶங்களிலும் மதங்கள் காலாநுகுணமாய் மாறுதலுடையனவென்றே சொல்லுகிறார்கள். அதாவது - மதமானது வஸ்து ஸ்திதியில் ஒன்றாயிருந்தாலும், அந்த வஸ்துஸ்திதியை நேராக அறிந்தவர்கள் எவருமில்லாததாலும் அதன் ப்ரகாரம் ப்ராயேண யுக்தியைக்கொண்டே ஸாதிக்கப்பட வேண்டியதாகையாலும், அப்படிச் செய்யப்படும் நிர்ணயம் காலபேதேந பிந்நமாயிருப்பதால், மதங்களும் ஒரு தேஶத்திலேயே வெவ்வேறாகி வருகின்றன வென்கிறார்கள். இதற்கு உதாஹரணமாக, நமது தேஶத்திலே வேதம் முதல் புராணங்கள் வரையிலுமுள்ள க்ரந்தங்களில் ப்ரமாணபுத்தி செய்யாமல் எல்லாம் ஸமமாய்ப் பௌருஷேயமென்று எண்ணும் பாஶ்சாத்யர்களின் (ஐரோப்பா, அமெரிக்கா முதலான கண்டங்களில் கற்றறிந்த நிபுணர்கள்) அபிப்ராயத்தைச் சொல்லலாம். அதாவது:—'ஹிந்துமதம், ஆதியில் ஸ்வாபாவிகமாயும், பயம் ஆஶ்சர்யம் முதலானவைகளுக்குக் காரணமாயுமுள்ள ஸூர்யன், சந்த்ரன், இடி, மின்னல், உஷஃகாலம், ராத்திரி, பகல், அயநங்கள், ருதுக்களாகிய ஸ்ருஷ்டி விஶேஷங்களைச் சேதநங்களான தேவதைகளாயும், மலை, நதிகள், ஸமுத்ரம், வ்ருக்ஷங்கள் ஆகிய அசேதநங்களைச் சேதநமுள்ள தேவதாதிஷ்டிதமாயும் ருக்வேதம் முதலான ஆதிக்ரந்தங்களிற் சொல்லிவந்தது. பிறகு இந்தத் தேவதைகள் ஆராத்யர்களாகி ஹவிஸ் பெற்று நமக்குப்ரீதிசெய்துவந்தாலும் அவர்களுக் கெல்லாம் காரணமான ஒரே தைவம் வேறொன்று உள்ளதென்றும், அதுதான் எல்லாவற்றிற்கும் மூலபூதமென்றும் உபநிஷத்துக்களிலும் இதர க்ரந்தங்களிலும் சொல்லிற்று. இந்தத் தைவம் இன்னதென்று நிஶ்சயிப்பதில், பிந்தி விவாதங்களுண்டாகிச் சிலர் சிவனென்றும், சிலர் விஷ்ணுவென்றும், சிலர் இந்த்ரன் முதலானவர்களென்றும் சொல்லி, தங்கள் தங்கள் அபிப்ராயத்துக்கு அநுகுணமான புராணங்களை நிர்மித்துக்

கொண்டார்கள். இப்பொழுதும், சிலர், வநதேவதைகளையும், வ்ருக்ஷதேவதைகளையும், வ்யாதிக்கு அதிஷ்டாதாக்களாய் எண்ணப்படும் மாரி முதலிய பெயரால் வ்யவஹரிக்கப்படுகிற தேவதைகளையும், நாகங்களையும், இதுபோன்ற இதர வஸ்துக்களையும் உபாஸிப்பதை நிதர்ஶநமாகப் பார்க்கிறோம். சில காலங்களில் புருஷமேதம், ஹயமேதம் முதலான யாகங்கள் நடந்துவந்தன; பிந்தி விஶேஷமாய் அஜமேதங்கள் விஸ்தரித்துச் செய்யப்பட்டுவந்தன' என்பதுதான். இக்காலங்களில் அஜமேதாதிகள் விஶேஷமாய்ச் செய்யப்படாமல் ஶாக்த ஶைவ வைஷ்ணவாகமங்கள் ப்ரபலித்து வெகுவிதமான ஆசாரங்கள் அநுஷ்டிக்கப்படுவதையும், ஹிந்துமதம் ஒருரீதியுள்ளதல்லவென்பதற்கு நிதர்ஶநமாய்ச் சொல்லி இவ்வளவு பேதமாயுள்ள ப்ரகாரங்களை நாம் ஒன்றுசேர்த்து 'ஹிந்துமதம்' என்று அபிமாநிப்பதை அவர்கள் பலவாறாகப் பரிஹஸிக்கிறார்கள்.

வேதங்கள் அநாதியென்றும், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் வர்ணக்ரமங்களுடனே ஶாஶ்வதமாய் ஏற்பட்டனவென்றும், அவைகள் ஈஶ்வரனுக்கு நிஶ்வஸிதம்போல அவருடன் இருந்துவருகின்றனவென்றும் நாம் சொல்வதை மேற்சொல்லிய நிபுணர்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. இப்படி அவர்கள் அபிப்ராயப்படுவது, நமது வேதத்தில் அவர்களுக்கு உள்ள த்வேஷத்தினால் என்று நாம் சொல்லமுடியாது. நமது தேஶத்தில் சார்வாகாதிகளைப்போல அவர்களும், வேதத்தில் புராணகதைகளும் தேவதைகளின் பிந்ந பிந்நமான ப்ரவ்ருத்திகளும் பெயர்களும் வருவதைக்கொண்டும், அவைகளின் வசநரீதிகள், பாஷாவ்யத்யாஸங்கள், மூலமும் வ்யாக்யாநமுமாயிருத்தல், அதே வாக்யங்கள் திரும்பி உபயோகப்படுத்தல், விநியோக வாக்யங்கள் ஏற்பட்டிருத்தல் இவைகளையெல்லாம் பராமர்ஶித்து, வேதங்கள் புருஷ நிர்மிதங்களென்றே ஸாதிக்கிறார்கள். இதுபோலவே அவர்கள் க்றிஸ்தவர்களால் அநாதியாய் ஈஶ்வரன்வாக்கியங்களென்று கொண்டாடப்படும் கிறிஸ்தவ மதத்தின் மூலக்ரந்தங்களில் அநுபபத்தி ஶதங்களைச் சொல்லி, அவைகளும் ஸமீபகாலங்களில் நிர்மிதங்களென்றும், ப்ரம விப்ரலம்பங்களுக்கு ஆஸ்பதமானவைகள்தானென்றும் எண்ணுகிறார்கள். இப்படிப்பட்ட அபிப்ராயங்கள் கேவலம் அந்யமதஸ்தர்களிடத்தில் மாத்திரம்



இராமல், கிறிஸ்து மதத்திலும் ஹிந்து மதத்திலும் பிறந்தவர்களிடத்திலேயே பஹுவாய் உண்டாகி, அவர்களின் மதவிஶ்வாஸத்தை அநேகமாய்ப் போக்கடித்துவிட்டன. மேலும், ப்ரத்யக்ஷமான விஷயங்கள் தவிர அப்ரத்யக்ஷமானவைகளும் அத்ருஷ்டமென்று சொல்லப்படுவனவுமான அர்த்தங்களே இந்தக் காலத்தில் ஒப்புக்கொள்ளாதவைகளாக ஆகிவிட்டன.

இப்படி மதங்களுக்குப் பொதுவாய் ஏற்பட்டிருக்கும் க்ஷோபங்களை நாம் காதாசித்கமென்று அநாதரியாமல், அவைகளைப் பரவவொட்டாமல், யுக்தமான ஆக்ஷேபங்கள் நமது மதங்களில் இருந்தால் அவைகளைத் தேடித் தகுந்த பரிஹாரங்களைக்கொண்டு பரிஷ்கரிக்க வேண்டுவது நமது தேஶத்திய வைதிகர்களுக்கு அவஶ்யமான கர்த்தவ்யம். அநேகமாய் ஆசாரங்கள் காலபேதத்தினாலும் தேசபேதத்தினாலும் பிந்ந பிந்நமாய் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஒருவிதமான ஆசாரம்தான் வேதஸம்மதமென்றாவது, ஈஶ்வரஸம்மதமென்றாவது நாம் சொன்னால், அதே விஷயங்களில் பிந்நாசாரங்களையுடைய உத்தராதி தேஶீயர்களான வைதிகர்கள் பதிதர்களாக எண்ணப்பட வேண்டிவரும். அந்தந்தத் தேஶங்களில் அவர்கள் ப்ரமாணிகர்களாகவும் ஶிஷ்டர்களாகவுமே க்ரஹிக்கப்படுகிறார்கள். ஆகையால், சில ஆசாரங்களை ஐச்சிகங்களாகவே எண்ணவேணுமென்பது, இந்தக்காலத்தில் சில படிப்புள்ள ஆஸ்திகர்களின் அபிப்ராயம். இவைகள் எவ்வளவுதூரம் அங்கீகரிக்கக்கூடியனவென்பது, நமது ஶிஷ்டர்கள் ஆலோசிக்க வேண்டிய விஷயம்.

இப்படிப்பட்ட விஷயங்களில் சிலவற்றை விசாரிக்கவேண்டியதற்காகச் சில பண்டிதர்களும் ப்ரபுக்களும் சேர்ந்து அடுத்த சித்திரை மாஸத்தில் காஞ்சீபுரத்தில் ஒரு பண்டித பரிஷத் கூடப்போவதாகக் கேள்விப்படுகிறோம். அதன் நிர்த்தாரணங்களை விஶேஷித்த ஆவலுடன் பிரதீக்ஷிக்கிறோம். எல்லா வைதிகஶ்ரத்தாளுக்களும் அந்தப் பரிஷத்தின் ஸமயத்தில் ஸந்நிஹிதர்களாய் ஆவது உசிதம்.

மேலே நாம் விவரித்த ஸாமாந்யமான மதக்ஷோபங்களைப் பராமர்ஶித்து அமெரிக்கா தேசத்திலுள்ள ஒரு வித்வான் சென்றமாஸத்திய "மாடர்ண் ரிவ்யு" என்னும் பத்திரிகையில் இனிவருங்கா

லத்தில் ஸர்வர்களாலும் ஆதரிக்கக்கூடிய மத ப்ரக்ரியைகள் எப்படி யிருக்கவேணு மென்றும், இப்போதுள்ள எந்த எந்த அம்ஶங்கள் ஒப்புக்கொள்ளக்கூடியவையல்ல வென்றும் தமது ஊஹத்துக்கு அநுகுணமாக விசாரித்து எழுதி யிருக்கிறார். நமது பண்டிதர்கள் அவைகளின் க்ரமத்தைப் பர்யாலோசிப்பதனால் மதங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்துக்கள் இன்னவிதங்க ளென்று அறியலா மாகையால், அவைகளை “ஓர் புதிய மதம்” என்கிற பெயரால் இங்கே சுருக்கமாகச் சொல்லுகிறோம்.

இப்படிப் பொதுவாய் ஏற்படக்கூடிய புதிய மதத்திற்குப் பின்வரும் அம்ஶங்கள் ஏற்காதவைகள்; அவையாவன :—

1. இந்தமதம் ஒருகாலும் ஶப்தப்ரமாணத்தை ஆதரிக்காது. இப்பொழுது அந்தந்த மதங்களில் வேத மென்று சொல்லப்படும் மூலக்ரந்தங்களில் அபிமாநம் குறைந்துபோய்விட்டது. யுக்திக்கு அநுகுணமான கொள்கைகளே ஒப்புக்கொள்ளக் கூடியவைகள். எவ்வளவு ஆப்தராயிருந்தாலும், அவர்களுக்கு ரிஷிகளென்றும் ப்ராசீநர்களென்றும் எவ்வளவுதான் கௌரவமுண்டானாலும் அவர்கள் வசநங்கள் யுக்திக்கும் நம் அறிவுக்கும் விருத்தங்களானால் அவைகளை ஆதரிப்பது நடவாது.

2. இந்த மதம், அப்ரத்யக்ஷர்களாயும், அபூர்ண ஜ்ஞாநத்தினால் அநுமிக்கப்பட்டவர்களாயு முள்ள தேவதைகளையும், மலை, கடல், அருவி, ஸந்த்யாகாலம் முதலான அசேதநங்களில் சேதநத்ருஷ்டியைச் செய்யும் ப்ரமத்தையும் அவலம்பிக்காது. அசேதநங்களின்ஸந்நிவேஶத்திலும் ரூபலாவண்யத்திலும் நமதுநேத்ராதிகள் த்ருப்தியை அநுபவித்தாலும், அவைகளினிடத்தில் இனிப் பாமரக்ருத்யமான ஈஶ்வர த்ருஷ்டியை ஜநங்கள் செய்யாமாட்டார்கள்.

3. காலஞ்சென்ற பித்ருக்களையாவது, ஆசார்யர்களையாவது, ஶக்திமான்களான ராஜாக்களையாவது இனிப் படித்துத் தேறுமவர்கள் ஈஶ்வர பாவனையுடன் ஆராதிக்க மாட்டார்கள். அவரவர்கள் குணங்களினாலும் சேஷ்டிதங்களினாலும் ஜீவகாலத்தில் எவ்வளவு வந்த்யர்களா யிருந்தாலும், அவர்களைப் பிறகு நன்குமதிப்பது உபகார ஸ்ம்ருதியாய்ச் செய்யப்படுமே தவிர, அவர்களை ஈஶ்வராவதாரமென்றும், அந்தந்த ஆபத்துக்களில் ஈஶ்வரன் அவர்கள்



ரூபமாய் வந்து லோகரக்ஷையைச் செய்தானென்றும் அபிப்ராயம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. இந்தப் புதிய மதத்தில் முக்யமான க்ருத்யம் தமக்கு மோக்ஷத்தை ஒவ்வொருவரும் தேடுவதல்ல; இதரர்களின் க்ஷேமமும் ஸாமாந்யமான கைங்கர்யமுமே இந்த மதத்துக்கு நோக்கமும். அவர்களுக்கு மோக்ஷம் ஆநுஷங்கிகமாக ஸித்திக்குமே ஒழிய, அதைக்குறித்து ப்ரத்யேகமான கவலை ஏற்படாது. பாபிஷ்டர்கள் அநுஶயாதிகளால் க்ரமமாய் ஶுத்தர்களாவார்களேயொழிய ஸக்ருத் கர்த்தவ்யமும் ஸுலபமுமான ஒரு உபாயத்தினால் நிவ்ருத்தி யடைவார்கள் என்று இந்த மதம் ஒப்புக்கொள்ளவில்லை.

5. இந்தப் புதியமதத்தில் தைவத்தினிடத்தில் பயத்தினால் ப்ரஸாதரூபமான ஆராதநங்களும், புரோடாஶம் முதலானவைகளின் தாநங்களும், ப்ராயஶ்சித்தத்தால் பாபங்கள் போகுமென்பதும் இல்லை. ஈஶ்வரன் மஹிமையை அறியாமல் அவரை உபாயத்தினால் வெல்வதுபோல இதுவரையில் செய்யப்பட்டுவந்த இந்தக் கார்யங்கள் இனிமேல் நின்றுவிடும்.

6. ஈஶ்வரன் மநுஷ்யன்போல ஶிரஸ் பாதம் முதலான மநுஷ்யாக்ருதியுள்ளவர் என்றும், ப்ராக்ருத ராஜாவைப்போலக் குற்றங்களை விசாரித்துத் தண்டனை விதிக்கிறவர் என்றும் எண்ணின அபிப்ராயங்கள் எல்லாம் தவிர்க்கப்படவேண்டும். இந்த நிதர்ஶநங்களெல்லாம், அவர்மஹிமைக்கு ஏற்காதவைகள்.

7. இந்தப் புதியமதத்தில் காயக்லேஶ ரூபமான தபஸ்ஸும், நிர்வேதங்களும், துக்கநிமித்தங்களின் விசாரங்களும் ஏற்படமாட்டா. எல்லாரும் எப்போதும் பரிதுஷ்டர்களாகவும், கஷ்டங்களும் வ்யாதிகளும் ஏற்பட்டால் அவைகளை அப்போதைக்கப்போது நிவ்ருத்திப்பதில் மாத்திரம் ஜாகரூகர்களாகவும் இருப்பார்கள்.

இந்தப் புதியமதத்தின் அந்வய ரூபமான விஶேஷங்களாவன:—

1. இந்த மதத்தில் - ஈஶ்வரன், ஸர்வஶக்தனும் ஸர்வவ்யாபியான ஒருவரே. அவரை எந்தப்பெயர்வைத்து அழைத்தாலும் சரிதான், அவர் ஸர்வாந்தர்யாமியாய், ஸர்வத்தையும் ப்ரேரணம்

செய்பவராய், அநந்த கல்யாண குணங்களுள்ளவராய், காலத்தினாலும் தேஶத்தினாலும் வஸ்துவினாலும் பரிச்சேதமில்லாதவராய் இருக்கிறார். சேதநா சேதநங்கள் எல்லாவற்றிலும் அவர் நிரந்தரமாய்வ்யாபித்து நியமித்து வருவதால், அவரைத்தவிர வேறு உபாதாந ரூபமாகவாவது நிமித்த ரூபமாகவாவது காரணம் ப்ரபஞ்சத்துக்குச் சொல்லவேண்டியதில்லை. த்வைதவாதம் இந்த மதத்துக்கு ஏற்காது. சேதநர்களில் சிலர் நித்ய ஸம்ஸாரிகளென்றும், நிர்மோக்ஷர்களாய் நசிப்பவர்களென்றும் சொல்லுகிற அபிப்ராயங்கள் காருண்யநிதியான ஈஶ்வரன்விஷயத்தில் ஸங்கதங்களாகா.

2. ப்ரஹ்ம ஜ்ஞாநம் ஆத்மஜ்ஞாந மூலமாகவே உண்டாக வேண்டும். ஆத்மா ஶரீரத்தைக் காட்டிலும் பிந்நன். இந்த ஆத்மா ப்ரதி ஶரீரம் பிந்நனாய், ஜ்ஞாநஸங்கோச விகாஸமுள்ளவனென்பது மநுஷ்யர்களின் த்ருஷ்டி, ப்ரபை, செயல்கள், இதரர்களை அடக்கியாளும் ஸாமர்த்யம் இவைகளினால் தெரியவருகிறது. ஶரீரத்தின் ஸௌஷ்டவமும் த்ருடமாயிருத்தலும் இந்த ஆத்மாவுக்கு நல்ல உபகரணங்களானாலும் எந்த ஶரீரத்தையும் இந்த ஆத்மவஸ்து பலமுள்ளதாய்ச் செய்யவல்லது. ஆகையால், இந்தப் புதியமதத்துக்கு லோகோபகாரிகளான எல்லாரும் பூஜ்யர்கள்தான். லோகோபகாரமான வஸ்துக்களையும், மருந்துகளையும், நீதிகளையும் மற்ற எவ்வித அபிப்ராயங்களையும் முதல்முதல் அறிந்தவர்களே இந்த மதத்துக்கு வந்த்யர்களான ஆசார்யர்கள்.

3. ஒவ்வொரு ஶ்லாக்யமான ஜீவனுக்கும் இதர விலக்ஷணமான கர்த்ருத்வம் அல்லது அத்யவஸாய ஶக்தியை நாம் பார்க்கிறபடியால், ஈஶ்வரனுக்கும் அதுபோன்றவும், ஆனால் ஸர்வோத்க்ருஷ்டமானவும், அநந்தமானவுமான ஆஶ்சர்ய கர்த்ருத்வம் இந்த மதத்தில் ஒப்புக்கொள்ளப்படும். பரிச்சிந்நமான குணப்ரபாவங்களைக்கொண்டே ஈஶ்வரனுடைய அபரிச்சிந்நமான ஶக்தியை அநுமிக்க வேண்டும்.

4. இந்த உலகத்தில் கஷ்டப்படுபவர்களை ஸ்வர்க்கம் முதலான பரலோகங்களில் ஸுகமநுபவிப்பீர்கள் என்று தேற்றுவது இந்த மதத்தில் இல்லை. அப்படிப்பட்ட ஸ்வர்க்காதி லோகங்கள் இருப்பதாக ஒப்புக்கொள்ளப் படவில்லை. ஸுகதுக்கங்கள் வராமல் முன்பே பாதுகாக்கும் மார்க்கங்களையும், வந்தால் அவற்றை



நிவ்ருத்திக்கும் மார்க்கங்களையுமே இந்த மதம் தேடும். வ்யாதிகளுக்கும் காயங்களுக்கும் சிகித்ஸை செய்யாமல் ஈஶ்வர ப்ரார்த்தனையால் மாத்திரம் நிவ்ருத்தி கிடைக்குமென்று இந்த மதம் ஒப்புக்கொள்ளவில்லை. வ்யாதிகளும் துக்கங்களும் கர்மபலங்களென்பதும், அவைகள் ஈஶ்வரனால் நமக்கு ஏற்படுத்தப்பட்ட தண்டனைகளென்பதும் இந்த மதத்தின் கொள்கைகளல்ல. மநுஷ்யர்களின் ந்யாயபரிபாலநத்தில் இருக்கும் துர்த்தரைகளைப் பார்த்தால், இதனால் ஈஶ்வரனுடைய ந்யாயரக்ஷணம் இப்படிப்பட்டது என்று நிதாநிக்க ஒருஹேதுவுமில்லை. ஆகையால், ஈஶ்வரன் கருணையுள்ளவரென்றும், நம்மிடத்தில் அளவில்லாத அன்புள்ளவரென்றும் நாம் நிஶ்சயித்து அவரது நிக்ரஹாநுக்ரஹங்களின் காரணத்தைத் தேடாமல் இருப்பதே யுக்தமாகத் தோன்றுகிறது. நமக்கு நேரும் துக்கங்களை நாம் அநுபவித்தபிறகு இதரர்களிடத்தில் நமக்கு உண்டாகும் காருண்யமும் உபகாரம் செய்ய வேண்டுமென்கிற புத்தியுமே போதுமானது.

5. ஈஶ்வரனிடத்தில் பக்தியும் விஶ்வாஸமுமே இந்தப்புதிய மதத்துக்குத் தலைக்கட்டும் விசேஷங்கள். எல்லாரிடத்திலும் காருண்யமும் ப்ரீதியும் எல்லாருக்கும் உபகாரஞ் செய்வதுமே இந்த மதத்துக்கு முக்கிய ஆசாரம். இந்த மதம், ஜாதிபேதம் மதபேதங்களை அவலம்பிக்காமல், எல்லாருக்கும் உபாதேயமாக ஆகும். எல்லாரையும் ஸமமாய் நினைத்து எல்லாருடைய ஹிதத்தையுமே தேடச்செய்யும்.

இப்படி டாக்டர் எலியட் என்னும் ஜ்ஞாநி விவரித்திருக்கும் அம்ஶங்கள், எல்லாராலும் நன்றாகக் கவனிக்கப்பட வேண்டியவைகள்.

டி. ராஜகோபாலாசார்யர்.

ஸ்ரீ:.

# லக்ஷ்மீ தத்வம்.*

'ஸர்வோத்க்ருஷ்டனான ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே தத்வம். அவன்தான் ஈஸ்வரன். வேறு தத்வம் கிடையாது' என்று நம்முடைய ஸித்தாந்தத்தில் நிஷ்க்ருஷ்டமாய் ஸ்தாபிக்கப்பட்டு அப்படியே எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. இப்படியிருப்பதில், ஸ்ரீ: லக்ஷ்மீ இத்யாதிகளான பெயர்களால் வ்யவஹரிக்கப்படுகிற மற்றொரு தத்வம் இருக்கிறதாக ஸாமாந்யமாய்ப் பண்டித பாமர ஸாதாரண்யேந க்ரஹிக்கப்பட்டு மிருக்கிறது. ஸ்ரீமஹாலக்ஷ்மி யென்கிறவள் நாராயணனுக்குப் பத்நீ என்றும், அவளுடைய கடாக்ஷத்தாலேயே ஸமஸ்த ஜகத்தும் அபிவ்ருத்தி யடைகிற தென்றும், பகவான் நாராயணனை உபாஸநம் பண்ணுகிறவர்கள்கூட லக்ஷ்மீகடாக்ஷமில்லாமற் போனால் எவ்விதமான ச்ரேயஸ்ஸையும் அடையமாட்டார்கள் என்றும், அப்படியே ஜகத் ஸ்ருஷ்ட்யாதி கார்யங்களைப் பகவான் ஸபத்நீகனாகவே செய்கிறார் என்றும் எல்லாரும் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த இரண்டு அபிப்ராயங்களும் பரஸ்பர விருத்தங்களாகவே தோன்றும். "एकमेवाद्वितीयं ब्रह्म, एको ह वै नारायण आसीत्, नेह नानास्ति किंचन, न तत्समश्चाभ्यधिकश्च दृश्यते, शास्ता चराचरस्यैकः, एकः शास्ता न द्वितीयोऽस्ति शास्ता" இத்யாதியான பரச்ருத ப்ரமாணங்களும், "अस्येशाना जगतो विष्णुपत्नी - सैषैव सृजते कामं वैष्णवी पाति जगत्त्रयम् - जगत् संहरते चान्ते तत्तत्कारणसंश्रिता - शक्तिः सर्वजगद्धात्री शक्तिर्नारायणस्य जगत्पतेः" என்றும், "नित्यनिर्दोषनिस्सीमकल्याणगुणशालिनी - अहं नारायणी नाम सा सत्ता वैष्णवी परा - देशाः कालास्तथा भावाः परिच्छेदो न मे स्मृतः" என்றும், "विष्णुशक्तिः अनपायिनी" என்றும், ஏதத் ஜாதீயங்களான பஹுவித ப்ரமாணங்களும் இருக்கின்றன. சில ப்ரமாணங்களில் ஸ்ரீமஹாலக்ஷ்மியினுடைய ப்ரேரணத்தின் பேரிலேயே பகவான் ஸ்ருஷ்ட்யாதி லீலாவிபூதியின் கார்யங்களைச் செய்கிறார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. "यस्या वीक्ष्य मुखं तदिङ्गितपरायत्तो विधत्तेऽखिलम्" என்கிற இடத்திலும், "संश्रीकारिणि रामयोर्मुक्ते सायुज्यमुक्त्यै कृताञ्जलिः" என்கிற இடத்திலும், இன்னும் சில இம்மாதிரியான ப்ரமாணங்களிலும் இந்த அர்த்தம் விசதமாக ஏற்படுகின்றது. இவ்வித ப்ரமாணங்களைப் பரிசீலநம் பண்ணிப் பார்ப்பதில் 'லக்ஷ்மீ என்கிற தத்வம் ஈச்வர தத்வத்தைவிட ப்ருதக்கான தத்வமா? அல்லது, ஈச்வர தத்வமேயா? ஈஸ்வர தத்வத்திலேயே அந்தர்ப்பூதமான வேறு தத்வமா?' என்கிற ஒரு பெரிய விப்ரதிபத்தி உண்டாகிறது. ஈச்வரனைப்போலவே லக்ஷ்மிக்கும் ஜகத்ஸ்ரஷ்ட்ருத்வம் சாஸித்ருத்வம் முதலிய எல்லா ப்ரபாவங்களும் ப்ரமாணங்களால் ஏற்பட்டிருக்கிற படியாலும், ஸ்த்ரீத் வைகாந்தங்களான மார்த்தவம், காருண்யம், க்ஷமை, தயை முதலிய ஸகல குணங்களும் பகவானுக்கும் அவ்வளவு முக்யமான குணங்களாகவே ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸாதி ப்ரமாணங்களால் ஸ்பஷ்டமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற படியாலும், ஈஸ்வரன் ஒருவன்தான் தத்வம் என்கிற நிஷ்க்ருஷ்டார்த்தத்துக்குப் பாதக முண்டாகிறதுபோ லிருக்கிறது.

* இது, சென்ற மார்கழி மாஸத்தில் ஸீடாமங்கலத்தில் நடந்த ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் மஹாஸங்கத்திற்காக, திருப்பாப்புலியூர் ஸ்ரீ. எம். திருவேங்கடாசாரியரால் எழுதப்பட்ட உபந்யாஸம்.

ஈஶ்வரனுக்கு ஸமாநாகாரமாகவே ஸகல கல்யாணகுணங்களோடு கூடிய லக்ஷ்மீ என்கிற ஒரு தத்வத்தை நாம் அங்கீகரிக்கவேண்டியது அவஶ்யமானால், த்வைராஜ்ய தோஷத்திற்கு இடங்கொடுக்கிறுப்போ லாகிறது; அதாவது - ஈஶ்வரத்வித்வத்துக்கு ப்ரஸக்தி உண்டாகிறது; அது ஸர்வமத விருத்தமானவிஷயம். ஈஶ்வரனை பகவான் நிஸ்ஸமாப்யதிகன் என்கிற நிஷ்க்ருஷ்டார்த்தமும் விப்ரதிபந்நமாகிறது.

இந்தவிஷயத்தில் நமது தேஶிகன், பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திக்கும் ஸமஸ்த ப்ரமாணங்களுக்கும் ஐககண்ட்யம் வரும்படி பராமர்ஶித்து, ஸ்ரீமத் சதுஶ்லோகீ பாஷ்யம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் கத்யபாஷ்யம் ந்யாயஸித்தாஞ்ஜநம் முதலிய க்ரந்தங்களில் பூர்வோக்த ஶங்கைகளுக்கு அதிஸ்பஷ்டமாகவே பரிஹாரம் செய்தருளி யிருக்கிறுர். மிதஶ்ருதனை அடியேன் அதை எவ்வளவும் எடுத்து உபந்யஸிக்க அநர்ஹனுகிலும், இந்த மஹாஸதஸ்ஸினுடைய நியமநாவலம்பத்தால் இந்த ஸதஸ்ஸில் யதாமதி ப்ரஸ்தாவிக்கத் துணிகிறேன்.

ஸ்ரீ ஸ்ரீபதிகளிருவரும் சேர்ந்து ஒரு தத்வம். இந்தத் தாத்பர்யம் தான் 'ஸ்ரீமந்நாராயணன்' என்கிற இடத்தில் 'ஸ்ரீமத்' என்கிற விஶேஷணத்தினுடைய பாவம். இன்னமும், லக்ஷ்மீ என்கிறவள் ஜீவதத்வமல்லள்; ஈஶ்வர தத்வமே. இந்தப்படி நிஷ்க்ருஷ்டமானுல் - ஈஶ்வர தத்வத்துக்குச் சொல்லப்படுகிற ஜகத்ஸ்ரஷ்ட்ருத்வ ஶாஸித்ருத்வாதி ஸர்வகுணங்களும் தாத்ருஶ பகவானுக்கு விஶேஷணபூதையான லக்ஷ்மிக்கும் ப்ரமாணங்களாலே சொல்லப்பட் டிருப்பதால், எவ்வித விரோதமு மில்லை. ஸபத்நீகனுகவே பகவான் ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கிறுன். "இக்ஷு ஸஹ ஹுஷீகேஶோ தேவ்யா காருண்யரூபயா - ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேஷ்வபி கீயதே" என்று ஸர்வரக்ஷணயஜ்ஞ தீக்ஷிதனை பகவானுக்கு, ஸர்வதா ஸமாநதர்மமுள்ள லக்ஷ்மியை விஶேஷணமாகச் சொல்வதனுல், எவ்விதமான பாதகமும் ப்ரஸங்கிக்காது.



தேவிக்கும் உபயவிபூதிஶேஷித்வமும் மோக்ஷப்ரதத்வமும்
ஈஶ்வரனுக்குப்போலே இருக்கிறதென்று அங்கீகரித்தால், புருஷ
காரத்வம் லக்ஷ்மிக்கு உண்டென்றும், ஸாக்ஷாத் மோக்ஷப்ரதா
தா பகவானே என்றும், தண்டதரத்வம் பகவதஸாதாரணம் என்
றும் சொல்லுகிற ப்ரமாணங்கள் ஶங்காக்ராந்தங்களாக ஆய்விடு
கின்றன வென்று தோன்றும்; அந்த அம்ஶங்களில் நம்முடைய
ஆசார்யர்கள் ப்ரமாணநுஸாரமாக ஸமாதாநங்கள் எழுதியிருக்கி
றுர்கள். அவையாவன - ஈஶ்வரனுக்கு உள்ள யாவத் தர்மங்களும்
லக்ஷ்மிக்கு உண்டு என்றும், மோக்ஷப்ரதத்வம் தண்டதரத்வம்
இவைகள் லக்ஷ்மிக்கும் ப்ரமாணஸித்தம் என்றும், உபய விபூதி
ஶேஷித்வம் முதலாகிய எல்லாத் தர்மங்களும் உபய நிஷ்டங்கள்
என்றும், தாவதா ஈஶ்வர த்வித்வ ஶங்கைக்கு அவகாஶம் இல்லை
யென்றும் ஶங்காநிவாரணங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஈஶ்
வரனும் லக்ஷ்மியும் ஸ்வதந்த்ரேச்சர்களாகவும், ஸத்யஸங்கல்பர்க
ளாகவும் இருக்கிறபடியால், அவர்களுடைய ஸ்வேச்சையாலேயே
உபயநிஷ்டமான எல்லாத் தர்மங்களையும் விபஜித்துக்கொண்டிருக்
கிறதாக ப்ரமாணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த அம்ஶத்தை
யே பட்டர் விஸ்தாரமாய் ஸ்ரீ குணரத்நகோஶம் என்கிற க்ரந்
தத்தில் அருளிச்செய்திருக்கிறுர். "யஉவக்வாஜெள தஉஜெ
வுவாஉவஶதா ஶத்ருஉஶஉஹஸிஉக்வாதீநு க்ஷுக்வா ஹஉவதி மஉ
ணாநு வஉஸுவஉஹாநு। க்வயிஹூஉகெக்வகாஹாநு உஜிஉவதி
வாஉஉயுஉகர்உணாக்ஷஉாதீநு வா ஹொக்ஷஉ ஹவதி யஉவயொ
உாத்நிஹி௯॥" என்பதில், 'பும்ஸ்த்வ ஸாதாரணங்களான ஶத்ரு
ஶமநாதிதர்மங்களை ஈஶ்வரன் ஸ்வேச்சையாலும் ஸ்வஸங்கல்பத்தா
லும் தன்னிடத்திலும், அப்படியே லக்ஷ்மியும் ஸ்வேச்சையாலும்
ஸ்வஸங்கல்பத்தாலும் கருணை க்ஷமை பதிபாரார்த்யம் முதலிய
ஸ்த்ரீத்வஸாதாரணங்களான தர்மங்களைத் தன்னிடத்திலுமாக
விபாகம் செய்துகொண்டு ஜகத்ரக்ஷணம் முதலிய வ்யாபாரங்களைச்
செய்து வருகிறுர்கள்' என்று ஸ்தோத்ரம் செய்திருக்கிறுர்.
ஆகவே, தண்டதரத்வம் ஶாஸித்ருத்வம் ஶத்ருஶமநம் இத்
யாதி கார்யங்களில் லக்ஷ்மியின் ஸ்வரூபயோக்யதைக்கு எவ்வித

ஆஶங்கையும் இல்லையென்றும், ஆனால் அந்தத் தர்மங்களைத் தேவி பலோபதாயகமாகச் செய்கிறதில்லை யென்றும், ஈஶ்வரனிடத்திலிருக்கிற அந்தத் தர்மங்களே பலோபதாயகமாக ஆகின்றனவென்றும், இப்படி இருப்பது லக்ஷ்மீ நாராயணர்களுடைய நித்யேச்சையால் ஏற்பட்டிருக்கிறபடியால் உபயாஸாதாரணமான பரத்வத்துக்கு இதனால் எவ்வித ஹாநியுமில்லை யென்றும் ஸ்பஷ்டமாகிறது.

இந்த இடத்தில் ஒரு ஆஶங்கை உண்டாகும்; அதாவது - "லக்ஷ்மிக்கு விபூதித்வயஶேஷித்வம் மாத்திரம் உண்டு, ஸாக்ஷாத் மோக்ஷ ப்ரதாந ஸாமர்த்யம் கிடையாது, விபூதித்வய ஶேஷித்வத்தாலே மாத்திரம் ஈஶ்வரத்வம் உண்டு, அந்த ஈஶ்வரத்வம் முக்யேஶ்வரத்வமன்று, கௌணேஶ்வரத்வம் என்றே சொல்லவேண்டும்; ஏனென்றால், தண்டதரத்வம் ஸ்வாதந்த்ரியம் முதலாகிய பதிதர்மங்கள் பிராட்டிக்கு இல்லை: உபயவிபூதிகளைக் காட்டிலும் லக்ஷ்மிக்கு ஶேஷித்வம் இருந்தபோதிலும் ஸாக்ஷாத் ஈஶ்வராபேக்ஷயா ஶேஷித்வமே சொல்லப்படாதாகையாலும், பகவதபேக்ஷயா ஶேஷத்வமே சொல்லவேண்டியது அவஶ்யமாகையாலும், ஸ்த்ரீத்வமும் பத்நீத்வமும் அந்தக் காரணத்தாலேயே அப்ரதாநத்வமும் ப்ரமாண ஸித்தமாய் ஏற்பட்டிருக்கிறபடியால் இந்த லக்ஷ்மியினிடத்தில் இருக்கிறதாகச் சொல்லப்படும் ஈஶ்வரத்வம் முக்யேஶ்வரத்வம் ஆகாது. புருஷகாரத்வமே இவளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் லக்ஷ்மீ ஸாக்ஷாத் மோக்ஷப்ரதை யென்று சொல்ல வாய்க்காது. அதில் 'ஸாபேக்ஷனை புருஷனுக்கு அபேக்ஷிதம் தலைக்கட்டிக்கொடுக்கவல்ல சேதநன் அபிகம்யனுகைக்கு உபாயமாக விவரிக்கப்பட்ட சேதநாந்தரத்தைப் புருஷகாரம் என்றும் வ்யவஹரிப்பார்கள்' என்று நம்முடைய நிகமாந்தகுருவினால் புருஷகார லக்ஷணம் விவரிக்கப்பட்டிருக்கிறது; ஆகையால், புருஷகாரமான வஸ்து பலத்துக்கு ஸாக்ஷாத் காரணமாகமாட்டாது. இப்படி புருஷகாரபூதையான லக்ஷ்மிக்கு ஸ்வதஃ மோக்ஷ ப்ரதத்வம் எவ்விதத்திலும் ஸித்திக்காது. அந்தக் காரணத்தினால் லக்ஷ்மீ நிஷ்டமான ஈஶ்வரத்வம் கௌணேஶ்வரத்வமே தவிர முக்யேஶ்வரத்வம் அன்று" என்பதுதான். இது ப்ரமாணாநுஸாரியான



மார்க்கமன்று. "அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ - ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம் - தாமிஹோபஹ்வயே ஶ்ரியம்" என்றும் ஸர்வ பூதேஶ்வரத்வம் ஸ்வதஸ்ஸித்தமாக லக்ஷ்மிக்கு ஏற்பட்டிருக்கிறது. ஈஶ்வராபேக்ஷயா ஶேஷத்வம் அப்ரதாநத்வம் பாரதந்த்ரியம் முதலாகிய தர்மங்கள் ஸ்வதந்த்ரேச்சையால் லக்ஷ்மீநாராயணர்களுடைய ஸ்வச்சந்த விஹாரார்த்தமான நித்யேச்சாப்ரயுக்தமாய் ஏற்பட்டிருக்கிறபடியால், இவளுக்கு முக்யேஶ்வரத்வத்துக்கு எவ்விதமான பாதகமும் இல்லை. இந்த நித்ய தம்பதிகளுக்கு நிரங்குஶமான ஸ்வாச்சந்த்யம் இருந்தபோதிலும் பரஸ்பரேச்சையாலேயே நியந்த்ரு நியாம்ய பாவங்களை நித்ய நியதமாய் விபாகம் செய்துகொண்டிருக்கிறபடியால் லக்ஷ்மியினுடைய முக்யேஶ்வரத்வத்துக்கு எவ்விதபாதகமும் உண்டாகாது. லக்ஷ்மிக்கு ஈஶ்வரனுக்குப்போலவே ஸர்வவிதமான ஸ்வாதந்த்ரியமும் இருந்தாலும், அவளுடைய ஸ்வதந்த்ரேச்சையினாலேயே பதிபராதீநத்வமும் ஸ்திரீத்வமும் பத்நீத்வமும் ஏற்பட்டிருக்கிறதாகையால், லக்ஷ்மியினுடைய முக்யேஶ்வரத்வத்துக்கு எவ்விதமான குறைவுமில்லை.

மோக்ஷ ப்ரதாநம் பண்ணுகிறதற்கு ஸ்வதஃ ஸாமர்த்யமும் (அதாவது ஸ்வரூப யோக்யதை) லக்ஷ்மிக்கு உண்டென்றே உபப்ருஹ்மணங்களாலே ஏற்பட்டிருக்கின்றன. ஆகிலும், பரஸ்பரம் ஸ்வதந்த்ரேச்சைகளால் புருஷகார பாவத்தில் லக்ஷ்மி தனக்குப் பலோபதாயகத்வத்தை வஹித்துக்கொண்டும், மோக்ஷப்ரதாந விஷயத்தில் ஸ்ரீமந் நாராயணன் தனக்குப் பலோபதாயகத்வத்தை வஹித்துக்கொண்டும் இவ்விதமாய் விபாகம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று ப்ரமாண ஸித்தமாயிருக்கிறது. இந்த அபிப்ராயத்தை ஸ்ரீ பராஶரபட்டர் மேற்சொல்லிய "[illegible]" என்கிற ஶ்லோகத்தில் விஶதமாக ஸ்தாபித்திருக்கிறார். "யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கிதபராதீநோ விதத்தேऽகிலம்" - "[illegible]" - "தேவி த்வந்மஹிமாவதிர் ந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே" இத்யாதிகளான

ப்ரமாணங்களாலே பகவானுக்கு லக்ஷ்மீ பாரதீநதையும் ஒரு விதமாகச் சொல்லப்படுகிறதுபோலத் தோன்றும். இந்த அதிஶங்கையும் நிஷ்ப்ரயோஜநமே. ஸ்வதந்த்ரேச்சனான பகவான் லக்ஷ்மியினுடைய க்ரீடார்த்தமாகவே இவ்விதமான லீலா விபூதியை அநுபவிக்கிறார் என்று முன்சொல்லிய பட்டர் வாக்யத்தாலேயே விஶதமாகிறது; அதாவது - 'க்ரீடேயம் வஶ:' என்று உதாஹரித்திருக்கிறார். ஆகையினாலேயே "ஶக்த்யா ஸஹ ஹ்ருஷீகேஶோ - தேவ்யா காருண்ய ரூபயா - ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேऽபி ச கீயதே" என்று ப்ரமாணம் ஏற்பட்டிருக்கிறது.

மேற்சொன்ன ப்ரகாரம் ஈஶ்வரனுக்கு ஸமாநமான யாவத் கல்யாணகுணங்களும் லக்ஷ்மிக்கு இருக்கின்றன வென்றும், முக்யேஶ்வரத்வத்துக்கு அஸாதாரணமான மோக்ஷப்ரதத்வமும் தண்டதரத்வமும் லக்ஷ்மியினிடத்திலும் இருக்கின்றன என்றும், லக்ஷ்மி நிஷ்டமாயிருக்கும்படி புருஷகாரபாவத்துக்குப் பகவானிடத்தில் பலோபதாநம் இல்லையென்றும், பகவந் நிஷ்டமான தண்டதரத்வம் மோக்ஷப்ரதத்வம் முதலானவைகளுக்கு லக்ஷ்மியினிடத்தில் பலோபதாநம் இல்லை யென்றும் சொன்னாலுங்கூட அந்த எல்லாத் தர்மங்களும் உபயநிஷ்டங்களென்றே சொல்ல வேண்டியது அவஶ்யமாகையால், ஸர்வதா த்வைராஜ்யதோஷம் ஸம்பவிக்கும்; அதாவது - ஈஶ்வர த்வயம் என்றும், இருவரும் துல்ய யோகக்ஷேமமான ப்ரபாவங்களை யுடையவர்கள் என்றும் ஸர்வதா அப்யுபகமம் பண்ணியே தீரவேண்டிய தாகிறது. ஏவஞ்ச, "ஏகஶ்ஶாஸ்தா - ந த்விதீயோऽஸ்தி ஶாஸ்தா" முதலிய ப்ரமாணங்கள் நிரர்த்தகமாக ஆய்விடும்போ லிருக்கிறது. இது விஷயமாக ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த ப்ருஹத் கத்யத்தில் "பகவந்நாராயணாபிமதாநுரூப ஸ்வரூப ரூப குணவிபவைஶ்வர்ய ஶீலாத்யநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாண குணகணாம் பத்மவநாலயாம் பகவதீம் ஶ்ரியம் தேவீம் நித்யாநபாயிநீம் நிரவத்யாம் தேவதேவதிவ்யமஹிஷீம் அகிலஜகந்மாதரம் அஸ்மந்



மாதரம் அஶரண்யஶரண்யாம் அநந்யஶரண: ஶரணம் அஹம் ப்ரபத்யே" என்று நாராயணாபிமதமாகவும் அநுரூபமாகவும் அநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாண குணகணங்கள் லக்ஷ்மியினிடத்தில் இருக்கின்றன வென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. த்வைராஜ்யம் என்றாலும் ஈஶ்வரத்வம் என்றாலும் பரஸ்பர விருத்தமாகவும் பரஸ்பர அநபிமதமாகவும் இரண்டு ராஜ்யம் ஏற்பட்டால் த்வைராஜ்ய தோஷம் ப்ரஸங்கிக்கும். பரஸ்பரம் இச்சையாலே பரஸ்பரம் அபிமதமாகவும் அநுரூபமாகவும் ஸகல ப்ரபாவங்களும் உபயநிஷ்டமாக இருப்பதால், த்வைராஜ்யம் ப்ரஸங்கிக்கவே ஹேதுவில்லை. "ஏகஶாஸ்தா" என்கிற ப்ரமாணத்துக்கு, ஏதாத்ருஶ முக்யேஶ்வரத்வமுள்ள லக்ஷ்மீவிஶிஷ்டனான ஈஶ்வரன் ஒருவனே உண்டு; தத்ஸஜாதீயனான வேறு ஈஶ்வரன் கிடையாது என்று ஆசார்யர்கள் விவரித்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தினாலேயே பகவானுக்குச் சொல்லப்படுகிற நிஸ்ஸமாப்யதிகத்வத்துக்கு எவ்விதமான பாதகமும் உண்டாகிறதில்லை. ஏதாத்ருஶ லக்ஷ்மீவிஶிஷ்டனான ஈஶ்வரனுக்கு ஸமாநமானவனாவது ஆதிக்யத்தை யுடையவனாவது வேறொருவன் கிடையாது என்று தாத்பர்யம். நாராயணனுக்கு லக்ஷ்மீ அப்ருதக் ஸித்தமான விஶேஷண பூதையாக ஆகிறாளே யானால், ஈஶ்வரனுக்கு ஸமாநமான ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகள் லக்ஷ்மிக்கு ஸர்வதா ஒப்புக்கொண்டே தீரவேண்டியதாயிருக்கிறது.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:.

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ பாகவத தனிச்லோகி.

-----

ஸ்லோ. ஜயதி தேऽதிகம் ஜந்மநா வ்ரஜ: ச்ரயத இந்திரா சச்வதத்ர ஹி - தயித த்ருச்யதாம் திக்ஷு தாவகாஸ்த்வயி த்ருதாஸவஸ்த்வாம் விசிந்வதே.

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன், லீலாவிபூதியி லுள்ள ஜநங்கள் குணங்கண்டு உகக்கிற யோக்யதையில்லாமல் கேவலம் விஷய ப்ரவணர்களாயிருந்ததைக் கடாக்ஷித்து, இவர்களை விஷயாஸ்வாதத்தைக் காட்டியே வசப்படுத்திக் கொள்ளவேண்டு மென்று ஆலோசித்து, "ஸர்வகந்த: ஸர்வரஸ: ஸர்வைச்வர்ய... த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்று சொல்லப்பட்ட திவ்ய ரூபத்தைக் கொண்டு ஸ்ரீ க்ருஷ்ணனாய் அவதரித்து வாழ்கிற நாளிலே, திருவாய்ப்பாடியில் கோபிகளெல்லாரும் அவனுடைய ஸௌந்தர்யத்தைக் கண்டு அவனையே பர்த்தாவாக அடையவேண்டு மென்று மநோரதிக்க, இதைக்கண்டு ஸ்ரீ க்ருஷ்ணனும் "யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்" என்கிறபடியே அவர்களுக்குத் தீவ்ரதமமான அபேக்ஷையை உண்டாக்கிப் பலப்ரதாநம் செய்வதற்காக ஸகல மனிதர்களுடைய கண்களையும் கவரக்கூடிய திவ்ய ரூபத்தையும் திவ்ய சேஷ்டிதங்களையுங் காட்டி அவர்களைத் தம்மிடத்தில் ஏகாந்தசித்தைகளாக்கிக் கொண்டான். அப்படி க்ருஷ்ணைக சித்தைகளாக இருந்துவந்த கோபிகள், ஒரு ஸமயத்தில் "நைவளமொன்றாராயா நம்மை நோக்கா நாணினார்போ லிறையே நயங்கள் பின்னும், செய்வளவி லென்மனமுங் கண்ணு மோடி யெம்பெருமான் திருவடிக்கீழணைய இப்பால், கைவளையும் மேகலையுங் காணேன் கண்டேன் கனமகரக்குழையிரண்டும் நான்கு தோளும்" என்றும், "தூவலம்புரியுடைய திருமால் தூய வாயிற் குழலோசை வழியே, கோவலர்சிறுமிய ரிளங் கொங்கை குதுகலிப்ப உடலுளவிழ்ந்து" என்றும் சொல்லுகிறபடியே பகவானிடத்தில் அதிகாமுகைகளாய், ஒரு மார்கழி மாஸத்தில் "நந்தகோபஸுதம் தேவி பதிம் மே குரு தே நம:" என்கிற மந்த்ரத்தைக் கொண்டு காத்யாயநீ தேவதையின் அர்ச்சநத்தைச் செய்தார்கள். "அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச" என்கிறபடியே எந்தத் தேவதையை ஆராதநஞ் செய்தாலும் தானே த்ருப்தி யடைகிறானாகையாலும், அவர்கள் தன்னையே பர்த்தாவாக அடையவேண்டுமென்று ஆராதித்தபடியால் அந்தப் பலத்தைத் தானே கொடுக்க வேண்டியதாகையாலும், மற்றைத் தேவதைகளாற் கொடுக்கக் கூடாததாகையாலும், "லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந்" என்கிற நிலை குலைந்து தானே நேரில் பலங்கொடுப்பானாய் உத்யோகித்து, "பங்கய நீர் குடைந்தாடுகின்றார் பின்னே சென்று ஒளித்திருந்து அங்கவர் பூந்துகில் கொண்டிட் டரவேரிடையார் இரப்ப மங்கைமீர் நல்லீர் வந்து கொண்மின்" என்று மரமேறியிருந்து, "காமம் க்ருத்வா ... யாவதா: ..." என்கிறபடி அவர்களுடைய அஞ்ஜலியை யாசித்து, அப்படியே அவர்கள் அஞ்ஜலி செய்தவுடன் அவரவர் வஸ்த்ரத்தைக் கொடுத்து, "யாதாபலா வ்ரஜம் ஸித்தா மயேமா ரம்ஸ்யத க்ஷபா: - யதுத்திச்ய வ்ரதமிதம் சேருரார்யார்சநம் ஸதீ:" என்று வ்ரத பலத்தையும் ப்ரஸாதித்தான். பிறகு, தான்கொடுத்த வரத்தைப் பூர்த்திசெய்துவைக்கவேண்டு மென்கிற அநுக்ரஹ விசேஷத்தினால், ஒரு சரத்காலத்தில் பூர்ண

சந்த்ரன் உதயமாகியிருந்த பொழுது யமுனையாற்றின் கரைக்குச் சென்று தீங்குழல் வாய்மடுத்து ஊத, அப்பொழுது கோபிகளெல்லாரும், "மடமயில்களொடு மான்பிணைபோலே மங்கைமார்கள் மலர்க்கூந்தலவிழ, உடை நெகிழ ஓர் கையால் துகில் பற்றி ஒல்கியோடரிக்கண்ணோட நின்றனரே" என்கிறபடியே வந்து திரண்டு நின்றார்கள். அவர்களோடு கலந்து நெடும்போது விளையாடிக் கொண்டிருக்கையில் போகம் உத்கூலமாய் ப்ரவ்ருத்தித்தபடியால், ஆநந்தம் உள்ளடங்காமல், 'நற்கேடு வரவொண்ணாது' என்றும், 'க்ருஷ்ணனுக்குத் தாங்கள் அடிமைகளானோம்' என்று அவர்களுக்கு மனத்துள் உண்டாயிருந்த கர்வத்தை அடக்க வேண்டுமென்றும், "ப்ரஶமாய ப்ரஸாதாய தத்ரைவாந்தரதீயத" என்கிறபடியே ஸ்ரீக்ருஷ்ணன் அந்தர்த்தாநமானான். அப்பொழுது கோபிகைகளும், "த்ருஷ்டோ வ: கச்சித் அஶ்வத்த ப்லக்ஷ ந்யக்ரோத நோ மந: - நந்தஸூநுர் கதோ ஹ்ருத்வா ப்ரேமஹாஸாவலோகநை:" என்றும், "கார்த்தண்கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறு படுத்தியென்னை, யீர்த்துக்கொண்டு விளையாடு மீசன்தன்னைக் கண்டீரே" என்றும் கண்டது அடையக் கேட்டும், "க்ருஷ்ணோஹம் பஶ்யத கதிம் லலிதாமிதி தந்மநா: - மா பைஷ்ட வாதவர்ஷாப்யாம் தத்த்ராணம் விஹிதம் மயா - இத்யுக்த்வைகேந ஹஸ்தேந யதந்த்யுந்நிதயேம்பரம்", "இனவேய் மலையேந்தினேன் யானே யென்னும் இனவேறுகள் செற்றேனும் யானேயென்னும், இனவான் கன்று மேய்த்தேனும் யானேயென்னும் இனவா நிரை காத்தேனும் யானே யென்னும், இனவாயர் தலைவனும் யானே யென்னும்" என்கிறபடியே க்ருஷ்ணனுடைய லீலாநுகாரங்களைச் செய்தும், போது போக்கியும் அவன் வரக் காணாமையால், "ஸமவேதா ஜகு: க்ருஷ்ணம் ததாகமந காங்க்ஷிண:" என்கிறபடியே தங்களுடைய ப்ரயத்நத்தால் அவனைக்காணலாமென்கிற ஆசையைத் தவிர்த்து அவனுடைய அநுக்ரஹத்தாலேயே அவன் வரவேண்டுமென்கிற எண்ணமுற்றவர்களாய் அவனுடைய ப்ரஸாதத்துக்காக அவனையே பாடுகிறார்கள்.



தே ஜந்மநா - உம்முடைய பிறப்பினால், வ்ரஜ: - ஆய்ப்பாடி, அதிகம் - மேலாக, ஜயதி - விளங்குகின்றது. "தே வயம் பவதா ரக்ஷ்யா பவத்விஷய வாஸிந:" என்றன்றோ தண்டகாரண்யவாஸி ருஷிகளும் ப்ரார்த்தித்தார்கள்? "ஸமஸ்த ஶ்ருதிகடப்ரோத்ஸவ ஶிகரிராஜமௌலிர் கிரி:", "நற்பாலயோத்தியில் வாழுஞ் சராசரம் முற்றவும் நற்பானுக்குய்த்தனன்," "பரன் சென்று சேர் திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம்வினை யோயுமே," "அத்திகிரி பத்தர்வினை தொத்தற வறுக்கு மணியத்திகிரியே" என்றும் சொல்லப்படுகிற உள்ளபிமாந பாத்ரங்களான தேஶங்களெல்லாவற்றிலும் மேலாகவன்றோ திருவாய்ப்பாடி விளங்குகிறது? அவைகளெல்லாம் ஸமஸ்த ப்ரதிபந்தகங்களையும் போக்கி உம்முடைய அநுபவத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்க, இதில் பிறந்த எங்களுக்கு இழக்க வேண்டியிருக்கிறதே! என்கிறார்கள். "ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவிலொருத்திமகனா யொளித்து வளர," "இருட்டிற் பிறந்து போய்" என்றும், "ஜ்ஞாநகாரண்ய ஶாஸ்த்ரத:" என்றும் சொல்லுகிறபடியே பிறந்தது மாத்ரமாய் அதினின்றும் புறப்பட்டுப் போந்த விடங்களெல்லாம் "அயோத்யா மதுரா மாயா............ ஸப்தைதே மோக்ஷதாயகா:" என்று மோக்ஷத்தைத் தரவற்றாயன்றோ மஹர்ஷிகள் அறுதியிடுவது? அகன்ற விடம் போலவோ புக்க விடமும்? ஆகையால், அவைகளெல்லாம் தேஶவிஶேஷத்தில் கொடுக்கும் அநுபவங்களை யெல்லாம் இது இங்கேயே தரவேண்டாவோ? என்கிறார்களாகவுமாம்.

அன்றிக்கே, இவ்விடத்தில் பிறந்தவர்களுக்கு உம்முடைய ஸம்ஶ்லேஷம் ஸுலபமென்றும், அவஶ்யம் கிடைக்குமென்றும்

நினைத்து "ஈஹம் கஉம்பொ ஹ்ரியாஸம் க்ஷம்ஷொ வா°யக்ஷ நாதடெ" என்று ருஷிகளாலும், "ஆணையால் நீரென்னைக் காக்க வேண்டில் ஆய்ப்பாடிக்கே யென்னை யுய்த்திடுமின்" என்று ப்ரணயிநிகளாலும் இவ்வாய்ப்பாடியில் வாஸம் ப்ரார்த்திக்கப்பட்டிருக்க, நாங்கள் மாத்திரம் இதில் பிறந்து வளர்ந்து இழக்கிருமென்பது ஆகாதே என்கிருர்களாகவுமாம்.

அன்றிக்கே, "சீர்மல்கு மாய்ப்பாடி" என்கிறபடியே, ஐஹதொ ஊமெெஹஸ்ஹ நீரம்யுண ஸம்ஶ்ரூஷ ரஸிக்த்வமாகிற உம்முடைய ஸௌஶீல்யம் ப்ரகாஶிப்பது இவ்வாய்ப்பாடியிலன்ரே? நீர் தாமும், "சூட்டு நன்மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீ, ராட்டி அந்தூபம் தராநிற்கவே யங்கோர்மாயையினுல், ஈட்டிய வெண்ணெய் தொடு வுண்ணப் போந்து" என்கிறபடியே நித்ய ஸூரிகள் ஸமாராதநஞ் செய்ய உபக்ரமித்து ஸ்நாநாஸந அலங்காராஸநங்களை ஸமர்ப்பித்த வளவிலே 'இது நமது ஸௌஶீல்யத்துக்குப் பொருந்தாது; இனி நமது ஸௌஶீல்யம் ஜீவிக்குமிடம் எது?' என்று பார்த்து இங்கு வந்து அவதரித்துப் போஜ்யாஸநங் கண்டருளி ஸமாராதநத்தில் குறையைத் தலைக்கட்டினது! ஆகையால், ஜ்ஞாநாதிகர்களும் "அறியாத விடைச்சியரு மறியும் வண்ண மம்புயத்தாளுட னந்நாளவதரித்த, குறையாது மில்லாத கோவிந்தா" என்ருர்கள். இவ்வவதாரத்துக்கு முன்பெல்லாம் ஸௌஶீல்யத்தில் குறையுண்டென்றே அவர்கள் நினைத்திருப்பது. ஆகையால், "மந்திபாய்வட வேங்கட மாமலை வானவர்கள், சந்தி செய்ய நின்ருன்" என்கிறபடியே அங்குள்ளார்களும் இங்கே வந்து கண்டுபோ மித்தனை. "நவ வாநரா வதடுதெ," "பிணைக் கொடுக்கிலும் போகவொட்டாரே" என்கிற நியமங்களெல்லாம் கர்மத்தில் திரும்பி வருவதில்லை யென்பதைக் காட்டுகின்றன. பகவதிச்சாநுவிதாயி ஸ்வேச்சையாலே பகவதநுபவ கைங்கர்யங்களுக்காக வரும்போது நிவா



ரகரில்லை யென்னுமிடம், "ஈவரணொ ணிவர்தி ஜொஹம் ஏகாஸ விஶ்ராஸ ஸஹகாஸ தணா யணிகம்" என்று ஆசார்யன் நிஷ்கர்ஷித்தாரிறே. பரமபதத்திலோ வென்ருல், "ஸவயஸ ஐவயெஃ நிதீநிமெஹூரஷ ஹம்யாஃ" என்றும், "நிரஞ்ஜநஃ வஸஊம் ஸாஹ்யமுபைதி" என்றும் சொல்லப்பட்ட நித்ய முக்தர்களில் எங்களைப்போன்ற நிஹீநர் இடையாமையாலே உம்முடைய ஸௌஶீல்யம் குமிரிருந்துபோ மித்தனை யன்ரே? ஆகையாலேயிறே, மயர்வற மதிநல மருளப்பெற்ற மர்மஜ்ஞர்களும் "ஈசன் வானவர்க் கென்பனென்ருல் அது, தேசமோ திருவேங்கடத்தானுக்கு, நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கடன், பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே" என்று அநுஸந்தித்தார்கள். இப்படியிருக்க, "ஈஜ்ஞாந வாஸியிஉவாய யாஸம்யஸம் ஊஊஜ்ஞா விஹஞ்ஜநஉக்ஷிம்வந ஸாவபூஹஊம் - விம்ஷந ஹவாந விபாய நாய ஸஊஷ்ஷவெதீ கிஹாஉ வாதூஉவஸம் உநாமெத உயாயாஃ" என்கிறபடியே எங்களைவிட உன்னுடைய ஸௌஶீல்யத்தை ப்ரகாஶஞ்செய்யப் பாத்ரங் கிடைப்பதாக எண்ணுகிருயோ? ஆகையால், நீ எங்களபேக்ஷிதத்தைத் தலைக்கட்டாவிடில் அவதார பலத்தை யிழந்து அதனுல் இதுவும் சீர்மல்கு மாய்ப்பாடி யென்று பெற்ற ப்ரஸித்தியையும் அதே காலத்தில் இழக்கவேண்டிவருமே என்கிருர்களாகவுமாம்.

அன்றிக்கே, வ்ரஜஃ என்பது, லக்ஷணையினுல் வ்ரஜத்திலிருக்கும் கோ கோபாலர்களைச் சொல்லுகிற தாகவுமாம். அப்பொழுது "வ்ரஜஜநாதிஹந" என்கிற படியே திருவாய்ப்பாடியிற் பிறந்த புல் பூண்டு முதல் கோ கோபாலர்களளவாக எல்லாரும் உன்னுடைய பாதஸ்பர்ஶ ஸுகத்தை அநுபவிக்க, கிண்ணகத்தின் நீர்க்குமிழியின்கீழே சாவி போமாப் போலே ப்ரணயிநிகளாய் உன்னுடைய ஸம்ஶ்லேஷார்த்தமாக வ்ரதாநுஷ்டாநம் பண்ணிப்போந்த நாங்கள் இழக்க வேண்டியிருக்கிறதே!

என்கிருர்களாகவுமாம். உன்னுடைய பிறப்பினலன்ருே ஆய்ப்பாடியிலுள்ளார் விண்ணுளாரிலும் சீரியராய் விளங்கி வருகிறது? ஸ்வபாவத்திலோ "கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்" என்கிறபடியே "ஜ்ஞாநேந ஹீநா: பஶுபி: ஸமாநா:" என்று ஜ்ஞாந ஹீநருக்கு த்ருஷ்டாந்தமாய்ச் சொல்லக்கூடிய பஶுக்கள் வஸிஷ்டாதி ஸ்தாநீயங்களாய் அவைகள் உண்ணில் உண்ணவும் படுக்கில் படுக்கவும் குளிக்கில் குளிக்கவுமன்ருே இவர்கள் செய்துபோந்தது? இப்படியிருக்க, "உன்றன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்" என்கிறபடி நீ பந்துவாய் வந்து அவதரித்த பிறகன்ருே, "இவர்கள் பாக்ய ஶாலிகள்!" 'ஶதாஃவரம் தநூஸ்ரீதி:" 'வம்ஶே நம உவ்ரஜஸ்த்ரீணாம் வாஞ்சந்தே த்ருணஜந்மஶ:' என்று ஜ்ஞாநவாந்களும் கொண்டாடும்படி தாம் பெற்ருர்கள்? அந்தப் பாக்யத்தில் எங்களுக்குக் குறைசொல்ல வழியில்லையே? ஆகையால், எங்களுடைய ஜ்ஞாந ஶக்திகளைக் கொண்டு உன்னைப்பெறப் பார்க்கில் எங்களுக்கு மெய்யே யோக்யதையில்லை என்னலாம். "குறைவொன்று மில்லாத கோவிந்தா" "ஜ்ஞாந ஶக்தி கருணாவாஸ ஸதீஷு நைவ பாவம் பராக்ருதி ஹேயகீநம்" என்கிறபடியே ஜ்ஞாந ஶக்தி கருணா வாத்ஸல்ய ஸௌஶீல்யம் முதலியவைகளில் ஒன்றும் குறைவில்லாத உன்னால் உன்னைப் பெறவிருக்கிற எங்களுக்கு இழக்க வேண்டியிருக்கிறது என்னே! என்கிருர்க ளாகவுமாம்.

'கோ கோபாலர்களுக்குப் போலவும், ப்ருந்தாவநத்தில் வ்ருக்ஷ லதாதிகளுக்குப் போலவும் ப்ரஸாத விஶேஷம் தருவதாகில் தருகிறேம்; நீங்கள் அப்படி அபேக்ஷிக்க வில்லையே! "நாமமாயிர மேத்த நின்ற நாராயணு நானே உன்னை, மாமிதன் மகனுகப் பெற்ருலெமக்கு வாதை தவிருமே" என்றும்,



"நமஸ்தேவ ஸந்தம் தேவி வதிம் தே க்ஷாரம்" என்றுமன்ருே நீங்கள் அபேக்ஷிக்கிறது? ஆக, அந்தத் தஶையில் எது கொடுக்கவற்ருே? அது தரலாம்; ஸமயத்தில் வாருங்கோள், தருகிறேன்' என்ருனுய்ப் பதில் சொல்லுகிருர்கள்:— ஶ்ரயதே இந்திரா ஶஶ்வத் அத்ரஹி. உனக்கு ப்ராணனைக் காட்டிலும் கரீயஸியான மஹாலக்ஷ்மியும் இவ்விடத்திலன்ருே உன்னை அடைகிருள்? அவளுடைய அபேக்ஷிதங்களை யெல்லாம் பூர்த்தி செய்தாற்போலவே எங்களுடைய அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டத் தட்டென்ன? என்கிருர்கள். அன்றிக்கே, 'பரமபதத்தைவிட மேலாக விளங்குகிறதை நீங்கள் எப்படிக் கண்டீர்கள்?' என்ருனுக, 'அங்கே அநுபவிக்கிறவர்களு முள்பட இவ்விடத்தி லநுபவிக்க வரக்காண்கையால்' என்கிருர்கள். இந்திரா - லக்ஷ்மியும், ஶஶ்வத் - எப்பொழுதும், அத்ர ஹி - இங்கேயன்ருே, ஶ்ரயதே - அடைந்திருக்கிருள். "அகலகில்லேனிறையும்" என்று உன்திருமார்பை விட்டுப் பிரியாதவளாய் 'அநபாயிநீஶ்ரீ:' என்று சொல்லப்பட்ட பெரியபிராட்டியாரும் அந்தப் பரமபதத்தைவிட்டு இவ்விடத்திலன்ருே இந்த நிரவதிக ஸௌஶீல்யத்தைக் கண்டு பிரியாமல் அடைந்திருக்கிருள்? ஆகையால், இது அதைவிட உத்க்ருஷ்ட மென்னத் தட்டென்ன?

அன்றிக்கே, ஸ்ரீமஹாலக்ஷ்மியும் இங்கே வந்து உன்னை அடைகிருளே! "யாஸ்வஸ்தம் ஸ்தநபாஹு உத்ஸிஹிரிவ ஸ்வாஹி: வ்ரியம் ஶ்ராவஸே" என்கிறபடியே அவளுக்கு ஸ்தந பாஹுக்கள் போல நிற்கிற எங்களோடு அணையாமல் அவளோடு அணைவது எப்படி? என்கிருர்களாகவுமாம். அன்றிக்கே, "ஸ்த்ரீநாதீ லக்ஷ்மீ தேவ்யுத்யே நாநயோ விருத்யதேவரம்," "ஸீதா நாஸீஜநஸ்யாஸ்ய யோகக்ஷேமம் விதாஸ்யதி," "என் திருமகள் சேர் மார்பனே" என்கிறபடி எங்களுடைய யோக க்ஷேமத்துக்குக் கடவளாயும், எங்களுக்கு ஶேஷியாயும் புருஷகார பூதையாயு

முள்ள பிராட்டி அருகே நிற்க, மாதாவினுடைய ஸந்நிதியில் ப்ரஜை பட்டினி கிடக்குமாப் போலே அபேக்ஷிதம் கிடைக்கப் பெறாத நாங்கள் இனி யாரைப் புருஷகாரமாகப் பெற இருக்கிறோம் ? என்கிறார்களாகவுமாம்.

அப்படிச் செய்யாவிடில் நஷ்டமும் உனக்குத்தா னென்கிறார்கள் :—உயிர்த - எங்களுக்கு ப்ரியனானவனே! “ தம்மையுகப்பாரைத் தாமுகப்பர் என்னுஞ்சொல் தம்மிடையே பொய்யானால் சாதிப்பா ரா ரினியே ” என்கிறபடி “ ஜ்ஞாநிந: ஸ்வப்ராணத: ப்ரியஸ்ய நத்ஸ ஹ்ருதி ப்ரவிஷ்டி ”, “ ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்த மஹம் ஸ ச மம ப்ரிய: ” - ‘என்னிடத்தில் யாவனொருவன் அதிகமான ப்ரீதியைச் செய்கிறானோ அவன் என்னுடைய மிகுந்த ப்ரீதிக்குப் பாத்ரமாவான்’ என்று நீ சொன்ன வார்த்தையை நீயே பொய்யாக்கினால் இனி அதை யாரால் மெய்யாக்க முடியும்? எங்களுக்கு க்ருபை செய்யாவிடில் நீயே பொய்யனுமித்தனை ; எங்களுக்கு வருவதொரு நஷ்டமுமில்லை கா ணென்கிறார்கள். “ கிம் த்வாऽமந்யத வைதேஹ: ” — ‘சொத்தை வில்லை முறித்து அதனால் தன்னைத்தானே போரப் பொலிய மதித்திருந்த உம்மை, இப்பொழுது பத்நியாகிய என்னைக் காப்பாற்ற ஶக்தியில்லை யென்று நீர் சொல்வதைக் கேட்டால் எங்களையர் என்னவென்று நினைத்திருப்பர் ?’ என்றும், “ அந்ருதம் பத லோகோऽயம் அஜ்ஞாநாத் யத்தி வக்ஷ்யதி - தேஜோ நாஸ்தி பரம் ராமே தபதீவ திவாகரே ”—‘லோகத்தார் உம்முடைய ஸ்வபாவத்தை அறியாமல், ஸூர்யனிடத்திலே போல ‘ராமனிடத்தில் பராக்ரமமில்லை யென்று பொய்யான அபவாதத்தைச் சொல்லப் போகிறார்களே ! அதற்காகவன்றோ நான் துக்கப்படுகிறது ?’ என்றும் பேசினாளிறே பிராட்டியும்.

அன்றிக்கே, உயிர்த - எங்களுக்கு நீ ப்ரியனாயத்தனை போக்கி உனக்கு நாங்கள் ப்ரியைகளாகவில்லையே! ஆகையால், “சாவதிவ்வாய்க்குலத் தாய்ச்சியோமாய்ப் பிறந்த வித்தொழுத்தையோம் தனிமைதானே தொழுத்தையோம்” நிஹீனைகளான எங்களுடைய ‘செல்வச் சிறுமீர்காள், வையத்து வாழ்வீர்காள்’



என்றுசொன்ன தாங்களே இங்குத் தங்களை நிஹீனைகளென்கிறார்கள். அநவாப்தி தலையெடுத்து நிற்கையாலே, தனிமை [ஒருதலைக் காமம்] : ஆய்க்குலத்திலே பிறக்கையாலன்றோ? இப்படி ஒருதலைக் காமம் மிஞ்சியிருக்கிறது ; இது நாஶமடையவேண்டு மென்கிறார்களாகவுமாம்.

உதாரம் - நாங்கள் படும் பாட்டைக் கண்ணுற்றுப்பாராய் ; “கள்ள மாதவா கேசவா உன்முகத்தன கண்களல்லவே ?” நாங்கள் படும் ஶ்ரமம் உனக்குத் தெரியாமையால் பீலிக்கண்கள் போலாவோ ? என்கிறார்கள். “ தொழுத்தையோம் தனிமையும் துணைபிரிந்தார் துயரமும் நினைத்திலை கோவிந்தா” என்றும், “பெண்ணின் வருத்த மறியாத பெருமான் ” என்றும் சொல்லுகிறபடியே உன்னைப் பிரிந்தார் படும் ஶ்ரமத்தை நீ கண்டறியாமையாலன்றோ இப்படி எங்களை உபேக்ஷித்திருக்கிறாய்? பெண்ணென்றால் பேயும் இரங்குமன்றோ? ஆகையால், நிர்க்குணனானாலும் கண்டாலிரங்குவனென்று இருக்கிறார்கள். நித்ய ப்ரஹ்மசாரியாய், காந்தாஸம்ஶ்லேஷ விஶ்லேஷம் முதலியவைகளொன்று மறியாமையால், “அந்ருதூ வ ஹநுமத:” என்று பேசப்பட்ட ஹநுமான், திருமால்யவானில் பெருமாள் பிராட்டியைப் பிரிந்து நோவுபடக் கண்டு, ‘ராஜபுத்ரர்களாயிருப்பார் ஒரு பெண்ணுக்காக இப்படியும் படுவார்களோ?’ என்று மனத்திற்குள் வெறுத்திருந்து, அஶோக வநிகையில் பிராட்டியைக் கண்டவாறே “ து:க்ஷரம் க்ருதவாந் ராமோ ஹீநோ யதநயா ப்ரபு: ” என்று பிராட்டியைப் பிரிந்திருந்ததற்கு வெறுத்தானிறே.

உதாரம் - ‘உன்னை இவர்கள் பார்க்கட்டும்’ என்று சிலர் வ்யாக்யாநம் பண்ணுவார்கள். அப்பொழுது - ‘உன்னை நாங்கள் “ ராவணஸ்ய வயாம்ஶுபி: ” என்று தேவதைகள் போல மார்பிலே அம்பு ஏற்றுக்கொள்ளவும், கடலைக்கடைந்து சாவாமருந்து கொடுக்கவும் சொல்லுகிறோமோ ? “ நண்ணியுனை நான் கண்டுகந்து கூத்தாட, நண்ணி யொருநாள் ஞாலத்தூடே நடவாயே ” என்று பார்க்கவன்றோ அபேக்ஷிக்கிறது ? “ பாவிநீ யென்றொன்று சொல்லாய் பாவியேன் காணவந்தே ” என்கிறபடியே நாங்கள் காணும்

படியே வந்து நின்று உங்கள் அபேக்ஷிதம் செய்வதில்லையென்று சொல்லிப்போகாய்' என்கிறார்களாகவுமாம்.

தாவகா: - உன்னைச் சார்ந்தவர்கள். “ஸஹஸ்ருத பந்தும் த்வம் ஹாஸி கிம்வா ஸகலம் ஸஹைவ ஸஹஜம் ஹி ஸர்வம் - கிந்த்வஸ்ய ஹேதோ ஶரணாகதாநாம் பராங்முகோ நாம ந தே ப்ரபந்நா:”, “உனக்குப் பணி செய்திருக்கும் தவமுடையேன் இனிப் போ யொருவன்தனக்குப், பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயையழிவு கண்டாய்” என்கிறபடியே நாங்கள் படுவது படுகிறோம்; எங்களை இப்படிப் பட அடிப்பது உன்னுடைய தயாதி குணங்களுக்குப் பொருந்தாதாகையால் உனக்கு அவத்யாவஹங் காண் என்கிறார்கள்.

த்வயி ந்யஸ்தாஸவ: - உன்னிடத்தில் வைக்கப்பட்ட ப்ராணன்களை யுடையவர்கள். ‘என்னுயிர்க் கண்ணபிரானன்றோ நீ?’ ‘பசியர் சோற்றின் மேல் உயிர்’ என்னுமாப்போலே சொல்லுகிறார்கள். அதாவது - உண்ணும் சோறும் பருகு நீரும் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணனன்றோ எங்களுக்கு? ஆகையால், தாரகனான நீ இல்லையானால் எங்களுக்கு ப்ராணனுமில்லை' என்று அர்த்தமாம்; “ந ச ஸீதா த்வயா ஹீநா” என்றார்களிறே. “பரித்ராணாய ஸாதூநாம்” என்கிற உம்முடைய வார்த்தையைப் பார்த்தால் எங்களுக்கென்று தனியாக அவதரிக்க வேண்டாமோ? அப்படியிருக்க, இருக்கிற ரூபத்தைக் காட்டாதே ஒளிப்பதேன்? என்கிறார்கள். “யஸ்ய வநாநி கிரீம்ஶ்சைவ ஸர்வாணி ஸராம்ஸி ச - நிகிலேந விசிந்வாநா ஸீதாம் தஶரதாத்மஜ:” என்று நீ பிராட்டியைப் பிரிந்து பட்டதெல்லாம் இத்தனை பெயர்களாய்ப் படுகிறார்கள். “உண்ணா துறங்கா தொலி கடலை யூடறுத்துப், பெண்ணுக்கையாப்புண்டு தாமுற்ற பேதெல்லாம், திண்ணார் மதிள்சூழ் திருவரங்கச் செல்வனார், எண்ணாதே தம்முடைய நன்மைகளே யெண்ணுவரே” என்கிறபடியே தேடித் திரிந்த ஶ்ரமமநுபவித்திருந்தும் அதை மறந்தோ எங்களை இப்படி தேடவிட்டிருப்பது? என்கிறார்கள்.

சே. நரஸிம்ஹாசாரியார்.

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# பகவத்விஷயம். *

பகவத்விஷயம் என்கிற ஶப்தத்திற்கு - பகவானை ப்ரதிபாதிக்கிற க்ரந்தமென்று தாத்பர்யம். ‘பகவாந்’ என்கிற ஶப்தத்திற்கு - ஶ்ரிய:பதியான நாராயணனே முக்யார்த்த மென்றும், மற்றவர்கள் கௌணீ வ்ருத்தியால் இந்த ஶப்தத்தைக் கொண்டு சொல்லப்படுகிறார்க ளென்றும் ஶ்ரீ பராஶர மஹர்ஷி அருளிச்செய்திருக்கிறார். இந்த ஶப்தத்தின் யோகார்த்தத்தால் அதனால் குறிக்கப்படுமவன் ஸ்ருஷ்டிக்கு வேண்டுவதான பதார்த்த ஸம்பாரமுடையவ னென்றும், ஜகத் ஸ்வாமியென்றும், ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்களுக்குக் காரண னென்றும், ஸர்வாதார ஸர்வ நியந்தா, வென்றும் அதன் ரூடியான அர்த்தத்தால் அவன் அநந்தகல்யாணகுணகணஸ்பத னென்றும் நிரஸ்த நிகில ஹேய கந்தனென்றும் ஏற்படுகிறது.

உபநிஷத் இதிஹாஸம் முதலியவைகள் பகவத் ப்ரதிபாதகங்களாக இருக்கையிலும் அவை விஷயாந்தர வ்யாமிஶ்ரங்களாக இருப்பதனால் கரும்பு போலவும், “தொண்டர்க்கமுதுண்ண,” “ஸாரஸாரஜ்ஞ தாநாம்” என்கிறபடியே திருவாய்மொழி அக்கரும்பின் ரஸம்போலவு மிருப்பதால், “பகவத் விஷயம்” என்கிற திருநாமம் ‘பங்கஜம்’ முதலிய ஶப்தம்போல இந்தத் திருவாய்மொழிக்கே அமைந்திருக்கிறது.

இந்த க்ரந்தத்தைப் பரம காருணிகனான ஸர்வேஶ்வரன் லோகோஜ்ஜீவநார்த்தமாக ஶ்ரீ விஷ்வக்ஸேநரை ஆழ்வாராக அவதரிப்பித்து, “என்னால் தன்னைக் கவிபாடி” என்கிறபடியே அவர்முகமாய்த் தானே ப்ரவர்த்திப்பித்தபடியால், இதற்கு ‘திருவாய்மொழி’ என்று திருநாம முண்டாயிற்று.

* இது, சென்ற மார்கழி மாஸத்தில் நீடாமங்கலத்தில் நடந்த ஶ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் இரண்டாவது மஹாஸங்கத்தில் வித்வாந் ஶ்ரீ புத்தங்கோட்டகம் ஶ்ரீநிவாஸாசார்யாரால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

இந்தத் திருவாய்மொழியை அருளிச்செய்தவர் - ஶடவாயுவை நிரஸநஞ் செய்து அவதரித்தபடியால் ஶடகோபன் என்றும், பகவத்குணாநுபவமாகிற ஸமுத்ரத்தில் ஆழ்ந்ததனால் ஆழ்வார் என்றும் திருநாமமுடையவர். ஒரு காலத்தில் ஸ்ரீ ஆதிவண்ஶடகோப ஜீயர் ஆழ்வாரை மங்களாஶாஸநஞ் செய்ய எழுந்தருளின பொழுது, ஆழ்வாரைக் காணாமல் கண்ணிநுண்சிறுத்தாம்பை அநுஸந்தித்திருக்கையில் மலைக்கணையில் எழுந்தருளியிருப்பதாய் ஒரு நியமநத்தைக் கேட்டு அத்யாநந்தத்தோடு ஸ்ரீ ஸ்வாமி ஆழ்வாரை ப்ரார்த்தித்ததும் ஆழ்வார் ஜலத்தில் மிதந்து வரக் கண்டு 'நம் ஆழ்வார் எழுந்தருளினார்' என்று திருக்கையில் ஏந்தினாராம். அதைக்கண்ட ஸ்ரீ ஆதிப்பிரான் திருவுள்ளம் உகந்து 'ஸ்ரீ ஸ்வாமி ஸாதித்தபடி இன்று முதல் ஆழ்வாருக்கு நம்மாழ்வார் என்று திருநாம மிருக்கட்டும்' என்று நியமித்த படியால், இப்பொழுது அந்தப்பெயரால் எல்லாரும் அவரைக் கொண்டாடுகிறார்கள்.

இந்தத் திருவாய்மொழியினால் முக்யமாய்ச் சொல்லப்படுகிற அர்த்தம்- புருஷார்த்தாபேக்ஷையுள்ள சேதநனுக்கு ஸர்வேஶ்வரனே பரமோபாயன், அவனே பரமப்ராப்யன் என்பது தான். இந்தத் திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்கள் அடங்கியது. இதைப் பத்துப் பாகமாகப் பிரித்து, முதல் நூறு பாசுரங்களினால் பரத்வம் ஸௌலப்யம் முதலிய கல்யாணகுண பரிபூர்ணனானபடியால் ஸ்ரீ பதியே முக்யோபாய னென்றும், இரண்டாவது நூறு பாசுரங்களினால் நிரதிஶய போக்யனானபடியால் அவனே ப்ராப்ய னென்றும், அடுத்த நூறுபாசுரங்களால் ப்ராப்யத்வோபாயத்வங்களுக்கு அத்யந்த அவஶ்யதமமான திவ்யமங்களவிக்ரஹம் அவனுக்கு உண்டென்றும், அடுத்ததால் வேறு ப்ராப்யங்களெல்லாம் அநித்யங்களென்றும், மேல் எல்லாத் தஶகங்களினாலும் அந்த ஈஶ்வரனைத்தவிர வேறு உபாயமு மில்லை வேறு ப்ராப்யமு மில்லையென்றும் ஆழ்வார் ப்ரகடநஞ் செய்திருக்கிறார். இதில் முதல்மூன்று தஶகங்களினால் திருமந்த்ரத்தின் ப்ரதம பதார்த்தமும், அடுத்த நாலு தஶகங்களினால் மத்யம பதார்த்தமும், மற்ற மூன்றினால் த்ருதீய பதார்த்தமும் ப்ரதிபாதிக்கப்படுகிறது என்றும், இப்படியே த்வயத்தின் அர்த்தஞ் சொல்லப்படுகிற தென்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இம்மாதிரியான அர்த்தங்களை ஸதஸ்ஸில் விவரிப்பது அநுசிதமானதால், அவைகளை உபபாதிக்கவில்லை. முதல் அர்த்தத்தை மாத்திரம் கிஞ்சித் அம்ஶத்தில் விசாரிப்போம்.

இதில் முதற் பத்து முதல் 10 - பாசுரங்களால் மயர்வற மதிநலமுடைய ஆழ்வார் ஸர்வேஶ்வரனுடைய பரத்வாதிகளை அநுபவித்து விட்டுப் பிறகு அவ்வநுபவத்தை எல்லாருடனும் சேர்ந்து அநுபவிக்க ஆசைப்பட்டு



அதற்கு யோக்யர்களை உலகிற் காணாமையால், விஷய ப்ரவணர்களா யிருக்குமவர்களைப் பகவத்பரர்களாக்கியாவது அவர்களுடன் கலந்து அநுபவிக்கலாமென்கிற எண்ணத்துடன் 2 - வது பத்துப் பாசுரங்களால் 'இந்தத் தீக்கஹேதுக்களை விட்டுப் பகவத் பக்தியைச் செய்யுங்கோள்' என்று பரோபதேஶஞ் செய்கிறார்.

மூன்றாவது 10 - பாசுரங்களால், அவாப்த ஸமஸ்த காமனாயும், ஸர்வ விதத்திலும் ஸர்வோத்க்ருஷ்டனாயு மிருக்கிற ஸர்வேஶ்வரன், ஸர்வ ப்ரகாராதி நிக்ருஷ்டர்களான நம்முடைய பக்திக்கு லப்யனாவனோ என்கிற ஶங்கையை அவனுடைய ஸௌலப்ய ப்ரகடநாதிகளினால் பரிஹரிக்கிறார்.

"பத்துடை அடியவர்க் கெளியவன்" என்றன்றோ சொல்லியிருக்கிறது.? அதாவது - « ஊட்ளஸ » என்கிறபடி விவேகாதி ஸாதந ஸப்தகத்தினால் அநுக்ருஹீத பக்தியோகமுடைய எல்லாருக்கும் தானும் தன்னைச் சேர்ந்தவர்களு முட்பட « ஸுகிக்ரீ தஃ » என்கிறபடி அத்யந்த ஸுலபன். விஶ்வாமித்ரர் போன்ற நிஷ்பந்ந யோகிகளுக்கு மாத்திரமன்று; « தஜயிஜ » என்கிறபடி பக்தியாரம்பத்திலேயே ஸுலபனென்றும் அர்த்தமாம். 'மனோஜயம் பிறந்து ஜ்ஞாந யோக நிஷ்பத்தி உண்டானாலன்றோ பக்தி ஆரம்பம் ஏற்படும்? அது அஶக்யமாகில் என் செய்வது?' என்று அஞ்சவேண்டாம். பக்திக்குக் காரணமான கர்மயோகாதிகளைச் செய்கிறவர்களுக்கும் அத்யந்தஸுலப னென்றும் அர்த்தமாம். 'அந்தக் கர்மயோகம் அநுஷ்டிக்க ஜ்ஞாந ஶக்திகள் இல்லையே' என்றால், அதுவும் வேண்டாம். « ஸுதம் த்ராஹி ஹஜஸாயந ஹரிஹரம் » என்கிறபடி க்ஷண ஸாத்யமான ப்ரபத்தியை யுடையவர்களுக்கும் அத்யந்தஸுலபன்.

'பத்து' என்றால் ஸாத்ய பக்தி யென்று அர்த்தம். மேற்கூறிய ப்ரபத்தி க்ஷண ஸாத்யமானாலும் 'கல எள் கட்டு' என்கிறபடியே துஶ்ஶகமென்னில், அதன் ஆரம்பமும், அல்லது அதன் அங்கமும் உடையவர்களுக்கு அத்யந்த ஸுலபன். அதற்கும் ஶக்தியற்றவர்களுக்கு என் செய்வதென்னில், « வஶாஜ நாஷ்ரூ », « ஷிஜிஹவதி », « யஸ்ரா நாஹவ » இத்யாதிகளின்படி பாகவத ஸமாஶ்ரயண முள்ளவர்களுக்கும் அத்யந்த ஸுலபன். அதற்கும் ஶக்தியில்லாவிட்டால், "தாமுளரே நாவாயிலுண்டே", "ஒன்று நீர் பேசுமினே" என்கிறபடியே அர்ச்சநம், கீர்த்தநம், சிந்தநம் முதலியவற்றை யுடையவர்களுக்கும் அத்யந்தம் ஸுலபன், அதற்கும் ஜாத்யாதி நியமம் வேண்டாவோ? என்ன, « ஶ்வா

கூ: பூ நாராயணோ" என்கிறபடி அதுவும் வேண்டா மென்கிறார். அடியவர் என்கிற பஹு வசநத்தினால் அநுபந்திகளுக்கும் ஸுலபன் என்கிறார். இந்த ஸௌலப்யத்தின் பலத்தை "ஹெஹோஹோ" என்னும்படியிருந்த ஸங்கரஜாதி வாநரத்துக்கு, "வாத மாமகன்," "வஸ்து ஸுவ்ஸ" என்கிறபடி ஆத்மதாந பர்யந்தமான பலத்தைக் கொடுத்தும் அத்ருப்தனாயிருக்கிறவிடத்தில் கண்டுகொள்வது.

இப்படி அத்யந்த ஸுலபனுடைய ப்ராப்திக்குப் பக்திசெய்யவேணுமோ? என்கிற ஶங்கையைப் பரிஹரிக்கிறார், பிறர்கள் இத்யாதியால். கீழ்ச்சொன்ன ஒருவித நன்மையும் இல்லாதவர்களுக்கு, "ஶ்ரேவாநு ஶயா" இத்யாதிகளின்படி பர்வதராஜனையும், க்ஷீர ஸமுத்ரத்தைக் கலக்கின மந்தரத்தையும், ஸர்வாதாரமான மேருவையும், த்ரைலோக்யங்களையும், இவையெல்லாவற்றையும் புக்தி கபளம்போலத் தூக்கி எறிய ஶக்தனாயிருக்கையிலும், ஶத்ருவாய் வந்ததனால் இருபது கையுடனும் ஸர்வஸைந்யத்துடனும் பரதன் தம்பியை அசைக்க முடியாமல்போய் திருமகன் ப்ரபாவ விஷயத்தில் கை முதிகத்தால் விஸ்மிதனான ப்ரஹ்ம பௌத்ரன் சொன்னது போல அபரிச்சேத்ய ஸ்வபாவமுடையவனாக இருக்கிறான்.

ஆனால், பௌருஷ மாத்ர ப்ரதாந ஸ்வபாவனோ? என்கிற ஶங்கையைப் பரிஹரிக்கிறார். "வாஷாரா-ஜஷம்" என்கிறபடி பூவே உருவமெடுத்தது போன்ற வடிவினையில்லா மலர்மகள் ஸௌகுமார்யாதிஶயத்தால் ம்ருதுவான ஸம்வாஹநாதிகளை அநுபவித்துப் பிறகு பிரிந்ததும், அதற்கு ஆசைப்பட்டு, "ஶோகாஷிக்ஷிப்தெதா:" என்கிறபடி ஏமாறி, உள்ளும் புறமும் உலர்ந்த அங்கங்களுடன் "யமஸ்ரீ ஸீதா" "கூப்ரெயாஹி" என்னும்படி இருக்கிறவளால் "ஸஂஸ்ஸ்ப்ரெஶ்யம்" என்றும் "யந்நா: வஶாந்தி" என்றும் விரும்பப்பட்டவன். ஆகையினால், நமக்கு அரியதான ப்ராப்தியை யுடைய ஸ்வாமிகள், "வானோ மறிகடலோ" என்னும்படி ஸர்வ காலத்திலும் கடைய வேண்டியதான வெண்ணெயை ஆத்மாபஹாரமாகிற சௌர்யத்தைச் செய்தவர்களைப் பிடிக்கவந்தவன் செய்த களவினில், உதரமத்யத்தில் ஸர்வர்க்கும் பந்த நிவர்த்தநத்திற்காகத் தான் கட்டுண்டு உரலோடு உரலாய் இருந்ததில் ஏங்கினது. ஸர்வஶக்தன் அஶக்த பாவனை செய்தது கூட ஆழ்வாருக்குப் பொறுக்காமல், ஆறு மாஸம் மூர்ச்சை யடைந்திருந்து மறுபடி தெளிந்தார். ஆகையினால், இவ்வளவு ஸுலபனை ஆஶ்ரயித்து ஸர்வ புருஷார்த்தத்தையும் அநுபவிக்கலாம் என்கிறார்.

---

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## (1)

## ஸ்ரீ ராகவன் கணையாழி.

வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

அங்குளீயகவிஷயமாக மறுபடியும் கேட்கப்பட்டிருக்கும் ப்ரஶ்நத்திற்குப் பூர்வமே உத்தரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ராமன் காட்டுக்கு எழுந்தருளும்பொழுது ஸகல பூஷணங்களையும் கழற்றிவிட்டதாக ப்ரமாணம் இல்லை. ராமன் வாநப்ரஸ்தம் ஸந்யாஸம் முதலான ஒருவிதமான ஆஶ்ரமாந்தரத்தையும் அடையவில்லை யென்று ஸ்புடமான வ்யாக்யாநமும் யுக்திகளும் இருக்கிறபடியால், இந்த அங்குளீயகம் தன்னுடையதாகவே இருக்கலாம். அத்யாத்ம ராமாயணத்தில் ஸ்ரீ ராமன் கையில் மோதிரமணிந்திருந்ததாய் இருக்கிறபடியால், ராஜபுத்ரனுக்குப் பூஷணம் எப்படி கிடைத்தது? என்கிற ப்ரஶ்நம் அநுசிதம்.

புத்தங்கோட்டகம் 1—2—12. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யன்.

[ஸ்ரீ ராகவன் கணையாழி விஷயமான சர்ச்சை இதனுடன் நிற்கவேணும். பத்ராதிபர், வேதாந்ததீபிகை.]

## (2)

## ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருதம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

மா யாத பாந்தா: பதி பீமரத்யா:
திகம்பர: கோऽபி தமால நீல: ।
விந்யஸ்த ஹஸ்தோऽபி நிதம்ப பிம்பே
தூர்த்த: ஸமாகர்ஷதி சித்தவித்தம் ॥

இந்த ஶ்லோகத்தில், "ஹே வழிப்போக்கர்களே! இந்த பீமரதீ யாற்றின் வழியில் போகாதேயுங்கோள்; அந்த மார்க்கத்தில் வஸ்த்ரமில்லாமலும்,

பச்சிலைமரம் போல இருண்ட திருமேனியை யுடையவனாகவும் இருக்கும் யாரோ ஒரு துஷ்டன், கையை இடுப்பிலே வைத்துக்கொண்டு நின்ற வண்ணமாகவே, அந்த மார்க்கத்திற் போகும் ப்ரயாணிகளின் மநஸ்ஸாகிற தநத்தை அபஹரித்துவிடுகிறான்" என்று சொல்லி யிருக்கிறதே; இதன் அர்த்தம் என்ன?

"[illegible]", "[illegible]", "[illegible]" முதலிய எல்லா ஶ்லோகங்களிலும் ஸ்ரீ க்ருஷ்ணனைப் பார்க்கவேணு மென்றும், அவன்ஸேவையே புருஷார்த்தமென்றும் சொல்லி யிருக்கையில், "அந்த வழியில் போக வேண்டாம்; ஏனென்றால், அங்கே ஸ்ரீ க்ருஷ்ணன் இருக்கிறான்; மநஸ்ஸை ஆகர்ஷித்துக்கொள்வன்" என்று இந்த ஶ்லோகத்தில் சொல்வது ஏன்? ஸ்ரீ க்ருஷ்ணன் மநஸ்ஸை ஆகர்ஷித்துக்கொள்ளவேண்டியதுதானே உத்தேஶ்யம்? அவனுடைய ஸாமீப்யாதிகள்தானே அபேக்ஷிதங்கள்? அப்படிப்பட்ட மஹாபாக்யத்தை அநுபாதேயமாகச் சொல்வதன் தாத்பர்யம் தெரியவில்லை.

நிந்தாஸ்துதி என்று சொல்லலாமோ வென்றால், பலனை இழந்துவிடும்படி சொல்வது உசிதமா? சிலர் "மா யாத" என்கிறதற்கு -'அடைய வேண்டாமென்கிறது இல்லை' என்று அர்த்தமென்றும், இரண்டு எதிர்மறை இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். இது ஸரிதானா? வேதாந்த தீபிகையை வாசிக்கிற அநேக வித்வான்கள் இதன் தாத்பர்யத்தைத் தெளிவாக எழுதித் தெரிவிக்கவேணு மென்று ப்ரார்த்திக்கிறேன்.

சித்தூர்
2—2—12.

நீலமேகம் - ஸ்ரீநிவாஸவரதன்.

## (3)

## ஸ்ரீ மடத்திற்குச் சொந்தமான சொத்துக்கள்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

பின்வரும் கடிதம், ஆரணியிலிருக்கும் தகுந்த அந்தஸ்துள்ள ஒரு ஸந்நிதி ஶிஷ்யரிடமிருந்து எனக்குக் கிடைத்திருக்கிறது. அதை ஸ்ரீவேதாந்த தீபிகையில் ப்ரசுரம் செய்யவேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"செய்யார் தாலூக்கா புரிசை ப்ருகாவைச் சேர்ந்த ஆலத்தூர் என்னும் க்ராமத்தில் ஸ்ரீ அஹோபில மடத்துக்குச் சொந்தமாக ஸ்வல்ப நிலம் இருக்கிறது. அதற்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்வாமியின் பேரில் பட்டா. அது, ஸர்வே நெ. 256-ஏ, வெட்டரில் 1-ஏக்கரா 50-ஸெண்டும், 270-நம்



பரில் 27 - ஸெண்டும், ஆக 1 - ஏக்கரா 77 - ஸெண்டு விஸ்தீர்ணமுள்ளது. உத்தேசம் ரூ. 1400 விலை பெறும். ஸ்ரீ மடத்துக்கு ஏஜண்டாக இருந்தவர்களில் ஒருவர் ஸ்வல்ப காலத்துக்குமுன்னே இந்த நிலம் முழுவதையும் பிள்ளைபாக்கம் ஸ்ரீநிவாஸாசார்யர் என்னும் ஒருவருக்கு ரூ. 35 - க்கு க்ரயம் செய்து ரிஜிஸ்தர் இல்லாத ஒரு க்ரய ஶாஸநம் எழுதிக் கொடுத்திருக்கிறதாகவும், அந்த ஸ்ரீநிவாஸாசார்யர் அதில் 1 - ஏக்கரா 50 - ஸெண்டை மாத்திரம் சென்ற 1906 - ம் வருஷத்தில் வீராஸாமி என்னும் ஒருவருக்கு விற்றுவிட்டு, பாக்கி 27 - ஸெண்டைத் தன்னுடைய ஸ்வாதீநத்திலேயே வைத்துக்கொண்டிருக்கிறதாகவும், இப்பொழுது ஸெட்டில்மெண்டு நடக்கிறபடியால் பட்டாமாறுதலைப்பற்றி விசாரம் வந்து ஸெட்டில்மெண்டு உத்யோகஸ்தர்கள் ஸ்ரீ மடத்துக்கு 'பட்டா மாறுதல் செய்வதில் உங்களுக்கு ஏதாவது ஆக்ஷேபமுண்டா?' என்று ரிஜிஸ்டர்செய்யப்பட்ட நோட்டீஸ் ஒன்று அனுப்பினதாகவும், அதற்கு ஸ்ரீ மடத்திலிருந்து 'அந்த நிலத்தை க்ரயம் செய்தவர் ஒருபொழுதும் தங்களுடைய ஏஜண்டாக இருந்ததில்லை' என்று பதில் கிடைத்திருப்பதாகவும் தெரிய வருகிறது. இதைப்பற்றித் தேவரீர் தகுந்த முயற்சி எடுத்துக்கொண்டு கைதவறிப்போயிருக்கும் சொத்தைத் திரும்பவும் ஸ்ரீமடத்துக்குச் சேரும்படி ஏற்பாடுசெய்ய வேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

தவிரவும், இவ்விடத்திலிருக்கும் சேஷப்பிள்ளை யென்னும் ஒருவர் அந்த க்ராமத்திலேயே ஸ்ரீ மடத்துக்குச் சொந்தமான மற்றும் சில நிலங்களைப் பஹுகாலமாகத் தான் குத்தகை ஒப்புக்கொண்டு 5, 6 - வருஷம் முன் வரையில் குத்தகைத்தொகையைச் செலுத்தி வந்ததாகவும், பிறகு தொகை செலுத்துவதை நிறுத்திவிட்டுத் தனக்குச் சொந்தமான சொத்துக்களைப் போலவே இந்தச் சொத்தையும் அநுபவித்து வருவதாகவும் கேள்விப்படுகிறோம். "ஏன் குத்தகைத் தொகை வஸூல் ஆகவில்லை" என்று எவ்வித விசாரணையும் ஸ்ரீ மடத்திலிருந்து ஏற்பட்டதாகவும் தெரியவில்லை. அந்தக் குத்தகைப் பத்திரம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டதாதலால், ஸ்ரீ மடத்துக்குத் தேவரீர் விஜ்ஞப்தி பத்திரிகையை அனுப்பிப் பழைய தஸ்தாவீஜ்களைத் தேடிப்பார்க்கும்படி ஏற்பாடு செய்ய வேணும். சென்ற வருஷம் வரையில் இந்த ஆலத்தூர் க்ராமம் வந்தவாசி தாலூக்கா கஸ்பா ப்ருகாவைச் சார்ந்ததாக இருந்தது."

சித்தூர்,
23—2—1912.

ஸி. ராஜகோபாலாசார்யர்.

ஸ்ரீ:

# பிரிவுகளின் அறிக்கை.

## மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு.

நாளது பிப்ரவரி௴ 4௳ ஞாயிற்றுக்கிழமை பகல் 4- மணிக்குத் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் இந்தப் பிரிவின் ஸதஸ் ஒன்று சேர்ந்தது; ஏறக்குறைய 60 - ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹமாசார்யர் திருப்பாவையைப்பற்றி உபந்யாஸம் செய்தார்.

உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்:—ஸ்ரீ ஆண்டாளுக்கு மற்றை ஆழ்வார்களைப் பார்க்கிலும் மேன்மை சொல்லுகிற விஷயத்தில், ‘மற்ற ஆழ்வார்கள் “அநாதிமாயயா ஸுப்தா:” என்கிறபடியே ப்ரக்ருதியிலே உறங்கிக் கிடக்கிற தங்களைப் பகவான் எழுப்பிக்காட்டத் தாங்கள் கண்டுகொண்டார்கள்; இவளோ அப்படிக்கில்லாமல் நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தனை அவன்தன்னை எழுப்பி “உனக்கே நாம் ஆட்செய்வோம்” என்று தன்னுடைய உண்மையை அறிவித்தாள்’ என்று சில வ்யாக்யாதாக்கள் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால், தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பள்ளியெழுச்சி என்கிற ப்ரபந்தத்தில் எம்பெருமானை எழுப்பி “உன்னடியார்க்காட்படுத்தாய்” என்று பாகவத தாஸ்யத்தை ப்ரார்த்தித்திருக்கிறபடியாலும், மற்ற ஆழ்வார்களும் தங்கள் தங்கள் ஶேஷத்வத்தைப் பஹுவிதமாக அறிவித்திருக்கிறபடியாலும், மேற்சொன்னது இவளுக்கு அஸாதாரணமான உத்கர்ஷமாகாது. ஆகையால், ஸ்வதஸ்ஸித்த ஸ்த்ரீத்வத்தையுடையவளான இவளிடத்தில் அநுராகம் வேறொன்றியிருக்கிறது என்றே இவளுக்கு உத்கர்ஷம் சொல்லவேண்டும். மற்ற ஆழ்வார்களும் ஸ்த்ரீத்வத்தைப் பாவனை பண்ணினார்களன்றோ? இதைத்தான் “போக்தும் தவ ப்ரியதமம் பவதீவ கோதே” என்கிற ஶ்லோகத்தில் ஆசார்யன் அருளிச்செய்திருக்கிறார்; இவ்வாறாகவே மற்ற வ்யாக்யாதாக்கள் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள். இப்படி இவள் அநுஷ்டாநத்துக்கு மூலம், திருவாய்ப்பாடியில் மார்கழி மாஸத்தில் கோபிகைகள் காத்யாயந்யர்ச்சந வ்ரதத்தை அநுஷ்டித்து க்ருஷ்ணனுடைய ஸம்ஶ்லேஷத்தைப் பெற்றதுவே. மற்ற ஆழ்வார்களைப்போல இவ்வாண்டாளும் மடலூராமைக்குக் காரணம், க்ருஷ்ணன் தானுமொக்க மடலெடுப்பானென்பதும், ராஜபத்நீ மடிப்பிச்சைகோலுமாப்போலேநோன்பு மடலெடுப்பதைக்காட்டிலும் அவத்யாவஹமென்பதும்தான்.



“மார்கழித் திங்கள்” என்று முதலில் காலத்தைக் கொண்டாடினபடி; “வேதாநாம் ஸாமவேதோऽஸ்மி” என்பதுபோல “மாஸாநாம் மார்கஶீர்ஷோऽஸ்மி” என்று பகவான் தானே அபிமாநித்த காலம் இது. ஸத்வோத்தர காலமாகவும் எல்லாப் பயிர்களும் பலிக்குங் காலமாகவும் இருப்பதுடன்கூடக் கோபவ்ருத்தர்கள் குளிருக்கு அஞ்சி உள்ளே கிடக்குங் காலமாக இருப்பது, தாங்கள் யதேச்சம் க்ருஷ்ணனோடு ஸம்ஶ்லேஷிக்கிறதற்குப் பெருத்த உபகாரகம். இப்படி நாளைக்கொண்டாடுவது, இவ்விடத்தில் பலத்தில் ஆஶைக்கு மேற்பட ஒன்றும் செய்யவேண்டியதில்லை யென்பதைக் காண்பிக்கிறது என்று சில வ்யாக்யாதாக்களுடைய அபிப்ராயம். மற்ற வ்யாக்யாதாக்களோ, “போதுமினோ” என்று கர்த்தவ்யாந்தர விதி இருக்கிறபடியால் முமுக்ஷுத்வம் மாத்திரம் அதிகாரமென்பதைக் காண்பிக்கிறது என்று அபிப்ராயப்படுகிறார்கள்.

இப்படியே “போதுவீர்” என்னும் பஹுவசநத்தில் வ்யாக்யாதாக்களின் அபிப்ராய பேதம் உண்டு என்று சொல்லி அந்தப் பேதங்களை யெடுத்து உரைத்து, பிறகு திருவாய்ப்பாடியின் பெருமையையும், அதிலும் யுவதிகளாய்ப் பிறந்தவர்களின் பாக்யாதிஶயத்தையும், இப்படிப்பட்ட ஸர்வரக்ஷகனுக்கும் தன்னை ரக்ஷகனாக நினைத்திருக்கும் ஸ்ரீ நந்தகோபன் பெருமையையும், அவருக்குக் கீழடங்கியிருப்பதுபோலப் பாவிக்கும் பகவானுடைய திவ்யசரித்ரவிஶேஷங்களையும், இப்படிப்பட்ட குழந்தையைத் தன் மடியில் வைத்து எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கும் யஶோதைப்பிராட்டியினது கண்களின் பெருமையையும், தன்னிஷ்டத்துக்கு இணங்கி நடக்கும்படி அவளுக்குச் சிங்கக்குட்டி போல இருக்கும் எம்பெருமான் சேஷ்டிதங்களையும், அவனுடைய திருமேனி திருக்கண்கள் திருமுகமண்டலம் இவைகளின் ஸௌந்தர்யாதிஶயத்தையும், இவைகளெல்லாம் நமக்கு அநுபாவ்ய மாகைக்குக் காரணமாக அவனுக்கும் நமக்கு முள்ள ஸம்பந்தங்களையும், அவனுடைய கல்யாணகுணங்

களையும், இப்படிப்பட்ட அநுபவத்தை அவனைத்தவிர மற்றவர் கொடுக்க மாட்டார்கள் என்பதையும், அவனையும் அவன் திருவடிகளையுமே உபாயமாகப் பற்றின நமக்கல்லது அந்த அநுபவத்தை அவன் கொடான் என்பதையும், இவ்விடத்தில் 'பறை' என்பது நோன்புக்கு வேண்டிய வாத்ய விஶேஷத்தைக் காட்டினாலும் இது கோபர்களுக்கு வ்யாஜமாகச் சொல்லப்பட்டது என்று க்ரஹித்து "இற்றைப் பறை கொள்வா னன்றுகாண்" என்கிற இவர்கள் அபிப்ராயப்படி யாவதாத்ம பாவியான கைங்கர்யத்தைச் சொல்லுகிறது என்பதையும், "ஏலோ ரெம்பாவாய்" என்பது முற்றிலும் பாட்டுக்களின் அசையாயிருந்தாலும் 'இப்படிப்பட்ட ஸ்திதியை நீங்கள் ஆசைப்பட்டீர்களாகில் எங்களுடைய இந்தப் பாட்டுக்களை வாயாற் சொல்லி அவைகளின் அர்த்த விஶேஷங்களை விசாரியுங்கோள்' என்று அத்யயந விதியாக இருக்கிறது என்பதையும், திருப்பாவையை உபநிஷத் என்று ஆசார்யன் அருளிச்செய்திருப்பதால் இது அதன் முதல்வாக்யமான "ப்ரஹ்மவிதாப்நோதிபரம்" என்பது போலத் தத்வ ஹித புருஷார்த்த ஸங்க்ரஹமாக இருக்கிறது என்பதையும் அத்யந்தம் விஸ்தாரமாகவும் ரஞ்ஜகமாகவும் எடுத்து உரைத்து உபந்யாஸத்தை முடித்தார்.

---

## ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் விலைக்குக் கிடைக்கும் க்ரந்தங்கள் :

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. | ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபால ஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது) ... ... | 0 | 2 | 0 |
| 3. | ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும் :—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யாரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# பத்ராதிபரின் குறிப்புகள்.

"ஹே ஸ்ரீ தேவி ஸமஸ்தலோகஜநநீம் த்வாம் ஸ்தோதுமீஹாமஹே
யுக்தாம் பாவய பாரதீம் ப்ரகுணய
ப்ரேமப்ரதாநாம் தியம் - பக்திம் பந்தய
நந்தயாச்ரிதமிமம் தாஸம் ஜநம் தாவகம் லக்ஷ்மி
லக்ஷ்மிகடாக்ஷவீசிவிஸ்ருதே: தே ஸ்யாம ஸாரீ வயம்" என்று

ஸ்ரீ வேதாந்த தீபிகை.

ஸ்ரீ ஆழ்வான் ஸமஸ்த ஜகந்மாதாவாகிற லக்ஷ்மியின் ஸ்தோத்ரத்தைச் செய்ய உபக்ரமிக்குங் காலத்தில், அந்த ஸ்துதிக்கு உபயுக்தமாக இருக்கும் வாக் ஸாமக்ரியின் பூர்த்தி கிடைக்கவேண்டுமென்று அதற்கு ஹேதுவாக நிற்கும் அவளுடைய கல்யாணகுண விஷயகமான விஸ்வாஸம் முதலியவற்றை ப்ரார்த்தித்து, அவளுடைய அபாங்க தரங்க விஜ்ரும்பணமில்லாவிட்டால் தம்முடைய ப்ரயத்நம் நிறைவேறாது ஆகையால் அப்படிப்பட்ட கடாக்ஷங்களுடைய வர்ஷமும் தமக்கு நிரந்தரம் கிடைக்க வேணுமென்று யாசித்துத் தமது ஸ்தோத்ரத்தை ஆரம்பித்தார். அந்தப் பதவியை அநுஸரித்து வாசிகமாக அதே விதமான ப்ரார்த்தனையைச் செய்ய அஶக்தர்களாக இருக்கையிலும், அவர்செய்த அநுஸந்தாநத்தை யதாஶக்தி மாநஸிகமாக அநுகரித்து, சென்ற வருஷம் மாசி மாஸத்தில் பகவத் கைங்கர்ய ரூபமாகிற இந்தப் பத்ரிகா ப்ரகடநத்தை ஆரம்பித்தோம். அந்தக் கடாக்ஷ பலம், நம்மை இவ்வளவு தூரம் கொண்டுவந்துவிட்டது. சென்ற தைமாஸத்துடன் ஒரு ஸம்வத்ஸரம் பூர்ணமாகி, இந்த ஸஞ்சிகை முதலாக இரண்டாவது ஸம்வத்ஸரம் உபக்ரமிக்கிறது என்பது நமது சந்தாதாரர் எல்லாருக்கும் தெரியும். சென்ற ஸம்வத்ஸரத்தில் இந்தப் பத்ரிகைக்கு ஸ்வரூப நிஷ்பத்தி ஏதாவது ஏற்பட்டிருந்தால், அவ்வித நிஷ்பத்திக்குப் பகவதிச்சையே காரணமாக இருக்கவேண்டுமே தவிர மற்ற எதுவும் காரணமென்று சொல்லமுடியாது. பின்

மினிப்பூச்சிபோல இருக்கும் அஸ்மதாதிகளுடைய ஶக்தி எதற்கு ப்ரயோஜநமாகும்? "[illegible]" என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் அருளிச்செய்தது நமக்காக வன்றோ?

இந்த ப்ரயத்நத்தைப் பகவாந் பூர்ணமாகக் கடாக்ஷித்திருக்கிறார் என்பதற்கு, இந்தப் பத்ரிகையின் ஆரம்ப தஶையிலேயே அநேக சிஹ்நங்களைக் கண்டோம். "[illegible]" என்கிறபடி, இதை உத்தேஶித்து முதலில் ப்ரவ்ருத்தித்தபொழுதே, ஒருவிதமான தடையுமின்றி அநேக மஹாங்களுடைய அங்கீகாரம் ஸுலபமாகவே கடித்தது. அநேக வித்வாங்களும் மிகுந்த க்ருபையுடன் அடிக்கடி விஷயப்ரதாநங்களைச் செய்வதாக அப்யுபகமம் செய்தார்கள். அநேக விவேகிகளும் இந்த ப்ரயத்நத்தின் ஸாதுத்வத்தைப் பராமர்ஶித்து மிகுந்த விஸ்வாஸத்துடன் பத்ரிகைக்குச் சந்தாதாரர்களாக இருக்க ஒப்புக்கொண்டார்கள். இம்மாதிரியான ப்ரோத்ஸாஹநங்களை அவலம்பித்து இந்தக் கைங்கர்யத்தில் இழிந்த நமக்குக் கொஞ்சமேனும் ஶோசிக்க ஹேதுவில்லாமல் பூர்வம் ப்ரதிஜ்ஞாதத்தைக் காட்டிலும் அநேகமடங்கு அதிகமாகவே ஸஹாயங்கள் கிடைத்தன. வருஷாந்தத்தில் இன்னும் சில ப்ரபுக்கள் இந்தப் பத்ரிகையின் தார்ட்யத்தை உத்தேஶித்துப் பெருத்த த்ரவ்ய ஸஹாயத்தைச் செய்தார்கள். இப்படிப் பலவாறாக அநர்க்கமான உபக்ருதியைச்செய்த எல்லாமஹாங்கள்விஷயத்திலும் க்ருதஜ்ஞதா ஶாலிகளாக இருப்பதைத்தவிர வேறு எவ்விதமான கைம்மாற்றையும் நாம் செய்யக்கூடவில்லை. "[illegible]" என்று சக்ரவர்த்தித்திருமகன் ஶோசித்ததுபோல நாமும் ஶோசித்தே நிற்கிறோம்.

ஸத்விஷயத்தில் எந்த ஸாதுக்கள்தான் ஸஹாயம் செய்யமாட்டார்கள்? ஒரு விதமான ப்ரத்யுபகாரத்தையும் எதிர் பாராமலே



இதில் உழைப்பது ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வரூப லக்ஷணமென்று எண்ணித் தம்முடைய த்ரமிட பாஷா ஜ்ஞாநத்தைக்கொண்டு நமக்கு ஹார்த்தமான உதவி புரிந்த தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ. சே. க்ருஷ்ணமாசார்யர் விஷயத்திலும் நாம் அந்ருணிகளாக ஆகவில்லை. அந்த ஸ்வாமியுடைய உதவி இல்லாவிடில் இந்தப் பத்ரிகையின் நிர்வாஹம் ஏற்பட்டிருக்குமோ என்பதே ஸந்தேஹந்தான். மற்ற எல்லாம் அமைந்தது போல, நமக்கு அமைந்த அச்சுக்கூடத்து அதிகாரிகளும் மிகவும் நல்லவர்கள். எல்லாருக்கும் த்ருப்தியை உண்டுபண்ணும்படி அவர்களது வ்யாபாரத்தை அவர்கள் நிர்வஹித்து வந்ததுடன், எக்காலத்திலும் நம்முடைய ஸௌகர்யத்திற்கு ஒத்தே நடந்துகொண்டுவந்தார்கள் என்பதில் நமக்கு ஏராளமான ஸந்தோஷம்.

சென்ற வருஷம் பத்ரிகையின் வரலாற்றைப் பற்றி விவரிக்கும்பொழுது, விஶிஷ்டாத்வைத மதத்தின் விஶேஷ தத்வங்களைப் பல பெயர்களுக்குக் கோசரமாக்கும்படி வெளியாக்குவது பத்ரிகையின் முக்கியமான கருத்து என்றும், இது முக்கியமாக இருக்கையிலும், இந்த மதத்திற்கென்றே ஏற்பட்டுள்ள ரஹஸ்ய க்ரந்தங்களிலிருந்தும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலிருந்தும் அருமையான விஷயங்களை எடுத்துக் கூறுவதும், ஸ்ரீமத் ராமாயணம் முதலிய இதிஹாஸங்களிலிருந்தும் புராணங்களிலிருந்தும் நன்னடக்கை தைவபக்தி முதலான நற்குணங்களைப் போதிப்பிக்கும் கதைகளை வெளிப்படுத்துவதும் இந்தப் பத்திரிகையின் நோக்கங்களில் உட்பட்டவை என்றும் சொன்னோம். இந்த ப்ரதிஜ்ஞை எவ்வளவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதற்குப் பத்ரிகையைப் படித்துவரும் ஶ்ரத்தாளுக்களே ப்ரமாணம். ஒரு விஜ்ஞாபநம் மாத்திரம் இது ஸம்பந்தத்தில் நாம் செய்துகொள்ளத் துணிகிறோம். பத்ரிகையின் தமிழ் நடை ஏராளமான வடமொழிகள் கலந்துள்ளதாக இருப்பதால், சிலர் பத்திரிகையைப் படித்து அதிற்சொல்லப்பட்டிருக்கும் அர்த்தங்களைத் தெரிந்துகொள்ள ஶ்ரமப்படுகிறார்கள் என்று ஒரு ஆக்ஷேபம் சொல்லலாம். அதற்கு நாம்சொல்லும் மறுமொழி ஒன்றே. ஸ்ரீ வைஷ்ணவ மத

க்ரந்தங்கள் ஏராளமாக மணிப்ரவாள நடையில் ஏற்பட்டிருப்பதால் அந்த நடையின் பழக்கத்திற்கு வேண்டிய பயிற்சியை நம்மவர் செய்துகொள்ள வேண்டியது அவஶ்யமே. அந்தப் பயிற்சியைக் கொடுப்பதற்காக வேண்டிய வடமொழிகள் எவ்வளவோ அவ்வளவே இந்தப் பத்ரிகையில் உபயோகப்பட்டு வருகின்றனவே தவிர அதிகாம்ஶம் இருக்காது என்பது திண்ணம். வேண்டுமிடங்களில் ஸம்ஸ்க்ருத வசநங்கள் க்ரந்தாக்ஷரங்களால் எழுதப்பெற்று வருகிறது என்பது உண்மையே. ஆனால், அவைகளின் பொருள் அடுத்தே தமிழில் விவரிக்கப்பட்டு வருகிறபடியால் ஶ்ரத்தையுடன் படிப்பவர்களுக்கு நாளடைவில் அவ்வல்லமை உண்டாதற்கு ஹேதுவாகிய பாஷாபரிசயம் ஏற்படும் என்பதும் நிஶ்சயம்.

---

**ஸ்ரீ அழகியசிங்கரின் ஔதாஸீந்யம்.**

சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் இரண்டாவது மஹா ஸங்கத்தில் நடைபெற்ற அம்ஶங்கள் எல்லாவற்றையும் ப்ரசுரம் செய்ததுடன் ஸ்ரீஸ்வாமி இந்த ஸபையின் விஷயமாக வஹிக்கும் ஔதாஸீந்யத்தின் அநௌசித்யத்தைப்பற்றியும் எழுதி யிருந்தோம். அப்படிப்பட்ட ஔதாஸீந்யத்தை வஹிக்க எவ்விதமான காரணமாவது இருக்கிறதோ என்று பக்ஷபாதமில்லாமல் பார்க்குமளவில் அப்படிக்கு ஏதேனு மிருக்கிறதாக விளங்கவில்லை. ஸபையைச் சேர்ந்த எல்லோரும் ஸ்ரீ ஸ்வாமி விஷயமாகப் பூர்ணமான ஶேஷத்வாநுஸந்தானத்துடன் கூடியிருப்பதாகத் தெரிகிறதே தவிர விபரீத சிஹ்நங்கள் ஒன்றையும் காணோம். ஸ்ரீ ஆதிவண் ஶடகோப ஜீயரால் ஜகத்தின் உஜ்ஜீவநார்த்தம் ப்ரதிஷ்டிதமான இந்த ஸ்ரீ அஹோபிலமடம் மேன்மேலும் அபிவ்ருத்திக்கு வரவேண்டும் என்பதே அவர்களுடைய கருத்தாகத் தெரியவருகிறது. இப்படிக்கெல்லாம் வஸ்து ஸ்திதி இருக்கையில், ஸ்ரீ ஸ்வாமி அவர்களிடம் ஔதாஸீந்யத்தையாவது த்வேஷ புத்தியையாவது செய்வது ஸ்ரீ ஸ்வாமிக்கு லக்ஷணமாகுமா? ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன் கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகி அவரை ஆராதிப்பதான மஹா பாக்யத்தை ஸ்ரீ ஸ்வாமி பெற்றிருந்தாலும், மநுஷ்ய பாவனையை அநுஷ்டித்து வருவதனால் சில ஸமயங்களில் மற்றவர்களால் ஜ்ஞாபிக்கும்படியான ஸ்திதியில் இருப்பதும் ஸஹஜம்தானே? அப்படி ஜ்ஞாபிக்குமவர்களிடம் வாத்ஸல்யாதிஶயத்தைப் பாராட்டி, “[illegible]” என்று ஸ்ரீ ராமன் அநுஷ்டித்தபடி ‘[illegible]’ என்று திருவாய் மலர்ந்தருள வேண்டியிருக்கையில் ‘கூச்சலிடுகிறவர்கள் கூச்சலிட்டுவிட்டுப் போகட்டும்; நமக்கு என்ன ஹாநி?’ என்று ஸ்வாமி எழுந்தருளியிருப்பது உசிதமாகுமா? இந்தப் பன்னிரண்டு மாஸ காலமாக இந்த விஷயத்தைப்பற்றிப் பலமுறை இந்தப்பத்ரிகையில் முறையிட்டுக்கொண்டோம். இன்னமும் ஸோத்ஸாஹர்களாக ப்ரார்த்திக்கிறோமே தவிர நிர்வேதத்தை அடையவில்லை. “ஸ்த்ரியோ வ்ருத்தாஸ் தருண்யஶ்ச ஸாயம் ப்ராத: ஸமாஹிதா: - ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்தே யஶஸ்விந:” என்று அயோத்யாபுரவாஸிகள் அநுஷ்டித்தபடி ந்ருஸிஹ்மனுடைய விபூதி வ்ருத்தி காமர்களான நாமும் கோயிலைக் கண்டவிடங்களெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டு ‘ஸ்ரீ ஸ்வாமிக்கு நம்மிடத்தில் க்ருபை வரும்படி செய்யவேணும்’ என்று ஸதா ப்ரார்த்திக்கிறோம்.



---

**ஸ்ரீமடத்தின் சொத்துக்கள்.**

சென்ற ஸம்புடம் 10 - 11 - வது ஸஞ்சிகைகளில், ஸ்ரீமடத்துக்குச் சொந்தமான சில சொத்துக்கள் அந்யாக்ராந்தங்களாகப் போய்விட்டன வென்றும், அப்படிக் கைதவறிப்போன சொத்துக்களைத் திரும்ப ஸ்வாதீநஞ் செய்து கொள்ள ஸ்ரீமடத்தின் அதிகாரிகள் தகுந்த ப்ரயத்நம் செய்யவில்லை யென்றும் விஸ்தாரமாக நிரூபித்து எழுதியிருந்தோம். இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில் அச்சிடப்பட்டிருக்கும் கடிதத்திலிருந்து, வந்தவாசி தாலூக்கா ஆலத்தூர் க்ராமத்திலும் அதே மாதிரியான நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. கடிதம் எழுதியிருப்பவர் ஒரு கௌரவப்பட்ட ஸந்நிதிஶிஷ்யரானபடியால் அவர் எழுதியிருப்பதில் தவறுதலிருக்கும் என்று நினைக்கக் கிஞ்சித்தும் ஹேதுவில்லை. அவர்

எழுதியிருப்பது முழுவதும் வஸ்து ஸ்திதிக்கு ஒத்திருந்தால் அது மிகவும் ஶோசிக்கத் தகுந்ததாகவே இருக்கின்றது. இதில் ஸம்பந்தப்பட்ட சொத்தும் அதனுல் ஏற்படும் நஷ்டமும் ஸ்ரீமட்த்துக்கு மிகவும் அநாதரணீயமாக இருந்தாலும், ஸ்ரீஸந்நிதியின் சொத்துக்கள் எவ்வளவு ஊழலாகப் பரிபாலநஞ் செய்யப்பட்டு வருகின்றன வென்பதை நிரூபணஞ் செய்ய இது போதுமானதே. இப்படி நஷ்டம் நேர்வதை ஸ்ரீ ஸ்வாமி அநாதரித்து எழுந்தருளியிருந்தால், ஸ்ரீ ந்ருஸிஹ்மனுடைய விபூதி எவ்விதமாக வ்ருத்தி யடையும்? ந்ருஸிஹ்மனுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் ந்யாஸமாக அங்கீகரித்திருக்கும் ஸ்ரீ ஸ்வாமிக்கும் தர்மாநுஷ்டாந பூர்த்தி எவ்விதத்தில் ஏற்படும்? "ஸ த்வேதத் ரக்ஷிதம் ராஜந் ராஜ்யம் நிர்யாதிதம் மயா - த்ருஷ்ட்வா ஜநகூதாயம் தே ஸம்வ்ருத்தஸ்ய மநோரத: - ஸ்வதேஸகோஶம் த்ருதம் தஶகுணம் மயா" என்று ஸ்ரீ பரதாழ்வான் ந்யாஸத்வேந பாலிதமான ராஜ்யத்தைப் பதின்மடங்கு வ்ருத்தி செய்து ஸ்ரீராம பிரானிடம் அந்த ந்யாஸத்தை ஒப்புவித்து அதனுல் பரமமான ஆஹ்லாதத்தை அடைந்தானன்றோ? ந்யாஸ சொத்தை இப்படி உபேக்ஷித்திருக்கும் ஸ்ரீ ஸ்வாமி அந்த மாதிரியான ஆஹ்லாதத்தை எப்படி அடையக்கூடும்? இப்படிப்பட்ட துர்த்தஶையை நிவாரணம் செய்யவும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன் திருவுள்ளம் மலரவு மன்றோ ஸ்ரீ ஶிஷ்ய ஸபை என்னும் ஆஸ்திகாக்ரேஸரர்களுடைய ஸமாஜம் பரிஶ்ரமப்படுவது? சென்ற மஹாஸங்கத்தில் அவர்கள் செய்திருக்கும் தீர்மானங்களைப் பார்த்தால், இது நன்ருக விளங்கும். இனிமேலாவது ஸ்ரீ ஸ்வாமி ஸாமாந்ய ஜநங்களுக்கு நைஸர்க்கிகமாக இருக்கும் ஆக்ரஹம் முதலியவற்றைத் தூர விலக்கி, வஸ்து ஸ்திதியின் குணதோஷங்களை விசாரம் செய்து, தோஷ துஷ்டங்களை நிராகரித்துக் குணவத்தானவைகளைக் கைக்கொள்வார் என்று நம்புகிருேம். ஸர்வாந்தர்யாமியாக இருக்கும் பகவாந் அப்படியே எல்லாரையும் நியமிக்கவேணும். "ஸர்வேஷ தஸ்யாவஸர ஸ்வஸ்வ்ஒஜூர: வ்ருஶாயி லக்ஷ்மீஶ ஸக்ஷவைவ நம:".

---

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] விரோதிக்ருத்ஸு பங்குனிமீ". [ஸஞ்சிகை 2.

## விஶிஷ்டாத்வைதம்.

### 7. திவ்ய மங்கள விக்ரஹத்தின் விபாகங்கள்.

"ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்" என்கிறபடி ஜ்ஞாநஸ்வரூபமாகவும் வேதாந்தவேத்யமாகவு மிருக்கிற பரமமான ஜ்யோதிஸ்ஸுக்குத் திவ்யமங்களவிக்ரஹயோக மொன்றுண்டு என்று இதுவரையிற் சொன்னதால் நிர்ணயிக்கப்பட்டது. இந்த விக்ரஹத்தைப் பற்றி நமது ஸித்தாந்தம் சொல்லும் சில அம்ஶங்களை விசாரிப்போம்.

இந்த விக்ரஹம், ஐந்து வகைப்படும். (1) நித்யமாயும் ஏகரூபமாயும் நித்யருக்கும் முக்தருக்கும் ஸேவ்யமாயு மிருப்பது - ஒரு ரூபம். இதை 'பரரூபம்' என்று சொல்வார்கள். (2) இந்தப் பரரூபமடியாகப் பூர்வ பூர்வத்திற்கு உத்தரோத்தரம் கார்யமாகக்கொண்டு பிறந்து க்ருத த்ரேதா யுகங்கள் தோறும் மாறிமாறி வரும் நிறங்களை யுடைத்தானவை - இரண்டாவது ரூபம். இவைகளை 'வ்யூஹங்கள்' என்று சொல்வார்கள். (3) இந்த விபூதிகளிலிருக்கும் ப்ராணிகளுக்கு ஸஜாதீயங்களாய், மீனுகவும் ஆமையாகவும் சிங்கமாகவும்

மநுஷ்யனாகவும் தோன்றும் ரூபங்கள் - மூன்றாவது. இதை 'விபவங்கள்' என்று சொல்வார்கள். (4) யோக கலையால் ஹ்ருதயாப்ஜகோஶத்தை உத்காடநம் செய்து தந்யர்களான சில யோகிகளால் யதாருசி அநுபவிக்கப்படுமது - நான்காவது. இதை 'அந்தர்யாமி' என்று சொல்வார்கள். (5) ஸ்வயம் வ்யக்தமாயும் திவ்யமாயும் ஆர்ஷமாயுமிருக்கும் வைஷ்ணவஸ்தாநங்களில் ஸகல விதமான அபசாரங்களையும் ஸஹிக்கும் ஶீலனாய், அர்ச்சக பாரதந்த்ர்யத்துக்கு எல்லைநிலமாய், ஆஶ்ரயிக்கும் ஜநங்கள் எல்லாருக்கும் ப்ரமேயனாய் ப்ரதிமைகளில் ஆவிர்ப்பவித்து நிற்கும் ரூபம் - ஐந்தாவது. இதை 'அர்ச்சை' என்று சொல்வார்கள். இந்த மாதிரியான விபாகத்தை ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் காணலாம்:—

"ஸ ஏவ கருணாஸிந்துர் பகவான் பக்தவத்ஸல: ।
உபாஸகாநுரோதேந பஜதே மூர்திபஞ்சகம் ॥

ததர்சா விபவ வ்யூஹ ஸூக்ஷ்மாந்தர்யாமி ஸம்ஜ்ஞகம் ।
யதாஶ்ரித்யைவ சித்வர்கஸ்தத்தஜ்ஜ்ஞேயம் ப்ரபத்யதே ॥

பூர்வபூர்வோதிதோபாஸ்திவிஶேஷக்ஷீணகல்மஷ: ।
உத்தரோத்தரமூர்தீநாமுபாஸ்த்யதிக்ருதோ பவேத் ॥"

அதாவது - "கருணாநிதியாக இருக்கும் பகவான் ஆஶ்ரித ஜநங்களினிடத்திலிருக்கும் வாத்ஸல்ய வஶத்தால் உபாஸகர்களுடைய யோக்யதைக்குத் தகுந்தபடி ஐந்து வித மூர்த்திகளை அடைகிறான். அவைகளுக்கு அர்ச்சை, விபவம், வ்யூஹம், ஸூக்ஷ்மம், அந்தர்யாமி என்று பெயர். இவைகளை ஆஶ்ரயித்தே ஸகல ஜீவன்களும் அபிவ்ருத்தியை அடைகின்றன. பூர்வம் பூர்வம் சொல்லியிருக்கும் மூர்த்திகளை உபாஸ்தி செய்து, அந்த உபாஸ்தியாற் போக்கடிக்கப்பட்ட பாபங்களை யுடையவர்களாய் உத்தரம் உத்தரம் சொல்லப்பட்டிருக்கும் மூர்த்திகளை உபாஸிப்பதில் ஜீவகோடிகள் அதிகாரமுள்ளவர்களாக ஆகிறார்கள்." இவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கும் க்ரமத்தைப்பற்றிப் பிந்தி விசாரிப்போம்.



முதலில் பரரூபத்தைப்பற்றி நமது ஸித்தாந்தம் சொல்வதாவது:—அது ஸர்வோத்க்ருஷ்டமாயும் அபரிச்சிந்நங்களான குணங்களையுடையதாயும் இருத்தலால் நம்முடைய ஜ்ஞாநத்துக்கு எட்டாததாகவுமிருக்கும்: இந்தக் காரணத்தாலேயே அதற்கு 'பரம்' என்று பெயர்; ஊனக் கண்களாலும் இந்த வாக்காலும் அதை க்ரஹிப்பது துஸ்ஸாத்யம்; அதன் ஸ்வரூபமும் குணங்களும் அவாங்மநஸ கோசரங்கள் என்பதுதான். "ந வக்தும் ந ஶ்ரோதும் நமநிதும் அதோபாஸிதுமபி ந த்ரஷ்டும் ஜ்ஞாதும் நவ்யவஹர்தும் ஹி ஸுலபம் - பரம் யத் ஸூக்ஷ்மம்" என்று ஸ்ரீ ஆழ்வான் அருளிச்செய்திருக்கிறார். உபதேஶம், மநநம், நிதித்யாஸநம், ஸாக்ஷாத்காரம், அநுபவம் ஆகிற இந்த ஆறுவித அநுபவத்திற்கும் அதுவிஷயத்தில் நமக்கு ஶக்தியில்லை. கேவலம் தன்னாலே மாத்திரம் அறியக்கூடியதாயும், தன் ஒருவனுக்கே நிலைக்குமதுவாகவும் உள்ள ஆநந்த பரிதமாகிய ஒரு தஶையில் இந்த ரூபம் நின்றுகொண்டிருக்கிறது. வயிற்றுத்தாரிகள் உதாரனைப்பெற்றுப்போலே, ஜ்ஞாநம் முதலிய குணங்கள் எல்லாம் இந்தப் பர ரூபத்தை அடைந்து நிறம்பெற்றுவருகின்றனவாம். ஸ்வாநுபவரூபமாகிற ஒரு தஶையை உடையதாய்க் கொண்டு அபரிச்சிந்ந ஆநந்தத்தாலே நிரம்பி அலையடங்கிநிற்கும் ஸமுத்ரம்போலிருக்கிற ஸ்வரூபத்தை உடையதாம் இது: "யதா ஶ்ரித்வாத்மஸாரம் ஜவதே ஸமூணமணா: ப்ரயதே ஸோந்நத: ஸ்வஸ்வபாவ நஶாந்தோதிதபஸ: - க்ஷமேவ க்ஷாம் வேத்ய ஸித்திதவிதாரம் வாரித ஹோ ஸ்வஸம்வேத்ய ஸ்வாத்மயஸ ஐஹாஹாநந்த ஹரிதம்" என்று ஸ்ரீ பட்டருடைய ஸ்ரீ ஸூக்தி.

அதாவது - எம்பெருமானுக்கு நித்யோதித தஶையென்றும், ஶாந்தோதித தஶையென்றும் இரண்டு தஶை உண்டு. இதில் ஒன்று பரத்வத்தில், ஒன்று வ்யூஹ வாஸுதேவனிடத்தில் என்று விபாகமிருந்தாலும், இரண்டிலும் இரண்டு வ்யவஹாரமும் உண்டு என்று ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். அளவற்ற கல்யாணகுணகணங்களைத் தானே அநுபவித்துக்கொண்டு நிஸ்தரங்கார்ணவம்

போல நிற்பது ஒருதசை; மற்றொன்று தன்னுடைய விபூதியின் அநுபவத்தால் ஏற்படும் ஆகையினால்தான், ஆசார்யர்கள் பகவானுடைய பரத்வத்தையும், ஆதிவ்யூஹஸ்வரூபத்தையும் விவரிக்கும் இடங்களில் எல்லாம் அவனுடைய ஶாந்தோதித தசையையும் நித்யோதித தசையையும் பற்றிப் பேசுவது வழக்கம். அப்படிப்பட்ட நித்யோதித ஶாந்தோதித தசையில் நிற்கிறது இந்தப் பரரூபமென்று தாத்பர்யம்.

இவனுடைய ஆநந்தத்தைச் சொல்ல ஆரம்பித்த ஆநந்தவல்லி யென்னும் ஶ்ருதி, மநுஷ்யன் துடங்கி ப்ரஹ்மாவளவும், அவனுக்கு மேலும் "யதோ வாசோ" இத்யாதியாக உத்ப்ரேக்ஷித்து, 'எவ்விதமான பரிச்சேதத்தை இதற்குச் சொல்லலாம்?' என்று விசாரிக்க இழிந்து, தான் எவ்விதமான குணபரிச்சேதத்தை உத்தேஶித்ததோ அந்த அளவின் ஜ்ஞாநத்தை அடையாமலே வழியிலேயே இடறி மூகனைப்போல வாய்திறவாததாய்த்து. அவ்வளவு அபரிச்சிந்நங்களன்றோ இவனுடைய குணங்கள்? "[illegible]" என்று ஸ்ரீ பட்டர் ஆஶ்சர்யப்பட்டிருக்கிறார். "குழுமித் தேவர்குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே" என்றும், "ஆதியஞ்சோதியுரு" என்றுஞ் சொல்லுகிறபடியே வானுயரின்பம் மன்னி வீற்றிருக்கும் ரூபமன்றோ இது?

'இப்படியே அவாங்மநஸ கோசரமாக நின்றுவிட்டால், ஏதோ சில நித்யர்கள் மாத்திரம் கரையேறுவதற்கு உபயுக்தமாகிவிடும் நம்முடைய ரூபம்' என்று எண்ணி, ஆஶ்ரித வத்ஸலனான பகவாந், வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபங்களாகத் தன்னை வ்யூஹித்து ஆஶ்ரயிக்கும் ஜநங்களது திறமைக்கு அநு



குணமாகத் தனது குணங்களை ஆவிர்ப்பாவஞ்செய்துகொண்டு ஜகத்தை ஸம்ரக்ஷித்து வருகிறான். இந்த நாலு ரூபங்களுக்குத் தான், வ்யூஹங்கள் என்று பெயர். இப்படி வ்யூஹித்து நிற்பதற்குத் தனது ஸங்கல்பமே ஹேது; தன்னை ஆஶ்ரயிக்கும் ஜநங்களுக்குத் தான் ஆஶ்ரயணீயனாகவேணுமென்பதே கருத்து. "[illegible]" [ஸ்ரீ பாஷ்யம் 2-2-41] என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிறார். இதற்கு மூல ப்ரமாணம், பரமஸம்ஹிதையில் இருக்கும் "[illegible]" என்னும் வாக்யம்தான். இந்த வாக்யத்தின் அர்த்தத்தைப் பார்த்தால், பரப்ரஹ்மத்தினிடத்திலிருந்து ஸங்கர்ஷணனென்னும் ஜீவன் உண்டாகிறானென்றும், அந்த ஸங்கர்ஷணனிடமிருந்து ப்ரத்யும்நனென்னும் மநஸ் உண்டாகிறதென்றும், அந்த ப்ரத்யும்நனிடமிருந்து அநிருத்தனென்னும் அஹங்காரம் உண்டாகிறது என்றும் ஆபாததஃ ஏற்படும். இது அஸங்கதமான அர்த்தமென்றும், ஜீவன் அநாதி யென்று சொல்லும் ஶ்ருதிக்கும் பரப்ரஹ்மத்தினிடத்திலிருந்தே மநஸ்ஸின் உத்பத்தியைச் சொல்லும் ஶ்ருதிக்கும் இது விருத்தமாகையால் இந்த வாக்யம் அந்த அர்த்தத்தைக் கொண்டதல்ல வென்றும், இவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கும் உத்பத்திக்கு ஸ்வேச்சையாகப் பகவான் ரூபம் எடுத்துக்கொள்வது தாத்பர்யமென்றும் ஸ்ரீ பாஷ்யகாரர் அநேக ஹேதுக்களைக்கொண்டு நிர்வஹித்திருக்கிறார். ஆஶ்ரித வாத்ஸல்ய நிமித்தமாக ஸ்வேச்சையாகவே பகவாந் ரூபங்களை எடுத்துக் கொள்வதை "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்கிற வாக்யத்தில் ஶ்ருதி ஒப்புக்கொண்டேயிருக்கிறது. ஜீவன் மநஸ் அஹங்காரம் ஆகிற இந்தத் தத்வங்களுக்கு ஸங்கர்ஷணன் ப்ரத்யும்நன் அநிருத்தன் ஆகிற இந்த ரூபங்கள் அதிஷ்டாதாக்களாகிற

படியால், ஜீவன் முதலிய ஶப்தங்களால் ஸங்கர்ஷணன் முதலியவர்களை ஶ்ருதி சொல்வது விருத்தமன்று.

‘இப்படி வ்யூஹித்து நிற்கும் பகவாந், எவ்விதத்தில் பரத்வத்தைக் காட்டிலும் விஶேஷித்த ஆஶ்ரயணீயனாகிறான்’ என்று கேட்டால், ‘அவனுடைய குணங்களின் ஆவிர்ப்பாவம், மறைத்தல் ஆகிற இவைகளின் விபாகத்தால்’ என்று ப்ரத்யுத்தரம் ஏற்படுகிறது. அதாவது - தன்னுடைய பரத்வத்தை விட்டு ஸௌலப்யத்தை முன்னிட்டு வ்யூஹிக்கிறபடியால், நமக்கு ஆஶ்ரயணீயனாகிறான் என்கிறபடி. அபரிச்சிந்ந குணகனாயிருக்கிறபடியாலன்றோ பரதஶையில் அவன் நமக்கு ஆஶ்ரயணீயனாகவில்லை; இங்கு அப்படியன்று. பரதஶையில், எம்பெருமானுக்கு உத்க்ருஷ்டமான ஜ்ஞாநமும், ஒப்பற்ற பலமும், குறைவற்ற ஐஶ்வர்யமும், அளவில்லாத வீர்யமும், ப்ரக்ருஷ்டையான ஶக்தியும், உத்க்ருஷ்டமான தேஜஸ்ஸும், இவைகளின் ஶாகாபேதங்களாகிற தயை க்ஷமை முதலியவைகளும் எல்லாம் பூர்ணமாக ஆவிர்ப்பவித்து நிற்கின்றன. வ்யூஹதஶையிலோ, வாஸுதேவனென்னும் ஆதி வ்யூஹரூபம் பரத்வத்தோடு ஒத்து இந்த ஆறு குணங்களால் நிறைந்ததாயும் நித்யர்கள் முக்தர்கள் இவர்களால் மாத்திரம் அநுபவிக்கத் தகுந்ததாயுமிருந்த போதிலும், ஸங்கர்ஷணனென்னும் இரண்டாவது ரூபம் ஜ்ஞாநம் பலம் ஆகிற இந்த இரண்டு குணங்களை மேற்கொண்டு ஶாஸ்த்ர ப்ரதாநம் ஸம்ஹாரம் இவைகளைச் செய்துகொண்டிருக்கிறதென்றும், ப்ரத்யும்நனென்னும் மூன்றாவது ரூபம் ஐஶ்வர்ய வீர்யங்களோடுகூடித் தர்ம ப்ரவர்த்தநத்தையும் ஸ்ருஷ்டியையுஞ் செய்துகொண்டிருக்கிறதென்றும், அநிருத்தனென்னும் நான்காவது ரூபம் ஶக்தி தேஜஸ்ஸுக்களோடு கூடி மோக்ஷ ஹேதுவான ஸத்வ ப்ரவர்த்தநத்தையும் ரக்ஷணத்தையுஞ் செய்து கொண்டிருக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆஶ்ரயிக்கிறவனுடைய ஜ்ஞாந தாரதம்யத்துக்கு அநுகுணமாகக் குணங்களின் ஆவிர்ப்பாவம்செய்யப்படுகிறது என்று தாத்பர்யம். “ஷாட்³கு³ண்யாத் வாஸுதே³வ: பர இதி ஸ ப⁴வாந் முக்தபோ⁴க்³யோ ப³லாட்⁴யா



த்³போ³தா⁴த் ஸங்கர்ஷணஸ்த்வம் ஹரஸி விதநுஷே ஶாஸ்த்ரமைஶ்வர்யவீர்யாத் ப்ரத்³யும்ந: ஸர்க³த⁴ர்மௌ நயஸி ச ப⁴க³வந் ஶக்திதேஜோऽநிருத்³தோ⁴ பி³ப்⁴ராண: பாஸி தத்த்வம் க³மயஸி ச ததா² வ்யூஹ்ய ரங்கா³தி⁴ராஜ” என்கிற ஸ்ரீபட்டருடைய ஶ்லோகம் இந்த அபிப்ராயத்தையே வெளியிடுகிறது. ஆனால், இப்படிப் பட்ட வ்யவஸ்தை சொல்லியிருப்பதால், குறிக்கப்பட்ட இரண்டு குணங்களைத்தவிர மற்றைக் குணங்கள் அவ்விடத்திலில்லையென்று அர்த்தமன்று. உபாஸகர்களின் ஸௌகர்யத்துக்காக அந்தந்த மூர்த்தியில் இரண்டு இரண்டு குணங்களை ஆவிஷ்கரிக்க வேணுமென்று பகவாந் ஸங்கல்பித்ததாக மாத்திரம் தாத்பர்யம். வஸ்து ஸ்திதியில் பகவாந் எல்லாமூர்த்திகளிலும் பூர்ணமான கல்யாண குணங்களோடு கூடியே இருக்கிறான். “[illegible]” என்று இந்த அர்த்தத்தையே ஆழ்வான் வெளியிட்டிருக்கிறார். வாஸுதேவன் முதலான இந்த நாலு வ்யூஹங்களிலும் ஒவ்வொரு வ்யூஹத்திலே மும்மூன்றாகப் பிரிந்து கேஶவன் முதலிய திருநாமங்களையுடைய ரூபங்கள் பன்னிரண்டையும் எம்பெருமான் வ்யூஹாந்தரங்களாகக் கொள்ளுகிறான் என்பது, ஸம்ப்ரதாய ரஹஸ்யம்.

இப்படி சேதநர்களுடைய துக்கத்தை ஸஹிக்காமல் எவ்வளவோ விதமான ஹிதத்தை அடுத்தடுத்துச் செய்தும், சேதநர் அதன்வழியே போகாமல் ஶாஸ்த்ர நிஷித்தங்களாகவும் தங்களுக்கு அஹிதங்களாகவுமிருக்கும் தீயசெயல்களைச் செய்து கஷ்டப்பட்டுக்கொண்டு நிற்க, அவர்கள் நல்வழிவருவார்களோ வென்கிற ஒரு துராசையாலே, தன்னுடைய ஸ்தநந்தய ப்ரஜை ரோக பீடிதையானால் தான் ஔஷத முண்ணும் மாதாவைப் போலப் பகவாந் தேவ மநுஷ்யர் முதலான யோநிகளில் அவதாரஞ்செய்து அந்தந்த வர்ணாஶ்ரம விதிகளுக்கு உட்பட்டு க்லேஶத்தைப் பாராட்டாமலே நடந்துவருகிறான். இந்த அவதாரங்களைத்தான், விபவங்கள் என்கிறது. தான் கர்மத்தால் பிறவா

தவனும், மரணமின்றிக்கே இருந்து கொண்டு “அநிவாகஶீதி” என்கிறபடியே விளங்காநிற்கச் செய்தேயும், தேவ மநுஷ்ய திர்யக்குக்களுக்கு ஸமாநமான தர்மத்தை யுடையவனாய் அவதரிப்பது, அவனது பரமஸௌலப்யத்தைக் காட்டுகிறது. இப்படிச் செய்த அவதாரங்கள் மத்ஸ்யம் முதலான பத்து அவதாரங்களென்றும், இன்னும் சில க்ரமப்படி முப்பத்திரண்டென்றும், அவைதன்னிலே தோன்றும் சில ரூபங்கள் விபவாந்தரங்களென்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த விபவாவதாரத்தின் யாதாத்ம்யத்தைப்பற்றி ஸ்ரீபாஷ்யகாரர் பின் வருமாறு நிர்ணயம் செய்திருக்கிறார் :—ஸகல கல்யாண குணங்களுடன் கூடியும் ஹேயகுணங்களில்லாமலு மிருக்கும் பகவாந் ஜந்மம் எடுப்பது இந்த்ரஜாலம்போலப் பொய்யன்று; ஸர்வ விதத்திலும் ஸத்யம். அப்படி ஜநிக்கும் பகவானுக்கு நமக்குப் போல ஜ்ஞாந ஸங்கோசாதிகள் கிடையாது; ஆனால், தனக்கு இயற்கையாக இருக்கும் பரமேஶ்வர ஸ்வபாவத்தை விடாமலே அவதரிக்கிறான். அவனுடைய ஶரீரம் நம்முடையதுபோல ஸத்வ ரஜஸ் தமஸ் சேர்ந்த ப்ரக்ருதியால் உண்டானது அன்று; ஆனால், அப்ராக்ருத ஶுத்த ஸத்வத்தால் ஏற்பட்டதே. அவனுடைய ஜந்மத்திற்கு அவனுடைய ஸங்கல்பம் காரணமே தவிர, புண்ய பாப ரூபமான கர்மங்கள் காரணமல்ல. தர்மம் குறைந்து அதர்மம் மேலிடுங் காலமே, அவன் அவதரிக்குங் காலம். ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பதும், துஷ்ட கார்யம் செய்பவர்களை ஶிக்ஷிப்பதும், தர்மத்தை நிலைநிறுத்துவதுமே அவனது ஜந்மத்தின் பலங்கள். ஆகையால், ஸ்வரூபத்தாலும், ப்ரகாரத்தாலும், த்ரவ்யத்தாலும், காரணத்தாலும், காலத்தாலும், ப்ரயோஜநத்தாலும் அவனது ஜந்மம் திவ்யமென்பது ஸித்தம்.

இந்த அர்த்தத்தை ஸ்ரீ கீதையில் 4-வது அத்யாயத்தில் அவதார ப்ரகரணத்தில் ஸ்ரீ பகவானே மூன்று ஶ்லோகத்தால் விளக்கியிருக்கிறார். “அஜோऽபி ஸந்நவ்யயாத்மா பூதாநா மீஶ்வரோऽபி ஸந் - ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா ॥ யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத - அப்யுத்தாநமதர்மஸ்ய ததாऽऽத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥ பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் - தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥” இந்த விபவாவதாரங்களில் இந்த மாதிரியான புத்தியைச் செய்து ஒருவன் உபாஸித்தால் அவனுக்கு அந்த ஜந்மத்திலேயே பகவத் ப்ராப்தி உண்டு என்பதை, “ஜந்ம கர்ம ச மே திவ்யமேவம் யோ வேத்தி தத்த்வத: - த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுந” என்கிற ஶ்லோகத்தில் காணலாம்.



இந்த மாதிரியாகவே ஜீவன்களிடத்தில் தனக்கு இருக்கும் அளவற்ற வாத்ஸல்யத்தை முன்னிட்டுக்கொண்டு ஒவ்வொரு ஶரீரத்தினுள்ளும் ஹ்ருதயத்தில் ஒரு ஸூக்ஷ்மரூபத்துடன் பகவாந் ஆவிர்ப்பவித்திருக்கிறான். இந்த ரூபத்தைத்தான், அந்தர்யாமி ரூபமென்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு ஆவிர்ப்பாவமொன்றுண்டு என்பதற்கு ப்ரமாணம் - “ய ஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாஶ:...தஸ்மிந் ஶேதே”, “ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:”, “ஈஶ்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுந திஷ்டதி” முதலான ஶ்ருதி ஸ்ம்ருதி வாக்யங்கள்தான் - இதன் உபாஸந ப்ரகாரம் முதலியவை, “பத்மகோஶ ப்ரதீகாஶம்” என்று ஆரம்பித்து “தஸ்யா: ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:” என்கிற வாக்யமளவும் நாராயணாநுவாகத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மஹாயோகிகள் இந்த ரூபத்தை அறிய ஶக்தர்கள்.

இந்த ரூபத்துக்குக் கேவலம் வாத்ஸல்யமே மூலம் என்பதை, ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகன் ஒருவாறு வெளியிட்டிருக்கிறார். “ஔதந்வதே மஹதி ஸத்மநி பாஸமாநே ஶ்லாக்யே ச திவ்யஸத

நே தஶஸ: பரஸ்து - அத: கமலேபாயிதம் ஸஹஸ்ரம் ஸஹஸ்ராக்ஷம் ஜாதம் கரீஶ கயமாதரணாஸ்பதமிதே", "ஹே கரி கிரி நாத! க்ஷீரார்ணவ மத்யத்தில் அதி விஸ்தாரமாகவும் எல்லாராலும் பூஜிக்கத்தகுந்ததாகவும், ப்ரக்ருதி மண்டலத்தைக் காட்டிலும் வெளிப்பட்டிருக்கும் ப்ரதேஶத்தில் ஶ்ருதிகளால் ஶ்லாகிக்கப்பட்டு அளவற்ற காந்தியுடனும் உமக்கு நித்யமான ஒரு திவ்ய ஸ்தாநம் இருக்கையில், இந்த ஶரீரத்தின் நடுவில் அதி பரிமிதமாக இருக்கும் இந்தக் குஹை எப்படி உமக்கு ப்ரீதி பாத்ரமாகிறது?" அதாவது - அப்படி ப்ரீதிசெய்ய பகவானுடைய வாத்ஸல்யமே ஹேது; அவனை ஆகர்ஷிக்கக்கூடிய குணமொன்றும் இந்த ஸ்தாநத்தில் இல்லையென்று தாத்பர்யம்.

இவ்வளவு வாத்ஸல்யத்துக்கும் அகப்படாமல் இன்னும் ஸம்ஸாரத்திலேயே உழலும் சேதநர்களைப் பார்த்து, ஸ்ரீபகவாந், சேதநர்களுடைய அபராதங்கள் எல்லாவற்றையும் பொறுக்கும் ஶீலமுள்ளவனையும் அர்ச்சக பாரதந்த்ர்யத்துக்கு எல்லை நிலமாயும் இந்தப் பூமியிலுள்ள சில ஸ்தாநங்களில் ப்ரதிமாரூபமாக ஆவிர்ப்பவித்துச் சேதநோஜ்ஜீவநம் செய்துகொண்டு வருகிறான். இந்த ரூபத்தைத்தான், 'அர்ச்சை' என்று வ்யவஹரிக்கிறார்கள். "தமருகந்ததெவ்வுருவ மவ்வுருவம்தானே தமருகந்த தெப்பேர் மற்றப்பேர்", "நெஞ்சினால் நினைப்பா னெவ னவனாகு நீள்கடல் வண்ணன்" என்னும்படி யன்றோ இருக்கிறது இந்த ரூபம்? ஸ்ரீ பகவத் கீதையிலும் "யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம் - மம வர்த்மாநுவர்த்தந்தே மநுஷ்யா: பார்த்த ஸர்வஶ:" என்று ஸ்ரீ பகவானே அருளிச்செய்திருக்கிறான். "என்னை ஆஶ்ரயிக்க வேணுமென்கிற எண்ணமுள்ள ஜநங்கள், தங்கள் தங்கள் அபேக்ஷைக்கு அநுரூபமாக எந்த எந்த ப்ரகாரமாக என்னை ஏற்படுத்தி ஆஶ்ரயிக்கிறார்களோ, அந்த அந்த



இஷ்ட ப்ரகாரம் அவரவர்களுக்கு நான் என்னைக் காண்பித்துக்கொள்ளுகிறேன். என்னை அநுவர்த்திக்க வேணுமென்றே மநோரதமுள்ள மநுஷ்யர்கள் எல்லாரும், யோகிகளுக்குக்கூட வாங் மநஸ்ஸுக்கு எட்டாமலிருக்கும் என்னுடைய ஸ்வபாவத்தைத் தங்களுடைய கண் முதலான இந்த்ரியங்களாலே ஸர்வ ப்ரகாரத்தாலும் அநுபவித்து அநுவர்த்திக்கிறார்கள்" என்கிற அர்த்தமுள்ள இந்த ஶ்லோகம் எம்பெருமானுடைய அர்ச்சாவதாரத்தை நன்றாக வெளியிடுகிறது.

'இப்படி சேதநர்களை உஜ்ஜீவிக்கும் பொருட்டே ஸத் என்றும் அத்விதீயமென்றும் வ்யவஹரிக்கப்படும் ஶ்ருதிப்ரதிபாத்யமான ஜ்யோதிஸ், நாநாவிதமான ரூபங்களை எடுத்துக்கொண்டு ஜநிக்கிறது' என்பது தான் நமது ஸித்தாந்தம். "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்றன்றோ ஶ்ருதி சொல்லுகிறது?

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

# லக்ஷ்மீ தத்வம்.

(தொடர்ச்சி).

நாராயணனுக்கு லக்ஷ்மீ அப்ருதக் ஸித்த விஶேஷணமென்று ஒப்புக்கொள்வதில் ப்ரமாணம்தான் ஶரணம். "யயா ஸூர்யமணோ தக்ஷமூஹோக்ஷதேசா நிக்ஷோஷ்யிக: - ஶ்ரீஶாநவீ தயேவ வஸ்ராக வதி: வத்நீமணோயத:" என்று க்ரோடீகரித்திருப்பதுடன், "அநந்யா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா" என்று ஆதி உபப்ரும்ஹணரூபமான ஸ்ரீ ராமாயணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது - ப்ரபா ப்ரபாவாங்களுக்கு இருக்கிற ஸம்பந்தம் போலவும், மணி தீதிகளுக்கு உள்ள ஸம்பந்தம் போலவும், புஷ்பத்துக்கும் அதன் பரிமளத்துக்கு முள்ள ஸம்பந்தம் போலவும் நிற்கிறது லக்ஷ்மீ நாராயணர்களுடைய ஸம்பந்தம் என்று அர்த்தம். ஆகையால், ஜகத் ரக்ஷணம் முதலிய எல்லா வ்யாபாரங்களும், லௌகிக பதி பத்நீ ந்யாயம் போலப் பதி ப்ரதாநமாகச் சொல்லப்பட்ட போதிலும், 'ஶ்ரீஶ்வரஸஹ' என்று இரண்டு பெயர்களாலும் சேர்ந்தே நிர்வஹிக்கப்படுகின்றன வென்று நாம் தாத்பர்யங் கொள்ளவேண்டும். இந்த அப்ருதக் ஸித்த விஶேஷண ரூபமான ஸம்பந்தத்தை ஸ்ரீ பட்டரும் ஓரிடத்தில் வெளியிட்டிருக்கிறார். "ஸ்வத: ஶ்ரீஸ்த்வம்விஷ்ணோஸ்ஸ்வ ஸிதத ஸ்தேவ ஹமவாந் க்வசாயத்திர்த்ஸ்வஸ்வஸ்வவாயீந விஹவ: - ஸ்யாதீத்ஸ்ராந்தம் ஹவஜவி ஶஹாவதும் ந விமணம் நகணம் ஸ்வாதந்த்ர்யம் நஹி ஹவதிவாந்ரஹிதமணம்." இதன் தாத்பர்யம் - நல்ல காந்தியினால் ரத்நம் ப்ரகாஶிக்கிறது என்றும், நல்ல தேஜஸ்ஸினால் ஸூர்யன் ப்ரகாஶிக்கிறான் என்



றும் சொல்வது போல, பகவானுடைய ஐஶ்வர்யம் லக்ஷ்மியினிடத்தில் இருக்கும் ஐஶ்வர்யத்தைச் சார்ந்தது என்று சொல்லப்படுகிறது. அதாவது - இவர்களுடைய ஸம்பந்தம் அப்ருதக் ஸித்தம் என்று ஸூசிதம். "தவக்ஷ:ஸ்தல நித்யவாஸரஸிகாம்" என்று சொல்லப்படுகிற லக்ஷ்மிக்கும் "க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வபுஸ்ஸம் வக்ஷ:ஸ்தலம் ஶ்ரியம்" என்று வாமநாவதாரம் செய்த பகவானுக்கும் நித்யயோகம் உண்டு என்று பரஶ்ஶதமான ப்ரமாணங்களால் ஸ்தாபிக்கக்கூடும். "ஸ்ரீமாந்" என்கிற ஶப்தத்திலுள்ள "மதுப்" ப்ரத்யயத்துக்கு நித்ய யோகம் தாத்பர்யமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி அப்ருதக் ஸித்தமான விஶேஷண விஶேஷ்யங்களைப் பிந்ந பிந்நங்களான இரண்டு வஸ்துக்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஈஶ்வரன் லக்ஷ்மீ விஶேஷண விஶிஷ்டனாகவே மோக்ஷப்ரதனாகிறான்; அப்படியே உபாயமாகிறான். உபாய தஶையிலும் உபேய தஶையிலும் ஸபத்நீகனாகவே இருக்கிறபடியால் விஶிஷ்டனான நாராயணனிடத்தில் எல்லாத் தர்மங்களும் அப்ருதக் ஸித்த விஶேஷண பூதையான லக்ஷ்மியினிடத்தில் நிராக்ஷேபமாக அந்வயிக்கின்றன. ஆகையினால், த்வைராஜ்ய தோஷத்துக்கு எவ்வித ப்ரஸக்தியு மில்லை. இந்த மாதிரி அப்ருதக் ஸித்த ஸம்பந்தமுள்ள இந்த நித்ய தம்பதிகள் பரஸ்பரம் ஸாதகமாக ஶரணாகத ரக்ஷண விஷயத்தில் உபயநிஷ்டமான தர்மங்களையும் நித்யமான ஸ்வேச்சையாலும் ஸ்வஸங்கல்பத்தாலும் விபாகித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் இது எப்படி துர்ப்போதமான விஷயமாகும்?

சிலர் பகவானைக் காட்டிலும் லக்ஷ்மிக்கு அதிகமான உத்கர்ஷம் உண்டு என்று சில ப்ரமாண வாக்யங்களைக்கொண்டு வாதம் செய்வது உண்டு. அந்த வாக்யங்களாவன: — "யஸ்யா: ஸம்மார்ஸ்வஸூர்யாணம் ஶிரஸாரஸநாதாரதஸ்ய ஶூராரோ:", "ஸ்வாஸ்ஸ்வம் ஸ்வாதந்த்ர்யம் ஹமவத ஜநம் வம்ஸ்ருவஜநே க்வசாஶ்ரேஷாஜ

𑌪𑌤𑌿 𑌭𑌰𑌂 𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌸𑌦𑌯𑍇", "𑌕𑌾𑌮𑌾𑌂𑌶𑌾 𑌹𑍃𑌦𑌯𑌾𑌂𑌶𑍋 𑌯𑌤𑍍𑌰𑌾𑌵𑌤𑌿 𑌪𑌰𑌂 𑌵𑍍𑌯𑍂𑌹 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍁𑌕𑍍" இவை முதலான பட்டருடைய வாக்யங்கள்; "𑌯𑌸𑍍𑌯𑌾 𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌮𑍁𑌖𑌂 𑌤𑌦𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌪𑌰𑌾𑌧𑍀𑌨𑍋 𑌵𑌿𑌧𑌤𑍍𑌤𑍇𑌽𑌖𑌿𑌲𑌂" என்கிற கூரத்தாழ்வானுடைய வாக்யம்; "𑌜𑌗𑌤𑍍𑌸𑌮𑌸𑍍𑌤𑌂 𑌯𑌦𑌪𑌾𑌙𑍍𑌗𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌂" என்கிற ஆளவந்தாருடைய வாக்யம்; "𑌤𑍍𑌵𑌯𑌾 𑌦𑍇𑌵𑌿 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌸𑌕𑌲𑌂 𑌭𑍁𑌵𑌨𑌤𑍍𑌰𑌯𑌂 - 𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌾𑌯𑌮𑌭𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑍇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌸𑌮𑍇𑌧𑌿𑌤𑌂" என்கிற ஸ்ரீ விஷ்ணுபுராண வாக்யம், இத்யாதிகள். இந்த வாதத்துக்கு இவைகள் ப்ர்மாணமாகமாட்டா. லக்ஷ்மியுடன்கூட அவளுடைய லீலார்த்தமாகப் பகவாந் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதிகளைச் செய்கிருன் என்று அந்தப் பட்டர் வாக்யங்களாலேயே ஏற்படுகிறது. "𑌶𑍍𑌰𑍀𑌰𑍇𑌯𑌂 𑌪𑌰𑌂 𑌨𑌾𑌥𑍍𑌯𑌾𑌽𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌾𑌸𑍍𑌯𑌾 𑌏𑌕𑌸𑍍𑌯𑌾 𑌸𑍍𑌥𑌯𑌾" என்றும், "𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑍀𑌨𑍍 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌯𑍁𑌜𑍍𑌯" என்று ஆரம்பித்து "𑌤𑌵 𑌪𑌰𑌿𑌹𑌾𑌸𑌾𑌰𑍍𑌥𑌨 𑌕𑍇𑌲𑌯𑍇" என்றும், "𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌂𑌸𑌿 𑌪𑌰𑌾𑌵𑌰𑌦𑍀𑌕𑍍𑌷𑌂 𑌹𑍋𑌮𑍇 𑌵𑌿𑌹𑌰𑌤𑌿𑌃 𑌪𑌰𑌾" என்றும் அந்த ஸ்ரீகுண ரத்ந கோஶத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது - ஸ்ரீ பகவாந் லக்ஷ்மியினுடைய லீலார்த்தமாகவே ஶப்தம் முதலிய விஷய ப்ரதர்ஶநரூபமான விபவத்தைக் காண்பித்து ஜகத் வ்யாபாரங்களைச் செய்கிருன் என்றும், இந்த விபூதி முழுவதும் லக்ஷ்மியின் லீலைக்காகவே பகவானால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் இந்த வாக்யங்களின் கருத்து. இந்த வாக்யங்கள் எல்லாவற்றையும் ஸமந்வயம் செய்து பார்த்தால், இவர்களுக்குள் உத்கர்ஷா பகர்ஷங்கள் சொல்வது ஸரியன்று என்று ஏற்படும். இவர்களுடைய பதிபத்நீத்வமும், பும்ஸ்த்வ ஸ்த்ரீத்வமும் இவர்களுடைய நித்யேச்சாதீநமென்றே ஸித்தம்.

"𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮" என்கிற வேதாந்த வாக்யம் வஸ்த்வந்தரத்தை நிஷேதிக்கையிலும், அப்ருதக்ஸித்த விஶேஷண பூதையான லக்ஷ்மியை நிஷேதிப்பதில் தாத்பர்ய முள்ளதன்று என்று பெரியோர்கள் நிர்ணயித்திருக்கிருர்கள். "𑌨𑌰𑌨𑌾𑌰𑍀 𑌦𑍇𑌹𑍋 𑌹𑌰𑌿𑌃", "𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌦𑍍𑌧𑌿𑌕𑌂 𑌦𑍇𑌵𑌂", "𑌤𑍍𑌵𑌂 𑌯𑌾𑌦𑍃𑌶𑍋𑌽𑌸𑌿 𑌕𑌮𑌲𑌾𑌽𑌸𑌿 𑌤𑌾𑌦𑍃𑌶𑍀𑌂 𑌤𑍇 𑌦𑌾𑌰𑌾𑌨𑍍 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿



𑌯𑌾𑌵𑌯𑍋𑌰𑍍𑌨𑍂𑌤𑌨 𑌶𑍇𑌷𑌮𑌪𑍍𑌯𑌃 - 𑌦𑌯𑌾 𑌵𑌿𑌸𑌤𑍍𑌤𑍍𑌵 𑌭𑌾𑌵𑌤𑍀𑌤𑌨𑌾 𑌏𑌕𑍈𑌵 𑌧𑌾𑌮 𑌦𑌾𑌤𑌾𑌰𑌂 𑌚 𑌵𑌿𑌧𑌾𑌤𑌾𑌰𑌂 𑌚 𑌯𑌾𑌵𑌾𑌨 𑌦𑌾𑌹𑌃" என்கிற ப்ரமாணங்கள் இந்த நிர்ணயத்துக்கு த்ருடமான ஸாதகங்கள் ஆகின்றன. அதனால் தான், ஐக்யத்தைச் சொல்லுகிற ஶப்தத்துக்கு ஸ்வரூபத்தின் ஐக்யத்தில் அபிப்ராயமில்லையென்றும், ப்ரகாரத்தின் ஐக்யத்தில் தாத்பர்யமென்றும், உபய விபூதி ரூபங்களான எல்லாவித ப்ரபஞ்சத்திற்கும் ஏகஶேஷித்வாஶ்ரயத்வத்தில் தாத்பர்யமென்றும் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. மஹேந்த்ரனைத் தேவதையாக வுடைய யாகத்தில் மஹத்வ விஶிஷ்டனை இந்த்ரனிடத்தில் தேவதாத்வம் எப்படி தாத்பர்யமோ, அக்நீஷோம யாகத்தில் அக்நி ஸோமன் இந்த இரண்டு தேவதைகளிலும் பர்யாப்தமான ஏகதேவதாத்வம் எப்படி தாத்பர்யமோ, அப்படியே ஸ்ரீ விஶிஷ்டனை நாராயணனிடத்திலேயே முற்கூறிய வேதாந்த வாக்யங்களுக்குத் தாத்பர்யமென்று தெரிந்து கொள்ளவேணும். இந்த அர்த்தத்தைத்தான் த்வயத்தின் பூர்வகண்ட உத்தரகண்ட நிஷ்டங்களான "ஸ்ரீமத்" ஶப்தங்கள் ஸூசிப்பிக்கின்றன. உபாய தஶையிலும் உபேயதஶையிலும் நாராயணன் ஸ்ரீ விஶிஷ்டனாகவே (அதாவது - ஸபத்நீகனாகவே) இருக்கிருன் என்பதை இந்தப் பதங்கள் விளக்குகின்றன. அநந்யோபாயத்வத்துக்கு விருத்தமான உபாய த்வித்வ ஶங்கையும், அநந்ய ப்ரயோஜநத்வத்துக்கு விருத்தமான உபேய த்வித்வ ஶங்கையும் பரிஹ்ருதங்களாகின்றன. ஆனால், 'ப்ரபஞ்சம் நாராயணனுக்கு ஶேஷபூதம் போல லக்ஷ்மிக்கும் ஶேஷபூதம் என்று ப்ரபஞ்சத்துக்கு உபய ஶேஷத்வம் ஸம்பவிக்கிறதே' என்று ஆக்ஷேபிக்கலாம் "𑌪𑌤𑍍𑌯𑍁𑌃 𑌸𑍍𑌵𑌂 𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾 𑌕𑌵𑌿" என்கிற ந்யாயத்தால் பதி ஸ்வத்வம் ஏற்பட்டிருக்கும் இடங்கள் எல்லாவற்றிலும் பத்நீ ஸ்வத்வம் ஏற்படுவதில் பாதகஸம்பாவனை ஒன்றும் தெரியவில்லை.

இப்படி லக்ஷ்மிக்கு விபுத்வமும் ஈஶ்வரத்வமும் ஸித்திக்கிறது போல, பூதேவி நீளா தேவி ப்ரப்ருதிகளுக்கும் அவைகள் ஸித்திக்குமோ? என்கிற ஶங்கைக்கு அவகாஶமே இல்லை. லக்ஷ்மிக்கு

இவைகள் ஸித்தித்தற்கு ஹேது, ப்ரமாண வாக்யங்களே. அப்படிப் பட்ட ப்ரமாண வாக்யங்கள் மற்றைத் தேவிகள் விஷயத்தில் காணேம். “ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம் த்வாமிஹோபஹ்வயே ஶ்ரியம்,” “[illegible] விஷ்ணுநா ஸார்த்தம் ஜகத்ஸர்வம் சராசரம்” என்கிற ப்ரமாண வாக்யங்கள் ஸ்ரீ தேவிக்கு ஸர்வபூத ஈஶ்வரித்வத்தையும் ஜகத்வ்யாபித்வத்தையும் ஸ்தாபிக்கின்றன; இதர தேவிகள் விஷயங்களான பூஸூக்தம் நீளா ஸூக்தம் முதலிய ஶ்ருதிகளில் அவைகளை ஸ்தாபிக்கக்கூடிய வாக்யங்கள் இல்லையென்று ஆசார்யர்கள் நிஶ்சயம் செய்திருக்கிறார்கள். இந்த அர்த்தத்தையே ஸ்ரீபட்டரும் ஸ்ரீகுணரத்நகோஶத்திலே “[illegible] ஶ்ரியம் ஶ்ராவயே” என்கிற ஶ்லோகத்தால் வெளியிட்டிருக்கிறார். இதன்தாத்பர்யமாவது - ஜலம் பூர்ணமாயுள்ள ஒரு பெரிய தடாகத்தில் ஜலம் அதிகப்பட்டால் கரை உடைந்து போகாமல் இருக்கும்படி ஒரு கோடி திறந்துவிடுவது போலவும், பூர்ண ஶ்ருங்காரத்தின் அநுபவத்துக்குப் புஷ்ப சந்தநாதிகள் விக்நமாகாமலிருப்பது மல்லாமல் ஸஹாயங்களாக இருக்கின்றது போலவும், ஸ்தந பாஹு த்ருஷ்டி முதலியவைகள் ஶ்ருங்காராநுபவ ஸுகத்தினுடைய அபிவ்ருத்திக்கு ஹேதுவாகிறது போலவும், பூமி நீளா முதலிய தேவிகள் லக்ஷ்மியை அநுஸரித்தே லக்ஷ்மிக்கு அங்கபூதைகளாக இருந்துகொண்டு அந்தத் திவ்ய தம்பதிகளுடைய அநுபவத்துக்கு எவ்விதமாகவும் விக்நமாகாமலே போக்யர்களாகிறார்கள்.

இந்த உபந்யாஸத்தில் கண்டிருக்கும் விஷயங்களுக்கு முக்யாதாரமான ப்ரமாணங்கள், விஶேஷித்து அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையிலும் லக்ஷ்மீ தந்த்ரத்திலும் இருக்கின்றன.

எம். திருவேங்கடாசார்யர்.

ஸ்ரீ:.

# ஸ்ரீ ராமாயணத்தில் சில விஶேஷார்த்தங்கள்.

## 1 லக்ஷ்மணனுடைய நிஷ்டை.

நம்முடைய ஸநாதந தர்மத்துக்கும் ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தத்துக்கும் வேதமே முதல் ப்ரமாணமென்பது ஸகலருக்கும் தெரிந்த விஷயம். இதை நம்முடைய பரமாசாரியரான நம்மாழ்வார் “சுடர்மிகு சுருதியுள்” என்று அருளிச்செய்திருக்கிறார். அவரைப் பின் செல்லுமவரான பட்டர் “ஆதௌ வேதா: ப்ரமாணம்” என்று வெளியிட்டிருக்கிறார். இந்த வேதமானது, கர்மகாண்டம் ஜ்ஞாநகாண்டமென்று இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பூர்வபாகம், பகவானுடைய ஆராதநரூபமான கர்மங்களைப்பற்றிச் சொல்லுகிறது. உத்தர பாகமாகிற உபநிஷத்துகள், ஆராதிக்கப்படும் வஸ்துவாகிய பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தையும் குணத்தையும் உபாஸநக்ரமத்தையும் ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களையும் அவைகளுக்கு அநுகுணங்களான ஜ்ஞாந ஶக்த்யாதிகளையும் சொல்லி, மோக்ஷத்தின் ஸ்வரூபத்தையும் விவரிக்கின்றன. “[illegible]” என்று பட்டர் அருளிச்செய்திருக்கிறார்.

இந்த வேதத்தின் அர்த்தங்களை நிர்ணயிப்பது ஸுலபமன்று; மஹாங்களாயிருக்கிற ருஷிகளாற் செய்யப்பட்ட உபப்ரும்ஹணங்களாகிற க்ரந்தங்களைக் கொண்டு ஸந்தேஹமற நிர்ணயிக்கவேண்டும். ஸ்வபுத்தியால் நிர்ணயம் செய்யத்தொடங்கினால், கொஞ்சம் தெரிந்தவர்களுக்கு ஸந்தேஹ விபரீதங்கள் நேரிடும். “இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத் । பிபேத்யல்ப

[illegible] என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ம்ருதிகளைக்கொண்டு கர்மகாண்டத்தையும், இதிஹாஸ புராணங்களைக்கொண்டு உபநிஷதர்த்தத்தையும் நிர்ணயிப்பது க்ரமம்; "[illegible] । இதிஹாஸபுராணாப்யாம் வேதார்த்த: ப்ரகாஸ்யதே" என்று ஹாரீத ஸ்ம்ருதியிற் சொல்லப்பட்டிருக்கிறது.

இவற்றில் புராணத்தைக்காட்டிலும் இதிஹாஸமே நிஷ்பக்ஷபாதமான ப்ரமாணம். இதையே ஶிஷ்டர்கள் மிகவும் பரிக்ரஹித்திருக்கிறார்கள். நமது தேஶத்தில் மஹாபாரதம், ராமாயணம் என்று இரண்டு இதிஹாஸங்கள் உண்டு. அவை யிரண்டில் ராமாயணம் ஸ்ரேஷ்டம்; "தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:" என்கிற உபநிஷத் வாக்யத்தின்படி எல்லாத் தபஸ்ஸைக் காட்டிலும் ஸ்ரேஷ்டமும், ஸம்ஸாரிகளுக்கு உஜ்ஜீவந ஹேதுவுமான வழி (உபாயம்)யாகிற ஶரணாகதியை ராமாயணம் முக்கியமாய்க் கொண்டாடுகிறது. இதை 'தீர்க்கஶரணாகதி ஶாஸ்த்ரம்' என்று பெரியோர்கள் சொல்வார்கள். எம்பெருமானை ஆஶ்ரயிக்க ருசியை ஸம்ஸாரிகளுக்கு உண்டாக்கி ரக்ஷிக்கைக்காக ராமாயண ரூபமாய் வேதமே அவதரித்ததாக "வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தஶரதாத்மஜே । வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா ॥" என்று ராமாயணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ராமாயணத்தில் நாம் அறியவேண்டிய சில முக்கியாம்ஶங்களைக் கொஞ்சம் வெளியிடுவோம்.

ராமாயணத்தில் வெளியிடப்பட்டிருக்கும் அர்த்தங்கள் மிகவும் அநுஷ்டாநத்துக்குப் பொருந்தினவை என்றும், ராமாவதாரம் ஆசாரப்ரதாநமான அவதாரம் என்றும் பாரதகண்டத்தில் ப்ரஸித்தம். "[illegible]" என்று தர்மத்தை அநுஷ்டிக்கிறவனும் அநுஷ்டிப்பிக்கிறவனும் ராமன் என்று சொல்லியிருப்பது உண்மையே. 'பிதா சொன்னதைப் புத்ரன் செய்யக்கடவன்' என்கிற மர்யாதை குலையாமல், அதை நிலைநிறுத்துகைக்காகப் பித்ருவசந பரிபாலந ரூபமான ஸாமாந்ய தர்மத்தை ராமன் தான் அநுஷ்டித்துக் காட்டினார். ராமாயணத்தில் ஶரண்யனாகிற பெருமாளுடைய ஸகல குணங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. ப்ரக்ருதம் இந்த ஸஞ்சிகையில் அவற்றை விவரிப்பதாக உத்தேஶமில்லை. ஆனால், சொல்லப்போகிறது என்னவென்றால்:— "ராமன் ஸாதாரணமாய் மனிதர்கள் அநுஷ்டிக்க வேண்டிய பித்ருவாக்ய பரிபாலநம் முதலியவற்றை அநுஷ்டித்துக் காட்டினார்" என்பதாக வைத்துக்கொண்டு, 'இந்த அநுஷ்டாநத்தை ஸாதாரண பிதாவல்லாமல் ஜகத்துக்கு எல்லாம் பரம பிதாவா யிருக்கிற ஸர்வேஶ்வரன் விஷயத்திலே நாம் காண்பிக்க வேண்டும்' என்று 'பகவத் கைங்கரியமே முக்கியம்' என்கிற விஶேஷ தர்மத்தை இளையபெருமாளாகிற லக்ஷ்மணன் காட்டினார் என்றும், அவர் அப்படிக் காட்டுமிடத்தில் 'பெருமாளை நிர்ப்பந்தித்துக் கைங்கரியம் செய்கிறேன்' என்றும், 'விட்டுப் பிரியில் தரியேன்' என்றும் தமது நிலைமையைக் காண்பித்தார் என்றும் ஆக இவையிரண்டும் தான்.



'அந்தப் பகவத் கைங்கரியமும் நிர்ப்பந்தித்துப் பெறுதலைக் காட்டிலும் பெருமாள் சொல்லுகிறபடி நடத்திவிடுவோம்; பகவானுடைய முகோல்லாஸமே முக்யம்; ஒரு காரியம் நம்முடைய இஷ்டத்துக்கு விரோதமாயிருந்தாலும் அவனுடைய இஷ்டம் அதுவே யென்று தெரிந்தால் பின்பு அப்படியே நாமும் அதையே ஸந்துஷ்டியுடன் அநுஷ்டிக்க வேண்டியது' என்கிற ஶேஷத்வ பாரதந்த்ரிய நிலையை இன்னொருவிதமாய்ப் பரதன் காண்பித்தார். இது, லக்ஷ்மணனுடைய நிலையைவிட விசேஷம்; அதாவது - இந்த நிர்ப்பந்தமில்லாத அம்ஶத்தை மாத்திரம் பார்த்தால் இந்த அநுஷ்டாநம் விசேஷதரம் என்று நமது ஆசாரியர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். ஶத்ருக்நன் பாகவத பாரதந்த்ரியத்தை அநுஷ்டித்துக் காட்டினார்; அதாவது - ராமனிடத்திற் செய்யும் பக்தியைவிடப் பாகவதராகிற பரதனிடத்தில் பக்தியை அநுஷ்டித்துக் காட்டி-

ஞர். பரதன் நிலையைவிட இது விசேஷம் என்றும், ஆதலால் இதுவே விசேஷதமம் என்றும் சொல்லுகிறார்கள்.

சரணமடைகிற அதிகாரியாகிற லக்ஷ்மணனுடைய நிலை, ஸ்ரீராமாயண ஶ்லோகங்களைக்கொண்டு விவரமாக இப்போது காண்பிக்கப்படும்; பிற்பாடு பரதன் பிராட்டி இவர்களுடைய நிலைமை காண்பிக்கப்படும்.

"பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்தோ லக்ஷ்மணோ லக்ஷ்மிவர்தந: - ராமஸ்ய லோகராமஸ்ய ப்ராதுர்ஜ்யேஷ்டஸ்ய நித்யஶ:" என்று, இளையபெருமாளாகிற லக்ஷ்மணன், பிறந்ததுமுதல் தனக்கு ஜ்யேஷ்டனாயிருக்கிற பெருமாளாகிற ஸ்ரீராமனிடத்தில் மஹாஸ்நேஹமாயிருந்தார். குழந்தைப்பருவம்முதல் பெருமாளைவிட்டுப் பிரிய ஸஹியாதிருந்தார். பெருமாள் காட்டுக்கு எழுந்தருளும்போது, அயோத்தியை விட்டுப் புறப்படு முன்னே இளைய பெருமாளும் கூடப் போவதாகப் பிரயத்நஞ்செய்வதைப் பார்த்து, பெருமாள் 'நீ நில்' என்று கொஞ்சம்சொல்ல, "குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே । க்ருதார்தோऽஹம் பவிஷ்யாமி தவ சார்த்த: ப்ரகல்பதே" என்றுசொன்னார்; 'தேவரீருடன் கூடியிருந்தால்தான் நான் தரித்திருப்பேன், என்னை நில் என்று சொல்லக் கூடாது; உம்முடைய நிழலை நில் என்று நீர் சொல்வீரா? அந்த நிழலைப்போலவே நானும் உம்மைப் பின்பற்றி வருவேன்' என்று மறுமொழிகூற, 'காட்டிலே போவது துக்கம், அயோத்தியிலிருப்பது ஸுகம்' என்று பெருமாள் அருளிச்செய்ய, அதுகேட்டு இளையபெருமாள் 'அப்படியல்ல, ஸுகதுக்கம் அவரவர்க்கு வெவ்வேறாயிருக்கும்; உம்மோடு எதுபொருந்துகிறதோ அதுதான் எனக்கு ஸுகம், உம்மைப்பிரிந்து அயோத்தியிலிருந்தாலும் அது எனக்குத் துக்கமே: இதைத் தேவரீர் அறியவேண்டும்; என்னை உடன் வரவொட்டாது நிறுத்துவது ப்ரீதியன்று; நான் நீர் புறப்படுவதற்கு முன்னமே புறப்பட்டுவிட்டேன்; பின்னேவாரும்: "வைதர்ம்யம் நேஹ வித்யதே" உம்முடைய கைங்கரியத்தைவிட்டுப் பிரிந்து தனியாக நான் இரேன்; அப்போது நான் இருக்கிறது என்பது ஒன்றில்லை [எனது ஸத்தை குலையும்]; "தவ சார்த்த: ப்ரகல்பதே" இதனால் வரும் பிரயோஜநம் தேவரீருடையதே; சேஷபூதன் அடியேன்; என்ஸ்வரூபம் பெற்றுத் தேவரீருக்குக் கைங்கரியம் செய்வது தேவரீருக்கே பேறு, முகோல்லாஸம்' என்று கைங்கரியதசையிலும் தம்முடைய ஆநந்தத்துக்காக அல்ல, பெருமாளுடைய முகோல்லாஸத்துக்கே என்று வெளியிட்டார். "ஸ ப்ராதுஶ்சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந: । ஸீதாமுவாசாதியஶா ராகவம் ச மஹாவ்ரதம்" என்று தமையனார்திருவடிகளை உறுதியாகப் பிடித்துக்கொண்டு தம்மையும் கூட அழைத்துக்கொண்டு போகும்படி ஸீதாபிராட்டியின்முன்னிலையில் பெருமாளைப் பிரார்த்தித்தார். இதனால், 'இந்தப் பகவானை நாம் பிரார்த்திக்கும்போது, ஸ்ரீ பெரியபிராட்டியாராகிய லக்ஷ்மியோடு கூடின நாராயணனையே பிரார்த்திக்க வேண்டும்' என்றாகிறது. த்வயமாகிற திருமந்த்ரத்தின் முதற்பாதி வெளியிடப்பட்டது.



லக்ஷ்மணன், தமது தாயாராகிய ஸுமித்ரையினிடத்தில் இப்படி பெருமாளோடு கூடத் தாமும் உடன்செல்வதைத் தெரிவித்து அவளநுமதி பெறவேணுமென்று அவள் ஸமீபத்தில் வந்தார். அப்போது அவள் "ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய ஸ்வநுரக்த: ஸுஹ்ருஜ்ஜநே । ராமே ப்ரமாதம் மா கார்ஷீ: புத்ர ப்ராதரி கச்சதி ॥" என்று சொன்னாள். [அவர் காட்டுக்குப்போக நீ அயோத்தியிலிருக்கவா நான் உன்னைப் பெற்றேன்? நீ இப்படிச் செய்தால்தான் உன்னைப்பெற்ற பிரயோஜநத்தை நான் அடைவேன்; அவருக்குக் கைங்கரியத்தைச் செய்துகொண்டு எப்பொழுதும் பிரியாதிருக்க வேண்டுமென்றே நான் உன்னைப் பெற்றது; நம் எல்லாருக்கும் பெருமாள் வேர்பற்று (ஆதாரம்); நீ ஸுஹ்ருத் ஜநங்களிடத்தில் ஸ்நேஹத்தை யுடையவனாயிற்றே; அவரைப் பிரியாமல் அவருக்கு வநத்துக்குக் கைங்கரியத்தைச் செய்யவேண்டும்; அவருடன்

அவஶ்யம் போகவேண்டும்] என்று அருளிச்செய்தாள். இவர் பால்யம்முதல் ஸ்ரீராமனைவிட்டுப் பிரியாத ஸ்வபாவத்தையுடையவர் என்று சொன்னேமல்லவா? இவர் தாயாரும் அப்படியே நியமித்தாள்.

இவர்கள் கங்காநதியைத் தாண்டியவுடன் இவரைத் திரும்பி அயோத்திக்கே அனுப்பலாமோ என்று பெருமாள் சிலவார்த்தைகள் சொல்ல, "ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ। முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ" [அதாவது - உம்மைவிட்டுப் பிரிந்து நான் இருக்கிறேன் என்பது ஒன்றில்லை, மத்ஸ்யத்துக்கு ஜலம் தாரகமாவதுபோல எனக்குத் தேவரீர் தான் தாரகம்; பிரிந்து ஜீவித்தலென்பது இல்லை] என்று வெளியிட்டார். பெருமாளும் பிராட்டியும் ஶ்ருங்கிபேரபுரத்தை விட்டருளின தினத்தில், குஹப்பெருமாள் இளையபெருமாளைப் பார்த்து 'பெருமாளும் பிராட்டியும் கண்வளராநின்றார்கள்; நாங்கள் காட்டில் திரிகிறவர்கள், எங்களுக்கு உறக்கம் வராது; நீர் ராஜபுத்ரர், ஸுகுமாரர், யாராவது விரோதிகள் வருவார்களோ என்று பயப்படவேண்டாம்; நானும் என்னைச் சேர்ந்த வேடர்களும் பார்த்துக்கொள்ளுகிறோம்; நீர் கண்வளரும்' என்று சொல்ல, அதற்கு இளையபெருமாள் 'தசரத சக்ரவர்த்தி அறுபதினாயிரம் வருஷம் தபஸ் செய்து பெற்ற பெருமாள் தரையில் படுத்துக்கொண்டிருக்கிறார்; அவர் மட்டுமானால் வஸிஷ்டர் முன்னிலையில் தரையில் ஒரு ஸமயத்தில் படுத்துக்கொண்டு இருந்து இருக்கலாம்; இப்போது பிராட்டியோடு கூட இருக்கிறார்; தவிரவும், எனக்கு உறக்கம் வந்து நான் பலவந்தமாய் விழித்திருக்கவில்லை; உறக்கம் வா என்றாலும் எனக்கு வராது. எனக்கு எப்படி வரும்? என் ஸ்வபாவம் அது' என்று சொன்னார்.

(இன்னும் வரும்.)

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ:.

# பிராட்டி செய்த அபய ப்ரதானம்.

வேதோபப்ருஹ்மணமான ஸ்ரீராமாயணத்துக்கு ப்ரதான ப்ரமேயமான அர்த்தம், ஶரணாகதி தர்மம். இந்தத் தர்மமானது, "[illegible]" என்கிறபடி எல்லாத் தர்மங்களுக்குள்ளும் பரமமான தர்மமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தர்மத்தை, ஸ்ரீ வால்மீகி மஹர்ஷி, விபீஷணவ்ருத்தாந்தத்தாலே விஶேஷமாக உபப்ருஹ்மித்திருக்கிறான். ஸ்ரீ ராமனாகத்திருவவதரித்த பகவான், "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந - தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம்" - "ஶரணாகதனுக்கு எவ்விதமான தோஷங்கள் உண்டேயாகிலும் ஸர்வ ப்ரகாரத்தாலும் அவனை நாம் விடோம்" என்று கடற்கரையிலே வாநர ஸமாஜத்திலே ஸர்வப்ராணிகளுக்கும் ப்ராணந ஹேதுபூதமான தன் ப்ரக்ருதியை வெளியிட்டு, "ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே - அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம" "ஶரணாகதனை ரக்ஷிப்பது எம்முடைய வ்ரதம்; ஒரு நாளும் அவனைக் காட்டிக்கொடோம்" என்று தம்முடைய ஸங்கல்பத்தை அறிவித்து, ஒரு திர்யக்குக் கூட அநுஷ்டித்ததாகையாலே தமக்கு நிதராம் அநுஷ்டிக்க வேணுமென்னுமிடத்தைக் கபோதோபாக்யாநத்தாலே காண்பித்து, ஶரணமென்றவனை ரக்ஷிப்பவர்க்கும் ரக்ஷியாதார்க்கும் உண்டான லாபச் சேதங்களைக் கண்டு மஹர்ஷியின் வசநத்தினாலே நிரூபித்து, ஆனபின்பு 'யாரேனுமாகிலும் "ராவணோ ஶரணம் கத:" என்ற பொழுதே அவனுக்கு அபயம் கொடுக்கப்பட்டது; அதை நீர் க்ரியை செலுத்தீர்' "ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா - விபீஷணோ வா

ஸுக்ரீவ யதி வா ராவண: ஸ்வயம்." என்று மஹாராஜனைப்பார்த்து நியமித்தாரன்றோ?

இதே மாதிரி, ஸீதா ரூபமாகத் திருவவதரித்த பிராட்டியும் அத்யந்தம் விலக்ஷணமான ஓர் அபய ப்ரதாநம் செய்திருக்கிறார். அதன் ஸந்தர்ப்பத்தையும் ஸ்வரூபத்தையும் கிஞ்சித் விசாரிப்போம். ராவண வதத்திற்குப் பிறகு ராவண விஜய வ்ருத்தாந்தத்தைப் பிராட்டிக்கு நிவேதநம் செய்யும்பொருட்டு ஸ்ரீ ராமனால் அனுப்பப்பட்ட ஹநுமாந் "வைதேஹி குசலீ ராம:" என்று ஆரம்பித்து, "ராவணஸ்ச ஹத: சத்ரு:" என்று அந்த வ்ருத்தாந்தத்தைச் சொல்லி, இப்படிப்பட்ட ப்ரிய ஸமாசாரத்தைச் சொன்ன தமக்குப் பாரிதோஷிகமாகப் பிராட்டியைப் பார்த்து ஒரு வரம் யாசித்தார். "இமாஸ்து கலு ராக்ஷஸ்யோ யதி த்வமனுமன்யஸே - ஹந்துமிச்சாம்யஹம் ஸர்வா யாபிஸ்த்வம் தர்ஜிதா புரா" "பதி தேவதையாக இருந்து கொண்டு மஹத்தான க்லேசத்தை அநுபவித்திருந்த உம்மைக் கோரரூபைகளான இந்த க்ரூர ராக்ஷஸிகள் க்ஷதே க்ஷாரம் போல அநேக விதமாக உபத்ரவித்தார்களன்றோ? அவர்களைக் கொன்று ஹிம்ஸிக்க எனக்கு அநுஜ்ஞை கொடுக்க வேணும்; உமக்கு விப்ரியம் செய்த இவர்களை அடித்துக் கிழித்து சிதிலம் செய்ய வேணுமென்கிற ஆஸ்தை எனக்கு அதிகமாக இருக்கிறது. "ஹன்யாதி விவிதைர் காதைர் ஹந்துமேதா: ஸுதாருணா:". இப்படி யாசித்த ஹநுமானைப் பார்த்து, ஜநகபுத்ரி, "ஹே" வாநரோத்தம! ராஜ ஸேவையால் பரவசர்களாகவும், ராஜா இட்ட நியமநத்தை அதிலங்கநம் செய்யக்கூடாதவர்களாகவுமுள்ள இந்த ராக்ஷஸிகளின் பேரில் நாம் கோபித்துக்கொள்வது ந்யாய்யமன்று; என்னுடைய ஜந்மாந்தரீயமான பாபங்கள் எனக்கு இந்த மாதிரியான கஷ்டங்களை விளைவித்தனவே தவிர, ராக்ஷஸிகள்பேரில் கிஞ்சித்தேனும் தோஷமில்லை. இவர்கள் ராவணனுக்கு அடிமைகளாக இருந்த காலத்தில், அவனுடைய ஆஜ்ஞையைச் செய்தார்கள்; அவன் ஹதமாகிவிட்டபடியால், இனி ஒரு தீமையையும் செய்யார்" என்று தர்ம ஸஹிதமாக அத்யுதாரமான வார்த்தையைச் சொல்லிவிட்டு, பிறகு 'ராக்ஷஸிகள் ஸ்வதந்த்ரைகளாகவே அபகாரத்தைச் செய்திருந்தாலும் அந்த அபகாரத்தைப் பாராட்டாமல் பொறுத்துப்போவதே உத்தமமான தர்மம்' என்பதை விளக்கும்படி ஒரு இதிஹாஸத்தைச் சொல்லத் தொடங்கினாள்.



"ஹே ப்லவங்கம! முன்னே ஒரு காலத்தில், ஒரு வேடன், காட்டில் புலியினால் துரத்தப்பட்டவனாகப் பஹுதூரம் ஓடிய பிறகு, சரணம் ஒன்றும் அகப்படாமல் தனது எதிரில் தென்பட்ட ஒரு வ்ருக்ஷத்தின்மீது ஏறினான். அவன் அந்த வ்ருக்ஷத்தின் சிகரத்தில் ஒரு கரடி யிருக்கக் கண்டு திடுக்கிட்டு இன்னது செய்கிறது என்று தெரியாமல் தியங்கி நிற்கையில், அந்த மரத்தினடியில் வந்து நின்ற புலி, 'ஹே ருக்ஷராஜனே! வந்ய ம்ருகங்களாக இருக்கும் நமக்கு இவன் ஜந்ம சத்ரு; ஆகையால், இவனை மரத்திலிருந்து கீழே தள்ளிவிடும்' என்று கரடியைப் பார்த்துச் சொல்ல, கரடி, 'என்னுடைய வாஸஸ்தாநத்துக்கு வந்த இவனுக்கு நான் அபகாரம் செய்யமாட்டேன். அப்படிச் செய்தால், தர்ம லோபம் நேரும்' என்று மறுமொழி கூறிவிட்டு, அந்த வேடனைப்பார்த்து, பயப்படவேண்டா மென்று தைர்யம் சொல்லி, தான் உறங்கிவிட்டது. பிறகு, புலி வேடனை நோக்கி, 'தூங்கும் கரடியை நீ கீழே தள்ளிவிட்டால், உன்னை நான் விட்டுவிடுகிறேன்' என்று ப்ரதாரணஞ் செய்ய, அந்த க்ஷுத்ரனான வேடன், அணுவளவும் க்ருதஜ்ஞதை யில்லாமல் தர்மாதர்மமும் பாராது, கரடியை அது படுத்துஉறங்கும் கிளையிலிருந்து தள்ளிவிட்டான். கரடியோ, அப்யாஸ வசத்தால் மற்றொரு கிளையைப் பிடித்துக்கொண்டு கீழே விழாமல் மறுபடி ஏறிவந்தது. பிறகு புலி கரடியைப் பார்த்து 'நீ க்ருதாபராதனான இந்த வேடனைக் கைவிடுவது தர்மலோபமாகாது' என்று பலவாறாகச் சொல்லியும், 'அவன் என்ன அபராதம் செய்தாலும், நான் அவனை உனக்குக் காட்டிக்கொடேன்' என்று சொல்லிவிட்டு, அந்தக் கரடி அத்யந்தம் ஸூக்ஷ்மமான ஒரு தர்மத்தையும் உபதேசித்தது.

"ந பர: பாபமாதத்தே பரேஷாம் பாபகர்மணாம் ।
ஸமயோ ரக்ஷிதவ்யஸ்து ஸந்தஸ்சாரித்ர பூஷணா: ॥"

பரேஷாம் பாபகர்மணாம் - பிறரை உத்தேசித்துப் பாபம் செய்யுமவர்கள் விஷயத்தில், பர: - ப்ராஜ்ஞனான புருஷன் [அதா

வது - தர்மாதர்ம விவேக முள்ளவன்], பாபம் - ப்ரத்யபகாரரூபமான பாபத்தை, நாதத்தே - செய்யமாட்டான்: ஸமய: - (தீங்கு செய்பவர்களிடத்திலும் ப்ரத்யபகாரத்தைச் செய்யாமலிருப்பதான) ஸதாசாரமானது, ரக்ஷிதவ்ய: - ஶ்ரத்தையுடன் அநுஷ்டிக்கப்படவேண்டுமன்றோ? ஸந்தஶ்சாரித்ர பூஷணா: - "நல்லோர்கள் தங்கள் நன்னடத்தையிலிருந்து நழுவுவார்களோ?"

இவ்வாறாக ஹநுமானை உத்தேஶித்துப் பிராட்டி தனக்கு அபிப்ரேதமான அர்த்தத்தில் 'ருக்ஷகீதம்' என்னும் இந்த இதிஹாஸத்தை, ஸ்ரீ ராமன் மஹாராஜனை உத்தேஶித்துக் கபோதோபாக்யாநத்தை ப்ரமாணம் செய்ததுபோல ப்ரமாணமாக நிரூபித்தாள்; அம்மாதிரியாக நிரூபித்துவிட்டு, ஸர்வ ஜகத்துக்கும் மாதாவாகவும், எவ்விதமான அபராதங்களைப் பிரஜைகள் செய்தாலும் அவைகளைத் தான் பொறுப்பதுமன்றி, ஸர்வ ஶேஷியான பகவானிடமும் "நிர்தோஷ: க இஹ ஜகதி" "தோஷமில்லாதவனும் இந்த ஜகத்தில் உண்டோ?" என்று சொல்லி உசிதமான உபாயங்களைச்செய்து அவனையும் பொறுக்கும்படி செய்யக்கூடிய ஸ்வபாவமுள்ளவளாகவு மிருக்கும் பிராட்டி பின் வருமாறு அபய ப்ரதாநம் செய்தருளினாள்:—

"பாபாநாம் வா ஶுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம ।
கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந்நாபராத்யதி ॥"

ஹே ப்லவங்கம! உம்முடைய அபிப்ராயப்படி அபகாரம் செய்திருந்தாலும், என்னுடைய அபிப்ராயப்படி நிரபராதிகளாக இருந்தாலும், அவர்கள் ரக்ஷிக்கத்தகுந்தவர்களே. மஹா புருஷனாக இருக்கும் ஒருவன் எல்லாரிடமும் தயையைச் செய்வனேதவிர, ப்ரத்யபகார மென்பதை ஸ்மரிக்கவே மாட்டான். தண்ட்யர்களைத் தண்டிக்க வேணு மென்கிற ஸாமாந்ய ஶாஸ்த்ரம், அவர்களிடத்தில் ப்ரவ்ருத்திக்காதன்றோ? ஶுபாசாரர்கள் வதார்ஹர்களாகிவிட்டால் எப்படி அவர்களுடைய மநஸ் உருகுமோ, அப்படியே, ஆபந்நர்களாக இருக்கும் அஶுபாசாரர்கள் விஷயத்திலும் அவர்கள்மநஸ் கரைந்து உருகும். அபராதிகளை விலக்கி விடுவது என்றால், யார் நம்முடைய தயைக்குப் பாத்ரமாவார்? ந கஶ்சிந்நாபராத்யதி - அபராதஞ் செய்யாமலிருக்கும் ஜநமும்



உண்டோ?" என்று ஸ்ரீ ராம பக்திக்கு அநுகுணமான வார்த்தையைப் பேசினாள்.

இதுவன்றோ தயை? அபகாரம் செய்தவர்களிடம் க்ருபை கூர்வதன்றோ உத்தம தர்மம்? 'மலிநருக்கு ஸ்நாநம் அபேக்ஷிதமாமாப்போலே அபராதிகளுக்கு அஸ்மதபேக்ஷிதம். அவர்களைக் காப்பாற்றுவதே ஆர்ய லக்ஷணம்' என்று சொல்வது கோSய தோஷாவஹ:?

ஸ்ரீ பட்டர், இந்த அபய ப்ரதாநத்தில் ஈடுபட்டு, ஸ்வாமியின் ஔதார்யத்திற்கும் பிராட்டியின் ஔதார்யத்திற்கும் ஒரு வாசியை உதப்ரேக்ஷித்து, 'பிராட்டியின் க்ஷாந்தியைப் பார்க்குங்கால் ஸ்வாமியின் ப்ரதிஜ்ஞையும் ஸங்கல்பமும் எம்மாத்ரம்?' என்று அருளிச்செய்கிறார். "மாத மைதிலி ராக்ஷஸீஸ்த்வயி ததைவார்த்ராபராதாஸ்த்வயா ரக்ஷந்த்யா பவநாத்மஜால் லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா - காகம் தம் ச விபீஷணம் ஶரணமித்யுக்திக்ஷமௌ ரக்ஷத: ஸா ந: ஸாந்த்ரமஹாகஸ: ஸுகயது க்ஷாந்திஸ்தவாகஸ்மிகீ" "ஹே மாத:! 'த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:' என்று மூவுலகமும் ஓடித்திரிந்து கஷ்டப்படும் காகாஸுரனை அநாதரித்திருந்து 'ஶரணமாக அடைந்தேன்' என்று சொன்ன பிறகு அவனை ரக்ஷித்ததும், 'த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கத:' என்று ஸர்வ ஸ்வ த்யாகம் செய்த விபீஷணனை அங்கீகரித்ததும் ஒரு பெருத்த தயை ஆகுமோ? ஆர்த்ராபராதைகளாகவும், அந்தக் காலத்திலும் பீஷணைகளாகவுமிருந்த ராக்ஷஸிகளை, 'ஶமயேதச வ்யயஸ்தே - ஜாநகீ தர்ஜயிஷ்யந்தீஶ்சைவ ஹந்யாதி ஹந்தும்' என்று ஹிம்ஸிக்க ஸந்நத்தனாக இருந்த வாயுபுத்ரனிடமிருந்து 'கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந்நாபராத்யதி' என்று சொல்லிக் காப்பாற்றினதன்றோ தயை? அந்த க்ஷாந்தியே நம்மைக் காப்பாற்றவேணும்" என்று ஸ்ரீ பட்டர் அநுஸரித்த மார்க்கத்தை அடிபொற்றி நாமும் அந்தத் தயையையே கைப்பற்றி நிற்போம்.

ஓர் பௌராணிகர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே தேவநாயக பரப்ரஹ்மணே நம:.

# கர்ம யோகம். *

கர்மயோகமென்பது, நித்யகர்மங்க ளென்று சொல்லப்பட்ட ஸந்த்யா வந்தநம் முதலியவைகள், நைமித்திககர்மங்க ளென்று சொல்லப்பட்ட க்ர ஹணம் முதலிய காலங்களில் செய்யும் ஸ்நாநம் தர்ப்பணம் முதலியவைகள், காம்யகர்மங்க ளென்று சொல்லப்பட்ட பசுமுதலிய பலங்களுக்கு ஸாத நங்களான சித்ரேஷ்டி முதலியவைகள் இவைகள் எல்லாவற்றையும் அங் கங்களாகவும், ஸ்ரீ பகவத் கீதையில் நான்காவது அத்யாயத்தில் 25 - வது முதல் 30-வது வரையிலு முள்ள ஶ்லோகங்களிற் சொல்லப்பட்டிருக்கும் 14 - வித தர்மங்களில் ஏதாவது ஒன்றை அங்கியாகவும் ஸங்கல்பித்து நியமத் துடன் அவைகள் எல்லாவற்றையும் அநுஷ்டிப்பதற்குப் பெயர். அங்கிக ளாக இருக்கக்கூடிய 14 - வித தர்மங்களாவன: — (1) தேவதாராதநம், (2) யஜ்ஞத்துக்கு க்ருஷிகளான ஸ்ருக் ஸ்ருவம் ஹவிஸ் கர்த்தா அக்நி இவையெல்லாம் ப்ரஹ்மத்தின் ஶரீர மென்கிற அநுஸந்தாநத்துடன் யஜ்ஞம் செய்தல், (3) மேற் சொல்லிய அநுஸந்தாநத்துடன் ஹோமம் செய்தல், (4) தாநம் செய்தல், (5) ஶப்தம் முதலிய விஷயங்கள் இருக்குமிடத்தை விட்டுத் தனியாக இருந்து இந்த்ரியநிரோதநஞ் செய்தல், (6) விஷயங்களிரு க்குமிடத்திலிருந்தும் அவைகள் இந்த்ரியங்களோடு சேர்ந்தாலும் இந்த்ரியங் களை விகாரமடைய வொட்டாமல் தடுத்தல், (7) இந்த்ரியங்களின் வ்யா பாரங்களையும் அவைகளுக்குக் காரணங்களாகிய ப்ராண வாயுவின் வ்யாபா ரங்களையும் அநுஸரிக்க வொட்டாமல் மநஸ்ஸை அடக்கிக்கொள்ளுதல், (8) உபவாஸம் க்ருச்ரம் சாந்த்ராயணம் முதலிய ஶாஸ்த்ரீயங்களான கார்யங் களால் காயக்லேஶஞ் செய்தல், (9) புண்ய க்ஷேத்ரங்களுக்கும் புண்ய தீர் த்தங்களுக்குஞ் செல்லுதல், (10) வேதாத்யயநஞ் செய்தல், (11) அவைக ளின் அர்த்தங்களை ஆராய்தல், (12) மேல் நோக்கி வரும் ப்ராணவாயுவைக் கீழ் நோக்கும்படி செய்தலாகிற பூரகம், (13) கீழ்நோக்கிப் போகும் ப்ராண

* இது, சென்ற மார்கழி மாஸத்தில் நீடாமங்கலத்தில் நடந்த ஸ்ரீ அஹோபிலமட ஶிஷ்ய ஸபையின் மஹாஸங்கத்தில் **ஸ்ரீ சேட்லூர் நரஸிம்ஹாசார்யரால்** செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.



வாயுவை மேல் நோக்கும்படி செய்தலாகிற ரேசகம், (14) மேல் போகாம லும் கீழ்ப் போகாமலும் ப்ராண வாயுவை அந்த அந்த இடத்திலேயே இருக் கும்படி செய்தலாகிற கும்பகம் இவைகள் தான். இவற்றுள் 1 - முதல் 4 - வரையிலுமுள்ளவை த்ரவ்ய வ்யய ஸாத்யங்களாகையால் த்ரவ்ய யஜ்ஞங் கள் என்றும், 12 - 13 - 14 - வது பாகங்கள் ப்ராணாயாமங்கள் என்றும் சேர்த்தும் சொல்லப்படும். இந்தப் பதினாலு கர்மங்களில் சில நித்யகர்மங் களிற் சேர்ந்தவை யாகையால் எல்லாக் கர்ம யோகிகளும் அவைகளை அநு ஷ்டிக்கவேண்டியது அவஶ்யமாக இருந்தாலும், அங்கியாக ஸங்கல்பித்துக் கொள்வதி லுள்ள வ்யத்யாஸத்தை முன்னிட்டு இப்படிப் பிரிக்கப்பட்டிருக் கின்றன.

இவைகள் எல்லாவற்றையும் ஸாத்விகத்யாகத்துடன் செய்யவேண்டும். ஸாத்விகத்யாகமென்பது, பலத்யாகம் ஸங்கத்யாகம் கர்த்ருத்வத்யாகம் ஆகிற மூன்றுவித த்யாகங்களைக் குறிக்கும். பல த்யாகமாவது - அந்தந்தக் கர்மத்துக்குப் பலமாக ஶாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கும் ப்ரயோஜ நத்தை உத்தேஶிக்காமல், பகவானுடைய ஆராதநமாய் அவனுடைய ப்ரீதி க்காகச் செய்கிறதான அநுஸந்தாநம். ஸங்கத்யாகமாவது - இந்தக் கர்ம த்தை நம்முடைய பலத்துக்காகச் செய்யவில்லை, ஆகையால் இது நம்முடை யது அன்று, பகவானுடையது என்று அநுஸந்திக்கை. கர்த்ருத்வ த்யாகமா வது - நான் ஸ்வதந்த்ரனல்லேன், தான் கொடுத்த ஶரீரத்தைக்கொண்டும் தான் கொடுத்த த்ரவ்யம் முதலிய உதவியைக்கொண்டும் தனக்குக்கீழ டங்கிய இந்த ஆத்மாவைக் கொண்டும் எல்லாவற்றிற்கும் ஶேஷியாகிய தானே நடத்திவைக்கிறான் என்று எண்ணுகை.

தான் கர்த்தாவாக இருக்கக் காண்கையாலும், ஶாஸ்த்ரங்களில் தன் னையே கர்த்தாவாக விதித்திருக்கையாலும், தான் கர்த்தாவல்லன் என்பது எப்படிப் பொருந்தும்? மேலும், ஶாரீரக ஸூத்ரத்தில் வ்யக்தமாகவே "கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத்" என்கிற அதிகாரத்தில் ஜீவனுக்குக் கர்த்ருத்வ முண்டு என்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு இது விரோதமாகா தோ? என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். இவ்விடத்தில் ஶாஸ்த்ரங்களாலும் அநுபவத்தாலும் ஏற்படும் கர்த்ருத்வம் நிஷேதிக்கப்படவில்லை. ஆனால், ஸ்ரீ பகவத்கீதை 18 - வது அத்யாயத்தில் 14 - 15 - வது ஶ்லோகங்களிற் சொல்லியபடி ஐந்து ஹேதுக்கள் சேர்ந்து செய்யக்கூடிய கார்யத்தில் தான் ஒருவனே கர்த்தாவென்று நினைப்பதும், ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற குணங்களோடு சேர்ந்திருப்பதால் ஏற்பட்ட புண்யபாபங்களின் கர்த்ருத்வத்தைத் தன் ஸ்வரூபத்தைப் பற்றியது என்று நினைப்பதும் கூடாது என்று மாத் திரம் சொல்லப்படுகிறது. இவ் விஷயம், ஸ்ரீ பகவத்கீதை 3 - வது அத்யா யம் 30 - வது ஶ்லோகத்தின் பாஷ்யம் தாத்பர்ய சந்த்ரிகைகளில் வ்யக்த மாக விளங்கும்.

இந்தக் கர்மயோகம் ஜ்ஞாந யோகத்தை ஸாதித்துக் கொடுத்து அதன் வழியாக ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமாகிறது என்று 2-வது அத்யாயத்திலும், கர்மயோகம் ஜ்ஞாநயோகம் இவைகள் தனித்தனியாகவே ஆத்மாவலோகநத்திற்கு உபாயங்களாகின்றன வென்று 3-4-5-வது அத்யாயங்களிலும் ஸ்ரீ கீதாசார்யன் அருளிச்செய்திருக்கிறான். இதுவுமன்றி, ஜ்ஞாநயோகத்தை விடக் கர்மயோகம் மிகவும் சிறந்ததென்றும் சொல்லியிருக்கிறான். இது எப்படி ஸம்பவிக்குமென்பதை ஆலோசிப்போம். ஜ்ஞாநயோகத்தைச் செய்கிறவனும் கர்மங்களைச் செய்யவேண்டியது அவஶ்யம்; நித்யகர்மங்களை க்ரமமாகச் செய்து அந்த யஜ்ஞத்தின் மிகுதியான அந்நத்தைக் கொண்டு ஶரீர தாரணம் செய்து வந்தால், முறையே பாபம் நீங்கி மநஸ் ஶுத்தமாகி ஆத்மாவின் அநுஸந்தாநம் நிலைநிற்கும். அப்படிக்கு இல்லாமல் ஏதாவது வ்யாபாரங்களைச் செய்து ஶரீர தாரணத்தை நடத்தினால் மநஸ் ஶுத்தி தவறிவிடும். ஶரீரதாரணத்திற்காக வ்யாபாரங்கள் செய்யாமலிருப்பதும் ஸாத்யமில்லை. ஆகையால், ஜ்ஞாநயோகிகளுக்கும் கர்மாநுஷ்டாநம் அவஶ்யமே. மேலும், லோகத்தில் ஜநங்களெல்லாரும் ஶாஸ்த்ரங்களைக் கற்றுணர்ந்து தங்கள் தங்கள் அதிகாரத்தைத் தெரிந்துகொள்வது என்பது ஸாத்யமில்லை. அயலாருடைய அநுஷ்டாநத்தைப் பார்த்து அதுபோலத் தாங்களும் அநுஷ்டிக்க யத்நம் செய்யும் ஶீலமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். ஆகையால், வ்யபதிஷ்டர்களான சிலர் ஜ்ஞாந யோகத்துக்கு அதிகாரிகளாக இருந்து ஜ்ஞாநயோகத்தை அநுஷ்டிக்கும் பக்ஷத்தில், அதைப்பார்த்து அந்த யோகத்துக்கு அநர்ஹர்களாக இருக்குமவரும் அந்த யோகத்தை ஆரம்பித்து அதை முடிக்க ஶக்தியற்றவர்களாய் விநாஶம் அடைவார்கள். இப்படி லோகத்தாரைக் கெடுப்பதுமன்றி அப்படிக் கெடுப்பதனால் உண்டாகும் பாபம் அந்த வ்யபதிஷ்டர்களையும் ஜ்ஞாந யோகத்தை விட்டுத் தவறும்படி செய்துவிடும். ஆகையால், லோக ஸங்க்ரஹத்தைப் பார்த்தும் எல்லாரும் கர்மத்தைச் செய்ய வேண்டியது என்றே ஏற்படுகிறது. தவிரவும், மநுஷ்யர்களின் ஶரீரம் இந்த்ரியம் முதலியவைகளுக்கு அதனதன் வேலைகளைச் செய்தே பழக்கமாயிருக்கிறது. அந்த வேலைகளை முற்றிலும் விட்டுக் கேவலம் ஆத்மாவை த்யாநம் செய்வதும் முடியாத கார்யம். அப்படி முடிந்தாலும், ஏராளமான வெள்ளத்தை முற்றிலும் தடுத்தால் அது அணையை மீறிக் கிளம்பிவிடுவதுபோல, ஓடிக்கொண்டிருந்த இந்த்ரியங்களை முற்றிலும் அடக்கினால் அந்த இந்த்ரியங்கள் கொஞ்சகாலத்துக்குள் ராக த்வேஷாதிகளை முன்னிட்டுக் கிளம்பிவிடும். இந்தக் காரணத்தை உத்தேஶித்தும், இந்த்ரியங்களை நல்ல விஷயங்களிலும் ஶாஸ்த்ரத்திற் சொல்லிய கர்மங்களிலும் மூட்டுவதாகிற கர்மாநுஷ்டாநமே எல்லாருக்கும் ஶ்லாக்யம். இதனாலேயே ஜ்ஞாந யோகத்தைவிடக் கர்மயோகம் ஸுலபமென்றும் சொல்லுகிறார்கள்.

இந்தக் கர்மாநுஷ்டாநங்களில் கொஞ்சம் தேஹ ஶ்ரமம் முதலிய வருத்தங்க ளிருந்தாலும், அந்தக் கர்மங்களை நமக்கு ப்ரியதமனான ஸ்நேஹித



னாகவும் அத்யுதாரனான யஜமாநனாகவு மிருக்கும் பகவானுடைய த்ருப்திக்காகச் செய்கிறோமென்று உணர்ந்து செய்தால், அந்த அநுஷ்டாநங்கள் செய்யும்பொழுதே மிகுந்த ஸந்தோஷத்தைக் கொடுக்கும். இப்படிக் கர்மங்களை அநுஷ்டிப்பதே தமக்கு மிகவும் இஷ்டமான மதமென்றும், இது ஸர்வதா நல்லகதியைக் கொடுக்கு மென்றும், இப்படிக் கர்மாநுஷ்டாநம் செய்யாதவர்கள் ஸம்ஸாரத்திலேயே மூழ்கிக் கிடப்பார்களென்றும் ஸ்ரீ க்ருஷ்ணன் கீதையில் நன்றாக விவரித்திருக்கிறார். இன்னும் சொல்லவேண்டிய விஷயங்கள் அநேகமிருந்தும் அவகாஶமில்லாததால் ஸப்யர்களின் அநுமதியின்பேரில் இதனுடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

ஆனால், நிறுத்து முன் என்னுடைய க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொள்ளுதற்பொருட்டு ஒரு விண்ணப்பம் செய்கிறேன்: அதாவது - இந்த ஸபைக்கு ஶிஷ்யஸபை யென்று திருநாமம் வாய்த்திருந்தாலும், இதை ஆசார்யஸபை யென்றே நான் மதிக்கிறேன். ஏனெனில், இப்படிப் பட்ட மஹான்கள் கூடி அபூர்வமான விஷயங்களை உபந்யாஸஞ் செய்வதனால் என் போல்வார்க்குத் தெரியாத விஷயங்களைத் தெரிந்துகொள்ள அவகாஶம் உண்டாகிறது. அதற்கு இந்த ஸபையே காரணமாக இருப்பதனால், ஆசார்ய ஸபையென்று சொல்வதில் ஆக்ஷேபமில்லை. இது ஆசந்த்ரார்க்கம் நடந்து அதனால்,

பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கு யாதொன்று மில்லை
கலியும் கெடும் கண்டுகொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்திசை பாடியாடி யுழிதரக் கண்டோம்.

என்று நம்மாழ்வார் மங்களாஶாஸநம் ஸபலமாகும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸதா ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

### ஸ்ரீ ராகவனுடைய ப்ரதிஶயநம்

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

1. ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஸமுத்ர ராஜனை ஶரணாகதிசெய்த விஷயமாகச் சென்ற வருஷத்திய 11-வது ஸஞ்சிகையில் ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி இன்னும் சில ஆக்ஷேபங்களை அருளிச் செய்திருப்பதைப் பார்த்து, "[illegible]" என்கிற ஆசார்யனுடைய திவ்ய ஸூக்தியை ஆதாரமாக வைத்துக்கொண்டு அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டினவரையில் சில ஸமாதானங்களை எழுதத்துணிகிறேன்.

"ஸ்ரீ பரதன் அநுஷ்டித்தது ஶாஸ்த்ரீய ப்ராயோபவேஶமன்று என்பதற்கு த்ருஷ்டாந்தத்தி லிருக்கும் [illegible] ஶப்தங்கள் ப்ரமாணமாகுமோ?" இவ்விடத்தில் த்ருஷ்டாந்தம் ஏது? ஶ்லோகத்தின் இரண்டு பாதியும் வேறுவேறு விஷயமோ? "ப்ராஹ்மணோ ஹ்யேகபார்ஶ்வேந நராந் ரோத்துமிஹார்ஹதி - ந து மூர்த்தாபிஷிக்தாநாம் விதி: ப்ரத்யுபவேஶநே" என்கிற முன் பாதி த்ருஷ்டாந்தமாகச் சொல்லப்பட்டது என்பதற்கு த்ருஷ்டாந்தத்தைக் காண்பிக்கும் பதங்கள் ஒன்றுமில்லை. அத்யாஹார மில்லாமலே அர்த்தம் பொருந்துகிறபடியால் அதற்கு அவஶ்யமுமில்லை. இரண்டு பாதிகளிற் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தம் ஒன்றென்றே தோன்றுகிறது. ஏனெனில், ராஜாவுக்கு ப்ராயோபவேஶத்தில் அதிகாரமில்லை யென்பதற்குக் காரணமாக ப்ராஹ்மணன் ஒரு பக்கத்தால் வழி மறிக்கலாம் என்பது சொல்லப்பட்டிருக்கிறது. 'ஹி' என்கிற பதத்தால் இது ஏற்படும். இரண்டும் வேறு வேறாயிருந்தால் ஒன்றுக்கொன்று எப்படி காரணமாகும்?



2. "அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா" என்கிற ஶ்லோகத்தைப் பார்த்தால் ஸ்ரீ ராமனும் ஏக பார்ஶ்வ ஶயநம் செய்ததாகவே அர்த்தமாகும்." 'ப்ராங்முக: அஞ்ஜலிம் க்ருத்வா' என்றும் அந்வயம் சொல்லலாமே. இப்பொழுது அர்ச்சாவதாரத்தில் அசையாமலிருப்பது அப்பொழுதும் இப்படியே அசையாமற் கிடந்தா ரென்பதற்கு ப்ரமாணமாக மாட்டாது. அப்படி ஏக பார்ஶ்வ ஶயநத்தை ஸ்ரீராமன் அநுஷ்டித்ததாக இருந்தாலும் மற்ற ஶப்தாந்தர குணாந்தராதிகளால் இதற்குப் பேதம் ஸித்தம்.

3. "ரோதநம் என்றால் அஶாஸ்த்ரீயமான மறிப்பாகத்தான் இருக்க வேணுமோ? ஶாஸ்த்ரீய கார்யத்திற்கு லௌகிக த்ருஷ்டாந்தம் கூடாதோ?" ரோதநம் என்பது இவ்விடத்தில் அஶாஸ்த்ரீயமான மறிப்பைத்தான் சொல்லுகிறது. "ஶேஷ்யே புரஸ்தாச்சாலாயா யாவந்ந ப்ரதியாஸ்யதி - நிராஹாரோ நிராலோகோ தநஹீநோ யதா த்விஜ:" என்கிற ஶ்லோகத்தைப் பார்த்தால் பணமிழந்த ப்ராஹ்மணனைத் தனக்கு த்ருஷ்டாந்தமாகச் சொல்லி யிருப்பதாக ஏற்படும். இதை அநுஸரித்து வ்யாக்யாநங்களிலும் "ப்ராஹ்மணோ ஹ்யேகபார்ஶ்வேந" என்பதில் இருக்கும் ப்ராஹ்மண ஶப்தத்துக்கு 'கடன் கொடுத்து வட்டியுடன் வாங்குகிற ப்ராஹ்மணன்' என்று அர்த்தம்: '[illegible]' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், 'க்ஷத்ரியாணாம் தேஶகாலேந ப்ராயஶ்சித்த...' என்றும் வ்யாக்யாநத்தி லிருப்பதால், இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் செய்யக்கூடாததே என்று வ்யக்தமாகிறது. அது வேறு இவர் செய்கிறது வேறாக இருந்தால் இவ்விருவருக்கும் ஸமாந தர்மமில்லாமற்போய் விடுமே! அத்ர தஸ்மிந் யதோக்தம் அன்றோ ஸாத்ருஶ்ய பதத்தின் அர்த்தம்? த்விஜ இவ ஶேஷ்யே என்பதில் ஸ்பஷ்டமாக ஏற்பட்டிருக்கும் ஶயந மாகிற ஸமாநதர்மத்தை விட்டு வேறு ஸமாநகல்பநம் உசிதமாகுமோ? ஆகையால், பணமிழந்த ப்ராஹ்மணனைத் தனக்கு த்ருஷ்டாந்தமாகச் சொல்லிக்கொண்டபடியால், இவ்விருவருடைய ஶயநமும் ஒன்றென்றே சொல்லவேணும்.

4. "வழிமறிக்கத் தர்ப்பாஸ்தரணமும் வேணுமோ?" "உபாஸநா ஸாகரஸ்ய" என்கிற இடத்திற் சொல்லியிருக்கும் தர்ப்பாஸ்தரணம் ஶயநத்துக்கு அங்கமானது அன்று; பூமி ஶுத்தமாவதற்காக வென்

பது, கோவிந்தராஜீயத்திலிருக்கும் வாவந கஷாயம் என்கிற பதத்தால் ஏற்படும்.

5. "விதி: ப்ரத்யவஸேந என்பதிலிருக்கும் விதி என்னும் பதத்தைக் கவனிக்கவேண்டாமோ?" கவனித்தால் என்ன ஏற்படுகிறது? 'ராஜாக்களுக்கு இப்படி நிர்ப்பந்தம் செய்வதில் விதியில்லை' என்பதால் இது விஹிதமென்று ஏற்படுமோ? ப்ராஹ்மணனுக்கு ஸுராபானம் செய்ய விதியில்லை யென்றால் அது ஶாஸ்த்ரீயமான கார்யமென்று எப்படி சொல்ல முடியும்?

6. "ஆரண்யம் வ்ரதம் என்பதிலுள்ள வ்ரத ஶப்தார்த்தமும், சீரம் ச வஸ்த்ரம் ததோதகம் என்கிற விடத்தி லுள்ள க்ஷத்ரியா விஹித ப்ரத்யவஸேந ப்ராயஶ்சித்தாய என்கிற வாக்யமும், லோகவாஹ்யஶப்தம் ப்ரத்யவஸ யசோராஜஸேவ லக்ஷணம் என்கிற வாக்யமும் இந்த அர்த்தத்திற்குப் பொருந்துமோ?" பொருந்தும்; வ்ரதம் என்பது, ஸங்கல்ப பூர்வகமாக உறுதியுடன் அநுஷ்டிக்கிற கார்யங்களைக் காட்டும். ஶாஸ்த்ரீயமாகத்தான் இருக்கவேணும் என்கிற நிர்ப்பந்த மில்லை. ஸாமாந்யமாக அந்தப்பதத்துக்கு ஶாஸ்த்ரீயம் என்கிற அர்த்த மிருந்தாலும் பூர்வோத்தர ஸந்தர்ப்பங்களைப் பராமர்ஶித்தால் இங்கு ஶாஸ்த்ரீய கார்யமென்று அர்த்தஞ்சொல்ல முடியாது; ராக ப்ராப்தமேயானாலும் நிஷேதம் வரலாம். கபிலாக்ஷீரபானம் ஶூத்ரனுக்கு ராக ப்ராப்தமானாலும் நிஷேதிக்கப்பட்டிருக்கிறதன்றோ? லோகவாஹ்ய ஶயனருபமான நிர்ப்பந்தம் லௌகிகமானாலும் க்ஷத்ரியனுக்கு நிஷித்தமாகையால் அதைச் செய்ததற்காக 'சீரம் ச வஸ்த்ரம் ததோதகம்' என்று ப்ராயஶ்சித்த விதி கூடும். 'அவிஹித' என்ற வ்யாக்யாநங்களின் ப்ரயோகம், 'ந தத்ர விதி: ப்ரத்யவஸேந' என்கிற மூலத்தை அநுவதிக்கிறதாக இருக்கலாம். அல்லது, 'ஸதாசாரோபஹிதம்' என்கிற இடத்தில் அபயப்ரதாந ஸாரத்தில் அருளிச்செய்திருப்பது போல, விஹிதவிஹீநம் - நிஷித்தம் என்கிற அர்த்தத்தையுஞ் சொல்லலாம். 'ப்ரத்யவ ஸேய யசோராஜ ஸேவலக்ஷணம்' என்பதும், லௌகிகமான கார்யத்துக்கு லௌகிகங்களாகவே சில அங்கங்களும் ஸம்பவிக்கலா மாகையால், அது இவ்விடத்தில் 'நிராஹாரோ' என்று சொல்லப்பட்டிருப்பதால், அவற்றுக்கும் உபலக்ஷணமென்று சொல்வதில் அநுபபத்தி இல்லை.



7. "ஜடிலம் சீரவஸநம் என்று ஜடை மரவுரி முதலியவைகளைத் தரித்துக்கொண்டிருந்த பரதனைப் பார்த்தும் மறுபடியும் ஸ்ரீராமனுக்குப் பரதனிடம் அபிஷிக்த புத்தி வருமோ?" வரலாம்; வந்துமிருக்கிறது. ஜடை முதலியவைகளைத் தரித்துக்கொண்டிருந்த பரதனைப் பார்த்தும் ஸ்ரீராமன் கச்சித் ஸர்க்கத்தில் 'ராஜ தர்மங்களை ஸரியாக நடத்திவருகிறாயா?' என்று விஸ்தாரமாகக் கேட்கவில்லையோ? 'பரதன் ராஜ்ய பரிபாலநஞ் செய்யவில்லையென்று ஸ்ரீ ராமன் தெரிந்துகொள்ளவில்லை' என்கிற ஸமாதாநம் இவ்விடத்திற் சொல்வது போல அவ்விடத்திலும் சொல்லலாம்.

8. ஸ்ரீ தேஶிகனுடைய திவ்ய ஸூக்திகளில் பரஸ்பர விரோதம் போலத் தோன்றுகிறதற்கு ஸமாதாநம், அவஸ்தாபேத வாதம் என்பதே. இதைத் தவிர்த்து வேறு ஸமாதாநம் இருக்கிறதை, சரம ஶ்லோகாதிகாரத்திலும் அபய ப்ரதாந ஸாரத்திலும் உள்ள வாக்யங்களின் ஸ்வாரஸ்யத்தைப் பராமர்ஶித்துத் தாங்களேயாவது ஸதாசார்ய மூலமாகவாவது தெரிந்துகொள்ளவேணும். பரமரஹஸ்யமாகவும் துரூஹமாகவுமான அஸ்மதாசார்யன்திருவுள்ளத்தை நாம் ஸஹஸா நிர்த்தாரணஞ்செய்வது அபசாரத்துக்கு இடமாகுமென்று இதுவரையில் நிறுத்திக்கொண்டேன்.

9. ஸ்ரீ உ. வே. காறக்குறிச்சி ஐவாசார்யர் ஸ்வாமி ஸாதித்திருக்கும் ஸமாதாநத்தைப் பற்றி:—தர்ப்பாஸ்தரணாதி விஶிஷ்டமாயும் விலக்ஷணமாயுமிருக்கிற ப்ரபத்தி வேறொன்று இருக்கிறது என்று ஓரிடத்திலிருந்தும் ஏற்படவில்லை. பரிகர விபாகாதிகாரத்தில் மோக்ஷார்த்த ப்ரபத்திக்குப் பலத்யாகம் அங்கமென்று ஸாதிக்கிற இடத்தில் 'இது மோக்ஷார்த்த ப்ரபத்தியில் நியதம்' என்கையால், மற்றை அங்கங்கள் ஸர்வ ஸாதாரணமென்று ஏற்படுகிறது. "ப்ரபத்தி: ஷட்விதா ப்ரோக்தா ... பஞ்சாங்கா யா ஸ்ம்ருதா" - இந்த ப்ரபத்தியோகம் ஐந்து அங்கங்களை உடையது என்றும், ஆறு அங்கங்களை உடையது என்றும் இரண்டு வகைப்பட்டதாக மாத்திரம் சொல்லியிருக்கிறதே தவிர, இதற்கு மேல் வேறு ஒரு பேதம் இருப்பதாக அருளிச்செய்யப்படவில்லை. த்ரிஜடாதி ஶரணாகதிகளிலும் ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலான ஐந்து அங்கங்கள் மாத்திரம் உபபாதிக்கப்பட்டிருக்கின்றன. தர்ப்பாஸ்தரணாதி விஶிஷ்டமான ப்ரபத்தி வேறு இருந்ததேயாகில் சரம ஶ்லோகாதிகாரத்தில் 'தர்ப்பாஸ்தரணாதிகள் சொன்னது ப்ரதிஶயந ப்ரதாந மாகையாலே' என்று ஸமாதாநம் அருளிச்செய்திருக்க வேண்டாம்; அவ்விடத்திலேயே அவைகள் ப்ரபத்திக்கு அங்கமன்று என்றும் அருளிச்செய்திருக்கிறார். இன்னும் அநேக இடங்களில் இருக்கும் ஸ்ரீ ஸூக்திகளின் விரோதமும் ஸம்பவிக்கும். இவை யெல்லாவற்றையும் பார்க்கும்பொழுது ஸ்ரீ. உ. காறக்குறிச்சி ஸ்வாமியின் ஸமாதாநம் ஸ்வரஸமாகப் பட வில்லை.

10. ஸ்ரீ. உ. வே. வேதாந்த ராமானுஜ ஸ்வாமி ஸாதித்ததாக எழுதப்பட்டிருக்கும் ஸமாதானத்தைப்பற்றி:—விபீஷணன் நினைவை அநுஸரித்து ஶரணாகதியாக அபயப்ரதாந ஸாரத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது என்றால், அவ்விடத்தில், விபீஷணன், 'ஸ்ரீ ராமன் ஶரணாகதி செய்ய அதிகாரி' என்று நினைத்துத்தானே அப்படி உபதேஶம் செய்திருக்கவேண்டும். "ஸுக்ரீவம் ராகவோ ராஜா ஶரணம் கந்துமிச்சதி" என்று சுஹ்ருதி என்றும் சொல்லியிருக்கிறார். அப்படியிருக்க, அந்த இடத்தில் விபீஷணனுடைய அபிப்ராயத்துக்கு விரோதமாக 'அநதிகாரி க்ருதமாகையாலே' என்று செய்யப்பட்டிருக்கும் ஸமாதானம் எப்படிப் பொருந்தும்? சரம ஶ்லோகாதிகாரத்தில் வாஸ்தவார்த்தத்தை அருளிச்செய்தாராகில் 'ப்ரதிஶய ப்ரதானமாகையாலே' என்பதும் ஆலோசிக்கத்தக்க விஷயமே. 'ஶரணாகதி பண்ணின இடத்திலும்' என்கிற வாக்ய ஸ்வாரஸ்யத்தைப் பார்த்தால் ஶரணாகதி செய்ததாகவும் அஸ்மதாசார்யனுக்குத் திருவுள்ளம் போலத்தோன்றுகிறதே. ஆகையால், இவ்வர்த்தங்களை முற்சொல்லியபடி யதாஶ்ருதம் யதா ஸம்ப்ரதாயம் தெளிந்துகொள்ள வேண்டியது.

யதிகிஞ்சித்க்ருதமிதி ந்யாயவிருத்தம் ஸ்வயம் ।
ஸத்ருக்திவா ஹஸா ஸ்வேச்சயா த்யக்தஹேதுஸ்திஸாயவம் ॥

திருவல்லிக்கேணி 9—3—1912. — சே. நரஸிம்ஹமாசார்யர்.

## (2)

## ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருதம்.

வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ க்ருஷ்ணகர்ணாம்ருதத்திலிருக்கும் ஒரு ஶ்லோகத்தின் தாத்பர்ய விஷயமாக ஒரு ப்ரஶ்நஞ் செய்யப்பட்டிருக்கிறது. 'க்ருஷ்ணன் இருக்கும் திசையை நோக்கவேண்டாம்; அவன் திருடன்; அங்கே போனால் உங்களுடைய மநஸ்ஸை அபஹரித்துக் கொண்டுவிடுவேன்' என்று சொல்வதன் தாத்பர்யம் என்ன? அப்படிச் சொல்வது நம்முடைய இஷ்டவிருத்தமன்றோ? என்பதுதான். இம்மாதிரியாகப் பேசுவதன் கருத்து வ்யக்தமே. எவ்விதமான விரோதமும் இல்லை. ஸ்த்ரீத்வ ப்ரயுக்தமாக அநவாப்தி தலையெடுத்துச் சொல்வதை யதாஶ்ருதமாக எடுத்துக்கொள்ளலாமா? "யாஹி கிதவஸம்யோ ஸேவ ஶ்யாமாங்கிம்" - "அடா வண்டே! நீ துஷ்டனுடைய தூதன்; என்னை ப்ரார்த்திக்காதே" என்றும், "விஸ்ருஜ ஶிரஸி வாத:..........கிம் நு ஸம்யேயஸ்யஸி" - "என்னுடைய ஶிரஸ்ஸை ஏன் சுற்றுகிறாய்? உன்னுடைய ப்ரபுவுடன் எங்களுக்கு ஸந்தி வேண்டாம்" என்றும், "உக்தம் த்ருது ஹணுத்தாஸ் நுவாதயா" "ஹே தூத! க்ருஷ்ணன் ப்ரஸ்தாவம் வேண்டாம்; வேறு ஏதாவது வார்த்தை இருந்தால் அதைச் சொல்லு, நாங்கள் கேட்கிறோம்" என்றும் அநவாப்தி தலையெடுத்துக் கோபஸ்த்ரீகள் கதறினதை ஸ்ரீ நீலமேகம் ஸ்வாமி கேட்டதில்லையோ?

ஏதோ இரண்டு எதிர்மறை இருப்பதாகவும், ஆகையால் 'போகாதேயுங்கோள்' என்பது அர்த்தமன்று என்று சொல்வதாகவும் ஒரு யோஜனை எழுதப்பட்டிருக்கிறது. அதன் உபபத்தி கிஞ்சித்தேனும் ஏற்படவில்லை. இரண்டு எதிர்மறை இருக்குமிடத்தை நாம் கண்டிலோம்.

மயிலாப்பூர் 18-3-12. — ஓர் பௌராணிகன்.

---

## (3)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருத ஶ்லோக விஷயமாக ஸ்ரீ நீலமேகம்ஸ்வாமி செய்திருக்கும் ப்ரஶ்நத்திற்கு அடியேனுக்கு ஒரு ஸமாதானம் தோன்றுகிறது. லோகத்தில் மநுஷ்யர்களின் ஸ்வபாவம், எது செய்யக்கூடாதது என்று நிஷேதிக்கப்பட்டிருக்கிறதோ அதைச் செய்வதிலேயே உத்ஸாஹமுள்ளதாக இருக்கிறது. இந்த ஸ்வபாவத்தை விஶேஷமாகப் பாலர்களிடம் வ்யக்தமாகக் காணலாம். பால்யம் மாறியும் இந்த ஸ்வபாவம் கொஞ்சம் மறைகிறதேதவிர அற்றுப்போகிறதில்லை. 'இது நிஷித்தமான கார்யம்; இந்த நாம் செய்யக்கூடாது' என்று நிரூபித்து நம்மை நாம் தடுத்துக்கொள்ளுகிறோமே தவிர நமது ப்ரவ்ருத்தி முதலில் அதைச் செய்வதிலேயே நோக்குகின்றது. 'இதைப் படிக்கக் கூடாது' என்று ஒரு ப்ரசுர பத்திரிகையை எழுதி அதைத் தெருச் சுவரில் ஒட்டினால் எல்லாரும் அதைப் படிப்பதுபோலவே, 'அங்கு க்ருஷ்ணன் இருக்கிறான்; அவ்விடம் போகக்கூடாது; போனால் உங்களுடைய மநஸ்ஸை அபஹரித்துக்கொள்வன்' என்று சொன்னால், எல்லாரும் அவ்விடம் செல்வார்; சென்று உஜ்ஜீவநத்தை அடைவார் என்று எண்ணி லோகாநுபவமுள்ள ஸ்ரீ கர்ணாம்ருதக்காரர் இப்படி எழுதியிருக்கலாம்.

யுக்தி.

ஸ்ரீ:

# பிரிவுகளின் அறிக்கை.

## மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு.

சென்ற பிப்ரவரிமீ 18-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 4-மணிக்குத் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் மதிராஸ் சைதாப்பேட்டைப் பிரிவின் ஸங்கம் ஒன்று சேர்ந்தது. அநேகம் ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். ஸ்ரீ. சேட்லூர் நரஸிஹ்மாசார்யர் ஸ்வாமி திருப்பாவையைப்பற்றி ஏற்கெனவே உபக்ரமித்துச் செய்ததன் தொடர்ச்சியாக இரண்டாவது உபந்யாஸம் செய்தார். அதன் ஸங்க்ரஹம்:—

முதற் பாட்டில் விதிக்கப்பட்ட ப்ரபத்திக்குப் பலத்தைச் சொல்ல ஆரம்பித்து, அதில் ப்ரபந்நனுக்கு இங்கிருக்குங்காலத்தில் ப்ரபத்திக்கு அடுத்த க்ஷணம் தொடங்கி மேல் நடத்தப்படும் நித்ய நைமித்திக கர்மங்களெல்லாம் கைங்கர்யத்தில் அடங்கியனவாதலால், அவைகளை முதலில் அருளிச்செய்கிறாள். இது, உபநிஷத்திலிருக்கும் "ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ, ப்ரஹ்மணா விபஶ்சிதா" என்கிற வாக்யத்திற்கு ஒத்திருக்கிறது. அது உபாஸகனைப்பற்றிச் சொன்னதாகையாலும், அவனுக்குக் காலாந்தரத்திலும் தேஶாந்தரத்திலும் பலமாகையாலும், அங்கு அப்படிச் சொல்லியிருக்கிறது. லோகாந்தரங்களிலும் க்ராமாந்தரங்களிலுமாகாதே திருவாய்ப்பாடியிற் பிறப்பது, அதிலும் ஆணாகவும் பாலைகளாகவும் வ்ருத்தைகளாகவுமிராமல் யௌவந பருவமுள்ளவர்களாயிருப்பதாகிற தங்கள் பாக்யத்தைக் கொண்டாடுகிறார்கள். ஸ்வாபதேஶத்திலோ - தங்கள் தலையிலே கர்த்தவ்ய பாரத்தை ஏறிட்டுக்கொள்ளாமல் பகவானுடைய தலையில் சுமையை வைத்து வாழும் சோம்பராய், "[illegible]" என்று பாக்யாதிஶயத்தை ஶ்லாகிக்கிறபடி. அவனாலே பேறென்றிருக்கின்ற நாமும் இனிப் பலத்துக்குக் கர்த்தவ்ய மொன்றுமில்லாது "[illegible]" என்கிறபடியே நித்யஸூரிகளைப்போல ஸ்வயம் ப்ரயோ



ஜந கைங்கர்ய பரராகி, நம்மால் ஆரம்பிக்கப்பட்ட மார்கழி நீராட்டமாகிற நோன்புக்குச் செய்யக்கடவ கார்யங்களை நாம் செய்த ப்ரபத்திக்குப் பலமாகக் கொள்வோம். "ப்ரியாய மம விஷ்ணோஶ்ச தேவதேவஸ்ய ஶார்ங்கிண: - [illegible]" என்கிறபடியே நமக்குஶேஷியான 'பாவை' என்று சொல்லப்படும் பெரியபிராட்டி திருவுள்ளமும் உகக்கும். பயிர்த்தலையில் குடிசை கட்டிக் காத்துக் கிடக்குங் கர்ஷகனைப்போல ஜநங்களின் ஆர்த்தநாதஞ் செவிப்படுவதற்காக க்ஷீராப்தியில் ம்ருதுவாக நித்ரைசெய்துகொண்டிருக்கும் பகவானுடைய வாய்ப்பையும், அதிலுண்டாகும் அவனுடைய ஸர்வாதிஶாயி ஸௌந்தர்யத்தையும் அநுபவிப்பதால் உண்டாகும் ப்ரீதி உள்ளடங்காமல் காநமாக வழிந்து புறப்படப் பாடித்திரிவோம். நெய் முதலிய ப்ராக்ருத வஸ்துக்களைப் புஜியோம்; வ்ரதத்திற்காக அதிகாலையில் நீராடி நாமாக நம்மை அலங்கரித்துக் கொள்ளமாட்டோம்; "[illegible]" என்கிறபடி அவன் தானே வந்து தன்னுடைய போக்த்ருத்வத்துக்காக அநுபவிப்பித்தால் அது செய்வோம். கர்மயோகம் ஜ்ஞாநயோகம் முதலிய உபாயங்களில் ப்ரவ்ருத்தியோம் என்று ஸ்வாபதேஶார்த்தம். அவன் தானே பரபக்தி முதலியவைகளை க்ருபைசெய்யுமாகில் அதுவும் பெறுவோம். செய்யத்தகாதவைகளைச் செய்வது, செய்யவேண்டியவைகளை விட்டுவிடுவது இவைகளைச் செய்யமாட்டோம். பாகவதர்களிடத்தில் அபசாரமான வார்த்தைகளைச் சொல்லமாட்டோம். அதிதிகளுக்கும் ஆசார்யன் முதலிய உபகாரகர்களுக்கும் ஶக்திக்குத்தக்கபடி உபகரித்து, உபாதாநாதிகளால் ஶாஸ்த்ரீயமாகக் கிடைத்த பொருளைப் பகவதாராதநத்தில் உபயோகப்படுத்தி நாங்கள் உஜ்ஜீவிக்கும் ப்ரகாரத்தை எண்ணி ப்ரீதி பூர்வகமாக எல்லாவற்றையுஞ் செய்வோம். இப்படி விலக்ஷணமான ஜ்ஞாநத்தை எங்களுக்கு '[illegible]' என்று அநுக்ரஹித்தது எங்களுடைய ஸ்வாமிநியான பிராட்டியே என்று அவளை ஸம்போதித்துச் சொல்லுகிறார்கள்.

---

ஸ்ரீ:

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

# பத்ராதிபரின் குறிப்புகள்.

ஓர் புதிய மதம்.

"[illegible]". சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியர், புதிதான ஓர் மதத்தின் சில ப்ரக்ரியைகளை எடுத்து உபபாதநம் செய்திருப்பதை எல்லாரும் பார்த்திருக்கலாம். அந்த மதம் சில பாஸ்சாத்ய வித்வாங்களால் ஏற்படுத்தப்பட்டு அங்கிருக்கும் அநேகம் ப்ரமுகர்களால் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. நமது தேஸத்திலும் சில ஆதுநிக வித்வாங்கள் இதை ஸாது என்று க்ரஹித்து இதைப் பரவச்செய்வதற்கு வேண்டிய உபாயங்களைத் தேடிவருவதாக அறிகிறோம். இப்படி பஹு ஜநங்களுடைய மநஸ்ஸை ஆவர்ஜநம் செய்யக்கூடியதான இந்த மதத்தின் குண தோஷங்களை நாம் விசாரிக்க வேண்டியது அவஸ்யமே. இந்த அபிப்ராயத்தைக்கொண்டே ஸ்ரீ. ராஜகோபாலாசாரியர் அதன் ப்ரக்ரியைகளை விஸதமாக எடுத்து விவரித்திருக்கிறார்.

இந்த ப்ரக்ரியைகளில் அநேகம் நம்முடைய ஸித்தாந்தத்திற்கு ஸம்மதமாகவே இருக்கின்றன. ஈஸ்வரன் ஒருவன் என்றும்; அவன் ஸர்வஸக்தன், தேஸத்தாலும் காலத்தாலும் வஸ்துவினாலும் அபரிச்சிந்நன், ஸர்வாந்தர்யாமியாக இருப்பதால் ஸர்வ ஸப்த



வாச்யன், ஸர்வ ஜகத் காரணன் என்றும்; ஈஸ்வர விலக்ஷணமாக ஆத்மா என்னும் ஒரு சித்வஸ்து உண்டு, அது ஸரீரத்தைக் காட்டிலும் பிந்நம், ப்ரதி ஸரீரமும் பிந்நம், அதற்கு ஜ்ஞாந ஸங்கோச விகாஸங்கள் உண்டு என்றும்; ஈஸ்வரனிடத்தில் பக்தியே இந்த மதத்துக்குத் தலைக்கட்டும் விஸேஷமென்றும் இதன் ப்ரக்ரியைகள் சொல்லுகின்றன. ஆனால், கர்ம பந்தமென்பது ஒன்று உண்டு, அப்ரத்யக்ஷமான ஸ்வர்க்கம் முதலிய வஸ்து உண்டு, தர்ம ஸம்ஸ்தாபநத்திற்காக ஈஸ்வரன் அவதரிக்கிறான், தன் ஸங்கல்பத்தால் அவனுக்கு விக்ரஹ வைஸிஷ்ட்யம் முதலியவை ஏற்படுகின்றன; இத்யாதிகளை இந்த மதம் ஒப்புக்கொள்ளவில்லை. இப்படி சில விஷயங்களை ஒப்புக்கொள்வதற்கும் மற்றவைகளை ஒப்புக்கொள்ளாததற்கும் காரணம், இவைகள் யுக்திக்கு விருத்தங்களாகவும், அவைகள் யுக்திக்கு ஒத்தவைகளாகவும் தோன்றுகின்றன வென்பதே. அதாவது - இந்த மத ப்ரவர்த்தகர்கள் யுக்த்யேகஸரணர்களாகப் புகுந்திருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. இவ்விதமாகக் கேவலம் யுக்த்யதீநமாக இருக்கும் மதம் ஸாதுவாகுமா? என்பதை மாத்திரம் நாம் இப்பொழுது ஆலோசிப்போம்.

யுக்தி என்பது, புருஷ புத்தியைக் காரணமாக உடையது. அந்த புத்தி, ப்ரமம் முதலியவைகளுக்கு உட்பட்டது என்பது அநுபவ ஸித்தம். நம்முடைய புத்தி வ்யாபாரத்தால் எதை ஸரியான ஜ்ஞாநமென்று ஒரு ஸமயத்தில் தெரிந்து கொள்ளுகிறோமோ, அதுவே மற்றொரு ஸமயத்தில் பிசகானதாகத் தோன்றுவதை நாம் எவ்வளவோ தடவை பார்த்திருக்கிறோம். மேலும், இந்தப் புத்தியின் கௌஸலத்தில் வ்யக்திகள்தோறும் ஏராளமான தாரதம்யங்கள் இருக்கின்றன. உத்க்ருஷ்டதமமான புத்தியை உடையவன் இவன்தான் என்று ஒருவனைக் குறித்து நாம் நிர்ணயிப்பதும் துஸ்ஸாத்யம். இவையெல்லாவற்றையும் அறிந்திருக்

கும் பாம்சாத்யர்கள் இவ்வளவு தோஷ துஷ்டமான புத்தியை மூலமாகக்கொண்டு நிற்கும் யுக்தியை மாத்திரம் அவலம்பித்து எப்படி ஒரு ஸித்தாந்தத்தை ஏற்படுத்தத் துணிகிறார்கள் என்பது ஆம்சர்யகரமாக இருக்கிறது.

தவிரவும், பதார்த்தங்களில் இந்த்ரிய கோசரங்களென்றும், இந்த்ரியங்களுக்கு எட்டாதவையென்றும் இரண்டு வகை உண்டு. இந்த்ரியகோசரங்களான பொருள்களின் விஷயத்தில் இந்த்ரிய ஸம்பந்தத்தால் உண்டாகும் ஜ்ஞானத்தை நாம் அவலம்பிப்பது ந்யாய்யமே. இந்த்ரியாகோசரங்களான பொருள்களின் விஷயத்தில் இந்த்ரிய ஜந்ய ஜ்ஞானத்தை நாம் எதிர்பார்ப்பது அஸங்கதமன்றோ? ஆத்ம வஸ்துவும் தைவமென்னும் பொருளும் நமது இந்த்ரியங்களுக்குப் புலப்பட்டவைகளன்றே! அவைகளின் ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தாலும் அநுமானத்தாலும் ஸாதிக்க யத்தநிப்பது ந்யாய விருத்தமேயாகும். "ஆஜ்ஞா தவாத்யலவதீ விஹிதா த்ரயீ ஸா தாம் ஹி ப்ரமாணயதி வைதிகஸார்த்தவாஹ: அதீந்த்ரியேऽர்த்தே - ப்ரத்யக்ஷமுக்யமிதராணி து பௌருஷேயரசனா ச தோஷரஹிதா ஹிதா ச வாணீ" [அதீந்த்ரியமான வஸ்து விஷயங்களில் பகவானாலேயே தம்முடைய கட்டளையாக ஏற்படுத்தப்பட்ட வேதமன்றோ ப்ரமாணம்? பெரியோர்கள் அப்படியே அங்கீகரித்திருக்கிறார்கள். மற்ற ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களெல்லாம், பௌருஷேயத்வ ப்ரயுக்தமான ப்ரமம் முதலிய தோஷங்களுடன் கூடியிருக்கிறபடியால், நம் பக்ஷத்தகுந்தவைகளல்ல. ஸ்ருதி ஒன்றே நமக்கு விஸ்வாஸ பாத்ரம்] என்று அதீந்த்ரிய வஸ்து விஷயத்தில் ஸ்ருதி ப்ராமாண்யத்தையே ஸ்ரீ ஆழ்வான் பலவாறாகக் கொண்டாடியிருக்கிறார்.

பாதராயண ப்ரப்ருதிகளும், கேவல தர்க்கத்தைக் கைப்பற்றி ஈம்வர விஷயகமான ஸித்தாந்தம் செய்பவர்களை அங்கீகரிக்க



வில்லை. "தர்க்காப்ரதிஷ்டாநாதபி", "அந்யதாऽநுமேயமிதி சேதேவமப்யநிர்மோக்ஷப்ரஸங்க:" [2 - 1 - 11 - 12] என்கிற ஸூத்ரங்களில் இதைக் காணலாம். ஸ்ரீ பாஷ்யகாரரும் "பௌருஷ புத்தி மூல தர்க்காணாமவஸ்தாநாத் தஸ்யைவ தேச காலாகார விசேஷ விஷயிக தர்க்க ஸம்ஸ்காரோத்ப்ரேக்ஷித தர்க்க நிஷ்டஸ்ய ஸம்பாவநயா தர்க்காப்ரதிஷ்டாந தோஷாநிர்மோக்ஷாதுபபாதிதா:; அதோऽதீந்த்ரியேऽர்த்தே சாஸ்த்ரமேவ ப்ரமாணம்" என்று தர்க்கத்தின் அப்ரதிஷ்டையையும், அதீந்த்ரியமான அர்த்தத்தில் ஶாஸ்த்ரமே ப்ரமாணமென்பதையும் நன்றாக த்ருடீகரணம் செய்திருக்கிறார். ஆகையால், ஈம்வரனைப் பற்றிய விஷயத்தில் வேதத்தை ஒப்புக்கொண்டு, அந்த வேதத்தின் உபப்ருஹ்மணத்திற்காக மாத்திரம் தர்க்கத்தை அவலம்பித்து, அது வழியாக ஆத்மோஜ்ஜீவந மார்க்கத்தை நாம் தேடுவதே ந்யாயத்திற்கு ஒத்திருக்கும். "ஆர்ஷம் தர்மோபதேசம் ச வேதஶாஸ்த்ராவிரோதிநா - யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர:" என்று மநுஸ்ம்ருதி சொல்லுகிறது.

ஏதோ சில அம்ஶங்களில் நமது ஶாஸ்த்ரத்தில் ஆபாதத: பூர்வோத்தர விரோதங்கள் ஆபாஸிக்கின்றனவென்றும், அந்த ஶாஸ்த்ரங்களிற் சொல்லியிருக்கும் சில விஷயங்கள் அநிஷ்டங்களாகவும் யுக்திக்குப் பொருந்தாதவைகளாகவும் இருக்கின்றனவென்றும் இத்யாதி காரணங்களைக் கொண்டுமாத்திரம் நாம் ஶாஸ்த்ரத்தை விலக்கிவிட்டு, இந்தப் புதிய மதம் போன்ற மதங்களைக் கைக்கொள்வது நம்முடைய ஹிதத்தின் பொருட்டு ஆகாது.

---

ஸ்ரீ அழகிய சிங்கர் திருமேனி.

சென்ற பத்துப் பதினைந்து தினங்களாக ஸ்ரீ அழகியசிங்கர் திருமேனி பாங்கில்லாமல் எழுந்தருளியிருக்கிறதாகக் கேள்விப்பட்டு அவரது திருவடியை ஆம்ரயித்த ஶிஷ்யர்களில் அநேகர் துக்காக்ராந்

தர்களாக இருக்கிறார்கள். ஸ்ரீ ஸ்வாமி, திருமேனி ஸ்வாஸ்த்யத்தை அடைந்து, ஸந்நிதியை அடுத்து வந்துசேரும் ஶிஷ்யவர்க்கத்தாரெல்லாருக்கும் ஆத்மோஜ்ஜீவந மார்க்கத்தைத் தேடக்கூடிய கௌஶலத்தைப் பெற்று, இன்னும் அநேகவர்ஷங்கள் எழுந்தருளியிருக்கும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் கடாக்ஷிக்க வேணுமென்பது எல்லாருடைய ப்ரார்த்தனையாக இருக்கையிலும், ஸ்வாமியின் வார்த்தகத்தையும் அஶக்தியையும் பார்க்கும் பொழுது அப்படிப் பட்ட நிஷ்பத்தி நேர்வதற்கு பலமான ஹேதுக்கள் இருக்கிறதாகத் தோன்றவில்லை. இது, அத்யந்தம் ஶோசிக்க வேண்டிய விஷயமே. ஆனால், அப்ரதீகார்யமாகவும் தைவாயத்தமாகவுமிருக்கும் விஷயத்தில் நாம் ஶோசிப்பதும் வீண். பகவத் ஸங்கல்பம் விபரீதமாக இருந்து விட்டால் நாம் என்ன செய்யலாம்? இந்த மாதிரி காலங்களில் நாம் ஆஶாஸிக்கவேண்டிய விஷயமொன்று உண்டு; அதை மாத்திரம் ப்ரார்த்திப்போம். அந்திமகால ப்ரயுக்தமான கரணங்களுடைய அபாடவத்தால் தமக்குப் பிறகு ஆஸ்தானத்துக்கு எழுந்தருள வேண்டிய ஸ்வாமியை நியமிப்பதில் கொஞ்சம் தவறுதல் நேர்வது ஸஹஜம். ஆஸ்தாநாநர்ஹர்களான அநேகம் பேர், ஸ்ரீ ஸ்வாமியின் அஶக்தியையும் தங்களுக்கு நேர்ந்திருக்கும் ஸாந்நிஹித்யத்தையும் அவலம்பித்துத் தங்களுக்கே நியமநமாகும்படி நிர்ப்பந்திக்கலாம். அம்மாதிரியான நிர்ப்பந்தங்கள் ஒன்றும் நேராமலும், வேறு எவ்விதமான தவறுதலுக்கும் இடமில்லாமலும், தகுந்த யோக்யதையுடன் கூடிய ஒரு ஸ்வாமியை ஆஸ்தானத்துக்கு எழுந்தருளச்செய்யும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் கடாக்ஷிக்கவேணும் என்பது தான் நாம் ப்ரார்த்திக்கவேண்டிய விஷயம். ஸ்வயே உபாயோ ஸர்வ க்ஷோணியே விஶேஷதோ விஸ்ருஜநீ ந விஶ்வஹிதஜநு ஸத்யஜநு ஸந்த்ரஶக்திக வ்யவஸாய வா ஸாமய யாவ நாதிசிரம்.

---

REGISTERED 3-MAY 1912 OFFICE ... OF BOOKS MADRAS.

ஸ்ரீ:.

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] பரீதாபி௵ சித்திரைமீ. [ஸஞ்சிகை 3.

## விஶிஷ்டாத்வைதம்.

### 8. ஸ்ரீ வைகுண்டம்.

சென்ற ஸஞ்சிகையில் 'பரதத்வமென்னும் ஸர்வேஶ்வரன் ஸமஸ்தமான ஜகத்தையும் உஜ்ஜீவிப்பிக்கும் பொருட்டு அநேக விதமாக ஆவிர்ப்பவித்து நிற்கிறான்' என்று சொல்லப்பட்டது. "ஆஶ்ரிதர் பலபிறப்பும் பிறவாதபடி தான் எந்தெந்த யோநியிலும் பிறக்கக்கடவனாய், அவர்கள் நாட்டில் பிறந்து படுமவை படாமைக்காகத் தான் பிறந்து படாதன படக்கடவனாய்" இருக்கிறான் புருஷோத்தமன் என்று ஆசார்யர்களின் அருளிச்செயல். இதுமாத்திர மன்று. "யச்சாபி ஸர்வபூதாநாம் பீஜம் ததஹமர்ஜுந" என்கிறபடி நினைந்த எல்லாப் பொருள்களுக்கும் வித்தாகவும், "ந ததஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூதம் சராசரம்" என்கிறபடியே ஸர்வவஸ்துக்களிலும் அந்தராத்மாவாகவும் பகவான் இருக்கிறானென்றும் நமது ஆப்தர்கள் சொல்லுகிறார்கள். இப்படி அந்தராத்மாவாக எப்பொழுதும் நமது

ஹ்ருதயத்தில் அவன் இருக்கையிலும், நாம் அவனை அறியாதவர்களாய் அலைவது மிகுந்த வருத்தத்திற்குக் காரணமே. ப்ரஜைகள் இவ்வளவு குருடர்களாகத் தங்கள் ஶ்ரேயஸ்ஸை அறியாமல் ஸம்ஸாரத்தில் உழல்வதைப் பார்த்து ஶ்ருதியே வருந்துகின்றது. “𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯 𑌨𑌿𑌧𑌿𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌮𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌉𑌪𑌯𑍍𑌯𑍁𑌪𑌰𑌿 𑌸𑌂𑌚𑌰𑌨𑍍𑌤𑍋 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌯𑍁𑌃 𑌏𑌵𑌮𑍇𑌵𑍇𑌮𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌅𑌹𑌰𑌹𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯 𑌏𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿; 𑌅𑌨𑍃𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌢𑌾𑌃”. பூமியில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நிதியை நிதியுடன் கூடிய க்ஷேத்ரங்களின் ஸ்வபாவ மறியாத ஜநங்கள் அந்த நிதியின்மீது எத்தனை தடவை ஸஞ்சரித்த போதிலும் அதை எப்படி அடைய மாட்டார்களோ, அப்படியே இந்த ப்ரஜைகள் ஹிரண்யநிதி போன்ற பரமபுருஷன் பேரில் ஸர்வ காலத்திலும் இருக்கையிலும் அவனை அறியாமலும் அடையாமலும் நாஶத்தை அடைகிறார்கள். அந்ருதம் என்னும் கர்மபந்தம் அவர்களை அப்படி மோஹிப்பித்துவிடுகிறது.

இப்படி அளவில்லாத கருணையுடன் ஜகத்தின் உஜ்ஜீவநார்த்தமாகவே பலவிதமாக ஆவிர்ப்பவித்து நிற்கும் பகவாந் ஒரு ஸ்தாந விஶேஷத்தில் விஶேஷித்து இருப்பதாகவும், பகவத் கடாக்ஷத்தால் ஸம்ஸார பந்தத்திலிருந்து நிவ்ருத்தியை அடையும் சேதநரெல்லாரும் அந்த ஸ்தாநத்திற்குப் போய் ஶாஶ்வதமாகப் பரமமான ஆநந்தத்தை அநுபவிப்பதாகவும் நமதுஸித்தாந்தம் சொல்லுகின்றது. அதைக் கொஞ்சம் விசாரிப்போம்.

அந்த ஸ்தாநத்திற்கு ஸ்ரீ வைகுண்டம் என்று பெயர். இதன் ஶப்தார்த்தமாவது:—வடமொழியில் “𑌕𑍁𑌣𑍍𑌠𑌿” என்று ஒரு வினை உண்டு. அதற்கு ‘𑌮𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌾𑌤𑌂’ அதாவது - ‘ஜ்ஞாநத்தைத் தடுப்பது’ என்று பொருள். அப்படி ஜ்ஞாநத்தைத் தடுக்கக்கூடிய கர்மப்ரஸங்க மற்று இருக்கும் நித்ய ஸூரிகள் விகுண்டர்களாவார். அவர்களுடைய ஸம்பந்தத்தால் வைகுண்டம் என்னும் பதம் இந்த ஸ்தாந விஶேஷத்தைக் காட்டுகின்றது. அது, ஶுத்தஸத்வம் என்னும் த்ரவ்யத்தால் அமைந்து நிற்கும்; “சேணுயர் வானம்” என்றும், “தெளிவிசும்பு” என்றும், “பொன்னுலகு” என்றும் சொல்லப்பட்ட வேறுபாட்டை யுடைத்தாய், ப்ரஹ்மாதி பதங்களெல்லாம் நரகதுல்யங்களாய்த் தோற்றும்படி அளவற்ற ஐஶ்வர்யங்களான போக்ய போகோபகரண போகஸ்தாநங்களுடன் கூடியது. அதன் இருப்பிடம்-பலகோடிக் கணக்காக இருக்கும் அண்டங்களும், அவைகளைத் தனித்தனியே சுற்றிநிற்கும் ஜலம் முதலாக ப்ரதாந தத்வமளவான ஆவரணங்களும், ஆகிய இவை யெல்லாவற்றிற்கும் அப்பால் வெளியில் இருக்கின்றது. அதற்குப் பரம்பதமென்றும் பெயருண்டு. எங்கே போனால் திரும்பிவருவதென்பது இல்லையோ அது பரம் என்று, பரஶப்தத்தின் அர்த்தம். “𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌹𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌕𑌾𑌰𑌂 𑌶𑍋𑌕𑌦𑍁𑌃𑌖𑌾𑌨 𑌶𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌃”. அதாவது - அங்கே போனவர்களுக்கு ஶோகம், வ்யதை, அவ்விடத்திலிருந்து நழுவுதல் முதலியவை கிடையாது. அதன் தேஜஸ்ஸோ, நாம் பார்க்கும் ஸூர்ய சந்த்ரர்களைவிட எவ்வளவோ மடங்கு அதிகமாகவும், தேவதைகள் தாநவர்கள் முதலியவர்களாலும் பார்க்கக்கூடாததாகவும் உள்ளது.

இப்படி ஒரு ஸ்தாநத்தைக் கல்பித்துக்கொண்டு விக்ரஹங்களுடன் கூடிய நித்யர் முக்தர் என்று சொல்லப்படும் ஜீவன்களுடன் ஸர்வேஶ்வரன் அங்கே எழுந்தருளியிருக்கிறான். அந்தத் திவ்யலோகத்தில் அநந்தங்களான ஜநபத நகர விமாந மண்டப கோபுராதி விபாகங்களும், “𑌸𑌹𑌸𑍍𑌰𑌸𑍍𑌥𑍂𑌣𑍇 𑌵𑌿𑌮𑌿𑌤𑍇 𑌦𑍃𑌢 𑌉𑌗𑍍𑌰𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑌧𑌿𑌦𑍇𑌵 𑌆𑌸𑍍𑌤𑍇” என்கிறபடி அவைகளுள் ப்ரதாநதமமாகத் திருமாமணி மண்டபம் என்று ஒரு மண்டபமும் உண்டாம். அந்தத் திருமாமணி மண்டபத்தில் அநந்த தேவதாத்மகமான ஒரு திவ்யயோக பர்யங்க விஶேஷமே இவனது திவ்யாஸநமாம். அங்கு இருக்கும் சேதநர்களுக்குப் பகவதபிமத விருத்தாசரணமே நேராது; ஜ்ஞாநஸங்கோசமென்பதே சிறிதும் ப்ரஸங்கியாது. அவர்கள் எல்லாரும், புராண புருஷனை

வைகுண்டநாதனை ஸதா தர்ஶநம் பண்ணிக்கொண்டு அவனை வானிளவரசனுகப் பெற்று வழுவிலா அடிமை செய்து வருவதையே வாழ்வாக உடைத்தானவர்கள். இதுதான், இதைப்பற்றிய நமது ஸித்தாந்தம்.

இதற்கு ப்ரமாணம் எது? என்று விசாரித்தால், மற்ற விஷயங்களிற் போலவே இதிலும் ஶ்ருதியே நமக்கு ப்ரமாணம் என்று ஏற்படும். "𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍" "𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍" "𑌪𑌾𑌦𑍋𑌽𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌸𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌂 𑌦𑌿𑌵𑌿" இத்யாதியான அநேக வாக்யங்கள் இதை விஶதமாகக் குறிக்கின்றன. ஸர்வேஶ்வரனுடைய விபூதிகள் அநந்தங்கள் என்றும், அவைகளில் ஒரு பாகம்தான் இந்தக் கார்யமான ஜகத் என்றும், மற்றும் ஒரு பெரும் பாகம் மேற்சொன்ன ஸ்தாந விஶேஷம் என்றும், இது கார்யமான ஜகத்துக்கு வெளிப்பட்டு நிற்கின்றது என்றும் இந்த வாக்யங்களின் அர்த்தம்; அதாவது - 'நாம் வஸிக்கும் லோகம் போன்ற லோகங்கள் அநேகம்; இவைகள் எல்லாம் ஒரு அண்டகடாஹத்துக்கு உட்பட்டவை; இப்படி எவ்வளவோ அண்டகடாஹங்கள் இருக்கின்றன; இவை யெல்லாவற்றையும் ஜலமயமான ஒருகோஶம் சுற்றிநிற்கின்றது; அதைச்சுற்றி அக்நி, அதைச்சுற்றி வாயு, அதைச்சுற்றி ஆகாஶம், அதைச்சுற்றி மஹத் என்கிற தத்வம், அதைச்சுற்றி அநந்தமான ப்ரதாநம் என்னும் தத்வம் இவ்வளவு ஆவரணங்கள் நிற்கின்றன; இதுவரையில் ப்ரக்ருதி மண்டலம்; இது ஒருபாகம்: இதற்கு வெளியில் நிற்பது எல்லாம் மற்றொருபாகம்' என்று ஏற்படுகிறது. "𑌪𑌾𑌦𑍋𑌽𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 - 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌸𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌂 𑌦𑌿𑌵𑌿". 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 - ப்ரக்ருதி மண்டலத்திற்கு உட்பட்டு நிற்கும் அசித் ஸம்ஸ்ருஷ்டரான சேதநரெல்லாம், 𑌪𑌾𑌦𑌃 - அம்ஶ மாத்திரம். 𑌦𑌿𑌵𑌿 - ஸமஷ்டி வ்யஷ்டி தத்வத்திற்கு வெளிப்பட்டு நிற்கும அப்ராக்ருத ஸ்தாந விஶேஷத்தில், 𑌅𑌸𑍍𑌯 𑌅𑌮𑍃𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌤𑍍 - பரமாத்மாவினுடைய விபூதி எவ்வளவோமடங்கு அதிகமானது. '𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌤𑍍' என்னுமிடத்தில் மூன்று என்று சொல்லியிருப்பது, அப்ராக்ருதமான போக்யம் போகஸ்தாநம் போகோ



பகரணம் இவைகளையாவது, ஜகத்திற்கு உட்பட்டிருக்கும் வஸ்துக்களுக்கு அபிமாநிகளாகப் பூஷணம் முதலிய ரூபத்தைப் பெற்று நிற்கும் நித்யர், பகவதநுபவ மாத்ர பரரான நித்ய ஸித்தர், முன்பு ஸம்ஸாரிகளாக இருந்து பின்பு விடப்பட்டவரான முக்தர், ஆக இம்மூன்று விபாகங்களையாவது குறிக்கிறது என்று ஆசார்யர்களின் விவரணம்.

இந்த ப்ரக்ருதி மண்டலத்தைத் தமஸ் என்று வ்யவஹரிப்பதும் உண்டு. "𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌭𑌾𑌤𑌿" [அங்கே ஸூர்யனுடைய தேஜஸ் மழுங்கிவிடும்] என்று சொல்லக்கூடிய அவ்வளவு தேஜோமயமான அந்த அப்ராக்ருத ஸ்தாநத்தைப் பார்த்தால், இந்த ப்ரக்ருதி மண்டலத்திற்கு உட்பட்டிருக்கும் வஸ்துவெல்லாம் அந்தகார மக்நமாகவே தோன்றும். ஆகையால், இந்த அப்ராக்ருத ஸ்தாநத்தை "𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍" [தமஸ்ஸுக்கு வெளிப்பட்டது] என்று சொல்லுகிறார்கள். ஶுத்த ஸத்வமான படியாலும் தமஸ்ஸுக்கு அதீதமென்றும் சொல்லலாம். இம்மாதிரியாகவே "𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑍇 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍" என்றும், "𑌯𑍋𑌽𑌸𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍" என்றும், "𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑍇 𑌪𑌰𑍇 𑌕𑍋𑌶𑍇 𑌵𑌿𑌰𑌜𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌮𑍍" என்றும், "𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌂 𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃" என்றும், "𑌤𑍇 𑌹 𑌨𑌾𑌕𑌂 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌃 𑌸𑌚𑌨𑍍𑌤 𑌯𑌤𑍍𑌰 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑌾𑌃" என்றும், "𑌕𑍍𑌷𑌯𑌨𑍍𑌤𑌮𑌸𑍍𑌯 𑌰𑌜𑌸𑌃 𑌪𑌰𑌾𑌕𑍇" என்றும், "𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍" என்றும், "𑌨𑌾𑌕𑌸𑍍𑌯 𑌪𑍃𑌷𑍍𑌠𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌤𑌾𑌂" என்றும் பஹுமுகமாக ஶ்ருதி இந்த ஸ்தாநவிஶேஷத்தைப்பற்றிச் சொல்லுகிறது.

இதிஹாஸ புராணுதிகளிலும் இதற்கு அநுகுணமான வாக்யங்கள் காணப்படுகின்றன. மஹாபாரதத்தில் "𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌕𑌾𑌮𑌚𑌾𑌰𑍀𑌣𑌿 𑌵𑌿𑌮𑌾𑌨𑌾𑌨𑌿 𑌸𑌭𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 - 𑌆𑌕𑍍𑌰𑍀𑌡𑌾 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌪𑌦𑍍𑌮𑌿𑌨𑍍𑌯𑌶𑍍𑌚𑌾𑌮𑌲𑍋𑌦𑌕𑌾𑌃 - 𑌏𑌤𑍇 𑌵𑍈 𑌨𑌿𑌰𑌯𑌾𑌸𑍍𑌤𑌾𑌤 𑌸𑍍𑌥𑌾𑌨

[illegible]" [இஷ்டப்படி யெல்லாம் ஸஞ்சரிக்கக்கூடிய விமாநங்களென்ன, ஸபைகளென்ன, நிர்மலமான தீர்த்தத்தாலும் ஆஹ்லாதகரமான தாமரஸ புஷ்பங்களாலும் நிறைந்த வாபிகளென்ன இவைகளும், இன்னும் இந்த லோகத்தில் எவை யெவைகளை நாம் போக்யங்களாக எண்ணுகிறோமோ, அப்படிப்பட்ட ரமணீயங்களான வஸ்துக்களும், இந்த ஸ்தாந விசேஷத்தைப் பார்க்குமளவில் நரகதுல்யங்களாகின்றன] என்றும், "[illegible]" [அங்கே போனபிறகு துக்க ஸம்பந்தமே யில்லை, திரும்பி வருவது என்பதும் கிடையாது] என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றுமொரு இடத்தில் தேவதைகள் பகவானைப்பார்த்துப் பின்வருமாறு ப்ரார்த்திக்கிறதைப் பார்க்கிறோம்: "[illegible]" [ஹே ப்ரபோ! மஹாயோகிகளாலும் அறியக்கூடாததாயும், வேதத்தால் மாத்திரம் வேத்யமாயும், நிரதிசயாநந்தமயமாயுமுள்ள உம்முடைய அஜரமான திவ்யஸ்தாநத்திற்கு நீர் போம். ஒவ்வொரு கல்பத்திலும் உமக்கு அபிமதமாகவும் அநுரூபமாகவு மிருக்கும் மூர்த்தியில் ஆவிர்ப்பவித்து ப்ரபந்நரான எங்களை ரக்ஷிக்கவேணும்.] அரண்ய பர்வாவில் தர்ம புத்ரரைப் பார்த்து ஆர்ஷ்டிஷேணர் பின்வருமாறு சொல்லுகிறார்:— "[illegible]" [சதுர்முக ப்ரஹ்மாவின் ஸ்தாநத்தைக் காட்டிலும் மேற்பட்டு நிற்கும் இந்தப் பரமமான ஸ்தாநம் மஹத்தான ஜ்யோதிஸ்ஸுடன் ஜ்வலிக்கிறது. தேவதைகளும் அதைப் பார்க்க முடியாது. ஸூர்யன் அக்நி இவர்களுடைய தேஜஸ்ஸை யெல்லாம் அதிக்ரமித்து நிற்கிறது, அதன் ப்ரகாசம். அங்கே போய் மறுபடியும் இந்த லோகத்திற்குத் திரும்பிவருவது என்பதே இல்லை.]



ஸ்ரீவத்ஸ சிஹ்ந மிஸ்ரர் என்னும் கூரத்தாழ்வான், எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குணங்களைச் சொல்ல உபக்ரமித்து ஸ்ரீவைகுண்ட ஸ்தவம் என்னும் ஒரு ஸ்தோத்ரத்தைச் செய்தருளி யிருக்கிறார். அதில் பரமபதத்தைப் பற்றி வர்ணிக்குமிடத்தில், அதன் அநுஸந்தாநத்தால் தமக்கு உண்டான ஆநந்தம் பெருகி வழிந்ததுபோல நிற்கும் ஐந்து ஸ்லோகத்தைக் காணலாம்.

"[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥"

பரம யோகிகளுடைய வாங்மநஸ்ஸுக்குக் கூட அபரிச்சேத்ய மான ஸ்வரூப ஸ்வபாவத்தை உடையதாம் அந்த ஸ்தாநம்; அது, இவ்வளவு ஆநந்தத்துடன் கூடினது, இவ்வளவு தேஜஸ்ஸுள்ளது, இப்படிப்பட்டது, அப்படிப்பட்டது, தாத்ருக், ஸாத்ருக என்று வர்ணிப்பது எல்லாம் அதன் அபரிச்சிந்ந ஸ்வரூபத்துக்கு அநுகுண மாகுமோ? ஶ்ருதி சொல்லியிருக்கிறபடி அது தமஸ்ஸுக்கு அதீதம் என்றும், அத்யத்புதமாகவும் அதிஸுந்தரமாகவும் அளவற்ற ஆநந்தத்துக்கு ஹேதுவாகவும் இருக்கிறது என்றும், த்ரைலோக்யாதிபத்யத்தை வஹிக்கும் ப்ரஹ்ம ருத்ரே ந்த்ரார்களென்ன ஸநகாதி மஹா யோகிகளென்ன இவர்களாலும் எட்டக்கூடாதது என்றும், அதைவிட மஹநீயமான வேறு ஸ்தாநம் கிடையாது என்றும், அதன் வைபவத்தைப் பார்க்குமளவில் ஜ்யோதிஷ்டோமாதி கர்ம ஸாத்யமான ஸ்வர்க்காதி ஸுகங்களெல்லாம் மிகவும் துச்சமாகின்றன என்றும், கர்மயோக ஜ்ஞாந யோக பக்தியோக நிஷ்பந்நர்களே அதை அடையத்தகுந்தவர்கள் என்றுமன்றோ நாம் அறிய வேண்டும்? ஸர்வ விதத்திலும் ஸங்குசிதமான நம்முடைய ஜ்ஞாநத்தைக்கொண்டு அதைப் பரிச்சேதிக்க முயல்வது மிகவும் பரிஹாஸாஸ்பதமே யாகும்.

இப்படி பஹுமுகமாகக் கூறப்பட்டிருக்கும் திவ்யமான ஸ்தாநத்தைப் பற்றி அநேக சோத்யங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. சிலர் 'ப்ரக்ருதியே அக்ஷரம் என்னும் பெயர் பூண்டு ஒரு பரிணாம விஶேஷத்தை அடைந்து ஈஶ்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும் போக ஸ்தாநம் ஆகின்றது' என்றும், இன்னும் சிலர் 'பகவானுடைய ஸ்வரூபமே விசித்ர ஶக்தி வஶத்தால் திவ்ய லோகமாக மாறி நிற்கின்றது' என்றும், மற்றும் சிலர் 'இந்தத் திவ்யஸ்தாநம், பகவானுடைய ஷாட்குண்யத்தின் பரிணாமம்' என்றும் சொல்லுகிறார்கள். இந்தப்பக்ஷங்கள் வாக்யங்களுக்கு விருத்தமாகிறபடியால் ஆசார்யர்கள் இவையொன்றையும் அங்கீகரியாமல், 'இது ஶுத்த ஸத்வ மென்னும் ஒரு த்ரவ்யத்தால் அமைந்தது' என்றே நிர்ணயம் செய்திருக்கிறார்கள்.



இது ஸம்பந்தமாக இந்த ஸ்தாநத்தைப் பற்றி ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீ வைகுண்டகத்யம் என்னும் மித கத்யத்தில் விஶேஷித்து அநேக அம்ஶங்களை விவரித்திருப்பதை நாம் கொஞ்சம் விசாரிக்கவேண்டும். அந்த ஸ்தாநத்தில் சிறந்த வ்ருக்ஷங்க ளடங்கிய திவ்யோத்யாநங்கள் அநேகமும், திவ்ய வாபிகளும், திவ்ய க்ரீடா ஶைலங்களும், திவ்ய லதா மண்டபங்களும் இருக்கின்றனவென்றும், குயிலின் கூவுதலும், வண்டுகளின் ஶப்தமும், ஹம்ஸங்களின் த்வநியும் அங்கே நிறைந்திருக்கின்றன வென்றும், இத்யாதியான போக்ய வஸ்து ஜாதத்தால் பூர்ணமானது அந்த ஸ்தாந மென்றும் அந்தக் கத்யத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்பொழுது, க்ஷுத்ர ஸுகத்துக்கு ஆதிக்யம் ஏற்படுத்தப்பட்டதுபோலத் தோன்றும். இவையெல்லாம் அப்ராக்ருதம் என்பதை நாம் மறக்கக்கூடாது. தவிரவும், இந்தக் கத்யம் உபதேஶ முகத்தால் ஶிஷ்ய ஶிக்ஷணார்த்தம் ப்ரவ்ருத்தித்தது என்பதை மநஸ்ஸில் வைத்துக் கொள்ள வேண்டும். அதிற் சொல்லியிருக்கும் அநுஸந்தாந ப்ரகாரம் அவிச்சிந்ந ப்ரவாஹ ரூபமாகப் பகவானையே பார்த்திருப்பதாக நாம் த்யாநித்தால், ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிறபடி அம்ருத ஸமுத்ரத்தில் அமிழ்ந்து நிற்கும் ஸர்வ அவயவங்களுடன் கூடினவராகப் பரம ஸுகத்தை அநுபவிக்கலாம் என்பதற்கு ஐயமே இல்லை. அநாதி காலமாக ஸம்ஸாரத்தில் உழன்று வரும் நமக்கு எவை எவை போக்யமாகத் தோன்றுமோ அவையெல்லாம் அப்ராக்ருத ஸ்வரூபத்துடன் அவ்விடத்தில் நிறைந்திருப்பதாக அருளிச்செய்திருப்பதே, விஷய ஸுகத்தையே பெரிதாக நினைத்திருக்கும் சேதநருக்குக்கூட அத்யந்தம் ஆவர்ஜக மாகிறது. ஸ்வாமி இந்தக் கத்ய ஆரம்பத்தில் ப்ரதிஜ்ஞை செய்திருப்பதும், 'மஹத்தான ப்ரீதி புரஸ்ஸரமாகவும் ஆவலுடனும் நாம் அநுஸந்தாநஞ் செய்வதற்காக இது ஏற்படுத்தப்பட்டது' என்பதை விளக்குகின்றது. "யாமுநார்யஸுதாம்போதிமவகாஹ்ய யதாமதி - ஆதாய பக்தியோகாக்யம் ரத்நம் ஸந்தர்ஶயாம்யஹம்" [யாமுநாசார்யரின் திவ்யஸூக்திகளாகிற அம்ருத ஸாகரத்தில் மூழ்கி அதனடியிற்கிடக்கும் பக்தி

யோகம் என்னும் ரத்நத்தை எடுத்து வெளிப்படுத்துகிறேன்] என்று முதலில் படித்திருக்கிறது. இங்கு 'பக்தியோகம்' என்னும் ஶப்தம் ஸ்வயம் ப்ரயோஜநமாகச் செய்யும் பகவதநுஸந்தாநத்தைக் குறிக்கும் என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனுடைய திருவுள்ளம்; இது, உபாய பூர்த்தி செய்தவரின் அநுஸந்தாந க்ரமமே தவிர மற்றொரு பலத்திற்கு ஸாதநமாக விவக்ஷிக்கப்படவில்லை யாதலாலும், இந்த மாதிரியான சோத்யங்களுக்கு அவகாஶமில்லை.

இந்த லோகத்திலிருக்கும் க்ஷுத்ர ஸுகங்களைப் பெரிதாக எண்ணி அவைகளில் உழன்று கொண்டிருக்கும் நாம், சில ஸமயங்களில் பரமாநந்த ஹேதுவாக இருக்கும் பரலோக வைபவத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு, நம்முடைய சிறிய புத்தியைக்கொண்டு அதன் ஸ்வரூபத்தை அறிய முயல்வதையும், ஹார்த்தமாக நமக்கு அது விஷயமாகத் தாஹம் நேர்வதையும், மிஸ்ஸிஸ் ஹெமன்ஸு என்னும் ஒரு ஆங்க்லபௌம மஹாகவி, தாயாருக்கும் அவளுடைய ப்ரஜையாகிற ஒரு சிறிய குழந்தைக்கும் நடக்கும் ஸம்வாத ரூபமாக விவரித்திருக்கிறாள்.

"அம்மா! ஏதோ ஒரு உத்தமஸ்தாநம் ஓரிடத்தி லிருப்பதாகவும், அதிலிருக்கும் என் போன்றவர்களெல்லாம் அழுகையே இல்லாமல் ஸதா ஸந்துஷ்டர்களாக இருக்கிறதாகவும் நீர் அடிக்கடி சொல்லுகிறீரே! அதை நாம் தேடிப்போகக் கூடாதா? அது எங்கே இருக்கிறது? நல்ல புஷ்பங்கள் மலருமிடத்தி லிருக்கிறதோ? அது பெரிய வ்ருக்ஷங்கள் வளரும் இடமோ? நல்ல பலங்கள் கிடைக்கும் இடமோ? ஸமுத்ர மத்யத்தில் நறுமணத்துடன் வீசுங் காற்றும் விசித்ர வர்ணங்களையுடைய சிறகுடன் பறக்கும் பக்ஷியும் நிறைந்திருக்கும் த்வீபங்கள் தானோ அந்த ஸ்தாநம்? இல்லாவிட்டால், பஹு தூரத்தில் ஸ்வர்ண மணல்களையுடைய நதிகளும், காந்தியைக் கக்கும் ரத்நங்களும், பவழக்கொடிகளிருக்கும் கரையில் ப்ரகாஶிக்கும் முத்துக்களும் நிரம்பியிருக்கும் ஒரு ஸ்தாநத்தில் இருக்கிறதோ? அம்மா! அதை எனக்குச் சொல்லவேணும்" என்று கேட்ட தன் குழந்தையைப் பார்த்துப் பின்வருமாறு மாதா உத்தரமளிக்கிறாள்:



"Eye hath not seen it, my gentle boy,!
Ear hath not heard its deep songs of joy;
Dreams cannot picture a world so fair;
Sorrow and death may not enter there;
Time doth not breathe on its fadeless bloom,
Far beyond the clouds and beyond the tomb,—
It is there, it is there, my child!"

"என் கண்மணியே! அந்த ஸ்தாநத்தை இந்தக் கண் பார்த்ததில்லை; அங்கிருக்கும் கம்பீரமான காநத்தை இந்தக்காது கேட்டதில்லை; அதி ஸுந்தரமான அந்த ஸ்தாநத்தை ஸ்வப்நத்திலும் நாம் பார்க்கமுடியாது; ஜரா மரணாதி துக்கம் என்பதே அங்கு ப்ரவேஶிக்காது: ஸார்வகாலிகமான விகாஸத்துடன் கூடிய அந்த இடத்தில் காலத்தின் ப்ராபவம் செல்லுகிறதில்லை. மேகங்களுக்கு அப்புறத்தில், ஆகாஶத்திற்குமேல், அந்த லோகத்தில் இருக்கிறது அந்த இடம்."

நமது புத்தியைக்கொண்டு அந்தத் திவ்யஸ்தாநத்தின் வைபவத்தை அறிய முயலும் நாம் எவ்விதத்தில் இந்த ஶிஶுவை விடச் சிறந்தவர்? "ந ஸந்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம் - ஹ்ருதா மநீஷா மநஸாபிக்லுப்தோ ய ஏதத்விதுரம்ருதாஸ்தே பவந்தி" என்றன்றோ ஸ்ருதி கதறுகின்றது?

பத்ராதிபர்.

ஸ்ரீ:

# ஸ்ரீ பாகவத தனிஶ்லோகி.

௨௫. இதி கோப்ய: ப்ரகாயந்த்ய: ப்ரலபந்த்யஶ்ச சித்ரதா ।
ருருது: ஸுஸ்வரம் ராஜந் க்ருஷ்ணதர்ஶநலாலஸா: ॥

ஶுக மஹர்ஷி, கோபிகைகள் ஸ்ரீ க்ருஷ்ணனைப் பிரிந்து நோவுபட்டபடியைத் தனித்தனியே பேசி, பகவத் விஷயத்தில் இப்படிப்பட்ட தசை உண்டாவது துர்லபமாகையாலும், இது தமக்கு ஆகர்ஷகமாக இருந்தபடியாலும், சேர்த்து அநுஸந்தித்து அவர்களைக் கொண்டாடுகிறார். இப்படியே ஸ்ரீ வால்மீகி பகவானும், பிராட்டி அஶோக வநிகையில் பெருமாளைப் பிரிந்து படும் பாட்டைப் பரக்கப் பேசி, "ததாகதாம் தாம் வ்யதிதாம்" என்று துக்கத்தின் மிகுதியைச் சொல்லி, "அநிந்திதாம்" என்று பிறகு அவளைக் கொண்டாடினனிறே!

இதி - "மதுரா மதுராலாபா:" "பாவினல்ல மென்மொழியாள், பண்ணினன்ன மென் மொழியாள்" என்று சொல்லுகிறபடியே ஸாதாரணமான உக்தி மாத்ரத்திலும் இனிமை விஞ்சியிருக்கும்; அதிலும் விஷயமும் ஸ்ரீ க்ருஷ்ணன்; இவர்களும் யௌவநபருவமுள்ளவர்கள்; "தடங்கடல் வண்ணனைத் தாள் நயந்து ஆர்வத்தால் அவர் புலம்பிய புலம்பல்" என்கிறபடி அவன்திறத்தில் அபிநிவேஶாதிஶயத்தாலே பிறந்த சொல்லாகையாலே போக்யதை அளவு பட்டிருக்குமோ? ஆகையால், அது மஹர்ஷியையுங்கூட மேல்நோக்கிப் போகாமல் பிற்காலிக்கும்படி செய்கிறபடியால், அதையே மறுபடி அநுவதிக்கிறான் 'இதி' என்று. பரம யோகிகளுக்கும் வாங்மநஸா பரிச்சேத்ய ஸ்வ



161991 008

ரூபஸ்வபாவமான பகவானுடைய பரத்வமும், உபாஸகனுக்கும் ஜந்மாந்தரங்களால் விளம்பமில்லாமல் பலத்தைக் கொடுக்கவற்றாய் "ஜந்ம கர்ம ச மே திவ்யம்" என்று அவன்தானே கொண்டாடும்படியான அவதார ரஹஸ்யமும், அதற்கு ஸௌலப்யமும் [illegible]களுக்கு அநாயாஸேந "[illegible]", "[illegible]", "[illegible]" என்று பேசும்படியிருந்ததே! என்று அர்த்தகௌரவத்தாலே இதைத் திரும்பவும் அநுவதிக்கிறானாகவுமாம்.

'இப்படி அநுஸந்தித்தவர்கள்தான் யார்? பராஶராதி மஹர்ஷிகளில் ஒருவரோ? "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ண னெம்பெருமான்" என்று இருக்கும் ஆழ்வார்களில் ஒருவரோ?' என்றால், 'அவர்களில் ஒருவரும் அல்லர்; "கோப்ய:" அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்தில் பிறந்த பெண்பிள்ளைகள்' என்கிறார். "இரந்துரைப்ப துண்டு வாழி ஏம நீர் நிறத்தமா, வரந்தரும் திருக்குறிப்பில் வைத்ததாகில் மன்னு சீர், பரந்த சிந்தை யொன்றி நின்று நின்ன பாத பங்கயம், நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே!", "பவது மம பரஸ்மிந் ஶேமுஷீ பக்திரூபா", "[illegible] பரபக்தியுக்தம் மாம் குருஷ்வ" என்று ப்ரார்த்திக்கப்பட்டதாயும், "[illegible]", "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோத்யாந ஸமாதிபி: - நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே" என்று கொண்டாடப்பட்டதாயும் இருக்கிற பக்த்யதிஶயம் இவர்களுக்குத் தன்னடையே இருக்கின்றதன்றோ? யாருக்கு வரக்கூடிய தசை யாருக்கு உண்டாயிற்று? என்று மஹர்ஷி விஸ்மயப்படுகிறான். கோபிகளும், இந்தப் பக்த்யதிஶயம் தங்களுக்கு இருப்பதை, "[illegible]", "பதிஸுதாந்வய ப்ராத்ருபாந்தவாநதிவிலங்க்ய

[illegible]

வ்யதிதா வ்யதாமதா:" என்று இப்படி பஹுமுகங்களாய்ப் பேசி யிருக்கிறார்களன்றோ? "பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச - பவத்கதம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகாநி ச" என்று மஹா ப்ராஜ்ஞனான ஸ்ரீ விபீஷணாழ்வான் வார்த்தையை அநுஸரித்திருக்கிறதன்றோ அஜ்ஞர்களிற் கடையரான இவர்களின் வார்த்தை?

"ப்ரகாயந்த்ய:" - விசேஷமாகப் பாடிக்கொண்டும். "மத்பக்தா யத்ர காயந்தி தத்ர திஷ்டாமி நாரத" என்கிற ப்ரமாண கதியை அநுஸந்தித்துப் பாடத்தொடங்கினார்களென்றாகவுமாம். தங்களுக்கு ப்ரணய கோபம் தலையெடுத்து நிற்கும்; அப்பொழுது அதைத் தணிப்பதற்காக அவனும் "மருளைக் கொடு பாடி வந்தில்லம் புகுந்தீர், காமனெனப் பாடி வந்தில்லம் புகுந்தீர்" என்று சொல்லுகிறபடியே, கானத்தைச் செய்துகொண்டே தங்களில்லத்திற் புகுருமே; தாங்களும் அந்தக் கானத்தைக் கேட்டவாறே "தூவலம்புரியுடைய திருமால் தூயவாயிற் குழலோசை வழியே, எங்குங் காவலும் கடந்து கயிறு மாலையாகி வந்து கவிழ்ந்து நின்றனரே" என்று சொல்லுகிறபடியே தங்கள் ப்ரணயரோஷங்களைக் குடியோட விட்டு அவன் கருத்துக்கு இசைந்தல்லவோ நிற்கிறார்கள்? இதைத் தாங்களே "நைவளமொன்றாராயா நம்மை நோக்கா நாணினார்போ லிறையே நயங்கள் பின்னும், செய்வளவி லென் மனமும் கண்ணு மோடி எம்பெருமான் திருவடிக்கீழணைய இப்பால், கைவளையும் மேகலையும் காணேன் கண்டேன்" என்று சொல்லி யிருக்கிறார்களே! ஆகையால், தனது சரணாகதி பலிக்கக் கண்ட ஸ்ரீ விபீஷணாழ்வான் "ஸமுத்ரம் ராகவோ ராஜா ஶரணம் கந்துமர்ஹதி" என்று பெருமாளையும் செய்யும்படி விதித்தாப்போலே, தங்கள் திறத்தில் அவனுக்குப் பலிக்கக்கண்ட இந்தக் கானத்தை அவன் திறத்தில் தாங்களும் அநுஷ்டித்தார்கள் என்றாகவுமாம். "பாடுங் குயில்காள் ஈதென்ன பாடல் நல்வேங்கட, நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால் வந்து பாடுமின், ஆடுங் கருளக் கொடியுடை



யார் வந்தருள்செய்து, கூடுவராயிடின் கூவுநும் பாட்டுக்கள் கேட்டுமே" என்று அஸஹ்யமான தசையில் அயலார் பாடக் கேட்பது தவிரத் தான் பாட ஸம்பாவனை இல்லையாகையால், இவர்கள் பக்தி பரீவாஹமாய்ச் சொன்ன சொற்களைப் பாட்டுப்போலே இனிமையா யிருப்பதாகப் பாவிக்கிறார் என்றாகவுமாம். இவர்கள் தாம் பண்ணைவென்ற இன்சொல் மங்கையர்களான படியால், ஏதேனும் ஒரு வார்த்தை சொன்னாலும், அது ஸர்வ லக்ஷண ஸம்பந்நமான கானத்தினும் இனியதாயிருக்கும்; அவர்களே பகவத் குணங்களைச் சொன்னால் இனிதாயிருக்கச் சொல்லவேண்டுமோ? என்று கருத்து. ப்ரகர்ஷேண காயந்த்ய: - ப்ரகாயந்த்ய: அதாவது - "மரங்களு மிரங்கும் வகை மணிவண்ணவோ வென்று கூவுமால்" என்கிறபடியே இவர்கள் கானத்தில் சேதநாசேதநமான ஸர்வ வஸ்துக்களும் ஸ்ரீ ராம விரஹத்தில் பட்ட பாடெல்லாம் பட்டன என்கிறது. அன்றிக்கே, ப்ரக்ருஷ்டம் யதா ததா காயந்த்ய:; அதாவது - அவனுடைய குணம் முதலியவைகள் நிறம் பெறும்படியாகப் பாடினார்களென்றாகவுமாம். எம்பெருமான் திருவுள்ளத்திற்கு மேன்மேல் அதிகமாக உகப்புண்டாகும்படி பாடினார்களென்றாகவுமாம். "கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம் - ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாபஸர்ப்பதி" என்று 'கோவிந்த' என்கிற உக்தி மாத்ரத்தை உண்டு அறுக்க மாட்டாத சரண்யன் க்ருபைக்கு இப்படி இவர்கள் பாடினது மிகை என்பது சொல்லவும் வேண்டுமோ? என்று கருத்து.

ப்ருவந்த்யஶ்சித்ரயா - விசித்ரமாகப் பிதற்றிக் கொண்டும். அதாவது - ஒருபொழுது "க்ருஷ்ணோऽஹம் பஶ்யத கதிம்", "இன வாயர் தலைவன் யானே யென்னும்" என்றும், மற்றொரு ஸமயத்தில் "கிம் தே க்ருதம் க்ஷிதி தப:", "மண்ணையிருந்து துழாவி வாமனன் மண்ணிது" என்றும் அவனுடைய ஸம்பந்தமுள்ள பதார்த்தங்களைக் கண்டு துக்கம் தலையெடுத்துக் கதறியும், சேதநாசேதந விபாகமறக் கண்டதடைய "மாலாய்ப் பிறந்த

நம்பியை மாலே செய்யும் மணாளனை, ஏலாப் பொய்களுரைப் பானை யிங்கே போதக் கண்டீரே" என்று வினவியும் ஒரு நியதி இல்லாமல் பிதற்றினர்கள் என்கிறது. அன்றிக்கே, லோகத்தில் விரஹிகள் படியில்லாமையாலே வியக்கத்தக்கதாய் என்றாகவுமாம். "பின்னை கொல் நிலமா மகள்கொல் திருமகள்கொல் பிறந்திட்டாள், என்ன மாயங்கொலோ இவள் நெடுமாலென்றே நின்று கூவுமால்," "முன்னம் நோற்ற விதிகொலோ முகில்வண்ணன் மாயங்கொலோ," "நங்கைமீர் நீரு மோர்பெண் பெற்று நல்கினீர், எங்ஙனே சொல்லுகேன் யான் பெற்ற வேழையை, செய்கின்ற தொன்றறியேனே" என்கிறபடியே தாய்மாராலும் உயிர்த்தோழிகளாலும் இன்னதென்று கண்டறியக் கூடாதபடி அதி விசித்ரமாய் ப்ரலாபங்களைச் செய்கிறார்க ளென்றாகவுமாம். அஜ்ஞர்களைப்போல "த்ருஷ்டோ வ: கச்சித் அச்வத்த வ்ருக்ஷ" என்று அறிவில்லாத வஸ்துக்களைக் கேட்டும், வேதாந்த ஜ்ஞாநிகளைப் போல "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என்று சொல்லியும், "ஸோஹம் ப்ரஹ்மாஸ்மி" என்று அநுஸந்திக்கும் உபாஸகரைப் போல "க்ருஷ்ணோஹம்" என்று பேசியும், காமுகைகளைப் போல "க்ருஷ்ண ப்ரியம், ஸர்வஸ்யாநாத்யவஸ்தா:" என்று சொல்லியும், அநேக விதமாகப் பிதற்றுகிறார்கள் என்கிறதாகவுமாம்.

நிராசா: ஸர்வஸ: - இப்படிப் பல ஸாதநமென்று நிஶ்சயிக்கப்பட்ட உபாயமும் விபலமாய்ப் போன பிறகு அநவாப்தி தலையெடுத்து அழத் தொடங்கினார்கள். அவ்விடத்திலும் அவர்கள் பேச்சில் ஸ்வதஸ்ஸித்தமான மாதுர்யம் மாறவில்லை என்கிறார். அன்றிக்கே, அவனுக்குப் பரமபதத்தில் இருப்பும் அஸஹ்யமாம்படி முக்த கண்டராய் அழுதார்கள் என்கிறதாகவுமாம்.

ராஜந் - ஹே ராஜாவே! இப்படி அவர்களுடைய ப்ரேமாதிஶயத்தில் ஈடுபட்டு மேல் ஒன்றும் தோன்றாமல் தான் தியங்கும்படியை "ஏவம் வக்ஷ்யாமி" என்று ஸ்ரீ நாரத பகவாந்



வ்யாஜத்தாலே மறைத்தாப்போல மறைக்கிறார். அன்றிக்கே, "சிந்திப்பார்க் கென்னுள்ளம் தேனூறி எப்பொழுதும் தித்திக்குமே" என்கிறபடியே அவர்களை நினைக்கும்போது தமக்கு மிகுந்த ரஸாநுபவம் பிறக்க, அதை "ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத" என்கிறபடியே தாம் ஒருவராய் அநுபவிக்க எண்ணமில்லாமல் ராஜாவையும் கூட்டிக்கொண்டு இந்த ரஸத்தை அநுபவிக்கக் கருதி "தொண்டரெல்லாரும் வாரீர் தொழுது தொழுது நின்றார்த்தும், வண்டார் தண்ணந்துழாயான் மாதவன் பூதங்கள் மண்மேல், பண்டான்பாடி நின்றாடிப் பரந்து திரிகின்றனவே" என்கிறாப்போல ராஜந் என்று அழைக்கிறாராகவுமாம்.

இவ்வளவும் எதற்காகச் செய்தார்கள்? என்றால், "க்ருஷ்ண தர்சநலாலஸா:" ஸ்ரீ க்ருஷ்ணனைத் தங்கள் கண்களாற் காணவேணுமென்னும் ஆசையினாற் செய்தார்கள். அன்றிக்கே, 'பெண்ணின் வருத்தமறியாதவனாகையால் நம்மை விட்டகன்றான்; இனி நாம் அவனை விட்டுப் பிரிந்து படும் துயரத்தைப் பார்த்தானாகில் விட்டு அகலான்' என்கிற ஆசையினால் அவன் தங்களைப் பார்க்க வேண்டுமென்கிற எண்ணத்தினாற் செய்தார்கள் என்றாகவுமாம்.

இப்படி மஹர்ஷியும் கொண்டாடும்படி விஸ்மயநீயமான நடத்தையை யுடையவர்க ளானார்கள் என்று அவர்கள் கொண்டாடப் படுகிறார்கள்.

சே. நரஸிம்ஹாசார்யர்.

ஸ்ரீ:

# லக்ஷ்மணனுடைய நிஷ்டை.

(தொடர்ச்சி.)

பெருமாள், காட்டுக்குச் சென்றவிடத்தில், 'நீரும் நிழலும் வாய்த்திருப்பதொரு ப்ரதேஶத்தைப் பார்த்துப் பர்ணஶாலையைக் கட்டும்' என்று இளையபெருமாளுக்கு நியமிக்க, அவர் 'நம்முடைய தலையில் ஸ்வாதந்த்ர்யத்தை வைத்தபோதே பெருமாள் நம்மைக் கைவிட்டார்' என்று மனவருத்தப்பட்டதாக அருளிச்செய்யப்பட் டிருக்கிறது. "ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மண: ஸம்யதாஞ்ஜலி: - ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்தம் இதம் வசநமப்ரவீத்". ஏவமுக்தஸ்து ராமேண - இப்படிப் பெருமாளாற் சொல்லப்பட்டவராகக் கொண்டு, அதாவது -'இதற்குமுன் நம்மால் ஏதோ குறையென்றிருந்தோம். இப்பொழுது பெருமாளே இப்படிச் சொல்லுகிறார்; இது நமது ஸ்வரூபத்துக்கு விரோதமல்லவா? நமது ஸ்வரூபம் என்று ஒன்று உண்டோ?' என்கிற பாரதந்த்ர்யத்தையே லக்ஷணமாக உடையவன் என்று தாத்பர்யம். ஸம்யதாஞ்ஜலி: - நமது ஸ்வரூபத்தைக் காப்பாற்றுகிறதற்காக ஸர்வாபிமத ஸாதநமான அஞ்ஜலியைச் செய்துகொண்டு கையும் அஞ்ஜலியுமாக. ஸீதாஸமக்ஷம் - அஞ்ஜலி வீண் போகாமல், பெருமாளுக்கும் ஆஶ்ரிதர்களிடத்தில் இன்னும் க்ருபையை அதிகமாக உண்டு பண்ணும் ஸீதா பிராட்டி ஸந்நிதியில். காகுத்ஸ்தம் - பிராட்டி ஸந்நிதியை விட அதிகமாக இருக்கும் ககுத்ஸ்த வம்ஶத்தில் அவதரித்திருக்கும் பெருமாளை. இதம் வசநமப்ரவீத் - இப்படிப்பட்ட வார்த்தையைச் சொல்லுகிறார்.

---



"பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷஶதம் ஸ்திதே - ஸ்வயம் து ருசிரே தேஶே க்ரியதாமிதி மாம் வத" [நீர் ஸ்வதந்த்ரர்; உம்மைப் போல அல்லவே அடியேன். எனக்குப் பாரதந்த்ர்யமே இருப்பு; அது இல்லாமற்போனால் நான் இல்லை; ஆகையால், கைங்கர்யம் செய்யுமளவில், 'நான், என்னுடையது' என்கிற தோஷம் கலவாதபடி தேவரீருக்கு உசிதமாகத் தோன்றுமிடத்தில் 'இப்படிச் செய்' என்று கைங்கர்யங்களில் ஏவிக்கொள்ளவேண்டும்.] அந்தக் கைங்கர்யம் செய்வதிலும் இன்ன கைங்கர்யம்தான், இன்ன காலத்தில்தான் என்று கிடையாது. "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஶ்ச தே - பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே". இதனால் ஸகல உபநிஷத் ஸாரமாயும் மந்த்ர ரத்நமாயுமிருக்கிற த்வயத்தின் இரண்டாவது பாதியின் அர்த்தம் அநுஷ்டித்துக் காட்டப்பட்டது என்று ஏற்படுகிறது; ஸர்வ தேஶ ஸர்வ கால ஸர்வ அவஸ்தைகளிலும் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் கைங்கர்யம் செய்ய ப்ரார்த்திக்கிறார் என்கிறபடி.

மற்றுமொரு இடத்தில்: — சிறிய திருவடி என்னும் ஹநுமான் லக்ஷ்மணனைப் பார்த்து, 'நீர் இவருக்கு என்ன ஆவீர்?' என்ன, 'பெருமாள் ஒரு விதமாய் நினைத்திருப்பர், நான் ஒரு விதமாய் நினைத்திருக்கிறேன்' என்று லக்ஷ்மணர் மறுமொழி கூறினார். 'அது எப்படி?' என்று சிறிய திருவடி கேட்க, 'அவர் என்னைத் தமது பின்பிறந்தவன் என்று நினைத்திருப்பர்; நான் அந்த முறையை விடப் பெருமானுடைய திருக்கல்யாண குணங்களுக்குத் தோற்று அடியேன் என்று இருப்பேன்' என்கிற அர்த்தமுள்ள "அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர்தாஸ்யமுபாகத:" என்கிற வாக்யத்தை லக்ஷ்மணன் அருளிச் செய்தார். "பரவாநஸ்மி" என்கிற வாக்யத்தில் 'ஸ்வாபாவிகமான ஆத்ம ஸ்வரூபத்துக்குத் தகுந்த அடியேன்' [அதாவது - பெருமாளுக்கு ஸமஸ்த கல்யாணகுணங்கள் இருக்கிற காரணமல்லாமல்

ஸ்வரூபத்தாலேயே பாரதந்த்ரன் என்கிறபடி] என்று வெளியிடப்பட்டது; "गुणैर्दास्यमुपागतः" என்கிற வாக்யத்தில் 'குணங்களாலேயும் ஈடுபட்டுத் தாஸனாக இருக்கிறேன்' என்று வெளியிடப்பட்டது.

"माता पिता भ्राता निवासश्शरणं सुहृच्च" என்கிற ஸுபாலோபநிஷத் வாக்ய ப்ரகாரம், பகவாந் நமக்கு ஸர்வ வித பந்து, அவனுக்கும் நமக்கும் இருக்கும் ஸம்பந்தம் அநேக விதம் என்பதை இளையபெருமாள் பின் வரும் ச்லோகத்தில் ப்ரகடநம் செய்திருக்கிறார். "अहं तावन्महाराजे पितृत्वं नोपलक्षये - भ्राता भर्ता च बन्धुश्च पिता च मम राघवः" அதாவது - தனக்குத் தசரத சக்ரவர்த்தி தகப்பனார் அல்லர்; ஸ்ரீ ராகவன்தான் தனக்கு ஸஹோதரன், யஜமாநன், தகப்பன், ஸர்வவிதபந்து.

ஸ்ரீ ராகவனும் இளையபெருமாளைப் பற்றி அப்படியே திருவுள்ளம் பற்றியிருப்பதை நாம் பார்க்கிறோம். "भावज्ञेन कृतज्ञेन धर्मज्ञेन च लक्ष्मण - त्वया पुत्रेण धर्मात्मा न संवृत्तः पिता मम". भावज्ञेन - 'பர்ணசாலை கட்டும் விஷயத்தில், மஹர்ஷிகள் முதலானவர்களை எழுந்தருளப் பண்ணி வார்த்தை சொல்வதற்கு ஒரு இடமும், அக்நி சாலைக்கு ஒரு இடமும் இன்னும் இம்மாதிரியான கார்யங்களுக்கு உபயோகியான மற்ற இடமும் இருக்க வேண்டுமென்றுதான் பெருமாள் அருளிச்செய்வர்; பிராட்டியும் தாமும் ஏகாந்தமாக இருக்கிறதற்கு ஒரு இடம் செய்யவேண்டுமென்று சொல்லமாட்டார்' என்று அறிந்து பெருமாள் திருவுள்ளத்தின்படி நடக்கிறவரானபடியால், 'பாவம் அறிந்தவர்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. कृतज्ञेन - பெருமாள் நினைவு மாத்திரமல்ல; இதற்குமுன்பு பெருமாளுக்குத் தகுந்தபடி எவ்விதம் நடக்கவேண்டுமென்று தசரதர் நினைத்திருப்பரோ, அந்த நினைவுக்கு அநுகுணமாக அவர் என்ன என்ன செய்திருப்பரோ, அப்படி யெல்லாம் செய்வர்



என்கிறபடி. धर्मज्ञेन - கேவலம் பின் பிறந்தவன் என்கிற ஸம்பந்தத்தால் மாத்திரமல்ல; இது செய்யவேண்டியது [கர்த்தவ்யம்] என்று செய்வர். त्वया पुत्रेण - நீரே புத்ரர்; தசரதரின் வருத்தத்தைப் போக்கினவர்; 'நமக்குப்பின்பு பெருமாளைப் பாதுகாப்பார் இல்லையே!' என்கிற மனக்கவலை அவருக்கு இல்லாமலிருக்கும்படி நீரே செய்வீர் என்று தாத்பர்யம். धर्मात्मा - எனக்கு உம்மை வைத்துவிட்டுப்போன பரம தார்மிகன் தசரதன். न संवृत्तः पिता मम - எனக்கு பிதா போகவில்லை; போனால் உமக்குப்போனாரோ என்னவோ?

இளைய பெருமாள், அத்யந்தம் விரக்தர்; ஐச்வர்யத்தை ஒருகாலும் ப்ரயோஜநமாக எண்ணமாட்டார்; ஆத்மாநுபவமும் அவருக்கு ஒரு புருஷார்த்தமாகத் தோன்றவில்லை; நிரதிசயாநந்தமாகிய நித்யமான மோக்ஷம்கூட ராமனை விட்டு ப்ரயோஜநமில்லையென்று நினைத்தவர். "न देवलोकाक्रमणं नामरत्वमहं वृणे - ऐश्वर्यं वाऽपि लोकानां कामये न त्वया विना" ஸ்ரீராமனாகிற பகவானே ஸகலவிதமான புருஷார்த்தமும் என்று இளையபெருமாள் தமது அநுஷ்டாநத்தால் விசதமாகக் காண்பித்திருக்கிறார்.

பகவானாகிற சேஷிக்கு அதிசயத்தைத் தேடுமவர்கள் தம் தமக்கு வரும் கெடுதிகளைப் பார்க்க மாட்டார்கள். ஒரு ஸமயத்தில் பெருமாளுக்கும் சதுர்முக தூதனாகிற யமனுக்கும் அரண்மனையில் மந்த்ராலோசனை நடந்துகொண்டிருந்தது. அந்தக் காலத்தில் ஒருவரும் உள்ளே வாராமலிருப்பதற்காக, இளைய பெருமாளை க்ருஹ த்வாரத்தில் நியமித்து, 'யாரேனும் எப்படிப்பட்டவராயிருந்தாலும் அப்போது உள்ளே வந்தால், அவர் மரணமடைய வேண்டும்' என்று ஏற்கெனவே பெருமாளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்பொழுது துர்வாஸ மஹர்ஷி அங்கே வந்து, 'நான் உள்ளே போகவேண்டும்' என்ன, 'இவரைத் தடுத்துப் பெருமாளிடத்தில் அவருக்குக் கோபம்வந்து அபராதப்படும்படி

செய்வதை விட, "ஏகஸ்ய மரணம் மேஸ்து மா பூத் ஸர்வவிநாஶநம்" என்கிறபடி நான் முடிவதே நலம்' என்று நினைத்து இளையபெருமாள் தானே மந்த்ராலோசனை நடக்குமிடத்துக்குப் போய்த் துர்வாஸ மஹர்ஷி வந்திருப்பதைத் தெரிவித்தார். துர்வாஸஸ் உள்ளே போய் வார்த்தைசொல்லித் திரும்பிப்போன பிற்பாடு 'இந்த ப்ரதிஜ்ஞை விஷயத்தில் என்ன செய்வது ந்யாயம்?' என்கிற மநஸ்ஸின் வ்யாகுலத்துடன் ஸ்ரீராமன் இருக்கும்பொழுது, "யதி ப்ரீதிர் மஹாராஜ யத்யநுக்ராஹ்யதா மயி - ஜஹி மாம் நிர்விஶங்கஸ் த்வம் ப்ரதிஜ்ஞாம் அநுபாலய" [தேவரீர் என்னிடத்தில் எவ்வளவு விச்வாஸமாயும் க்ருபையுடனும் இருந்தாலும், தேவரீர் ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றவேண்டும்; என்னைத் தேவரீர் விடவேண்டும்] என்றார்.

இளைய பெருமாளை 'லக்ஷ்மி ஸம்பந்ந:' 'லக்ஷ்மி வர்த்தந:' என்று வால்மீகி மஹர்ஷி சொல்லியிருக்கிறார். 'நீர் யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்துகொள்ளாவிட்டால் நாம் முடிசூட்ட மாட்டோம்' என்று பெருமாள் சொல்லியும், அதற்கு இளைய பெருமாள் ஒப்புக்கொள்ளவில்லை. ராஜ்யம் இல்லாத இவரை இப்படி சொல்லியிருப்பது, விபீஷணன் ஸகல பந்துக்களையும் க்ருஹத்தையும் ராஜ்யத்தையும் விட்டுப் பெருமாளை ஶரணமடைய வந்தபொழுது "அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்" என்று சொல்லியிருப்பதோடு ஒத்து இருக்கிறது; அதாவது - பகவத் கைங்கர்யமாகிற நிலைநின்ற இந்த ஸம்பத்துத் தான் ந்யாயமான ஸம்பத்து; மற்றது ஸம்பத்து ஆகாது என்று தாத்பர்யம். அந்த ஸம்பத்தையுடைய மஹாபாகவதர்கள் இவ்விதம் நடப்பார்கள் என்று இளைய பெருமாள் நன்றாக அநுஷ்டித்துக் காட்டியிருக்கிறார் என்று நாம் சொல்லலாம்.

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ:

# பீஷ்மர்.

"ந யஸ்ய ஸூக்ஷ்மாஶ்ச ஸாமர்த்ய விவேக்தும் ஶக்நோதி தே ப்ருஷ்டம் யதாவச் ச ஸ்வார்த்தஶக்தி: வணிஜாம் வாஸ்யம் ஸ்த்ரியாஶ்ச ஸதாம் ச வர்த்தநாம் ஸதீநாம் ॥

ப்ரஜாஸு ஸர்வாஸு ப்ரஸித்தம் ஸத்யவ்ரதம் யுதிஷ்டிரோ யஸ்ய கிரோ ந ஜஹ்யாச் - உக்தோ ஜிதேந்த்ரியோ ஹி வர்ணேஷு தர்மாந் ஶக்நோதி விவேக்தும் ஏதத் ॥

ஸ்வதர்மாச்சாஸ்த்ரீய: ஶக்நோதி நிர்த்தேஷ்டும் கர்ணஸ்யாத்மஜேந நிஶ்ரேய: காம: - ந த்வம்தே தாம் நிஶ்சிதம் யுதிஷ்டிர ஸர்வஜ்ஞேந தே ப்ருஷ்டம் ப்ரவீதி ॥"

நம்முடைய இதிஹாஸ புராணாதிகளில் தர்மாதர்ம விவேகமுள்ளவராகவும், அநுஷ்டாநத்திலும் தர்மத்தை விட்டு வழுவாதவராகவும் சொல்லப்பட்டிருக்கும் மஹான்களுக்குள் மிகச் சிறந்தவர் பீஷ்மர். குருக்ஷேத்ர யுத்தம் ஆன பிறகு ராஜ்யம் முழுமையும் கைக்குக் கிடைத்தும் ப்ரஜா த்ரோஹத்திலிருந்து பயந்தவராகத் தர்மமூடராய் மஹத்தான க்லேஶத்தை அநுபவித்துக்கொண்டிருந்த யுதிஷ்டிரருக்குத் தர்மோபதேஶம் செய்தவர் இந்தப் பீஷ்மரே. "வர்ணேஷு ஸ்வதர்ம விஹிதாஸு யதாவதர்த்தம் । வைராக்ய ராஜதர்மாபத்தர்ம மோக்ஷதர்மயதார்த்தம் । ஸ்த்ரீதர்ம ராஜதர்மாந் மோக்ஷதர்மாந் விவாதஶ: ॥ தாநதர்மாந் ஶமதர்மாந் வேதவ்யாஸமதம் ॥ ஸ்ரீதர்மாந் ஶமவ்ருத்தாந் ஆசாரவ்யவஹாரமத: । நாநாவ்ரதேந காமமோக்ஷாம்ஶ்ச ஸஹோபாயாந் ப்ரயோஜநே । திஹாஸேஷு வர்ணயாமாஸ தத்வவித் ॥" என்று ஒரு தர்மமும்

மிச்சம் இல்லாமல் ஸகல விதமான வைதிக தர்மங்களையும் ஸ்மார்த்த தர்மங்களையும் மஹர்ஷி ஸங்கத்தின் நடுவில் தாம் ஶரபஞ்ஜரத்தில் படுத்து உத்தராயண ப்ரதீக்ஷராக முமூர்ஷுவாக இருக்கையிலும் தமது நோவைப் பாராட்டாமல் தர்மத்தை நிலைநிறுத்தவேணுமென்கிற ஹார்த்தமான எண்ணத்துடன் தர்மோபதேஶஞ் செய்தவர் இவரன்றோ? 'இவ்வளவு தர்மஜ்ஞானமும் பாப பயமும் அவரிடத்தில் நிறைந்திருந்தும் துஷ்ட சாரித்ரனை துர்யோதநனுக்கு வஶப்பட்டு, துஶ்ஶாஸந ப்ரப்ருதிகளைக்கொண்டு அந்தத் துர்யோதநன் த்ரௌபதீவிஷயமாகப் பெருத்த அக்ரமங்களைச் செய்வித்தபொழுது பராங்முகராக இருந்துவிட்டாரே! இதுதான் தர்மம் அறிந்தவரின் லக்ஷணமோ?' என்கிற அதிஶங்கை பாரத கதையைப் படிக்கும் ஜநங்களின் மநஸ்ஸில் உண்டாகும். அதைப்பற்றி இப்பொழுது கொஞ்சம் விசாரிப்போம்.

சூதாட்டம் ஆடி ஸர்வஸ்வத்தையும் இழந்து விதி வஶத்தால் தர்மபுத்ரன் துர்யோதநனுக்கு அடிமை பூண்டவுடன், மந்தபுத்தியான துர்யோதநன், மிகவும் ஸந்துஷ்டனாய், தனது பின்பிறந்தவனை துஶ்ஶாஸநனைக்கொண்டு தனது அடிமையாகிற தர்மராஜனின் பார்யையாகவும் பதிவ்ரதோத்தமையாகவுமுள்ள த்ரௌபதியை ரஜஸ்வலையாக இருக்கையிலும் பலாத்காரமாக ஸபைக்கு வருவித்துப் பேசத்தகாத பேச்செல்லாம் பேசினான். தூர்த்தனை துஶ்ஶாஸநனும் 'அயி த்ரௌபதி! நீ ரஜஸ்வலையாக இருந்தாலென்ன? ஒரு வஸ்த்ர முள்ளவளாக இருந்தாலென்ன? வஸ்த்ரமே இல்லாவிட்டாலென்ன? சூதாட்டத்தில் ஜயிக்கப்பட்டுவிட்டபடியால் எங்களுடைய அடிமை நீ; ஆகையால் ஸர்வதோமுகமான ப்ரபுத்வம் உன்னிடத்தில் எங்களுக்கு உண்டு' என்று சொல்லி ஸபை நடுவில் பலவாறாக அவளை அவமானஞ் செய்கையில், அவள் லஜ்ஜை தாங்கமாட்டாமல் க்ருஷ்ணனையும் ஜிஷ்ணுவையும் கூவிக் கதறியழுது, பிறகு க்ஷத்ரியஸ்த்ரீ யானபடியால் தமது ஜாதிக்கு இயற்கையாக இருக்கும் தைர்யத்தை அவலம்பித்துப் பின்வருமாறு ஸபையிலிருந்தவர்களைப் பார்த்து ப்ரஶ்நஞ் செய்தாள். "இந்த ஸபையிலிருக்கும் எல்லாரும் எனது குருவாகவும் குருதுல்யராகவும் இருக்கிறார்களே! அவர்கள் முன்னிலையில் இப்படி நான் நிற்பது ந்யாயமோ? ஶாஸ்த்ரம் படித்து அநுஷ்டாந பூர்த்தியுள்ள கௌரவ ஶ்ரேஷ்டர்கள் எனக்கு ந்யாயத்



தைச் சொல்லவேணும். அநார்யர்களாகவும் பிறரை மோசஞ் செய்வதையே தொழிலாக வுடையவர்களாகவுமுள்ள இந்தத் துஷ்டாத்மாக்களால் என்னுடைய பதி தமது இஷ்டத்துக்கு விருத்தமாக இழுக்கப்பட்டுப் பலபெயரால் ஒன்று சேர்ந்து ஜயிக்கப்பட்டால் அது ஜயமாகுமோ? மனைவியைப் பந்தயம்வைத்துச் சொக்கட்டானாடுவது முண்டோ? அப்படி யாயினும் தாம் அடிமைபூண்ட பிறகு என்னைப் பந்தயம் வைத்து ஆடுவதும் செல்லுமோ? இந்த ஸபையில் நிறைந்திருக்கும் பெரியோர்கள் இவை யெல்லாவற்றையும் ஆலோசித்து எனக்கு ந்யாயங் கொடுக்கவேணும். தர்மத்தை மீறி அக்ரமத்தைச் செய்யும் இந்தத் துஷ்டர்களைப் பார்த்து நிற்கும் பீஷ்மர் த்ரோணாசார்யர் விதுரர் இவர்கள் எல்லாருக்கும் ஸத்வம் இல்லாமற் போய்விட்டதோ? ஹா தைவமே! என் செய்வேன்?" என்று அழுதாள்.

இதைக் கேட்ட ஸப்யர்கள் மிகவும் மனங்கலங்கி ஜ்ஞாநத்தாலும் வயஸ்ஸாலும் வ்ருத்தரான பீஷ்மர் முகத்தைப் பார்க்க, பீஷ்மர் த்ரௌபதியைப் பார்த்து அவள் கேட்ட ப்ரஶ்நத்திற்குத் தம்மால் யதாவத்தாக மறுமொழி கூறக் கூடவில்லையென்றும், ஸர்வைஶ்வர்யமுங்கூடின ராஜ்யம் முழுவதையுங் கைதவறவிட்டாலும் தர்மத்தை ஒருபொழுதும் விடாமலிருக்கும் ஸ்வபாவமுள்ள தர்மபுத்ரரே 'ஜயிக்கப்பட்டுப் போய்விட்டேன்' என்று ஒப்புக்கொண்டிருப்பதைப் பார்க்கும்பொழுது தமக்கு ஒரு விதமான நிர்ணயமும் தோன்றவில்லை யென்றும் "[illegible]", "[illegible]" என்கிற வாக்யத்துடன் கூடிய மூன்று ஶ்லோகங்களைச் சொன்னார். இந்த மூன்று ஶ்லோகங்களும் ஆரம்பத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

தவிரவும், துர்யோதந ப்ரப்ருதிகள், பீஷ்மர் ஸந்திக்தமாக இப்படிப் பதில் சொன்னதைக் கேட்டுத் தங்களுடைய தௌராத்ம்யத்தைப் பதின்மடங்கு அதிகமாக வெளியிட்டு, எவ்விதமான குற்றத்தையும் அறியாத த்ரௌபதியை ஸதஸ்ஸில் இன்னும் பரிபவப்படுத்தும் பொருட்டு அவளுடைய வஸ்த்ரத்தை அபஹரிக்க யத்நித்து, அந்த யத்நத்தில் பகவத் ஸங்கல்பத்தால் பக்நோத்ஸாஹர்களாகவும் அங்கு வந்திருந்த

ஸர்வ ஜநங்களாலும் திக்கரிக்கப்பட்டவர்களாகவும் அவர்கள் நின்ற பொழுது, மறுபடியும் த்ரௌபதி ஸதஸ்யர்களைப்பார்த்து, "க்ஷத்ரிய தர்மத்தில் பதிவ்ரதையாக இருக்கும் ஸ்த்ரீயை ஸபைக்குக் கொண்டு வருவது பெரிய அதர்மமென்று படிக்கப்பட்டிருக்கிறதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேனே! அந்தத் தர்மம் கௌரவர்கள் விஷயத்தில் லுப்தமாகி விட்டதோ? ஹே ஸதஸ்யர்களே! நான் ந்யாயப்படி அடிமை ஆகிவிட்டேனா? இல்லையா? என்பதை நீங்கள் விதிக்கவேணும். உங்களுடைய நிர்ணயப்படி நான் நடக்கிறேன். ஸ்பஷ்டமாகச்சொல்ல க்ருபை செய்யவேணும் [ப்ரூத தாஸீமதாஸீம் வா தத் கரிஷ்யாமி கௌரவா:]" என்று அதி தைந்யத்துடன் கேட்டாள். அப்பொழுதும் முன் சொன்னது போலவே பீஷ்மர், "உக்தவாநஸ்மி கல்யாணி யதைஷ பரமா மதி: । ந விவேக்தும் ச தே ப்ரச்நமிமம் சக்நோமி நிச்சயாத்" என்று தமக்கு ஒன்றும் தோன்றவில்லை யென்று சொல்லிவிட்டு, "யுதிஷ்டிரஸ்து ப்ரச்நேऽஸ்மிந் ப்ரமாணமிதி மே மதி: । அஜிதாம் வா ஜிதாம் வேதி ஸ்வயம் வ்யாஹர்துமர்ஹதி" [அவருடைய ப்ரச்நத்திற்கு ஸமாதாநத்தைத் தர்மபுத்ரரே சொல்ல அர்ஹர்] என்று சொல்லிவிட்டு விரதாளுர்.

இதுவா தர்மஜ்ஞர்களின் மார்க்கம்? பெருங்காற்றில் அகப்பட்ட கதளீ வ்ருக்ஷம்போலத் துராத்மாக்களின் கையில் அகப்பட்டு அநாதையாக ஸப்யர்களைப் பார்த்து ந்யாயாந்யாய விவேகத்திற்காகக் கதறுகிற ஒரு ராஜஸ்த்ரீக்கு இப்படிச் சொல்வதும் ஒரு ஸமாதாநமாகுமோ? ஸர்வமும் தெரிந்த பீஷ்மருக்கு இது தகுந்ததோ? வ்யபதிஷ்டரான இவர் இதைப்பிசகு என்று முதலில் கண்டித்தால் துர்யோதநன் மேன்மேல் அக்ரமங்களில் ப்ரவ்ருத்திப்பனு? ஸாமாந்ய ஜநங்கள் விஷயத்தில் இந்த மாதிரியான ஸமயங்களில் தர்மம் சொல்லாமலிருப்பது ஓர் சிறிய குற்றமானுலும், வ்யபதிஷ்டரான இவர் விஷயத்தில் இது ஓர் பெரிய பிசகு என்றே தோன்றுகிறது.

துர்யோதநனுடைய தம்பியர்களில் விகர்ணன் என்று நற்குணமுடையான் ஒருவன் உண்டு; அவனுக்கு இந்தக் குரு வ்ருத்தர்களின் நடவடிக்கை கொஞ்சமேனும் ருசிக்கவில்லை. அப்பொழுது த்ரௌபதியின் கஷ்டதசையையும் தன்னுடைய ப்ராதாக்களின் உபர்யுபரி வ்ருத்தியாகும் தௌராத்ம்யத்தையும் பார்த்து ஸஹியாமல், "[ஹா ராஜ்ஞாம் ஸர்வேஷாம் விநாசாய க்ஷயம் யாந்தி ஸபா ஸ்ம தே ஹதம் வந்தாவலிப்த்ரும் நாஹம் க்ஷந்தும் ஸஹே] பீஷ்மர் முதலிய குருவ்ருத்தர்கள் வார்த்தகத்தால் மோஹத்தை அடைந்திருந்தாலும் கௌரவர்களெல்லார்க்கும் ஆசார்யர்களாக இருக்கும் த்ரோணர் க்ருபர் இவர்கள் கூட இப்பொழுது த்ரௌபதியின் ப்ரச்நத்திற்குத் தக்க பதில்சொல்லாமல் இருக்கக்கூடுமோ?" என்று பலதடவை ப்ரோத்ஸாஹநஞ் செய்தும், ஒருவரும் அசையாம லிருப்பதைக் கண்டு கோபங்கொண்டு சீறி வரும் ஸர்ப்பம்போலப் பின்வருமாறு பேசத் தொடங்கினுன். "வ்யாஹ்ருத வ்யாஹ்ருதிர் வாக்யம் தா வா க்ஷமம் ந । தே நு ந்யாய்யம் யதாத்ராஹம் தத்வ வக்ஷ்யாமி கௌரவா:" - 'ஸப்யர்காள்! நீங்கள் பதில் சொன்னுலும் சொல்லாவிட்டாலும், எனக்கு உசிதமாகத் தோன்றுவதை நான் சொல்லுகிறேன். முதலாவது, வேட்டையாடுவது, மதுபாநம், சொக்கட்டான் விளையாடுவது, ஸ்த்ரீபோகம் இந்த நான்கில் எதிலாவது ஓர் அரசன் அளவுக்கு விஞ்சி ஆஸக்தியை வைத்து விட்டால் அவன் அது விஷயமாகச் செய்வது எல்லாம் அதர்மமாகிவிடு மென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறுர்கள். துர்யோதநன் முதலானவர்கள் அந்தக் கோஷ்டியில் சேருகிறபடியால் அவர்கள் செய்த கார்யம் சாஸ்த்ர ஸம்மதமாகாது; அவர்கள் அடைந்த ஜயமும் ஜயமன்று. இரண்டாவது - த்ரௌபதீ, தர்ம புத்ரருக்கே சொந்தமல்லள்; ஆகையால், அவர் அவளை ஆட்டத்தில் பந்தயம் வைத்தது ஏற்காது. மூன்ருவது - தர்மபுத்ரர் தம்மை முதலில் பந்தயம் வைத்துத் தாம் தோல்வி யடைந்த பிறகு இவளைப் பந்தயம் வைத்தார். தாம் ஜயிக்கப்பட்டபிறகு அவருக்குச் சொந்தமானதும் உண்டோ? நான்காவது - தர்மபுத்ரர் தாமாகவே இவளைப் பந்தயம் வைக்கவில்லை; பந்தயத்தை அபேக்ஷிக்கும் மோசக்காரரான எதிரிகளால் ஏவப்பட்டு இவளை வைத்தார். இவை யெல்லாவற்றையும் ஆலோசிக்கும் நான், த்ரௌபதியை ஜயித்து விட்டதாக இவர்கள் சொல்லிக்கொள்வதைப் பெரிய அக்ரமமாகவே நினைக்கிறேன்.'

இவ்வாறு விகர்ணன் சிறிதும் பின்வாங்காமற் கூறிய இந்த வார்த்தையைக் கேட்டு, தாங்களும் இந்த மாதிரியாகவே உணர்ந்

தாம், தைரியம் போதாததனால் பயந்திருந்த மற்ற ஸப்யர்கள், விகர்ணனை ஸபாஜநம் செய்து துர்யோதநனை மிகவும் நிந்தித்தார்கள். ஆனால், அஶக்தர்களின் ஆக்ரோஶம் என்ன பயன் பொருட்டு ஆகும்? பீஷ்மர் இந்த மாதிரி ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அது வீண்போகுமோ?

இந்த ஸதஸ்ஸில், தர்மாதர்மம் தெரிந்தும் அதை வெளியிடக் கூடிய தைர்யம் பொருந்தியுமுள்ள இன்னும் ஒரு மஹாத்மா இருந்தார். அவர், துர்யோதநாதிகளின் சிறிய தகப்பனாகிய விதுரர் என்பவரே. அவருக்கு இந்த அக்ரமம் கொஞ்சமேனும் ஸஹிக்கக் கூடவில்லை. "த்ரௌபதீ ப்ரஶ்நமுக்த்வைவம் ரோரவீதி ஹ்யநாதவத் । ந ச விப்ரூத தம் ப்ரஶ்நம் ஸப்யா தர்மோ(அ)த்ர பீட்யதே" '[ஹே ஸதஸ்யர்களே! த்ரௌபதீ ந்யாயத்திற்காக இப்படிக் கதறுவதை நீங்கள் பார்த்தும் உதாஸீநர்களாக இருப்பது தர்மமாகுமா?]' என்றும், "யோ ஹி ப்ரஶ்நம் ந விப்ரூயாத் தர்மதர்ஶீ ஸபாம் கத: । அந்ருதே யா பலாவாப்திஸ் தஸ்யா: ஸோ(அ)ர்த்தம் ஸமஶ்நுதே" '[ஸப்யனென்று ஸபைக்கு வந்திருக்கும் தர்மமறிந்த ஒருவன் ஏதாவது ஒரு காரணத்தால் ப்ரஶ்நத்தின் ஸமாதாநத்தை ஸ்பஷ்டமாகச் சொல்லாமல் இருந்துவிட்டால் அவன் பிசகான தர்மஞ் சொல்லுகிறவனுக்கு ஏறக்குறைய ஸமமான குற்றவாளியாகிறான்]' என்றும் தர்மம் உரைக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஸப்யர்களின் மநஸ்ஸில் வற்புறுத்தி, அது காரணமாகவே ஓர் இதிஹாஸத்தையுஞ் சொல்லிவிட்டு, ஸ்ரீ விதுரர், "ஏதம் வை பரமம் யூயம் ஶ்ருத்வா ஸர்வே ஸபாஸத: । யதா ப்ரஶ்நம் து க்ருஷ்ணாயா மந்யத்வம் தத்ர கிம் பரம்" ['ஸப்யர்கள் எல்லாரும் காமம் க்ரோதம் பயம் முதலியவற்றைத் தூர விலக்கிவிட்டு த்ரௌபதீ கேட்ட ப்ரஶ்நத்திற்கு அவஶ்யம் உத்தரம் கொடுக்கவேணும்'] என்று நிரம்பவும் ப்ரார்த்தித்தார். இந்த ப்ரார்த்தனைக்கும் இணங்காமல் பீஷ்மர் நின்றதற்குக் காரணம் என்ன? விதுரர் சொன்ன இதிஹாஸம் பிசகா? விகர்ணன் எடுத்து உரைத்த விஷயங்களும் அபத்தங்களோ? த்ரௌபதியைத் துர்யோதநன் அடிமையாகக் கொள்வது ந்யாய்யமென்றே இவருடைய நினைவோ? இதைக் கொஞ்சம் விசாரிக்கவேண்டும்.



முதலாவது - தர்ம புத்ரரை த்யூதத்திற்காக வரவழைக்குங்காலத்தில் த்ருதராஷ்ட்ரர், "ஸுஹ்ருத்த்யூதம் வர்த்ததே ஆகச்சந்த்விதி" ['வினையற்ற த்யூதம் நடக்கப்போகிறது; அதற்காக எல்லாரும் வரவேணும்'] என்று சொல்லி அனுப்பினார். இப்படி ஸுஹ்ருத்த்யூதமாக ஆரம்பித்துப் பிறகு விஷமத்யூதமாக முடிந்ததைப் பீஷ்மர் தர்ம்யமாகவே நினைப்பரோ?

இரண்டாவது - தர்ம புத்ரர் இந்த ஆஹ்வாநத்தை அங்கீகரியாமல் உபேக்ஷித்துவிடுவது அவருடைய வ்ரதத்திற்கு விருத்தம்; "ஆஹூதோ(அ)ஹம் ந நிவர்த்தேயம் கதாசித் ததாஹிதம் ஶாஶ்வதம் வை வ்ரதம் மம" என்றும், "ந சேஷ்யாம்யாஹூத: ஸதா ஹ்யாநம் வ்ரதம் ஹி மே" என்றும் அவர் தம்முடைய வ்ரதத்தை வெளியிட்டிருக்கிறார். த்யூத மதத்தால் மதித்துத் தர்மபுத்ரர் இந்த த்யூதத்தில் ப்ரவ்ருத்தித்திருந்தால், அவருக்கு நேர்ந்த கஷ்டமெல்லாம் அவருக்குத் தகுந்தனவாகவே இருக்கும். அப்படிக்கு இல்லையென்பது பீஷ்மருக்குத் தெரியாத விஷயமா?

மூன்றாவது - த்யூதம் ஆரம்பிக்குங் காலத்தில், 'யார் என்னுடன் எதிர்த்துத் தேவநம் செய்யப் போகிறார்கள்?' என்று தர்மபுத்ரர் கேட்டதற்கு, துர்யோதநன் தான் பந்தய தநம் கொடுக்கப்போகிற தாகவும், தன்னுடைய மாதுலனான ஶகுநி தனக்காக ஆடுவதாகவும் சொல்ல, அது பிசகு என்று தர்ம புத்ரர் ஆதியிலேயே ஆக்ஷேபித்திருக்கிறார். "அந்யேநாந்யஸ்ய வை த்யூதம் விஷமம் ப்ரதிபாதி மே । ஏதத்வித்வந்நுபாதத்ஸ்வ காமமேவம் ப்ரவர்த்ததாம்". இந்த ஆக்ஷேபத்தைப் பீஷ்மர் அறியாரோ?

நான்காவது - த்ரௌபதீ தன்னை முதலில் ஸபைக்கு அழைக்க வந்த ப்ராதிகாமியைப் பார்த்துக் கேட்டபடி, ["கோ ஹி தீவ்யேத் பார்யயா ராஜபுத்ர:"] மனைவியைப் பந்தயம் வைத்து ஆடுவதைச் சட்டம் அங்கீகரிக்குமோ?

தவிரவும், "மூடஸ்த்வம் கிதவம் மத்வா ஸபாயாம் மூட ஸாத்யஜ । கிம் து பூர்வம் பராஜைஷீராத்மாநமதவா நு மாம்" என்று த்ரௌபதீ கேட்டபடி பூர்வம் ஜயிக்கப்பட்ட தர்மபுத்ரர்

பிறகு மற்றொரு சொத்தைப் பந்தயம் வைக்க அர்ஹர்தானோ? அந்தப்பந்தயம் செல்லுமோ? இதற்கு ப்ரத்யுத்தரத்தை ஸர்வமும் அறிந்த பீஷ்மர் அறியாரோ?

இவையெல்லாம் தெரிந்திருக்கையிலும் பீஷ்மர் தர்மம் தெரியவில்லையென்று சொன்னதற்குக் காரணந்தான் என்? ஏதோ ஒரு ஸூக்ஷ்ம தர்மம் இருந்தே பீஷ்மரை இப்படி நடத்தி யிருக்க வேணும். நம்முடைய புத்திக்கு எட்டின வரையில், பின் சொல்லப்படும் இரண்டு காரணங்களில் ஏதாவது ஒன்றைப் பலீயஸ்ஸாக அவர் நினைத்திருக்கவேணு மென்றே தோன்றுகிறது:— (1) தர்ம புத்ரரிடத்தில் பீஷ்மர் வைத்திருந்த கௌரவ புத்தி, அவர்செய்த கார்யத்தில் அதர்மத்தை உணர வொட்டாமல் பீஷ்மரைத் தடுத்திருக்கலாம். ஆகையினால்தான், 'த்ரௌபதியின் ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநஞ்சொல்லத் தர்மபுத்ரரே ப்ரமாணம்' என்றும், 'தர்ம புத்ரர் ஜிதோऽஸ்மி என்று அங்கீகரித்து நிற்கிறபடியைப் பார்க்க எனக்கு ஒன்றும் தோன்றவில்லை' என்றும் பீஷ்மர் பலதடவை சொல்லியிருக்கிறார். இப்படி இந்த மாதிரி ஸமயங்களில் ப்ரமிப்பது எப்படிப்பட்ட புத்திஶாலிகளுக்கும் ஸஹஜமே. (2) துர்யோதநன் ராஜாவாகவும் தாம் அந்த ராஜ்யத்திலிருக்கும் ப்ரஜைகளில் ஒருவராகவும் நிரூபித்து, அந்த ஸம்பந்தத்தால் துர்யோதநன் செய்யும் கார்யங்களில் தோஷ புத்தியைத் தாம் வெளிப்படுத்துவது தர்ம விரோதமென்று பீஷ்மர் எண்ணியிருக்கலாம். யுத்தம் ஆரம்பிக்குங்காலத்தில் துர்யோதநன் பக்கத்தில் ந்யாயமில்லையென்று உணர்ந்திருந்தும் இந்தக் காரணத்தாலேயே அவன் கக்ஷியில் நின்றுகொண்டு பீஷ்மாதிகள் யுத்தம் செய்தார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். ஆகையால், ராஜத்ரோஹ ஶங்கை இப்படி அவரை ப்ரேரித்திருக்கலாம். ஆனால், இது ஸமஞ்ஜஸமாகுமோ? "ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேய: ஸதாம் பந்தா:" என்கிறபடி, ஏதோ நம்மால் அறியக்கூடாத தர்மம் இருந்திருக்கவேணுமே தவிர, பீஷ்மரின் அநுஷ்டாநம் பிசகு என்று சொல்வதற்கு நாம் துணியமாட்டோம். ஆனாலும், த்ரௌபதி பட்ட க்லேஶங்களை நினைக்கும்பொழுது மநஸ் கொஞ்சம் கலங்கவே கலங்குகின்றது.

ஓர் பௌராணிகன்.

ஸ்ரீ:

# கேவல ஆசாரம்.

## (1)

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஶ்ரத்தாளுக்களான ஆஸ்திகர்களுக்கு அத்யந்தம் உபயுக்தமாக இருக்கிறது என்பதில் ஆக்ஷேபமில்லை. அதன் உபயோகம் இன்னும் அதிகரிக்கும்பொருட்டு அடியேன் ஒரு விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகிறேன். அந்த விஜ்ஞாபநத்தை இந்தப் பத்ரிகையைப் படிக்கும் வித்வத்ரத்நங்கள் க்ருபையாகத் தலைக்கட்டிவைக்கவேணு மென்று நிரம்பவும் ப்ரார்த்திக்கிறேன்.

நாம் எல்லாரும், பகவானுடைய ஆஜ்ஞை யென்று ப்ரஸித்தி பெற்றிருக்கும் ஶ்ருதியையும் ஸ்ம்ருதியையும் நம்முடைய ஆசாரத்திற்கு ப்ரமாணங்களாக ஒப்புக்கொண்டு இருக்கிறோம். அந்த ப்ரமாணங்களிற் சொல்லப்பட்டிருப்பதற்கு விருத்தமாக அநுஷ்டிப்பதும், அவைகளிற் சொல்லப்படாமலிருக்கும் அநுஷ்டாநங்களை ஶாஸ்த்ரீயங்களென்று ப்ரமித்து அவைகள் அவஶ்யம் அநுஷ்டேயங்கள் என்கிற எண்ணத்துடன் அவைகளை அநுஷ்டிப்பதும், நமக்குத் தர்மமாகா. விருத்தமாக அநுஷ்டிப்பவர்களைப்பற்றிப் பேசுவது இப்பொழுது அடியேனுடைய எண்ணமன்று. வைதிகர் என்று பெயர் பூண்டு பாஷாந்தர கந்தமும் அறியாத சில ஸுதியர்கள் ப்ரமாண ஹீநமான சில அநுஷ்டாநங்களை ஶாஸ்த்ரீயம் போல ஶ்ரத்தையுடன் அநுஷ்டித்து வருகிறார்களே! அப்படி அநுஷ்டிக்காதவர்களை, வேறு விதத்தில் அவர்களிடத்தில் இருக்கும் குணங்களைக்கூடப் பாராமல், பாஷண்டிகள் என்றும் லௌகிகரென்றும் நிரஸிக்கிறார்களே! இது ந்யாய்யமா? என்பதை மாத்திரம் விசாரிக்க அடியேன் ப்ரவ்ருத்திக்கிறேன். ஶாஸ்த்ரத்திற்குக் கட்டுப்பட்ட அடியேனை வாதத்திற்கு அநர்ஹனாகப் பெரியோர் திரஸ்கரிக்கக் கூடாது. ப்ரமாண புரஸ்ஸரமாகச் சொல்லப்படும் எல்லாவற்றையும் அங்கீகரிக்க ஸித்தமாகக் காத்திருக்கிறேன்.

'ஶிஷ்டர்களால் அப்யுபகமம் செய்யப்பட்ட அநுஷ்டாநங்களில் தோஷ புத்தியைச் செய்யலாமா? அவைகள் எவ்வளவு ப்ரமாண ஹீநங்களாக இரும்

தாலும் ஶிஷ்ட பரிக்ரஹ மாத்ரத்தாலேயே அங்கீகார்யங்கள் ஆகவில்லையா?' என்று கேட்கலாம். இப்படி சோத்யம் செய்வது ஸங்கதமன்று. கேவலம் ஆசாரம் ஒரு அநுஷ்டாநத்திற்கு ஸாநுத்வத்தைக் கொடுக்காது என்றும், ப்ரமாணமில்லாவிட்டால் தர்மம் அநுஷ்டேயமன்று என்றும் பெரியோர் சொல்லியிருப்பதை நாம் பார்க்கிறோம். ஸ்ம்ருதிகளில் அநேக அநுஷ்டாநங்கள் ப்ரமாண ஹீநங்கள் என்றும், அந்த பரம்பரையாக வந்துவிட்டனவென்றும் கண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஸமீபகாலத்தில் 'ஸ்ம்ருதி ஸங்க்ரஹம்' என்னும் ஸச்சரித்ர ஸுதா நிதியைச் செய்த வைதிகோத்தமர் க்ரந்தத்தின் ஆரம்பத்தில் கேவலாசார போதக ஶ்லோகங்கள் என்று சில ஶ்லோகங்களை அருளிச்செய்து "[illegible]" என்றும், "[illegible]" என்றும் அந்த ஆசாரங்களை அநுபாதேயங்களென்று கண்டித்திருக்கிறார். இதுவே, அடியேன் செய்யும் ப்ரவ்ருத்தியில் தோஷமில்லையென்பதை நன்றாக விளக்கும்.

இப்படி இவர் கண்டித்திருக்கையிலும் இன்னும் அந்த அநுஷ்டாநங்கள் நம்மை விட்டு விலகாமல் நிற்கின்றன என்பதைக் காண்பிக்க அவர் குறித்திருக்கும் சில ஆசாரங்களைக் கூறுகிறேன். "[illegible]" என்று த்ராவிட காதா ஸேவா காலங்களில் ஒரு வாக்யத்தை விட்டு மற்றொரு வாக்யத்தை அநுஸந்தாநஞ் செய்வதை அஸாதுவென்றே அவர் படித்திருக்கிறார். இப்பொழுது இருக்கும் அத்யாபக ஶிரோமணிகள் கர்ணாருந்துதமாக இம்மாதிரி அநுஸந்தாநஞ் செய்வதை அதிமாத்ரம் போக்யதமமாக நாம் எல்லாரும் கொண்டாடுகிறோம். "[illegible]" என்று தநுர்மாஸ ஆராதநகாலங்களில், விதிப்ராப்தமாகவும் ப்ராஹ்மண்யத்திற்கு முக்கிய ஹேதுவாகவு மிருக்கும் ஸந்த்யாநுஷ்டாநங்களை அநாதரித்து, திருவாய்மொழிப் பாசுரங்களைப் பாடிநிற்பது அதர்மமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. சில வைதிகர்கள் இப்பொழுதும் அதை விடாமல் கைப்பற்றியிருக்கிறதை நாம் பார்க்கிறோம். "[illegible]" என்று நாட்டுப்பெண்கள் தங்கள் பர்த்ரு ஸம்பந்தமான உறவினர்களின் உச்சிஷ்டத்தைப் போஜநஞ்செய்வதையும், அவர்கள் நல்லவர்களாக



இருந்தாலும் அவர்களுடன் ஸம்பாஷணம் செய்யக்கூடாது என்று நிஷேதிப்பதையும், அஸத்துக்களான மற்ற ஜநங்களுடன் ஸம்பாஷணம் செய்யலாமென்று அங்கீகரிப்பதையும் பிசகாகவே சொல்லியிருக்கிறார். ஏதோ ஸுக்ருத வஶத்தால் உச்சிஷ்ட போஜநம் மாத்திரம் நின்றுவிட்டது; ஸம்பாஷண நிஷேதம் அவ்வளவாகப் போகவில்லை. ஆனாலும், இந்த அநுஷ்டாநங்கள் மாறிவிட்டதைப் பற்றி மிகவும் துக்கிக்கும் வைதிகர் இன்னும் இருக்கிறார். இந்த மாதிரியான அநேக தவறான அநுஷ்டாநங்கள் அவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளை மாற்றி ப்ரமாணத்துக்கு ஒத்தபடி அநுஷ்டாநத்தை நிலைநிறுத்துவதே ஓர் பெரிய சீர்திருத்தமாகும். இந்த விஷயத்தில் வித்வான்கள் கொஞ்சம் ஶ்ரத்தை எடுத்துக்கொள்ள வேணுமென்பது தான் அடியேனுடைய ப்ரார்த்தனை.

அத்யவஶ்யமாகச் சீர்திருத்தத்தை அபேக்ஷிக்கும் அநுஷ்டாநங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளில் ஒன்றைப்பற்றி மாத்திரம் இப்பொழுது ப்ரஸ்தாவிக்கிறேன். ஸத்வோத்தரரான சிலர், பராந்ந போஜநத்தை வர்ஜிப்பதாகிற ஒரு நியமத்தை வஹித்து வருகிறார்கள். இது மிகவும் ஶ்லாகநீயமே. ஸத்வஶுத்தியும் த்ருவமான ஸ்ம்ருதியும் ஆஹார ஶுத்தியைப் பொறுத்திருக்கிறதாகையால், அந்த ஆஹாரஶுத்திக்கு ஸாதகமாக இருக்கும் நியமங்கள் எல்லாம் ஆஸ்திகருக்கு அபேக்ஷிதங்கள்தான். ஆனால், இந்த நியமத்தை வஹிக்கிறவர்கள் சிறிதேனும் குணதோஷ விசாரம் செய்யாமலே ஆலயாதிகளில் பகவத் ப்ரஸாதம் என்று சொல்லப்படும் அந்நத்தை ஸ்வீகரிப்பதை நாம் பார்க்கிறோம். வ்ராத்யனாக இருக்கும் பாசகனால் ஸ்நாநாதிகள் இல்லாமலும் பெருத்த அஶுத்தியுடனும் பாகம் செய்யப்பட்டு, பகவந்நிவேதநம் என்னும் பாவனை செய்யும் முன்னமேயே அந்யதா விநியுக்தமாக இருக்கும் அந்நத்தின் ஶேஷத்தைப் பரிஶுத்தமான அந்நமென்று ஸ்வீகரிக்கிறார்களே! இது ந்யாயமாகுமோ? இவர்களுடைய அபிப்ராயம் என்ன? ஆலயத்துக்குள் எவ்விதமான அக்ரமம் நடந்தாலும் அந்த அந்நம் ஶுத்தம் என்பதுதானா? அப்படிக்கிருந்தால் அதற்கு ப்ரமாணத்தைப் பெரியோர்கள் ஸாதிக்கவேணும். அப்பொழுது ஹீநஜாதியர்கள் பாகம்செய்தாலும், ஆலயத்திற் செய்யப்பட்டது என்று பகவானுக்கு நிவேதநம் செய்யவும், நாம் உத்தேஶ்யத்வேந ஸ்வீகரிக்கவும் ப்ரஸங்கிக்கலாமே. அது இஷ்டந்தானா?

'ஆலயங்களில் அக்ரமம் நடந்தாலன்றோ இந்த விசாரத்துக்கு அவகாஶம்? இங்கே சொல்லப்பட்டிருக்கிறது அத்யுக்தி' என்று ஒருவரும் திருவுள்ளம் பற்றக்கூடாது. அடியேன் விஜ்ஞாபநஞ் செய்து கொண்டிருக்கும்

விஷயத்தில் கொஞ்சமேனும் அத்யுக்தி இல்லை. அநேக ஸ்தலங்களில் கீழ்ச் சொல்லப்பட்ட அதர்மங்கள் நடக்கிறதை நிரூபணஞ்செய்யலாம். கைங்கர்ய பரர்களில் ஸாதுக்கள் இல்லையென்றுவது, கைங்கர்யபரர்கள் என்கிற காரணத்தாலேயே அவர்கள் தோஷ துஷ்டர்களென்றுவது அடியேன் சொல்ல வரவில்லை. அநேகமாக அடியேன் பார்த்திருக்கும் ஸ்தலங்களில் அஸஹ்யமான அஶுத்தி நடக்கின்றது. பகவந்நிவேதநத்திற்காக உத்தேஶிக்கப்பட்ட சொத்துக்களை நிவேதநாத்பூர்வமேவ ஆத்ம ஸாத் கரண மாகிற திருட்டும், இன்னும் வாக்கால் சொல்லக்கூடாத அத்யந்தம் ஜுகுப்ஸாவஹமான நடவடிக்கைகளும் கோவில்களுக்குள் நடக்கின்றன வென்பது ப்ரஸித்தமே. “யதா யாவாநம் ராஜாநம் யதா வ உத்ஹஸ்திநம்” என்கிறபடி மஹாராஜாவையும் மதம் பிடித்த யானையையும் அணுகுவதுபோலவன்றோ தைவத்தை நாம் அணுகவேணும்? அப்படிக்கல்லாமல் மஹத்தான ஔதாஸீந்யத்துடனும் அப்ராயஶ்சித்தீயமான பாபத்தைச் செய்துகொண்டிருக்கும் கையுடனும் அர்ச்சகாதிகள் பூஜை செய்தால் அந்த ஸந்நிதியில் தீர்த்த பரிக்ரஹம் செய்யலாமா? மநঃபூர்வமாகப் பாசகன் அஶுத்தன், அந்நமும் அஶுத்தம் என்று தெரியுமிடத்தில் அந்நத்தை ஸ்வீகரிக்காமற் போவது தோஷமாகி விடுமோ? ஏன் வைதிகர்கள் இவைகளை யெல்லாம் தோஷமாக எண்ணாமல் அப்யவஹாராதிகளை இந்த மாதிரியான ஆலயங்களில் வைத்துக்கொள்ளுகிறார்கள்? ‘அஶுத்தி இராது என்கிற எண்ணத்துடன் இப்படி அநுஷ்டிக்கப்படுகிறது’ என்று சொல்ல முடியாது. வ்யக்தமாகத் தெரிந்திருக்கையிலும் வைதிகர் இப்படிப் புகுருவதை அடியேன் ஆயிரக் கணக்காகக் காண்பிப்பேன்.

இந்த அநுஷ்டாநத்திற்கு ஸரியான ஸமாதாநத்தை வைதிகர்கள் நிர்மத்ஸரர்களாக அநுக்ரஹிக்கவேணும். ஸரியான ஸமாதாநம் இல்லாவிட்டால், ஹோட்டல்களில் வர்ஜ்யா வர்ஜ்யமில்லாமல் இந்த்ரிய த்ருப்தியையே ப்ரதாநமாக நினைத்து ஸாப்பிட்டு வளரும் நமது லௌகிகர்களைவிட இந்த வைதிகர்கள் ஒரு விதத்திலும் சிறந்தவர்களல்லர் என்றே சொல்லவேண்டி வரும்.

ஓர் வைதிகன்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

(1)

## ஸ்ரீ ராகவன் ப்ரதிஶயநம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

ஸ்ரீ ராகவ ப்ரதிஶயந விஷயமாக அடியேன் செய்த ப்ரஶ்நங்களை ஸ்ரீ நரஸிம்ஹமாசார்யர் ஸ்வாமி அங்கீகரித்துப் பதில் நியமித்த விஷயங்கள், அடியேனுடைய தாத்பர்யத்தை ஸ்வாமிக்குத் தெரிவிக்கும்படி ப்ரேரிப்பிக்கின்றன. ஆகையால், அதை இப்பொழுது ஸங்க்ரஹமாக ஜ்ஞாபித்துவிட்டு விரதனுகிறேன்.

(1) “ப்ராஹ்மணோ ஹ்யஸ்ய...” “யநஹீநோ யதா த்விஜ:” என்கிற ஶ்லோகங்களி லிருக்கிற த்விஜப்ராஹ்மண ஶப்தங்களுக்கு ஐகார்த்ய ப்ரதிபாதகமான வ்யாக்யாந த்ரயமும், ‘ப்ராஹ்மண...” என்கிற பூர்வார்த்தத்திற்கு த்ருஷ்டாந்தத்வே ப்ரமாணங்கள். ‘ஹி’ ஶப்தமும் ஔபம்யத்துக்கு த்யோதகமாகும்.

(2) “உபயோரம்ஸயோ: க்ருத்வா பாஹுமூலேஷு ப்ராஹ்மணோ வஸ்த்ரப்ருதிஸ்மிதே” என்கிற கோவிந்த ராஜீய வ்யாக்யாநத்தை எல்லாரும் அங்கீகரித்திருப்பதனாலும், அர்ச்சா ஶயநமும் தத்தாமணமானால் விரோதமில்லாததனாலும் ஸ்வாமி இஷ்டப்படி வ்யாக்யாநம் பண்ணவில்லை. பேதகங்களான ஶப்தாந்தராதிகளையும் காணோம்.

(3) “ஸக வாமஸ்கந்தி வஸ்த்ரயுகவேஶ யஜ்ஞோபவீத லக்ஷணம் - ஸவ்யேந கக்ஷத்ர யாணா நிகுத்தம் ஸவ்யேந ப்ராய ஸ்ருதஸ்தி ஸுவிதம்” என்கிற வ்யாக்யாந பங்க்தியைப் பார்க்கும் ஸ்வா

மிகளுக்கு, 'வாதசு' என்கிற ஶப்தம் ப்ரத்யுபவேஶத்தையே சொல்லு மென்றும், அப்படி ஒரு அக்கி உண்டு என்றும், வாகவாஸ்ஶ ஶய நாமமானது மற்றும் சில ப்ரதிக்ரியதாங்கங்களை உபலக்ஷிக்கிறது என்றும் விளங்கும். இது வரையில் 'வ்ரதர்வவெஶ' ஶப்தம் உபய வாதி ஸம்ப்ரதிபந்நார்த்தத்தை நிஸ்சயித்துச் சொல்லாமையினால் 'வாதசு' ஶப்தம் வழிமறிப்பைச் சொல்லாது.

(4) "ஊஹ்ராஸரணம் டாவநகவாயம்" என்கிற வ்யாக்யாநத்திலிருக்கும் 'வாவந' ஶப்தம் 'வெஞாஜிந கூஶொாதரம்' என்கிற இடத்தில் வ்யாக்யாநம் செய்திருப்பது போல அங்கார்த்தமாக இருந்துகொண்டு ஆநுஷங்கிக ஶக்தியைச் சொல்லுகிறது என்று சொல்வதில் விரோதம் என்ன?

(5) ப்ரமாணங்கள் எல்லாவற்றையும் நிர்மத்ஸரராய்ப் பார்ப்பவர்களுக்குப் பரதன் அநுஷ்டித்தது ஶாஸ்த்ரீயவ்ரதமென்று ஸ்புடதரமாய் ஏற்படும்.

(6) பரதனிடத்தில் ஸ்ரீராமனுக்கு அபிஷிக்தபுத்தி வராது என்று ப்ரமாண புரஸ்ஸரமாக எழுதியிருந்தேன். கூஷிசு ஸர்க்கம் முழுவதும், பரதன் 'நான் ராஜ்யத்தை வஹிக்கவில்லை, நீரே வஹிக்க வேணும்' என்று ப்ரார்த்தித்ததற்கு முன் சொல்லப்பட்டது; அதற்குப் பிறகு சொல்லப்படவில்லை என்பதை ஸ்ரீ நரஸிம்மாசார்யர் ஸ்வாமி கொஞ்சம் கவனிக்க வேணும்.

கன்கொடுத்த வணிதம் 7-4-12. } பு. ஸ்ரீநிவாஸாசார்யன்.

[இந்த வாதத்தை இனி நிறுத்திவிட வேணுமென்று இரண்டு ஸ்வாமிகளையும் ப்ரார்த்திக்கிறோம். ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபர்.]



## (2)

## பகவத் விஷயம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

இந்த ஸம்வத்ஸரத்தின் முதல் ஸஞ்சிகை 30 - வது பக்கத்தில் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி ஸாதித்திருக்கும் பகவத் விஷயத்தைப் பற்றிய உபந்யாஸ ஸங்க்ரஹத்தைப் பார்த்து மிகவும் த்ருப்தியை அடைந்தேன். அதில் 'பகவத் விஷயம்' என்னும் பதத்திற்கு ஸ்வாமி நிர்வசநம் ஸாதித்திருக்கிறது புதிய உல்லேகமாயும் யுக்தியுக்தமாயும் இருக்கின்றது. ஆனால், அடியேனுடைய சிற்றறிவில் சிற்சில ஸந்தேஹங்கள் உண்டாயிருக்கின்றன. அவைகளை க்ருபையுடன் நிவ்ருத்தி செய்யவேண்டுமென்று ஸ்வாமியை ப்ரார்த்திக்கிறேன்.

"தெவஃ ஸ்ரீமாந் ஸ்வஸித்ஷீஃ கரணதிதிவஹ நெகமெயஂ ஸஹ ஸெு ஸெவுகவாதீநு உபாயயாநு வ்யமிஹ ஶதகெ வக்தி தஸ்தாவநாயயாநு" என்று தாத்பர்ய ரத்நாவளியின் ஆரம்பத்திலும், முடிவிலும் "ஐஶ்ஶஂ ஸெவ்யஂ ஸாஹொமஂ" என்றும், முதற்பத்தின் முடிவிலும் "கூநெத ஶதகெ உயவஂ ஸெவநீயஂ" என்றும், த்ரமிடோபநிஷத் ஸாரத்திலும் "ஸெவாயொமெஉதி ஸொ மஃ" என்றும், "வ்ரஹஂ ஸெவா யொமஂ வ்யஶதகெ வீக்ஷ வரஃஂ" என்றும் அருளிச்செய்திருக்க, ஸ்ரீ ஸ்வாமீ "முதல்நூறு பாசுரங்களினால் பரத்வாதி குண பூர்ணனாகையினால் அவனே ப்ராமோபாய னென்றும்" என்று திருவுள்ளம்பற்றினதற்குக் காரணம் அடியேனுக்குத் தெரியவில்லை. "ஆமெ வஶஞவாயஂ வ்ரஹஷிஹ வரஃ வ்ராவ ஸஂ ஸ்வீதீமெ" என்று ஓர் இடத்தில் ஸேவ்யத்வத்தையும் மற்றோரிடத்தில் உபாயத்வத்தையும் அருளிச்செய்திருப்பதனால் இவை இரண்டும் ஒன்றென்று நினைப்போமென்றாலும், உபாயத்வம் உபேயத்வம் இவையிரண்டும் ஸாத்யமாகவும், அவைகளுக்கு ஸேவ்யத்வம் முதலான பத்துக் குணங்கள் ஸாதநங்களாகவும் "ஜெவஃ ஸ்ரீமாநு" என்கிற தாத்பர்ய ரத்நாவளி ஶ்லோகத்தில் அருளிச்செய் திருக்கிறபடியாலும், த்ரமிடோபநிஷத் ஸாரத்தில் "உபாயவெத்வகாஷஂ வ்யஊிஹ ஸெவுக்வ ஊஷிதஂ" என்று உபாயத்வத்திற்கு ப்ராப்யமாக நிர்த்தேஶித்தி

ருக்கையாலும், "உபாயத்வாய தத்ப்ரயுக்த ஶதகேஷ்வாவ்ருத்த விஶேஷா:" என்கிற த்ரமிடோபநிஷத் ஸார ஶ்லோகத்தின் வ்யாக்யாநத்தில் சந்த்ரகிரி வேங்கடேஶ தேஶிகன் 'ஸேவ்யத்வாக்ஷிப்த உபாயத்வத்தை த்ருடீகரித்தருளினர்' என்று அருளிச்செய்திருக்கையாலும் அப்படி நினைப்பது உபபந்நமாகாது என்று தோன்றுகிறது. மேலும், "ஸுஸேவ்யம் பரத்வாதிபி:" என்கிற முதற் பத்து தாத்பர்ய ரத்நாவளி ஶ்லோகத்தாலும், "பரத்வாதிஷட்கம்" என்கிற த்ரமிடோபநிஷத் ஸார ஶ்லோகத்தாலும் பரத்வாதிகளான பத்துக் குணங்களும் ஸேவ்யத்வ ஸாதகங்களாகவே அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால், "ஸேவ்யஸ்ய ஸ்வோபாயம்" என்கிற ஒரு ஶ்லோகத்திலும் பரம்பரயா ஸாத்யமாயிருப்பதைக்கொண்டு இப்படி அருளிச் செய்யப்பட்டிருக்கிறது என்றே சொல்லவேணும்.

இரண்டாவது பத்திலும் அதிபோக்யத்வம் ப்ரதிபாத்யமென்று ஏற்படுகிறது. ஸ்ரீ தாத்பர்ய ரத்நாவளியில் இரண்டாவது கடைசி ஶ்லோகத்தில் "ஐதஸ்ய ப்ரஶாந்த்ய ஸஹ்ய க்ஷண விரஹதயா" என்று ஆரம்பித்து, "ஸாம்ய நிரவதயா ஸாதி போக்யம் த்விதீயே" என்று அருளிச்செய்திருக்கிறார். த்ரமிடோபநிஷத் ஸாரத்திலும் "தத்ர ப்ராப்யத்வ ஸித்யை போக்யதாம் ஸ்வாதுதாம் ச" என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், 'நிரதிஶயபோக்ய னானபடியால் அவனே பரமப்ராப்யனென்று' என்று ஸ்ரீ ஸ்வாமீ ஸாதித்திருப்பதும் ஆலோசிக்க வேண்டியதாக இருக்கிறது. முதற்பத்தில் ஆக்ஷேபகமான ஸேவ்யத்வத்தை விட்டுப் பரத்வாதிகளை ஸாதித்திருக்கிறபடியால், 'இந்த இடங்களில் ஆக்ஷிப்தங்களான உபாயத்வோபேயத்வங்களை நிரூபித்திருக்கிறது' என்று நினைக்கவும் ஸாத்யமில்லை.

தவிரவும், "ஷஷ்டே ஸ்வாம் ஸம்ஸாரஸ்ய ப்ரஶாந்தி ஸாமர்த்ய ஸாரோபேக்ஷ ஶ்ரீரங்கேஶ:", "உபாயத்வம் தத்ர ப்ரயுக்த ஶதகே ஹாவ்ருத்த விஶேஷா ப்ரபந்நோபாயத்வ ப்ராயதி ஸாரம் ஸம்ஸாரே" என்கிற த்ரமிடோபநிஷத்ஸார ஸ்ரீ ஸூக்திகளால் 5-ம் பத்து முதல் அநந்யோபாயத்வத்தை த்ருடீகரிக்கிறார் என்று ஏற்படுகிறது. வேறு ப்ராப்யம் இல்லை யென்பது நாலாம் பத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிறது



என்று "ஐஶ்வர்யாத் ஸ்வாத்மந: ஸ்யாத் விஷயம் த்யாஜ்யதாம் நித்யஶ்ரீமாந் ஸ்வதிஷ்டந்" என்றும், "ஐஶ்வர்யஸ்வாத்ம்யஸ் ஸ்யாத் ஸ்வர்க ஹேய ஸங்கம் தவைஸ்வர்யம் ப்ராபதி ஸதைவ ஸாஷ்டிவர்ஷ:" என்றும் த்ரமிடோபநிஷத் ஸார ஶ்லோகங்களினால் ஏற்படுகிற படியால், இங்கு 'மேல் எல்லா ஶதகங்களினாலும் அந்த ஈஶ்வரனைத் தவிர வேறு உபாயமுமில்லை, வேறு ப்ராப்யமுமில்லை யென்றும்' என்று ஸ்ரீ ஸ்வாமீ ஸாதித்திருப்பதற்குக் காரணம் தெரியவில்லை. ஒருகால் 'நாலாம் பத்தையும் சேர்த்துச் சொல்லி யிருப்பதால் விரோதமில்லை' என்று சொல்லலாமோ வென்றால், 'அடுத்ததால் வேறு ப்ராப்யங்கள் எல்லாம் அநித்யங்கள் என்றும்' என்று நாலாம் பத்தின் அர்த்தத்தை ஸங்க்ரஹித்திருக்கிறபடியால், அப்படி சொல்வதும் ஸாத்யப்படாது.

தவிரவும், 'முதற்பத்து முதல் 10 - பாசுரங்களால் ஆழ்வார் ஸர்வேஶ்வரனுடைய பரத்வாதிகளை அநுபவித்து விட்டு' என்று ஸ்ரீ ஸ்வாமி ஸாதித்திருக்கிறார். இது ஸங்கதமாகுமோ? முதல் பத்துப்பாட்டுக்களுக்குப் பரத்வத்தை மாத்ரம் தானே ப்ரதிபாத்யமாக ஆசார்யன் அருளிச் செய்திருக்கிறார்? "பரம் நிர்தோஷம்", "பரஸ்ய யோகீ பரம்", "ஸேவ்யம் ப்ராதுர் பாவிதாஷ்ட ஶ்லோக பூர்ணஷட்" இத்யாதிகளால் இது நன்றாக விளங்குகிறதே! ஆகையால், ஸ்ரீ ஸ்வாமி 'பரத்வாதி' என்று 'ஆதி' ஶப்தம் ப்ரயோகம் செய்திருப்பதன் தாத்பர்யம் ஏற்படவில்லை.

இவைகளைத் தவிர இன்னும் அநேக ஸம்ஶயங்கள் இந்த உபந்யாஸத்தைப் படிக்கும் அடியேனுடைய மநஸ்ஸில் ஜநிக்கின்றன. விஸ்தர பயத்தால் இப்பொழுது அவைகளை எழுதவில்லை. விஜ்ஞாபநம் செய்து கொள்ளப்பட்டிருக்கும் ஸம்ஶயங்களுக்குத் தகுந்த ஸமாதாநத்தை ஸ்ரீ ஸ்வாமீ அருளிச்செய்து அடியேனுடைய அஜ்ஞாநத்தை நிவ்ருத்தி செய்யவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

திருவல்லிக்கேணி 10—4—12. } சே. நரஸிம்ஹமாசார்யர்.

ஸ்ரீ:

# பிரிவுகளின் மாஸ அறிக்கை.

## மதிராஸ் - ஸைதாப்பேட்டை பிரிவு.

சென்ற மார்ச்சு மாஸம் 17-ம் தேதி, 31-ம் தேதி யாகிற இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில், ஷை பிரிவின் ஸங்கங்கள் இரண்டு நடந்தன. இவைகளில் முதல்ஸங்கத்தில் ஸ்ரீ. சே. நரஸிஹ்மாசார்யர்ஸ்வாமி திருப்பாவை மூன்றாவது பாசுரத்தைப் பற்றியும், இரண்டாவது ஸங்கத்தில் நான்காவது பாசுரத்தைப் பற்றியும் உபந்யாஸம் செய்தார். அநேக ஆஸ்திக ஶிரோமணிகள் வந்திருந்து உபந்யாஸத்தின் பெருமையை அநுபவித்துப்போனார்கள்.

இரண்டாவது ஸங்கத்தில் உபந்யாஸம் ஆன பிறகு, சற்றேறக்குறைய 5-30 மணிக்கு இந்தப் பிரிவின் அங்கத்தினருடைய கூட்டம் ஒன்று சேர்ந்தது.

அப்பொழுது பொதுக் கார்யதர்ஶியால் ஏற்கெனவே அனுப்பப்பட்டிருந்த 29-3-1912, 4-ம் நம்பர் பத்ரிகை படிக்கப்பட்டு அதன் யுக்தாயுக்தம் விசாரம் செய்யப்பட்டது. கொஞ்ச காலம் சர்ச்சை யானபிறகு பின்வரும் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன :—

(1) ஸ்ரீ அழகிய சிங்கர் தமக்குப் பிறகு ஆஸ்தாநத்துக்கு எழுந்தருள வேண்டிய ஸ்வாமியை ஏற்படுத்தும் விஷயத்தில், பஹு காலமாக இந்த மடத்தில் நடந்து வரும் அநுஷ்டாநத்தை ஒத்தும், ஹை கோர்ட்டார் இது ஸம்பந்தமாகச் செய்திருக்கும் தீர்மானங்களில் வ்யக்தமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ந்யாயங்களை அநுஸரித்தும், முக்கியமான அநேக ஶிஷ்யர்களுடன் ஆலோசித்து அவர்களுடைய அபிப்ராயத்தைத் தெரிந்துகொண்டபிறகு தான் தாம் ஒரு விதமான ஏற்பாட்டைச் செய்யவேணும்.

(2) சென்ற 1910 ௵ டிஸம்பர் மாஸத்தில் வெண்ணாற்றங்கரையில் நடந்த மஹாஸங்கத்தில் ஆஸ்தாநத்துக்கு அர்ஹர்களாகச் சொல்லப்பட்ட மூன்று ஸ்வாமிகளுக்குள் அந்யதமரை ஸ்ரீ ஸ்வாமியாக ஏற்பாடு செய்வதின் ஔசித்யத்தை இந்த மதிராஸ் ஸைதாப்பேட்டைப் பிரிவின் அங்கத்தினர் அநுமோதித்து, அப்படியே ஏற்பாடுசெய்ய ஸ்ரீ ஸ்வாமி க்ருபை செய்ய வேணுமென்று ப்ரார்த்திக்கிறார்கள்.

(3) திருக்குடந்தை ஸ்வாமியின் பூர்வாஶ்ரமத்துக் குமாரராகிய உ.ப. ஸ்ரீ-சக்ரவர்த்யாசார்யர் ஸ்வாமி, ஆஶ்ரமத்துக்கு அநுகுணமான வயஸ் வராதவராகவும், ஆஸ்தாநத்துக்கு அநுரூபமான பாண்டித்யமில்லாதவராகவும், தாத்காலிகமாகக் குடும்ப ஸம்பந்தமான வ்யாஜ்யத்தில் அத்யந்தம் ப்ரவ்ருத்தராகவும் இருக்கிறபடியால், அவர் ஸர்வதா ஆஸ்தாநத்துக்கு ஏற்படுத்தப்படக் கூடாது என்பதை இந்தப் பிரிவின் அங்கத்தினர் த்ருடமான அபிப்ராயமாகக் கொண்டிருக்கிறார்கள்.

(4) இந்த அபிப்ராயங்களை ஸ்ரீ அழகியசிங்கரிடம் விஜ்ஞாபநம் செய்து கொள்வதற்காகப் பின் குறிக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்கள் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிஹ்மன் ஸந்நிதிக்குப் புறப்பட்டுப் போக வேணுமென்று தீர்மானிக்கப்பட்டது.

1. ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர், எம். ஏ., பி. எல்.
2. ,, வி. ராகவாசார்யர், பி. ஏ., பி. எல்.
3. ,, எஸ். வாஸுதேவாசார்யர், பி. ஏ., எல். டி.
4. ,, டி. வெங்கடராம ஐயங்கார்.
5. ,, ஆர். நரஸிஹ்ம ஐயங்கார், பி. ஏ.

சென்னை
31-3-12.

கார்யதர்ஶி.
(மதிராஸ் - ஸைதாப்பேட்டை பிரிவு.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ வரவரமுநயே நம:

# பத்ராதிபரின் குறிப்புகள்.

"காஞ்சீபுரம் பரிஷத்."

"தர்கோऽப்ரதிஷ்ட: ஶ்ருதயோ விபிந்நா நைகோ ருஷிர்யஸ்ய மதம் ப்ரமாணம் - தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம் மஹாஜநோ யேந கத: ஸ பந்தா:", தர்ம நிர்ணயம் செய்யும் விஷயத்தில் மஹாஜநங்கள் போகும் மார்க்கமே மார்க்கமென்றும், கேவல யுக்தி முடிவற்றதானபடியாலும் வேத வாக்யங்களும் ரிஷிமதங்களும் பிந்ந பிந்நங்களாக இருக்கிறபடியாலும், தர்ம தத்வம் எளிதில் அறியக்கூடியதன்று என்றும் சொல்லப்பட்டிருக்கிறது; இதன் தாத்பர்யம் என்னவென்றால் - நாம் எல்லாரும் ஶாஸ்த்ரத்தை ப்ரமாணமாக ஒப்புக்கொண்டிருக்கையிலும் வ்யபதிஷ்டரான சிலரே ஶாஸ்த்ரார்த்தத்தை விசாரிக்க ஶக்தரானபடியால் அவர்கள் புகுரும் வழியையே ஸாதுவான மார்க்கமென்று மற்றவர்கள் அங்கிகரிக்க வேண்டியது என்பதுதான். அவகாஶமும் ஶக்தியும் இருந்தால் ஶாஸ்த்ரத்தை விசாரிப்பதே உத்தமம்; அவை இல்லாவிடில், ஶாஸ்த்ரத்தை விசாரிக்க அர்ஹர்களாகவும் அப்படி விசாரித்தே நடக்கிறவர்களாகவுமுள்ள பெரியோர்களது அநுஷ்டாநத்தைப் பார்த்து நாமும் நடப்பதுதான் ந்யாய்யமாக இருக்கும். இதுதான் "மஹாஜநோ யேந கத: ஸ பந்தா:" என்பதன் கருத்து. ஆனால், அடிக்கடி அநேக காரணங்களால் ஶாஸ்த்ர விசாரம் செய்பவர் குறைவுபட்டு, தர்மா தர்ம விவேகம் லுப்தமாகி, தவறான அநுஷ்டாநங்களெல்லாம் நடைபெற்றுவரக்கூடும். அவைகளை மஹாஜநங்



களுடைய மார்க்கமென்று எண்ணி நாம் அவற்றின் வழியே நடந்தால், அபதங்களில் ப்ரவ்ருத்தித்தவராவோம் என்பதில் ஆக்ஷேபமில்லை. இம்மாதிரியான க்ஷேபங்கள் வராமல் பாதுகாக்கும் பொருட்டு, அவகாஶம் கிடைக்கும் பொழுதெல்லாம், ஜகத் ரக்ஷணத்தைக் கருதி யோக்யர்களான பெரியோர்கள் ஶாஸ்த்ர விசாரத்தில் முயல்வது அவஶ்யமே.

சென்ற பங்குனி மாஸத்தில் காஞ்சீபுரம் என்று சொல்லப்படும் பெருமாள்கோவிலில் ஸ்ரீ வரதராஜன்ஸந்நிதியில் ஶாஸ்த்ரார்த்தவிசாரத்தைச் செய்யக்கூடிய நமது பண்டித ஸமாஜம் சேர்ந்தது என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கும். நமது ஆசார விஷயங்களில் அநேக அநுஷ்டாநங்கள் ஜநங்களுடைய ஆநுகூல்யத்தின் பொருட்டு ஆகாமல் தீமையையே விளைவிக்கத்தகுந்தனவாக இருக்கின்றன வென்றும், ஶாஸ்த்ரம் ஸம்மதித்தாலும் ஸம்மதிக்காவிட்டாலும் ஜநங்களுடைய நன்மையைக் கருதி அவைகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டு மென்றும் எண்ணம் கொண்டிருக்கும் ப்ரபுக்களில் அநேகர், சில பண்டிதரிட மிருந்து தாங்கள் உத்தேசிக்கும் சீர்திருத்தங்களில் சிலவற்றை ஶாஸ்த்ரம் ஒப்புக்கொள்ளுகின்றது என்று கேள்விப்பட்டு அதை உறுதிசெய்து கொள்ளுவதற்காக இந்தப் பண்டித ஸமாஜத்தைப் ப்ரவர்த்திப்பித்தார்கள். இவர்களுடைய கோரிக்கைக்கு இணங்கி அநேக வித்வாந்கள் பல விடங்களிலிருந்து வந்தார்கள். சிலர், இந்த ஸமாஜத்தில் நிஷ்பக்ஷபாதமாக ஶாஸ்த்ரார்த்த விசாரம் நடக்காது என்கிற ஒரு அதிஶங்கையை மநஸ்ஸில் கொண்டு 'வ்ருதாவாக ஶ்ரமப் படுவானேன்?' என்று நின்றுவிட்டார்கள். அப்படிக்கு நின்றும் மதத்ரய ஸாதாரணமாகச் சற்றேறக்குறைய நூறு வித்வாந்களடங்கிய ஸமாஜம் சேர்ந்தது. ஏற்கெனவே இந்த ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்கள், அர்த்த விசார காலங்களில் யாதொரு அநியமமும் வராமலிருக்கும்பொருட்டுச் சில விதிகளைச் செய்து, அவைகளை அநுஸரித்து ஸதஸ்ஸில் விசாரம்செய்வதற்காக ஏறக்குறைய முப்பது பண்டிதர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களைத்தவிர மற்ற ஒருவரும் ஸதஸ்ஸில் பேசக்கூடாது என்றும், விசாரத்தின்

குணதோஷங்களை நிர்ணயம் செய்யவும் மற்ற ஸதஸ் ஸம்பத்த
மான யாஜமாந்யத்தை வஹிக்கவும் தங்களில் ஒருவரான அக்ராஸ
நாதிபதி ஸ்ரீமாந். எம். ரங்காசார்யரே அர்ஹர் என்றும் ஏற்பாடு
செய்துகொண்டார்கள். விசாரம் செய்வதும், வாக்யார்த்தம் செய்
கிற ரீதியை அநுஸரிக்காமல், இக்காலத்து உபந்யாஸ ரீதியையே
அநுஸரிக்க வேண்டு மென்றும் அவர்களுடைய வ்யவஸ்தை.
அநேக பண்டிதர்களுக்கு இந்த வ்யவஸ்தை சிறிதும் ந்யாய்ய
மாகத் தோன்ற வில்லை. அவர்கள் ஒன்று சேர்ந்து, கக்ஷிக்கு ஒருவ
ராக இரண்டு பண்டிதர்கள் மாத்திரம் வாதம் செய்கிறது என்றும்,
மற்றைப்படி யாருக்காவது வேறே கோடிகள் தோன்றினால் அவை
களைத் தங்கள் கக்ஷியில் வாதம்செய்யும் பண்டிதர் வழியாகவே
சொல்லிக் கொள்ளுகிறது என்றும், வாதம் முழுமையும் ப்ரா
சீந வாக்யார்த்தம் சொல்லும் ரீதியையே அநுஸரித்திருக்கவேண்டு
மென்றும், விசாரத்தின் குணதோஷங்களின் நிர்ணயத்தைத் தங்
களுக்குள் ஸர்வ ஸம்மதர்களாக மூன்று மதஸ்தர்களிடமிருந்து
மதத்துக்கு ஒருவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ள மத்யஸ்தர்களே
செய்கிறது என்றும், மற்றைப்படி ஸதஸ்ஸின் ஸாதாரணமான
யாஜமாந்யத்தை ஸ்ரீ. எம். ரங்காசார்யர் வஹிப்பதில் தங்களுக்கு
ஆக்ஷேபமில்லை என்றும் தீர்மானம் செய்து, இந்தத் தீர்மான
த்தை அங்கீகரிக்க வேணு மென்று ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்களைக்
கேட்டுக்கொண்டார்கள். இதன் ஸாதுத்வத்தைப் பராமர்ஶித்து
ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்கள் இதை அங்கீகரித்ததன் பேரில்
முதல் நாள் விசாரம் முழுமையும் இந்த ரீதியாகவே பரிஷ்கார
மாக நடந்தது.

வாதத்திற்காகக் குறிப்பிட்ட விஷயங்களில் முக்கியமான
வை இரண்டு: ஸமுத்ரயாநம், ருதுமதீ விவாஹம் இவைகளின்
அநுஷ்டாநம் ஶாஸ்த்ர ஸம்மதமாகுமா? என்பதுதான். இவை
களில் முதலதான ஸமுத்ரயாந விஷயத்தைப் பற்றி முதல்நாள்
விசாரம் ஆரம்பித்தது. 'ஸமுத்ர யாநம் தோஷமாக இருந்தா
லும் ப்ராயஶ்சித்தத்தால் அந்தத் தோஷம் பரிஹரிக்கப்படலா
மென்பதுதான் ஶாஸ்த்ரத்தின் அபிப்ராயம்' என்று வடக்கிலி



ருந்துவந்துள்ள ஓர் வித்வாந் உபந்யாஸம் செய்ய, திருப்பதியிலிரு
ந்து வந்திருந்த கபிஸ்தலம் ஸ்ரீ. தேஶிகாசாரியர், 'அது அப்ராயஶ்
சித்தீயமே' என்று ஶாஸ்த்ரம் சொல்வதாக ஸித்தாந்தம்
செய்தார். இவர் உபந்யாஸம் செய்த மாதிரியும், உசிதமான விஷ
யங்களை எடுத்து ஸுகமாக எல்லாருக்கும் போதமாகும்படி சொ
ன்ன ரீதியும், ஶாஸ்த்ரார்த்தம் இதுவே என்பதற்கு அவர் எடுத்து
உரைத்த ஸத்யுக்திகளின் பெருமையும், அங்கு இருந்தவர்களின்
மநஸ்ஸைப் பூர்ணமாக அபஹரித்து விட்டன. வாதம் ஸாவஶேஷ
மாக இருந்த படியால், மறுநாள் காலையில் மறுபடியும் இதைத்
தொடர்கிறது என்கிற எண்ணத்துடன் அன்றைக்கு ஸமாஜம்
கலைந்தது.

மறுநாள் காலையில் ஸதஸ் சேர்ந்த வுடனே அக்ராஸநாதிபதி
யான ஸ்ரீ. எம். ரங்காசார்யர், இந்த மாதிரியாக வாதம் செய்வது
முன்னமே நம்மால் ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்கு விருத்தமான
தாதலால் அநுசிதமென்றும், பழையவிதிகளை உறுதிசெய்து தம்
முடைய மத்யஸ்தத் தன்மையையே அங்கீகரித்துக்கொண்டு நவீந
மான பாஶ்சாத்ய க்ரமப்படியே உபந்யாஸாதிகள் நடக்க வேண்டு
மென்றும், முதலில் குறிப்பிடப்பட்ட முப்பது வித்வாந்கள்மாத்தி
ரம் ஸதஸ்ஸில் பேச அர்ஹர்களென்றும் சொல்லி, முதல் நாள் நட
ந்த க்ரமத்தை நிஷேதித்து விட்டார். இதற்குக் காரணம் இன்
னது என்று நிர்ணயம் செய்யக்கூடவில்லை. ஸதஸ்ஸின் ப்ரவர்
த்தகர்கள் சொல்வது போல 'வாதம் அளவில் அகப்படாமற்
போய்க் குறிப்பிட்ட காலத்துக்குள் விஷய நிர்ணயம் ஏற்படாம
லிருந்து விடுமோ?' என்கிற ஶங்கையாகவே இருக்கலாம்: இல்
லாவிட்டால், பண்டிதர்கள் சொல்வது போல 'ஸ்ரீ. தேஶிகா
சாரியர் ப்ரக்ருதி இம்மாதிரியாகவே வாதம் செய்து கொண்டுபோ
னால் ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்களுடைய இஷ்டபூர்த்தி கிடைக்காமற்
போய்விடும்' என்கிற பீதியாக இருந்தாலும் இருக்கலாம். எந்தக்
காரணத்தாலானாலும் உபக்ரமித்த ரீதிக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்
டது. நடுவிலே இந்த மாதிரியான மாறுதல் செய்வதன் அநௌசித்
யத்தைப்பற்றிப் பண்டிதர்கள் ஆக்ஷேபித்தார்கள். ஸதஸ்ஸில் கொ

ஞ்சம் அவ்யவஸ்தை தலையெடுக்க அந்த அவ்யவஸ்தையை வ்யாஜமாகக் கொண்டு அக்ராஸநாதிபதி ஸதஸ்ஸைக் கலைத்துவிட்டார். மிகுந்த ஶ்ரமத்துடனும் தநவ்யயத்துடனும் ஏற்படுத்தப்பட்ட இந்த ஸமாஜம் ஒரு விதமான நிஷ்பத்தியையும் அடையாமல் நிஷ்ப்ரயோஜநமாகச் சிதறிவிட்டது. உடனே நமது பண்டிதர்களும் ஒன்று சேர்ந்து ஒரு கார்யத்தை ஸாதிக்க ஶக்தர்களாவரோ?' என்கிற வதந்தியும் பலவிடங்களில் பரவி விட்டது. அவ்வாறு ஸதஸ் கலைந்தபிறகு சில பண்டிதர்கள் தங்கி நின்றதாகவும், அவர்களை வைத்துக்கொண்டு அக்ராவஸநாதிபதியும் மற்ற ஸதஸ் ப்ரவர்த்தகர்களும் புதிதான மற்றொரு பரிஷத்தை ஏற்படுத்தி முற்கூறிய விஷய சர்ச்சையைப் பின்பு இரண்டு மூன்று நாள் நடத்தினதாகவும் இப்பொழுது தெரிய வருகின்றது. ஶாஸ்த்ரார்த்தத்தைப் பற்றி இந்தப் பண்டிதர்கள் எவ்விதமான நிர்ணயத்துக்கு வந்தார்களென்று இன்னும் ஏற்படவில்லை.

யதார்த்தமாக இவ்வளவு பரிஶ்ரமமும் வீணாகப் போனதற்குப் பண்டிதர்களின் அக்ரமமே காரணமா? என்பதை நிரூபித்துப்பார்த்தால் அணுவளவேனும் பண்டிதர்களின்மீது தோஷம் சொல்ல ஹேதுவில்லை என்பது ஸ்புடமாக ஏற்படும். ஸதஸ்ஸைக் கலைத்துவிட்டுப் பரிஶ்ரமம் முழுவதையும் வீணாக்கிவிடவேண்டுமென்பது அவர்கள் கருத்தல்லவே. எல்லாரும் ஐகமத்யத்துடன் மூன்று பண்டிதர்களை மத்யஸ்தர்களாக ஒப்புக் கொண்டதும், வாதத்தில் யாதொரு கலக்கமும் ஏற்படாமலிருக்கும் பொருட்டு எல்லாரும் ஒன்றுசேர்ந்து கக்ஷிக்கு ஒருவராக இரண்டு பெயரை வாதம் செய்யத் தேர்ந்து கொண்டதும், தங்களால் அங்கீகரிக்கப்பட்ட வ்யவஸ்தைக்குக் கட்டுப்பட்டு முதல்நாள் முழுவதும் எல்லாரும் வியப்படையும்படி அவர்கள் வாதம்செய்ததும், இவையெல்லாம் பண்டிதர்களின் அக்ரமத்தின் சிஹ்நங்களாகுமோ? பாஷாந்தரம் அப்யஸித்தவர் உணர்ந்திருக்கும் முறைமையைவிட மிகச்சிறந்த முறைமையை இவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பது இதனால் விளங்கவில்லையோ? தவிரவும், ஶாஸ்த்ரார்த்தத்தை அறியவேண்டுமென்கிற ஊக்கத்துடன் இவர்கள் ப்ரவ்ருத்தித்தவர்



களை தவிர, அபிப்ரேதமான ஒரு இஷ்டத்தை மநஸ்ஸில் வைத்துக்கொண்டு ப்ரவ்ருத்தித்தவர்களல்லர்; ஆகையால், ஸதஸ்ஸைக் கலைத்ததற்கு இந்தவித்வான்கள் காரணமென்று சொல்லக் கொஞ்சமேனும் ஹேதுவில்லை.

ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்களின் விஷயத்திலோ இப்படியன்று. நிஷ்பக்ஷபாதமாக ஶாஸ்த்ரார்த்தத்தைத் தெரிந்துகொள்ளவேணுமென்கிற ஒரே எண்ணத்துடன் இவர்கள் ப்ரவ்ருத்தித்திருந்தால், ஸதஸ்ஸுக்கு இந்த மாதிரியான முடிவு வந்திருக்காது. இவர்கள் நடந்திருக்கும் ரீதியைப் பார்க்கும்பொழுது ஒருகால் பண்டிதர் சொல்லுகிறபடி தங்களுடைய நோக்கத்துக்கு எவ்விதமான ஸாதகமும் இந்த ஸதஸ்ஸால் கிடைக்காது என்று தெரிந்துகொண்டவுடன் இவர்கள் ஸதஸ்ஸைக் கலைத்துவிடுவதே நலமென்று எண்ணியிருந்தாலும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. பண்டிதர்கள்மீது தோஷத்தை ஆரோபிப்பது பெருத்த அக்ரமமே.

யாரோ ஒரு பண்டிதர் இரண்டாவது திநம் காலையில் அஸப்யமான சில வார்த்தைகளைச் சொன்னதாகக் கேள்விப்படுகிறோம்; அது மிகவும் ஶோசிக்கவேண்டிய விஷயமே. ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்களுடைய நடவடிக்கையே இதற்குக் காரணமாக இருந்தாலும், அவ்வளவு ஆக்ரோஶம் ஜநிக்கும்படி பண்டிதர்களை அவர்கள் தூஷணமாகப் பேசியிருந்தாலும், இவர்கள் அஸப்யமான வார்த்தையை ப்ரயோகம் செய்தது பிசகுதான். ஆனால், அது அந்த வ்யக்தியின் தோஷமாகுமே யொழிய, பண்டித ஜாதிக்கு ஒரு குறையையும் ஏற்படுத்தமாட்டாது. பண்டிதரல்லாமல் பாஷாந்தரம் படித்த வித்வாங்களிலும் இம்மாதிரியான கோபநர்களை நூற்றுக்கணக்காகப் பார்க்கிறோம்.

ஆனால், பண்டிதர்கள் ஒன்று செய்திருக்கலாம். அது செய்யாமல் தவறினது தவறுதலென்றே நமக்குத் தோன்றுகின்றது. அக்ராஸநாதிபதி ஸபையைக் கலைத்தவுடன், இந்தப் பண்டிதர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் ஒரு அக்ராஸநாதிபதி

யையும், ஸபை நடத்துவதற்கு உரிய சில விதிகளையும் அப்பொழுதே ஏற்படுத்திக்கொண்டு, முதல்நாள் செய்த வாக்யார்த்த க்ரமத்தையே அநுஸரித்து, குறிப்பிட்ட விஷயங்கள் எல்லாவற்றினும் ஶாஸ்த்ரார்த்த நிர்ணயத்தைச் செய்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். ஸதஸ் ப்ரவர்த்தகர்களின் அவலம்பமில்லாமல் இரண்டு மூன்று நாள் அவ்விடத்தில் இவர்கள் தங்கியிருப்பதும் துஸ்ஸாத்யமன்று. இவ்வளவு வித்வான்கள் ஒன்று சேர்ந்ததன் ப்ரயோஜநமும் ஏற்பட்டுவிடும். அது தவறிப்போனது தவறுதல்தான். என்பது நம்முடைய எண்ணம்.

---

**ஸ்ரீ அஹோபில மடம்.**

சென்ற ஸஞ்சிகையில், ஸ்ரீ அழகியசிங்கர் மிகவும் திருமேனி பாங்கில்லாமல் எழுந்தருளியிருந்தா ரென்றும், ஒருகால் அந்யதாவாக நேர்ந்து விட்டால் அவருக்குப் பிறகு ஆஸ்தாநத்திற்கு ஸ்ரீ ஸ்வாமியை எழுந்தருளப்பண்ணுவதில் எவ்விதத்தவறுதலு மில்லாமல் ந்யாயம் நடைபெறவேண்டுமே என்றும் விசாரப்பட்டு எழுதியிருந்தோம். பகவத் ஸங்கல்பத்தால் அவ்விதமான விசாரத்திற்கு ஹேதுவில்லாமலே ஸ்ரீ அழகிய சிங்கர் ஆநுகூல்யத்தைத் திரும்பவும் அடைந்து யதாபூர்வம் த்ருடமாக எழுந்தருளியிருக்கிறார். எல்லாருக்கும் இந்த ஸமாசாரம் பெருத்த ஸந்தோஷத்தைக் கொடுக்கின்றது. திருமேனியின் ஆநுகூல்யத்தை ஸங்கல்பித்ததுபோல, ஸ்ரீ பகவாந், ஸ்ரீ ஸ்வாமியின் திருவுள்ளத்திலும் வைஶத்யத்தைப் பூர்ணமாக ஏற்படுத்தி, ஸ்ரீ ஸந்நிதி கார்யங்களை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் உகக்கும்படியே நடத்திவரவேண்டிய ஶக்தியையும் மநஸ்ஸையும் ஸ்ரீ அழகிய சிங்கருக்குக் கொடுத்து அநுக்ரஹிக்க வேணுமென்று ஸர்வகாலமும் ப்ரார்த்தித்து நிற்கிறோம்.

---

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] பரிதாபி௵ வைகாசி௴. [ஸஞ்சிகை 4.

## ப்ரமாணங்களின் தத்வம்.

நாம் எந்த விஷயத்திலும் தத்வத்தை நிஶ்சயிக்கவேண்டுமானால், அதற்கு மூன்று ப்ரமாணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளாவன:— ப்ரத்யக்ஷம், அநுமாநம், ஶப்தம் என்கிறவைகள். இவைகளில் ப்ரத்யக்ஷத்தால் ஒரு விஷயம் நிர்ணயிக்கப்பட்டால், அதில் அநுமாநம் முதலிய இதர ப்ரமாணங்களை நாம் அபேக்ஷிக்கிறதில்லை. 'அக்நி உஷ்ணம்' என்று நாம் ஸ்பர்ஶத்தால் அறிந்தபிறகு, அது ஶீதம் என்று அநுமாநமும் ஆப்தவாக்யமும் ஏற்பட்டாலும், அவைகள் பாதிதங்களாகின்றன. ஆனால், நம்முடைய ப்ரத்யக்ஷங்கள் ப்ரமமூலங்களாய் இருக்கக் கூடாது. தீபஜ்வாலை ஒன்றாய் ஸ்தூல த்ருஷ்டிகளுக்குத் தோன்றினாலும் அது ஒவ்வொரு க்ஷணத்திலும் வேறுபடுகிறதென்று ஸூக்ஷ்மதர்ஶிகள் அநுமாநத்தால் நிர்ணயிக்கிறார்கள். அதேமாதிரியாக பகலில் ஸூர்யனுக்கும் இரவில் நக்ஷத்ரங்களுக்கும் ஸதா மேற்குத்திக்கை நோக்கிக் கமநம் எல்லாருக்கும் ப்ரத்யக்ஷமாயிருந்தாலும், இந்தப் பிரத்யக்ஷம் தூமஶகடயாநத்தில் வ்ருக்ஷங்கள் சலநம் போல் ப்ரமமூலகமென்றும், வஸ்துஸ்திதியில் பூமியே ப்ரதிக்ஷ

ணம் மேற்கிலிருந்து கிழக்கு முகமாய்த் தன்னைச் சுற்றிக்கொள்ளுகிற தென்றும் ஆதுநிகநிரூபகர்கள் எண்ணுகிறார்கள். மேலும், நாம் ப்ரத்யக்ஷமென்று எண்ணும் அநுபவங்களில் ப்ரத்யக்ஷாம்ஶம் கொஞ்சமும் அநுமாநாம்ஶம் விஶேஷித்தும் பஹுவாய் இருக்கின்றன. மேடுபள்ள மில்லாமல் ஸமமாயிருக்கும் சுவரில் நல்லஶில்பியால் எழுதப்பட்ட சித்திரத்தில் பார்க்கிறவர்களுக்கு நிம்நோந்நதங்களும் தூராந்திகத்வ ஜ்ஞாநங்களும் உண்டாவது வர்ணபேதத்தாலும் ரேகைகளின் விந்யாஸ பேதத்தாலும் உண்டாகிற அநுமாநங்களே யொழிய ஸாக்ஷாத் ப்ரத்யக்ஷாம்ஶம் வர்ணங்களும் ரேகைகளின் ஸந்நிவேஶங்களுமே. அப்படி யிருக்க, சித்திரத்தில் சிலபாகம் பள்ளமென்றும் சிலபாகம் மேடு என்றும் இன்னும் பலவாறாக நாம் வ்யவஹரிப்பது, அநுமாநாம்ஶத்திலும் ப்ரத்யக்ஷதையை ஆரோபிப்பதால் செய்கிற காரியமே யாகிலும் ஸாமாந்யமாய் ப்ரத்யக்ஷத்துக்கும் அநுமாநத்துக்கும் நாம் வ்யவஹரிக்கிற பேதத்தை அவலம்பித்து ப்ரத்யக்ஷத்தை நாம் அநுமாநத்தால் பாதிக்க லாகாதென்று நம்முடைய ஸித்தாந்தம்.

ப்ரத்யக்ஷத்துக்கும் அநுமாநத்துக்கும் விஷயமல்லாத அம்ஶங்கள் ஶப்த ப்ரமாணத்தால் நிஶ்சயிக்கப்படுகின்றன. நாம் போவதற்கு ஸாத்யமில்லாத இதர தேஶங்களின் ஸ்திதிகளையும் அவைகளின் ரீதிகளையும் நமது ஆப்தர்களான யாத்ரிகர்களின் வசநங்களைக்கொண்டு நிஶ்சயிக்கிறோம். அங்கு ப்ரத்யக்ஷம் ஸாத்யமாயிருந்தாலும் ஸுலபமில்லாம லிருப்பதால் மேற்படி யாத்ரிகர்களிடத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கும்வரையில் அவர்கள் வாக்யங்களே நமக்குத் தத்வநிர்ணயத்துக்குப் போதுமானவைகளாய் இருக்கின்றன. இப்படியல்லாமல் ப்ரத்யக்ஷத்துக்கு விஷயமல்லாத விஷயங்களில் நமக்கு ஆப்தவாக்யமான ஶப்தப்ரமாணமே கதி. ஈஶ்வரனுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை நிர்ணயிப்பதிலும், தர்மமென்னப்படும் ஸூக்ஷ்மமான விஷயத்தை நிர்ணயிப்பதிலும் நாம் ஶப்தப்ரமாணமான ஶ்ருதி ஸ்ம்ருதிகளையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறோம். சிலர் அபிப்ராயத்தில் அநுமாநமும் ஈஶ்வராதி நிர்ணயத்தில் ஸஹகாரியாக எண்ணப்பட்டாலும், அதில் ஶ்ருதி வாக்யங்களே முக்கியமான ப்ரமாணம். இதைப் பகவான் பாதராயணர் «ஶாஸ்த்ரயோநித்வாத்» என்கிற ஸூத்ரத்தில் நிஷ்கர்ஷித்தார்: அதாவது – ‘ப்ரஹ்மத்தை விசாரிக்கவேண்டும்’ என்கிற முதல் ஸூத்ரத்தின் நிர்ணயத்துக்கு அநுகூலமாக அந்த ப்ரஹ்மம் ஶாஸ்த்ரம் அல்லது ஶ்ருதிகளைக்கொண்டே அறியப்படவேண்டு மென்று சொன்னார். அப்படியே பூர்வகாண்டத்திலும் பகவான் ஜைமிநிமஹர்ஷி பொதுவாய் «சோதநாலக்ஷணோऽர்தோ தர்ம:» என்று நியமித்தார்; அதாவது – ‘சோதநா’ என்னும் விதிநிஷேத ரூபமாயுள்ள ஶ்ருதி வாக்யங்களே தர்மத்துக்கு ப்ரமாணம். ப்ரத்யக்ஷாநுமாநங்கள் தர்மத்துக்கு ப்ரமாணங்களல்ல. இது, வ்யக்தமாக மேல் ஸூத்ரங்களிலும் உபபாதிக்கப்பட்டுள்ளது. இப்படி ப்ரத்யக்ஷ அநுமாந ஶப்தங்களைக்கொண்டு ஸர்வ தத்வங்களையும் நிஶ்சயிப்பதில் ந்யாயமான மார்க்கத்தை «த்ருஷ்டே ஸ்வாநுபவாபஹ்நவ [illegible] ஶாஸ்த்ரைக [illegible]» என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய் திருக்கிறார். அதாவது – ப்ரத்யக்ஷ விஷயத்தில் அநுபவத்தை அபலாபம் செய்யாமலும், அநுமாநத்தின் விஷயங்களில் மாத்திரம் லாகவ கௌரவ யுக்திகளை உபயோகித்தும், ஶாஸ்த்ரத்தினாலேயே நிர்ணயிக்கவேண்டிய ப்ரஹ்மம் தர்மம் ஸ்வர்க்கம் முதலான விஷயங்களில் வேதப்ராமாண்யத்தை ஒப்புக்கொண்டும் ப்ரவ்ருத்திக்கிறவர்களே ஆஸ்திகர்கள். அப்படி வேதப்ராமாண்யத்தை ஒப்புக்கொள்ளாதவர்கள் நாஸ்திகர்கள் என்று நமது ஶாஸ்த்ரங்களிற் சொல்லப்படுவார்கள்.

இப்படிப் பல விஷயங்களில் ஏகப்ரமாணமான வேதம் நித்யமென்றும், அபௌருஷேயம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது; அதாவது – அவிச்சிந்நமாய் எவ்வளவோ ஆயிரம் வருஷங்களாய் ஒரே ரூபமாய் அத்யயநாதிகள் செய்யப்பட்டுக் காப்பாற்றப்பட்டுவரும் வேதங்கள் அநாதியென்றும், எந்த ஜீவனாலாவது ஈஶ்வரனாலாவது நிர்மிதங்களாயிராமல் ஸ்வத: ப்ரமாணங்களாயும் ப்ரம விப்ரலம்பங்களுக்கு ஆஸ்பதமில்லாமல் எல்லாருக்கும் ஹிததமங்களாயுமிருக்கின்றன வென்றும், நம்முடைய ஶாஸ்த்ரங்களின் நிஶ்சயம். இப்படி தோஷ கந்தமில்லாத வேதத்தில் முக்கியமான பாகம் விதிநிஷேதங்களடங்கிய ‘சோதநா’ வாக்யங்கள்,

ஜ்யோதிஷ்டோமத்தால் ஸ்வர்க்கமுண்டாகுமென்றும், சித்ராயாகத்தினால் பசுக்கள் உண்டாகுமென்றும், ப்ரஹ்ம மேதத்தினால் ப்ரஹ்மத்தை யடையலாமென்றும் விதிக்கிற வாக்யங்களை நாம் ஸந்தேஹ மில்லாமல் ப்ரமாணங்களாய் நம்பினாலொழிய இந்த வாக்யங்களில் விதிக்கப்பட்ட கார்யங்களை நாம் அநுஷ்டிப்பதில் ப்ரயோஜநமில்லை. அப்படியே நம்பி அந்தந்தக் காரியங்களை நாம் அநுஷ்டிக்கவேண்டுமென்றே அவைகள் ஸம்பந்தமான கார்யகலாபங்களை மஹர்ஷிகள் கல்பஸூத்ரங்களில் போதித்திருக்கிறார்கள்: இப்படி கர்மபோதகமான விதிவாக்யங்கள் முக்கியபாகமானாலும், மந்திரங்களென்றும், அர்த்தவாதங்களென்றும், நாமதேயங்களென்றும் சொல்லப்படும் வேறு மூன்று பாகங்களும் வேதத்துக்கு உள்ளன. இவைகளின் ப்ரயோஜநம் விதிகளின் அர்த்தத்தை அநுஷ்டிப்பதில் உபகாரத்தை உண்டாக்குவதுதான். மந்த்ரங்களினால் தேவதைகளின் ஸ்வரூபாதிகளை அறிந்து, அர்த்தவாதங்களினால் பலங்களில் ருசி பிறந்து, அந்தந்த நாமதேயங்களோடு விதிக்கப்பட்ட அந்தந்த யாகங்களை அந்தந்தக் கர்த்தவ்யதைகளுடன் நாம் அநுஷ்டிக்க வேண்டியதென்பது சாஸ்த்ரங்களின் முடிவு.

இப்படி ஸர்வ தர்மங்களையும் வேதமே ப்ரதிபாதிப்பதால் ஸ்ம்ருதி புராணங்களின் ப்ரயோஜந மென்னவென்றும், சில பெரியவர்களின் ஆசாரங்களை ப்ரமாணமாகக் கொள்வது சரியாவென்றும் ஸந்தேஹங்கள் உண்டாகலாம். இந்த ஸந்தேஹங்களை மஹர்ஷிகள் பூர்வ மீமாம்ஸையில் பரிஹரித்திருக்கிறார்கள். ஸ்ம்ருதி கர்த்தாக்கள், அநேக வேதவாக்யங்களை ப்ரத்யக்ஷமாக அறிந்து அவைகளின் அர்த்தங்களை ஸ்ம்ருதி ரூபமாகச் செய்திருக்கிறார்கள். அவைகளின் மூலச்ருதிகள் நமக்கு இப்போது கிடைக்காவிடினும் அந்த ஸ்ம்ருதி வாக்யங்களுக்கு இணங்க வேதவாக்யங்க ளிருந்தனவென்று நாம் அநுமாநம் செய்கிறோம். ப்ரத்யக்ஷமான ச்ருதிக்கு விருத்தமாய் ஸ்ம்ருதிவாக்ய மிருக்குமானால் அந்த வாக்யம் ப்ரமாணமல்லவே என்று "விரோதே த்வநபேக்ஷம் ஸ்யாத் அஸதி ஹ்யநுமாநம்" (I. 3. 3.) என்னும் ஸூத்ரத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அப்படியே ஸ்ம்ருதியில் காணப்பட்டு வேதத்தில் காணப்படாத விதி சில லோபாதி காரணத்



தால் ரிஷிகளால் ஸ்ம்ருதியிற் சேர்க்கப்பட்டதென்று வ்யக்தமானால், அந்த ஸ்ம்ருதி ப்ரமாணம் அல்லவென்று "ஹேதுதர்சநாச்ச" (I. 3. 4.) என்னும் ஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஓர் யாகத்தில் 'வைஸர்ஜந ஹோமம்' என்கிற ஹோமகாலத்தில் யஜமாநாதிகளைப் புதிதாகிய ஒரே வஸ்திரத்தினால் மூடிப் பிறகு ஹோமம் செய்யவேணுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வஸ்திரத்தை ஹோமகாலத்துக்குப்பிறகு அத்வர்யு வென்கிற முக்கிய ரித்விக்கு எடுத்துக்கொள்ள வேணுமென்று ஒரு ஸ்ம்ருதி ஏற்பட்டது. அந்த ஸ்ம்ருதிக்கு ச்ருதிமூலம் இல்லை. வஸ்திரத்தை க்ரஹிக்க ஆசையால் அந்த வசநம் ஸ்ம்ருதியில் சேர்க்கப்பட்டதென்றும், ஆகையால் அந்த ஸ்ம்ருதி ப்ரமாணமல்லவென்றும் மீமாம்ஸையில் மேற்சொன்னவிடத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ச்ருதி ஸ்வதஃ ப்ரமாணமென்றும், ச்ருதிக்கு விரோதமில்லாத ஸ்ம்ருதியும் ப்ரமாண மென்றும், ஆனால் ப்ரத்யக்ஷ ச்ருதிமூல மில்லாத ஸ்ம்ருதி வாக்யங்கள் லோபம் முதலான த்ருஷ்டதோஷ மூலமாயிருந்தால் அவைகள் ப்ரமாணமல்ல வென்றும் ஏற்படுகிறது. வேதாந்த விஷயங்களில் காபில சாக்யாதி ஸ்ம்ருதிகள் ப்ரமாண மல்லவென்று 'ஸ்ம்ருத்யநவகாசதோஷ ப்ரஸங்க இதி சேந்நாந்யஸ்ம்ருத்யநவகாசதோஷ ப்ரஸங்காத்" (2. 1. 1.) என்கிற ஸூத்ரத்தில் பகவான் பாதராயணர் நிர்ணயித்திருக்கிறார். இப்படி ச்ருதி ஸ்ம்ருதிகளின் ப்ரமாண விபாகம் ஏற்பட்டிருந்தும் ச்ருதிவாக்யங்கள் கூடார்த்தமாகையாலும் அநேக ச்ருதிகள் தத்காலம் லுப்தமா யிருப்பதினாலும் ஸர்வ வைதிக ஸ்மார்த்த விஷயங்களிலும் ஸ்ம்ருதிகளே முக்கியமான ஆதாரங்களாய்விட்டன. "இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்" என்கிறபடி வேதார்த்தத்தை இதிஹாஸ புராணங்கள் விவரிக்கின்றனவே யொழிய ஸ்வதந்த்ரமாய் ஒரு அர்த்தத்தையும் சொல்லவில்லை: ஆகிலும், வேதார்த்தங்களிலும் ஸ்ம்ருத்யர்த்தங்களிலும் ஸம்சயம் ஏற்படும் காலங்களில் அவைகளின் அர்த்தங்கள் இதிஹாஸ புராணங்களால் நிர்ணயிக்க வேண்டும் என்பது சாஸ்த்ரமர்யாதை. வஸ்துகதியில் புராணங்கள் பலவாகவும் பரஸ்பரவிருத்தங்களாகவும் இருப்பதால்,

அவைகளைக்கொண்டு ஶ்ருதி ஸ்ம்ருதிகளின் அர்த்தங்களைத் தெளிவித்துக் கொள்வதென்பது பரிஹாஸ்யமாகவே தோன்றுகிறது. இதனால், சிலர் புராணங்கள் ஸாத்விகாதி பேதத்தால் மூன்று வகைப்பட்டனவென்றும், அவைகளில் ஸாத்விகங்களே ஆதரணீயங்களென்றும், மற்றவைகள் இவைகளுக்குக் கீழ்ப்பட்ட ப்ரமாணங்களென்றும் சொல்லுகிறார்கள். சிலர், புராணங்களே ப்ரமாண கோடியில் சேர்ந்தவைகளல்லவென்று எண்ணுகிறார்கள். ஆகிலும், எல்லா ஆசார்யர்களும் புராணங்களை ப்ரமாணங்களாகவே கொண்டு தங்கள் அபிப்ராயங்களுக்கு விருத்தமாகத் தோன்றும் அம்ஶங்களுக்குத் தாத்பர்யம் வெவ்வேறாக வர்ணிக்கிறார்கள். ஶ்ருதிகளுக்குள்ளும் ஸ்ம்ருதிகளுக்குள்ளும் பரஸ்பர விரோதங்கள் தோன்றி அவைகள் ஸாமாந்ய விஶேஷ ந்யாயத்தினலாவது வேறு விதத்தினலாவது பரிஹரிக்க முடியாமற் போனால் அவைகளில் ஏற்படும் விருத்தமான இரண்டு அபிப்ராயங்களும் துல்யவிகல்பங்களென்று [அதாவது - இரண்டும் ப்ரமாணமென்று] மீமாம்ஸகர்கள் நிஶ்சயித்திருக்கிறார்கள். ஓரேவிஷயத்தில் பல ஸ்ம்ருதிகள் ஒருவிதமாயும் சில ஸ்ம்ருதிகள் வேறுவிதமாயும் அபிப்ராயப்பட்டால், அந்தப்பல ஸ்ம்ருதிகளின் அபிப்ராயத்தை 'பூயஸாம்ந்யாய'த்தால் அநுஸரிக்க வேண்டும் என்று "விப்ரதிஷித்தர்மாணாம் ஸமவாயே பூயஸாம் ஸ்யாத் ஸதர்மத்வம்" (12. 2. 22.) என்னும் மீமாம்ஸை ஸூத்ரத்தால் ஏற்படுகிறது. இன்னும் ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் ஏற்படும் விதிகளின் பலாபலங்களைப்பற்றி மீமாம்ஸையில் அநேக வ்யவஸ்தைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இப்படி ஶ்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் தர்மத்தை நிஶ்சயிக்க மூலப்ரமாணங்களாகிலும், அவைகள் பலவிடங்களில் தத்வநிர்ணயத்துக்கு ஸுலபமாய் ஒத்துவாராமல் பலவாறு ஸந்தேஹத்துக்கே ஹேதுவாகின்றன. இந்த ஸ்திதியில் ஶிஷ்டாசாரம் என்பதையும் தம் மநஸ்ஸின் ப்ரியம் என்பதையும் மஹர்ஷிகளே அநுகூலமான ப்ரமாணங்களாகக் குறித்திருக்கிறார்கள்; எப்படி யென்றால்:—

மநு:—"வேதோऽகிலோ தர்மமூலம் ஸ்ம்ருதிஶீலே ச தத்விதாம் । ஆசாரஶ்சைவ ஸாதூநாமாத்மநஸ்துஷ்டிரேவ ச" ॥ [2, 6]



இங்கு 'ஶீலம்' என்பதை ராகத்வேஷங்களில்லாமை யென்று சிலரும், ப்ராஹ்மண்யதை தேவபக்தி முதலான பதின்மூன்று விதமான நன்னடத்தை யென்று சிலரும் விவரித்திருக்கிறார்கள். இவைகள் மநஸ்ஸின் குணங்களாகையால் வேதமறிந்தவர்களாற் செய்யப்பட்ட ஸ்ம்ருதிகளும் அவைகளிற் சொல்லப்பட்ட நற்குணங்களுமே தர்மத்துக்குக் காரணங்கள். மேலும், ஸாதுக்களின் ஆசாரம் என்கிற செய்கைகளும் ஆத்மதுஷ்டியும் ப்ரமாணங்களாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் ஆத்ம துஷ்டியாவது:— விகல்பமான விஷயங்களில் எது மநஸ்ஸுக்கு ப்ரீதியைக்கொடுக்கிறதோ அது தர்மத்துக்கு ஒத்திருக்கும் என்பதுதான். இவைகளையே மேல் "வேத: ஸ்ம்ருதி: ஸதாசார: ஸ்வஸ்ய ச ப்ரியமாத்மந:" [2, 12] என்று மநுஸ்ம்ருதி சொல்லுகிறது. இதனால் வேதமும், அதற்கு விரோதமில்லாத ஸ்ம்ருதியும், அவைகளுக்கு விரோதமில்லாத ஸதாசாரமும், அவைகளுக்கெல்லாம் விரோதமில்லாத ஆத்ம துஷ்டியுமே தர்மத்துக்கு ப்ரமாணங்களென்று நன்றாய் விளங்குகிறது. ஶ்ருதிக்கு விரோதமான ஸ்ம்ருதியும், அவைகளுக்கு விரோதமான ஆத்ம துஷ்டியும் எப்படிப் பிரமாணங்களல்லவோ அப்படி ஶ்ருதி ஸ்ம்ருதிகளுக்கு விரோதமான ஆசாரமும் ப்ரமாணமாகாது. எந்த விஷயங்களில் ஶ்ருதி ஸ்ம்ருதிகளில்லையோ அங்கு ஶிஷ்டர்தர்மோபதேஶமே ப்ரமாணமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

"அநாம்நாதேஷு தர்மேஷு கதம் ஸ்யாதிதி சேத்பவேத் ।
யம் ஶிஷ்டா ப்ராஹ்மணா ப்ரூயு: ஸ தர்ம: ஸ்யாதஶங்கித:"
[மநு:, 12, 108].

ஶிஷ்டர்களின் லக்ஷணமும் அடுத்த ஶ்லோகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது:—

"தர்மேணாதிகதோ யைஸ்து வேத: ஸபரிப்ரும்ஹண: ।
தே ஶிஷ்டா ப்ராஹ்மணா ஜ்ஞேயா: ஶ்ருதிப்ரத்யக்ஷஹேதவ: ॥
[மநு:, 12, 109].

ஸதாசாரம் ப்ரமாண மென்பதற்கு இன்னும் பல வசநங்களுண்டு:—

யாஜ்ஞவல்க்யஃ—ஶ்ருதிஃ ஸ்ம்ருதிஃ ஸதாசாரஃ ஸ்வஸ்ய ச ப்ரியமாத்மநஃ ।

வஸிஷ்டஃ—ஶ்ருதிஸ்ம்ருதிவிஹிதோ தர்மஃ । ததலாபே ஶிஷ்டாசாரஃ ப்ரமாணம் । ஶிஷ்டஃ புநரகாமாத்மா ।

போதாயநஃ—ஸ்மார்தோ த்விதீயஃ । த்ருதீயஃ ஶிஷ்டாகமஃ । ஶிஷ்டாஃ கலு விகதமத்ஸரா நிரஹங்காராஃ கும்பீதாந்யா அலோலுபா தம்பதர்பலோபமோஹக்ரோதவிவர்ஜிதாஃ ॥

இந்த வசநங்களால், ஶிஷ்டர் என்றால் எப்படிப்பட்டவர் என்றும் நன்றாய் விளங்குகின்றது. அவர்கள் வேதத்தையும், அதன் அங்கங்களையும் தர்க்கம் மீமாம்ஸை முதலான ஸஹகாரிஶாஸ்த்ரங்களையும் நன்றாய் அறிவதுடன், கோபம் டம்பம் அஸூயை ஆசை முதலான துர்க்குணங்க ளில்லாதவர்களா யிருப்பவர்களே. இந்தக் காலத்தில் இப்படிப்பட்டவர்கள் துர்லபர்களாயினும் முற்காலங்களில் பலர் இந்தத் தேஶத்தில் இருந்தார்க ளாகையால் நமக்குப் பாரம்பர்யமாய் வந்திருக்கும் ஶிஷ்டாசாரங்கள் அவஶ்யம் அநுஷ்டேயங்கள்தான். மேலும், ஶ்ருதியிலேயே ஸதாசாரம் அநுவர்த்திக்க வேண்டு மென்பது “யே தத்ர ப்ராஹ்மணாஃ ...யதா தே தத்ர வர்தேரந் ததா தத்ர வர்தேதாஃ” என்கிற தைத்திரீய வாக்யங்களாலும் ஸ்பஷ்டம். இந்த ஶ்ருதியிலும் “யுக்தா ஆயுக்தாஃ । அலூக்ஷா தர்மகாமாஃ ஸ்யுஃ” என்கிற வாக்யங்களால் ஶிஷ்டலக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஶிஷ்டர்களின் அநுஷ்டாநமே இதரர்களுக்கு ப்ரமாணம். அப்படிக்கில்லாத அந்தபரம்பரையாய் ஶ்ருதி ஸ்ம்ருதிகளுக்கு விருத்தமாய் வந்த ஆசாரங்கள் ஸதாசாரங்களல்ல. அவைகளை அநுஷ்டிப்பதும் சரியன்று.



இதுவரையிலும் நாம் ஶாஸ்த்ரங்களை ப்ரமாணங்களாக நம்பினவர்களுக்கு ஶ்ருதி ஸ்ம்ருதிகளின் ஆசாரங்கள் எவ்வளவு தூரம் ப்ரமாண மென்றும், எந்தக்காரணத்தினால் ப்ரமாணமென்றும் விசாரித்தோம். இந்தக் காலத்திலோ அநேகர் ஶாஸ்த்ரங்களில் விஶ்வாஸம் குறைந்து அவைகளைப்பற்றி வந்திருக்கும் அநுஷ்டாநங்களில் அத்ருப்தர்களாய் அந்த ஶாஸ்த்ரங்களுக்கு விருத்தமான யுக்திகளைச் சொல்லுகிறார்கள். வேறு சிலர், முன்சொன்னவர்களோடு ஸாத்ய விஷயங்களில் ஸமாநாபிப்ராயர்களாக இருந்தும், தங்கள் நிர்ணயங்களை ஶாஸ்த்ரங்களிலேயே அப்யுபகதங்களாய் எண்ணுகிறார்கள். மற்றும் சிலர், நமது ஶாஸ்த்ரங்களில் ப்ராசீநமாக எண்ணப்படும் வேதங்களிலும் சில ஸ்ம்ருதிகளிலும் ந்யாய்யமான விதிகள் ஏற்பட்டிருப்பதாகவும், பிந்தி அநுஷ்டாநங்கள் அநுசிதங்களாய்ப் போய் அதற்கு அநுகுணமாக ஸ்ம்ருதிகளிலும் வாக்யங்கள் ஏற்பட்டு விட்டன வென்றும், அப்படி நவீநங்களான வாக்யங்கள் ப்ரமாணமல்ல வென்றும் நிர்வஹிக்கிறார்கள். இதற்கு நிதர்ஶநம் ஸங்க்ஷேபமாய்க் கூறலாம். சென்ற பங்குனிமாஸக் கடைசியில் நடந்த காஞ்சீபுரம் பரிஷத்தில் ஸமுத்ரயாநம், ப்ரௌடா விவாஹம் முதலான பலவிஷயங்கள் விசாரிக்கப்பட்டன. முதல்நாள் பரிஷத்திலும், பிந்தி ஸங்குசிதமாகச் சில பேர்களை மாத்திரம் சேர்த்து நடந்த பரிஷத்திலும் ப்ராயேண ஶாஸ்த்ர நிர்ணயம் செய்யவே எல்லாரும் ப்ரயத்நப் பட்டார்கள். ஆனால், ஶாஸ்த்ர பரிசயமில்லாத அநேக லௌகிகர்கள் இந்த விஷயங்களை ஶாஸ்த்ரத்தினாலேயே நிர்த்தாரணம் பண்ணுவது அஸாத்தியமென்றும், தத்காலத்து ரீதிகளுக்கு அநுகுணமாக ஶாஸ்த்ரங்களை நயப்பிப்பதோ அல்லது அவைகளை நிராகரித்து வேறு உசிதமான நிர்ணயங்கள் செய்வதோ இப்படி இரண்டிலொன்றுதான் செய்யவேணுமென்றும் அபிப்ராயப்படுவதாகத் தெரிகிறது. கும்பகோணத்தில் நடந்த ‘ஸோஷல் கான்பரன்ஸ்’ என்னும் ஆசார வ்யவஸ்தைக்காக ஏற்பட்ட ஸதஸ்ஸிலும் முக்கியர்களான சிலர் ஶாஸ்த்ரத்தை அநுஸரித்தே நிர்ணயம் செய்யவேண்டுமென்று சொல்லியும், ப்ராயிகமாய் எல்லாரும் ஶாஸ்த்ராதிலங்கநம் ஏற்பட்டாலும் அவஶ்யமான ஆசாரபேதங்களை ஒப்புக்கொள்ள வேணுமென்றே அபிப்ராயப்பட்டு நிர்த்தாரணங்கள் செய்தார்கள். இந்த அபிப்ராய பேதத்தையும்

அதன் காரணங்களையும் நாம் தீர்க்கமாய் யிசாரித்துக் கவனிக்க
வேணும். இந்த அபிப்ராயபேதமே வாஸ்தவத்தில் காஞ்சீபுரம்
பரிஷத்திலும் விவாதத்தை உண்டாக்கிற்றென்பது நமக்கு நிஸ்ச
யம். இந்த ஸதஸ்ஸில் ப்ரவ்ருத்தித்த லௌகிகர்களுக்கு ப்ராயேண
நம்முடைய ஆசாரங்களில் அநேகம் மாறவேணுமென்றும், அப்படி
மாற ஶாஸ்த்ரங்கள் இடங்கொடுக்குமானல் அதுதான் பெரிய பல
மென்றும் அபிப்ராயம். விகடித்த பண்டிதர்களோ ஶாஸ்த்ரங்கள்
புதிதான அநுஷ்டானங்களுக்கு இடங்கொடுக்க மாட்டாவென்றும்,
அப்படி இடங்கொடுப்பதாய்ச் சொன்னலொழியத் தங்கள் அபிப்
ராயங்கள் ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்களுக்கு த்ருப்திகரமா யிரா
வென்றும், அப்படிச் சொல்வதைக்காட்டிலும் விலகி யிருப்பது
தர்மமென்றும் நினைத்தார்கள். ப்ரவர்த்தகர்கள் முதல்பரிஷத்
தைக் கலைத்தது இரண்டு காரணங்களா லென்று தெரிகிறது; முத
லாவது வாக்யார்த்த ரீதியாய் ஸதஸ் நடந்தால், காலவிளம்ப
மாகும் என்றும், இரண்டாவது ப்ரௌடர்களான இரண்டொ
ருத்தர் மாத்திரம் வாக்யார்த்தங்கள் சொல்லிவந்தால் எல்லாரு
டைய அபிப்ராயங்களும் ப்ரத்யேகமாய் அறிய முடியாதென்றும்
ஆக இவை இரண்டும்தான். இவைகளை வாஸ்தவமான காரணங்க
ளாகவே எண்ணவேணும். ஆகிலும், பரிஷத்தின் உத்தேஶம்
ஶாஸ்த்ர நிர்ணயம்தானே; அதற்கு ஶாஸ்த்ரஜ்ஞர்களும் அவர்க
ளில் ப்ரௌடர்களும் அவசியம் வேணுமே யொழிய எப்படியாவது
பண்டிதத்வ ஸாமாந்யம் உள்ள பலபேர்களைக்கொண்டு செய்யும்
நிர்ணயங்கள் என்ன த்ருப்தியைக் கொடுக்கும்? ஏறக்குறைய
150 பண்டிதர்கள் சேர்ந்ததாக நாம் கேள்விப்படுகிறோம். இவர்க
ளில் 61 பண்டிதர்களே புதுப் பரிஷத்தில் வந்ததாகவும், அவர்க
ளில் 50 பேர்கள்தான் எந்த விஷயத்திலும் அபிப்ராயம் கொடு
த்ததாகவும், அபிப்ராயங்களை விவேகித்துக் கணக்கிட்டிருக்கும்
கார்யதர்சி ம-ா-ா-ஸ்ரீ ஸ்வாமிநாதய்யர் அவர்கள் பத்ரிகையால்
தெரியவருகிறது. இந்த நிர்ணயங்கள் சரியா? அல்லவா? என்று
நாம் இப்போது விசாரிக்கவில்லை; நிர்ணயங்கள் ஏற்பட்ட க்ரமங்
கள் சரியா? த்ருப்திகரமா யிருந்தனவா? என்று மாத்திரம் விசா
ரிப்போம். நிர்ணயிக்கவேண்டிய விஷயங்கள், அநேகமாய் ஸ்ம்ருதி
களிலும் மீமாம்ஸையிலும் தேறின வித்வாங்களை அபேக்ஷிக்கின்
றன. எப்படி யென்றால்: — (1) ஸமுத்ரயானம் செய்தவர்களுக்கு



ஶாஸ்த்ரங்கள் என்ன ப்ராயஸ்சித்தம் விதிக்கின்றன? (2) ப்ரா
யஸ்சித்தம் ஏற்பட்டுச் செய்கிறவர்கள் தங்கள் கர்மங்களுக்கு மாத்
ரம் சுத்தியை அடைகிறார்களா? அல்லது ஹவ்ய கவ்யாதிக
ளில் அந்யர்களுக்கு உபயோகப்பட்டுப் பாங்க்தேயர்க ளாவார்
களா? (3) வைதிக லிங்கங்கள் ஸ்மார்த்தவிதிகளைக் காட்டிலும்
ப்ரபலங்களா? அல்லவா? (4) க்ருஹ்யங்களிற் சொல்லி யிருக்
கும் ஸமாவேஶநம் விவாஹாங்கமா? கர்ப்பாதாநாங்கமா? (5)
ப்ரௌடா விவாஹம் ஆபத்கல்பமாகவாவது ஶாஸ்த்ர ஸம்மத
மா? இவைகள்தான் முக்கியமான விஷயங்கள். இவைகளின் நிர்
ணயத்துக்கு அபேக்ஷிதமான ஶாஸ்த்ரங்களில் ப்ராவீண்யமுடைய
பண்டிதர்கள் சிலபேர்தான் இருக்கக்கூடும். பத்துப் பேரானு
லும் அந்தப் பண்டிதர்களைத் தேர்ந்து எடுத்து அவர்களை மத்தி
யஸ்தர்கள் முன்னிலையில் தர்க்கம் செய்யச்சொன்னல் ஶாஸ்த்ர
பரிசய மில்லாதவர்களுக்கும் யுக்தியின் பலாபலம் நன்றாய் விளங்
கும். அப்படிச் செய்து அபிப்ராய பேதம் ஏற்பட்டால் அப்போது
வ்யக்திகளைக் கணநம் செய்து 'ஹஸ்தோத்தாரணந்யாய' த்தை அவலம்
பித்து நிர்ணயிக்கலாம். அப்படிச் செய்யாமல் ப்ரௌடர்களாயும்
வ்யபதேஶ்யர்களாயும் உள்ள பண்டிதர்களில் சிலரைச் சேர்க்காம
லும், சிலரைச் சேர்த்தும், அவர்களுடன் ஸாமாந்யரா யிருக்கும்
சில பெயரை அவர்களுக்கு ஶிஷ்யர்களோ பவ்யர்களோ அல்லது
வேறுவிதமாக அநுகதர்களோ என்கிற ஒருவிதமான ஸம்பந்தத்
தையும் விசாரியாமல் சேர்த்தும் வ்யக்தி கணநம் செய்தால், அத
னல் ஏற்படும் நிர்த்தாரணங்கள் எப்படி ஶாஸ்த்ரீய நிர்த்தாரணங்க
ளாகும்? நிர்ணயங்களில், 49 - பேர்களில் 19 - பேர்கள் வைதிக
லிங்கங்கள் பலீயஸ்ஸுகளென்றும், 11 - பேர்கள் ஸமபலமென்
றும், 9 - பேர்கள் அபிப்ராயம் கொடுக்காதவர்களாகவும் ஏற்பட்
டதாம். இதனல், இந்தப் புதுப் பரிஷத்தின் நிர்ணயம் இப்படிப்
பட்டதென்று நாம் எப்படிச் சொல்லக் கூடும்? 19 - பேர்களே
வைதிக லிங்கத்தை ப்ரபலமாக எண்ணி 30 - பேர்கள் அப்படிப்
பட்ட அபிப்ராயத்தில் சேராததால், லௌகிக ஸபைகளின் ரீதி
யாகப் பார்த்தாலும் இந்தக் கக்ஷி ஒப்புக் கொள்ளப்படவில்லை
யென்று ஏற்படுகிறது. ஸமாவேஶந விஷயத்தில் 25 - பேர்கள்
விவாஹாங்கமென்று சொல்லி, மற்றையோர்கள் அதற்கு அநு
கூல மில்லாததால், இந்தவிஷயத்தில் நிர்த்தாரணமும் த்ருப்தியா

கத் தோன்றவில்லை. மறுபடியும், எப்போதாவது ப்ரௌடா விவாஹம் ஶாஸ்த்ர ஸம்மதமாகுமா? என்னும் விஷயத்தில் அபிப்ராய பேதங்கள் ஏற்பட்டன. 49 - பேர்களில், 8 - பேர்கள் 'ஒருகாலும் ஶாஸ்த்ர ஸம்மதமில்லை' என்றும், 2 - பேர் 'முன்பு ஶாஸ்த்ர ஸம்மதமாயிருந்தாலும் ஶிஷ்டாசாரம் விரோதமானதால் கூடாது' என்றும், பின்னும் 8 - பேர்கள் 'அப்படிப்பட்ட விவாஹங்களே ஶாஸ்த்ர ஸம்மதங்கள்' என்றும், 31 - பேர்கள் 'கௌண கல்பமாகவாவது ஆபத்கல்பமாகவாவது ஶாஸ்த்ரங்கள் ப்ரௌடா விவாஹத்துக்கு ஸம்மதிக்கின்றன' என்றும் அபிப்ராயப்பட்டதாய்த் தெரிகிறது. இந்த நிர்ணயத்தால் என்ன ஏற்படுகிறது? 31 - பண்டிதர்கள் அபிப்ராயத்தில் 'கௌண கல்பமாய் ப்ரௌடா விவாஹத்துக்கு ஶாஸ்த்ரத்தில் அவலம்பமிருக்கும்' என்று எண்ணினதாயிற்று. இதில் சிலர் ஆபத்கல்பமென்றும் விஶேஷித்திருக்கிறார்கள். இந்த நிர்ணயத்தைப்பற்றி எழுதும் கார்யதர்சிகள், "ப்ராஹ்மண கந்யகைகளுக்கு ப்ரௌடையான பிறகு விவாஹம்செய்வது ஶாஸ்த்ர ஸம்மதமென்று புதுப்பரிஷத்தில் வந்திருந்த ப்ரஸித்த வித்வாந்களில் ப்ராயிகமாய் எல்லாரும் (most) ஒப்புக்கொண்டார்கள்" என்று எழுதினது நமக்கு அஸத்வசநமாயும் அயுக்தமாகவுமே தோன்றுகின்றது. 100 - க்கு மேல் சேர்ந்த பண்டிதர்களில் 49 - பேர்கள் தங்கி யிருந்து அதில் 31 - பேர்கள் கௌண கல்பமாய் அங்கீகரித்ததைப் பஹு ஶாஸ்த்ரஜ்ஞ ஸம்மதமாய் வர்ணிப்பது சரியல்ல. மேலும், "[illegible] ॥" [[illegible], 11, 30] என்றும், "[illegible] ॥" [[illegible], 11, 28] என்றும் இருக்கிற வசநங்களைப் பார்க்கிற பக்ஷத்தில் இந்தப்படி அநுஷ்டிக்க அதிகாரிகளும் ஸ்வல்பமாய் ஏற்படுவார்கள். இங்கு ப்ரதமகல்பம் என்பது, ருதுவாவதற்கு முன் அல்லது 8-முதல் 12-வயஸ்வரையில் விவாஹம் செய்வது என்பதுதான். பிறகு செய்வது



கௌணகல்பம் அல்லது ஆபத்கல்பமாகையால், அப்படிப்பட்ட விவாஹமே ஶ்லாக்யமென்று விளம்பிக்கிறவர்கள் ஆபத்தை அடைந்தவர்களா? என்றும் ஆலோசிக்கவேண்டும். மேலும், பண்டிதர்களுக்கு ஜ்ஞாநத்தையும் அநுஷ்டாநத்தையும் தவிர வேறொரு யோக்யதை வேண்டுமென்று கார்யதர்சியவர்கள் சொல்லுகிறார்கள். அதாவது - பண்டிதர்கள் ஆதுநிகரீதிகளை அநுஸரித்துத் தத்காலத்துக்கு வேண்டிய மாறுதல்களில் ருசியுள்ளவராயிருக்க வேணுமென்றும், அப்படிப்பட்டவர்கள் இப்பொழுது ஸம்ஸ்க்ருத பாடஶாலைகளிலும் இங்க்லிஷ் ஸ்கூல்களிலும் இருக்கிறார்களென்றும், அவர்களுக்கு இங்கிலீஷ்படித்தவர்கள் ஸம்ஸர்க்கத்தாலும் விஶேஷமான புஸ்தகாலயங்களின் ஸாமீப்யத்தாலுண்டான அதிஶயத்தாலும் கேவலம் புராணம் என்கிறதால் உண்டாகும் அபிமாநம் நிரம்பவும் ஶிதிலமாய்ப் போகிறதென்றும், அப்படிப்பட்டவர்களின் அபிப்ராயமே நூதந ஆசாரப்ரியர்களுக்கு அவஶ்யம் என்றும் எழுதி யிருக்கிறார்கள். இவை யெல்லாம் வாஸ்தவமாயிருக்கலாம். இப்படிப்பட்ட ஸம்ஸர்க்கங்கள் ஶாஸ்த்ர ப்ராமாண்யத்தில் ஶைதில்யத்தை உண்டு பண்ணுமானால் அவர்களுடைய நிஶ்சயம் ஶாஸ்த்ர விஷயங்களில் என்ன ப்ரயோஜநம்? இந்தப் புதுப்பரிஷத்தில் அப்படிப்பட்ட பண்டிதர்களே விஶேஷித்து இருந்ததாகவும் தெரிகிறது. ஆகையால், அவர்கள் நிர்ணயங்களை அநுகூலமென்று கார்யதர்சி யவர்கள் எவ்வளவு அபிநந்தித்தாலும் அவர்களபிநந்தநத்தை ஶுத்தபண்டிதர்களும் அவர்கள் நிர்ணயங்களை அபேக்ஷிக்கும் ஶாஸ்த்ர வஶ்யர்களும் அநுவர்த்திப்பது ஸாத்யமில்லை. ப்ராமாணிகர்களான ப்ராசீந பண்டிதர்களின் நிஶ்சயம்தான் ஜநங்களுக்கு விஶ்வாஸத்தைக் கொடுக்கும். அப்படிப்பட்ட நிர்ணயங்கள் இந்தப்பரிஷத்தில் ஏற்படாதது வருத்தமாகவே இருக்கிறது.

டி. ராஜகோபாலாசாரியர்.

ஸ்ரீ:

# ருதுமதீ விவாஹம்.

அதர்ம பரம்பரைகளுக்கு நிதாநமான இந்தக் கலியுகத்தில் வைதிக மத ப்ரவிஷ்டர்களான ஆர்யர்களும் அதர்ம ப்ரவர்த்தநம் செய்வதை நினைக்க ஆஸ்திகர்களுக்கு நிரம்பவும் ஸந்தாபம் உண்டாகின்றது. கொஞ்சக் காலமாய் நமது ஆர்யர்களில் சிலர், நமது பூர்வர்களான ஶிஷ்டர்களால் ஒரு காலத்திலும் அநுஷ்டிக்கப்படாமலும் ஶாஸ்த்ரங்களில் பஹு ப்ரகாரமாக நிந்திக்கப்பட்டு மிருக்கிற ருதுமதீ விவாஹத்தை ப்ராஹ்மணர்கள் செய்யவேணுமென்றும், அப்படிச் செய்வது ஶாஸ்த்ரீயமென்றும் நிஶ்சயித்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். " நஹி ஜாநவஷம் உக்த: வஸேக ஶ்லோகவித ஹ்ருதி " என்கிறபடி இதை நாம் கவனித்து ப்ரயோஜநம் உண்டாகாது என்பது நிஶ்சயமாக இருந்தாலும், வைதிகரென்று வேஷம்பூண்டு அஶாஸ்த்ரீயமான மார்க்கத்தைப் போதிக்கும் இவர்களுடைய வார்த்தையைத் தர்ம்யமென்று ப்ரமித்து அதன்படி அநுஷ்டித்து மிதஜ்ஞர்கள் நாரகிகர்களாவார்களே! என்கிற அநுதாபம் சிலவிஷயங்களை ப்ரசுரம் செய்யும்படி ஏவுகிறபடியினால், அவைகளைப்பற்றிக் கொஞ்சம் எழுதத் துணிகின்றேன்.

ருதுமதீ விவாஹத்தைச் செய்ய விதிக்குமவர்கள் வைதிகர்களா? அல்லவா? வைதிகர்களாக இல்லாவிட்டால், நிரங்குஶர்களாக ப்ரவ்ருத்திக்குமவர் விஷயத்தில் நாம் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. தவிரவும், அவர்கள் கொள்கைப்படி தங்கள் தங்கள் இஷ்டப்படி ஸர்வகார்யத்தையும் அவர்கள் செய்யவேண்டுகையாலும், ஒவ்வொருவருக்கும் புத்தி விலக்ஷணமாகையாலும் இந்த



மாதிரியான விவாஹத்தைச் செய்யவேணுமென்று பிறருக்கு அவர்கள் உபதேஶிப்பது வ்யர்த்தமாகும். அவர்கள் வைதிகர்கள் தான் என்று சொல்லும் பக்ஷத்தில், அநேக விரோதங்கள் ஜநிக்கின்றன. வேதம், அதை மூலமாகவுடைய ஸ்ம்ருதிகள் இவைகளை ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளும் இவர்களுக்கு அநுகூலமான பாகம் அவற்றுள்ளே கொஞ்சமேனும் காணப்படவில்லை. ப்ரத்யுத அநேக வாக்யங்கள் அவர்களுக்கு விருத்தங்களாகவே தென்படுகின்றன; வேதங்களில் ஸ்புடமாயும், வேதங்களின் அர்த்தத்தை விளக்கும் வஸிஷ்ட, நாரத, யம, ஆஶ்வலாயந, ஸம்வர்த்த, அங்கிரஸ, ஶாதாதப, ப்ருஹஸ்பதி, யாஜ்ஞவல்க்ய, பராஶரர் முதலிய மஹர்ஷிகளுடைய ஸ்ம்ருதிகளில் ஸ்புடதரமாயும் ருதுமதீ விவாஹம் ப்ராஹ்மணனுக்கு நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது. ஷை ஸ்ம்ருதிகளை ஒப்புக்கொள்ளாவிட்டால், ஸர்வதர்மாதாரமான ஸந்த்யாவந்தநமும், ஆபஸ்தம்ப போதாயந ஆஶ்வலாயநாதி தத்தத் ஸூத்ர பேதாநுகுணமான விலக்ஷண தர்மாநுஷ்டாநங்களும், இந்த ஸமயம் ராஜா முதலான எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள ராஜ்யநீதிகளும் இப்போது அநுஷ்டிக்கப்பட்டுவரும் ஆநுபூர்வீ விஶேஷ விஶிஷ்டமாய் வேதத்தில் காணப்படாமையால் அவைகளையும் அடியோடு த்யஜிக்கும்படி ப்ரஸங்கிக்குமே! மநு முதலிய ஸ்ம்ருதிகளில் 'மஹர்ஷிகள் வேதார்த்தத்தை ஸாக்ஷாத்கரித்து, அதன் வ்யாக்யாநமாய் ஸ்ம்ருதிகளை எழுதினார்கள்' என்று இருக்கிறதே! ஷை நிஷேதம் யுகாந்தர விஷயமென்று சொல்வதற்கும் ஸாத்யமில்லை. " கலௌ பாராஶர ஸ்ம்ருதி: " என்கிறபடி கலியுகத்தில் ப்ரமாணமாகச் சொல்லப்பட்டிருக்கும் பாராஶர ஸ்ம்ருதியிலும் இந்த நிஷேதத்தைக் காண்கிறோம். ஆகையால், ஸர்வ விதத்திலும் ஸாதக ஹேதுவில்லாமலும் அநேக தோஷங்களால் துஷ்டங்களாயும் இருக்கும் இந்த வைதிகர்களின் நிர்ணயம் எப்படி அங்கீகரிக்கத் தகுந்தது? என்று தெரியவில்லை.

ஷை ஸ்ம்ருதி வாக்யங்களில் சிலவற்றை ஸங்க்ரஹமாய் இவ்விடத்தில் எழுதுகிறோம்:

(1) “பிதுர்கேஹே து யா கந்யா ரஜ: பஶ்யத்யஸம்ஸ்க்ருதா । ப்ரூணஹத்யா பிதுஸ்தஸ்யா: ஸா கந்யா வ்ருஷலீ ஸ்ம்ருதா ॥ மாதா சைவ பிதா சைவ ஜ்யேஷ்டோ ப்ராதா ததைவ ச । த்ரயஸ்தே நரகம் யாந்தி த்ருஷ்ட்வா கந்யாம் ரஜஸ்வலாம் ॥ உத்வஹேத்யஸ்து தாம் கந்யாம் ப்ராஹ்மணோ மதமோஹித: । அஸம்பாஷ்யோ ஹ்யபாங்க்தேய: ஸ விப்ரோ வ்ருஷலீபதி: ॥”

[அங்கிரஸ்.

(2) “பிதுர்கேஹே து யா கந்யா பஶ்யத்யஸம்ஸ்க்ருதா ரஜ: । ப்ரூணஹத்யா பிதுஸ்தஸ்யா: கந்யா ஸா வ்ருஷலீ ஸ்ம்ருதா ॥ யஸ்தாம் விவாஹயேத்கந்யாம் ப்ராஹ்மணோ மதமோஹித: । அஸம்பாஷ்யோ ஹ்யபாங்க்தேய: ஸ விப்ரோ வ்ருஷலீபதி: ॥ தஸ்யாம்ஶ்சைவ ப்ரஸூதஸ்ய நிஷ்க்ருதிர்ந விதீயதே । வ்ருஷலீம் யஸ்து க்ருஹ்ணாதி ப்ராஹ்மணோ மதமோஹித: । ஸதா ஸூதகிதா தஸ்ய ப்ரஹ்மஹத்யா தினே தினே ॥”

[யம ஸ்ம்ருதி.

(3) “பிது: ப்ரமாதாத்து யதீஹ கந்யா வய: ப்ரமாணம் ஸமதீத்ய தீயதே । ஸா ஹந்தி தாதாரமவீக்ஷமாணா காலாதிரிக்தா குருதக்ஷிணேவ ॥ ப்ரயச்சேந்நக்நிகாம் கந்யாம் ருதுகாலபயாத்பிதா । ருதுமத்யாம் ஹி திஷ்டந்த்யாம் தோஷ: பிதரம் ருச்சதி ॥”

[வஸிஷ்ட ஸ்ம்ருதி.

(4) “மாதா சைவ பிதா சைவ ஜ்யேஷ்டோ ப்ராதா ததைவ ச । த்ரயஸ்தே நரகம் யாந்தி த்ருஷ்ட்வா கந்யாம் ரஜஸ்வலாம் ॥ தஸ்மாத்விவாஹயேத் கந்யாம் யாவந்நர்துமதீ பவேத் । விவாஹோ ஹ்யஷ்டவர்ஷாயா: கந்யாயாஸ்து ப்ரஶஸ்யதே ॥”

[ஸம்வர்த்தர்.



(5) “பிதுர்கேஹே து யா கந்யா ரஜ: பஶ்யத்யஸம்ஸ்க்ருதா । ப்ரூணஹத்யா பிதுஸ்தஸ்யா: ஸா கந்யா வ்ருஷலீ ஸ்ம்ருதா ॥”

[ஶாதாதபர்.

(6) “நோபருந்த்யாத்ரஜஸ்வலாம்”

[போதாயநர்.

(7) “பிதுர்கேஹே து யா கந்யா பஶ்யத்யஸம்ஸ்க்ருதா ரஜ: । ப்ரூணஹத்யா பிதுஸ்தஸ்யா: கந்யா ஸா வ்ருஷலீ ஸ்ம்ருதா ॥ யஸ்தாம் விவாஹயேத்கந்யாம் ப்ராஹ்மணோ மதமோஹித: । அஸம்பாஷ்யோ ஹ்யபாங்க்தேய: ஸ விப்ரோ வ்ருஷலீபதி: ॥”

[ப்ருஹஸ்பதி.

(8) “அப்ரயச்சந் ஸமாப்நோதி ப்ரூணஹத்யாம்ருதாவ்ருதௌ ॥”

[யாஜ்ஞ வல்க்யர்.

இம்மாதிரியான வாக்யங்கள் அநேகம் இருக்கின்றன. இவைகளின் அர்த்தத்தை நிஷ்பக்ஷபாதர்கள் ஆலோசிக்கவேணும். ஶ்ருதியில் ஸோமாதி வாஸத்தை ப்ரதிபாதிக்கும் வாக்யங்கள் பாவியான பலத்தை ஆரம்பிக்கிறவைகளாகையால், அவைகளுக்கு இவ்விடத்தில் அவகாஶமில்லையென்பது, எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டதே. ‘லிங்’ ‘லோட்’ ப்ரத்யயங்கள் இருப்பதால், அநேக பல ப்ரார்த்தநைகளைச் சொல்லுகின்றன.

கண்கொடுத்த வணிதம்.
பரீதாபி௵
சித்திரை௴ 15௳.
} புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யன்.

ஸ்ரீ:

# ஜீவாத்மாவின் பகவத்தாஸ்யம்.

"தாஸபூதா: ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: -
நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச"

"ஜீவாத்மாக்களெல்லாம் பரமாத்மாவை விட வேறுபட்ட வஸ்துவென்றும், அவர்கள் பரமாத்மாவுக்கு இயற்கையான தாஸ்யத்தைப் பூண்டவர்களென்றும் நமது ஸித்தாந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது - பரமாத்மா ஸர்வ ஸ்வதந்த்ரன், ஜீவாத்மாக்கள் அவனுக்குப் பரதந்த்ரர்கள் என்று தாத்பர்யம். அந்தக் காரணத்தாலேயே விவேகிகள் தங்களைப் பகவத் தாஸர்களென்றே வ்யவஹரிக்கிறார்கள்; தங்களுக்கு பகவந்நாமத்தை வைத்துக்கொள்வதும், அவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கரண களேபராதிகளுக்கு அவனுடைய சிஹ்நங்களால் ஸம்ஸ்காராதிகளைச் செய்வதும், இவையெல்லாம் இந்தத் தாஸ்யத்தை வெளிப்படுத்துகின்றன. கர்மாநுபவம் செய்துகொண்டிருக்கும் பத்த தசையில் மாத்திரம் இந்தத் தாஸ்யம் என்பது இல்லை. கர்ம நிவ்ருத்தி ஏற்பட்டு மோக்ஷத்தை யடைந்த பின்பும் நாம் பகவத் தாஸர்களே. ஆகையினால், இந்தத் தாஸத்தன்மையை ஜீவனது ஸ்வரூபத்தைச் சுட்டிக்காட்டும் லக்ஷணமென்றும் சொல்லலாம். எவ்விதமான காரணத்தையுங் கொண்டு ஏற்படாமல் ஸ்வதஸ்ஸித்தமாக இருப்பதால் இந்தத் தாஸ்யம் அப்படிப்பட்ட லக்ஷணமாவதற்கு யாதொரு ஹாநியுமில்லை.



அநாதி காலமாக ஸம்ஸரித்து வரும் நாம், இந்தத் தாஸ்ய ஜ்ஞாநத்தை மறந்து நம்மை ஸ்வதந்த்ரர்களென்றே எண்ணி வருகிறோம். நம்மை நியமிக்கும் மற்றொரு சித் வஸ்து ஒன்று உண்டு என்கிற நினைவே நமது மனத்தில் ப்ரவேசிக்கிறதில்லை. ஸர்வ ஜகத்தையும் படைத்த ஒரு தைவம் உண்டு என்கிற எண்ணம் காதாசித்கமாக உண்டானாலும், அவன் யாஜமாநம் ஓர் அளவுக்கு உட்பட்டது என்றும், அவனுடைய ஸத்தையால் நமது ஸ்வாதந்த்ர்யத்துக்கு யாதொரு பங்கமும் ஏற்பட ஹேதுவில்லையென்றும் நாம் நினைத்து அநேக கார்யங்களில் ஸ்வதந்த்ர ப்ரவ்ருத்தியைச் செய்ய யத்நிக்கிறோம். இது, தவறான ஜ்ஞாநமே. ஸ்ரீ மஹா பாரதத்தில் "யோऽந்யதா ஸந்தமாத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே - கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்று பகவத் தாஸனாக இருக்கும் ஜீவனை ஸ்வதந்த்ரனாக நினைக்கும் ஆத்மாபஹாரியான திருடன் அநிர்வசநீயமான பெருத்த பாபத்தைச் செய்கிறான் என்று அவனை மஹா பாபிகள் கோஷ்டியிற் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான பாபத்திற்குப் பாத்ரமாகாமல் இந்தத் தாஸ்ய ஜ்ஞாநத்தை நாம் உணர்வதே நமது முக்கியப்ரயத்நமாக இருக்க வேண்டும்.

ஸ்ரீ பராசர பட்டார்யர், இந்தத் தத்வத்தை "ஸ்வம் ஸ்வேந ஹ்ருதம் ஸ்வே" என்கிற ச்லோகத்தில் நன்றாக வற்புறுத்தியிருக்கிறார். ஜீவனை ஒரு சொத்தாகவும், அந்தச் சொத்தின் ஸ்வாம்யத்தைப் பற்றிப் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் லோகத்தில் விவாதக்ரஸ்தமான ஒரு பதார்த்தத்தைக் குறித்து ஜநங்கள் சச்சரவு செய்வதுபோல விவதிக்கிறதாகவும் அதி ரஞ்ஜகமாக உத்ப்ரேக்ஷித்து அந்த ச்லோகத்தில் அவர் எழுதியிருக்கிறார். பரமாத்மா அநேக விதமான உபபத்திகளைத் தனது கக்ஷிக்கு ஸாதகமாக எடுத்து உப

பாதநம் செய்தும், ஜீவாத்மாவினது ஆக்ரஹத்தால் அவைக ளெல்லாம் நிஷ்பலமாகப் போய்விட்டதைப் பார்த்துக் கடைசியாக ஶபதம் செய்தே தமது சொத்தைத் திரும்ப அடையும்படியாக நேர்ந்தது என்றும் அவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. சென்ற வருஷத்திய முதலாவது ஸஞ்சிகையில் "ஜீவாத்ம பரமாத்ம ஸம்வாதம்" என்கிற பெயருடன இந்த ஶ்லோகத்தை ஸ்ரீ ராஜகோபாலாசாரியர் எடுத்து எழுதி அதன் பதவுரையையும் தமிழில் விஶதமாக விவரித்திருந்தார். இந்த உத்ப்ரேக்ஷைக்குப் பீஜபூதமாக ஸ்ரீ கூரேஶனுடைய திவ்ய ஸூக்திகளில் ஒரு ஶ்லோகம் தென்படுகிறது. ஒருகால் ஸ்ரீ பட்டர் "ஸ்வம் தே³ஹம் தே" என்கிற ஶ்லோகத்தைத் தாம் அருளிச்செய்யுங் காலத்தில் ஸ்ரீ கூரேஶனுடைய இந்த ஸூக்தியை அநுஸந்தாநம் செய்திருந்தாலும் இருக்கலாம் என்று தோன்றுகிறது; அந்த ஶ்லோகத்தை இங்கு எடுத்து எழுதுகிறோம்.

"ஸ்வதா³ஸ்யமஸ்ய ஹி மம ஸ்வரஸப்ரஸக்தம் தத³பஹ்ருத்ய யமஹம் கில ஸ்வம் ப்ராக் - த்வம் மாம் மாமகீந இதி மாமபி⁴மநுஷே ஸ்ம ஹஸ்தீஶ ஸம்ஶமய நஸ்த்விமம் விவாத³ம்".

ஸ்ரீ வரதராஜ ஸ்தவத்தில், கூரத்தாழ்வானுல் ஸ்ரீ வரதராஜனைப் பார்த்து இது அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. 'ஹே ஹஸ்தீஶ' - ஹே வரத ராஜனே! 'ஸ்வதா³ஸ்யம் அஸ்ய மம ஸ்வரஸ ப்ரஸக்தம் ஹி' - அநந்தமான தோஷங்களுடன் கூடினவனாக நான் இருந்த போதிலும், 'உம்முடைய தாஸன்' என்னும் தன்மை எனக்கு ஸ்வதஸ்ஸித்தமாக இருக்கின்றதன்றோ? 'அயமஹம் ப்ராக் தத³பஹ்ருத்ய ஸ்வம் கில' - இந்த நான் இவ்வளவு காலமாக அந்தத் தாஸ்யத்தை அபஹரித்துக்கொண்டு என்னுடைய ஸ்வரூப ஜ்ஞாநத்திலிருந்து நழுவினேன். [தாஸ்யத்தின் அபஹாரமாவது - தாஸ்யமென்பது ஜீவனுடைய ஸ்வரூப நிரூபக லக்ஷணமாகையால் அதற்கு விபரீதமான ப்ரதிபத்தியைக் கொள்வதுதான்.] 'த்வம் மாம் மாமகீந இதி அபி⁴மநுஷே ஸ்ம' - அப்படி யிருக்கையிலும் நீர் என்னை உம்முடைய தாஸனென்று தாஸ்யத்தை ஜ்ஞாபித்து அபிமாந விஷயமாகச் செய்து கொள்ளுகிறீர்: 'ந: த்விமம் விவாத³ம் ஸம்ஶமய' - உமக்கும் எனக்கும் உள்ள இந்த விவாதத்தை, ஹே ஸ்வாமிந்! நீரே அநுகூலமாக ஶமநம் செய்யவேணும்.; அதாவது - உம்முடைய தாஸன் என்கிற ஜ்ஞாநத்தை என்மநஸ்ஸில் நிஸ்ஸம்ஶயமாக உறுதி செய்யும்படி ப்ரார்த்திக்கிறேன் என்று தாத்பர்யம்.



இந்தத் தாஸ்ய ரஸ ஜ்ஞாநம் ஜநித்துவிடும் பக்ஷத்தில், வேறு எதில்தான் புத்தி ப்ரவ்ருத்திக்கும்? இதுதான் நமக்குப் பரம ப்ரயோஜநமென்று தாஸ்யைக ரஸர்களான ஆசார்யர்கள் எல்லாரும் கதறி யிருக்கிறார்கள்.

"ஸோமா ஐஶ விதி⁴ஶிவாதி³பத³ம் ந கிஞ்சித்³ஸ்வாதந்த்ர்ய- ஸம்ப்⁴ருதிரிதி யா கில ஸம்ஸ்ம்ருதாஸ்தா - ஸ்வர்க³ம் த்ருணீக்ருதவதாம் அஹம் ஜநேஷு ஹ்ருத்³யா நமஸ்ய தவ தா³ஸ்யமஹாரஸஜ்ஞா:."

பத்ராதிபர்.

## ஸ்ரீராமாயணத்தில் சில விசேஷார்த்தங்கள்.

## II.

# பரதனுடைய நிஷ்டை.

'பகவான் தம்மை ஆள்பவன், தாம் அவனுக்கு முற்றிலும் அடிமைப்பட்டவர்; அவனுடைய கைங்கர்யத்துக்கு விரோதமாகும் பக்ஷத்தில் இந்தலோகத்தில் இந்தத் தேஹஸம்பந்தியான பிதாவுக்கு அடிமைப்பட்டவரல்லர்; தமக்கு ந்யாயமான பிதா, தசரதன் அல்லன்; ஸகலவிதமான பந்துவும் ராமனே' என்றார் லக்ஷ்மணன்; 'பகவத் கைங்கரியம் செய்யுமிடத்தில் பெருமாளை நிர்ப்பந்தித்துத் தம்முடைய பகவத் சேஷத்வ பாரதந்த்ரிய ஸ்வரூபத்துக்குத் தகுந்ததை அநுஷ்டித்துக் காட்டினார் லக்ஷ்மணன். அப்படி நிர்ப்பந்திக்காமல் இன்னொரு விதமாகப் பகவத்கைங்கரியத்தை அநுஷ்டித்துக் காட்டுகிறார் பரதன். 'பெருமாளுக்குத் தாம் முற்றிலும் அடிமைப்பட்டவர், அவர் பட்டாபிஷேகம்செய்துகொண்டு அவருக்கு இஷ்டப்படி ஸகலவித கைங்கர்யத்தையும் செய்து "படியாய்க்கிடந்து உன்பவளவாய் காண்பேனே" என்று அவருக்கு முகோல்லாஸம் உண்டாய், தாம் அதை அநுபவித்து ஆநந்திக்கலாம்' என்றிருந்தார் பரதன். அப்படி எதிர்பார்த்து அந்த மனோரதம் நிறம்பெறவேணும் என்று நினைத்துக் கேகயதேசத்திலிருந்து வந்த பரதனைப் பார்த்துக் கைகேயி "உத்திஷ்டோத்திஷ்ட கிம் ஶேஷே ராஜபுத்ர மஹாயஶ: த்வத்விதா ந ஹி ஶோசந்தி ஸந்த: ஸதஸி ஸம்மதா:" என்று சொன்னபோது, பரதன் "ராஜன்" என்ற சொல்லைக் கேட்டு, மிகவும் தம்மை நொந்துகொண்டு, தாம் ராஜாவல்ல, ஸ்வதந்த்ரனல்ல,



கேவலம் பகவத் பாரதந்த்ரியத்தை வஹித்தவனேயாயிருக்க, பெருமாளைக் காட்டுக்கு அனுப்பித் தனக்கு ஸ்வாதந்த்ரியத்தைக் கொடுக்க நினைத்த மாதாவை "ஹந்த்ரீம் ஸர்வஸுஹ்ருதாம் மாதரம் கைகேயீம் பரிஷதி அபாஷிணீம்" என்று கோபித்து 'நான் ஸ்வாதந்த்ரியத்தைக் கொஞ்சமும் ஸஹியாதவன், பெருமாளுக்கு முற்றிலும் அடிமைப்பட்டவன்' என்றார்.

"விஶேஷேண ஸபாமத்யே ஜகர்ஹே ச புரோஹிதம் । ராஜ்யமிதம் ராமஸ்ய யதஸ்து கருணாஹதம் ஸதி । கதம் புரோஹிதோ ஹ வை ராஜ்யாபஹாரக:" 'புரோகிதர் நீர், அழகியதாகக் குடிக்கு நன்றாய் முன்னடியே ஹிதம் பார்த்தீர்' என்று குருஶிஷ்ய நியதியையும் பாராமல் ப்ரஹ்மருஷியான வஸிஷ்டரையும் பரதன் ஸபைநடுவிலே கோபித்தார். 'ஒருவனுக்கு இரண்டு வஸ்து சொந்தமானல் ஒன்றை ஒன்று ஆளுகை செய்யலாமா? 'ராஜ்யமிதம்': ராஜயந்தான் என்னை ஆளட்டும்; பெருமாள் காடேறினார். சக்ரவர்த்தி மரணமடைந்தார். நாடு ராஜா இல்லாமலிருக்கக்கூடாது. இருக்கிறவர்களில் முக்கியமானவர் தலையிலே தான் முடியை வைக்கவேண்டுமென்று பார்த்தாயே; என்னுடைய ஸ்வரூபத்தைப் பார்த்து வார்த்தை சொல்லவேண்டாமா? அவர் விட்டுப்போன ராஜ்யத்தை நான் எடுத்துக்கொண்டால், ராமன் பிரிவு பொறுக்க மாட்டாமல் மரணமடைந்த தசரதன் வயிற்றில் நான் பிறந்தவனாவேனா? இப்படி ராஜ்யாபஹாரம் செய்தால் அது ஒருநாளும் எனக்கு உரியதான காரியம் அல்லவே' என்றும், 'தகப்பன்மாரையும் தமையன்மாரையும் அழியச்செய்து தாம் தாம் ராஜ்யத்தைக் கொண்டுபோவது உண்டு; அது (இஹ) (ஸயி) என்னிடத்திலும் இருக்கவேண்டுமோ? அப்போது தசரதன் பிள்ளையாவேனா?' என்றும் அருளிச்செய்தார். "ததோ தக்ஷிணே ஸதோ வஸிஷ்ட ப்ரமுகோ த்விஜா: நியோஜயந்தோ ராஜ்யாய பரதம் ராஜ்யம் ஸ்தாபனா:"; வஸிஷ்டாதி புரோஹிதர், 'நீர் ராஜாவாகவேணும்' என்று சொல்ல, மஹா

தைச்வரியத்தையும் இச்சியாமல் பெருமாளை மறுபடி எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவந்து பட்டாபிஷேகம் பண்ணிவைக்கையில் அபேக்ஷையுடன், "ஸஹிஸ்ரு ஸவிஷெ ஸாஷுடும் ஶிர ஸா யாவிஷெதா உயா । ஹுாதஉ ஸ்ரிஷ்ஶு உாஸஸு வுஸாஉ கதுரஉஹஹவி" 'இவர்கள் ராஜ்யத்துக்குத் தான் நிமித்தபூதனானேன்' என்றத்தாலே, ஒரு புண்பாட்டுடன், 'நான் பெருமாள் திருவடிகளிலே சென்று கிட்டினல், ப்ராதாவல்லேனே? சிஷ்யனல்லேனே? தாஸனல்லேனே? என்பக்கல் ப்ரஸந்நராய் க்ருபைபண்ணி யருளாதொழிவரோ? நம் ஆர்த்தி கண்டு மீண்டிலராகிலும் நான் ஒருவனல்லவே; ஆர்த்தர் பலரையும் கண்டால் மீளாமையில்லை' என்று பார்த்து அநேகருடன் போனர். போகும்போது, குஹப்பெருமாளைக் கண்டு இராமனுடையவும் லக்ஷ்மணனுடையவும் பிராட்டியினுடையவும் விருத்தாந்தங்களைக் கேட்டு ஸீதாபிராட்டி ஶயநித்திருந்த இடத்தைப் பார்த்துப் பிராட்டியின் ஆபரணச்சுவடு முதலானவை அழியாமல் இருந்த இடத்தைப் [அதாவது குஹப்பெருமாள் காப்பாற்றி ஆராதித்துக் கொண்டிருந்த இடத்தை] பார்த்து, அவர்கள்பட்ட கஷ்டத்தை நினைத்துப் பரதன் ஶோகமடைந்து தொட்டால் முடியும்படியான அவஸ்தையடைந்து கிடக்க, அவரைத்தொடவும் அஞ்சி, ஶத்ருக்நனும் கூட ஸமீபத்தில் நின்றுரே தவிர வேறில்லை.

"உலநு ஸாஹாணா ஸஉஷா ஸீதாஉஷிது ஶயநொதுஷெ - தஉஸூ தஉ ஹாதஂ ஶதுஉரொஉ நஹா ஷூிதஃ ஶுவவகெஷ உய ஸஷூாவா ஊகூணஸு உஹாதுநஃ । ஹாதாயா வுஷெயாய மஉஹொ மஹநஶொவஃ" ॥ சுய - அந்தப் பரதன் ஸ்வபாவம் தெரிந்த பிற்பாடு, (உஹாதுநஃ)-வாக்கினுற்சொல்ல முடியாத மஹாப்ரபாவமுடைய மஹாத்மாவாகிற லக்ஷ்மணனுடைய, (ஸஷூாவஂ) - இளமைப்பருவம் முதல் ராமனைப்பிரிந்தால் தரிக்க முடியாததா யிருக்கும் இருப்பை, ஸத்பாவத்தையும், (ஹாதாய கவுஷெயாய) - பகவத் கைங்கரியத்தில் இருக்கும்



ப்ராவண்யத்தை மநஸ்ஸுக்கும் அளவிட்டுத் தெரியமுடியாத ப்ரேமத்தையும் பாரதந்த்ரியத்தையு முடைய பரதனுக்கு, (மஉஹொ மஹந ஶொவஃ) - குஹன் காட்டில் வேடனாய்த் திரிந்து கொண்டிருக்கும் கீழ்ப்பட்டவனா யிருந்தாலும், (ஶுவவகெஷ) - பக்தனாகிற குஹப்பெருமாள் மஹாபாகவதரா யிருக்கும் பரதனுக்கு மஹாபாகவதரான லக்ஷ்மணனுடைய பகவத்ப்ராவண்யத்தைச் சொன்னார்.

பகவத் விஷயத்தை இன்னார் சொல்லுகிறது இன்னார் கேட்கிறது என்கிற நியமமில்லை; தெரிந்தவர்கள் சொல்ல, ஆதரமுடையவர்கள் கேட்கிறதுதான். பிறகு குஹப்பெருமாளையும் அழைத்துக் கொண்டு பரதன் பெருமாளிருக்கும் ப்ரதேசம் வந்தார். அப்போது இவருக்கு இருந்த ஆர்த்தி மிகவும் அதிகமா யிருந்தது; — "யாவஷ ஊஶைவ ஹுாதஃ வஷிவஉ ஜநாவிதள - ஶிரஸா யாஶயிஷுாஉ ந உெ ஶாஜிஹுவிஷுதி" ॥ 'என்னுடைய துக்கம் எப்போது போம்?' என்றால், 'நானும் எனக்குத் தகுந்த முடிசூடி, பெருமாளும் அவருக்குத்தகுந்த முடிசூடிய அன்றுதான்; அவர் திருமுடிசூடி அவர் திருவடிகளை என் தலைமேல் வைத்தால், அப்போது தான் எனக்கு ஶாந்தியுண்டாகும்; [எனக்கு ஸம்பத்து - பாரதந்த்ரியம், அவருக்கு ஸம்பத்து - ஸ்வாதந்த்ரியம்]' என்றார். அங்கே இவரும் ஶத்ருக்நனும் குஹப்பெருமாளும் தேடிப் பெருமாளுடைய ஆஶ்ரமம் கண்டுபிடித்தார்கள்; மஹா ஆநந்தத்தை அடைந்தார்கள். 'உலநு வுா தஸூஷாதஂஜெஉஶஂ ஹாஊாஜொயஉவுவீசு" திரும்பி, 'கைகேயிமாத்ரம் ராஜனென்று சொல்லும்படி பிறந்த பரதனாகிற நானா, ராமனிருப்பதாகப் பரத்வாஜன் சொன்ன ஆஶ்ரமத்துக்கு வந்தேன்? நாமா பெருமாள் ஸந்நிதிக்கு வந்துவிட்டோம்?' என்று தம்முடைய கீழ்மையையும் சுட்டிக்காட்டி, 'இப்போது மிகப்பேராநந்தத்தை உண்டுபண்ணும்படியான பெருமாளிருப்பிடம் வந்தது மெய்யா?' என்று ஆநந்தாதிஶயத்தால் 'உலநு' என்று ஸந்தே

ஹம் தோற்றச் சொன்னார். இப்படிப்பட்ட ஆஸ்தையுடன் வந்து அவர்திருவடிகளில் தீர்க்க தண்டன் ஸமர்ப்பித்து "அயாசத் ப்ராதரம் ராமம் ஆர்யபாவபுரஸ்க்ருத:" என்று பெருமாள் ஸந்நிதியில் தமது இஷ்டத்தை விண்ணப்பம் செய்தார். பெருமாளும் "பாதுகே சாஸ்ய ராஜ்யாய ந்யாஸம் தத்த்வா புந: புந: । நிவர்தயாமாஸ ததோ பரதம்" - 'திரும்பி வராமைக்கு ஹேதுவான அநேககாரணங்களைச் சொல்லி, நீ நிர்ப்பந்திக்கக்கூடாது, உன்பேரில் ஸ்வதந்திரத்தை ஆரோபித்துச் சொன்னவ ரெதிரிலேயே உனது ஆத்மஸ்வரூபத்துக்குத் தகுந்த பாரதந்த்ரியத்தைப் [பகவானிஷ்டத்துக்கு அடிமைப்பட்ட குணத்தைப்] பெற்றுப்போ' என்று சொன்னார். "தத: ஶிரஸி க்ருத்வா து பாதுகே பரதஸ்ததா - ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்ட: ஶத்ருக்நேந ஸமந்வித:" என்று வால்மீகி சொல்லுகிறார்:— அதாவது - ராமன் திரும்பிவாராததற்கு வருத்தப்படாமல் "அந்த பாரதந்த்ரியம்தான் ந்யாயம், எம்பெருமான் உகப்பே நமக்கும் உகப்பு' என்று போகட்ட இடத்தில் கிடக்கிறேன்' என்று ஸந்தோஷத்துடன் ரதத்தில் ஏறிச்சென்றார்.

இவர் பிற்பாடு ராஜ்யபரிபாலநம் பண்ணிக்கொண்டு நந்திக்ராமத்தி லிருப்பதைப்பற்றிக் கொஞ்சம் சொல்வோம்; "ஸ காமமநவாப்யைவ ராமபாதாவுபஸ்ப்ருஶன் । நந்திக்ராமே(அ)கரோத்ராஜ்யம் ராமாகமநகாங்க்ஷயா" என்று நந்திக்ராமத்தில் ராமனுடைய வரவையும், நேரில் பெருமாளை ஸேவித்து ஸகலவித கைங்கரியத்தையும் செய்யவேண்டும் என்ற ஆஸ்தையையும், ஆர்த்தியையும் பெருகப் பெருகப் பண்ணிக்கொண்டு, அந்தப் பகவத் குணநுஸந்தாநத்தாலே பின்னும் அந்தக்கைங்கரியத்தை நேரில் அடைவோம் என்பதனால் பிராணனைத் தரித்துக்கொண்டு, ராம கைங்கரியமாக நேரிலடையாமலே பாதுகைகளையே ஸேவியாநின்று, பெருமாள் நியமனப்படி ராஜ்யத்தைப் பாதுகாத்து வந்தார் பரதன். "பங்கதிக்தஸ்து ஜடிலோ பரத:" என்றும், "கண்ணநீர்கள் கைகளாலிறைக்கும்" என்றும் சொல்லுகிறபடியே கண்ணீராலுண்டான சேற்றுத்தரையிலே கிடைக்கையால் பங்கதிக்த ராய் இருந்தார். இவருடைய நினைவே பெருமாளுடைய திருவுள்ளத்தில் எப்பொழுதும் ஊன்றிக்கிடந்தது. "மாம் நிவர்தயிதும் யோ(அ)ஸௌ சித்ரகூடமுபாகத: । ஶிரஸா யாசதஸ்தஸ்ய வசநம் ந க்ருதம் மயா" — 'பரதன் தலையாலே இரந்த காரியத்தை மறுத்துப் போந்தோமே!' என்று ராமன் எப்போதும் மநஸ்ஸில் புண்பட்டுக்கொண்டிருந்தார்; 'பிதாவோ போகட்டு முடிந்தார், நாமோ விட்டுப் போந்த ராஜ்யத்தை நம்முடைய இஷ்டத்தைக் காப்பாற்றுதற்கு, குலமரியாதை குலையாமல் நமக்காக நாம் சொன்னபடியே இப்படி ராஜ்யத்தைக் காப்பாற்றுகிறான் 'நாதன்' என்று தோற்றும்படி "தாமேவேக்ஷ்வாகுநாதஸ்ய பரதஸ்ய கதாம் குரு" 'என்று பெருமாள் லக்ஷ்மணனுக்குச் சொன்னார். பெருமாள் திரும்பி வந்தபிறகு பரதனுடைய மநோரதம் நிறைவேறிற்று; அப்புறம் இருவரும் ஆநந்தத்தை அடைந்திருந்தார்கள்.



இப்படி ஶேஷத்வ பாரதந்த்ரிய ஜ்ஞாநத்துடன் பகவத்கைங்கரியவிஷயத்தி லிருக்கும் இருப்பை அநுஷ்டித்துக் காட்டினார் பரதன்.

ஆக, இளையபெருமாளாகிற லக்ஷ்மணனுடையவும், பரதனுடையவும் ஶேஷத்வ பாரதந்த்ரிய நிஷ்டை, ஸ்ரீராமாயண ஶ்லோகங்களைக்கொண்டு கொஞ்சம் சொல்லப்பட்டது.

அடுத்த ஸஞ்சிகையில் ஸீதாபிராட்டியின் வைபவத்தைக் கொஞ்சம் சொல்வோம்.

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## (1)

## பகவத்விஷயம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

நீடாமங்கலத்தில் சென்ற ஸம்வத்ஸரத்தில் நடந்த அடியேனுடைய பகவத் விஷய உபந்யாஸத்தில் ஏதோ சில ஸம்ஶயங்க ளிருப்பதாக ஸ்ரீ. நரஸிம்ஹமாசார்யர் ஸ்வாமி ப்ரஶ்நம் செய்திருப்பதைப் பார்த்தேன். அந்த ப்ரஶ்நத்திற்கு உசிதமான ஸமாதாநத்தை மிதஜ்ஞனை அடியேனுடைய புத்திக்குத் தோன்றின வரையில் எழுதுகிறேன்.

“[illegible]” என்கிற த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி ஶ்லோகத்தை அநுஸரித்து உபாயோபேயத்வம் தஶக த்வயார்த்தமென்று எழுதினேன். அவை ஸேவ்யத்வாதி ஸாத்யங்களானாலும் முதல் 2 - தஶகங்களின் அர்த்தங்களாகவே சொல்லவேணு மென்பது ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகன் திருவுள்ளம் என்று ‘ப்ராப்யே,’ ‘த்விதீயே’ என்கிற பதங்களால் தோன்றுகிறது.

உபாயத்வம் ஸமுதிதார்த்தமென்று சொன்னால் அந்த ஸமுதிதார்த்தம் திருவாய்மொழியில் எந்தப் பாகத்தினால் ஏற்படும் என்று கேட்கலாம்; அப்படிக் கேட்டால், ப்ரதமதஶகத்தினால் ஏற்படும் என்று சொல்வது உசிதமாகும். ஸாக்ஷாத்தாகவாவது பரம்பரையாகவாவது உபாய உபேயத்வங்கள் ப்ரதம த்விதீய தஶக த்வயார்த்தங்கள் என்று சொல்வதில் ஒரு தோஷத்தையுங் காணேம். இது அடியேனுடைய கல்பனை யன்று; ஸ்ரீ தேஶிகனுடைய திவ்ய ஸூக்தியினால் நன்றாக ஏற்படுகின்றது. உபாயத்வ ஸ்தாபநார்த்தமாய் ஸேவ்யத்வாதிகளைச் சொல்லுகிறார் என்று சொன்னால், ஆழ்வாருக்கு முக்கியதாத்பர்ய விஷயார்த்தம் உபாயத்வந்தானாகும்; ஸேவ்யத்வாதிகள் ஆகா என்று தோன்றுகிறது.

(2) 4, 5 - இரண்டு தஶகங்களின் தாத்பர்யமாகத்தான் (மேல் எல்லா தஶகங்களினாலும்) என்று ‘ஆதி’ ஶப்தத்தை ப்ரயோகம் செய்திருக்கிறேன். ‘அடுத்ததால்’ என்று 4 - வது பத்தின் அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறதே என்றால், அதில் ‘அநித்யம்’ என்றும், மேல் ‘ப்ராப்யாந்தரமில்லை’ என்றும் ஹேது ஹேதுமத் பாவ ஶப்தத்தினால் அதையே விஶதீகரணம் செய்வதுதான் என் தாத்பர்யம். தவிரவும், ‘அடுத்ததால்’ என்று எழுதினது, 4 - பத்தின் அர்த்தம். ‘5 - முதல் அநந்யகதித்வ பகவதேக ப்ராப்யத்வங்களையும் சொல்லுகிறார்’ என்று சொல்லிவிட்டால்தான் என்ன தோஷம் வரும்? ‘பகவதேக ப்ராப்யத்வத்தை ப்ரதிபாதிக்கும் பாசுரங்கள் மேலே இல்லை’ என்று ஸ்வாமிக்குத் திருவுள்ளமோ? ‘ஸ்ரீ ஸூக்தி இந்த அர்த்தத்திற்கும் உபலக்ஷணம்’ என்றாவது, ‘மேல் பாசுரங்களின் ஸ்வாரஸ்யத்தைக் கொண்டு ‘[illegible]’ என்கிற ஆதி ஶப்தத்தை ‘[illegible] ...[illegible]’ என்று அந்வயிப்போம்’ என்றாவது ஒருவன் சொன்னால் ஸ்ரீ ஸ்வாமி அதை அங்கீகரிக்கத்தான் வேணும்.

(3) ‘முதல் பத்துப் பாசுரங்களினால் பரத்வாதிகளை அநுபவித்துவிட்டு’ என்று எழுதியிருக்கிறேன்: ‘சொல்லிவிட்டு’ என்று எழுதவில்லை. தவிரவும், நிரதிஶயாநந்தத்வ மஹோதாரத்வ ஸூரிஸேவ்யத்வ அப்ராக்ருத விக்ரஹவத்வம் முதலியவைகள் பரத்வத்துக்கு உபபாதகமாக இருக்கிறபடியினால், அவை ‘ஆதி’ என்னும் ஶப்தத்தின் அர்த்தமாகலாம். இவை பரத்வ ஸாதகங்களாக இருந்தால் வேறான குணங்களாகக் கூடாதோ? வாஸ்தவமாக ‘[illegible]’ என்று எழுதின அடியேனுடைய தாத்பர்யம் என்னவென்றால், பரத்வ ப்ரதாநம் என்பதுதான். அதை உபபாதிக்கும் உக்தகுணங்கள் இவ்விடத்தில் அப்ரதாநங்க ளாகையினால் சோத்யாவகாஶமே இல்லை.

சென்ற ஸஞ்சிகையில் ப்ரசுரமானது அடியேன் எழுதினதன் ஸங்க்ரஹ மாகையினால் ந்யூநாதிரேகங்கள் இருக்கலாம். மாத்ருகையை வாங்கிக் கடாக்ஷித்துத் திருவுள்ளப்படி நியமிக்க ப்ரார்த்திக்கிறேன்.

கண்கொடுத்த வணிதம்.
10—5—12. } புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசார்யன்.

## (2)

## கேவல ஆசாரம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

சென்ற ஸஞ்சிகையில் ‘ஓர் வைதிகர்’ என்று கையொப்பம் செய்திருக்கும் ஒருவர், இக்காலத்தில் நமது வைதிகர்களிட மிருக்கும் ப்ரமாணரஹிதமான சில அநுஷ்டாநங்களைப்பற்றி எழுதுவதாக ப்ரதிஜ்ஞை செய்து, முதலில் ஆலயாதிகளில் ப்ரஸாத ஸ்வீகாரஞ் செய்துகொள்வதைப்பற்றி எழுதியிருக்கிறார். பகவந் நிவேதிதமான அந்நம் ஸர்வப்ரகாரத்தாலும் உத்

தேஶ்யமாக இருக்கையிலும், இந்தக்காலத்தில் ஆலயாதிகளில் நடக்கிற அக்ரமங்களை உத்தேஶித்தும், யதோக்தமாகப் பகவந்நிவேதநமாகாம லிருப்பதைக்கொண்டும் அந்த ப்ரஸாதத்திற்குத் தோஷம் ஏற்படுகிறது என்பதே அவருடைய கருத்து என்று தெரியவருகிறது. அப்படி எண்ணுவது பிசகு என்று சொல்லக் காரணம் ஒன்றும் தெரியவில்லை. எவ்விதமான அக்ரமம் நடந்தாலும் ஆலயாதிகளில் பாகமானதால் மாத்திரம் அந்த அந்நத்திற்குப் பரிஶுத்தி உண்டாகிறது என்று சொல்வது ஸரியான காரணம் அன்று. பகவந் நிவேதநார்ஹம் ஆகும் பொருட்டு எந்த எந்த விதங்களில் எவ்வளவு பரிஶுத்தமாக இருக்க வேண்டியதோ, அந்த அந்த விதங்களில் அவ்வளவு பரிஶுத்தமாக இருந்தாலொழிய அந்த அந்நத்தைப் பகவான் கடாக்ஷிப்பர் என்று நினைப்பதற்கு ஹேதுவே இல்லை. பகவாந் அங்கீகரிக்காவிட்டால் அதற்குத் தச்சேஷத்வமும் பாவநத்வமும் எப்படி ஸம்பவிக்கும்? க்ஷுந்நிவாரணார்த்தம் அதைப் புஜிப்பதில் யாதொரு ஆக்ஷேபமும் இல்லை; அஶுத்தாந்ந போஜநத்தால் உண்டாகும் கெடுதல்கள் மாத்திரம் அதைப் புஜிப்பவனை விடமாட்டா.

இதை உணர்ந்தே அநேக இடங்களில் சில பாப பீருக்களான ஶாஸ்த்ரஜ்ஞர்கள் ஆலயாந்ந ஸ்வீகாரத்தை வர்ஜித்திருக்கிறார்கள். ஆனால், அப்படி வர்ஜித்திருப்பவர்கள் மிகவும் ஸ்வல்பமே. பெரும்பாலும் வைதிகஸாமாந்யர்கள் கொஞ்சமேனும் தோஷங்களைக் கவனிக்காமல் ஆலயாந்நம் என்கிற காரணத்தை மாத்திரம் கவனித்து அதைப் பரிக்ரஹிப்பதை நாம் பார்க்கிறோம். க்ரயத்துக்கு அந்நம் வாங்கிப் புஜிப்பதை ஶாஸ்த்ரம் கண்டிக்கையிலும், ஆலயங்களில் அப்படிச் செய்வது பாதகமல்லவென்று நமது வைதிகர்கள் ப்ரவ்ருத்திக்க வில்லையா? யாதொரு பாசகனை ஜாதியாலும் சரித்ரத்தாலும் ஹீநனென்றும் அவன்தொட்டுப் புஜிப்பது பிசகு என்றும் வைதிகர்கள் விலக்குகிறார்களோ, அதே பாசகன் ஆலயங்களில் ஏற்பட்டிருக்கும் பக்ஷத்தில் க்ராஹ்யனாகவே ஆகிவிடுகிறான். இதை எப்படி ஶாஸ்த்ரம் ஸம்மதிக்கும்? சில ஆலயங்களில் ஏராளமான அந்நம் பாகமாகிறபடியால், அந்த அந்நத்தை க்ரமப்படி ஸித்தம் செய்வது துஸ்ஸாத்யமாகி, அத்யந்தம் ஜுகுப்ஸாவஹமான சில ரீதிகளை அநுஸரித்து அந்நங்களைக் கலப்பதாகக் கேள்விப்படுகிறோம். இது ந்யாய்யமாகுமா? இப்படியெல்லாம் செய்வதை ஏன் நமது வைதிகர்கள் நிவ்ருத்திக்கக் கூடாது? ஆலயங்கள் பஹுவாக இருப்பதாலும், ஶுத்தரான கைங்கர்யபரர்கள் துர்லபராக இருப்பதாலும், இந்தச் சீர்திருத்தம் செய்வது ஸாத்யமன்று என்று சொல்வது ஸரியான ப்ரத்யுத்தரமாகாது. சீர்திருத்தம் செய்வது துஸ்ஸாத்யமானால், ஆலயங்களை நாம் விடவேண்டியே வரும்; ஆலயங்களுக்கும் இந்தக் காலத்து ஹோட்டல்களுக்கும் வாசியில்லை யென்று சொல்வது தத்யமே.

மன்னார்குடி, 16—5—12. } மற்றொரு வைதிகர்.

ஶ்ரீ:

# பிரிவுகளின் அறிக்கை.

## மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு.

சென்ற ஏப்ரல் மாஸம் 21௳ ஞாயிற்றுக்கிழமை பகல் 4 - 30 மணிக்குத் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் மேற்படி பிரிவின் ஸதஸ் ஒன்று சேர்ந்தது. ஸ்ரீ. சேட்லூர் - நரஸிம்ஹாசாரியர், திருப்பாவை 5 - வது பாசுரத்தைப்பற்றி உபந்யாஸம் செய்தார். யதாபூர்வம் ஆஸ்திகர்களில் அநேகர் எழுந்தருளியிருந்து உபந்யாஸத்தால் பெருத்த ப்ரயோஜநத்தை அடைந்தார்கள். இவ்வளவு பரிஶ்ரமப்பட்டு உபகாரம் செய்யும் ஸ்ரீ நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி விஷயமாக ஸதஸ்யர்கள் எல்லாரும் ப்ரத்யுபகார பாவநையைச் செய்யவேணுமென்று உத்தேசித்து, தங்கள் தங்கள் ஶக்திக்கு அநுகுணமாக ஸம்மாநத்தைக் கொடுக்க, அந்த ஸம்மாநத்துடன் பிரிவின் சொந்தத் தொகையிலிருந்தும் ஸ்வல்பம் சேர்த்துச் சேர்ந்த தொகையை அந்த ஸ்வாமிக்கு மேற்படி பிரிவின் மானேஜிங் கமிட்டியார் ஸமர்ப்பித்தார்கள். பிறகு ஸதஸ் கலைந்தது.

மயிலாப்பூர், 1—5—12. } கார்யதர்ஶி. (சென்னை - சைதாப்பேட்டை பிரிவு.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

ஸ்வதேசபாஷாபி வ்ருத்தி.

ப்ராசீந காலங்களில் சிறுவர்கள் உபநயநாநந்தரம் சில காலம் குருகுலவாஸம் செய்கிற தென்றும், அந்தக் காலத்தில் வேதவேதாங்கங்களைப் படித்து அவைகளில் ப்ராவீண்யத்தை ஸம்பாதித்து வித்யா வ்ரத ஸ்நாதராய்ப் பிற்கு கார்ஹஸ்த்யத்தைத் தேடிப் புகுவதென்றும் அநேக நியமங்கள் நடைபெற்று வந்தன. ப்ரஹ்ம க்ஷத்ரிய வைஶ்யரான த்ரைவர்ணிகர்களுக்கு மாத்திரம் இம்மாதிரியான நியமங்கள் ஏற்பட்டிருந்தாலும், அவர்களில் எல்லாரும் இவைகளை அநுஷ்டித்து வந்தபடியால் வித்யை லோபத்தை அடையாமல் வ்ருத்தி யடைந்தே வந்தது; ஸம்ஸ்க்ருதம் முதலிய பாஷைகளின் ப்ரசாரமும் எவ்வித குறைவையும் அடையவில்லை. பின்பு பல காரணங்களால் அந்த நியமங்களுக்குப் பங்கம் ஏற்படவே வித்யைகளெல்லாம் மாலிந்யத்தை அடைந்து, ஸ்வதேஶ பாஷா பண்டிதர்கள் என்கிற வித்வாங்கள் அநேகமாக லோபத்தை அடைந்தவர்களாய், தேஶத்திற்கே ஓர் பெருத்த குறைவு ஏற்பட்டு விட்டது. ஆனால், தேஶ பாஷையின் ஸாமாந்ய ஜ்ஞாநம் மாத்திரம் அற்றுப் போகாமலிருக்கும்படி சில ஹேதுக்கள் இருந்து வந்தன. அதனால், ஸம்ஸ்க்ருதம் முதலிய சில பாஷைகள் ஸ்வதேஶீயங்களாக இருக்கின்றனவென்றும், அவைகளை அப்யஸிப்பதில் சில பலன்கள் உண்டு என்றும் இத்யாதியான எண்ணம் ஆத்யந்திகமாக மாறவில்லை. இங்க்லிஷ் பாஷையை அத்யாபநம் செய்யும் பாடஶாலைகளில் ஸ்வதேஶ பாஷைகளுள் ஒன்றை அப்யஸிப்பது அவஶ்யம் என்கிற நியமம்



ஒன்று இருந்தது. அந்த நியமத்தாலே, பாஷாந்தராப்யாஸத்தையே ப்ரதாநமாக நினைத்து ப்ரவ்ருத்திக்கும் பாலர்களும் இந்தப் பாஷைகளையும் அப்யஸித்து வந்தார்கள். எல்லாருக்கும் ஸமர்மகமான ஜ்ஞாநம் ஜநிக்காவிட்டாலும், சிலருக்காவது ஒரு ருசி பிறந்து, இந்தப் பாஷைகளுக்கு அதனால் கிஞ்சித் ப்ரசாரம் ஸம்பவித்தது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே.

இரண்டு மூன்று வருஷகாலமாக இதற்கும் பங்கம் உண்டாகக்கூடிய சில மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. இங்க்லிஷ் பாடஶாலைகளின் ப்ரவர்த்தகர்கள், ஸ்வதேஶ பாஷைகளுள் ஒன்றை அப்யஸிப்பதை ப்ரதாநமாகச் செய்திருந்த நியமத்தை மாற்றி, அப்படி அப்யஸிப்பதை ஐச்சிகமாகச் செய்துவிட்டார்கள். இப்படிச் செய்தது முதல் பாஷாப்ரசாரத்திற்கு ஸம்பவித்திருக்கும் குறைவு இவ்வளவு என்று சொல்லிமுடியாது. 100 - பாலர்கள் பாஷாப்யாஸம் செய்துகொண்டு வந்த விடத்தில் இரண்டு மூன்று பெயர்கூட இப்பொழுது அப்யஸித்து வருவதாகத் தெரியவில்லை. இதே ரீதியாக இன்னும் கொஞ்ச காலம் நடந்து வரும் பக்ஷத்தில் நமது பாஷைகளுக்கு ஆத்யந்திகமாக லோபம் ஏற்பட்டுவிடு மென்பதில் ஆக்ஷேபமே இல்லை. இது மிகவும் ஶோசிக்க வேண்டிய விஷயமே.

இப்பொழுது நாம் கேள்விப்படுவதில், இந்தியா கவர்ன்மெண்டார் அவர்கள் இதன் அநௌசித்யத்தை உணர்ந்து, ஸ்வதேஶ பாஷைகளை லோபம் அடையவொட்டாமல் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேணுமென்றும், அதற்காக உசிதமான தநவ்யயம் செய்வதில் தங்களுக்கு இஷ்டமென்றும் லோகல் கவர்ன்மெண்டார் அவர்களுக்கு உத்தரவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது. லோகல் கவர்ன்மெண்டார் இது விஷயத்தில் என்ன செய்யப்போகிறார்களென்று தெரியவில்லை. எது செய்தாலும் ஸாதகமாகவே இருக்கும். ஸ்வதேஶ பாஷைகளின் அபிவ்ருத்தியைக் கோருகிறவர்கள் எல்லாருக்கும் இது ஒரு ஸந்தோஷத்தைக் கொடுக்கத்தகுந்த ஸமாசாரம்.

**ஸ்ரீ அஹோபில மடமும், ஶிஷ்ய ஸபையும்.**

இரண்டு வருஷகாலமாக 'ஸ்ரீ அஹோபிலமட சிஷ்ய ஸபை' என்று நடைபெற்று வரும் ஶிஷ்ய ஸபையைப் பற்றி, ஸ்ரீ மடத்தின் ஏஜண்டாக இருக்கும் ஸ்ரீ. உ.வெ. குப்புஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி ஏதோ ஓர் விளம்பர பத்ரிகையை ஸ்ரீ ஸ்வாமியின் நியமநத்தின் பேரில் இப்பொழுது ப்ரசுரம் செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. அந்த ஶிஷ்ய ஸபை க்ரமப்படி ஏற்படுத்தப்பட்டது அன்று என்றும், அந்த ஸபையை ஸ்ரீ ஸ்வாமி அங்கீகரிக்காததனால் அந்த ஸபையின் தீர்மானங்களும் அந்த ஸபையாரால் செய்யப்படும் மற்றைக் கார்யங்களும் தங்களுக்கு அநாதரணீயங்களென்றும் அந்தப் பத்ரிகையிற் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த விஷயங்களில் இந்த ஸபைக்கு க்ரமவிரோதம் ஏற்பட்டிருக்கிறது? என்று விஶேஷித்துச் சொல்லாமல் ஸ்தூலமாக 'க்ரமமாக நடக்கவில்லை' என்று மாத்திரம் சொல்லும் இந்தப் பத்ரிகைக்குப் பதில் விஜ்ஞாபநம் செய்துகொள்ள நாம் இப்பொழுது ஸித்தமாக இல்லை. ஆனாலும், ஶிஷ்யர்களென்று ஶேஷத்வாநுஸந்தாந புரஸ்ஸரமாக அணுகும் நம்மை ஸ்ரீ ஸ்வாமி நிராகரிப்பது ஸதாசார்யர்களுக்கு லக்ஷணமன்று என்று மாத்திரம் ஒரு விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகிறோம்.

"𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌕𑍃𑌤𑌾𑌗𑌸𑌾𑌮𑌪𑌿 𑌵𑍃𑌣𑍋𑌷𑌿 𑌵𑍃𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑌂 𑌪𑌾𑌯
𑌸𑌂 𑌪𑌰𑌿𑌷𑌦𑍋 𑌭𑌯𑌾𑌦𑌕𑍍𑌷𑌿𑌤𑍄𑌃 - 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌜𑌨𑌸𑍍𑌯
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌪𑍋𑌽𑌪𑌿 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑌂𑌶𑍍𑌵𑌸𑌨𑍀𑌤𑍍𑌯𑌨𑌵𑌪𑌾𑌯𑌯𑌾𑌸𑌿 ॥"

---

ஸ்ரீ:.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃 - ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] பரீதாபி௵ ஆனி௴. [ஸஞ்சிகை 5.

## விஶிஷ்டாத்வைதம்.

—oo:o:oo—

### 9. ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்கள்.

ஸ்ரீ பகவானுடைய அவதார சேஷ்டிதங்களின் ஶ்ருதி ஸித்தமான பெருமையை மயர்வற மதிநலம் பெற்ற புத்திமதாக்ரேஸரர்களே அறிந்து ஈடுபடுகிறார்கள்; கர்மத்தாலே ஸங்குசிதஜ்ஞாநரான நாம் பரத்வ ஸ்வபாவத்தை அறியாமல் அந்தச் சேஷ்டிதங்களை இதர ஸஜாதீயங்களாக்குகிறோமே! நம்முடைய மௌட்யத்தை என்னவென்று சொல்வோம்?

"ஶ்ரீயஸ்ஸ்வம் பதிஜாநந்தி யோகின: பரம் ஸாவம் ஶந்தஜ ஜ்ஞாதி ஸந்தஷ்டம் - அஜாநந்தஸ்ஸ்வஜாநந்தி ஶந்த்யா ஜநிஷ்வந்தே ஸமவந்த ஜந்து ஜஶ்ச".

எம்பெருமான் எல்லாச் சேதநா சேதநங்களுக்குந் தலைவனாய் அபரிச்சிந்ந ரூப குண விபூதிகனாக ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கிறானென்று நாம் இது வரையிற் சொன்னதனால் தெரிந்துகொண்டோம். இப்பொழுது, லோகத்தில் த்ரிமூர்த்திகளென்று

வ்யவஹரிக்கப்படும் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்களின் நடுவே கூறப்பட்டு நிற்கும் ஸ்ரீ விஷ்ணு இந்த வைகுண்டநாதன்தானா? அவன் நமக்கு உபாஸ்யனா? அவனைப்பற்றி நமது ஸித்தாந்தம் சொல்வது என்ன? என்பதை விசாரிப்போம்.

நமது தேஶத்திய மத ப்ரவர்த்தகர்களுள், 'ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்களென்று சொல்லப்படும் மூன்று மூர்த்திகளும் ஸமம்; இவர்கள் 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்று உபநிஷத் குறிக்கும் பரமாத்மாவை விட வேறுபட்டவரல்லர்; பரப்ரஹ்மமே ஜகத் வ்யாபாரத்திற்காக இம்மூன்று விதமாக ஆவிர்ப்பவித்து நிற்கிறது; இந்த மூன்று ஆவிர்ப்பாவங்களுக்குள் தாரதம்யமே கிடையாது' என்று சொல்லுகிறவர் சிலர் உண்டு. இவர்களைக் கேவலம் அநிரூபகர்கள் என்று சொல்வதற்கு ஸாத்யமில்லை. 'மஹாகவி' என்றும், 'கவி ஸார்வபௌமன்' என்றும் பெரியோர்களாற் கொண்டாடப்படும் காளிதாஸன் இம்மாதிரியான கொள்கையைக் கொண்டவன். "ஏகைவ மூர்த்திர்பிபிதே த்ரிதா ஸா ஸாமாந்யமேஷாம் ப்ரதமாவரத்வம்" என்று குமாரஸம்பவ மென்னும் காவ்யத்தில் தனது அபிப்ராயத்தை அவன் வெளியிட்டிருக்கிறான். இன்னும் அவனுக்கு ஸத்ருஶரென்று சொல்லக்கூடிய நிரூபகர்களில் அநேகர் இம்மாதிரியாகவே உபதேஶித்திருக்கிறார்கள். இப்பொழுது நமக்குள் உண்டாயிருக்கும் வைஷித்யத்தை நிரம்பவும் ஶோசித்து, 'இந்தப் பேதங்களெல்லாம் பக்ஷபாதத்தாலும் காம க்ரோதாதிகளாலும் ஏற்பட்டன' என்றும், 'இந்தப் பேதங்களை நாம் பாராட்டும் வரையில் நமக்கு ஶ்ரேயஸ் கிடையாது' என்றும் சொல்லிக்கொண்டு ஹிந்துக்கள் எல்லாருக்கும் ஐகமத்யத்தைத் தேடமுயலும் ஆதுநிக நிரூபகர்களும் இந்த மதத்தையே ஶ்லாக்யமாகக் கொண்டாடுகிறார்கள். இப்படி பல பெரியோர்களாற் கொண்டாடப்படும்பொருட்டு, இதற்கு ப்ரமாணங்கள் பஹுவாகவும் த்ருடமாகவும் இருத்தல் வேண்டும். அவை என்னவென்றும், ஸரியான ப்ரமாணங்கள்தானாவென்றும் நாம் இங்குப் பராமர்ஶிப்பது ஸாத்யமில்லை. ஆனால், ஒன்றுமாத்திரம் சொல்லலாம்: பௌராணி



கர்களென்று இதிஹாஸ புராணங்களையே பெரிய ப்ரமாணங்களாக எண்ணியிருக்குமவர்களில் அநேகர் இம்மாதிரியான ஸித்தாந்தங் கொண்டவர்களென்று சொல்லலாம். யதார்த்தமாகவே இதற்கு உதவியாக அநேக உபாக்யாநங்கள் அவைகளில் காணப்படுகின்றன. அவைகளில் ஒன்றை இவ்விடத்தில் உதாஹரித்துவிட்டு, பின்பு இந்த த்ரிமூர்த்தி வாதத்தைப் பற்றி நமது ஸித்தாந்தம் என்ன சொல்லுகிறது என்பதை விவரிப்போம்.

ப்ரஹ்ம ஜ்ஞாநியான ஶுக மஹர்ஷியால் ப்ரணீதமாகியிருக்கும் ஸ்ரீ பாகவதத்தில் பின்வரும் உபாக்யாநம் ஒன்று இருக்கின்றது. அத்ரி யென்னும் மஹர்ஷி, ப்ரஹ்மாவினால் ப்ரஜாஸர்க்கத்தில் ஏவப்பட்டவராய்க் கொண்டு, பத்நியுடன்கூட ருக்ஷ பர்வதமென்று சொல்லப்படும் குலாத்ரிக்குத் தபஸ் செய்யும்பொருட்டுப் புறப்பட்டுப் போனார். அவ்விடத்தில், அவர், ஶோகதுக்கமென்பதை வர்ஜித்து, வாயு பக்ஷகராக அநேகவருஷ காலம் ஜகதீஶ்வரனைக்குறித்துத் தபஸ் செய்து, "ஶரணம் தம் ப்ரபத்யேऽஹம் ய ஏவ ஜகதீஶ்வர:" ['இந்த ப்ரபஞ்சத்துக்கு ஈஶ்வரன் எவனோ அவனையே ஶரணமாக அடைந்தேன்'] என்று ஸதா அநுஸந்தாநம் செய்துவந்தார். இதைப்பார்த்த ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்களான மூன்று ப்ரபுக்களும் [ப்ரஹ்மவிஷ்ணுஹராஸ்த்ரய:] அத்ரியின் ஆஶ்ரமபதம் செல்லவே, அவர்களுடைய ப்ராதுர்ப்பாவத்தால் தேர்ந்த விளக்கத்தை யடைந்த மநஸ்ஸை யுடையவராய் அந்த மஹர்ஷி, ஸர்வலோக ஶ்ரேஷ்டர்களான [ஸர்வலோககரீயஸ:] அந்த ப்ரபுக்களை ஸ்தோத்ரஞ்செய்து பின்வரும் ஓர் ப்ரஶ்நத்தையுஞ் செய்தார்:—

"விஶ்வோத்பவஸ்திதிலயேஷு விபஜ்யமாநைர் மாயாகு
ணைரநுயுகம் விக்ருஹீததேஹா: - தே ப்ரஹ்மவிஷ்ணு
கிரிஶா: ப்ரணதோऽஸ்ம்யஹம் வஸ்தேப்ய: க ஏவ பவதாம் ம
இஹோபஹூத: ॥ ஏகோ மயேஹ பகவாந் விவிதப்ர
தாநைஶ்சித்தீக்ருத: ப்ரஜநநாய கதம் நு யூயம் - அத்ராகதா

ஸம்ஹர்த்தாரம் தேவேசம் த்ருஷ்ட்வா ப்ரஹ்ம விஷ்ணு ஹர நதிவிஸ்மயோ ||" "ஹே ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்களே! ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமாகிய வ்யாபாரங்களை உங்களுக்குள் விபாகஞ்செய்துகொண்டு அததற்கு அநுகுணமான தேஹத்தை அங்கீகரித்து ஜகத்தின் வ்யாபாரத்தை நீங்கள் நடத்தி வருகிறீர்கள் என்று நான் அறிவேன். உங்களை இப்பொழுது நான் நமஸ்காரஞ்செய்து ஒரு ப்ரஸ்நஞ் செய்கிறேன்; அதை க்ருபை செய்து விளங்க அருளிச்செய்ய வேணும். நான் ப்ரஜா ஸர்க்கத்தின்பொருட்டுத் தேவதைகளுக்குள் ப்ரதாநதமமான தைவம் எதுவோ அதையே த்யாநஞ்செய்து அந்த ஒரு தைவத்தினது தர்ஶநத்தையே உத்தேஶித்துத் தபஸ்செய்துவந்தேன்; இப்பொழுது நீங்கள் மூன்று பெயரும் ப்ரஸந்நர்களாக இருக்கக் கண்டு எனக்கு அத்யந்தம் பெரிய ஆஶ்சர்யம் ஜநித்திருக்கிறது. உங்களுக்குள் யார் அம்மாதிரியான ப்ரதாநதமமான தைவம் என்பதை நீங்களே க்ருபையுடன் எனக்கு உணர்த்த வேணும்.'

இதைக் கேட்ட தேவதைகள், கொஞ்சம் புன்னகைகொண்டு பின்வருமாறு உத்தரமளித்தார்கள்:

"யதாக்ருதஸ்து ஸங்கல்போ பவதா தேனைவ நாந்யதா |
ஸத்ஸங்கல்பஸ்ய தே ப்ரஹ்மந் யஸ்மை த்யாயஸி தேவயம் ||"

'ஹே ப்ராஹ்மணோத்தமரே! நீர் எந்த ஸங்கல்பத்தைக் கொண்டு தபஸ்ஸில் ப்ரவ்ருத்தித்தீரோ, அந்த ஸங்கல்பம் நிஶ்சயமாக நிறைவேறுமே தவிர நிறைவேறாமல் ஒருகாலும் நிற்காது; நீர் யாரை த்யாநம் செய்ததாகச் சொல்லுகிறீரோ, அவர்கள் தான் நாங்கள்.'

இந்த உத்தரத்தை அளித்துவிட்டு, 'எங்களது அம்ஶர்களாகவே உமக்கு ப்ரஜைகளும் உண்டாகும்' என்று அநுக்ரஹத்தையும் செய்து மூவரும் பின்பு அந்தர்ஹிதரானார்கள்.

இந்த உபாக்யாநத்தை ப்ரமாணமாக ஒப்புக்கொண்டால், 'ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்கள் மூவரும் ஜகதீஶ்வரனை பரமாத்



மாவைவிட அபிந்நர்கள்' என்பதுதான் ஶாகமஹர்ஷியின் அபிப்ராயம் என்று சொல்வதற்கு என்ன ஆக்ஷேப மிருக்கக்கூடும்?

இம்மாதிரியாக த்ரிமூர்த்திகளுக்கும் ஸாம்யத்தை ஒப்புக்கொள்ளும் ஸித்தாந்திகளைத் தவிர்த்து, மூன்று மூர்த்திகளுள் ஒவ்வொருவரையும் பரதேவதையாக அங்கீகரிக்கும் ஶைவ வைஷ்ணவர்கள் முதலியவர்களும், இந்த மூன்று மூர்த்தி நீங்கலாக வேறே ஒரு தத்வமுண்டு என்று சொல்லும் துரீய ப்ரஹ்ம வாதிகளும் பலர் உண்டு. இவர்களுள் ஒவ்வொருவரும், தமது ஸித்தாந்தத்துக்கு வேண்டிய ப்ரமாணங்களைப் பரஶ்ஶதங்களாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனல், நமது ஆசார்யர்கள் விஷ்ணுவுக்கே பரத்வத்தை ஸாதிக்கும் ஸித்தாந்தத்தை ஶாஸ்த்ர ஸம்மதமென்று அங்கீகரித்திருக்கிறார்களே தவிர, மற்ற ஒன்றையும் ஸாதுவாக ஒப்புக்கொள்ளவில்லை. நமது மதம் சொல்வது என்னவென்றால்,—'த்ரி மூர்த்யந்தர்க்கதமான விஷ்ணுவே ஸாக்ஷாத் பரமகாரண பூதமான பரப்ரஹ்மம், அவனே ஸர்வேஶ்வரன், அவனுக்கு வேறானதெல்லாம் அவனுக்குப் பராதீநமே' என்பது தான். அதாவது - "யத்தத் அத்ரேஶ்யம் அக்ராஹ்யம் அகோத்ரம் அவர்ணம் அசக்ஷுஶ்ரோத்ரம் தத் அபாணிபாதம் நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் தத் அவ்யயம் யத் பூதயோநிம் பரிபஶ்யந்தி தீரா:" என்கிறபடி அசக்ஷுர்க்ராஹ்யனாகவும், நாம ரூப ரஹிதனாகவும், அஸங்குசித கல்யாண குண கணனாகவும், சேதநாசேதநவிஸஜாதீயனாகவும், ஸமாப்யதிக வஸ்த்வந்தர ரஹிதனாகவும், ஸகலஜகந் நியந்தாவாகவும், அந்த நியமநாநுகுணமான ஜீவாந்த: ப்ரவேஶ ஶக்தியை யுடையவனாகவும் எவன் சொல்லப்படுகிறானோ அந்த ஜகதீஶ்வரனே இந்த விஷ்ணு; அவனுடைய அவதாராந்தரங்கள் போலவே இதுவும் ஒரு அவதாரம்; அவை போலவே இதுவும் அப்ராக்ருத ஶுத்த ஸத்வ மயம்; இது, ஸாது ஸம்ரக்ஷணம் துஷ்க்ருத்விநாஶநம் தர்மஸம்ஸ்தாபநம் இவை முதலியவற்றையே பலமாக உடையது; பரமேஶ்வர ஸம்பந்தமான ஸ்வபாவத்தை விடாமலே கொண்டுள்ளது: ப்ரஹ்ம ருத்ரர்க

ளோ அப்படி அவதாரங்கள் அல்ல; ஆவேஶமாத்ரமே; பகவானுடைய அநுப்ரவேஶத்தால் ப்ராப்தோதயர்களாகிறார்கள்; அவதார ப்ரகரணங்களில் பகவதவதாரங்களாகச் சொல்லப்படாததாலும், ஸ்ருஜ்யகோடியில் பகவச்சாஸநாநுவர்த்திகளாகவே வெளியிடப்பட்டிருக்கிறபடியாலும், இவர்கள் பகவானுமல்லர்; பகவானோடொத்தவர்களுமல்லர்; இதுதான், நமது ஆசார்யர்களின் ஸித்தாந்தம்.

இதற்கு ப்ரமாணம் என்ன? — மற்ற அம்ஶங்களிற்போலவே இதிலும் ஶ்ருதி ஸ்ம்ருதி புராணங்களின் வாக்யங்களே ப்ரமாணம். இந்த ஸித்தாந்தத்திற்கு விருத்தமான பல வாக்யாந்தரங்கள் ஶ்ருதி முதலியவைகளிலேயே காணப்பட்டாலும், பலாபலங்களைப் பராமர்ஶித்து இவர்கள் இம்மாதிரியான கொள்கையைக் கொண்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. 'ஶைவ வைஷ்ணவம்' என்று சொல்லப்படுகிற இந்த வாதம் ஏராளமானது; அதுமுழுவதையும் இவ்விடத்தில் உதாஹரித்து ஒரு விதமான முடிவுக்கு இப்பொழுது நாம் வரக்கூடுமென்பது ஸாத்யமன்று; ஆகையால், திங்மாத்ரம் உதாஹரிப்பதைப் பெரியோர்கள் க்ஷமிக்கவேணும்.

(1) "நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே" "நாராயணாத் ருத்ரோ ஜாயதே" "ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்டாய" இத்யாதியான ஶ்ருதிவாக்யங்கள் பல முறையே ப்ரஹ்ம ருத்ரர்களின் கார்யத்வம் முதலானவற்றை உபபாதிக்கின்றன. 'ஆனால், இதே மாதிரி மற்றொரு ஶ்ருதி வாக்யம் ["ஸர்வமிதம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே ஸர்வே ஸம்ப்ரஸூயந்தே ஜநிதேந்த்ரஸ்ய ஜநிதோத விஷ்ணோ: ஸ ஏவ விஷ்ணு: ஸ ப்ராண:"] விஷ்ணுவுக்கும் கார்யத்வத்தை ஸூசிப்பிக்கிறதே' என்றால், 'அவதார ரூபத்வேந விஷ்ணுவுக்கு இது உபபந்நம்' என்று மறுமொழி ஏற்படுகிறது. 'அந்த மாதிரியான அவதார ரூபத்வேந ஏற்படும் உபபத்தி ப்ரஹ்ம ருத்ரர்களுக்கும் அந்வயிக்கலாம்; ஆகையினால், மூன்று மூர்த்திகளுக்கும் "தாத்ருத்வம்" உண்டாகும் என்றால், ப்ரஹ்ம ருத்ரர்கள் பகவானை அந்தர்யாமியாகக் கொண்டவர்களென்றும், பகவானுடைய அநுக்ரஹத்தினாலேயே அவர்களுக்குத் தங்கள் தங்கள் கார்ய நிர்வாஹத்தில் ஸாமர்த்யம் உண்டாகிறதென்றும் பலமுறையே ஶ்ருத்யந்தரங்கள் சொல்லுகிறபடியாலும், அம்மாதிரியான வாக்யங்கள் விஷ்ணுவின் விஷயத்தில் காணப்படாததாலும், அந்த ஶங்கைக்கு அவகாஶமில்லை. "கஸ்ய தேவஸ்ய ஈஶாநேஶா வயா விஷ்ணோர்ஶேஷஸ்ய வப்ரயே ஹவிர்பி: விதேம ருத்ரோ ருத்ரீயம் ச ஹிதம்" "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை" இத்யாதியான வாக்யங்கள் ப்ரஹ்ம ருத்ரர்களின் மாஹாத்ம்யம் பகவத் ப்ரஸாதாயத்தம் என்பதையும், ப்ரஹ்ம ருத்ர ஸம்வாதத்தில் ருத்ரனைக்குறித்துச் சதுர்முகனால் சொல்லப்படும் "தவாந்தராத்மா மம ச யே சாந்யே தேஹிஸம்ஜ்ஞிதா: ஸர்வேஷாம் ஸாக்ஷிபூதோऽஸௌ ந க்ராஹ்ய: கேநசித் க்வசித்" என்னும் வாக்யமும், பகவானைக்குறித்து ருத்ரனால் சொல்லப்படும் "ஆராதிதா: ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: - குதோऽஹம் ஈஶிதே ஜாஸ:" என்னும் வாக்யமும், ப்ரஹ்ம ருத்ரர்களுக்குப் பகவான் அந்தர்யாமியாக இருக்கிறான் என்பதையும் விளக்குகின்றன. "வஸிஷ்டிதேவேऽக்ஷ ஸங்க்ராமே ஶாஸ்த்ரா. ஈஶ்வரார்த்ரா ஶாஸ்த்ரி - ப்ராஜாபத்யம் த்வயா கர்ம ஸர்வம் மயி நிவேஶிதம்" என்றும், "தீயேத ச த்ருஷ்டிர் வியுக்தேந ஶிவ: ஶிவோऽஸம்ப்ருச:" என்றும் ப்ரஸித்தியாயிருப்பதனால், தங்கள் தங்கள் அதிகாரத்தில் பர்யவஸித்துநிற்கும் ப்ரஹ்மத்வம் ஶிவத்வம் முதலியவைகளும் பகவததீநம் என்று ஏற்படுகிறது.

2. இன்னும் அநேக வாக்யங்கள், பரமாத்மாவின் தன்மையையும், அந்தப்பரமாத்மா, கீழ்ச்சொல்லியபடி அநேக அவதாரங்களெடுக்கக்கூடிய ஸாமர்த்யத்தையும், முமுக்ஷுக்களால் உபாஸிக்கக்கூ

டிய யோக்யதையையும், அபஹதபாப்மத்வம் நிகிலஜகத்காரணத்வம் முதலிய குணங்களையும் பரஸ்பர ஸமாநாதிகரணங்களாக பஹுஶ: சொல்லுகின்றன. ஆகையால், அவதார ஶாலித்வம் எந்தத்தே வதையினிடம் சொல்லப்பட்டிருக்கிறதோ, அந்தத் தைவமே பர மாத்மா, முமுக்ஷூபாஸ்யம், நிகில ஜகத்காரணம் என்று வ்ய க்தமாக ஏற்படும். "ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத: - த்யக்த்வா தேஹம் புநர் ஜந்ம நைதி மாமேதி ஸோ(அ)ர்ஜுந" என்றும், "நாகாரணாத் காரணாத்வா காரண காரணாதபி - ஶரீர க்ரஹணம் வாபி தர்மத்ராண க்ருதே ஹரே: ஸம்பவாமி யுகே யுகே" என்றும், "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" ..... "பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் - தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்றும், "ஸமஸ்த ஶக்தி ரூபாணி ... " என்றும், "..... விஷ்ணோ: ..... " என்றும், "கிருஷ்ண ... " என்றும் அநேக வாக்யங்கள், அகர்ம க்ருதமாயும் அப்ராக்ருதமாயும் ஜகத் ரக்ஷணைக பலகமாயுமுள்ள அநேக அவதார ஶாலித்வத்தை விஷ்ணுவைக் குறித்துச் சொல்லுகின்றன. "யஸ்யைஷா(அ)ஸ்ய ..... " என்று உபக்ரமித்து "... நாராயண:" என்று அநேகதா பரமாத்மாவை



நாராயணனாகவே சொல்லியிருக்கிறது. "தஸ்ய ... நாராயணோ ... " என்றும் அந்த நாரா யணனைக் குறித்தே அகர்ம வஶ்யதையும் கூறப்பட்டிருக்கிறது. இப்படி இந்தக் குணங்களுக்கெல்லாம் கூறப்பட்டுள்ள பரஸ்பர ஸாமாநாதிகரண்யத்தைப் பார்த்தால், விஷ்ணு பரமாத்மாவென்றே நிர்ணயமாக வேணும்.

3. இன்னும் கண்டோக்தமாக விஷ்ணுபாரம்யத்தைக் காட் டும் அநேக வாக்யங்களை அவலம்பித்து, ப்ரஹ்ம ருத்ரர்களுக் குக் கர்மவஶ்யதையும் பகவத்பராதீநதையும் ஸ்தாபிக்கப்படு கின்றன. "... " "... " என்று ப்ரஹ்ம ருத்ரர்கள் பக வானை ஆராதித்ததாகவும், அந்த ஆராதநத்தால் த்ருப்தி யடை ந்த பகவானிடமிருந்து தங்கள்தங்கள் அதிகாரத்தை அடைந்து அந்த அதிகாரக்ருத்யத்தை அவிரதம் பூர்ணமாக நிர்வர்த்தி த்து வருகிறதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ருத்ரன் ஹாலா ஹல பக்ஷணம் செய்த பொழுது பகவத் ப்ரீத்யர்த்தம் செய் ததாக, "... " என்று ... பகவதாஜ்ஞையை நிர்வஹித்து பார்வதியைக் குறித்துத் தாமே பகவதாஜ்ஞையை நிர்வஹித்து வருவதாகக் கண்டோக்தமாக அங்கீகரித்திருக்கிறார். இப்படியே ஶ்ருதியிலும் ருத்ரனுக்குக் கர்மவஶ்யத்வம் சொல்லியிருக்கிறது. ஶதபதத்தில் அஷ்ட மூர்த்தி ப்ராஹ்மணத்தில் "... ப்ரஜாபதி: ... - ... ப்ரஜாபதிரப்ரு

[illegible]" என்று அநபஹத பாப்மத்வ ரூபமான கர்ம வஶ்யத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. தைத்திரீயத்திலும் "[illegible]" என்று ருத்ரனுக்குப் பஶுபதித்வம் வரப்ரதாநத்தால் கிடைத்த தென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், ருத்ரனிடத்தில் பகவதாஜ்ஞை அவ்யாஹதையாக நிற்கிறதென்று அறிகிறோம்.

இம்மாதிரியான அநேக வாக்யங்களின் பலத்தைக்கொண்டு நமது ஆசார்யர்கள் ஸித்தாந்தம் முற்கூறியபடி செய்திருக்கிறார்கள். 'த்ரிமூர்த் யந்தர்க்கதமான விஷ்ணு, பரதேவதையின் ஸாக்ஷாத் அவதாரம்; ப்ரஹ்ம ருத்ரர்கள் இருவரும், ஸாமாந்ய ஜீவன்களைப்போலக் கர்மவஶ்யர்கள்; அவ்விருவரும், பூர்வ ஜந்மங்களில் ஶ்ருதி முதலியவைகளிலிருந்து பகவதாராதநம் செய்யும் மாதிரியைத் தெரிந்துகொண்டு அந்தந்தக் கர்மாக்களால் பகவானை ஆராதித்து ப்ரபலமான அதிகாரத்தை அடைந்திருக்கிறார்கள்; அவர்களுக்கு ஜகதீஶ்வரத்வமாவது மோக்ஷப்ரதத்வமாவது கிடையாது; ஆகையால், அவர்களை முமுக்ஷுக்கள் பரதேவதையாக உபாஸிப்பது அஜ்ஞாநத்தின் பரிநிஷ்பத்தி' என்பதுதான், வைஷ்ணவர்களின் க்ரோடீக்ருதமான நிர்ணயம்.

இந்த அர்த்தத்தை நமது ஆசார்யர்கள் வ்யக்தமாக வெளியிட்டிருப்பதை அநேக இடங்களில் நாம் பார்க்கிறோம். ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் ஸ்ரீ பராஶர பட்டர், ரங்கநாதனுடைய திருநாபீகமலத்தை வர்ணிக்குமிடத்தில் பின்வருமாறு அருளிச்செய்திருக்கிறார் :—

"[illegible]



[illegible]" ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களாகிற ஸமாந கார்யத்தில் அதிக்ருதரான ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்கள் மூவரும் அபிந்நர்களென்றும், இவர்களுக்கு ஶரீரபேதமே யுள்ளது என்றும், ஸ்வரூபத்தில் பேதமில்லை யென்றும், இம்மூவருக்கும் மேலான ஒரு தத்வ முண்டென்றும் சொல்லும் விருத்தமான தர்க்கத்தை, பெரிய பெருமாளுடைய திருநாபீ கமலமானது ப்ரஹ்ம ருத்ரர்களுக்கு ஆதிகாரணமாய் நின்றுகொண்டு நிரஸிக்கிறது; பெரியபெருமாளுக்கு வேறான தெல்லாம் அவருக்குப் பராதீநமென்று ந்யாய ஸஞ்சார க்ஷமரான நமக்கு நிஶ்சயிப்பிக்கிறது.

மற்றும் ஓரிடத்தில் 'பரத்வ ஸ்வரூபத்தை மறைக்கிறதற்காகவோ தேவரீர் ப்ரஹ்ம ருத்ரர்களின் நடுவே அவதரித்தது?' என்று உத்ப்ரேக்ஷித்துக்கொண்டு, 'அப்படி மறைப்பது ஸாத்யமன்று; "[illegible]" என்று ஶாஸ்த்ரோபதேஶ ரூபமாயும், "[illegible]" இத்யாதியாற் சொன்ன யோகோபதேஶ ரூபமாயுமுள்ள ஸத்வ ப்ரவர்த்தநமும், பாதுக்காஸஹிஷ்ணுதையாலே தேவரீர் செய்திருக்கும் ஜகத்ரக்ஷணமும் தேவரீருடைய பரத்வத்தைக் கோள் சொல்லி விடுகின்றனவே; இந்த அவதாரத்தால் தேவரீருக்கு என்ன ப்ரயோஜநம்? ப்ரத்யுத விரோதமன்றோ?' என்று ஸமாதாநம் செய்தருளியிருக்கிறார் :—"[illegible]"

இப்படி உத்ப்ரேக்ஷிப்பதன் ஆஶயம் என்ன வென்றால், த்ரிமூர்த்திகளின் நடுவே அவதரித்து நிற்பது ப்ரஹ்ம ருத்ரர்களுடன் ஒரு ஸாம்யத்தை ஸாமாந்ய ஜநங்களுக்கு ஆபத்திசெய்த

போதிலும், யதார்த்தத்தில் ஸ்ரீ விஷ்ணுவுக்குப் பரத்வ ஸூசகங்களான சிஹ்நங்கள் இருக்கிறபடியால் அவரைப் பரதேவதையாக நாம் உணரவேணு மென்பதுதான்.

ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனும், 'விஷ்ணு, ப்ரஹ்ம ருத்ரர்களுக்கு நடுவே அவதரித்திருக்கிறபடியால் அவர்களுக்கு ஸமன் என்று பாமரர்களுக்கு ஒரு வ்யாமோஹமுண்டாவது ஆஶ்சர்யமன்று; ஜ்ஞாநம் முதலிய உத்கர்ஷங்களால் ஸாம்ய கந்தமே அற்றிருக்கும் ப்ரஸித்த மத்ஸ்யாத்யவதாரங்களிற்கூட அவர்களுடன் அத்யந்த ஸாஜாத்ய ப்ரமம் ஜநங்களுக்கு உண்டாவதை நாம் பார்க்கவில்லையா?' என்று ஸாமாந்ய ஜநங்களுக்கு ஜநிக்கும் வ்யாமோஹத்தைப் பின்வரும் ஶ்லோகத்தால் நிராகரிக்கிறார்:—

"மத்யே விரிஞ்சஶிவயோர் விஹிதாவதார: க்யாதோऽபி தத்ஸமதயா ததிதம் ந சித்ரம் - மாயாவஶேந மகராதி ஶரீரிணம் த்வாம் தாநேவ பஶ்யதி க்ருஶீஶ யதேஷ லோக:"

விசித்ர வ்யாபார ஶாலியான பகவானுடைய சேஷ்டிதங்களையும் ஸ்வரூபத்தையும் அத்யந்தம் ஸங்குசித ஜ்ஞாநர்களான நாம் எப்படி அறியக்கூடும்? ப்ரமாண புரஸ்க்ருதமான ஆசார்யர்களின் ஸித்தாந்தமே நமக்குக் கதி.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

# ஸ்ரீ பாகவத தனிஶ்லோகி.

௨. தாஸாமாவிரபூச்சௌரி: ஸ்மயமாநமுகாம்புஜ: ।
பீதாம்பரதர: ஸ்ரக்வீ ஸாக்ஷாந்மந்மதமந்மத: ॥

இப்படி கோபிகள் ஸ்ரீ க்ருஷ்ணனைக் காணவேணுமென்கிற ஆசையினால் தாங்கள் ப்ரயத்நப்பட்டும் அவன் வாராமையால் அவனையே உத்தேசித்துப் பாடவே, "வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில்தூசாகும் செப்பு" என்கிறபடியே அவனை அடைவதற்கு விரோதிகளான எல்லாப் பாபங்களும் போமென்று நினைத்து அவனுடைய கல்யாணகுணங்களைப் பாடினவளவில், அவனும் இவர்கள் மநோரதித்தபடியே வந்து அவர்களோடு யதாபிமதம் ஸம்ஶ்லேஷத்தைச் செய்தருளினான் என்கிறார்.

தாஸாம் - தன்னைப் பெறுகைக்குத் தங்களிடத்தில் ஒரு கைம்முதலும் இல்லையென்று தங்களுடைய ஆகிஞ்சந்யத்தைத் தெரிந்து அவனிடத்தில் ந்யஸ்த பரைகளான அவர்களுக்கு. அன்றிக்கே, 'பரித்ராணாய ஸாதூநாம்' என்று தாமே அருளிச்செய்திருக்கிறபடியே ஸாது லக்ஷணம் நிறைந்திருக்கையாலே தனித்து அவதரிக்கத்தகுந்த யோக்யதையுள்ள அவர்களுக்கு என்றுமாம். அவ்விடத்தில் "ஜேஶநாஶிநா ஸாதூநாமவதாரோ ஷணாதிக உபஹாராணாம் க்ஷணதாகார: க்ருஷ்ணஸ்ய த்வநாத் ப்ரஶமிதஸ்ய ஸர்வமாத்ரா ஸம்பவ:" என்று வ்யாக்யாநம் செய்யப்பட்ட ஸாது லக்ஷணம் 'த்ருஷ்டி ப்ரியமாயத்த ஸ்வாதேஶ்யதாம்' என்று தங்களாலேயே வெளியிடப்பட்டதிறே.

தாஸாமாவிரபூச்சௌ - அவர்களுடைய நடுவிலே தோன்றினான்; வேறிடத்திலே தோன்றி வருகையன்றிக்கே இவர்களின்

நடுவே தோன்றினான் என்கிறபடி. அன்றிக்கே, அவர்கள் அப்படிப் பாடிக்கொண்டிருக்கையிலேயே ஆவிர்ப்பவித்துக்கொண்டு நின்றானென்கிறதாகவுமாம். அன்றிக்கே, அவர்கள் அபேக்ஷித்தபடியே அவர்களுக்காகத் தனித்து ஒரு ஆவிர்ப்பாவத்தைச் செய்து கொண்டு நின்றானென்கிறதாகவுமாம்.

அவர்களுக்காகச் செய்த ஆவிர்ப்பாவ விசேஷத்தை விவரிக்கிறது, மேல் 'ஸஸ்மிதாநநஸரோஜ:' என்கிற பதம். "அப்பொழுதைத் தாமரைப்பூ ** எப்பொழுதும் நாள் திங்களாண்டூழி ஊழிதொறும், அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே" என்கிறபடியே க்ஷணங்கள் தோறும் புதிது புதிதான விகாஸங்களையுடைய தாமரைப்பூப்போல இருக்கிற முகத்தை யுடையவனாய். அன்றிக்கே, முழுமையும் மலர்ந்ததுமன்றிக்கே முழுமையும் மொட்டுமன்றிக்கே மலர்ந்துகொண்டே யிருக்கிற அப்பொழுதைத் தாமரைப்பூப்போல இருக்கிற முகத்தை யுடையவனாய் என்றாகவுமாம். அன்றிக்கே, தான் பண்ணின வஞ்சனையால் அலமந்து நிற்கிற இவர்களுடைய நெஞ்சிலே சீற்றத்தை ஆற்றுவதற்காக இதை அங்யபரதை பாவிக்கவேணுமென்றெண்ணி, 'நெடும்போதாக ஶ்ரமப்பட்டீர்களே! பரிஹாஸத்துக்காக நான்செய்ததை நீங்கள் கண்டறியவில்லையே' என்கிறதுபோலப் பரிஹாஸோக்திகளைச் சொல்லிச் சிரித்துக்கொண்டே தோன்றினானென்கிறதாகவுமாம். அன்றிக்கே, தான் செய்த வஞ்சனையையும் அதனால் நெடும்போதாக அவர்கள் பட்ட ஶ்ரமத்தையும் அவர்கள் மறக்கும்படி செய்வதற்காக அம்மான் பொடி தூவிக்கொண்டு வந்து நின்றானென்கிறதாகவுமாம். "பெய்யுமா முகில் போல் வண்ணா உன்தன் பேச்சும் செய்கையும் எங்களை, மையலேற்றி மயக்க உன்முகம் மாய மந்திரம் தான் கொலோ," "ப்ரஹஸிதாநநம் ப்ரேக்ஷணம்...ம்ருதிதம்" என்று அவன் முகத்தை மயக்கக் கருவியாயன்றோ இவர்கள் தாமே சொல்லுகிறார்கள். அன்றிக்கே, "வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:" "உண்டியே உடையே உகந்தோடும் இம்மண்டலம்" என்கிறபடியே அவரவர்கள் உண்பது உடுப்பதாய்த் திரியும் இவ்வுலகினில் வாஸுதேவனே ப்ராபகனும் ப்ராப்யனும் என்று நினைக்கிறவர்கள் மிகவும் துர்லபராயிருக்க இப்படி வ்யதிரேகத்



தில் முடியும்படியான ப்ரேமாதிஶய முள்ளவர்களைப் பெற்றோமே என்கிற ஸந்தோஷத்தினால் சிரித்துக்கொண்டு நின்றான் என்கிறதாகவுமாம். 'ஜநாநந்த ஸ்மித முகாரவிந்த' என்று இவர்கள் மநோரதித்தபடியே தாமரைப்பூப் போன்ற தன்னுடைய முகத்தை ஸ்மிதத்தாலே 'ஸ்மித'வாகப் பண்ணிக்கொண்டு தோன்றினானென்கிறதாகவுமாம்.

"பீதாம்பரதர:" - நீலரத்னம் போலே இருக்கிற தன்னுடைய திருமேனி நிறம் பெறுகைக்குப் பொன்னிறவாடையை அரையில் சாத்திக்கொண்டு வந்து தோன்றினான். அன்றிக்கே, ஸம்ஶ்லேஷ தசையில் அயலார் காணாமைக்காக மின்னொத்த நுண்ணிடையாளான தன்னைப் புக்கூடவிட்டுப் போவதற்கு ஸாதநமாய் அந்தப் பரிசயத்தால் பிரிவில் "பெருமாளுரையிற் பீதக வண்ண வாடைகொண்டு என்னை வாட்டம் தணிய வீசீரே" என்று ப்ரார்த்திக்கப்பட்ட திருப்பரியட்டத்தோடே தோன்றினானென்கிறதாகவுமாம். அன்றிக்கே, "பீதகவாடை யுடையானை அளிநன்குடைய திருமாலை யாழியானைக் கண்டீரே" என்று இவர்கள் தாமும் தருகுல்மாதிகளைக் கேட்டிருப்பார்களே! ஆகையாலே, அவைகளும் "பீதகவாடை உடைதாழப் பெருங்கார்மேகக் கன்றேபோல், வீதியார வருவானை விருந்தாவநத்தே கண்டோமே" என்று உத்தரமும் சொல்லுமே! அதைக் கேட்டிருந்த இவன் 'இவர்கள் அபேக்ஷிதம் இது' என்று நினைத்துப் பீதக வாடையோடு கூட வந்து தோன்றினான் என்கிறதாகவுமாம்.

'ஸ்ரக்வீ' - தோளிலணிந்த மாலையுடனும் வந்து தோன்றினான். தன் கழுத்தில் மாலையாலல்லவோ இவர்கள் மாலையுறும்படி செய்தது? இவர்கள் தாமும் "அவன்மார்வணிந்த வநமாலை, வஞ்சியாதே தருமாகில் மார்விற் கொணர்ந்து புரட்டீரே" என்றன்றோ தமது பிரிவில் பேசி யிருக்கிறார்கள்? அதை அநுஸந்தித்து அதனுடன் வந்து தோன்றினான் என்கிறதாகவுமாம். அன்றிக்கே, இவர்கள் தாமும் தன்னை விலங்கிட்டு வைப்பது இந்த மாலையினாலல்லவோ? "மல்லிகை மாமாலை கொண்டங் கார்த்தது மோரடையாளம்" என்றும், "தந்த்ரீ ஸங்கீத நியமித ஸ்ரக்வி காளமேக காத்ரம் தம் நிநாத ஸம்ஹர்ஷ்ய ஶ்ராவம் நிமம"

தெளஃ" என்றன்றோ அடியறிவார்களின் பாசுரம்? ஆசையினல், அவர்கள் தன்னை ஜயிப்பதற்குப் பரிகாரத்தையும் கொண்டுவந்து தோன்றினன் என்கிறதாகவுமாம்.

"மந்மத மந்மத:" மந்மதனுக்கும்கூட மந்மதனய்த் தோன்றினன். அதாவது - 'வாசித்தொழும் மந்மதனே' என்கிறபடியே நமக்கும் மந்மதனுக்கும் உண்டான வாசியுண்டு மந்மதனுக்கும் அவனுக்கும் என்றுகவுமாம். அன்றிக்கே, மந்மதன் லோகத்திலிருக்கும் ஜநங்களைப் படுத்து மவையெல்லாம் தான் அவனைப் படுத்துகிறவனய்த் தோன்றினன் என்றுகவுமாம். அதாவது - இந்த ஸௌந்தர்யத்தைத்தான் ஆசைப்பட்டு லோகத்தார் படுமதெல்லாம் படுகிறுன் என்கிறது. அன்றிக்கே, "ஸாக்ஷாந்மந்மதமந்மதஃ" என்று ஓரே பதமாயும் எடுத்துக்கொள்ளக் கூடும். அப்பொழுது, நேரில் ரூபத்தோடு கண்ணுக்குப் புலப்பட்டு நின்று கோபிகளின் மனத்தைக் கலக்கின ஸ்ரீக்ருஷ்ணனுக்கும் இந்த ஆவிர்ப்பாவம் மனத்தைக் கலக்குகின்றது என்றுகும். 'ஸ்வாஸிதா நாராயண:' என்றும், 'ஸ்ரிதம் ஸ்ரீஹ ததாத்வஸி யதிஸ்ய தாரம்' என்றும் சொல்லப்படுகிற பகவானுடைய ரூபம் ஸாதாரணமாய் அவனுக்கு அபிமாநம் செய்யத்தக்கதாயிருந்தால், இப்படி அநந்ய பரைகளான கோபிகளை அநுக்ரஹிப்பதற்காக எடுத்த ரூபம் அவனுக்கு ஆகர்ஷகமாக இருந்தது என்பது கைமுதிக ஸித்தமிறே!

இதனல், அநந்யர்களாய்த் தன்னை ஆஶ்ரயித்தவர்களின் மநோரதத்துக்கு அநுகுணமாய் 'யேயதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்' என்றும், "தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வேஶ்வரன் க்ருபைசெய்வன் என்றதாயிற்று.

சே. நரஸிம்ஹமாசாரியர்.

ஸ்ரீ:

## ஸ்ரீராமாயணத்தில் சில விசேஷார்த்தங்கள்.

## III.

# ஸீதாபிராட்டி வைபவம்.

ஸ்ரீராமாயணத்தில் முக்கியம் பிராட்டி வைபவமே என்று வால்மீகி பகவானே "காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாஶ்சரிதம் மஹத்" என்று வெளியிட்டிருக்கிறுர். ராமாயணத்தில் புருஷகார வைபவம் சொல்லப்பட்டதாக அநேக ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறுர்கள். இதை அநுஸந்தித்து ராமாயணத்தில் 'சிறையிருந்தவளேற்றம் (அதாவது-ராவணனுடைய சிறையிலிருந்த ஸீதையின் மஹிமையே) முக்கியம்' என்று சொல்லுகிறுர்கள். பெரியபிராட்டியாராகிய லக்ஷ்மி கேவலம் புருஷகாரமாக மாத்திரம் இருக்கவில்லை; அவள் விபு, ஸர்வேஶ்வரனேடு எப்போதும் ஜகத்ஸ்ருஷ்டி, ஜகத்ரக்ஷணம் முதலானவற்றிற்கூட அவளுக்கு ஸம்பந்தமிருக்கிறதா? இல்லையா? அவள் ஸகல வஸ்துக்களிலும் வ்யாபித்திருக்கிறுளா? அல்லது அணுவா? இப்படிப்பட்ட வாதத்தில் இங்கு ப்ரவேஶிப்பதாக உத்தேஶமில்லை. இரண்டு பக்ஷத்திலும் அவளுக்குப் புருஷகாரமுண்டு என்பதைமாத்திரம் ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள். அந்தப் புருஷகார வைபவத்தை இப்போது கொஞ்சம் முதலில் வெளியிடுவதாக உத்தேசம்.

"பெரியபிராட்டியார் எப்போதும் பெருமாளுடன்கூடவே எழுந்தருளியிருக்கிறுள் என்பது ப்ரஸித்தம். ஸர்வேஶ்வரனை ஒருவன் ஆஶ்ரயித்தானகில், அவன் பலப்ரதனகிறுன் [வேண்டிய பயனைக் கொடுக்கிறுன்]; பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றவேண்டுகிறதற்கு என்ன அவஶ்யம்?" என்று நஞ்ஜீயர் பட்டரைக்கேட்க, '"நாடும் நம் திருவுடையடிகள் வணங்கி" (1. 3 - 8) என்று அவளை முன்னக ஆஶ்ரயிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்

கிறதைப் பார்த்தீரில்லையோ? அவளை ஆப்ச்ரயிக்குமிடத்தில் இந்த ஸம்ஸாரியின் குற்றத்தைப் பாராமல் தன் நிழலிலே இவனை வைத்துப் பகவானிடத்தில் முகம் பெற்றவாறே குற்றத்தைப் பொறுப்பிக்கு மவள் முன்னுகப் பெறவேண்டும்' என்று பட்டர் அருளிச்செய்திருப்பதை நாம் அறிவோம். 'நாயகனை ஸர்வேப்ச்வரனுடைய ஒவ்வொரு அவதாரத்திலும் அததற்குத் தகுந்தபடி பெரியபிராட்டியாராகிய லக்ஷ்மியும் கூடவே அவதரிக்கிருள்' என்று விஷ்ணுபுராணத்தில் "தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ - விஷ்ணோர்தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ் தநும்" என்றும், "ராகவத்வே(அ)பவத் ஸீதா" என்றும் வெளியிடப்பட்டிருக்கிறது.

அப்படி லக்ஷ்மியினுடைய புருஷகாரத்தை ஸீதாபிராட்டி வெளியிட்டபடியைக் கொஞ்சம் சொல்வோம்; புருஷகாரமாவதற்குக் கிருபையும், பாரதந்த்ரியமும், அநந்யார்ஹத்வமும் வேண்டும். ஜீவகோடிகள் படுகிற துக்கங் கண்டு பொறுக்கமாட்டாமல் ஈப்ச்வரனேடு இவர்களைச் சேர்க்கைக்கு வேண்டிய யத்நம் பண்ணுவதற்கு க்ருபை வேண்டும். பகவாந் ஸ்வதந்த்ரன்; அவனை வஶீகரிக்கும்போது அவன்போகும் வழியே போகிற அநுவர்த்தநம் வேண்டும்; அதற்குப் பாரதந்த்ரியம் என்பது மிகவும் அவஶ்யம். பகவானுகிற தன்னை யொழிய இதரவஸ்துவுக்கு அர்ஹமல்லவென்றும், 'தனக்கே வப்ச்யமாயிருக்கும் வஸ்துவானபடியால் நம்முடைய கார்யத்தைத் தானே சொல்லுகிருள்' என்றும் பிராட்டியின் இஷ்டப்படி பகவான் செய்கைக்கு அநந்யார்ஹத்வம் [இன்னொரு வஸ்துவுக்கு அர்ஹமில்லாத குணம்] வேண்டும்; இம் மூன்று குணத்தை ஸீதாபிராட்டி வெளியிட்டதை விவரிக்கிறேம்.

## க்ருபை.

ஈப்ச்வர க்ருபையைக்காட்டிலும் இவள் க்ருபையில் விப்சேஷம் என்ன? என்றுல், ஈப்ச்வரன் நிக்ரஹ அநுக்ரஹங்களிரண்டுக்கும் கடவன்; நம்முடைய கர்மங்களை நிறுத்துப் பார்த்துத் திருத்துமவன். க்ருபை தன் ஸ்வாதந்த்ரியத்தில் அமுக்குண்டு, ஒவ்வொரு தசையில் தலையெடுக்கும்; பிராட்டிக்கு க்ருபையே எப்போதும் ஒருபடிப்பட்டுத் தலையெடுத்திருக்கும். இற்குக் கரையே கிடையாது. இவளை யாப்ச்ரயிப்பாருக்கு இன்னெரு புருஷகாரம் வேண்டியதில்லை. "தேவீ காருண்யரூபயா" [காருண்யமே ஒருவடிவு கொண்டவள்] என்று சொல்லலாம். ஸீதாபிராட்டி பெருமாளைவிட்டுப்பிரிந்த முதற்பிரிவில் இந்த மஹாக்ருபையை வெளியிட்டாள். தேவஸ்திரீகளைச் சிறையிலிருந்து விடுவிக்கைக்காகத் தான் சிறையிலிருந்தாள். ப்ரஜை கிணற்றிலே விழுந்தால், கூடக்குதித்து எடுக்கும் மாதாவைப்போல இச்சேதநர் விழுந்தஸம்ஸாரத்திலே தானும் கூடவந்து பிறந்து இவர்கள்பட்டதைத் தானும் பட்டு ரக்ஷிக்கையாலே, நித்யமான மாத்ருஸம்பந்தத்தால் வந்த மஹாவாத்ஸல்யத்தையும் தயாகுணத்தையும் பிரகாசிப்பித்தாள். இப்படிச் சிறையிலிருத்தல், ஸீதாபிராட்டிக்குப் பூர்வகர்மத்தால் வந்ததன்று; ஆஶ்ரிதர்களான தேவஸ்த்ரீகளை ரக்ஷிக்கைக்காக அநுக்ரஹத்தால் தானே வலியச்செய்துகொண்டது. "ஸ ஏகதா பவதி ஜாயதே நஃ" என்கிற ஶ்ருதிப்படிக்கு இது பிராட்டிக்கு ஏற்றமேயொழியத் தணிவில்லை. ராவணன் பலாத்காரத்தால் இந்தத்துணிவு வந்ததாக எண்ணுபவர்கள் தெரியாதவர்கள். ஹநுமானுக்கு "ஶீதோ பவ" என்று சொல்லி அக்நியின் தொந்தரவைத் தணிப்பித்தவள், ராவணனையும் பஸ்மமாக்க ஶக்தியுடையவளே; க்ருபையால் சிறையிருந்தாள். அப்படிச் சிறையிலிருக்கும்பொழுது இவளை அடித்துத் தொந்தரவுபண்ணிக் கஷ்டப்படுத்தின க்ரூரராக்ஷஸிகள் ராவணனைப் பெருமாள் ஜயித்ததாக த்ரிஜடை ஸ்வப்நம் கண்டதனாலே மிகவும் பயப்பட, "அலமேஷா பரித்ராணாய ராக்ஷஸ்யோ மஹதோ பயாத்" ... "ஹி வஃ" என்று அந்த ராக்ஷஸிகளுக்குச் சொன்னாள்.

"மித்ரமௌபயிகம் கர்தும் ராமஃ ஸ்தாநம் பரீப்ஸதா - வதம் சாநிச்சதா கோரம் த்வயா(அ)ஸௌ புருஷர்ஷபஃ" ராவணன் பிராட்டியினிடத்தில் தாயென்கிற நினைவில்லாமல் அவளெதிரில் சில துர்வார்த்தைகளைச் சொல்ல, 'ஐயோ! இவனுக்குப் புத்தி இப்படி போய்விட்டதே! இவனுக்கு நல்ல வார்த்தை சொல்வதற்கு ஒருவரில்லையே!' என்று துக்கப்பட்டு அவனைநோக்கி 'மித்ரமௌபயிகம்' [ஸ்நேஹம் செய்துகொள்] என்று பிராட்டி அருளிச்செய்தாள். 'பெருமாளை பரணமடை' என்று சொன்னுல் அந்தத் துஷ்டன் அதைத் தனக்கு இழிவாக நினைப்பான்;

என்று அவர் இவனுக்கு ஸமம்போல 'ஸ்நேஹம் செய்துகொள்' என்று சொன்னாள். பெருமாள் ஸ்வபாவத்தைப் பார்த்தால், 'ஸூாநம வஸீவ்ஸூதா' 'ஸதா வழியடிப்பாருக்குக்கூடக் கீழே நிற்க நிலம்வேண்டுமே; அதற்கும் அவரைப்பற்றவேண்டும். பெருமாள் ஸர்வாந்தர்யாமி, ஸர்வேஸ்வரன்' என்று தெரிவிக்கப்பட்டது. 'சுவஸள' - இவளுக்கு ராமன் எப்போதும் ப்ரத்யக்ஷமாகத் தோன்றிக்கொண்டிருக்கிறார். எதிரில் அவனிருப்பதுபோல 'சுவஸள' என்று சொல்லுகிறாள். இப்படி 'அவர் நான் போனால் கூட அங்கீகரிப்பரோ!' என்று பயப்படவேண்டாம். 'வுாரு-ஷஷ-ஃஃஸ' அவர் புருஷோத்தமன்.

"விதிதஸ. ஹி யக்ஷஜ்ஞ ஶரணாமக வத்ஸலஃ - தெந மெத்ரீ ஹவது தெ யதி ஜீவிதுமிச்ஹஸி" - 'பிராணனோடு இருக்க வேண்டி யிருந்தாயாகில் ஶரணாகதி தர்மஜ்ஞரென்றும், தம்மை ஶரணமடைந்தவர்க்கு மிகவும் ப்ரியரான வத்ஸலரென்றும், ஶத்ருகோஷ்டியிலும் ப்ரஸித்தரா யிருக்கிற பெருமாளோடு உறவு பண்ணு' என்று ஹிதோபதேஶம் செய்தாள். ராவணன் மரணமடைந்த பிறகு ஹநுமார், 'அந்த ராக்ஷஸிகளைச் சித்ரவதை செய்கிறேன்' என்று பிராட்டியினிடம் விண்ணப்பம்செய்ய, அவருடன் மன்றாடி 'ராஜஸம்ஶ்ரயவஶ்யாநாம்' என்று 'அவர்கள் யஜமானன் சொன்னதைச் செய்தார்கள்' என்று குற்றத்தையே குணமாகச் சொல்லி, 'பிறர் துன்பம் கண்டு நான் பொறுக்கமாட்டேன்' என்றும், தனக்கு அதற்குத் தகுந்த கல்நெஞ்சம் இல்லை யென்றும் அருளிச்செய்தாள். "பாபாநாம் வா ஶுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம - கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந்நாபராத்யதி॥" நீர் இவர்களைப் பாபிஷ்டர்களாக எண்ணினீர்; ராஜாவின் ஆஜ்ஞையால் தங்கள்ஜாதிக்கு உரிய கர்மங்களை அநுஷ்டித்தபடியால், இவர்களைப்புண்யம்செய்தவர்களாகவே நான் நினைக்கிறேன். பாபிகளுக்குத்தானே நம் தயை முக்யம்; இவர்கள் அபராதம் பண்ணி வதத்துக்கு அர்ஹரா யிருந்தாலும், துர்ப்பலர்களாகையால் ஆர்யனாகிற உத்தம புருஷன் இவர்களை ரக்ஷிப்பதே தர்மம். இதுதான் வேதாந்த ஶாஸ்த்ரத்தின் உட்கருத்து; உமக்கு இப்போது தெரியவில்லை. உலகத்தில் யார்தான் அபராதம் செய்யவில்லை? நிரபராதியான புருஷன் இல்லை. அபராதிகளுக்குத் தயை காட்டக்கூடா தென்றால் தயைக்கு விஷயமானவர் ஒருவரும் இருக்கமாட்டார்கள். ஆகையால், ராக்ஷஸிகள் குற்றத்தைப் பொறுக்கத் தயையே முக்கியம்' என்று வெளியிட்டாள்.



'ஒருவனுக்கு வைஷ்ணவத்வம் உண்டு இல்லை என்னுமிடம் தனக்கே தெரியும் காண்' என்று நஞ்ஜீயர் காலக்ஷேபத்தில் பலகாலும் அருளிச்செய்வர்; பிறர் அநர்த்தம் கண்டால் 'ஐயோ!' என்றிருந்தானாகில் நமக்குப் பகவத் ஸம்பந்தமுண்டு என்று சொல்லத்தகும்; இத்தனையும் இவனுக்கு வேண்டுமென்று தோன்றினால் நமக்குப் பகவத்ஸம்பந்த மில்லை யென்று சொல்லலாம். "ஆந்ருஶம்ஸ்யம் பரோ தர்ம:" - [கிருபை தான் மேலான தர்மம்] என்று ஏற்பாடு.

"ஸித்தஸாதந ஸம்வ்யாஜ்ய ந த்யஜேயம் கதஞ்சந - தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத்" ஸர்வஜ்ஞனுக்கு ஒரு அஜ்ஞானமும் விஸ்ம்ருதியும் [மறதி] உண்டு. ஒருவன் தன்னை ஆஶ்ரயித்தால் அதற்குமுன் 'தோஷோ யத்யபி' புத்திபூர்வமாகப் பண்ணின குற்றங்களை மறந்து பகவத்ஜ்ஞானம் பிறந்தபிற்பாடு அபுத்தி பூர்வமாகச் செய்ததில் ஒரு அஜ்ஞானமும் உண்டு. ஆஶ்ரயித்தவனை விடுவதில் ஒரு அஶக்தி உண்டு. பெருமாள் ஸ்நேஹபாவம் வேண்டும் என்றார். பிராட்டியும் 'பாபாநாம் வா' என்கிற ஶ்லோகப்படியே கருணையே ப்ரதானம் என்றும், உயர்ந்த ஆர்யர்கள் அதையே முக்கியமாக எண்ணவேண்டுமென்றும், ஸம்ஸாரி கெடுதலில் ப்ரவர்த்தித்தாலும் தயை உண்டாகி அவனை அதில்நின்றும் நிவர்த்திக்க யத்னம் செய்யவேண்டும் என்றும் அருளிச்செய்தாள்.

## பாரதந்த்ரியம்.

லங்கையிலிருந்து திரும்பிப் பெருமாளுடன் கூடத் திருவயோத்தியி லெழுந்தருளிப் பிராட்டி கர்ப்பிணியாயிருக்கும் ஸமயத்தில், லோகாபவாத பரிஹாரார்த்தமாக ஜநங்களை ஸந்தோஷப்படுத்தும்பொருட்டுப் பெருமாள் பிராட்டியைக் காட்டிலே கொண்டுபோய்விடும்படி இளையபெருமாளை ஆஜ்ஞாபிக்க, அவர் அப்படியே அழைத்துக்கொண்டுபோய்க் கங்கைக்கரை யேறின அநந்தரம் இளையபெருமாள் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டு பெருமாளுடைய நியமனத்தை விண்ணப்பம்செய்ய, பிராட்டி "நகல்வத்யைவ ஸௌமித்ரே ஜீவிதம் ஜாஹ்நவீஜலே - த்யஜேயம் ராகவம்

வாம்ஶே ஸஹதர்மிண்யா பரிஹாரஸ்யதி" ['நான் ஜீவனைவிட்டால் பெருமாளை லோகம் த்யஜிக்கும் [விடும்] என்று நான் விடாதே யிருக்கிறேன். எனக்கு எவ்வளவு கஷ்டமிருந்தாலும் பாதகமில்லை; பகவானுக்கு அதிஶயத்தை விளைவிக்குமவர்கள் தம்தாம் நன்மையைப் பாரார்களிறே. ஆற்றாமையால் தான் முடிவது இஷ்டமாயிருந்தாலும் அது செய்யாமல் பெருமாள் நினைவைப் பின்சென்று தன் பிராணனைக் காப்பாற்றிக்கொண்டு இருக்கவேண்டும்]' என்று பாரதந்த்ரியத்தை ப்ரகாஶிப்பித்தாள். முதற் பிரிவில் பத்துமாஸத்தில் பட்டதெல்லாம் பட்டு ஸஹிக்காதவள்தானே 'பர்த்தாவின் மனத்தைப் பின்செல்வதே நமக்கு ஸ்வரூபம்' என்று பாரதந்திரியபுத்தியால் அநேக ஸம்வத்ஸரம் பிரிந்திருந்தாள். இரண்டாம்பிரிவில், "பதிர்ஹி தைவதம் நார்யா: பதிர்பந்து: பதிர்கதி: - ப்ராணைரபி ப்ரியம் தஸ்மாத் பர்த்து: கார்யம் விஶேஷத: " [பர்த்தாவே தைவம், பந்து, வழி, உபாயம்] என்று வெளியிடப்பட்டது.

அநந்யார்ஹத்வம்.

பெருமாள் அஶ்வமேதம் பண்ணினபிற்பாடு வால்மீகி ஸீதாபிராட்டியைப் பெருமாளிடத்தில் அழைத்துக் கொண்டுவந்து 'இவள் மஹா ஶுத்தை' என்று சொல்ல, தானும்ஶுத்தையென்றும் தெரிந்து, லோகாபவாத பரிஹாரார்த்தமாக அவளை ஒரு பிரத்யயம் பண்ணச்சொல்ல, "யதாஹம் ராகவாதந்யம் மனஸாபி ந சிந்தயே - ததா மே மாதவீ தேவீ விவரம் தாதுமர்ஹதி ॥ மனஸா கர்மணா வாசா யதா ராமம் ஸமர்சயே - ததா மே மாதவீ தேவீ விவரம் தாதுமர்ஹதி ॥ யதைதத் ஸத்யமுக்தம் மே வேத்மி ராமாத் பரம் ந ச - ததா மே மாதவீ தேவீ விவரம் தாதுமர்ஹதி ॥" என்று பிராட்டி ஶபதம்பண்ண, பூமியில்நின்றும் ஒரு திவ்யஸிம்ஹாஸநம் தோன்ற, அதில் பூமிப் பிராட்டி இவளை இரண்டு கைகளாலும் எடுத்துவைத்து, ரஸாதலத்தைப் பிரவேசித்த மாத்ரத்தில் திவ்யபுஷ்பவ்ருஷ்டி இவள்மேலே விழுந்தது. இதனால், பிராட்டியின் அநந்யார்ஹத்வம் ஸர்வஸம்மதமாம்படி வெளியிடப்பட்டது. இப்படி மூன்றுபிரிவிலும் பிராட்டியின் புருஷகாரத்துக்கு வேண்டிய குணங்கள் வெளியிடப்பட்டன. மற்றை அம்ஶங்கள், அடுத்த ஸஞ்சிகையில் வரும்.

எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஹயவதனபரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ ராமாயணத்தில் ஒரு சோத்யம்.

தாரஜ்ஞவதனோபாஸ்ய ஶாஸ்த்ரம் மஹ்யம் ஶ்ரீமான் மஹர்ஷய: ।
ஸர்வஜ்ஞவாக்யநாயோ மே தர்ஶயது ஶுபம் ॥

வைதேஹீ பரித்யக்தாம் ஶ்ருத்வா நக்ஷத்ராதிஷு ந ஸமர்த்தா
...ணா வையாத்ரோ நக்ஷத்ரா ரவாவஶேஷராஜேஷு ஜி வொ
தேஹாதயே - ஸாவஜ்ஞ: வரஸே ப்ராம்ஸ ஹவாவிபூர்வவ்யக்தம்
விஜ்ஞாநஸ்வாத்ம யதாஶ்ராயதி ப்ராதேஜஸ்ஸ ஶாயீயதாம் ॥

ஸ்ரீமத்ராமாயண மென்னும் இதிஹாஸ ரத்நத்தின்பேரில் சிலர் சில சோத்யங்கள் செய்வது உண்டு. ஸ்வயம் மந்தமதியாயிருக்கச்செய்தே, அடியேன் அவைகளை உபந்யஸிக்கவும் அவைகளுக்கு ஸமாதாநம் சொல்லவும் ஶக்தியற்றவனேயாகிலும், பெரியோர்கள் நியமநமொன்றையே ஊன்றுகோலாகப் பற்றி அவற்றுள் ஒரு சோத்யத்தை உபந்யஸித்துப் பரிஹரிக்கத் துணிகிறேன்.

ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகன் ஸ்ரீ இளையபெருமாளுடனும் பிராட்டியுடனும் தண்டகாரண்யஞ் சென்று ஓராஶ்ரமத்தில் எழுந்தருளியிருக்கும்பொழுது, பிராட்டி தனியாகவே புஷ்பவநத்திற்குள்ளே சென்று அவ்விடத்தில் புஷ்பாபசயம் பண்ணிக்கொண்டிருக்க, அந்தப் பிராட்டியினுடைய ஹ்ருதயாபசயம் பண்ணக்கருதிய மாரீசன், ராவணநிர்ப்பந்தத்தினால உயிரையுமிழக்கத்துணிந்து மான்வேஷம் பூண்டு இங்குமங்கும் துள்ளி விளையாட, பிராட்டி அதைக்கண்டு அதிக ஆநந்தத்துடன்,—"ப்ரஹ்ருஷ்டா ராகவானவத்யாங்கீ த்ருஷ்ட்வா ஹாடகவர்ணிநீ । ஸுதப்ராஶோவிக்ரு ... லக்ஷணம் வேவஸா யாயு ॥ ஆர்யபுத்ராபி ஶ்ரேயம் வை க்ருஷ்யபுவாந்த்ய! ஸஹாநுஜ!"

" வாரீர்! ராமலக்ஷ்மணர்களே! நமது தாய்தந்தைகளையும், ஸகல பந்துக்களையும் ப்ரக்ருதி மண்டலத்தையும் நிகில ராஜ்யத்தையும் பஹுவித ஸுகத்தையும் நம்மை விட்டு நீக்கி, நம்மைக்குடியோடப் புகுரவிட்ட துர்ப்பரமான துர்விதிகளின் மத்யத்தில் ஏதோ ஒரு யாத்ருச்சிகமாய்த் தோற்றின நல்விதியின் பயனென்றைக் கண்ணால் கண்டு களிக்கிறேன்; நீங்களும் சடக்கென் றெழுந்தருளி இவ் வத்புதத்தைக் கண்ணாரக்கண்டு களிப்பீராகில் என் நெஞ்சம் களித்ததாமே" என்று உச்ச ஸ்வரத்தாலே கூப்பிட்டு அழைக்க, பெருமாளும் இளையபெருமாளும் தத்க்ஷணமே அந்த ப்ரதேஶத்திற்கெழுந்தருளி அந்த மாயாம்ருகத்தைக் கடாக்ஷித்தார்கள்.

உடனே பிராட்டியும், அந்த ஸாரங்கோத்தமத்தைத் தனக்குப் பிடித்து ப்ரஸாதிக்கும்படி இவர்களை மிகவும் ஆவலோடு ப்ரார்த்தித்தனள். அந்த ஸமயத்தில், இளையபெருமாள் அந்தராக்ஷஸனது மாயாசேஷ்டிதங்களை உள்ளவாறு அறிந்து பெருமாளை நோக்கி " தமேவைநமஹம் மந்யே மாரீசம் ராக்ஷஸம் ம்ருகம்" என்றும், "அஸ்ய மாயாவிதோ மாயா ம்ருகரூபமிதம் க்ருதம்" என்றும், "ஜகதீநாத! மாயைஷா ஹி ந ஸம்ஶய:" என்றும்-" வாரீர்! தயாநிதியே! நாமிருவரும் முன்னே விஶ்வாமித்ரமஹர்ஷியின் யாகத்தை ஸம்ரக்ஷித்திருக்கையில் தனது பரிவாரங்களோடு வார்ஷிகமேகம் போலத் திரண்டோடிவந்து நம்முன்னேநின்று யுத்தம்செய்த ஸுபாஹு மாரீச ரிருவரில் இவன் ஒருவனன்றோ? இவன்பெயரன்றோ மாரீசனென்பது? இந்த க்ருதக்நனன்றோ தேவரீருடைய கருணாப்ரேரிதமான வாயவ்யாஸ்த்ரத்தால் உயிர்பிழைத்தவன்? அப்படிப்பட்ட மஹாபாதகியான இவ்விராக்ஷஸனே நம்விஷயமாய் ஏதோ ஒரு துராலோசனை செய்துகொண்டு ம்ருகவேஷம் பூண்டு வந்தவனாகத் தோற்றுகிறான். இதில் கிஞ்சித்தேனும் தேவரீருக்கு ஸம்ஶயம் வேண்டாம்" என்று அருளிச்செய்தாரென்பது எல்லாரும் அறிந்த விஷயமே. இதனால், இளையபெருமாளுக்கு மாரீசன்வரலாறு அவ்வளவும் நன்றாகத்தெரியவருமென்பது வ்யாக்யாதமாயிற்று.

மேலும், " பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:" என்கிறபடியே ஸ்ரீ இளையபெருமாள் ஸ்ரீராகவனிடத்தில் பால்யம் தொடர்ச்சியாகக் கரைபுரண்ட ஸ்நேஹத்தையும், பக்தியையும், கபடமற்ற நடத்தையையும் பூஷணமாக அணிந்து வந்தவரன்றோ? அன்றியும், ஸ்வாமியினுடைய ஶாஸநத்தை ஒருகாலும் தவிர்ந்தவரல்லவே; இவ்வாறிருக்க, பிராட்டி பெருமாளை நோக்கி - " ஆர்யபுத்ராபிராமோऽஸௌ ம்ருகோ ஹரதி மே மந: - ஆநயைநம் மஹாபாஹோ! க்ரீடார்த்தம் நோ பவிஷ்யதி" "வாரீர்! ராமபிரானே! இதோ ஓர் அத்புதவஸ்துவைத் திருக்கண்களினால் காண்கிறதோ? இது என் மநஸ்ஸை ஹரித்தோடுவதை அறிந்துகொண்டதோ? ஹே மஹாபாஹோ! தேவரீருக்குப் பாஹுபல மிருப்பது உண்மையாகில் இந்த விலக்ஷணமான ஸாரங்கத்தை என்எதிரில் கொண்டுவந்து நிறுத்தினாலல்லது என்து ஹ்ருதயம் தன்நிலையில் நில்லாது" என்று இவ்வாறு இளையபெருமாளைவிட்டுச்சக்ரவர்த்தித்திருமகனை வேண்ட, பிறகு பெருமாள் பிராட்டியை நோக்கி "பெண்ணே! ஜாநகி! உனது ஸகலேந்த்ரியங்களையும் வஶீகரித்து அவற்றுக்கு மஹாநந்தத்தையும் ஆஶ்சர்யத்தையும் கொடுக்கவல்லதாக நம்முடைய ரூபலாவண்யம் இருக்கச்செய்தே, உன்மநஸ் இப்படி அதி ப்ரஸங்கிக்கக் கூடுமோ? இது உன் ஸ்வரூபத்துக்கு ஒக்குமோ?" என்று ஸஹாஸமாய் அருளிச்செய்ய, பிராட்டி மறுபடியும் பெருமாளைநோக்கி "ஸ்வாமிந்! இது ஏது அகாண்டத்தில் ஹாஸவசநங்கள்? தேவரீர் இந்த ஸாரங்கத்தைப் பிடித்துக்கொடுத்தாலல்லது நமது க்ரீடநகங்கள் பூர்த்தியை அடைந்தனவாகுமோ? இதை அவைகளில் ஒன்றாகவன்றோ அமர்த்தவேண்டியிருப்பது? ஏனெனில், தேவரீர் ராமனென்பது எவ்வாறோ, அவ்வாறேயே இது அபிராமமாக இருப்பது. தேவரீர் ராமனாக இருப்பது எக்காலத்திலும் எல்லாருக்கும் ஹ்ருதயரமணம் செய்வதனாலன்றே! இந்த ஜந்துவோ என்னையொத்த சிற்றறிவுள்ளபெயர்களுக்குப் பாஹ்யரஞ்ஜநம் செய்வதனால் அபிராம மென்று பெயர்பெறுகின்றது" என்றும், இன்னும் பலபலவாறாகவும் முறையிட்டு ப்ரார்த்தித்தாள். பெருமாளும், அந்த மாயா ம்ருகத்தை உற்றுப்பார்க்கையில் தமது மனத்தை அதற்கே பறிகொடுத்து இளையபெருமாளைக் கூப்பிட்டுப் பேசு

கிறார்:—“பஶ்ய லக்ஷ்மண வைதேஹ்யா! ஸ்ப்ருஹாம் ம்ருககதாமிமாம்-ரூபஶ்ரேஷ்டதயா” என்றும், “கஸ்ய நாமாபிரூபோऽஸௌ ந மநோ லோபயேந்ம்ருக:” என்றும், இவ்விரண்டு ஶ்லோகங்களில் முதல் ஶ்லோகத்தால் தேவீமநோபஹாரம் யுக்தமென்பதையும், இரண்டாவதால் ஸ்வமநோபஹாரம் யுக்தமென்பதையும் அருளிச்செய்து, பிராட்டிக்கு ம்ருகத்தைப் பிடித்துக்கொடுக்கும் விஷயத்தைப்பற்றி நிஷேத வாக்ய மிட்டுக்கொண்டிருக்கிற ஸ்ரீ இளையபெருமாளை நோக்கி “த்ருஷ்டத்ருஷ்ட” என்கிற ந்யாயத்தை அநுஸரித்துப் பின்னும் அருளிச்செய்கிறார்:—“யதி வாயம் ததா யந்மாம் பவேத் வதஸி லக்ஷ்மண - மாயைஷா ராக்ஷஸஸ்யேதி கர்தவ்யோऽஸ்ய வதோ மயா” “வாராய்! ஸௌமித்ரியே! நீ ‘இவன் ராக்ஷஸன்’ என்றும், ‘இந்த ஶரீரம் மாயாஸஞ்சிதம்’ என்றும் சொல்லுகிறது வாஸ்தவமே; ஆகிலும், நாம் ராக்ஷஸப்பூண்டை வேரறுத்து மஹரிஷிகளை ஸுகிக்கச்செய்வதாக அவர்களிடம் ப்ரதிஜ்ஞை பண்ணியிருப்பதில்லையோ? அவற்றை நாம் நிறைவேற்றவேண்டாவோ? அநேகவாரம் இவ்வேஷம் பூண்டு தபஸ்விகளை ஹிம்ஸித்த மஹாபாதகியன்றோ இவன்?” என்று இளையபெருமாளுக்கு உபச்சந்த நோக்தியை அருளிச்செய்து, “இஹ த்வம் பவ ஸந்நத்தோ யந்த்ரிதோ ரக்ஷ மைதிலீம் । அஸ்யாமாயத்தமஸ்மாகம் யத்க்ருத்யம் ரகுநந்தந ॥” “வாராய்! இளையவனே! நீ இவ்விடத்தி லிருந்து ஜாகரூகனாக மைதிலியைக் காப்பாற்றிவரக்கடவாய்; நம் வ்யாபாரமனைத்தும் இவளதீநமாகவிறே இருப்பது.” அதாவது—இவள் க்ஷதிபொன்றுமில்லாதவளாக விருப்பாளல்லது நமது ஜீவந வ்யாபாரங்களொன்றையும் நடத்தத் தோற்றுகிறே! வெகுவாய்ச்சொல்லி என்ன? இவளுக்கு அபாயம் நேரிடுமாகில் நாம் ஜீவனையுங்கூட இழக்கும்படி நேரிடுமென்கை. ‘இவ்வாறு பெருமாள் ஸீதாரக்ஷணத்தில் இளையபெருமாளை நியமித்து மாயாம்ருகத்தைப் பின்தொடர்ந்து எழுந்தருள, நிஷ்காரணமாக ஸ்ரீ இளையபெருமாள் பிராட்டியை ராவணனிடத்தில் பறிகொடுத்தது மன்றியில் சக்ரவர்த்தித்திருமகனுடைய ஆஜ்ஞாதிலங்கநம் செய்வது ஶேஷவ்ருத்தி காஷ்டாநிஷ்டரான இந்த லக்ஷ்மணனுக்கு எவ்வாறு ஒக்கும்?’ என்று அநேகர் சோத்யம் செய்துவருகிறார்கள்.



ஆனால், இந்த விஷயத்தில் சிலர் மேல்வருமாறு ஸமாதாநம் சொல்வார்கள்; அதாவது—“ராமம் தஶரதம் வித்தி மாம் வித்தி ஜநகாத்மஜாம்” என்கிற ஸ்வமாத்ரு வாக்யத்தாலும் தர்ம ஶாஸ்த்ரங்களின் முறையினாலும் இந்த இளையபெருமாள் பிராட்டியின்பக்கலில் மாத்ருத்வபுத்தியையன்றோ பண்ணியிருப்பது? லோகத்தில் பிதுராஜ்ஞையைப்போலவிறே மாதுராஜ்ஞையும் அநுஷ்டேயமாக இருப்பது. ஆகையால், இந்த மாரீசன் ராமபாணத்தால் அடிபட்டு விழும்பொழுது ராமவாக்யாநுகாரம்பண்ண, அதைக்கேட்டுப் பிராட்டியும் இளையபெருமாளை ‘ராமவ்ருத்தத்தைக் கண்டுவாரும்’ என்று தத்க்ஷணத்தில் நியமிக்க, லக்ஷ்மணனும் ராமாஜ்ஞாவாஸிதமநஸ்கராகையாலேஅதையேஉறுதியாகமனத்தில்கொண்டு இவ்வாஜ்ஞையை அநுஷ்டிக்காமல் மயங்கிநிற்க, பின்னும் பிராட்டி சில க்ரூரோக்திகளைச் சொல்லி மறுபடி நியமித்தனள். அநந்தரம் ஸ்ரீ இளையபெருமாள் ‘ஓ! ஓ! மோசம் வந்துவிட்டதே! பிராட்டி ஆஜ்ஞாபித்தவாறே நாம் அநுஷ்டியாதது மஹா அபசாரமன்றோ? அதன் பலமன்றோ ஸர்வதா அநுக்ரஹைகஶீலையா யிருக்கச்செய்தேயும் பிராட்டியினிடமிருந்து இந்தக்குரூரோக்தியைக் கேட்டதும்?’ என்று மனத்தில் நிஶ்சயித்துப் பிராட்டியை விட்டுப் பிரிந்தார் என்பதுதான்.

இதில் சில விசாரணீயாம்ஶம் உண்டு. பிதாவின் ஆஜ்ஞைபோல மாதாவினுஜ்ஞையும் அநுஷ்டேய மென்பதில் ஸம்ஶயமில்லை. ஆஜ்ஞை யெல்லாம் அநுஷ்டேய மென்பதில் வ்யாப்தியுமில்லை. அநுஷ்டேயத்தின் ஸ்வரூபத்தையும், ததநுஷ்டாந பலத்தையும் உள்ளவாறு அறிந்து ஆஜ்ஞாபிக்குமவர்களின் ஆஜ்ஞையன்றோ அநுஷ்டேயமாகவிருப்பது? அநுஷ்டேயத்தின் ஸ்வரூபத்தையும், ததநுஷ்டாந பலத்தையும் அறியாதவரான மஹாந் ஒருவர் அவற்றை யறிந்த தமது ஶிஷ்யனை த்ருணச்சந்நகூபத்தின் வழியாக

ஸமிதாதிகளைக் கொண்டுவரும்படி நியமித்தால், அந்த ஶிஷ்யன் அவ்வாஜ்ஞையை அநுஷ்டிப்பதுண்டோ? அநுஷ்டிக்காமற்போனால் அது அவனுக்கு ப்ரத்யவாயத்தை விளைவிக்குமோ? அப்படியிருக்க, பிராட்டியின் ஶாஸநாநுஷ்டாநம் இளையபெருமாளுக்குக் கர்த்தவ்ய மாகுமோ? அச்சாஸநத்தில் அநுஷ்டேய பூதமான கமநத்தின் அநர்த்தாவஹத்வமான ஸ்வரூபத்தை அறியாதவளிறே பிராட்டி. அதன் ஸ்வரூபத்தையும் அநுஷ்டாந பலத்தையும் அறிந்தவரிறே ஸ்ரீ இளையபெருமாள்; ஆகையால், பிராட்டியின் ஆஜ்ஞாநுஷ்டாநம் செய்வதற்காக அவளைத் தனியாகவிட்டுச் சென்றாரென்கிற இந்த ஸமாதாநம் மந்தமென்றே நிஶ்சயிக்க வேண்டியிருப்பது.

இந்த விஷயத்தில் அபிஜ்ஞர்கள் அநேகவிதமாக ஸமாதாநம் அருளிச்செய்யலாம். ஆகிலும், கிஞ்சித்ஜ்ஞனை அடியேனும் முன்னோர் வழிமுறை தப்பாமல் இந்தவிஷயத்தில் ஸமாதாநமாகச் சிலவற்றை விஜ்ஞாபநம் பண்ணிக்கொள்ளத் துணிகிறேன்.

ஸ்ரீ இளைய பெருமாள் சக்ரவர்த்தித் திருமகனுடைய ஆஜ்ஞாதிலங்கநம் செய்தாரென்பதை ஸாதிக்கமுடியாது. ப்ரத்யுத, ஆஜ்ஞாநுஷ்டாநம் செய்தார் என்றிறே சொல்லவேண்டியிருக்கிறது. ஆஜ்ஞாவாக்யத்தின் ஸ்வாரஸ்யத்தை ஆலோசித்துப்பார்த்தால், அநுஷ்டிதார்த்தமே யன்றோ வக்தாவின் தாத்பர்யத்திற்கு இசைந்ததாகத் தோற்றுகிறது?

“இஹ த்வம் ஸஹ [illegible] ।

[illegible] ॥”

என்றிறே அவ்வாக்யம் இருப்பது.

“[illegible]” என்கிறபடி பூர்வோத்தர ஸந்தர்ப்பங்களைப் பராமர்ஶித்துப்



பார்த்தால் அந்தப் பத்யத்திற்கு இவ்வாறிறே பொருள் சொல்லவேண்டியிருப்பது; அதாவது:—இஹ ஸமஸ்த தேவதைகளின் பக்கலிலும் நாம் ப்ரதிஜ்ஞைபண்ணினபடி நம்முடைய அபிப்ரேதார்த்தத்தை நிறைவேற்றுவதில், த்வம்-நம்முடைய அவதார ரஹஸ்யமறிந்த நீர், [illegible]-ஜாகரூகராக இருக்கவேண்டும். இவ்வாறு பெரியபெருமாள் நியமிக்க இளையபெருமாள் அதைக் கேட்டு ஸ்வாமியினுடைய அபீஷ்ட பூர்த்திக்கு விரகொன்றும் தோன்றாமல் அலைபாய்ந்த மனத்தோடு நிற்க, பெருமாள் அதை யறிந்து பின்னும் அருளிச்செய்கிறார்:—[illegible]-வாராய்! லக்ஷ்மண? நாம் அரண்யத்தில் ப்ரவேஶித்தது முதல் நம்முடைய ஆஜ்ஞாபாஶத்தால் கட்டுண்டன்றோ நீ இதுவரையில் நம்மோடு மைதிலீரக்ஷணம் செய்துவந்தாய்? இனி அக்கட்டுக் குள்ளாகவேண்டாம். இதன்கருத்தாவது—‘ஸீதையைவிட்டு நம்மைப் பிரியச்செய்ய வந்தவனன்றோ இவ்விராக்ஷஸன்? இவனை நான் துரத்திக்கொண்டு போகும்பொழுது ஏதோ ஒருகாரணத்தினால் உனக்கு ஸீதையைவிட்டு விலக நேரிடுமாகில் நமதுகட்டுக்கு உள்ளாகாமல் உன் இஷ்டப்படி விலக உனக்கு அதிகாரமுண்டு என்கை. இவ்வாறு பெருமாள் துர்ப்பரமான ஸ்வாதந்த்ரியச் சுமையைத் தன்பக்கலில் போகட்டுத் தன்ஸ்வரூபத்தை அழியச்செய்யப் பார்த்தால், ஸ்ரீ இளையபெருமாள் காரணம் ஒன்றும் தோன்றாதவராய் அதிக உத்வேகத்துடன் ‘இது ஏது? நம்முடைய இராமபிரான் இவ்வாறு நியமிப்பது அபூர்வமாகவன்றோ இருப்பது? நாம் இப்படி அநுஷ்டிப்பது அபசாரஹேது வாகமாட்டாதோ? நம்விஷயத்தில் பெருமாள் திருவுள்ளம் கலங்குவதற்கு என்ன ஹேதுவோ?’ என்று ஆலோசித்திருந்தார். பிறகு பெருமாள் இளையபெருமாளுடைய திருவுள்ளத்தை யறிந்து உட்கருத்தை வெளியிட்டு அருளிச்செய்கிறார்: — [illegible]- “[illegible]” இத்யாதிகளின்படியே ராவணவதத்தை யாசித்த தேவர்களின் மநோரத பூர்த்திக்காக ராவணஸம்ஹாரக்ருத்யமும் அதனடியாக ராக்ஷஸர்களா லுண்

டான பெருந்துன்பக்கடலில் மூழ்கிக் கிடக்கின்ற மஹரிஷிகளின் பக்கலில் நாம் பண்ணிய ப்ரதிஜ்ஞையின் பூரணக்ருத்யமும் மற்றுமுள்ள ஆநுஷங்கிக க்ருத்யமும் எவையெவையோ, அவைகள் எல்லாம், ஶுஶ்ரூஷாயத்தம் - இவளுக்கு அதீநமிறே; அதாவது:— "விஷ்ணோ ரேஷாநபாயிநீ" என்கிறபடியே அரைக்ஷணமேனும் நமதுமார்பைவிட்டுப் பிரியாமலிருக்கும் ஸ்வரூபத்தை யுடையவளாக இருக்கிறபடியால், நம்முடைய அவதாரக்ருத்யத்திற்கு ஸாஹ்யம் செய்யக் கருதி மாநுஷவேஷம் பூண்ட நம்மையநுஸரித்துத் தானும் மாபாமைதிலீ வேஷம் கொண்ட இவளன்றோ நம்முடைய நிகிலக்ருத்ய நிர்வாஹம் செய்யத்தக்கவள் என்கிறபடி. இவ்விதமான கருத்தை ஊட்டிவைக்கும் ஶாஸநவாக்யத்தின் அர்த்தத்தை அறிய ஸாமர்த்யம் இளையபெருமாளிடம் இருப்பதாகக் காட்டவந்ததன்றோ இவ்விடத்தில் ஶ்ரவந்த என்னும் ஶப்தம்? ஜ்ஞாநபர்யாயமான கத்யர்த்தத்தையுடைய ஶ்ருவி என்னும் தாதுவினால் நிஷ்பந்நமான ரகு ஶப்தமன்றோ இது.

ஆனால், இவ்விடத்தில் ஒரு ஶங்கை உண்டாகக்கூடும். அதாவது - இந்தப் பத்யத்தில் "ரக்ஷ வைதேஹீம்" என்று ப்ரத்யக்ஷவாக்ய மிருக்க, 'நான் விலகினவாறே நீ விலகி வா' என்கிற கருத்தைச் சொல்வது நேர்விரோதி யாகாதோ? என்பதுதான். ஸமநந்தர ஶ்லோகத்தையும் இதனோடு ஏகவாக்யமாகப் பாவித்து அதன் கருத்தைப் பர்யாலோசனை செய்யத்தக்கவர்களுக்கு இவ்விரோதம் கிஞ்சித்தேனும் தோற்றுகிறே:—"யாவத்³க³ச்சா²மி ஸௌமித்ரே! ம்ருக³மாநயிதும் த்³ருதம்" என்றிறே உத்தர ஶ்லோகமிருப்பது. இதில் 'க³ச்சா²மி' என்கிற பதத்தினால் எதிர்காலம் விவக்ஷிதமேயாகிலும் 'யாவத்' பதத்தைக் காட்டியே அவ்வர்த்தத்தை ஸம்பாதிக்க நிர்ப்பந்தமில்லை. 'க³மிஷ்யாமி' என்றே மஹாகவி ப்ரயோகித்திருக்கும். அப்படிக்கு ப்ரயோகியா விடினும் குற்றமில்லை. நிகழ்காலத்துக்கு ஸமீபமான எதிர்காலத்திற்கூட



600 004

நிகழ்காலத்தைக்காட்டும் விக்ருதியை ப்ரயோகிப்பது அநுஶாஸநஸித்தமன்றோ? ஆகையால், 'க³ச்சா²மி' என்பதே அவ்வர்த்தத்தைக் குறித்துக் காட்ட விருக்க, 'யாவச்' பதகடிதமாய் அருளிச்செய்த மஹரிஷியின் ஆஶயம் வேறாகவிருக்கு மென்றே தோற்றுகிறது. தோற்றும் ப்ரகார மாவது என்னவெனில்,—பூர்வ ஶ்லோகத்தில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் இளையபெருமாளை நோக்கிக் கீழ்ச் சொன்னபடி பிராட்டியை விட்டுப் பிரிய நியமித்து அங்ஙனமே "ரக்ஷ வைதேஹீம்" என்பது கொஞ்சம் விரோதம்போலத் தோற்ற, அதன் ஶமநத்திற்காகவே இங்ஙனம் 'யாவச்' என்னும் ஶப்தத்தை ப்ரயோகித்தது. இதனால் எப்படி அந்த விரோதம் ஶமிப்பதென்றால்,—இளையபெருமாளால் செய்யத்தக்க ஸீதையின் ரக்ஷணத்திற்கு அவதியான காலத்தையன்றோ இதில் 'யாவத்' ஶப்தம் குறித்துக் காட்டுகிறது? 'அந்தமானைக் கொன்றெடுத்து வருவதற்காகவோ, அல்லது உயிருடன் பிடித்துவருவதற்காகவோ, நான் இவ்விடம்விட்டு எப்பொழுது போகிறேனோ அக்காலமளவும் நீ மைதிலியைப் பாதுகாத்திருக்கவேண்டும்' என்றிறே இந்த இரண்டுபத்யத்தையும் ஏகவாக்யமாகச் சேர்த்துப் பாவம் சொல்ல வேண்டியிருப்பது. இவ்விடத்தில் 'தாவத்' ஶப்தம் இல்லையேயாகிலும் யத்தத் ஶப்தங்களுக்கு நித்ய ஸம்பந்தமாகையால் அதைப் பூரித்துக்கொள்ளத் தடையில்லையிறே! ஆகையால், இளையபெருமாளுக்குப் பெருமாள் பிராட்டியை விட்டு விலகிப்போகுமளவும் தத்ரக்ஷணம் கர்த்தவ்யமென்றிறே நியமித்ததாக ஆயிற்று. இப்போது விரோதகந்தமுமில்லையிறே. பெருமாளுக்கு இவ்வாறு பிராட்டியை விட்டுப்பிரிதல் மிகவும் அபிப்ரேதமென்பதில் இன்னமும் ஒருநிதர்ஶந முண்டு; அதாவது - இளையபெருமாள் பிராட்டியைவிட்டுப் பிரிந்து பெருமாளுடைய ஸமீபத்தில் சென்றவளவில், "ஜக்³ராஹ ச கரம் ஸவ்யம் லக்ஷ்மணஸ்ய ரகு⁴நந்த³ந: - உவாச மது⁴ரோத³ர்கமித³ம் பருஷமார்த்தவத்" ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் இளையபெருமாளுடைய திருக்கையைப் பிடித்துக்கொண்டு தத்க்ஷணம் கேட்பதற்கு க்ரூரம்போலவும்

ஆலோசித்துப் பார்த்தால் மதுரமாகவும் சில வாக்யத்தை நிந்தாவ்யாஜத்தாலே அருளிச்செய்யுமளவில், 'ஆர்த்தவத்' - ஆர்த்தரைப்போல அருளிச்செய்தா ரென்றிறே மஹர்ஷி ஸாதித்திருப்பது. இதனால், சக்ரவர்த்தித் திருமகனுக்கு இளைய பெருமாள் பிராட்டியைவிட்டுப் பிரிந்ததைப்பற்றி ஹார்த்தமாக ஆர்த்தியிருப்பதாகத் தோற்றவில்லையிறே. இவருக்கு அந்த விஷயத்தில் மனதில் கேதமிருப்பது வாஸ்தவமேயாகில் 'ஆர்த்திமாந்' என்றிறே மஹாகவி அருளிச்செய்திருக்கலாம். அவ்வவ்விடங்களில் சேதநாசேதநங்களோடு வாசியறப் பிராட்டியைப்பற்றிப் புலம்பிய புலம்பல்களும், இளையவரைப்பற்றி நிந்திப்பதும் தம்முடைய அமாநுஷஸ்வரூபமான ஆகாரத்தை மறையச்செய்வதற்காக வென்றிறே தோற்றுகிறது.

ஆகையால், ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகன்திருவுள்ளத்தையொத்து நடந்த இளையபெருமாள்விஷயத்தில் பெருமாளுடைய நியமநத்தை உல்லங்கித்துப் பிராட்டியைப் பிரிந்தா ரென்று ஒரு குற்றத்தைச் சாற்றத் துணிந்தவர்கள் ஸாஹஸக்ருத்யம் செய்யத் துணிந்தவர்களேயாம்.

மை. வ. ஸ்ரீநிவாஸாசாரியன்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

## கேவல ஆசாரம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

சென்ற சித்திரை மாஸத்திய ஸஞ்சிகையில் "கேவல ஆசாரம்" என்ற தலைப்பின் கீழ் ப்ரஸ்தாவித்திருக்கிற விஷயம், வைதிக ஆஸ்திக ஸஜ்ஜந அக்ரேஸரர்கள் எல்லாருக்கும் பொதுவானதே. அது ஸம்பந்தமாக அடியேன் கிஞ்சித் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறேன்.

"ஸ்தாபகஸ்ய தபோயோகாத் பூஜாயாஶ்ச விஶேஷத: | ஆபிரூப்யாச்ச பிம்பஸ்ய ஸதா ஸந்நிஹிதோ ஹரி:" என்கிறபடி பஞ்ச ஸம்ஸ்காரம் முதலிய நியமங்களோடுகூடிய ஸதாசார ஜ்ஞாநங்களை யுடைய அர்ச்சகர்களுடைய ப்ரதிஷ்டா பூஜாதி விஶேஷங்களாலேயும், பிம்பத்தின் ஸௌஷ்டவத்தாலேயும், விக்ரஹங்களில் பகவத் ஸாந்நித்யம் ஏற்பட்டு விளங்குகிறது என்பது ஸகல ஸச்சாஸ்த்ர ஸம்மதமாக இருக்கிறது. அதேவிதமாகப் பரிசாரக பாசகர் முதலிய கைங்கர்ய பரர்களும் "வைஷ்ணவ: பரமைகாந்தீ நேதரோ வைஷ்ணவ: ஸ்ம்ருத:" என்கிற படியும், "தாப: புண்ட்ரம் ததா நாம மந்த்ரோ யாகஶ்ச பஞ்சம: | அமீ பஞ்ச ஸம்ஸ்காரா: பாரமைகாந்த்யஹேதவ:" என்கிறபடியும் சொல்லப்பட்டிருக்கும் பாரமைகாந்த்ய லக்ஷணம் பொருந்தினவர்களாக இருக்கவேணும் என்பது அவஶ்யமே. அப்படிப்பட்டவர்களை நியமித்து ஸ்ரீ பகவத் ஸந்நிதி கைங்கர்யங்களை நடப்பித்து வரச்செய்வதுதான் முக்கியமானது. "நாஶ்நீயாத் த்வந்நபாநீயம் நீசை நிஹிதே பாத்ரே | அத்ருஷ்டம் கேஶகீடாத்யை: நவா வைஷ்ணவ த்ருஶா ந" என்கிறபடி அவைஷ்ணவ த்ருஷ்டமான போஜநமே நிஷித்தமாக இருக்கும் பொழுது, அந்யதா விநியுக்த

மாகவும், ஆசார விஹீந பாசகர்களுடைய கரஸ்பர்ஶமுள்ளதாகவு மிருக்கிற அந்நத்தை ஸ்வீகரிக்கக் கூடாது என்று நிரூபிப்பது வாஸ்தவமாக இருக்கிறது.

ஆனல், "விஷ்ணோர் நிவேதிதாந்நஸ்ய விஷ்ணுபாதோதகஸ்ய ச - பரிசாரஸ்ய ஸோமஸ்ய ஸ்பர்ஶதோஷோ ந வித்யதே" என்பதற்கு இணங்கப் பகவத்ஸந்நிதியில் ஸ்பர்ஶ தோஷமில்லையென்று ஸ்ரீபகவத் ஶாஸ்த்ரத்தில் நிரூபித்திருப்பதாலும், "ததஸ்த்யே வைஷ்ணவாக்ர்யாணாம் வைஷ்ணவஸ்ம்ருதிமாயிநாம் - தீர்த்தம் நிவேதிதாந்நாதீந் தத்யாத் தைவஸ்ய ஸந்நிதௌ" "வைஷ்ணவா ஸமவஸ்தா ப்ரஹ்ருஷ்டா விநயாந்விதா: - பீத்வா தீர்த்தம் ப்ரஸாதம் ச ஸம்க்ஷயேத் தேவஸந்நிதௌ" என்கிறபடி திவ்ய ப்ரபந்நாதி திவ்ய ஸூக்திகளைப் பாராயணம் பண்ணுபவர்களாயும் பரம பாகவதோத்தமர்களாயு மிருக்கிற ஸ்ரீ வைஷ்ணவாக்ரேஸரர்களுக்கு ஸ்ரீ பகவத் தீர்த்த ப்ரஸாதாதிகளை விநியோகிக்க வேண்டுமென்றும், அப்படிப்பட்ட தீர்த்த ப்ரஸாதங்களை அவஶ்யம் பரமைகாந்திகளான ஸ்வாமிகள் ஸ்வீகரிக்க வேண்டுமென்றும் வசநங்கள் இருப்பதாலும், ஓராண்வழியான ஸம்ப்ரதாயமும் அந்நாள் தொட்டு வழங்கி வருகிறது. நிற்க, "விஷ்ணுஸ்தாந ஸமீபஸ்தாந் விஷ்ணுஸேவார்த்தமாகதாந் - ஶ்வபசாந் பதிதாந் வாபி ஸ்ப்ருஷ்ட்வா ந ஸ்நாநமாசரேத் ॥ உத்ஸவே வாஸுதேவஸ்ய ய: ஸ்நாநம் ஸ்பர்ஶஶங்கயா - ஸ்வர்க்கஸ்தா: பிதரஸ்தஸ்ய பதந்தி நரகே க்ஷணாத்" என்கிறபடி பகவத் ஸந்நிதியில் ஸ்பர்ஶ தோஷமே இல்லை என்றும், அப்படி அதிஶங்கையைக்கூடப் பண்ணலாகாது என்றும் ஏற்பட்டிருப்பதை அபியுக்தர்கள் ஆமோதித்திருக்கிறார்கள். அர்ச்சக பரிசாரக பாசகர்கள் குறிப்பிட்டபடி ஸதாசார ஸம்பந்நர்களாக இல்லையென்று அநுதபித்த மனத்தோடு பகவத் ப்ரஸாதாதிகளை வெறுப்புடன் ஶங்கிக்கும் பக்ஷத்தில் அதுவும் தோஷமாகிறது. ஆகையால், ஸ்ரீ பகவத் ஸந்நிதி யென்கிற மேன்மையான ஒரு அம்ஶத்தை மாத்திரம் த்ருடமாக நம்பி "வசநாத் ப்ரவ்ருத்தி: வசநாந்நிவ்ருத்தி:" "பஞ்சவேதாவஸிதம் கஷாயம்" என்கிற ந்யாயங்களை அநுஸரித்து ஸ்ரீ பகவத் ப்ரஸாதத்தைப் பரமபோக்யமாக ஸ்வீகரித்து வரவேண்டியதுதான்.

அப்படிக்கில்லாமல் கேவலம் உதரபூரணமே ப்ரதாநமென்று ஸ்வாசரப்படி வைத்த க்ருஹங்கள் தோறும் சென்று வர்ஜ்யா வர்ஜ்ய மன்றிக்கே ப்ரஸாத



ஸ்வீகாரம் செய்வது ஶ்ரேஷ்டமானது என்று நினைத்தால் இந்த மஹா கலியின் ஆதிராஜ்யத்தில் அதிகமான பாபஸம்பாதநம் கிடைக்குமே தவிர வேறு லாபம் என்ன கிடைக்கப்போகிறது? 'ஸ்ரீ பகவத் ஸந்நிதியில் பரமைகாந்த்ய நிஷ்டர்களான ஸ்வாமிகளே பாசகர்களாக இருந்து அப்படிப் பட்டவர்களால் கொடுக்கப்பட்ட ப்ரஸாதத்தையே ஸ்வீகரிக்க வேண்டும், இல்லா விட்டால் வாயுபக்ஷணம் செய்து ஜீவிக்க வேண்டும்' என்று நினைத்தால் மஹர்ஷிகளுக்கு ஒருகால் ஸாத்யமாகுமே தவிர மற்றவர்களால் முடியாத விஷயமென்பது, வைதிக ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களான ஸ்வாமிகள் அறிந்த விஷயம். 'பராந்ந வர்ஜநம் அன்றிக்கே எங்கும் அப்யவஹாரம் ஏன் செய்யக்கூடாது?' என்று ஸூசிப்பதும் ந்யாய்யமன்று. பராந்நத்தை வர்ஜியாமல் எங்கும் அப்யவஹாரம் செய்வதைக் காட்டிலும், ஸ்ரீ பகவத் ஸந்நிதி யென்ற த்ருடாத்யவஸாயத்தை வைத்து ப்ரஸாத ஸ்வீகாரம் செய்து கொள்வது மேல் என்று பற்றலாம். ஆழ்வார் ஆசார்யர்கள் காலம் முதல் ஸ்ரீரங்கம் முதலான ஸந்நிதிகளிலும், வடநாட்டுத் திருப்பதிகளிலும், தென்னாட்டுத் திருப்பதிகளிலும் ஸ்ரீ ஸந்நிதியில் கோஷ்டி யென்றும் ஸ்ரீ பகவத் ப்ரஸாதாதிகளை ஸ்ரீ பாகவதர்கள் நிர்மத்ஸரர்களாக ஸ்வீகரிக்கவேண்டியதென்றும் இம்மாதிரியான ஸம்ப்ரதாயங்களை ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்கள் நடத்திக்கொண்டு வந்தும் அந்தப்படி நடத்திவர மற்றவர்களை நியமித்து மிருக்கிறபடியால், அந்த ஶிஷ்டாசாரம் நடைபெற்று வருவதில் ஆஸ்திக ஶிரோமணிகள் எல்லாரும் அத்யாநந்த பரிதர்களாகி இந்த ஆசாரத்தையாவது லோகத்தில் கைநழுவ விடாமல் வஹித்து வரவேண்டுமென்று ஸ்ரீ எம்பெருமானை ப்ரார்த்திக்க வேண்டிய பாரம் நம்மில் ஒவ்வொருவரையும் சார்ந்ததாக இருக்கிறது.

"விஷ்ணுநா த்ருஷ்டம் பஶ்யந்தி விஷ்ணுநா பீதம் பிபந்தி விஷ்ணுநா ஆக்ராதம் ஜிக்ரந்தி விஷ்ணுநா ரஸிதம் ரஸயந்தி ததா ப்ரஹ்மாதயோ விஷ்ணுபுக்தம் பக்ஷயேயு:" இத்யாதியான மஹோபநிஷதாதி ஶ்ரௌத வசநங்களும், "கோட்யோ ஹி ப்ரஹ்மஹத்யாநாம் அகம்யாகமகோடய: - தா: ஸத்யோ நாஶமாயாந்தி விஷ்ணோர் நைவேத்ய பக்ஷணாத்" இத்யாதியான இதிஹாஸாதி வசநங்களும், பகவந்நிவேதித அந்நம் முதலியவற்றைப் புஜிப்பதை அதி பாவநமாகச் சொல்லுகின்றன; பராந்ந போஜநத்தை ஆதரணீயமாகச் சொல்லவில்லை. ஆகையால், பகவத் ஸந்நிதி மஹாநஸத்திலேயே பாகம் செய்து எம்பெருமானுக்குத் தளிகை ஸமர்ப்பித்து அந்த அந்ந மிஶ்ரமாக ஏற்படுகிற வேறு ப்ரஸாதாதிகளாக இருந்தாலும் அது மேன்மையான மஹாப்ரஸாதமாகத்தான் பாகவதர்கள் திருவுள்ளம்பற்றி ஸ்வீகரிக்க வேணும்.

மேலும், திவ்ய தேஶாதி பகவத் ஸந்நிதி மஹாலயங்கள்தோறும் திருமடைப்பள்ளி நாய்ச்சியாரென்று ஒரு லக்ஷ்மீ விக்ரஹம் ஶிலாரூபமாக எழுந்தருளியிருக்கிற வைபவத்தை எல்லாரும் ஸேவித்திருக்கலாம். அதாவது - ஸ்ரீ பெரிய பிராட்டியார் திருக்கைகளாலேயே எம்பெருமானுடைய திருவுள்ளமுவந்தருளும்படி தளிகைபண்ணுகிறதாக ஸம்ப்ரதாயம் ப்ரஸித்தமாகியிருக்கிறது. ஶ்ருதி ஸ்ம்ருதி பாஞ்சராத்ராதிகளில், அப்படி திருமடைப்பள்ளிகளில் பெரிய பிராட்டியார் திவ்ய மங்கள விக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணி ப்ரதிஷ்டை செய்யவேணுமென்று ஏற்பட்டிருக்கிறபடியால், இந்த ஸம்ப்ரதாயம் வழங்கி வருகிறது. இந்தக்காரணத்தினாலன்றோ பகவத் ப்ரஸாதங்களில் அநிர்வசநீயமான திவ்ய பரிமளமொன்று வீசுகின்றது? பூர்வாசார்யர்களும், அவர்கள் காண்பித்த வழியை நாடி வர்த்திக்கும் பாரமைகாந்த்ய நிஷ்டர்களான பரமபாகவதோத்தமர்களும் இம்மாதிரியாகவே கொண்டாடி யிருக்கிறபடியால், "ஓர் வைதிகர்" எழுதியிருக்கிறபடி பகவத்ப்ரஸாத ஸ்வீகாரத்தை அந்ந விக்ரய க்ருஹத்தில் ஜிஹ்வா த்ருப்திக்காகப் போஜநம் செய்வது போலப் பாவிக்கலாகாது என்பது எல்லோருடைய திருவுள்ளமும் அறிந்த விஷயமாக இருக்கவேணும்.

இங்கு நிரூபித்திருப்பதை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய கடாக்ஷாம்ருத தாராபிஷிக்தாங்கர்களான ஸ்வாமிகள் எல்லாரும் கடாக்ஷித்து "ஶ்ருதஸ்ய ஶ்ருதிஃ க்ஷுண்ணீயா" என்கிறபடி தற்கால நிலைமைக்கு அநுகுணமாக ஸத்ஸம்ப்ரதாயங்கள் நிலைநின்று ஓங்கி விளங்கும்படி முயற்சிசெய்து சீர்திருத்தங்களைச் செய்தால் லோகோபகாரகமாக இருக்கும்.

நாச்சியார் கோயில்,
1—6—12.

லக்ஷ்மீ மந்திரஸ்தர்.

---

## (2)

## ருதுமதீ விவாஹம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

சென்ற வைகாசி மாஸத்திய ஸஞ்சிகையில் ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் ருதுமதி விவாஹத்தைக் கண்டித்து எழுதியிருப்பதை அடியேன் படித்து ஸந்தோஷம் அடைந்தேன். அநேக மஹர்ஷிகளுடைய வாக்யங்களை உதாஹரித்திருப்பது ஶ்லாக்யமே. ஆனால், அடியேனுக்கு ஒரு ஸந்தேஹம் ஜநிக்கிறது; அதைத் தெளிவிக்க அந்த ஸ்வாமி க்ருபைசெய்வர் என்று நம்பி இதை எழுதத் துணிகிறேன்.

இப்பொழுது காஞ்சீபுரம் பரிஷத்திலும் இன்னும் மற்ற இடங்களிலும் ருதுமதீ விவாஹமே ஶாஸ்த்ர ஸம்மதமென்றும், அப்படி ருதுமதீ விவாஹத்தை ஶாஸ்த்ரம் விதிக்கா விட்டாலும் அம்மாதிரியான விவாஹத்திற்கு இடம் கொடுக்கிறது என்றும் இத்யாதியான அபிப்ராயங்களைச் சில வித்வாந்கள் கொண்டு இருப்பதாக ஏற்பட்டிருக்கிறதே. புத்தங்கோட்டகம் ஸ்வாமி ஸாதித்திருக்கும் ப்ரமாணங்களைப் பார்த்தாலோ அந்த மாதிரியான அபிப்ராயத்துக்குக் கொஞ்சமேனும் ஹேதுக்களிருப்பதாகத் தென்படவில்லை. ஒருகால் வாக்யாந்தரங்கள் ஸ்ம்ருத்யந்தரங்களில் இருக்கின்றனவோ? அப்படிக்கு இல்லாவிட்டால் வித்வாந்கள் அப்படி அபிப்ராயப்படவும் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து சர்ச்சை செய்யவும் காரணமில்லை. வாக்யாந்தரங்கள் இருக்கும் பக்ஷத்தில் ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி அவைகளையும் எடுத்து உதாஹரித்து, என்ன காரணத்தினால் அவைகள் அநாதரணீயங்கள் என்பதை விவரித்து எழுதும் பக்ஷத்தில் நன்றாக இருக்கும். வெளியில் நடக்கும் வாதங்களைப் பார்த்தால் பலமான பூர்வபக்ஷங்கள் இருக்கவேண்டுமென்றே அடியேனைப்போன்ற ஸாமாந்யர்களின் மநஸ்ஸில் தோன்றுகிறது.

தவிரவும், ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி உதாஹரித்திருக்கும் ப்ரமாணவாக்யங்கள் அச்சிட்ட புஸ்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டிருந்தால், அந்தப் புஸ்தகங்கள் எந்த அச்சுக்கூடத்தின் ப்ரதியென்றும், அந்த வாக்யங்கள் எந்தப் பக்கங்களில் இருக்கின்றனவென்றும் எடுத்துக் கூறவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன். அநேக இடங்களில் பெரிய வித்வாந்கள்கூடக் கல்பிதமான வாக்யங்களை ஒரு ஸ்ம்ருதியில் இருப்பதாகச் சொல்லிவிட்டுத் தாத்காலிகமாக வாதத்தை ஶமநம் செய்து விடுகிறார்கள். புத்தங்கோட்டகம் ஸ்வாமி அந்த மாதிரியாக வாக்யங்களைக் கல்பித்திருப்பதாக அடியேன் சொல்லவரவில்லை. ஆனால், அந்த மாதிரியான ஶங்கைக்கு அவகாஶம் கொடுக்காமலிருப்பது நல்லது என்றும் அப்படி வாக்யங்களிருக்கும் இடத்தைக் குறிப்பிடும் பக்ஷத்தில் புஸ்தகங்களை உடையவர்கள் ஸுலபமாக அவைகளைக் கண்டு கொள்வார்கள் என்றும் எண்ணி இந்த மாதிரியாக விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிந்தேன்.

"கலௌ பாராஶர ஸ்ம்ருதிஃ" என்று பாராஶர ஸ்ம்ருதிக்குக் கலியுகத்தில் ப்ராதாந்யம் கொடுத்திருப்பதாகச் சொல்லிவிட்டு, அந்தஸ்ம்ருதியிலிருந்து ஒரு வாக்யம்கூட அவர் எடுத்து உதாஹரிக்காமலிருப்பது கொஞ்சம் ஆஶ்சர்யமாக இருக்கிறது.

மன்னார்குடி,
18—6—12.

ஒரு ஆஸ்திகன்.

---

## (3)

## ஸ்ரீ அஹோபிலமடமும், ஶிஷ்யஸபையும்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

இந்த "வேதாந்த தீபிகை" என்னும் பத்ரிகை ஆரம்பித்தது முதல் மேற்கண்ட விஷயமாக அநேக ஸஞ்சிகைகளில் தேவரீர் எழுதியிருக்கும்

குறிப்புகளை மிகுந்த ஆநந்தத்துடன் அநேகம் ஆஸ்திகர்கள் வாசித்து வந்திருக்கிறார்கள். ஸ்ரீ ஸ்வாமியின் ஆஸ்தாநத்துக்கு உசிதமான மர்யாதையைக் கொஞ்சம்கூட அதிக்ரமிக்காமலும் ஶிஷ்யர்களுக்குள்ள ஸ்வாதந்த்ரியத்தைக் கிஞ்சித்தேனும் லோபம் செய்யாமலும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் விபூதியின் அபிவ்ருத்திக்கு ஹேதுவான அநேக விஜ்ஞாபநங்களைச் செய்துகொண்டும், ஸ்ரீ ஸ்வாமியின் திருவுள்ளத்தில் காரணங்களுடனோ காரணங்களில்லாமலோ ஸபையைப்பற்றி ஏற்பட்டிருந்த அந்யதா அபிப்ராயங்களை மாற்றும் பொருட்டு வஸ்து ஸ்திதியை அந்யூநாதிரிக்தங்களாகத் தெளிவித்துக்கொண்டும் தேவரீர் எழுதிவரும் மாதிரி மிகவும் ஶ்லாகநீயமாகவே இருக்கிறது. இந்தப் பத்ரிகை ஏற்படுத்தப்பட்ட காலத்தில் அநேகம் பெயர்கள் 'அத்ருப்தர்களான சில ஶிஷ்யர்கள் ஸ்ரீ ஸ்வாமிக்கும் ஸ்ரீ ஸந்நிதிக்கும் விருத்தமாக இதை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்' என்றும், 'தங்களுடைய மநஸ்ஸின் குறை நீங்குமளவு ஸ்ரீ ஸ்வாமியை அவர்கள் இந்தப் பத்ரிகையில் தூஷிப்பார்கள்' என்றும் எண்ணியிருந்தார்கள். அந்த எண்ணம் தவறுதல் என்று தேவரீர் இந்தப் பத்ரிகையை நடத்திவரும் மாதிரியிலிருந்து வ்யக்தமாக ஏற்படுகிறது. பூர்வம் விபரீத க்ரஹணம் செய்திருந்தவர்களில் அநேகர் இப்பொழுது இதன் ஸாமஞ்ஜஸ்யத்தையும் கௌரவமுள்ள ரீதியையும் பார்த்து ஆநந்திக்கிறார்கள் என்பது அடியேனுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம்.

ஸ்ரீ ஶிஷ்ய ஸபையைப் பற்றியும் இந்த மாதிரியான ஶ்லாகையே எவ்விடத்திலும் ஶ்ருதி கோசரம் ஆகின்றது. மஹாமஹோபாத்யாயர் ஸ்ரீ. பெருகவாழ்ந்தான் ரங்காசார்யர் ஸ்வாமி இந்த ஸபையின் கார்யங்களை ஆமோதிக்கிறார் என்பதே போதுமானது. நிஷ்பக்ஷபாதியான ஒருவர்கூட இதை நிந்திக்கக் காணோம். இப்படியிருக்க, ஸ்ரீ ஸ்வாமி மாத்திரம் இப்பொழுது இந்த ஸபையைத் திக்கரிக்கவும், இந்த ஸபையின் தீர்மானங்களை அநாதரணீயங்களென்று ப்ரகடநம் செய்யவும் திருவுள்ளம் பற்றும்படி தோன்றியிருக்கிறது என்று தேவரீர் எழுதியிருக்கும் குறிப்பிலிருந்து தெரிந்துகொள்ள, அநேக ஸாத்விகர்கள் மிகவும் வருந்துகிறார்கள். 'என்ன காரணத்தினால் இந்த ஸபை ஏவம் வித திக்காரத்திற்கு அர்ஹமாச்சுது?' என்பதை அவஶ்யம் ஸ்ரீ ஸ்வாமி விளம்பரம் செய்யவேணும். இந்தப் பத்ரிகையை வைஷம்யமன்றிக்கே ப்ரதி மாஸமும் ஸ்ரீ ஸ்வாமி கடாக்ஷித்துக்கொண்டு வந்திருந்தால் இப்படி திக்கரிக்கக் கொஞ்சமேனும் புத்தி தோன்றியிருக்காது. ஸபையார் செய்யும் விஜ்ஞாபநங்களும் தீர்மானங்களும் என்ன காரணத்தால் அநாதரணீயங்களாக இருக்கவேணும்? "யுக்தியுக்தம் வசோ க்ராஹ்யம் பாலாதபி ஶுகாதபி" என்கிறபடி இவர்களாற் செய்யப்படும் விஜ்ஞாபநங்கள் யுக்தியுக்தமாகவும் ந்யாய்யமாகவும் இருக்கும் பக்ஷத்தில், இப்படி அநாதரிப்பது ஸர்வதா அநுசிதம் ஆகாதோ? இவை யெல்லாவற்றையும் கிஞ்சித் பராமர்ஶித்து, ஸாத்விகாக்ரேஸரர்களாகவும் ப்ரமுகர்களாகவுமிருக்கும் ஸ்ரீ பெருகவாழ்ந்தான் ரங்காசார்யர் ஸ்வாமியைப் போன்ற



ஸ்வாமிகளைக் கலந்துகொண்டு ஸபையைப்பற்றி ஒருவித நிர்ணயத்துக்கு வந்தாலொழிய வைதிகத்திற்கும் லௌகிகத்திற்கும் ஸ்ரீ ஸ்வாமியுடைய வ்யாபாரங்கள் ஒத்திருக்கமாட்டா என்பது திண்ணம். தேவரீர் எழுதியிருக்கிறபடி, தங்களுடைய ஶிஷ்யத்வத்தையும் ஸ்ரீ ஸ்வாமியின் ஆசார்யத்வத்தையும் அவலம்பித்து நெருங்கும் ஶிஷ்யர்களை ஸ்ரீ ஸ்வாமி நிரஸிப்பது அத்யந்தம் அநுசிதமே. ஸர்வத்ர நியந்தாவாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளத்தில் த்ருடமாகத்தோன்றி ஶாஸ்த்ரீயமாகவும் யுக்தமாகவும் இருக்கும் வ்யாபாரங்களில் ஸதா ஸ்ரீ ஸ்வாமியை ப்ரவ்ருத்திப்பிக்க வேணுமென்பதே, ஸகல ஸச்சிஷ்யர்களுடைய ஸார்வகாலிக ப்ரார்த்தனை.

ஸ்ரீரங்கம். }
20—9—12. }

ந. ராமபத்ரன்.

---

MADRAS

ஶ்ரீ:.

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] பரீதாபி௵ ஆடி௴. [ஸஞ்சிகை 6.

## மைத்ரேயீ ப்ராஹ்மணம்.

நம் ஸித்தாந்தத்தில் பகவானை அடையும் உபாயம் த்யானம் என்று சொல்லப்படுகிறது. இதற்கு ஆதாரமான ஶ்ருதிவாக்யம் "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" என்கிற ப்ருஹதாரண்யக வாக்யம். இதில் ஆத்மாவென்பது பரமாத்மாவென்று சொல்லப்படவேண்டும். ஏனெனில், இந்தப்ரகரணத்தில் யாக்ஞவல்க்யர் என்னும் மகாயோகியானவர் தன்பார்யைகளான காத்யாயனீ, மைத்ரேயீ, இவர்களில் மைத்ரேயீ என்பவள் ப்ரஹ்மவிசாரத்தில் ருசிஉள்ளவளென்று அறிந்து, அவளைத்தான் உலகவாழ்வைத்துறந்து வேறிடம் போவதாயும் அவளுக்கு வேண்டுவதைக்கேட்டால் கொடுத்துவிட்டுப் போவதாயும் சொன்னார். அதற்கு அவள் "இவ்வுலகம்முழுதும் தனத்தினால் நிரப்பிக்கொடுத்தாலும் அதுள்ளவன் பிறப்பிறப்பில்லாதவனாவனா? என்றுகேட்க, அஃதொருகாலு மில்லையென்று மஹர்ஷி பதில்சொன்னார். அதைக்கேட்ட அந்தப்பத்நீ, தனக்குப்பொருள்கள் வேண்டாமென்றுசொல்லி, ஜநநமரணத்துக்குப் பெருமருந்தாகிய ஞானோபதேஶத்தை விரும்பினாள். இதற்கு மஹர்ஷி சொல்

லும் ப்ரதிவசநத்தில் மேற்சொன்ன "ஆத்மாவா அரே..." என்னும் வாக்யம் வருகிறது. ஸம்ஸார பந்தத்தைத்தவிர்க்கும் தர்ஶநம் பரமாத்ம தர்ஶனந்தானென்பது "தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி" என்பது முதலான ஶ்ருதிவாக்யங்களால் விளங்கும் "ஆத்மநோ விஜ்ஞாநேந இதம் ஸர்வம் விதிதம் பவதி" என்று, அதாவது "ஆத்மாவை யறிந்தால் அகிலமான ப்ரபஞ்சமும் அறிந்ததாகும்" என்பதினுல் எல்லா உலகுக்கும் மூலகாரணமாய் உபாதான காரண மென்னப்படும் பொருளே இங்கு சொல்லப்படும் ஆத்மாவென்று தெரிகிறது. அப்படிப்பட்ட காரணம் ப்ரஹ்மமென்று மற்ற இடங்களில் சொல்லி இருப்பதால் இங்குசொல்லப்பட்டதும் அந்த பரமாத்மாவென்று ஏற்படுகிறது. அன்றியும், "தஸ்ய ஹ வா ஏதஸ்ய மஹதோ பூதஸ்ய நிஶ்வஸிதமேதத் யத்ருக்வேத:" என்கிற பின்வாக்யத்தாலும் ருக்வேதம் முதலான எல்லா ஶப்தப் பிரபஞ்சமும் அந்த ஆத்மாவுக்கு ஶ்வாஸம் போன்றது என்று சொல்வதால் இது பரமாத்மாவையே உத்தேசித்துச் சொல்லப்படவேண்டும். ஆகையால் "ஆத்மாவா அரே த்ரஷ்டவ்ய:" என்னும் வாக்யத்தில் ஆத்மஶப்தம் பரமாத்மாவைக்குறிக்கிறதே ஒழிய, ப்ரக்ருதிரூபமான சரீரத்தோடுகூடின ஸம்ஸாரியான ஜீவாத்மாவையாவது, ப்ரக்ருதி ஸம்பந்தம் நீங்கின சுத்தமான ஆத்மஸ்வரூபத்தையாவது குறிக்கிறதென்று சொல்லமுடியாது.

இப்படி ஆத்மஶப்தம் ப்ரமாத்மாவைக்குறித்தால் ப்ரகரணத்தில் மற்றவாக்யங்கள் அந்வயிக்குமோ? "ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி; ஆத்மநஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி" என்னும் வாக்யத்திலும் அதற்குப் பின்வரும் அதுபோன்ற வாக்யங்களிலும், பதி, புத்ரன், வித்தம் முதலானவைகள் ஒருசேதனனுக்குப் ப்ரியமாவது அந்தப்பதி, புத்ரர்கள் இச்சையினுலே அல்ல, ஆத்மாவின் இச்சையினுல், என்று சொல்வதினுல், பதி, புத்ரர்கள் முதலானதுக்கு சம்பந்தமுள்ள ஜீவாத்மாவே ஆத்மஶப்தத்தினுல் குறிக்கப்பட வேண்டாமா? மேலும் "ஏதேப்யோ பூதேப்ய: ஸமுத்தாய தாந்யேவாநு விந



ஶ்யதி, ந ப்ரேத்ய ஸம்ஜ்ஞாஸ்தி" என்னும் (இந்தப் பஞ்சபூதமயமான சரீரத்தோடு வெளிக்கிளம்பி, அவைகளைப் போலவே ஆத்மா மறைந்துபோகிறதென்று பொருளுள்ள) பின்வாக்யத்தாலும் இந்த ஆத்மா, ஜீவாத்மாதான் என்று விளங்கவில்லையா? இப்படியே ப்ரக்ருதி வியுக்தமாய் சுத்தமாயுள்ள ஆத்மாவின் ஸ்வரூபஜ்ஞாநமே மோக்ஷத்துக்கு ஹேதுவாகையால் "ஆத்மாவா அரே த்ரஷ்டவ்ய:" என்கிற வாக்யம் ஜீவாத்மாவைக் குறிப்பதாய் சொல்வதே யுக்தமல்லவா?

இந்த ஆக்ஷேபங்கள் சரியல்ல. இந்தப்பிரகரணத்தின் வாக்யங்களை பரமாத்ம விஷயமாய் அந்வயிப்பதே ஸ்வாரஸ்யமாயிருக்கிறது. பரமாத்மாவின் ஸ்வபாவத்தைக்குறிக்கிற மேல்சொன்ன அடையாளங்களுடன் வேறுசில அடையாளங்களும் இந்தப் ப்ரகரணத்தில் இருக்கின்றன. அவையாவன, 'இதம் மஹத்பூதம் அநந்தம் அபாரம்' (இந்தப்பெரியபூதம், முடிவில்லாதது, கரையில்லாதது) என்பதும், 'இதம் ஸர்வம் யதயமாத்மா' (இந்தசித், அசித், இரண்டும் சேர்ந்தப்பிரபஞ்சம் தான் இங்கு ஆத்மாவென்கிறது,) என்கிற வாக்யமும் இன்னும் பலவாக்யங்களும் இந்தவிடத்தில் ஆத்மபதம் பரமாத்ம விஷயந்தா னென்பதை ஸ்திரீகரிக்கின்றன. அப்படியானல் "ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி" என்கிறது முதலான வாக்யங்களின் அர்த்தம் இதற்கநுகுணமாய் விவரிக்கப்படவேண்டும். அதை உடனே விவரிப்போம்.

ஒரு ஸ்த்ரீ புருஷனிடத்திலும், ஒருபுருஷன் ஸ்த்ரீயினிடத்திலும், பொதுவாய் ஜனங்கள் தனம், பசுக்கள், முதலான எல்லாவஸ்துக்களிடத்திலும் ப்ரீதிவைத்து அவைகளைத் தங்கள்தங்களுக்கு மிகவும் அநுகூலங்களாக எண்ணுவது எதனுல், என்று யோசித்துப்பார்க்கும்பக்ஷத்தில், எல்லாம் பரமாத்மாவின் ஸங்கல்பத்தினுல் தானென்று தோன்றுகிறது. ஒவ்வொருவருக்கும் ஒரேவஸ்து ஒருகாலத்தில் அத்யந்தம் அநுகூலமாயும், அதேவஸ்து வேறொரு காலத்தில் அத்யந்தம் பிரதிகூலமாயும் ஆவதைக் காணுகிறோம். எல்லாருக்கும் பிரதிகூலமான பாம்பு, தேள் முதலானவைகளும் அதனதன் ஸஜாதீயங்களுக்கு அனுகூலங்களாகவில்லையா? ஒரு புருஷன் தன் பத்நீ தனக்கு அனுகூலையா யிருக்கவேண்டுமென்று

எவ்வளவு ப்ரயத்நப்பட்டாலும் அது சித்திக்காமல் போகிறதுண்டு. அப்படியே தேசகால பேதத்தால் மித்ரர்கள் சத்ருக்களாகவும் சத்ருக்கள் மித்ரர்களாகவும் ஆவார்கள். இதற்கெல்லாம் காரணம் ‘ஆத்மநஸ் காமாய’ அதாவது, பரமாத்மாவின் இஷ்டம் நிறைவேற, என்று ஸ்ருதிசொல்லுகிறது, இதனுல் பரமாத்மாவின் இஷ்டம் நிறைவேறுகிறதெப்படி என்ருல், அவரவர்கள் கர்மங்களுக் கநுகுணமான ஸுகத்தையும் துக்கத்தையும் கொடுக்கத் திருவுள்ளமுள்ள பகவான், நல்ல கர்மாக்களினுல் பூஜிக்கப் பட்டவராய், அதினுலுண்டான ப்ரீதிக்குப்பலமாய், சேதநர்களுக்குப் பதி, புத்ரன், வித்தம், முதலானவைகளால் ப்ரியம் அல்லது ஆநந்தம் உண்டாகும்படி ஸங்கல்பிக்கிருர். எல்லாருடைய ஆநந்தத்துக்கும் அவரே காரணம் என்று “ஏஷ ஹ்யேவாநந்தயாதி” என்கிற ஸ்ருதி சொல்லுகிறது. வஸ்துக்களில் சில நமக்குப் பிரியத்தைக் கொடுப்பதும், சில நமக்கு அப்ரியத்தை உண்டாக்குவதும் வஸ்துக்களின் ஸ்வபாவத்தினு லல்லவென்பதை “ததேவ ப்ரீதயே பூத்வா புநர்துக்காய ஜாயதே । ததேவ கோபாய யத: ப்ரஸாதாய ச ஜாயதே ॥ தஸ்மாத் துக்காத்மகம் நாஸ்தி ந ச கிஞ்சித் ஸுகாத்மகம்” என்று புராணத்திலும் மஹர்ஷி அருளிச்செய்திருக்கிருர். இந்த தத்வத்தை அறிந்தே பகவான் யாக்ஞவல்க்யரும் மைத்ரேயிக்கு உபதேசிக்கும் தருணத்தில், உலகத்தில் ஸுகமென்பதற்குக் காரணமான பதி, புத்ரன், வித்தம், பசுமுதலானவை எந்தப்பரமாத்மாவின் நிரவதிகமான ஆநந்தக்கடலின் ஓருதிவலையின் சம்பந்தத்தால் நமக்கு ஸுகத்தைக்கொடுக்கின்றனவோ அந்தப் பரமாத்மாவைத்தான் தர்சிக்கவேணும் என்று உபதேசிக்கிருர். இப்படி அர்த்தம்செய்தால் ‘ஆத்மநஸ்து காமாய’ என்று பல முறைவரும் வாக்யத்தில் ஆத்மஶப்தமும் “ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:” என்னும் வாக்யத்தின் ஆத்மஶப்தமும், இரண்டும் பரமாத்மாவைக் குறிக்கும். ஓரே பிரகரணத்தில் பல முறைவரும் ஓரே ஶப்தத்தை ஓரே அர்த்தமுள்ளதாய் சொல்வது ந்யாய்யமே ஒழிய ஒரு இடத்தில் ஜீவாத்ம பரமாகவும் பிந்தி பரமாத்ம பரமாகவும் அர்த்தம் செய்வது சரியல்ல. ஆகையால் இந்த வாக்யங்களின் கட்டார்த்தம்: “பசு, வித்தம், முதலானவைகளில் நாம் ஆசைவைப்பது அந்தந்த வஸ்து ஸ்வபாவத்தினுலல்ல.



பரமாத்மாவின் ஸங்கல்பத்தினுல் அவைகளைக்கொண்டு நமக்கு ஆநந்தம் உண்டாகிறபடியால், இப்படிப்பட்ட ஆநந்தத்துக்கு முதற்காரணமாகிய பகவானையே நாம் த்யானத்தினுல் தர்சிக்க வேண்டும்” என்பது.

முதல் ஆத்ம ஶப்தத்தை ஜீவபரமாகவும் கடைசியான ஆத்ம ஶப்தத்தைப் பரமாத்ம பரமாகவும் செய்து இந்த வாக்யங்களுக்கு அந்வயம் செய்வதும் ஸ்ரீபாஷ்யக்காரர் ஒப்புக்கொள்ளும் ஒரு க்ரமந்தான். அப்பொழுது இந்த வாக்யங்களின் அர்த்தம் என்னவென்ருல்: ஒருவன் பத்நீ, வித்தம், பசு, முதலான வஸ்துக்களிடத்தில் ப்ரீதிவைப்பது அந்த வஸ்துக்களின் இஷ்டத்துக்காக அல்ல, அவைகள் பரதந்த்ரங்களாகையால் அவைகளை உத்தேசித்து ப்ரீதிசெய்தானென்று சொல்வது சரியல்ல. ஆகையால் தனக்கு அவைகளால் கிடைக்கும் ஆனந்தத்தை உத்தேசித்தே செய்ததாகச் சொல்லவேண்டும். இப்படி ஜீவாத்மா தன்னுடைய ஆநந்தத்தையே தேடுவது ந்யாய்யமானுலும், எல்லா ஆனந்தங்களுக்கும் மேற்பட்டதும் ஜீவாத்மாவுக்கு நிரவதிகமான ஆநந்தத்தைக் கொடுக்கக்கூடியதும் எந்த வஸ்துவோ அந்த பரமாத்மாவையே தர்சிக்கவேண்டும், என்று சொன்னதாக ஆகிறது: இந்த அர்த்தத்திலும் “ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:” என்று முடிக்கும் உபதேசம் பரமாத்மாவைக்குறித்துச் சொல்லப்பட்டதே ஒழிய, பத்தனுகவாவது, சுத்தனுகவாவது இருக்கும் ஜீவாத்மாவைக்குறித்துச் சொல்லப்பட்டதல்ல. ஆகிலும் முன் அர்த்தமே யுக்தமானது. ஏனென்ருல், ஆத்ம ஶப்தத்தின் அர்த்தம் ஏகரூபமாயிருப்பதே அதற்குப் பெரிய ஸ்வாரஸ்யம்; மேலும் ஓரே அர்த்தமாய் உபயோகித்தால் தான் “ஆத்மநஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி” “ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:” என்கிற இரண்டு வாக்யங்களும் ஓரே வாக்யமாய் அர்த்தமாகும். அப்படி அர்த்தம் செய்வதே உசிதம் என்று மீமாம்ஸகர்கள் சொல்லுவார்கள். “ஸம்பவத்யேகவாக்யத்வே வாக்யபேதோ ந சேஷ்யதே” என்பது அவர்கள் காரிகை.

“காந்தாவித்தம் விஜ்ஞாநமயநமய ஸ்வதேஹோத்தாத ஸுகதே ஹ்ய: ஸுகாய தாமேத்யாநந்தவிநஶ்யதி । நைவத்ரவ்யம் ஜ்ஞாத்வா” என்கிற வாக்யம் இந்தப் பிரகாணத்தில் இருக்கிறது.

அதன் அர்த்தம் என்னவென்றால் "ஸ்வரூபத்தினாலும் குணங்களினாலும் வரையறக் கூடாதவரான பரமாத்மா விஜ்ஞாநம் என்னும் சேதனனை தனக்குச் சரீரமாகக்கொண்டு அவனுடன் ஒரு பாஞ்சபௌதிகமான சரீரத்தை எடுத்துப் பிறகு அதைவிட்டு அவைகளுடன் தானும் நசிக்கிறான், இறப்புக்குப் பிறகு தன் நினைவு ஒன்றும் இல்லை" என்பதுதான். இந்த வாக்யத்தில் ப்ரஹ்மம் ஜீவனுடன்கூடப் பிறப்பதும் இறப்பதுமாகச் சொல்வது கூடுமோ, இறப்புக்குப் பிறகு நினைவு என்பது இல்லை என்றாலும் பொருள் விளங்கவில்லையே, என்று கேட்கலாம். இதற்கு ப்ரதிவசநம்: ஜீவாத்மாவுக்குப் பிறப்பும் இறப்பும், தேக சம்பந்தம் உண்டாவதும் அது அற்றுப்போவதும் தான். இப்படி ஆத்மாவுக்கு ஸம்ஸாரதசையிலும் மோக்ஷதசையிலும் பரமாத்மா அந்தர்யாமியாகவே இருப்பதால் "ஸத்யம் சாந்ருதம்" என்று அவரைச்சொல்லி அவருக்குச் சரீரபூதமான ஜீவாத்மாவை "தத்த்வமஸி" என்னும் வாக்யத்தில் சொல்வதுபோல் அபேதமாய் பாவித்து, "விஜ்ஞாநம் சாவிஜ்ஞாநம் ச" என்று ஶ்ருதி சொல்லுகிறது. இப்படி ஜீவ சரீரகமான ப்ரஹ்மத்தை ஜீவவாசியான ஶப்தத்தால் சொல்வது ஶ்ருதியில் பல இடங்களிலும் காண்கிறோம்.

மேலும் "ந ப்ரேத்ய ஸம்ஜ்ஞாஸ்தி" என்பதின் அர்த்தம், ஆத்யந்திகமாய் மோட்சமடைந்த ஜீவன், தனக்கு முன் அவஸ்தையில். அந்தந்த சரீர ஸம்பந்தத்தால் உண்டான பேதங்களை ஒன்றையும் அறியமாட்டான், அதாவது தேஹாத்ம ப்ரமம் ஜீவனுக்கு முக்திதசையில் ஒருகாலு முண்டாகாது" என்று அறியவேண்டும். இந்தக் கருத்து மைத்ரேயியின் கேள்வியினாலும் அதற்கு யாக்ஞவல்க்யர் ப்ரதிவசனங்களினாலும் விளங்கும். அவர் சொல்வது "ந வா அரேஹம் மோஹம் ப்ரவீமி அலம் வா அர இதம் விஜ்ஞாநாய" என்று. அதாவது, "ந ப்ரேத்ய ஸம்ஜ்ஞாஸ்தி" என்று சொல்வதால் நான் உன்னை மயக்கவில்லை. இந்த ஆத்மவஸ்துவுக்கு முக்தியில் பூர்ணமான ஞானத்துக்குக் குறைவில்லை." என்கிறார். ஆகையால் "ஸம்ஜ்ஞா" என்னும் பதத்துக்கு "சேர்ந்த ஞானம்" அதாவது தேஹத்தையும் ஆத்மாவையும் ஒன்றுசேர்த்த தேஹாத்ம ப்ரமமாகிய ஞானம் என்று அர்த்தம் சொன்னதாயிற்று.



அப்படியே ஜீவாத்மா ஸ்வதந்த்ரன் என்றும், ஸ்வநிஷ்டன் என்றும் உண்டாகிற ப்ரமத்தைத் தவிர்க்கிறது அடுத்த வாக்யம். "யத்ர ஹி த்வைதமிவ பவதி ததிதர இதரம் ஜிக்ரதி। ததிதர இதரம் பஶ்யதி। யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத்கேந கம் பஶ்யேத்॥..." இந்தவாக்யங்களின் அர்த்தம்: ஜீவாத்மா தன்னை ஸ்வதந்தரனாய் எண்ணித் தன்னையும் மற்றவைகளையும் வெவ்வேறாய் பேதபுத்தியால் எண்ணினால், அப்போது ஸ்வதந்த்ரமான, பல, வஸ்துக்களுண்டென்றும் அவைகளில் ஒன்று ஒன்றை மோருகிறதென்றும், பார்க்கிறதென்றும் இப்படிப்பட்ட பேதவ்யவஹாரங்கள் உண்டாகும். ஒவ்வொரு சேதநனும் தன்னைப் பிரஹ்மநிஷ்டனையும் எல்லாவஸ்துக்களையும் பிரஹ்மநிஷ்டமாயும் எண்ணி, தான் வேறு, ப்ரஹ்மம் வேறு, என்கிற ஞானமில்லாமல் எல்லாம் பரமாத்மா ஒன்றே என்று எண்ணுங்கால், ஒருவனை ஒருவன் பார்க்கிறது, மோருகிறது முதலான பேதவ்யவஹாரத்துக்கு இடமே இல்லை, என்பதுதான். "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" முதலான பேதத்தை நிஷேதிக்கிற மற்றவாக்யங்களுக்கும் இதே பொருளாகக்கூறவேணும். என் இந்த ஶ்ருதியின் ஸ்வாரஸ்யமான அர்த்தமாகிய ஜீவாத்ம பரமாத்மாக்களின் ஐக்கியத்தை விட்டுவிட்டு அந்தர்யாமியின் அபேதத்தை அவலம்பித்து பரிஹரிக்க வேண்டுமென்று கேட்டால், இதற்குப்பல இடங்களில் ஸ்ரீபாஷ்யத்தில் ஸமாதானம் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரஹ்மம் ஒன்றென்றும் பலவென்றும் அறியாத நமக்கு "பஹு ஸ்யாம் ப்ரஜாயேய" என்றும் "ஸ த்ரிதா பவதி" என்றும் பலவிடங்களில் ஶ்ருதிசொல்வதால் அதை ப்ராமாணிகமாகவே எண்ணவேணும். ஏகத்வம் சொல்லும் வாக்யங்களையும் இதற்கநுகுணமாக அர்த்தம் செய்யவேண்டும். அதற்காக சரீரசரீரி பாவத்தை ஒட்டி பேதமும், அந்தர்யாமியின் ஏகத்வத்தை அனுசரித்து அபேதமும் அர்த்தம்செய்தால் எல்லாவாக்யங்களும் ஸப்பிரயோஜநமாயும் ஸமஞ்சஸமாகவும் ஆய்விடுமென்கிறது ஸ்ரீ பாஷ்க்காரர் அபிப்பிராயம்.

டி. ராஜகோபாலாசாரியர்.

ஸ்ரீ:

## ஸ்ரீராமாயணத்தில் சில விசேஷார்த்தங்கள்.

## III.

# ஸீதாப்பிராட்டி வைபவம்.

(தொடர்ச்சி.)

பரிசுத்த ஜீவாத்ம ஸ்வரூபத்தைப் பல பிரகாரத்தால் பகவானுக்கு நாயிகை ஆகச்சொல்லலாம். ஏனென்றால், அது பகவான் தவிர வேறொரு வஸ்துவுக்குச் சேஷப்பட்டதல்ல; அதாவது அநந்யார்ஹ சேஷத்வம் அதற்குண்டு. தனக்கு அவன் தவிர வேறு உபாயமில்லை யென்கிற அறிவுள்ளது. அந்தப் பகவானுடன் கலவியினால், அதாவது ஸம்ஶ்லேஷத்தினால், அதற்குப் ப்ராணன் தரிக்கிறதும் அவனைவிட்டுப் பிரிந்தால் தரிக்காததுமாகிய ஸ்வபாவமுள்ளது. அவன் குணாநுஸந்தாநமே அதற்குப்போக்யம். அதுதவிர வேறு போக்யமில்லை. இப்படிப் பல ஸமாநமான ஸ்வபாவங்களிருப்பதால் பெரிய பிராட்டியாகிய லக்ஷ்மியுடன் சுத்த ஜீவாத்ம ஸ்வரூபத்துக்கு ஸாம்யம் சொல்வது கூடும்.

முன் ஸஞ்சிகையில், ஸீதாப்பிராட்டியின் அநந்யார்ஹத்வத்தையும் பாரதந்த்ரியத்தையும் பற்றிக் கொஞ்சம் சொன்னோம். இன்னமும் அந்த அத்யந்த சேஷத்வ பாரதந்த்ரியங்களையே சில ஶ்லோகங்களால் எடுத்துக்காட்டி, ஸீதை தன்னைப் பகவானுடைய ஸொத்து என்றும், அவரே தனக்கு உபாயம் என்றும், அவர் முகோல்லாஸமே தனக்குப் பிரயோஜநம் என்றும், அவரை விட்டால் தனக்கு ஆற்றாமை உண்டாவதைச் சொல்லி முடியாதென்றும், அவர் குணாநுஸந்தாநமே தனக்குத் தாரகமென்றும் இருந்த இருப்பை விவரிக்கிறோம். பகவான் விஷயத்தில் ஸீதையின் அவஸ்தைகளெல்லாம், பரமாத்மாவினிடத்தில் ஜீவாத்மாவுக்கு உண்டாகும் வ்ருத்திகளுக்கு ஸமானமென்பது, மேற் சொன்ன



இரண்டு பேர்களுக்கும் உள்ள ஸாம்யத்தினால் வ்யக்தமாய் ஏற்படும். இப்படி ஸீதாப் பிராட்டியின் வ்ருத்தாந்தத்தினால் ஜீவாத்மாவின் ஸ்வரூப, ஸ்வபாவ, கர்த்தவ்யங்களை சிக்ஷிப்பதினால், இந்த வைபவம் விசேஷமாய் கவனிக்கவேண்டியதாகிறது. தன் ஆத்மா பகவானுக்குச் சேஷப்பட்டது. அவன் கைங்கர்யமே தனக்கு ஸ்வரூபம். அவன் கல்யாணகுணங்களை அறிந்து அந்த குணங்களில் ஈடுபட்டுச் செய்யும் கைங்கர்யங்கள் விசேஷமே. ஆகிலும் அவன் ஸ்வரூபத்தையும் தன் சேஷத்வத்தையுமறிந்து, அந்தச் சேஷத்வம் காரணமாகச்செய்யும் கைங்கர்யம் அதிக விசேஷம். இந்த அர்த்தத்தைப் பின்வரும் ஶ்லோகங்கள் வெளியிடுகின்றன.

த்யக்த்வா ஜ்ஞாதிஜநம் ஸீதே மாநம்ருத்திம் ச மாநிநி ।
அவருத்தம் வநே ராமம் திஷ்ட்யா த்வமநுகச்சஸி ॥

.....................

ஸா த்வேவமுக்தா வைதேஹீ த்வநஸூயாநஸூயயா ।

.........................

யத்யப்யேஷ பவேத் பர்த்தா மமார்ய வ்ருத்தவர்ஜித: ।
அத்வைதமுபசர்த்தவ்யஸ் ததாப்யேஷ மயா பவேத் ॥
கிம் புநர்யோ குணஶ்லாக்ய: ஸாநுக்ரோஶோ ஜிதேந்த்ரிய: ॥

அத்ரிபகவான் ஆச்ரமத்தில் பெருமாள் எழுந்தருளி இருந்தபோது, மஹர்ஷியின் பத்நி அநஸூயை, பிராட்டியைப்பார்த்து: பந்துஜநங்களையும் அபிமானத்தையும் ஐஶ்வர்யத்தையும் விட்டுப் பெருமாள் பின்னே காட்டிலேபோனது இது மிக நன்றாக இருக்கிறது. நகரஸ்தனானாலும், வநஸ்தனானாலும், நல்லவனாகிலும், தீயவனாகிலும் ஸ்த்ரீகளுக்குத் தெய்வம் பர்த்தா. நீர் இப்படியே எப்போதும் இருக்கவேண்டும்: என்று சொல்ல, பிராட்டி மிகவும் வணங்கிச் சொன்னதாவது: பெருமாளுடன் எனக்கு ஸ்வபாவமாகவே ஸ்வரூபத்தோடு ஒத்த சம்பந்தம். அவர் ஸகல கல்யாண குணங்களை யுடையவராயிருப்பதால் அவர் குணத்தால் நான் கைங்கர்யம் செய்கிறேன் என்றிருப்பார் நாட்டார். அந்த குணங்களைவிட்டுப் பிரித்துப் பெருமாளைத் தனியாகக் காட்ட முடியாமையால் நான் அவரிடத்தில் இருக்கும் இருப்பை எப்படி ஸ்வரூபத்தைச்சேர்ந்தது என்று காண்பிக்கக்கூடும். ஆகிலும், பர்த்தா

குணஹீநனாயிருந்தாலும் விரூபனாயிருந்தாலும் என் இருப்பு இப்படிப்பட்டதே, என்று சொன்னாள். பகவானிடத்தில் ப்ரபந்நனுக்கு ஸ்வரூபப்ராப்தமான வ்ருத்தி இப்படிப்பட்டது தான் என்று இதனால் வெளியாகிறது.

'𑌮𑌾𑌂 𑌨𑌯𑍇𑌦𑍍𑌯𑌦𑌿 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌸𑍍 𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

சிறிய திருவடியென்னும் ஹநுமான் பிராட்டியைத் தான் லங்கையை விட்டு எடுத்துக்கொண்டுபோய் ராமனுடன் சேர்த்துவிடுகிறேன் என்று சொல்ல, "𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌃" இந்த்ராதிகளின் விரோதிகளையும் போக்கும் குடியிற்பிறந்த ராமன் தன் கார்யத்தில் ஒதுங்கி நிற்பரோ? 𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑌸𑌦𑍃𑌶𑌂𑌭𑌵𑍇𑌤𑍍 அவருக்கு அநுரூபமானவற்றைச்செய்து போகக்கடவ நாம், நம்முடைய ஆற்றாமையைப் பரிஹரிக்க எண்ணி அவருக்குக் குறைவான கார்யத்தைச் செய்யலாமோ? ராம மஹிஷியை ஒரு ராக்ஷஸன் பிரிக்க, அவள் சபித்துப்போனாள் என்றாவது, ஒரு குரங்கு அவளைச் சிறைமீட்டுவித்தது என்றாவது ஏற்பட்டால், அது அவர் குணத்துக்கும் சக்திக்கும் தகாது. அவர் வம்சத்தின் பெருமைக்கும் குறைவு. அவர் விஷயத்தில் ராவணன் செய்ததை நாமும் செய்யவோ? ராம தனத்தைத் தன்னுடையது என்று நினைப்பது போலாகும் காண் அதின் ரட்சணத்தை நம் தலையில் ஏறிட்டுக்கொள்வது; ஆகையால் நீர் சொல்வது கூடாது," என்று சொல்லித் தடுத்தாள். அவருக்குத் தகுந்தபடி பெருமாள் செய்துகொண்டு தன்னை யழைத்துக்கொள்வது இருவர் ஸ்வரூபத்துக்கும் அநுகுண மென்பது பிராட்டி அபிப்ராயம். இதை உத்தேசித்துத் தான் ராவணனைக் குறித்துப் பிராட்டியின் வார்த்தை.

𑌅𑌸𑌂𑌦𑍇𑌶𑌾𑌤𑍍𑌤𑍁 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌤𑌪𑌸𑌶𑍍𑌚𑌾𑌨𑍁𑌪𑌾𑌲𑌨𑌾𑌤𑍍 ।
𑌨 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌮𑌿 𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵 𑌭𑌸𑍍𑌮 𑌭𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌹𑌤𑍇𑌜𑌸𑌾 ॥

"பெருமாளுடைய நியமனமன்றி என்னை ரட்சித்துக்கொள்வது என்னுடைய தபஸ்ஸாகிற பாதிவ்ரத்யத்துக்கு விரோதம். ஆகையால் நான் உன்னை பஸ்மமாக்கவில்லை." என்கிறாள்.

இந்த இரண்டு ஶ்லோகங்களினால் ப்ரபந்நனுக்கு ஸ்வரட்சணத்தில் செய்யவேண்டியது பகவானுடைய அதீனமென்றும், அவர் நியமநாபேக்ஷமென்றும் ஏற்படுகிறது.



ஏதேனும் பயஹேதுக்களுண்டானாலும் பகவானே உபாயம் என்றிருப்பவர்களுக்கு அச்சமிராது.

𑌗𑌜𑌂 𑌵𑌾 𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑌿𑌂𑌹𑌂 𑌵𑌾 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌵𑌨𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾 ।
𑌸𑌂𑌤𑍍𑌰𑌾𑌸𑌂 𑌨𑌗𑌤𑌾 𑌸𑌾𑌧𑍍𑌵𑍀 𑌬𑌾𑌹𑍂 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌾 ॥

பெருமாளுடன் பிராட்டி காட்டில் போகும்போது யானைத் திரள்கள், ஸிம்ஹங்கள், புலிகள் ஒன்றுக்கும் அவள் பயப்படவில்லை என்று சொல்லப்படுகிறது.

𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌭𑌰𑍍𑌤𑍃𑌸𑍍𑌨𑍇𑌹𑌬𑌲𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑌾 ।
𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾 𑌨𑌿𑌰𑍍𑌜𑌨𑌂 𑌵𑌨𑌂 ॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 - தான் விரும்பியிருந்ததோடு, பெற்ற தாய்தந்தையரோடு ஸகலத்தையும் விட்டுப்போனாள். '𑌭𑌰𑍍𑌤𑍃𑌸𑍍𑌨𑍇𑌹𑌬𑌲𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑌾 - தன்னிஷ்டமல்ல, பர்த்தாவிடத்தில் ஸ்நேஹம் இதெல்லாவற்றையும் விடச்செய்தது. '𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌿- காட்டில் படப்போகிறதுக்கங்களையும் வரப்போகிற கஷ்டங்களையும் இவள் நினைக்கவில்லை. இவள் பெருமாளை ஒழிய வேறு நினைத்தாலல்லவோ துக்கங்களை நினைக்கவரும். '𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾 𑌨𑌿𑌰𑍍𑌜𑌨𑌂 𑌵𑌨𑌂 - ஜநங்களில்லாத காட்டுக்குப்போனாள்.

𑌨 𑌹𑌿 𑌮𑍇 𑌜𑍀𑌵𑌿𑌤𑍇𑌨𑌾𑌰𑍍𑌥𑍋 𑌨𑍈𑌵𑌾𑌰𑍍𑌥𑍈𑌰𑍍𑌨 𑌚 𑌭𑍂𑌷𑌣𑍈𑌃
𑌵𑌸𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌿𑌨𑌾 𑌰𑌾𑌮𑌂 𑌮𑌹𑌾𑌰𑌥𑌂 ॥

மகாரதனை பெருமாளைப்பிரிந்து ராக்ஷஸிகள் நடுவில் வஸிக்கும் எனக்குப் ப்ராணனாலொரு ப்ரயோஜனமில்லை. ஆபரணங்களாலும் ஒருப்ரயோஜனமில்லை. பிராணன் உள்பட என்னுடையதான எல்லாம் பகவானுடைய விநியோகத்துக்காகவே உள்ளன. அவை தனக்கேயானால், அஹங்கார ஸ்பர்ஶம் உண்டாவதால் அவைகள் த்யாஜ்யமே. இந்தஶ்லோகத்தில் நமஶ்ஶப்தார்த்தத்தைப் பிராட்டி வெளியிட்டாள்.

𑌨𑍈𑌷𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑍋 𑌨𑍇𑌮𑌾𑌨𑍍 𑌪𑍁𑌷𑍍𑌪𑌫𑌲𑌦𑍍𑌰𑍁𑌮𑌾𑌨𑍍 ।
𑌏𑌕𑌸𑍍𑌥𑌹𑍃𑌦𑌯𑌾 𑌨𑍂𑌨𑌂 𑌰𑌾𑌮𑌮𑍇𑌵𑌾𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

மனது முழுவதும் பெருமாள் பக்கலிருக்க, மற்ற எல்லா நல்லது கெட்டது அடங்கலும் ஒரேரீதியாய் இல்லாமையை ஒத்தது. க்ரூரத்ருஷ்டிகளான ராக்ஷஸிகளுக்கும், பார்க்க ரம்யமான புஷ்பங்களும் பழங்களும் அடர்ந்த வ்ருக்ஷங்களுக்கும் வாசியற எல்லாம் ஏகரூபமாய் கண்ணில் படாதவைகளாயின. இளைய பெருமாளைப்போல் இவளும் பெருமாளில்லாத மோட்சமும் வேண்டா மென்றவளல்லவா?

"யஸ்த்வயா ஸஹ ஸ ஸ்வர்கோ நிரயோ யஸ்த்வயா விநா।" ஸ்வர்க்க நரகங்கள் வ்யக்திகள் தோறும் வ்யவஸ்திதங்கள். உம்முடன்கூட இருப்பதே எனக்கு ஸ்வர்க்கம். உம்மை விட்டிருப்பதே எனக்கு நரகம். உம்பிரிவைக் கொஞ்சமேனும் ஸஹியேன் என்கிறாள், "ந ச ஸீதா த்வயா ஹீநா" என்கிற வசனமும், முன் 66-ம் பக்கத்தில் விவரித்ததுபோல், ஸீதாப்பிராட்டிக்கும் அவரே தாரகமென்பதைக் காட்டுகிறது. இருவரும் ஒரேவஸ்துவைப்போல் "ஸமதத்த்வோதிதௌ" என்றிருப்பார்கள், என்றல்லவோ மஹர்ஷி கூறுவது. 'விஷ்ணோ: ஸ்ரீ ரநபாயிநீ', 'நித்யைவைஷா ஜகந்மாதா' 'அகலகில்லேனிறையு மென்றலர்மேல் மங்கை உறைமார்பா,' என்கிற பிரமாணங்களும் இந்தவிஷயத்தில் அநுஸந்தேயங்கள்.

தம் த்ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் ।
பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே ॥

மஹர்ஷிகளுக்கு ஆபத்தையும் கஷ்டத்தையும் எப்போதும் உண்டாக்கிக் கொண்டிருந்த கரதூஷணாதிகளை ஜயித்து சத்ருக்களைக் கொன்றுவந்த பெருமாளைப்பிராட்டி கட்டிக்கொண்டாள். உடல் மயிர்க்கூச்சல் அடைய ஆநந்தமடைந்தாள். தன்பிரஜைகளான ஸாதுவர்க்கங்களை ரக்ஷித்த பெருமாளிடத்தில் ஜகன்மாதாவாகிய ஸீதைக்கு அடங்காத வாநந்தவெள்ளம் பெருகிற்று. அவள் க்ருபையின் அளவை என்னவென்று சொல்லுகிறது? பபூவ-மகத்தான ப்ரேமத்தால் பெருமாளுக்கு என்ன தீங்குவருமோ



என்று கலங்கி நடுங்கி இருந்த பிராட்டி பெருமாளை உயிருடன் கண்டதும் உயிர் பிழைத்தவள் ஆனாள்.

ந சாஸ்ய மாதா ந பிதா ந சாந்ய: ஸ்நேஹாத்விஶிஷ்டோஸ்தி மயா ஸமோ வா । தாவத்த்யஹம் தூத ஜிஜீவிஷேயம், யாவத்ப்ரவ்ருத்திம் ஶ்ருணுயாம் ப்ரியஸ்ய ॥

ஸீதாப் பிராட்டி ஹநுமானைக் கண்டவநந்தரம் பெருமாளிடத்தில் கொஞ்சம் ப்ரணயகோபம் கொண்டவளாய், ஆற்றாமையால் உண்டான வெறுப்புடன், இவன் அவர்விட்ட ஆள் என்று சீறி, சில வார்த்தைகளருளிச்செய்ய, தேவரீரிருந்த விடம் அறியாமலிருந்தாரே அல்லது ப்ரீதி குறைவில்லையென்று ஹநுமான் சொல்லி, பிராட்டி அவரில்லாமல் பத்துமாஸம் தரித்திருந்தாளே யென்று ஒரு குறைவாய் எண்ணினதுபோல் இருக்க, அப்போது ஸீதாப்பிராட்டி, "வாரீர், நாட்டாருக்கு மாதாவென்றும் பிதாவென்றும் ப்ராதா வென்றும் பந்துக்களென்றும் பலபேர்களிடத்தில் ஸ்நேஹம் பரவி நிற்கும். பெருமாளோ இதரர்கள் எல்லார் பக்கலிலும் செய்யும் ஸ்நேஹத்தை என்னிடத்திலேயே பூர்ணமாக வைத்தார். அவர் கடலுக்கு அணைசெய்து, விரோதிகளை ஜயித்து என்னை அணுகும் ஸமயத்தில், தாகவிடாயால் தண்ணீர்ப் பந்தலில் ஒருவன் வரும்போது சால் உடைந்து கிடந்தாற்போல், நான் என் உயிரை மாய்த்துக்கிடந்தேனாகில் அவர் ஸஹியார். ஆனதுபற்றி அவருக்காகவே என்னை நான் காப்பாற்றிக்கொண்டிருக்கிறேன். வேறு எனக்கு ஜீவிதத்தால் ப்ரயோஜனமில்லை" என்று சொல்லி முடித்தாள். இந்த மஹா பாரதந்த்ரிய காஷ்டையை மஹாகவி அநுபவிக்கும் ஶ்லோகம்.

ஸா ராமஸங்கீர்த்தநவீதஶோகா, ராமஸ்ய ஶோகேந ஸமாநஶோகா । ஶரந்முகே ஸாம்புதஶேஷசந்த்ரா, நிஶேவ வைதேஹஸுதா பபூவ ॥

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்.

ஶ்ரீ:

ஶ்ரீ ஜ்ஞாநாநந்தமயே நம:

ஶ்ரீமதே நிகமாந்த மஹா குரவே நம:

# ஶ்ரீ சதுஶ்ஶ்லோகீ விவரணம்.

ஶ்ரீயாமுநம் மஹார்யம் நத்வா தத்க்ருதாம் ஸுகோக்திம் |
பாஷயைவ வ்யாகரோதி விஷ்ணுதாஸ: ஸதாம் முதே ||
நிகமாந்த குருப்ரோக்த பாஷ்ய ஸம்க்ஷிப்தயா வநா |
வ்யாக்யாபடுத்வம் ஶக்த்யா த்ருஷ்டிஹீநோ [illegible] ||

ஶ்ரீமந் நாதமுனிகளுக்குப் பௌத்ரரும் ஶ்ரீ பாஷ்யக்காரருக்குப் பரமாசார்யருமான ஶ்ரீ யாமுனாசார்யர் என்னும் ஆளவந்தாரால் அனுக்ரஹிக்கப்பட்ட சதுஶ்ஶ்லோகீ என்னும் லக்ஷ்மியின் ஸ்தோத்ரத்துக்கு, ஶ்ரீ நிகமாந்த மகாதேசிகனால் செய்யப்பட்டிருக்கும் பாஷ்யத்தை அநுஸரித்து அர்த்தம் எழுதப்படுகிறது.

காந்தஸ்தே புருஷோத்தம:, பணிபதிஶ்ஶய்யாஸநம், வாஹநம் வேதாத்மா விஹகேஶ்வரோ, யவநிகா மாயா ஜகந்மோஹிநீ | ப்ரஹ்மேஶாதிஸுரவ்ரஜ: ஸதயிதஸ்த்வத்தாஸதாஸீகண:, ஶ்ரீரித்யேவ ச நாம தே, பகவதி, ப்ரூம: கதம் த்வாம் வயம் || க ||

இந்த முதல் ஶ்லோகத்தில் பர்த்தாவினால் ஏற்பட்ட ஏற்றமும், உபய விபூதிக்கும் சேஷித்வத்தால் ஏற்பட்ட ஏற்றமும், நாம நிருக்தியால் ஏற்பட்ட பெருமையும் சொல்லப்படுகிறது. தே - ஸர்வ மங்களங்களுக்கும் காரணமாய் ஶ்ருதிபுராணங்களில் ப்ர



ஸித்தியடைந்திருக்கும் உன்னுடைய; காந்த: - அநுரூபனாய் அதிப்பிரியனான பர்த்தா; இந்த இரண்டு பதங்களின் அர்த்தத்தை கத்யத்தில் ஶ்ரீ பாஷ்யக்காரர் 'தேவதேவ திவ்யமஹிஷீம்' என்கிற பதத்தினால் ஸூசிப்பிக்கிறார். ஸ்த்ரீகளுக்கு பர்த்தாவல்லவோ ப்ரதானம்; அவன் ப்ரியமாயிருந்தாலல்லவோ அவர்களுக்குப் பெருமை; ஆகையால் உன் பதியின் பெருமையை முந்திப்பேசுகிறேன் என்கிறார்: புருஷோத்தம: - புருஷர்களைக்காட்டிலும் உத்தமர்; புருஷர்களுக்கு உத்தமர்; புருஷர்களில் உத்தமர்; என்று மூன்று விபக்திகளாலும் பொருள்படும் புருஷோத்தமனென்னும் ஶ்ரீமந்நாராயணன். இவர் ஸாமான்யமான சேதநர்களைவிடப் பெரியவர். ஈஶ்வரர்களாய் பெருமைபெற்ற இந்திரன், ப்ரஹ்மா, ருத்ரன், இவர்களையும் காட்டிலும் மேற்பட்டவர். இவர் பெருமையைத்தாமே கீதையில், 'த்வாவிமௌ புருஷௌ லோகே' என்று துடங்கி 'உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத:' என்கிற ஶ்லோகத்தால் விவரித்திருக்கிறார். பத்தராயும் முக்தராயுமுள்ள எல்லாச் சேதநர்களைக்காட்டிலும் உத்தமராயும் புருஷ ஸூக்தத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டு அதற்கு அடுத்த அநுவாகத்தில் ஸந்தேகமற "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்று விசேஷித்துக் குறிக்கப்பட்டுமுள்ள ஶ்ரீமந் நாராயணன் உன் பர்த்தா என்றதாயிற்று. இதனால் இந்திராணி, பார்வதீ முதலான தேவபத்நிகளைக்காட்டிலும் இவளுக்கு உத்கர்ஷம் சொன்னதாயிற்று.

இப்படி பர்த்தாவின் பெருமையால் மேன்மைசொல்லி, இரண்டு விபூதிகளின் ஸம்பந்தத்தாலும் மேன்மையைச்சொல்லுகிறது பின் வாக்யம்: ஈஶ்வரன் தவிர்த்த சித்தும் அசித்துமான மற்ற எல்லா ப்ரபஞ்சமும், நித்யமும் அநித்யமுமாக இருவகைப்பட்டு, 'நித்யவிபூதி' என்றும் 'லீலாவிபூதி' என்றும் இரண்டு பெயர்களை உள்ளதாகிறது. சேதநர்களில் நித்யர்கள் அநந்தன், கருடன், விஷ்வக்ஸேநர் முதலான நித்யஸூரிகள்,

ஸ்ரீ பகவானும் நித்யர்களும் வஸிக்கும் இடம், தரிக்கும் ரூபங்கள், உடுக்கும் வஸ்த்ராதிகள் எல்லாம் சுத்த ஸத்வமென்னும் த்ரிகுணத்துக்கு மேற்பட்டதான ஒரு த்ரவ்யத்தால் செய்யப்பட்டு நித்யமாய் உள்ளது என்று ஸித்தாந்தம். மற்ற ஸ்ருஷ்டியில் அகப்பட்ட எல்லா வஸ்துக்களும் லீலா விபூதி யென்று சொல்லப்படுகின்றன. இந்த இரண்டுவித விபூதிக்கும் பகவான் ஶேஷி அதாவது, இரண்டு விபூதியும் அவருக்கு ஶேஷமான, அதாவது அவரால் நியமிக்கப்பட்ட, வஸ்துக்கள். இப்படியே இந்த இரண்டு விபூதியும் ஸ்ரீ லக்ஷ்மீக்கும் ஶேஷமானவை, என்கிற பொருள் அடுத்த பதங்களால் ஸூசிக்கப்படுகின்றது.

நித்யஸூரிகளில் முதன்மையானவரும் இவளுக்குச் சேஷமென்கிறார். 'ஃபணிபதி: ஶய்யா' - ஆதிசேஷன் என்னும் அநந்தன், இவருக்குப் படுக்கை. படுக்கைக்கு வேண்டிய குணங்கள் விசாலமாயிருத்தல், ம்ருதுவாயிருத்தல், குளுமை, கண்களுக்குப் பிரியமாயிருத்தல், வாசனையுடன்கூடி இருத்தல், உயர்ந்திருத்தல்; இவைகளெல்லாம் இந்தப்படுக்கையிலும் காணலாமென்கிறார். இந்த அநந்தன் பாதாலவாஸியாய்ப் பூமியைத் தரிப்பதும், கல்பாந்தத்தில் ஸங்கர்ஷணனென்னும் ருத்ரனாகி மூன்று உலகங்களையும் கொளுத்தும் பிரபாவமு முள்ளவராகையால், அவரைப் படுக்கையாக வஶ்யம்செய்த பெருமையும் அதிகமென்றதாயிற்று. தம்பதிகளிருவருக்கும் இவர் ஆஸநம் என்னுமிடம், 'த்வயா ஸஹாஸீநமநந்தபோகிநி' என்று ஸ்தோத்ரத்திலும் காண்கிறோம். இப்படி அநந்தன் லக்ஷ்மீக்கு ஶயநமாயும் ஆஸநமாயு மிருப்பதை, ஆதிபுராணத்தில் லக்ஷ்மீ ஸஹஸ்ர நாமத்தில் 'ஶேஷ ஶயநாஸநா' என்னும் பெயரில் காண்கிறோம்.

ஶய்யாஸநம் - இந்தப் பதத்தை முன்னும் பின்னும் அன்வயிப்பது உசிதம். அநந்தன் ஆஸநம். கருடனும் ஆஸநமென்பதை 'கருடாஸநா' என்னும் நாமம் சொல்லுகிறது.



'வாஹநம் வேதாத்மா விஹகேஶ்வர:' - 'ஸாமமயம் யஜூம்ஷி ப்ருஷ்டம் வேதா:' என்று ஸௌபர்ண ஸ்ருதியில் சொல்லியிருக்கிறபடி, கருடனே வேதங்களுக்கு அபிமாநியான தேவதை. அதனால் கருடனை வேதஸ்வரூபமென்கிறார். அந்தக் கருடனை வாஹநமாயுள்ளவள் பிராட்டி. வேதாத்மாவாகையால் இவர் ஸர்வக்ஞர்; இந்திரனால் ரக்ஷிக்கப்பட்ட அம்ருதத்தை யுத்தம் செய்து அபஹரித்துவந்த பராக்ரமசாலி இவரன்றோ? இவரை வாஹநமாய்ப்பெற்ற பிராட்டியின் மகிமை சொல்லவேண்டியதில்லையே. இப்படிப் பாம்பையும் கருடனையும் சேர்த்து ஆட்கொள்ளும் மகிமை இவளுடையது என்றும் தோன்றுகிறது. அநந்தன் கருடன், இவர்களைப்போன்ற மற்ற நித்யர்களும் முக்தர்களும் இவள் பரிஜநர்களாய் இவளிட்ட வேலையைச் செய்யக்கடவர்கள். ஆகையால் நித்யவிபூதி அடங்கலும் இவளுக்குச் சேஷமென்றதாயிற்று.

இனி லீலா விபூதியின் சேஷத்வத்தைச் சொல்லப்புகுந்து அதில் அசித்தான பாகத்தைச் சொல்லுகிறார்.

'யவநிகா மாயா ஜகந்மோஹிநீ'. பட்ட மஹிஷீக்குத் திரை உண்டே? 'ஸுவர்ணம் யஸ்யா ராஜதாரா:' என்னுமாப் போலே, யவநிகை என்னும் திரை ராஜசிந்ஹமாச்சுதே? அது லக்ஷ்மீக்கு எவ்வகைப்பட்டது என்றால், 'மாயா ஜகந்மோஹிநீ' ஜகத்தின் கண்களை மறைக்கும் த்ரிகுணமயமான ப்ரக்ருதியே அவளுக்குத்திரை. மாயை என்றால் ப்ரக்ருதி. 'மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத்' என்று ஶ்வேதாஶ்வதர ஸ்ருதியில் வாக்யம். மாயா ஶப்தத்துக்கு நம் ஸித்தாந்தத்தில் ஆச்சர்யகரமான செய்கை என்று அர்த்தம். ஆச்சர்யகரமான விவித ஜகத்ஸ்ருஷ்டியைச் செய்வதால் ப்ரக்ருதிக்கும் மாயா ஶப்தத்தால் வ்யவஹார முண்டு. 'மம மாயா துரத்யயா' 'அநாதிமாயயா ஸுப்த:' என்னுமிடங்களில் இந்த மாயாஶப்தம், விசித்ரமான ஸ்ருஷ்டிக்குக் காரணமான மூன்று குணங்களுள்ள ப்ரக்ருதித்ரவ்யத்தையே சொல்

லும். 'தேந மாயாஸஹஸ்ரம் தச் சம்பரஸ்யாசுகாமிநா | பாலஸ்ய ரக்ஷதா தேஹம் ஏகைகாம்சேந ஸூதிதம் ||' என்கிற போன்ற வாக்யங்களில் இந்தபதம் ஆச்சர்யகரமான செய்கைகள் என்று மாத்ரம் பொருள்படும். 'மாயா' என்ருல் பொய்யானது என்ருவது, அவித்யை என்ருவது நம் ஸித்தாந்தத்தில் அர்த்தமில்லை: ஸ்வப்நங்களில் காணும் வஸ்துக்களை மாயை என்பதும் அந்தந்த கர்மாநுகுணமாய் சேதநர்கள் க்ஷணகால மநுபவிக்க, பகவானுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஆச்சர்யகரமான, வாஸ்தவமான வஸ்துக்கள் என்று, 'மாயாமாத்ரம் து கார்த்ஸ்ந்யேநாநபிவ்யக்தஸ்வரூபத்வாத்' என்னும் ஸூத்ரத்திலும் அதன் பாஷ்யத்திலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி த்ரிகுணமயமான திரையால் லக்ஷ்மீ மறைபடுவது யார் விஷயத்தில் என்ருல், பொதுவாய் 'ஜகத்' - உலகம் என்றிருந்தாலும், ஔசித்யத்தால் தேவியை ஆச்ரயிக்காமல் இருக்கும் ஆஸுர ப்ரக்ருதியுள்ளவர்கள் விஷயத்தில் தான் இந்தத்திரை மறைக்கும் குணமுள்ளது என்ருயிற்று. பகவாநுக்கு இந்த ப்ரக்ருதி திரை என்னுமிடத்தை 'பகவத் ஸ்வரூப திரோதாநகரீம்' என்ருர் கத்யத்தில். அவருடன் அவிநாபூதையானவும் அவரைப்போல் மற்றெல்லாவற்றிற்கும் சேஷித்வமுமுள்ள இவளுக்கும் இது திரையாகிறது. அதாவது ப்ரக்ருதி த்ரவ்யம் அதன் செய்கைகளில் ஜகன் மாதாவான இவள் இச்சைக்கும் அடங்கினது என்றதாயிற்று. இந்த ப்ரக்ருதி ஜகத்தை மோஹிக்கும் விதந்தான் எப்படி என்ருல், ஜீவ பாமாத்மாக்களின் ஸ்வபாவத்தை அறிய வொட்டாமல், விபரீதமாய் அறியச்செய்தலும், தன் விகாரமான சப்தாதி குணங்களுள்ள விஷயங்களில் ஆஸக்தியை உண்டு பண்ணுவதுமான செய்கைகளால் தான்.

இந்தப் ப்ரக்ருதியால் மோஹமடைந்து கர்மவஸ்யர்களாய் ஸம்ஸாரத்தில் உழலும் ஜநங்களில் முதன்மை பெற்றவரும் உன் அடிமைகளென்ருர் மேல் பதங்களால்.

ப்ரஹ்மேசாதிஸுரவ்ரஜஸ் ஸதயிதஸ் த்வத்தாஸதாஸீகணா:- ப்ரஹ்மா, ருத்ரன் முதலான தேவர்குழாமும் அவரவர்கள்



தேவிகளும், உன் கைங்கர்யத்துக்கு நியமிக்கப்பட்ட பரிஜனங்களாகிருர்கள். தேவர்களில், பலரால் ஈஸ்வரர்களாய் மதிக்கப்பட்ட பிரஹ்ம ருத்ரர்களும் இந்திராதிகளும் சேஷபூதர்களென்ருல் இதர தேவர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ என்று கருத்து. ஆகவே, லீலாவிபூதியில் சித் அசித் அடங்கலும் விஷ்ணு பத்நீக்குச் சேஷபூதம் என்று சொல்லப்பட்டது.

இப்படி நிர்தேசிக்கப்பட்ட பெருமை எல்லாம் அழகே. ஆனல் இவைகளுக்கு ப்ரமாண மிருந்தாலல்லவோ ஏற்கும். இல்லாவிட்டால் சுவரில்லாச் சித்ரமாகவும் ஆகாசப் பந்தலாகவும் ஆய்விடும். ஆகையால் இத்தனைக்கும் ப்ரமாணமென்ன? என்ருல், இந்தஸ்லோகத்தில், பல ப்ரமாணங்கள் உண்டு. அவைகளைச் சொல்லி என்ன? அவளுக்கு ஸ்ரீ:, என்னும் நாமதேயமும் அதன் அர்த்தங்களுமே பர்யாப்தமான ப்பிரமாண மென்கிருர்.

'ஸ்ரீரித்யேவ ச நாம தே' - உன் பெயர் 'ஸ்ரீ:'. இந்தப் பதத்தின் அர்த்தங்களெல்லாம் உனக்கே பொருந்தினவை, என்கிருர். இந்த நாமத்தை நிர்வசனம் பண்ணும் ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகன், த்வயாதிகாரத்தில் "ஸ்ரீசப்தம், ஸ்ரீயதே, ஸ்ரயதே, ஸ்ருணோதி, ஸ்ராவயதி, ஸ்ருணாதி, ஸ்ரீணாதி, என்று ஆறுபடியாகப் பகவத் சாஸ்த்ரங்களிலே நிர்வசனம் பண்ணப்பட்டிருக்கும். அவற்றில், அபேக்ஷித பதாந்தரங்கள் ஔசித்யத்தாலும் அவ்வோ ப்ரமாண பலத்தாலும் விசேஷித் தறிவேண்டும்" என்று அநுக்ரஹித் திருக்கிருர்.

ஸ்ரீயதே, - ஆச்ரயிக்கப் படுகிருள். ஸ்ரயதே - ஆச்ரயிக்கிருள். இந்த இரண்டு அர்த்தங்களும் லக்ஷ்மியின் புருஷகாரத்வத்தைக் குறிக்கின்றன வென்னலாம். ஸம்ஸாரத்தில் பரிதபிக்கும் சேதனர்கள் தாங்கள் தானே உஜ்ஜீவிக்கச் சக்தியற்றவர்களாய் 'யார்துணையாவர்' என்று கலங்கி, ஸாபராதரான தாங்கள் தண்டதரரான பெருமாளை யணுகப்பயந்து கிடக்கும் ஸ்திதியில், அநுக்ரஹமே குணமான பிராட்டியை நினைத்து அவளைச் சரணம் புகுகிருர்கள் என்றதாயிற்று, ஸ்ரீயதே என்பதினல். இந்த

சேதநர்களின் துரவஸ்தையைக்கண்டு, உளம்கரைந்து, பறந்தோடிப்பெருமாளிடம் சென்று இவர்களை ஏற்றுக்கொள்ளத் தாமே வருந்துகிருள் என்றதாயிற்று, ஶ்ரயதே என்பதினல். வத்ஸலையான தாய் தன் குழந்தைசெய்த அபராதங்களினல் சீற்றத்துடனிருக்கும் பர்த்தாவைச் சிரித்தமுகத்துடன் அணுகி, குற்றங்களுக்கு ஏதோ பரிஹாரங்கள் சொல்லிக் கோபத்தை மாற்றுவது போலச் சேதநர்களிடத்தில் பகவானுக் குண்டாகும் நிக்ரஹாபிஸந்தியை நிவர்த்திசெய்துப் பிரஸந்நராகச் செய்கிருள், புருஷகாரையாகிய பிராட்டி. இதை, 'பிதேவ த்வத்ப்ரேயாந்' என்னும் ஸ்ரீ குணரத்நகோசம் ஶ்லோகத்தில் விசதமாய்க் கண்டுகொள்வது. இந்த இரண்டு நிருக்திகளுமே, பிராட்டியின் ஸ்வபாவஸித்தமான பகவதாச்ரயத்தையும் எல்லார்க்கும் ஸேவ்யையாயிருக்கும் நிலைமையையும் சொல்வதாகவும் கொள்ளலாம். அப்பொழுது, விஷ்ணோ: ஶ்ரீரநபாயிநீ 'ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம்' 'ஜகத்ஸமஸ்தம் யதபாங்க ஸம்ஶ்ரயம்' என்னும் ப்ரமாணங்களில் சொல்லப்படும் பத்நீ வ்யஞ்சகமான ஸ்வாமிநீத்வமும் ஸேவ்யத்வமும் சொன்னதாயிற்று. "நாராயணுதி ஶப்தங்கள் ஶ்ரீய: பதிக்குச் சொல்லும் கட்டளையை விஷ்ணுபத்நிக்கும் சொல்லிற்றும்" என்கிருர் ஆசார்யர்.

ஶ்ருணோதி - கேட்கிருள். ஶ்ராவயதி - கேழ்ப்பிக்கிருள். ஸாபராதர்கள் ஸர்வேஶ்வரன் திருவடிகளில் அடியோங்களைக் காட்டிக் கொடுக்கவேணுமென்று பிரார்த்திப்பதைக் கேட்டு, பகவானிடத்தில் "க்ஷந்தவ்யம் பவதா யதி:" என்றும், "ராமேணாபி த்வயா நித்யம் ஸம்ரக்ஷ்ய: ஶரணாகத:" என்றும் விக்ஞாபநம் செய்கிருள். ஸர்வேஶ்வரன் பக்கலிலே லோக ஹிதத்தைத்கேட்டு, விபரீதர்களையும் 'நித்ரைவயிகம் கதாம்ஸம்' என்று கேழ்ப்பிக்கிருளென்றும் சொல்லலாம். இந்த அர்த்தங்களும் புருஷகார க்ருத்யத்தைச்சொல்லி, புருஷகார பாவத்தையே ஸூசிப்பிக்கின்றன.



ஶ்ருணாதி (நிகிலாந் தோஷாந்) - தன்னைச் சரணமாக வடைவோர் வினைகளைத் தீர்க்கிருள்.

ஶ்ரீணாதி (ச குணைர்ஜகத்)! - தன் காருண்யாதி குணங்களாலே ஆச்ரிதர்களுக்குக் கைங்கர்ய பர்யந்தமான குண பரிபாகத்தை யுண்டாக்கிருள் என்றதாயிற்று. ஸ்ரீ தாதுவுக்கு இங்கு பாகம் அர்த்தம்.

இப்படிப் பல விசேஷார்த்தங்களுள்ள ஸ்ரீ: என்னும் நாமம் உன்னுடையதானபோது, உன் பெருமையைச்சொல்ல ஸாத்யமோ? என்கிருர், ப்ரஹ்மாத்ய: கதம் த்வாம் வயம் - உன்னை உள்ளபடி சொல்லி ஸ்துதிக்க யாரால் முடியும். "நதே வர்ணயிதும் ஶக்தா குணாந் ஜிஹ்வாபி வேதஸ:", ப்ரஹ்மாவுக்கும் உன்னை ஸ்தோத்ரஞ் செய்வது ஸாஹஸக்ருத்யம் என்றல்லவோ சொல்லுகிருர்கள்.

வயம் - மந்தமதியான அடியேன் எவ்வளவு? இந்த விஷயத்தில் நானும் ப்ரஹ்மாவும் வாசியற்றவர்கள் என்று பெருமைப்படுகிருர் - 'வயம்' 'நாம்' என்று பஹுவசநத்தினலே. 'கோ விஜ்ஞோ தாரணே க்ஷாவயோரபி விஶேஷ:' என்று தாமே ஸ்தோத்ரத்தில் சொல்லப் போகிறபடி, ஸ்தோத்ரஞ் செய்வதில் அசக்தி தாரதம்யம் என்னப் பிரயோஜநம் என்று கருத்து.

(இன்னும்வரும்.)

விஷ்ணுதாஸன்.

ஸ்ரீ:

## ருதுமதீவிவாஹம்

# அபரார்க்கர்மதம்.

அப்ரயச்சந் ஸமாப்னோதி ப்ரூணஹத்யாம்ருதாவ்ருதௌ |
(யாக்ஞவல்க்ய ஸ்ம்ருதி, க. சுச.)

இந்த வசனத்துக்கு அபரார்க்கர் என்னும் வ்யாக்கியாதா செய்யும் உரையாவது:—

கன்னிகையைத் தானம்செய்ய அதிகாரமுள்ள (பிதா முதலான) அதிகாரி அவளைத்தானம்செய்து கொடுக்காவிடில், கர்ப்பத்தை வதை செய்த பாபத்தை அவர் பூர்ணமாய் அடைகிறார். ஆனால்,

"காமமாமரணாத்திஷ்டேத் க்ருஹே கந்யர்துமத்யபி |
ந சைவைநாம் ப்ரயச்சேத்து குணஹீநாய கர்ஹிசித் ||"

"கன்யை, ருதுவை அடைந்தவளாய் மரணம் வரையிலும் தகப்பன் வீட்டிலேயே இருப்பதுநலம்; குணங்களில்லாத புருஷனுக்கு அவளைத்தானஞ்செய்வது கூடவே கூடாது" என்று மனுவசனம் இருக்கிறதே என்றால், இந்த வசநம் குணமில்லாதவனுக்கு விவாஹம் செய்துகொடுக்கக் கூடாதென்பதைச் சொல்ல மாத்ரம் ஏற்பட்டதே ஒழிய, விவாஹமில்லாமல் பெண்கள் ருதுவாய் விடுவது தோஷமில்லை யென்பதற்காக ஏற்பட்டதல்ல. அப்படியானால், மற்ற வசநங்களுடன் இது விரோதிக்கும். எப்படி யென்றால்,



"பிது: கேஹே து யா கந்யா ரஜ: பச்யத்யஸம்ஸ்க்ருதா | ப்ரூணஹத்யா பிதுஸ்தஸ்யா: ஸா கந்யா வ்ருஷலீ ஸ்ம்ருதா |" காஶ்யபர்.

விவாஹமாகாத பெண் தகப்பன் வீட்டிலேயே ருதுவை அடைந்தால், அவள்பிதா கர்ப்பத்தை வதம் செய்தவராகிறார். அவளும் வ்ருஷளீ என்னும் சூத்ரஸ்த்ரீக்குச் சமானம். 'வ்ருஷளீ' என்பதால் தர்மங்களுக்கு அதிகார மில்லாதவளென்பதாயிற்று. மேலும்,

யஸ்து தாம் வரயேத் கந்யாம் ப்ராஹ்மணோ ஜ்ஞாநதுர்ப்பல: |
அச்ராத்தேயமபாங்க்தேயம் தம் வித்யாத் வ்ருஷலீபதிம் ||

ஞானமில்லாமல் மூடனான ப்ராஹ்மணன் எவனாவது அவளை விவாஹம் செய்வானானால், அவனை ச்ராத்தங்களில் போஜநத்துக்கு அனர்ஹனாயும், ஒரே பங்க்தியில் சேர அயோக்யனாகவும் வ்ருஷளீ பதி என்று பேருள்ளவனாகவும் அறியவேண்டியது.

கன்யை (விவாஹத்துக்கு முன் ருதுவானால்) தான் ருதுவடைந்தவளென்பதை பந்துக்களுக்குச் சொல்லக்கடமைப்பட்டவளென்று நாரதர் சொல்லுகிறார்.

கந்யா த்வ்ருதும் நோபேக்ஷேத பாந்தவேப்யோ நிவேதயேத் |
ந சேத் ப்ரதத்யுஸ்தாம் தேது தே ஸ்யுர்ப்ரூணஹபி: ஸமா: ||

கன்யை ருதுவை யடைந்தால் அதை அவள் உபேக்ஷைசெய்யாமல் தன் பந்துக்களிடத்தில் சொல்லக்கடவள். அவர்கள் அவளை

விவாஹம்செய்து கொடுக்காவிட்டால் ப்ரஹ்மஹத்தி தோஷத்துக்கு உள்ளாவார்கள். மேலும் இந்த விஷயத்தில் ஸம்வர்த்தர் வசனம் ஒன்றிருக்கிறது.

माता चैव पिता चैव ज्येष्ठो भ्राता तथैव च ।
त्रयस्ते नरकं यान्ति दृष्ट्वा कन्यां रजस्वलाम् ॥

ருதுவை அடைந்த கன்னிகையைப்பார்த்த தாயாரும், தகப்பனும், தமயனும், ஆகிய மூவரும் நரகத்தை அடைவார்கள்.

गम्यं त्वभावे दातॄणां कन्या कुर्यात्स्वयंवरम् ॥

யாக்ஞவல்க்யர்.

பிதா முதலான கன்யாப்ரதர்கள் இல்லாவிட்டால், கன்யை தானாகவே விவாஹத்துக்கு யோக்யமானவும் பாதித்யம் முதலான தோஷமில்லாதவனுமாகிய புருஷனைத் தன் வர்ணத்திலாவது மேல் வர்ணத்திலாவது தேடி விவாஹம் செய்துகொள்ள வேணும். இப்படிச்செய்வது ருதுவாகுமுன் : ருதுவானபிறகு விவாஹமாகாத கன்யை, பிதா முதலானவர்களிருந்தாலும் தானே விவாஹம் செய்துகொள்ளக்கடவள். அவர்களநுமதியை அபேக்ஷிக்கவேண்டிய தில்லை.

அப்படித்தானே விவாஹம்செய்துகொள்ளும் பக்ஷத்தில்,

अलङ्कारं नाददीत पित्र्यं कन्या स्वयंवरा ।
मातृकं भ्रातृदत्तं वा स्तेना स्याद्यदि तं हरेत् ॥

மனுஸ்ம்ருதீ.

தானுப் புருஷனைவரிக்கும் கன்யை பிதாவினுலாவது, தாயாரினுலாவது, சகோதரனுலாவது போடப்பட்ட பூஷணங்களை எடுத்துக்கொள்ளக்கூடாது. அப்படிச் செய்வது திருட்டாகும்.

ஓர் ஆஸ்திகர்.

☞ [கடிதங்கள் எழுதுகிறவர்களுக்கு அறிக்கை.—கடிதங்கள் எழுதுகிறவர்களின் அபிப்ராயங்களுக்குப் பத்ராதிபர் உத்தரவாதமில்லை. கடிதங்கள் நல்ல காகிதத்தில் ஒருபக்கத்தில் தெளிவாக எழுதப்படவேண்டும். எழுதுகிறவர்கள் பெயரும் விலாஸமும் பத்ராதிபருக்கு வ்யக்தமாய் அறிவிக்கப்படவேண்டும். வேதாந்ததீபிகை பத்ராதிபர்.]

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

## ருதுமதீ விவாஹம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

சென்ற வைகாசி மாஸத்திய சஞ்சிகையில் ருதுமதீ விவாஹத்தைக் கண்டித்து எட்டு வசனங்கள் ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி எழுதி இருந்தார். அந்த வாக்யங்களால் ஏற்படும் ஸித்தாந்தம் நிஸ்ஸந்தேஹமா யிருந்தும் அந்த விஷயத்தில் பலர் ஸம்ஸயப்படுகிறபடியால் பூர்வபக்ஷ யுக்திகள் விசேஷமாய் இருக்கவேணு மென்று 'ஒரு ஆஸ்திகர்' சென்ற ஆனி மாஸத்திய சஞ்சிகையில் எழுதியிருக்கிறார். அவருடைய ப்ரார்த்தனையைப் புத்தங்கோட்டகம் ஸ்வாமி அங்கீகரித்துப் பூர்வபக்ஷத்தைப் பிரகடனம் செய்து சமாதானத்தையும் அனுக்கிரகிப்பார் என்று நம்புகிறேன். ஆனால் அந்தஸ்வாமி உதாஹரிக்கும் வசனங்கள் ஒருகால் கல்பிதமா யிருக்குமோ வென்று செய்யும் அதிசங்கை ஆஸ்திகருடைய ஆஸ்திகதையையாவது ஸாத்விகதையையாவது காட்டவில்லை. 'ஒரு ஆஸ்திகரு' டைய அனுபவத்தில் கல்பித வசனங்களைக்கொண்டு பெரியவித்வான்களும் வாதத்தை சமநம்செய்திருப்பதாய்ச் சொல்வது மற்ற ஆஸ்திகர்களுடைய அனுபவத்துக்கு மிகவும் விருத்தமானதே. மேலும் ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி உதாஹரிக்கும்

ஸ்ம்ருதிகளெல்லாம் ப்ரஸித்தமான ஸ்மிருதிகளே. அவைகளில் அனேகமும் இன்னம் சில ஸ்ம்ருதிகளும் சேர்ந்து புநு என்னும் நகரத்தில் ஆநந்தாச்ரம ஸம்ஸ்க்ருத க்ரந்தாவலி என்னும் வரிசையில் ஸ்ம்ருதி ஸமுச்சயம் என்னும் க்ரந்தத்தில் நாகர அச்சில் பதிக்கப்பட்டிருப்பதை ஆஸ்திகர் பார்த்தறியவேணும். மேலும் ருதுமதீவிவாஹ விஷயமான பூர்வபக்ஷ சித்தாந்த யுக்திகள் எல்லாம் விஸ்தாரமாய், கும்பகோணம் ஸ்ரீ வித்யா அச்சாபீஸில் காலஞ்சென்ற மகாமஹோபாத்யாயர் பிரஹ்மஸ்ரீ. கணபதிசாஸ்த்ரீ அவர்களால் எழுதப்பட்டு "வயோநிர்ணயம்" என்னும் பேரால் நாகர எழுத்தில் சம்ஸ்க்ருதபாஷையில் அச்சிடப்பட்டிருக்கும் க்ரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதையும் 'ஒரு ஆஸ்திகர்' படித்துப் பார்ப்பாரானல் பூர்வபக்ஷ ஸித்தாந்தயுக்திகளின் பலாபலம் நன்ருய்விளங்கும். மேலும் பத்து ஸ்ம்ருதிகளைப் பெயர்சொல்லி, அவகாஶசௌகர்யத்துக்காக 'சிலவற்றை சங்க்ரஹமாய்' எழுதுவதாகப் புத்தங்கோட்டகம் ஸ்வாமி ப்ரதிக்ஞைசெய்து இருப்பதால், பராஶர ஸ்ம்ருதிவாக்யம் சொல்லாதது குறைவாகத் தோன்றவில்லை. அந்த ஸ்ம்ருதியிலும் இந்தவிஷயம் இருந்தால் அதை ஸ்ரீ புத்தகங்கோட்டகம் ஸ்வாமி விவரிப்பாரென்று அடியேன் இத்துடன் நிறுத்துகிறேன்.

10 - 7 - 12. ஒரு ஸ்மார்த்தர்.

---

(2)

# கேவலாசாரம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

ஸ்ரீ வேதாந்ததீபிகை சித்திரை, வைகாசி மாஸத்திய ஸஞ்சிகைகளில் கேவலாசார விஷயமாய்ச் சில உபந்யாஸங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளின் முக்கியதாத்பர்யம், ஆலயங்களில் அசிஷ்டர்களால் ஏற்பட்ட பக்வாந்நங்களை சிஷ்டர்கள் ஸ்வீகரித்துவரும் ஆசாரம் அநுசிதம் என்பதே. இதைப்பத்ரிகையில் எழுதினதால், ஆலயங்களில் கைங்கர்யபரர்கள் அசிஷ்டர்களா யிருந்தால் அவர்கள் சிஷ்டர்கள் ஆகும்படி இது ருசியை உண்டு



பண்ணலாம். சிஷ்டர்களும் யதாசக்தி அசுத்தமென்று அறிந்த போஜநங்களை ஸ்வீகரிப்பதை நிவ்ருத்தி செய்வார்கள். இந்த இரண்டு பலங்களும் அவஶ்யாபேக்ஷிதங்களாகையால் இதுவிஷயமான வாதத்தை உபக்ரமித்தது சரிதான். ஆனல் இந்த விவாதத்தைப் பூர்ணமாய்ச் சோதித்தால், முடிவில் ஒரு தேவாலயத்திலும் பகவத்ஸேவாதிகள் செய்யக்கூடாதென்று நிகமநமாகு மென்று தோன்றுகிறது. அப்படியே அதை இஷ்டாபத்திசெய்ய ஆஸ்திகர்கள் பயப்படுவார்கள்.

ஏனென்ருல், அபிஷ்டாராதிதமான திவ்யவிக்ரங்களில் பகவத் ஸாந்நித்யமிராது. ஸாந்நித்ய ஹீநமான கேவல பிம்பங்கள் வந்தநாதிகளுக்கும் அநர்ஹங்கள். இந்தக்கலியுகத்தில் நிர்துஷ்டர்களான ஆராதக பரிசாரகர்களுள்ள ஆலயங்களே கிடையாது. ஆகையால், இந்தயுக்தி பரம்பரையால் பர்யவஸிப்பது ஏதெனில், ப்ராயேண பகவத்ஸேவை நிஷேதிக்கப்படவேண்டுமென்ருகிறது. அசுத்தமான அன்னமாத்ரத்தைத் த்யஜிப்போமென்ருல், நிஷேதத்தை அதுடன் நியமிப்பது கூடாததாகும். ஏனென்ருல், அசுத்தர்களான ஆராதகர்களால் உண்டான தீர்த்தமும் அசுத்தம்தானே? அதுவும் விடவேண்டித்தானேவரும்? அதைவிட்டால் ஸேவையையும் விடவேண்டித்தான்வரும். பகவத்ஸாந்நித்ய மில்லாத பிம்பங்களின் ஸேவையும் நிஷ்பலந்தானே? ஸ்ம்ருதிகளில் அக்நிகார்யம் செய்யாத க்ருஹஸ்தருடைய அந்நபோஜநத்தையே தூஷித்து அந்த பாபத்துக்குச் சாந்த்ராயணம் விதிக்கப்பட்டிருக்கிறது. யநாக்ரமம் ஸந்த்யாதிகள் இல்லாத க்ருஹஸ்தரின் அந்நமும் பரிஹார்யம்தான். அவைகளை யெல்லாம் ஸாத்விகர்களான வைதிகர்கள் விலக்கினல் அவர்களுக்கு ஒருபாதகமும் இராது. ஆனல் ப்ராயேண அவர்கள் ஏழைகளென்பதும் அவர்களுக்கும் அந்தந்த தோஷமில்லாத வைதிககார்யங்களான ஹவ்யகவ்யாதிகளில் அன்வயமிருந்தால் தான் வ்ருத்திகள் ஏற்படுமென்றும் நிஶ்சிதமான விஷயம். லௌகிகர்களுடைய ஸம்ஸர்க்கத்தை வைதிகர்கள் விட்டால் லௌகிகர்களுக்கும் ஹாநிதான். தத்காலம் ஆட்யர்களான லௌகிகர்களில் பலர் ஸந்த்யாவந்தனுதி வைதிக கர்மங்களில் ருசிகுறைந்தவர்களாகவும் நீசஸேவையாலேயே ப்ராயேண த்ரவ்யார்ஜநம் செய்பவர்களா யிருப்பது மன்னியில் ருதுமதீவிவாஹம், விதவாவிவாஹம், ஸமுத்ரயானம் முதலான அசாஸ்த்ரீய வ்யாபாரங்களை தர்மமென்று ஸ்தாபிக்க ஜாகரூகர்களாகவு மிருக்கிருர்கள். இப்படி வைதிகர்களின் தாரித்ர்யம் முதலான ஹேதுக்களாலும், லௌகிகர்களின் ஆஸ்திகதைக் குறைவினுலுமே, ஆலயதோஷங்கள், ஆசாரதோஷங்கள் முதலானவை உண்டாகின்

றன. இவைகளை நிவர்த்திக்க தநிகர்களாகவும் ஜ்ஞாதாக்களாகவும் தர்மருசிகளாகவு மிருக்கிற லௌகிகர்களே அவசியம் ப்ரயத்நம் செய்யவேணும். தோஷங்களைக் க்ரகித்து ஆலயம், பகவத் ப்ரஸாதம் இவைகளை வர்ஜிப்பதைவிட, தோஷங்களை யதாசக்தி நிவர்த்திக்க முயற்சிசெய்வதே உசிதம். இந்தவிஷயம் தேவாலயங்களின் விசாரணையில் அத்யக்ஷர்களான லௌகிகப் பிரபுக்கள் ச்ரத்தை வைத்தால் சுலபமாய்முடியும். சிஷ்டர்களான வைதிகர்களும் இதில் ச்ரத்தையுடன் தங்களால் கூடியமட்டில் ஆலயங்களில் அதிக்ருதர்களான கைங்கர்ய பரர்களுக்கு ஸ்வரூபபரீக்ஷையைச் செய்துவரவேண்டும்.

மேலும் “ [illegible] ” என்பது முதலான வசநங்களைப்பார்க்கில், பகவத் கைங்கர்யபரர்களுக் குண்டாகும் தோஷங்களை ஈஶ்வரன் க்ரமமாய்விலக்கி அனுக்ரகிப்பார் என்று எண்ணவேண்டும். இப்போது பலவிடங்களில் ஆலயங்களில் ஈஶ்வரஸாந்நித்யமிருப்பதும் பரத்யக்ஷமான பலங்களால் அனுமேயமாகிறது. திருப்பதி, ஸ்ரீரங்கம், குணசேகரம், ஜகன்னாதம், முதலான ஸ்தலங்களில் ஜனங்களின் ப்ரார்த்தனைகளும் அவை பகவதநுக்ரகத்தால் பூர்த்தியாவதும் பல ஆஸ்திகர்களுக்கு அநுபவஸித்தம். இதனால் ஸாந்நித்ய மிருப்பதாகவே எண்ணவேணும். ஆனால் இந்த இடங்களில் ஆராதகர்களுக்கு மற்றவர்களைக்காட்டிலும் நியதவிசேஷங்களையும் காணோம். ஆகையால் ஆஹாரசுத்திக்கு இடமில்லாத, கர்மநிஷ்டர்க ளில்லாதவர்களின் அந்நங்களை யபேக்ஷித்து பகவத் ஸாந்நித்யத்தையும் பகவந்நிவேதந சேஷத்வத்தையும் பெற்ற ஆலயாந்நங்கள் வர்ஜ்யங்களல்ல வென்று தோன்றுகிறது. அனுதியான கோவில்களில் எந்தவிதமான தோஷங்களும் ஜநிக்காமல் திருத்துவதே உசிதம். ஸம்பாவித தோஷங்களைக்கொண்டு, பகவத் ஸேவையைத் தவிருவதும், பகவத் ப்ரஸாதங்களில் ஹேயத்வ புத்திபண்ணுவதும் அல்பக்ஞர் விஷயத்தில் அநர்த்தாவஹமாகும்.

புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசாரியன்.

---



## (3)

## பீஷ்மர் ப்ரதிவசநம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

சென்ற சித்திரை மாஸத்திய ஸஞ்சிகையில் ஓர் பௌராணிகர், தர்மபுத்ரர் த்யூதகாலத்தில் த்ரௌபதியின் ப்ரச்நத்துக்கு ஸ்ரீ பீஷ்மர் சொன்ன ப்ரதிவசநவிஷயமாய் சில ஆஶங்கைகள் பண்ணி ஒருவாறுய்த்தாமே ஸமாதாநம் சொல்லி அதில் அத்ருப்தராகவே முடித்திருக்கிறார். இந்த விஷயத்தில் அடியேனுக்குத்தோன்றும் சமாதானமாவது :— “ [illegible] ” என்றும் “ [illegible] ” என்றும், சொல்லி இருப்பதால் கலிபுருஷனால் ஆவிஷ்டரான தர்மபுத்ரர் தன் பராஜயத்தை அவஶமாய் அங்கீகரித்தவுடன், ‘ [illegible] ’ என்று அவரிடத்தில் பூர்ண விஶ்வாஸத்துடனிருந்த பீஷ்மர் ‘ யுதிஷ்டிரஸ்து ப்ரஶ்நேஸ்மிந் [illegible] ’ என்றுசொல்லி வேறு உத்தரம் சொல்லாமலிருந்தார். இப்படிச்சொல்வது உசிதமாயும் ப்ரமாணத்துக்கு அநுகுணமாயுமிருக்கிறது.

புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசார்யன்.

---

## (4)

## ஸ்ரீ அஹோபிலமடமும், மைசூர் ப்ரதேசமும்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

ஸ்ரீ அஹோபில மடத்துக்கு மைசூர் ஸம்ஸ்தாநத்தில் விசேஷமான பூமிகள் இருப்பது ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களுக்குத் தெரிந்திருக்கலாம். இந்த பூமிகளின் வரும்படிகள் பலவருஷ காலமாய்ச் சரிவர வசூல்செய்யப்படாமல் இருந்தன வென்றும் அவைகளில் வெகுபாகம் மடத்துக்குக் கிடைக்க வழியில்லாமல் இருக்கிறதென்றும் தெரிகிறது. இப்பொழுது ஸ்ரீ அழகிய சிங்கர் ஒரு தகுந்த ஏஜண்டை ஏற்படுத்தி இருப்பதாகவும், அவர் சரிவரப்

பார்த்து வரலாமென்றும் தெரியவருகிறது. இந்தவரும்படிகளை ஸ்ரீ அழகியசிங்கர் சரிவர வசூல்செய்யத்தகுந்த ஏற்பாடுகள் செய்தால் மடத்துக்கு நிரம்பவும் லாபகரமாயிருக்கும்.

மைசூரில் ஸ்ரீ பரகாலமடத்துக்கு எதிர்வீதியில் ஸ்ரீ ஸந்நிதிக்கு ஒரு மடம் இருக்கிறது. அதின் சைதில்யமான அவஸ்தையைப் பார்த்தால் அதை மடமென்று சொல்லாமல் சிறுகுடிசையென்று சொல்லவேண்டும். இந்த மடத்தை ஸ்ரீ அழகிய சிங்கர் புதுப்பிக்க நியமிக்க வேண்டியது அவசியம். அனேக தனிகர்களும் ச்ரத்தையுள்ளவர்களுமான சிஷ்யர்களிருக்கும் இந்த மைசூர்தேசத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம் வைத்தால் இந்தமடத்தைப்புதுப்பிப்பது ச்ரமமாயிராது.

இந்த தேசத்துக்கு முக்கியபட்டணமாகிய பங்களூரிலும் ஸ்ரீ ஸந்நிதிக்கு ஒருமடம் ஏற்பட்டால் அழகாயிருக்கும். இவ்விடத்தில் பல ச்ரத்தாளுக்களும் தனிகர்களுமான சிஷ்யர்கள் இருக்கிறார்கள். விசேஷமாய் ஸம்ப்ரதாயம் தழைக்கவே, பல இடங்களிலும் மடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அப்படி இங்கும் ஏற்பட்டால் சிஷ்யர்கள் சேரவும் உபந்யாஸாதிகள் நடத்திவரவும் சௌகர்யமாயிருக்கும்.

சென்ற ஜூன் மாஸத்தில் ஸ்ரீ சிஷ்யஸபை பொதுக்கார்ய தர்சியின் ப்ரயத்நத்தின்பேரில், காஞ்சீபுரம் இஞ்சிமேடு ஸ்ரீ. ரங்கநாதாசார்யர்ஸ்வாமி பெங்களூருக்குப்போய் சில உபந்யாஸங்கள் செய்தார். பக்தி யோகம், விசிஷ்டாத்வைதம், வர்ணாச்ரம தர்மம், இந்த விஷயங்களில் உபந்யாஸங்கள் நடந்தன. விசேஷ ஶாஸ்த்ர, ஸம்ப்ரதாய ஜ்ஞானமுள்ள அந்தஸ்வாமிசெய்த உபந்யாஸங்கள் மிகவும் ஆநந்தகரமாயிருந்தன. ஸ்ரீமான். பென்ஷன் ஜட்ஜி, எ. ரெங்கசாமி அய்யங்கார், பென்ஷன் கமிஷ்னர், ஸ்ரீமான் நாராயண அய்யங்கார், ஸ்ரீமான். எஸ். க்ருஷ்ணஸாமி ஐயங்கார், அட்வகேட் ஸ்ரீமான் ராமண்ணா, ஸ்ரீமான். வரதராஜ அய்யங்கார் முதலான பல கனவான்கள் வந்திருந்து உபந்யாஸங்களைக்கேட்டு சந்தோஷமடைந்தார்கள். ஸ்ரீ சிஷ்ய ஸபையின் பங்களூர் கார்யதர்சி ஸ்ரீமான், பி. கே. கருடாசார்யர் இது விஷயத்தில் மிகுந்த உத்ஸாஹத்தைவகித்து ஏற்பாடுகள் செய்தார். இப்படிப்பட்ட உபந்யாஸங்கள் அடிக்கடி நடந்தால் மிகவும் அழகாயிருக்கும்.

ஸ்ரீ அழகிய சிங்கர் நியமனத்தால் திருநாராயணபுரத்தில் ஸ்ரீ ஆதிவண்சடகோபஸ்வாமி ப்ருந்தாவனம் புதுப்பிக்கப்பட வேலைகள் நடந்துவருகின்றன. அவ்விடத்திலேயே கல்யாணி புஷ்கரணிக்கரையில் இருக்கும் இப்போது சிதிலமான ஸ்ரீ ஸந்நிதிமடமும் புதுப்பிக்கப்பட வேண்டுமென்றும் ஸ்ரீ அழகியசிங்கர் நியமித்திருப்பதாகக்கேட்டு சந்தோஷமாயிருக்கிறது.

**ஓர் சிஷ்ய ஸபை அங்கத்தினர்.**

---

ஸ்ரீ:

# பத்ராதிபரின் குறிப்புகள்.

மன்னார் கோவிலில் ஸ்ரீ அழகியசிங்கர்.

ஸ்ரீ அழகியசிங்கர் முன்போலவே மன்னார்கோவிலில் எழுந்தருளி இருந்து ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஆராதநங்களையும் கோஷ்டிகளையும் நடத்திவருகிறார். நரஸிம்ஹபுரத்துக்கு ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருள்வதாய்ச் சிலகாலத்துக்குமுன் நடந்த ஏற்பாடுகள் இப்பொழுது நின்றிருப்பதாய்த் தெரிகின்றன. ஸ்ரீராஜகோபாலனுடைய அத்புதமான நித்ய ஸேவையையும் மன்னார்கோவில் திவ்யதேசத்தின் வாஸத்தின் ஶ்லாக்யதையையும் யோஜித்து ஸ்ரீ அழகியசிங்கர் அவ்விடத்தை விட்டு எழுந்தருளத் திருவுள்ளமில்லாதவராயிருப்பது எல்லார்க்கும் சந்தோஷகரமானதே. வயஸ்ஸின் க்ரமத்தால் உண்டாயிருக்கும் அசக்திதவிர மற்றவிதத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் பாங்காய் எழுந்தருளி இருப்பது சிஷ்யர்களின் பாக்யந்தான். ஸ்ரீ அழகியசிங்கர் திருமேனியில் த்ருடராய், காலக்ஷேபாதிகளைத் தகுந்த வித்வான்களான ஶிஷ்யர்களைக் கொண்டாவது ப்ரவர்த்திப்பதுடன், தேவஸ்தான கார்யங்களையும், பூமிகளின் வ்யாபாரங்களையும் சரிவர நடத்திவர வேண்டுமென்பது ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய சபையாருடையவும் மற்றெல்லா ஆஸ்திகர்களான சிஷ்யர்களுடையவும் ப்ரார்த்தனை. திருவள்ளூர் முதலான தேவஸ்தானங்களின் விசாரணையில் குறைவுவந்து அந்தஸந்நிதிகள் ஸ்ரீ அழகிய சிங்கர் விசாரணையைவிட்டு விலகினால் அது எல்லாச் சிஷ்யர்களுக்கும் அதிக துக்கத்தை உண்டு

பண்ணும். அப்படி நேராமல் அப்போதைக்கப்போது ஏற்படும் குறைவுகளை உடனுக்குடனே ஸ்ரீ அழகியசிங்கர் விசாரித்து திருத்தவேணுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது.

**ஸ்ரீ ரங்கத்தில் ஸ்ரீ வேதாந்த தேசிகர் ப்ரதிஷ்டை**

விபிவிஹிதஸவயாத்ராம் வீதிகோஷாநுஷக்தாம், உபஹிதநயநாந்தா ஸ்துத்வைவ த்ருஷ்டாநஹத்ராம் | ஸ்வயமுபஹிதநீத்யம் ரங்கராஜோஸ்ய ஸாக்ஷாம், ஶமிதவிமதபக்ஷாம் ஶாஶ்வதீம் ரங்கலக்ஷ்மீம் || ஸ்ரீரங்கநாதன் ரங்கநகரத்தில் நித்யோத்ஸவம் கண்டருள்வதை அநுபவித்து ஆநந்திக்க ஒரு மூர்த்தியால் த்ருப்தி யடையாதவர்போல் ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகன் சென்ற வைகாசி மாதம் 27 - ம் தேதி வேறொரு திவ்யவிக்ரகத்தில் ஆவிர்ப்பவித்து உத்ஸவம் கண்டருளினார். பரம ஆஸ்திகர்களான சிலப்ரபுக்களுடையவும் வைதிகர்களுடையவும் முயற்சியால் ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகன் ஸ்ரீரங்கத்தில் சித்திரைவீதியில் ஒரு க்ரஹத்தில் புதியதாய் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு, மேற்படி தினத்தில் வாத்யகோஷங்களுடனும் வரிசைகளுடனும் சித்திரைவீதியிலும் உள்துறை வீதியிலும் வீதிப்ரமணம் செய்து தன் ஆஸ்தானத்துக்கு எழுந்தருளினார். அத்யத்புதமான வேதகோஷ்டியையும் அத்யாபக கோஷ்டியையும், அதில் நிறைந்திருந்த ஸ்வாமிகளின் உத்ஸாஹத்தையும் பார்க்க எல்லோர்க்கும் பேராநந்தம் உண்டாயிற்று. அந்த ஸந்நிதி வரவர விசேஷமாய் அபிவ்ருத்தியாகி அடிக்கடி உத்ஸவங்களைப்பெற்று வரவேண்டு மென்று பகவானைப் ப்ரார்த்திக்கிறோம். ந்யாயாதிகாரிகளின் நியமநத்தைப் பூர்த்திசெய்து இந்த உத்ஸவத்தைக்கூட இருந்து நடத்திவைத்த திருச்சிறுப்பள்ளி ஜில்லா கலெக்டரவர்களும் போலீஸ் ஸூபரிண்டெண்டண்ட் அவர்களும் மற்றைய உத்யோகஸ்தர்களும் இந்த ப்ரதிஷ்டையில் முயற்சி எடுத்துக்கொண்டவர்களுடையவும் மற்றைய தேசிக பக்தர்களுடையவும் க்ருதக்ஞதைக்குப் பாத்ரமாகிறார்கள்.

---



**கும்பகோணம் பரிஷத்.**

சென்ற ஜூலை 15 - ம் தேதியில் கும்பகோணம் அத்வைத ஸபையார்கள் ஏற்பாட்டின்பேரில் ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமி கோயிலில் ஒரு பரிஷத் கூடிற்று. ப்ரஹ்மஸ்ரீ. மகாமகோபாத்யாயர் திருவிசைநல்லூர் ராமஸுப்பா ஶாஸ்த்ரிகள் அக்ராஸநம் வகித்தார். ஏற்கனவே பரிஷத்தில் ஸப்யர்களாகக் குறிக்கப்பட்டிருந்த 15 - பேர்களில் 8 - பேர்கள் வந்திருந்தார்கள். இவர்கள் மகாமகோபாத்யாயர் நீலமேக சாஸ்த்ரிகள், வித்வான் திருக்கொடந்தை சேஷாசார், கருங்குளம் க்ருஷ்ணசாஸ்த்ரிகள், சேதுமாதவாசார், ராகவேந்த்ராசார், நெல்லிச்சேரி வெங்கடராம சாஸ்த்ரிகள், கடலங்குடி நடேசசாஸ்த்ரிகள் ஆகிய எட்டுப்பேர்கள். இவர்களைத்தவிர சுமார் 500 - பேர்கள் ப்ரபுக்களும் ஸாதாரணஜநங்களுமாகச் சேர்ந்திருந்தார்கள். ஸாயங்காலம் 4 - மணி முதல் 9 - மணி வரையில் ருதுமதீ விவாஹ விஷயமாய் வாக்யார்த்தம் நடந்தது. ருதுமதீ விவாஹம் ஶாஸ்த்ர ஸம்மதமென்கிற கட்சியைப் பண்டிதர் நடேச சாஸ்த்ரிகளும், எதிர்க்கட்சியைப் பண்டிதர் வெங்கடராம சாஸ்த்ரிகளும் எடுத்துத் தர்க்கித்தார்கள். அக்ராஸநாதிபதிகள் இருதிறத்தார்கள் வாதகாலத்திலும் பலஆக்ஷேபங்கள் செய்து சர்ச்சை நன்றாய் நடக்கும்படி செய்தார்கள். வந்திருந்தவர்களிலும் அநேக வித்வான்கள் தங்களுக்குத் தோன்றின ஆக்ஷேபங்களைச் செய்தார்கள். முடிவில் அக்ராஸநாதிபதிகள் விசேஷமானக் ஞானத்தையும் ஸாமர்த்யத்தையும் காட்டி, வாதவிஷயத்தில் தன் நிர்த்தாரணத்தை வெளியிட்டார். ருதுமதீ விவாஹம் சாஸ்த்ர ஸம்மத மல்லவென்றும், ருதுவாகி மூன்று வருஷம்வரையில் பிதா தானம் செய்யாவிட்டால் தானே இஷ்டமான புருஷனை கன்னிகை விவாஹஞ் செய்யலா மென்பது அத்யந்த ஆபத்கல்பமென்றும், அப்படி நேரும் விவாஹங்கள் உசிதங்களல்ல வென்றும் இந்த பரிஷத்தில் நிர்ணயிக்கப்பட்டதென்று அக்ராஸநாதிபதிகள் வெளியிட்டார்கள். இந்த வாதத்தின் பூர்வபக்ஷ ஸித்தாந்தக் கோடிகள் க்ரமமாய்ப் பிந்தி அச்சாகி வரும். இவ்வளவு சாஸ்த்ரக்ஞர்கள் சேர்ந்து இந்தவிஷயத்தில் தீர்

மானம் செய்தது எல்லா ஆஸ்திகர்களும் அநுமோதிக்கக் கூடியதே. இதுவிஷயத்தில் ச்ரமப்பட்ட அத்வைத சபையாருக்கு எல்லாரும் க்ருதக்ஞதை பாராட்டவேண்டும். ஆனால் இந்த நிர்ணயங்களில் காஞ்சீபுரம் பரிஷத்தில் நிர்த்தாரணஞ்செய்த சிலவைச்சேர இடங் கொடுக்கவில்லை யென்று அந்தப்பரிஷத்தின் கார்யதர்சியவர்கள் ஆக்ஷேபித்து வருவதாய்த் தெரிகிறது. அந்தப்பரிஷத்தின் நிர்த்தாரண விஷயமாய் விஸ்தாரமான பத்ரிகை தயார்செய்யப்படுவ தாகவும் தெரிகிறது. அதுவும் வெளிக்குவந்த பிறகு கட்சிகளின் பலாபலங்களை எல்லாரும் படித்துப்பார்த்து அறியலாம்.

---

**திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தானம்.**

இந்த தேவஸ்தானமும் இதைச்சேர்ந்த சில சில்லரை தேவஸ்தானங்களும் ஸ்ரீ அஹோபிலமடத்துக்குச்சொந்தமாய் ஸ்ரீ அழகியசிங்கர் நியமன நிர்வாஹங்களுக்கு உள்பட்டவைகளென்று எல்லார்க்கும் தெரிந்திருக்கலாம். இது, ஸந்நிதி தேவஸ்தானங்களில் முக்யமானதால், இது விஷயமாய்த் தகுந்த ஏஜண்டுகளை நியமித்துக் கார்யங்களைப் பராமர்சித்து வர வேண்டியது அவசியம். கொஞ்சகாலத்துக்குமுன், இந்த தேவஸ்தானம் கார்யங்கள் த்ருப்தியாக நடந்துவரவில்லை யென்றும், இந்த தேவஸ்தானத்தின் க்ரமங்களுக்குத் தகுந்த ஸ்கீம் என்னும் தனிவிதிகள் ஏற்படவேண்டுமென்றும் சொல்லி திருவள்ளூரில் சிலர் செங்கல்பட்டுஜில்லா கோர்ட்டில் தாவா செய்திருப்பதாய் தெரியவருகிறது. இந்த தேவஸ்தானத்தில் சிலநாளைக்குமுன் நடந்த ஏலத்தில் பெருமாள் ஸந்நிதி, தாயார் ஸந்நிதி உண்டிகளின் வரும்படி ஏலம் போடப்பட்டதாயும், தகுந்தபடி முன்னமேயே பலர்களுக்குத் தெரியாததால், ஏற்கனவே ஏற்பட்டிருந்த தொகையைவிடக் கொஞ்சம் அதிகமாய் ஏலம் போட்டிருந்தும், இன்னம் சரியாகக் கிடைக்கக்கூடிய தொகை ஏலத்தில் கிடைக்கவில்லை யென்றும் சிலர் சொல்வதாகத் தெரிகிறது.



ஸ்ரீ அழகியசிங்கர் இதுவிஷயங்களை விசாரித்துக் கார்யங்கள் சரிவர நடக்கும்படி நியமிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

---

**ஸர்வ இந்தியா வைஷ்ணவ மஹாஸமாஜம்.**

இந்தப் பெயர்கொண்ட சபையாரின் 2-வது ஸங்கம் நாளது ஜூலை மாஸத்தின் ஆரம்பத்தில் புரி என்னும் ஜகன்னாதத்தில் வெகு விமர்சையாய் நடந்ததாம். ஆயிரம் பெயருக்குமேல் ப்ரதி நிதிகளும் சுமார் மூவாயிரம் பெயர்கள் அன்னியர்களும் வந்திருந்தார்களாம். காஞ்சீபுரம் வித்வான். ஸ்ரீமாந். ப்ரதிவாதி பயங்கரம் அநந்தாசார்யர்ஸ்வாமி அக்ராஸநம் வகித்தார். ஜகன்னாதத்தில் ஒரு ஸ்ரீ வைஷ்ணவ மகா வித்யாலயம் என்று பேருள்ள பாடசாலை ஏற்படுத்துவதாய்த் தீர்மானம்செய்து ரூபாய். 8000 வரையில் அங்கே வசூலாயிற்றாம். இன்னும் பல தொகைகள் கொடுப்பதாய் பலர் ஒப்புக்கொண்டிருக்கிறார்களாம். வைதிக ஸர்வஸ்வம் என்று ஒரு பத்திரிகையும் இந்தச் சபையாரால் வாரத்துக்கு ஒருமுறை வெளிப்படுத்தப்படும் என்று தெரிகிறது. அனேக ராஜாக்களும் கனவான்களும் இந்தச் சபைக்கு ஆதரவைச்செய்ய சித்தமாயிருக்கிறார்கள். நம் தேசத்திலும் இந்தச் சபையின் பிரிவுகள் ஏற்பட்டு, வித்யையும் பகவத் பக்தியும் வ்ருத்திசெய்யப்படுமென்று நம்புகிறோம்.

---

**ப்ரஸிடென்ஸி காலேஜ், ஸம்ஸ்க்ருத ப்ரோபெஸர்.**

இந்த அதிகாரத்தை வகித்து வரும் ஸ்ரீமான். ராவ்பஹதூர். எம். ரங்காசார்யர். M. A. அவர்கள் 6-மாஸத்துக்கு லீவு பெற்றிருக்கிறார்கள். அவர் ஸ்தானத்தில், திருவையார் ஸம்ஸ்க்ருதகாலேஜ் தலைமை உபாத்தியாயரான ம-ள-ள-ஸ்ரீ எஸ். குப்புஸாமி சாஸ்த்ரிகள். M. A. அவர்கள், நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். முதலில் கவர்ன்மென்டார் ஸம்ஸ்க்ருதஸ்கூல் இன்ஸ்பெக்டரான ஸ்ரீமான். ஆர். க்ருஷ்ணமாசார்யர் M. A. அவர்களை நியமித்ததாகவும், பிந்தி அந்த உத்திரவை

மாற்றி, சாஸ்த்ரிகளை நியமித்ததாகவும் தெரிகிறது. இது ஸ்ரீமான். க்ருஷ்ணமாசார்யருக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கக்கூடியதே. ஸ்ரீமான். க்ருஷ்ணமாசார்யர், ஏற்கனவே பல வர்ஷங்களாய் ராஜநியமனத்தில் இருப்பவர். ஸம்ஸ்க்ருதத்தில் ஸாஹித்யத்திலும் சாஸ்த்ரங்களிலும் விசேஷமான ப்ரக்ஞை யுள்ளவர். ஸஹ்ருதயா என்னும் ஸம்ஸ்க்ருத பத்ரிகையை அவர் நடத்திவருகிறார். வடதேசங்களில் ஸதஸ்ஸுகளில் ப்ரஸங்கங்கள் செய்து வித்யாநிதி என்னும் பிருது அடைந்தவர். முன் ஒரு சமயத்தில் ப்ரக்ருத வேலையிலேயே சிலகாலம் பதிலாய் நியமிக்கப்பட்டுத் த்ருப்திகரமாய் வேலை பார்த்தவர். இவ்வளவு யோக்யதைகளுள்ள இவரை இந்த சமயத்தில் கவர்ண்மெண்டார் அதிக்ரமித்தது எல்லோர்க்கும் துக்ககரமாகவே இருக்கிறது.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] பரீதாபி௵ ஆவணிமீ. [ஸஞ்சிகை 7.

## விபீஷணர் சரணாகதி.

ஸ்ரீமத் ராமாயணத்தில் விபீஷணர் சரணாகதிப் ப்ரகரணம் எல்லோர்க்கும் படிக்கப் படிக்க ஆநந்தகரமாயும் அனேக விசேஷார்த்தங்களைப்போதிப்பதாயு மிருக்கிறதென்பது ஸர்வ ஸம்மதம். நம்மில் ஆஸ்திகர்களாயும் பக்திச்ரத்தைகளின் மிகுதியால் ஸம்ப்ரதாய விஷயங்களில் கேவல யுக்தியால் சர்ச்சைகள் செய்யக் கூடாதென்றும் இருக்கிறவர்கள், இந்த இதிஹாஸத்தை ப்ராயேண வாஸ்தவமாய் நடந்த விஷயங்களின் வரலாறாக எண்ணுகிறார்களே ஒழியக் கட்டுக்கதையாய் ஒருவரும் எண்ணுகிறதில்லை. தேவதைகளின் கார்யார்த்தமாய்ப் பகவான் அவதாரஞ் செய்ததும், அதையறிந்த ப்ரஹ்மா நாரதமஹர்ஷியைக் கொண்டு ஸ்ரீ வால்மீகி மஹர்ஷிக்கு ராமசரித்திரத்தை ஸங்க்ரஹமாய் ஞாபகம் செய்வித்ததும்,பிறகு தானே அவர் முன்பாக ஆவிர்ப்பவித்து அவர் வாக்கிலிருந்து "மா நிஷாத" என்னும் ச்லோகம் உண்டானதைப் பற்றி விஸ்மிதராயிருந்த ஸ்ரீ வால்மீகி மஹர்ஷிக்குத்தானே இந்த ச்லோகம் உண்டாகும்படி கட்டளையிட்டதாய்ச் சொன்னதும், பிறகு அவருக்கு ராமாயணக் கதைமுழுவதும் நன்றாய் மனதிற்

ப்ரகாசிக்கும் என்றும், ராமாயணக் கதையை ஶ்லோகரூபமாய் செய்து முடிக்க வேணுமென்றும் சொல்லிக் கட்டளையிட்டதும், ஏதோ கட்டுக்கதைக்குக் கல்பிதமான ஒரு உபோத்காதமென்று எண்ணாமல், வாஸ்தவமாய் நடந்த விஷயங்களென்றே ஹிந்துக்களென்கிற நம்மவர்களின் நம்பிக்கை. இதற்குப் ப்ரமாணமாக, "ரஹஸ்யம் ச வ்ருத்தம் ச யத்வ்ருத்தம் தஸ்ய தீமத: । ராமஸ்ய ஸஹஸௌமித்ரே: ராக்ஷஸானாம் ச ஸர்வஶ: । வைதேஹ்யாஶ்சைவ யத்வ்ருத்தம் ப்ரகாஶம் யதி வா ரஹ: । தச்சாப்யவிதிதம் ஸர்வம் விதிதம் தே பவிஷ்யதி" என்னும் மூல வாக்யத்தையும் உதாஹரிக்கிறார்கள். விசேஷமாய் இங்கிலீஷ்ப் படிப்புள்ளவர்களும் நூதனமான விமர்சங்களைச் செய்கிறவர்களுமான சிலர், 'என்ன இருந்தாலும் ராமாயணம் காவ்யந்தானே? வாஸ்தவமாயிருந்திருக்கக் கூடிய சில அம்சங்களை ஆதாரமாய் வைத்துக்கொண்டு, தன் புத்தி சாதுர்யத்தையே உபயோகப் படுத்தி ஸங்கற்பங்களை மஹாகவி சேர்த்திருக்கவேண்டும்', என்று அபிப்ராயப் படுகிறார்கள். எந்த அம்சங்களில் இவர்கள் வாஸ்தவத்தை ஒப்புக் கொள்கிறார்களென்றும் எந்தப் பாகங்களை கல்பிதங்களாய் எண்ணுகிறார்களென்றும் இப்பொழுது நாம் விசாரிக்கவேண்டுவதில்லை. இருதிறத்தார் அபிப்பிராயத்திலும் சரணாகதி கட்டம் மிகவும் உத்தமமான தென்பதும் அதினால் நமக்கு உண்டாகும் தத்வஞானமும் சமத்காரமும் அந்யாத்ருஶமென்பதும் நிச்சயம்.

இந்த ப்ரகரணம் ராமனை விபீஷணர் சரணமாக யடைந்ததை விவரிக்கிற தென்பது நன்றாய் ஏற்படுகின்றது. சரணமாக அடைவதாவது, ரக்ஷகனை வேண்டி அடைவது. ஒரு சக்தியுள்ள புருஷனைச் சக்தியில்லாத, ஏதோ ஆபத்தில் வர்த்திக்கும், மற்றொரு புருஷன் அடைக்கலமாக அடைவதை நாம் பார்க்கிறோம். அப்படிச் சரணமடைகிறவன் மனதிலே இருக்கவேண்டிய ப்ரகாரத்தை நம் ஸித்தாந்தத்தில் ஆசார்யர்கள் செவ்வையாய் விசாரித்திருக்கிறார்கள். சரணமடைந்தவன் தன்னை ரக்ஷித்துக்கொள்ள வேறு கதியற்றவனாயும், ரக்ஷகனானவனிடத்திலும் அவன் சக்திவிஷயத்திலும் பூர்ண விஶ்வாஸமுள்ளவனாயும், அவனுக்கு விரோதமான கார்யங்களைத்தவிர்த்து, அவனுக்கு அனுகூலமான செயல்களைச் செய்கிறவனாயும், தன்னைச் சரண்யன் அங்கீகரிப் பாரோ



மாட்டாரோ என்று பயந்து தைந்யமடைந் திருப்பது மாகிய இந்த ஐந்து அங்கங்களும் சரணாகதி அங்கங்களாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. இவைகளை "ஆனுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜனம் । ரக்ஷிஷ்யதீதி விஶ்வாஸோ கோப்த்ருத்வவரணம் ததா । ஆத்மநிக்ஷேப கார்பண்யே ஷட்விதா ஶரணாகதி:" என்கிற ஶ்லோகங்களும் விவரிக்கின்றன.

ஸ்ரீவிபீஷணர் செய்த சரணாகதியில் இந்த ஐந்து அங்கங்களும் பொருந்தியுள்ளன வென்பதை ஸுலபமாய் அறியலாம். ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் செய்தருளியிருக்கும் அபயப்ரதாந ஸாரமென்னும் க்ரந்தத்திலும் இந்த விஷயம் வ்யக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை இங்கு ஸங்க்ரஹமாய்ச் சொல்வோம். ஸ்ரீராமனுக்கு அனுகூலங்களைச் செய்ததும் ப்ரதிகூலங்களை வர்ஜித்ததும், "ப்ரதீயதாம் தாஶரதாய மைதிலீ" என்று பல தடவை ராவணனிடத்தில் முறையிட்டதாலும், "தாதம் நஶக்தா யுதி ராகவஸ்ய" என்று ஸ்ரீராமன் பராக்ரமத்தை எடுத்து உக்கோஷித்த ஹநுமானைக் கோபத்தினால் வதஞ்செய்யும்படி கட்டளை யிட்ட ராவணனுக்கு "ந தூதா வத்யமர்ஹந்தி" என்று உபதேசஞ்செய்து அவன் எண்ணத்தை மாற்றினதினாலும், "த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கத:" என்று ராமனையடைய விரோதிகளான புத்ரதாராதிகளைவிட்டு விலகினதினாலும், தெளிவாய் ஏற்படுகிறது. ஸர்வலோக ஶரண்யனென்று ஸ்ரீராகவனைச் சொல்வதாலும, நான்குபேர் மாத்திரமான பரிஜனத்தோடு ஶத்ருஸமீபத்தில் நிஶ்ஶங்கமாய் வந்ததாலும், "ஸர்வலோக ஶரண்யாய ராகவாய மஹாத்மனே" என்கிறபடி கிஞ்சித்தேனும் சந்தேகம் தோன்றாத கம்பீரமான குரலுடன் தன் வ்ருத்தாந்தத்தைச் சொன்னதினாலும் ஸ்ரீ விபீஷணாழ்வானுடைய மஹாவிஶ்வாஸம் ஸுவ்யக்தமாகிறது. "ராகவம் ஶரணம் கத:" என்னும் வாக்யத்தாலேயே "கோப்த்ருத்வவரண" மென்னும் ரக்ஷகனைப் வரித்தது காட்டப்பட்டது. 'நிவேதயத மாம் க்ஷிப்ரம்' என்பதினாலே, சரணாகதிக்கு ப்ரதானமான ஆத்மநிக்ஷேபம் வ்யக்தமாய்ச் சொல்லப்பட்டது. "ஸோ

ஸம் பர்யுஷிதஶ்சைந ஜ்ஞாநவ்ருத்தாவபோதித:" என்பதாலும், "ஸ்வரேண ஶோகதா ஶோகாந்" என்கிற ஆர்த்த ஸ்வரத்தாலும், 'க்ஷிப்ரம்' என்பதினுல் ஏற்படுகிற த்வராதிஶயத்தாலும், "ததோऽஸ்ய ஸமயம் மதம்' என்கிற ஸ்ரீராமன் வாக்யத்தாலும் கார்ப்பண்யமும் சொல்லப்பட்டது. இந்தக்காரணங்களால் இந்த ப்ரகாணத்தில் பூர்ணமான ப்ரபத்தி சொல்லப் பட்டதென்பது ஏற்படுகிறது.

ஆனுல் இந்த ப்ரபத்தி என்னும் உபாயம் எந்தப்பலனைக் குறித்து வேண்டுமானுலும் செய்யப்படலாம் என்றும், அதற்கு அங்கபூர்த்தியும் ரக்ஷகராய் வரிக்கப்பட்டவருக்கு சக்தியும் உண்டானுல் ஒருகாலும் வீண்போகாதென்பதும் நம்மாசார்யகளின் ஸித்தாந்தம். மேலும் எந்தப்பலனை அபேக்ஷித்தாலும் அது விஷயமாய் ஒரேதடவைதான் இந்த உபாயாநுஷ்டாநம் செய்ய வேண்டுமென்றும் க்ரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ப்ரகரணத்தில் விபீஷணர் செய்த ப்ரபத்தி எதைக்குறித்து என்று நாம் விசாரிப்போமானுல், இது ராஜ்யார்த்தமாய்ச்செய்த ப்ரபத்தி என்று சொல்ல பல உபபத்திகள் தோன்றுகின்றன. அவைகளை இங்கு முதலில் விசாரிப்போம்.

"ஐஶ்வர்யாக்ஷரயாதாத்ம்ய பகவச்சரணார்த்திநாம்" என்றும் "ஐஶ்வர்யமக்ஷரகதிம் பரமம் பதம் வா" என்றும் சொல்லுகிறபடியே "ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப" என்று சொல்லப்பட்ட நான்குவிதமான விபாகமும், வஸ்துகதியில் மூன்றுவகையாகவே பிரிந்து, ஐஸ்வர்யம், கைவல்யம், பரமபதம் என்கிற பலன்களை முறையே அபேக்ஷிக்கிற மூன்றுவித சரணுகதர்களே உலகத்தில் உள்ளவர்களென்று நம்மாசார்யர்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் ஐஸ்வர்யத்தை விரும்புவோர்களுக்கு அந்தப்பதத்தின் அர்த்தமாக எல்லா ஐஹிகவாழ்க்கையும், ஸ்வர்க்காதிபோகங்களும், ப்ரஹ்மப்பட்டம் வரையிலுண்டான எல்லா அதிகாரங்களும் அடையலாம் படியாகு மென்பது ஸித்தாந்தம். கைவல்யத்தை அபேக்ஷிக்கிறவர்களுக்கு தன் ஆத்மாவின் பரிசுத்தஸ்வரூபத்தின் ஸாக்ஷாத்காரமும் அதனுலுண்டான ஆநந்தமும் ஸம்ஸார நிவ்ருத்தியும் உண்டாகு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. மோக்ஷார்த்தமான சரணுகதி



செய்பவர்களுக்குப் பகவானை அடைதலாகிற பரமபத ப்ராப்தியும் நிரந்தரமான பரமபதவாஸமும், நித்யமான பகவத் கைங்கர்யமும் கிடைக்கிறதென்பதும் ஏற்பட்டிருக்கிறது. இந்தப்பலன்களில் மேல் பலத்தை விரும்பி ப்ரபத்தி செய்வாருக்குக் கீழ்ப் பலங்கள் ப்ரார்த்திதங்களில்லாவிட்டாலும் ஆநுஷங்கிகமாய்கிடைக்கலாம் என்பது நமது ஸித்தாந்தம். இதற்கு மூலவாக்யம், "ஶரீராரோக்யமர்த்தாம்ஶ்ச போகாம்ஶ்சைவாநுஷங்கிகாந் । ததாதி த்யாயிநாம் நித்யமபவர்கப்ரதோ ஹரி: ॥" என்பது தான். இதனர்த்தம், "மோக்ஷத்தைக் கொடுக்கும் பகவான் அதனுடன், அதாவது, அதற்குப் பூர்வமாகச் சரீரத்தின் ஆரோக்யம், ஐஸ்வர்யம், போகங்கள், முதலான எல்லாவற்றையும் தன்னிஷ்டத்தால் கொடுப்பார்". என்ருகிறது. இப்படிப் பலங்களின் ஸ்வபாவம் இருக்கச்செய்தேயும்,எந்த பலத்தைக்கோலி ப்ரபத்தி செய்கிருனே அதற்கு மேற்பட்டதான பலத்தைப்பகவான் கொடுக்கிறதில்லை என்பது ஸித்தாந்தம். இந்தச் சரணுகதி தர்மங்களை மனதில் வைத்துக்கொண்டு, ஸ்ரீ விபீஷணுழ்வான் செய்த சரணுகதியில் என்ன பலம் ப்ரார்த்திக்கப்பட்ட தென்றும், சரண்யனுன ஸ்ரீ ராமன் எந்த பலத்தைக் கொடுப்பதாக வாக்களித்தார் என்றும், நாமறிந்த வரையில் விபீஷணருக்கு எந்த பலம் சித்தித்ததென்றும் விசாரிப்போம்.

ஆதியில் ஸ்ரீவிபீஷணர் ராவணனுக்கு ஹிதோபதேசஞ் செய்யுங்காலத்தில், "யாவந்ந கேஶேஷு ப்ரக்ருஹ்ய ஸுஹ்ருத்பி: ஸம்ஸ்த்ரஸ்த [illegible] ராக்ஷஸாநாம் । நிஹந்தி ராஜா [illegible] ஸ்ஸீதேயா ஸீதேதி [illegible]:" என்று சொல்வதினுல், ராவணனுடையவும் ராக்ஷஸர்களுடையவும் க்ஷேமத்தையே உத்தேசித்து ஸீதையைத்திருப்பிக்கொடுத்து யுத்தத்தை நிவ்ருத்திசெய்ய வேணுமென்று உபதேசித்தார். பிறகு அவர் இந்த்ரஜித்தின் வாக்பாருஷ்யத்தைக் கண்டித்து அவனை பாலனென்று அடக்கி, "ஸீதாம் ச ராமாய நிவேத்ய தேவீம் வஸேம ராஜந்நிஹ வீதஶோகா:" என்று மறுபடியும் ராவணுதிகளுடையவும் தன்னுடையவும் நாசம் ஏற்படாமல் யுத்தத்தை நிறுத்தவே ப்ர

யத்நப்பட்டார். பிறகு இந்த ஹிதோபதேசத்தை ராவணன் திக்கரித்து விபீஷணரைச் சந்தேகித்து 'ஜ்ஞாதயோ நோ பயாவஹா:' என்றும் "த்வாம் து திக் குலபாம்ஸநம்" என்றும் இவரை அச்ராவ்யமான நிந்தைகளைச் செய்தவுடன், அவனை விடுவதாய் நிச்சயம்பண்ணி "ஆத்மாநம் ஸர்வதா ரக்ஷ புரீம் சேமாம் ஸராக்ஷஸாம்" என்று தான்முன் சொன்னதையே வற்புறுத்தி, அவன் ஸஹவாஸத்தில் இஷ்டமில்லாதவராய், 'யத்ர ராம: ஸலக்ஷ்மண:' என்கிறபடி ராமபக்ஷாஶ்ரயணமே இந்த ஆபத்காலத்தில் உசிதமென்று நிச்சயித்து ஸ்ரீராமனிடத்தில் வந்தார். இவர் யுத்தவீராகையால் கேவலம் சரீரநாசத்தை நினைத்துப்பயந்து ராமனையடையவில்லை. விபீஷணர் தர்மாத்மாவாகவும் பரமகாருணிகராகவும் இருந்தபடியால் ராவணனுடைய அக்ருத்யத்தில் ருசியில்லாதவராய் ராமனுடைய குணங்களில் பக்ஷபாதத்தினுல் அவரை ஆச்ரயித்தார். இவர் வ்யக்தமாய் தன் எண்ணத்தை விவரிக்காவிட்டாலும், சரீரநாசத்துக்கும் ராஜ்யநாசத்துக்கும் அபயசஸ்ஸுக்கும் ஹேதுவான ராவணாஶ்ரயத்தை விட்டதால், ஸ்ரீராமனை ஆச்ரயித்ததில் தர்மிஷ்டனென்கிற ஸம்பாவனையும், பலிஷ்டரை ஆச்ரயித்ததனுல் உண்டாகக்கூடிய தன் சரீர ரக்ஷணமும், யுத்தத்தில் யசஸ்ஸும், ராவணஜயம் நேர்ந்தால் ராஜ்யப்ராப்தியும் ஆகிய ப்ரயோஜநங்களை உத்தேசித்தே இவர் அப்படிச் செய்திருக்க வேண்டும். இவர் ஸ்ரீராமன் ஜயத்தை நம்பினவராய் இருந்தாலும் அதற்குக் கேவலம் மானுஷத்வத்தில் தோன்றும் உபபத்திகளைச் சொல்லுகிருரே ஒழிய, அவர் பரத்வத்தையாவது, தேவகார்யமாய் அவதரித்திருப்பதையாவது நினைத்தவராய்க் காணப்படவில்லை.

"யச்ச வீர்யாநஸ்ய ஜோராமஸ்ய, இக்ஷ்வாகுவம்ஶப்ரபவஸ்ய ராஜ்ஞ:। ப்ரஹஸ்த தேவாஸ்த்ர தயாவிதஸ்ய க்ரோதேஷு ஶக்தஸ்ய பவந்தி ஶூரா:॥" என்கிற ஶ்லோகம் ஸ்ரீராமனுடைய பராக்ரமத்தையும் தநுஸ்ஸில் பாண்டித்யத்தையும் சொல்லுகிறதேயொழிய அவர் பரத்வத்தை ஸூசிக்கவில்லை. ஆகையால் இந்த ஸந்தர்ப்பம் வரையிலுள்ள விபீஷணர் வாக்யங்களால் இவர் பரத்வத்தை அறிந்து மோக்ஷத்தைப் ப்ரார்த்தித்ததாய்த் தோன்றவில்லை. "ஸர்வலோக ஶரண்யாய ராகவாய மஹாத்மநே"



என்கிற வாக்யத்தாலும் மோக்ஷார்த்த சரணுகதி ஸூசிக்கப்பட்டதாகச் சொல்லமுடியாது. ஸாக்ஷாத் ஶத்ருவின் ப்ராதாவாகத் தானிருப்பதையும், சபலர்களான பல வானரர்கள் ஸ்ரீராமனைச் சூழ்ந்திருப்பதையும், இவர் நான்குபேருடன் எதிரில் நின்றவுடன் அவர்களுக்குண்டான பயத்தையும் ஸம்ப்ரமத்தையும் அறிந்த விபீஷணர் ராகவனிடத்தில் பூர்ண விஶ்வாஸத்தால் அவர் ஹ்ருதயத்தில் உடனே ஸ்புரிக்கும்படியாய் கம்பீரமானவும் அர்த்தவத்தானவுமான இரண்டு பதங்களை ப்ரயோகிக்கிருர். "ஸர்வலோக ஶரண்யாய" என்பதால் "ரகுவம்சத்திற்பிறந்த சக்ரவர்த்திகளுக்கு லோகம் முழுவதும் பரிபாலிக்கவேண்டிய ப்ரஜைகள்தானே. இவைகளில் வாநரர்கள் என்றும் ராக்ஷஸர்களென்றும் பேதம் வைக்கலாமோ? ஆபத்கதனுய் ரக்ஷையைத் தேடுவதில், வாலியால் துரத்தப்பட்டு வநசாரியான ஸுக்ரீவனுக்கும் ராவணனுல் அவமானம் பண்ணப்பட்டு அலறி ஓடிவந்திருக்கும் எனக்கும் வாசியுண்டோ? அவரை ரக்ஷித்து என்னைத்தவிர்க்க வேண்டுமென்பது தர்மமோ?' என்கிருர். ஆனுல் நீர் ஶத்ருபக்ஷ மல்லவோ? உம்மைச் சேர்த்தால் நீர் சித்ராந்வேஷியாய் ஸமயத்தில் அடிக்கமாட்டீரோ? உம்முடைய ஆகாரசேஷ்டிதங்கள் எங்களுக்குத் தெரியவில்லையே? கதாபாணியான உம்மை வணங்கி வந்தவராய் எப்படி எண்ணுகிறது? மாயாவிகளான ராக்ஷஸர்களிடத்தில் எப்படி விஶ்வாஸம் வைக்கிறது? என்று வாநரர்கள் பலவிதமாய் ஶங்கைப் படுவதை அறிந்த விபீஷணர், "மஹாத்மநே" என்கிருர். என் சித்த வ்ருத்தியை ஸ்ரீராமன் அறிவார். உங்களைப் போல் அவர் இங்கிதம் அறியாதவர் அல்ல. நீங்கள் அல்பர்களாகையால் பயப்படுகிறீர்கள். மஹாதைர்யசாலியான ஸ்ரீராமன் என்பலத்தைக் கண்டு கலங்குவரோ? ராவணன் என் ப்ராதாவானுல் என்ன? அவன் அபராதியானுல் என்ன? "ந ஸ்மரத்யபகாராணாம் ஶதமப்யாத்மவத்தயா। கதஞ்சிதுபகாரேண க்ருதேநைகேந துஷ்யதி" என்கிறபடி ஸாக்ஷாத்தாய் ராவணன் வந்தாலும் அங்கீகரிக்கும் மஹாத்மா அல்லவா? என்விஷயத்தில் அவர் உபேக்ஷை செய்வாரோ? "ராகவாய" சரணாகதி தர்மத்துக்கு ப்ரவர்த்தகர்களான ரகுவம்சத்தார்களில் இவர் ஒருவரல்லவோ" என்று

ஸாபிப்ராய மாயும் நிச்சங்கமாயும், ஸ்ரீராமன் செவியிலும் வானரர்கள் செவியிலும் ஸமமாய்ப் பட்டாலும், கூடார்த்தங்கள் ஸ்ரீராமனுக்கு ஸித்தமாய் வெளியாகு மென்று அறிந்து மேற்சொன்ன பதங்களை விபீஷணர் ப்ரயோகிக்கிறாரே யொழிய, பரத்வத்தை அறிந்ததாயும், தான் செய்யும் சரணாகதி மோக்ஷார்த்தசரணாகதி என்றும் ஸூசிக்கும் பதங்கள் சரணாகதி வாக்யத்திலாவது முன் வாக்யங்களிலாவது ஏற்படவில்லை.

இனி வீபீஷணாதிகள் அபிப்ராயத்தை அவர்கள் ஆகார செஷ்டிதங்களால் அறிய ப்ரயத்னப்பட்ட வானரவீரர்களின் உக்திகளைக் கொண்டு இந்த விஷயத்தை விசாரிப்போம்.

இங்கு ஹநுமார் அபிப்ராயம் ஸ்ரீ ராகவன் அபிப்ராயத்துக்கு அநுகுணமென்பது ப்ரஸித்தம். மற்ற வானரவீரர்கள் அபிப்ராயம் ப்ராயேண விபீஷணரைச் சேர்க்கக் கூடாதென்பதே என்றும் வ்யக்தமாயிருக்கிறது. இவர்களில் ஸுக்ரீவன் சொல்வதில், விபீஷணர் தங்களுடன் சேர்ந்து பேதம் செய்வாரென்றும், அவர் ராவணனால் அனுப்பப்பட்டுச் சாரராய் வந்தவரென்றும், அவருக்கு விரோதம் செய்வதே எண்ணமென்றும் எண்ணினதாய்த் தெரிகிறது. "ராக்ஷஸோ ஜிஹ்மயா புத்த்யா ஸந்திஷ்டோயமிஹாகத:" என்றும் 'ராவணேந ப்ரணிஹிதம் தமவேஹி விபீஷணம்' என்றும் இவர் சொல்லுகிறார். ஸ்ரீராமன் "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந" என்று தன் அபிப்ராயத்தை வெளியிட்ட பிறகும் வானரராஜன் தன் எண்ணத்தை மாற்றாதவராய்த் தான் கீழே சொன்ன வசனங்களையே திரும்பவும் த்ருடமாய்ச் சொல்லுகிறார். மறுபடியும் ராகவனிடம் சரணாகதிதர்மத்தைக் கேட்ட மஹாராஜர், ராமனிடத்தில் விஶ்வாஸத்தால் அவர் மதத்தை அனுஸரித்து, "மமாப்யந்தராத்மாயம் ஶுத்தம் வேத்தி விபீஷணம்" 'எனக்கும் விபீஷணர் கெட்ட எண்ணமில்லாதவரென்றே (இப்பொழுது) மனஸ்ஸில் தோன்றுகிறது" என்று சொல்லி, அவரைத் தங்களுக்குச் சமானமாய் ஸ்ரீ ராமன் நடத்தலா மென்று அப்யுபகமம் செய்கிறார். இவர் அபிப்ராயத்தால் விபீஷணருக்குப் பரமபுருஷார்த்தத்தில் கோரிக்கை என்பது வெளியாகவில்லை.



மற்ற வானர வீரர்களில் சிலர் விபீஷணரை துஷ்டர் தானென்றும், சிலர் அவர் அபிப்ராயத்தை நன்றாய் அறிந்து தான் சேர்க்கவேண்டு மென்றும் சொன்னார்கள். புத்திமானாயும் ராமனிடத்தில் பரமபக்தியால் துஷ்டாதுஷ்ட லக்ஷணத்தை அறியச்சக்தியுள்ளவருமான ஹநுமார், மற்ற வானரர்களுடைய அபிப்ராயங்களைக் கண்டித்து, அந்த அபிப்ராயங்களால் ஏற்படும் பரிசோதனை அஶக்யமென்று சொல்லி, விபீஷணருடைய ஆகார சேஷ்டிதங்களால் அவர் துஷ்டரல்ல வென்று நன்றாய் விவரித்து அவரை பரிக்ரஹிக்கலாமென்று தன் மதத்தைச் சொல்லி, வீபீஷணர் ஸ்ரீராமனை அடைந்ததற்கு தனக்குத் தோன்றின காரணத்தையும்,

"உத்யோகம் தவ ஸம்ப்ரேக்ஷ்ய மித்யாவ்ருத்தம் ச ராவணம் ।
வாலிநஶ்ச வதம் ஶ்ருத்வா ஸுக்ரீவம் சாபிஷேசிதம் ॥
ராஜ்யம் ப்ரார்தயமாநஶ்ச புத்திபூர்வமிஹாகத: ॥

என்கிற வாக்யங்களால் விவரிக்கிறார்.

இதனால் ஸூக்ஷ்மபுத்தியான ஹநுமாருக்கு இவர் ராஜ்யகாங்க்ஷியாகவே வந்ததாய் மனதில் பட்டது என்பது ஸித்தம். விபீஷணர் ஶரணாகதிக்கு இதுதான் உத்திஷ்டமான பலமென்று ஹநுமார் வ்யக்தமாய்ச் சொல்லுகிறார். இந்த அர்த்தம் ஸ்ரீராமன் வாக்யத்தினாலும் த்ருடீக்ருதமாய் ஆகிறது. எப்படியென்றால் விபீஷணன் துஷ்டனாகிலும் தனக்குப்பயமில்லை என்பதை, "அங்குல்யக்ரேண தாந் ஹந்யாமிச்சந் ஹரிகணேஶ்வர" என்கிற வாக்யத்தாற் சொல்லி, ஶரணாகதி தர்மம் தனக்கு முக்யமான தர்மமென்றும் அதை அனுஷ்டிப்பதில் தான் வ்ரதங்கொண்டவரென்றும் தெரிவித்து, ஸுக்ரீவாதிகளின் ஸம்ஶயம் நீங்கவேண்டியதற்காக, விபீஷணருக்கு லங்காராஜ்யத்தில் விருப்பமென்றும், ராக்ஷஸர்களல்லாத தம்மை அடைவதால் அந்தராஜ்யம் தனக்குக்கிடைக்கு மாகையால் அதை உத்தேசித்தே விபீஷணர் வந்திருப்பதாயும் அதனால் அவரைச்சேர்ப்பதே சரியென்றும் பலவாக்கியங்களால் அருளிச்செய்கிறார். "ராஜ்யகாங்க்ஷீ ச ராக்ஷஸ:" என்று ஸ்ரீராமன் வாக்யம் இங்கு வ்யக்தமாக இருக்கிறது.

இந்த ராஜ்யவிஷயமான அபிப்ராயம் தனக்கு இருப்பதை விபீஷணருடைய, "𑌭𑌵𑌦𑍍𑌗𑌤𑌂 𑌮𑍇 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌚 𑌜𑍀𑌵𑌿𑌤𑌂 𑌚 𑌸𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚" 'எனக்கு ராஜ்யமும் உயிரும் ஸுகங்களும் தேவரீரால் கிடைக்கவேணும்' என்கிற வாக்யத்தினாலும் ஸூசிக்கப்படுகிறது. விபீஷணருக்கு உடனே ராமன் லங்காராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்ததும், விபீஷணர் அபிஸந்தி ராஜ்யவிஷயந்தானென்றே தெரிவிக்கிறது.

இப்படிப் பலவாக்யங்களின் ஸ்வாரஸ்யத்தாலும் உபபத்திகளாலும் விபீஷணர் சரணாகதி, ராஜ்யார்த்தமென்று வ்யக்தமாயிருந்தபோதிலும், இதை ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அங்கீகரிக்காமல், இந்தப்பக்ஷத்தை ஆபாதரஸிகர் பக்ஷமென்று நிரஸித்து, ஸ்ரீ விபீஷணாழ்வான் மோக்ஷார்த்த சரணாகதியையே அனுஷ்டித்தார் என்று ஸித்தாந்தம் செய்திருப்பதால், அதைப்ரமாணமாய்க் கொள்ளவேண்டிய நாம் அதின் ஔசித்யத்தை விசாரித்து, மேற்சொன்ன யுக்திகளின் தௌர்பல்யத்தையும் அறியவேண்டும். மோக்ஷார்த்த சரணாகதியென்று நிச்சயிக்க ஆதாரமான யுக்திகளை, ஆசார்யன் உபந்யாஸத்தை அனுசரித்து இங்கு ஸங்க்ரஹிக்கிறோம். முதலாவது, 'விபீஷணாழ்வார்கருத்தை அடியொத்தினால், மோக்ஷம் அல்லது கைங்கர்யமே பலமாயிருக்கும் அதற்கு நிதானமான வாக்யம். "𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌦𑌾𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌰𑌾𑌘𑌵𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌤𑌃" "𑌭𑌵𑌦𑍍𑌗𑌤𑌂 𑌮𑍇 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌚 𑌜𑍀𑌵𑌿𑌤𑌂 𑌚 𑌸𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚" என்கிற வாக்யங்களே. இந்தவாக்யங்களாலே அஸங்குசிதமாய் எல்லாபுருஷார்த்தமும் பெருமாள் திருவடிகளே என்று அர்த்தமாகிறது. இரண்டாவது '𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯' என்றும் '𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑍀 𑌚 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌃' என்றும் இருக்கிற வாக்யங்கள், மகாராஜருடைய ஆர்த்தியை அடக்க ஸாமான்யமாய் சொல்லப்பட்டவை. மூன்றாவது, விபீஷணாழ்வார் வாக்யமும் பெருமாளுள்பட மற்றவர்கள் வாக்யமும் விரோதித்தால், அந்தரங்க ந்யாயத்தாலே, விபீஷணர் வாக்யமே ப்ரபலம். ஶரண்யன் செய்வித்த பட்டா



பிஷேகமும் ராஜ்யதானமும் '𑌶𑌰𑍀𑌰𑌸𑍌𑌖𑍍𑌯𑌂' என்று சொன்ன ரீதியாய ஆநுஷங்கிக போகப்ரதானமென்று கொள்ளப்ராப்தம். மேலும் ராஜ்யம் தருகிறோமென்ற பெருமாள் வாக்யத்துக்கு விபீஷணாழ்வார் ஒரு ஸமயத்திலும் அப்யுபகமம் செய்துபதில் சொல்லாமல், '𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌂 𑌵𑌧𑍇 𑌸𑌾𑌹𑍍𑌯𑌂...𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿' என்று மாத்ரம் சொல்லுகிறார். இதனாலும் இவருடைய நிரபேக்ஷத்வம் தோன்றுகிறது. நான்காவது. இவர் ராஜ்யத்தை ஒப்புக்கொண்டதும் நீடூழிகாலம் ராஜ்யம் செய்வதும் ஶபத பூர்வகமான பெருமாள் ஶாஸநத்தாலே யாதலால், அது கைங்கர்யகோடியில் சேருகிறது. '𑌆𑌰𑌾𑌧𑌯 𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥𑌮𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑍁𑌕𑍁𑌲𑌦𑍈𑌵𑌤𑌮𑍍' என்று நியமித்துத் தனக்கு ஆராத்யரான ரங்கநாதன் விக்ரஹத்தை இவருக்குப் பெருமாள் கொடுத்ததும் ஸ்ரீ விபீஷணாழ்வாருடைய அநந்யப்ரயோஜனமான கைங்கர்யாபிஸந்தியையே காட்டுகிறது.

இவ்வளவும் நியமித்த நம்மாசார்யர் மேலும் "இப்படியன்றிக்கே ஆபாதப்ரதீதி பக்ஷத்தாலே இவன் ஐஶ்வயார்த்தியானாலும்" என்று அந்தப்பக்ஷத்திலும், ஶரணாகதி மோக்ஷபர்யந்த ஸாதனமென்கையால், விபீஷணர் சரணாகதி எதையுத்தேசித்து, என்னும் விஷயத்தில் உபயபக்ஷத்தின் யுக்திகளையும் பரிசீலிப்பதில் யாதொரு அநௌசித்யமுமில்லை. மேலும் பகவத்கீதையில் ஸ்ரீபாஷ்யக்காரர் அங்கப்ரபத்தியை அவலம்பித்ததுபோல், விபீஷணர் சரணாகதி ஐஶ்வர்யார்த்தமென்று கொண்டாலும் சரணாகதி ஸர்வபலப்ரதையாய் ஆகக்குறையில்லை. அன்றியும், ஸ்ரீமத்ராமாயணத்தில் ப்ரபத்தி ப்ரகரணங்களில் மற்றெல்லாவிடத்தும் மோக்ஷமல்லாதபலமே உத்தேச்யமாய் காணப்படுகிறது. பரதன், ராமன் ராஜ்யம் வஹிப்பதையும், லக்ஷ்மணன் ராமனுடன் காட்டுக்கு ஸஹகமநத்தையும், ரிஷிகள் ரக்ஷணத்தையும், காகாஸுரன் ஜீவனையும், ஶரணாகதியின் பலமாகக்கோரினதை அங்கங்கு காண்கிறோம். அப்படியே விபீஷணர் ராஜ்யார்த்தியாய் சரணாகதி செய்தாரென்பதும் க்ரந்த தாத்பர்யத்துக்கு விரோதமல்ல, எப்படிப்

பார்த்தாலும் ஸ்ரீராமாயணத்தில் ஶரணாகதி தர்மம் புஷ்கலமாய் விவரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப்ரகரணத்தில், பெருமாளால் அடுத்த சந்தர்ப்பத்தில் '𑌭𑌵𑌾𑌨𑍍 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌃' என்று ஶ்லாகிக்கப்பெற்ற இளைய பெருமாள் தன் அபிப்ராயத்தை விவரிக்காததற்கும், அவர் அபிப்ராயத்தைச் சொல்லும்படி பெருமாள் நியமிக்காததற்கும் காரணமென்னவென்று ஜ்ஞாதாக்கள் விமர்சம் செய்யவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன். சிலவாக்யங்களால் அவர் ஸுக்ரீவனுடன் ஸமாநாபிப்ராயரா யிருந்தாரென்று தோன்றுகிறது. இப்படிச் சொல்வது யுக்தமா? ஹநுமான் அறிந்த விபீஷணருடைய ஆர்ஜவம் பகவதம்ஶரான ஸ்ரீ லக்ஷ்மணனுக்குத் தெரியாமலிருக்குமா? அப்படித்தெரிந்தால் அவர் அதைமறைத்து ஸுக்ரீவனுடன் சேர்ந்தவர்போல் அபிநயித்தது என்னகாரணத்தினால்? இந்த அம்சத்தில் சந்தேகத்தை வித்வான்கள் தீபிகையில் விவரிப்பார்களென்று நம்புகிறேன்.

மேலும் விபீஷணர் ராமாதிகளநுமதியின்பேரில் கிட்டிவந்து தன் சரணாகதி வாக்யத்தை ராமன்கேட்கச்சொல்லி நிற்க, ஸ்ரீராமன், ப்ரத்யுத்தரமாக 'அபயங்கொடுத்தேன்' என்று சொல்லவேண்டியவர், அப்படிச்சொல்லாமல், '𑌲𑍋𑌚𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑌿𑌬𑌨𑍍𑌨𑌿𑌵' என்று தன் ப்ரீதியை மாத்திரம் காட்டி, தன் கார்யத்துக்கு அநுகூலமாக '𑌆𑌖𑍍𑌯𑌾𑌹𑌿 𑌮𑌮 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌂 𑌬𑌲𑌾𑌬𑌲𑌂' என்று ராக்ஷஸ ஸைந்யத்தின் பலாபலத்தைக்கேட்டது யுக்தமா? இதைக்கேட்டபிறகு, '𑌅𑌹𑌂 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑌂...... 𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿' என்று சொன்னவார்த்தை '𑌶𑌰𑌣𑍍𑌯𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌤𑌃' என்கிற விபீஷணர் வாக்யத்துக்குடனிருந்தால் அழகாயிருக்கும்போல் தோன்றுகிறது. இந்த விஷயத்திலும் வித்வான்கள் தம்மபிப்ராயங்களைத் தெரிவிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

பாரத்வாஜர்.

ஸ்ரீ:.

ஸ்ரீ 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ பாகவத தனிஶ்லோகி.

𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌯𑌾𑌸𑌮𑍁𑌦𑌪𑌾𑌸𑍍𑌯 𑌨𑌮𑌨𑍍𑌤 𑌏𑌵, 𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑌿
𑌸𑌨𑍍𑌮𑍁𑌖𑌰𑌿𑌤𑌾𑌂 𑌭𑌵𑌦𑍀𑌯𑌵𑌾𑌰𑍍𑌤𑌾𑌮𑍍 । 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿
𑌗𑌤𑌾𑌂 𑌤𑌨𑍁𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑍋𑌭𑌿𑌰𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍋𑌽𑌜𑌿𑌤 𑌜𑌿𑌤𑍋
𑌽𑌪𑍍𑌯𑌸𑌿 𑌤𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍍𑌯𑌾𑌮𑍍 ॥ 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌗𑌵𑌤𑌂, 10 - 14, 3.

'ஸாதுஜநத்தை நலியும் கஞ்சனைச்சாதிப்பதற்கு ஆதியஞ்சோதி யுருவை அங்குவைத்திங்குப் பிறந்து', ஒருத்தி மகனாய்ப் பிறந்தோரிரவில் ஒருத்தி மகனாய் நாமறிய வாய்ப்பாடிவளர்ந்து, மாயச்சகடமுதைத்து, மருதிறுத்து, ஆயர்களோடு போயாநிரைகாத்து, அணிவேயின் குழலூதி, வித்தகனாய் ஸ்ரீக்ருஷ்ணன் நிற்குமளவில், ஒருநாள் கன்றுகள்மேய்த்துத் தன் தோழரோடு கலந்து, காடுகளுக்குப்போய், இஷ்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி விட்டுக்கொண்டு விளையாடி, வேர்த்துப்பசித்து வயிறசைந்து வேண்டடிசி லுண்ணும்போது,

𑌬𑌿𑌭𑍍𑌰𑌦𑍍𑌵𑍇𑌣𑍁𑌂 𑌜𑌠𑌰𑌪𑌟𑌯𑍋𑌃 𑌶𑍃𑌙𑍍𑌗𑌵𑍇𑌤𑍍𑌰𑍇 𑌚 𑌕𑌕𑍍𑌷𑍇,
𑌵𑌾𑌮𑍇 𑌪𑌾𑌣𑍌 𑌮𑌸𑍃𑌣𑌕𑌵𑌲𑌂 𑌤𑌤𑍍𑌫𑌲𑌾𑌨𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌷𑍁 ।
𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌵𑌪𑌰𑌿𑌸𑍁𑌹𑍃𑌦𑍋 𑌹𑌾𑌸𑌯𑌨𑍍𑌨𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 𑌸𑍍𑌵𑍈𑌃,
𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌮𑌿𑌷𑌤𑌿 𑌬𑍁𑌭𑍁𑌜𑍇 𑌯𑌜𑍍𑌞𑌭𑍁𑌗𑍍𑌬𑌾𑌲𑌕𑍇𑌲𑌿𑌃 ॥

என்கிறபடியே, தேவதைகளெல்லாரும் ஆகாயத்தில் திரளாகவந்து நின்று பார்த்துக்கொண்டிருக்கையில், '𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵 𑌚' என்றும், '𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌮𑍇𑌵

யஜஞி தெ' என்றும் சொல்லுகிறபடியே, எல்லா யக்ஞங்களா லும் ஆராதிக்கப்படுகிற ஸர்வேஸ்வரன் லோகத்தில் பாலர்கள் விளையாட்டை யனுசரித்தவராய் நின்றார். அன்றியும், 'ஸ்வெரூ ஜொகெ ஜிஷதி ப⁻ஹ⁻ஜெ'—ஸ்வர்க்கத்தில் வஸிக்கிறதேவ தைகள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, பரமைகாந்திகளால் செய்யப்படும் யாகாதிகளான ஆராதநங்களைத் தேவர்களுக்கு அவை களில் சம்பந்தமில்லாமல், 'வக்ஷ⁻ஶெஷெவ ஹெரண்ய ஹூ ஹவிஷாஂ ரஸஜ்நஹ⁻ஶவஙு' என்றும், 'ந யஷவ்ரா ஜயா ய⁻ஶயஂ' என்றும் சொல்லுகிறபடியே, தானே புஜிக்கும் சர் வேஸ்வரன் புஜித்தார். அப்படி புஜிக்குங்கால், ஸ்ரீ க்ருஷ்ணன் கோபாலப்பிள்ளைகளின் நடுவே நின்றுகொண்டு, கோபால ஜாதி யின் வழக்கப்படி வேணு, சங்கம், பசுக்கறக்கும் பாத்ரம், கோல் இவைகளை கடிசூத்ரத்திலும் கக்ஷத்திலு மாகக்கொண்டு கையில் தத்யந்ந கபளத்தை ஏந்தி அதற்கு உபதம்சங்களான பழம் முத லியவைகளை விரல்களி லடக்கிக் கொண்டு பரிஹாஸ வார்த்தைக ளைப் பேசிக்கொண்டு புஜித்தார்.

அதைக்கண்ட சதுர்முகன் பகவானுடைய விசித்ரசக்தியைப் பார்ப்பதற்காகவும், கோபாலர்களின் பாக்யாதிஶயத்தில் பொறு மையினாலும், முதலில் கன்றுகளையும், அவைகளைப்பகவான் தேடப் போன சமயத்தில் கோபாலப்பிள்ளைகளையும் மறைத்துவிட, ஸ்ரீ க்ருஷ்ணன் தானே கன்றுகளாகவும் கோபாலப்பிள்ளைகளாகவும் தனித்தனி ரூபங்களைத் தரித்தவராய் அவரவர்கள் செய்யும் க்ரம ங்களை அநுஸரித்து எல்லா வ்யாபாரங்களையும் தன் விசித்ர சக்தியினாலே செய்துவந்தார். மேலும் சதுர்முகன் தன்னுடைய லோகம்போய்ச் சேருவதற்கு முன் ஸ்ரீ கண்ணபிரான் அங்குப்போ ய்த் தானே சதுர்முகனாய் அவர் ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருக்க, அங்கே இதற்குள் வந்த சதுர்முகனை வாசற்காப்பார்கள், கவ ன் மாயையால் மோகித்தவர்களாய், உள்ளேவிடாமல் தடுத்து அவ மதித்தார்கள். பிறகு சதுர்முகன் அவமானத்தால் துக்கத்துட னும் ஆச்சர்யத்துடனும் பூலோகத்துக்குத் திரும்பிவந்து திரு



வாய்ப்பாடியில் போய்ப்பார்க்கையில், அத்தனை கன்றுகளும் கோ பாலப்பிள்ளைகளும் சங்க சக்ர கதாபாணிகளாய் ஸ்ரீ க்ருஷ்ணனு டைய திவ்ய மங்கள விக்ரஹங்களாய்த் தோன்றக்கண்டு, விஸ்மி தராய் ஸ்தோத்ரம்செய்து, அபராதக்ஷாபணம் செய்துகொள்ளு கிறார். அதில் மேலெழுதிய ச்லோகத்தால், எத்தனையேனும் உத் க்ருஷ்ட ஜ்ஞாநவான்களாலும் வேதங்களாலும் கண்டறிய முடி யாத நீர், உம்மைச்சரணமாக அடைந்தவர்களுக்கு ஸ்வாதீநமா கிறீர், என்கிறார்.

ஜ்ஞாநெ—கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்களாகிற ஜ்ஞாநத்தில். இவ்விடத்தில் 'கமணொ கமகாஸ்ய', 'கம்ணகம யஃ வஶ்ய', 'கம்ண ஹி ஸஂஸித்தாவி' 'நெவ கிஂசித் கம கரொதி, கமாவஶெஷெந ஜ்ஞாநா ஹ்யாஸவெவ கரொதி'—என்பது முதலான ப்ரமாணங்களால் கர்மயோகமும் ஆத்மஸ்வரூபா நுஸந்தான கர்ப்பமானதால் அதை யும் ஜ்ஞாநபதத்தாலே விவக்ஷிப்பது உசிதம். ஜ்ஞாநமென்று பக்தியோகத்தையும் ஆத்மாவலோகநத்தையும் சொன்னபோதி லும், ஆத்மாவலோகநத்தில் ஆசையில்லையாகில் அதற்குக்காரண மாகிய கர்மயோகத்தைச் செய்ய மாட்டார்க ளாகையால், கர்ம யோகத்தை விட்டார்களென்பது அர்த்த ஸித்த மாகவுமாம். அன் றிக்கே, 'ஜ்ஞாநெ ப்ரயாஸ ஜ⁻ஷவாஸ்' என்பதால் ஆத்மா வலோகநம், பக்தியோகம் இவைககளில் வருத்தத்தைத் தவிர்ந்து என்று அர்த்தமாவதால், அவைகளைச்செய்வதிலும் அவைகளுக்கு உபாயமான கர்மயோகத்தைச்செய்வதிலும் நேரிடக்கூடிய வருத் தத்தை விட்டு என்று சொல்வதாலும், கர்மயோகத்தையும் விட் டார்கள் என்று பொருளாயிற்று. இப்படிக் கர்மயோக ஜ்ஞான யோக பக்தியோகங்கள் மூன்றையும் ஸங்க்ரஹிக்க வேணுமென் கிற எண்ணத்தினாலேயே, மூலத்தில் 'ஜ்ஞாந' என்று ப்ரயோகிச் காமல் 'ஜ்ஞாநெ' என்று பொதுவாய் ப்ரயோகித்தது.

‘உத்வாஸ்ய’ — அதிகமாக நீக்கி, இங்கு ‘வாஸ்ய’ என்றாலே போதுமாயிருக்க ‘உத்’ என்று சேர்த்தெடுத்தது, அஶக்யமானவற்றில் ஆரம்பமும் செய்யாதே விலக்கி என்று பொருள் பட. அன்றிக்கே, அவைகள் அப்பொழுது அஶக்யங்களானாலும், அவைகளை ஶக்யமாக்க அநுகுணமான ஶக்தியைத்தான் ஸம்பாதிக்க முயலாதே விட்டுவிட்டு, என்றும் பொருள் ஆகிறது, அவைகளில் ஶக்தி யுண்டானாலும், அதை வேண்டாது, ‘சரணநெறி வேறோர் கூட்டு வேண்டில் அயனத்திரம் போல் வெள்கி நிற்கும்’ என்கிறபடி ப்ரபத்திக்கு அவைகளின் ஸாஹாய்யம் தேவையில்லை யென்பதை அறிந்து, என்றும் அர்த்தமாம். இதனால் ஆகிஞ்சந்யமென்கிற அதிகாரமும் கார்ப்பண்யம் என்கிற அங்கமும் சொல்லப்பட்டது. ‘[illegible] ॥’’ என்று சொல்லப்பட்ட ‘[illegible]’ ச்லோகத்தின் ‘பரித்யஜ்ய’ என்னும் பதத்தின் அர்த்தங்களெல்லாம் இங்கு அநுஸந்தேயங்கள்.

இந்தப்பதங்களை உக்திநிஷ்டன் பக்கலில் அந்வயிக்கும்போது, அங்காங்கிகளுடைய உபயோகங்கள், நிபந்தனங்கள், கரண மந்த்ரத்தில் அவைகள் ப்ரதிபாதிக்கப்படுகிற ப்ரகாரங்கள், இவைகளை விசதமாகத்தெரிந்து கொள்வதிலுண்டாகும் வருத்தத்தை விட்டு, என்றாகவுமாம். ‘ஆநுகூல்யஸங்கல்பாத்யங்கங்களில் வைசத்யமில்லாதார் அவனை ஒழியப்போக்கற்றுநிற்கிற அதிகாரமும், அபேக்ஷித்தால் ரக்ஷிப்பாரென்கிற விச்வாஸமு முடையவராய்க்கொண்டு’ என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அனுக்ரஹித்திருக்கிறார். இதை ஆசார்யநிஷ்டன் பக்கலில் யோஜிக்கும்போது, சரணாகதியின் ஸ்வரூப ஸ்வபாவங்களை உள்ளபடியே அறிந்து கொள்வதில் ச்ரமத்தை முற்றிலும் தாங்கள் நீக்கிவிட்டு, என்று பொருளாகும்.



[illegible] — ப்ரபந்நர்களாகவே யிருந்துகொண்டு. இங்கு ‘[illegible]’ காரத்தினால், கேவல சோம்பேறிகளைப்போல் ஆயாஸத்துக்குப் பயந்துமாத்ரம் இவர்கள் கர்மாதியோகங்களை விட்டவர்களில்லை. தான்கோலினகாலத்தில் பலந்தர ஶக்தமாய், ஸுகரமாய் உள்ள ஒரு உபாயத்தை அவலம்பித்தே அவைகளை விட்டார்க ளென்றதாயிற்று.

[illegible] ॥

([illegible] ॥)

என்று அச்யுதஶதகத்தில் அருளிச்செய்திருக்கிறபடி. இவர்கள் விளம்பாஸஹர்களாய் ப்ரபந்நர்களானவர்கள். ‘[illegible]’ என்னும் பதம் ஶரணாகதியைச்சொல்லும் என்பது ‘[illegible]’ இத்யாதி வசநங்களாலே ஸித்தம். இதை ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் பரக்கக்கண்டு கொள்வது. அன்றிக்கே ‘[illegible]’ என்று அந்வயித்துக் கொள்ளவுமாம். அப்போது, ‘[illegible]’ என்கிறபடியே மனோவாக்காயங்களாகிற த்ரிகரணங்களாலும் பூர்ணமான ஶரணாகதியைச் செய்தவர்களாய், என்கிறபடி.

ஸ்தானே ஸ்திதா:— ‘[illegible]’ என்றும் ‘[illegible]’

வஹா ஸூ ரமெஸ ॥ என்றும் 'யத்கிஂஹி ஊவி கூவஹாணொ விஷ்ணொ ராயதநெ வஸெஸ' என்றும் சொல்லுகிறபடியே பகவத்கைங்கர்யாதிகளுக்கும் பாகவத ஸஹவாஸத்துக்கும் ஆசார்ய பக்திக்கும் தகுந்ததாய், நித்ய நைமித்திகங்களுக்கும் உபரோதமில்லாத இடங்களில் வஸிப்பவர்களாய். அன்றிக்கே, 'ஸூாநெஷூ தாஃ—'ஶ்ராவயெ வுதஂரொ வணஹாநு கூக்ஷா ஷ்ராஹ்மணஃ ஶூதஃ' இத்யாதிகளிற் சொன்ன தந்தம் வர்ணாச்ரமங்களுக்குத் தகுந்த இடங்களி லிருந்துகொண்டு. ஸூாநெஷூதாஃ—தாம் நிற்க வேண்டிய நிலைகளிலிருந்து, அதாவது, தந்தம் ஸ்வரூபோபாய புருஷார்த்த நிஷ்டைகளுக்கு நிற்கவேண்டிய நிலைகளிலிருந்துகொண்டு, என்றாகவுமாம். அன்றிக்கே, 'ஸூாநெஷூதா ஸூஜொநஷஃ' என்று அந்வயித்து, ஶரணாகதி பண்ணுகிறவன் நிற்க வேண்டிய நிலையில் நின்று கொண்டவர்களாய், அதாவது 'வாவஃ வஶஂ ஷ்ராயஹயிதா ஷ்ரவெஜ ஷ்யஶஂஶ்ரியஂ' என்கிறபடியே முதலில் புருஷகார ஸமாஶ்ரயணம் பண்ணி, அதனால் 'கூஷதெ' என்கிற திருமுகப்பாசுரம் பெற்று, அதனால் கழிக்கப்பட்ட உபாயவிரோதிபாபங்களை யுடையவராய், என்றாகவுமாம். ஸூாநெஷூதாஃ - பகவான் ரக்ஷிக்கைக்கு வேண்டிய நிலையில் நின்றவர்களாய், அதாவது, மற்ற அங்கங்கள் அந்தந்த இடத்தில்சொல்லப்பட்டபடியால், பரிசேஷித்திருக்கிற, 'நீர் என்னை ரட்சித்தருளவேண்டும்' என்கிற ப்ரார்த்தனையைச்செய்து கொண்டென்றாகவுமாம். இத்தால் 'மொவ்த்ரு கூவஶண' மென்னும் அங்கமும் சொல்லப்பட்டதாயிற்று. உக்தி நிஷ்டையில் சொல்லும்போது, பகவான் சமீபத்தில் நின்றுகொண்டு, என்றாகவுமாம். ஆசார்யநிஷ்டனைச் சொல்லும்போது, ஆத்மீயகோடியில் சேர்க்கும்படியான 'வகுஃ ஷெஷ்யூஸயாஶிஷ்யஃ ஐதெவ வநிவெஊயெஸ' என்று சொல்லப்பட்ட ஆசார்யாபிமாநமாகிற நிலையில் நின்றுகொண்டவர்களாய், என்றாகவுமாம்.



ஸநூவஶிதாஂ— [illegible] ல் சொல்லப்பட்ட. ஶ்ரூதிமதாஂ — வேதங்க [illegible] ஹவதீய வாத்தஂ—உம்முடைய ஆஜ்ஞாநுஜ்ஞை [illegible] யஜீவணி — எவர்கள் உபஜீவிக்கிறார்களோ. இத்தால் கூநகூஞு ஸஂகஷுமும் ஷ்ராதிகஞு வர்ஜநமும் சொல்லிற்றாயிற்று. 'ஶ்ரூதிமதாஂ—தங்கள் காதையடைந்த, 'ஹவதீயவாத்தஂ—உம்முடைய திவ்யசரித்ரத்தை. தநவாஊநொஷிஃ — கரணத்ரயத்தாலும். யெஜீவணி — எவர்கள் உபஜீவிக்கிறார்களோ, தரித்தெழுதி வாசித்துக் கேட்டும், 'வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது', 'சீர்கலந்த சொல்நினைந்து போக்காரேல், சூழ்வினையினாழ்துயரை என்னினைந்து போக்குவரிப்போது' என்று சொல்லுகிறபடியே, தங்கள் காலக்ஷேபத்துக்கு உடலாக எவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்களோ, என்றாகவுமாம். 'ஹவதீய' - திருமாலாலருளப்பெற்ற ஶடகோபன் 'மயர்வறமதிநலமருளினன்' என்கிறபடி உம்முடைய க்ருபைக்கு விஷயீபூதர்களான நம்மாழ்வார்முதலிய பூர்வாசார்யர்களுடைய, 'வாதாஂ' அருளிச் செயல்களான ஸ்ரீ பாஷ்ய திவ்யப்ரபந்தாதிகளையும், ஆசார்யகளால் உபதேசிக்கப்பட்ட மந்த்ரங்களையும், அவர்களால் நியமிக்கப்பட்ட கைங்கர்யங்களையும், என்னவுமாம். இத்தால் ஸ்ரீ பாஷ்யக்காரர் அந்திமதசையில் அருளிச்செய்த ஐந்துவித கைங்கர்யங்களும் ஸங்க்ரஹிக்கப்பட்டன.

அன்றிக்கே, 'ஹவதீயவாதஂ' உம்முடைய வார்த்தையாகிய 'ஸக்ருதெவ ஷ்ரவநாய' 'ஸவயஶஹாநு வஶிதஜ', 'ஶாஶவஃ', 'கூஹஂ ஸூாஶி ஶூக்ஷஂ' இத்யாதிகளை, 'யெ ஜீவணி' எவர்கள் தங்களுக்குத் தாரகமாக வைத்துக்கொண்டிருக்கிறார்களோ, என்றாகவுமாம். இத்தால், 'வெஜொத்ஂஸ விஹாஶ ஸாஶயி ஊயா மஂமெஹந விஸ்ஂஹிதஃ' என்றும்,

ஸரணா மதத்
ஜணவாவ வி ஜ . . . ரக்ஷஸி ஓ० ।
ஹொஜ வ ஸாகர வொம..
ஸாகர வ ஜிநஜி தாரிஸ० த ஹ வகண० ॥
(ஶரணாமத ஜதி ஜநித
ஜநவாதெ஽வி யத்யுவ்யத ந ரக்ஷஸி ஓா० ।
ஹவெக வஶ ஸாமர வொஷ:
ஸாமர வ ஜிநெ தாஜ்ரஶ० தவ வவந० ॥ )

என்றும், 'பன்றியாம் தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனர், பேசியிருப் பனவைகள் பேர்க்கவும் போாவே' என்றும், 'தம்மை யுகப்பாரைத் தாமுகப்பர் என்னுஞ்சொல், தம் மிடையே பொய்யானுற் சாதிப்பா ராரினியே' என்றும் சொல்லுகிற படியே அந்தந்த அவதார வார்த்தைகளில் விஸ்வாஸம் சொல்லப்பட்டபடியால், 'மஹாவிஸ்வாஸம்' என்னும் அங்கமும் இங்கு சொல்லப்பட்டது.

இதை உக்திநிஷ்டன் பக்கலில் யோஜிக்கும்போது, 'ஸவதீயவாதாம்' 'ஶரண்யனறிய பூர்ணப்ரபத்தி கர்ப்பமான ஆசார்யோ பதிஷ்டமான வாக்யத்தால்' என்றருளிச் செய்தபடியே, உம்முடைய க்ருபைக்கு பாத்ரர்களான ஆசார்யர்களா லுபதேசிக்கப்பட்ட வாக்யத்தையே, 'யெஜீவந்தி' - எவர்கள் தங்களுக்குத் தஞ்சமாகக் கொள்கிறர்களோ, என்றர்த்தமாகும். ஆசார்யநிஷ்டன் திறத்தில் யோஜிக்கும்போது,

ணிஷிதொஜிக கமஂரம
ணிவ ணெஹி த ஓஜி ணாஹ காரண்வஹிம் ।
தெ த ஹ உம்ண விவ
ஹரிகம் ணகவவு ஹரவ கவாண ஹர ॥



(நிக்ஷிபொ஽ஸி வாமதி:
நிவெணெ ஸ்வயி நாய காரணிமெக: ।
தாம் ஸவ ஜ்ரஷா விரயாஞ
ஹரதம் நதவஸத்ர ஹரஸாதஹரம் ॥ )

என்கிறபடியே ஆசார்யன் 'ஓா० ஓீய० வநிவிஶ०' என்று உம்மிடத்தில் விண்ணப்பம் செய்தவார்த்தையையே தங்களுக்கு உத்தாரகமென்று எவர்கள் நினைத்திருக்கிறர்களோ, என்று அர்த்தமாகும். தெ: - அவர்களால். வ்யாயஶொZஜித - எவ்வளவு ஜ்ஞாநஶக்தி பலங்கள் நிறைந்தவர்களாலும் 'பிறர்களுக்கரிய வித்தகன்' என்கிறபடியே ஜயிக்கமுடியாத நீர், 'ஜிதொZவ்ஸி - ஜயிக்கப்பட்டவராகவு மாகிறீர். அவர்கள் கார்யங்களுக்குப் பலங்களைத் தருகையன்றிக்கே, அவர்களால் ஜயிக்கப்பட்டவருமாகிறீர். அன்றியும், 'ஜவி' என்பது அநுக்த ஸமுச்சயமாய், 'ஹகீ்ரதா ஜநாதநம:,' 'ஜஊஷ ஓநிஶா உடுடுஶ கிமகரள ஸஓவஷிதள' என்கிறபடியே, விலைக்கு வாங்கப்பட்டவரு மாகிறீர்' தாஸனுகவு மாகவுமாகிறீர், என்று சேர்த்த தாகவுமாம். அன்றியும் 'ஜவி' என்பது விரோதத்தைக் காட்டுகிறதாய், ஒருவராலும் ஜயிக்கப்படாதவராக இருந்தும் அவர்களால் ஜயிக்கப்பட்டவராகிறீர் என்றுகவுமாம்.

இப்படி ஜயிக்கப்பட்டது பரமபதத்திலேயோ? அல்ல, 'திரொகாம் - உம்முடன் எதிரப்பு கோர்த்து 'கும்ெ' என்னும்போது, 'கஹஂெ' என்று திமிரப்பண்ணும் இருள்தருமா ஞாலத்திலேயே.

ஆக வித்தால் 'தஸ்வ வஶீகரண० தகூரணா மதிரெவ' என்று சொல்லப்பட்ட ஶரணுகதியின் ப்ரபாவமும் பகவானுடைய ஸௌலப்யாதிஶயமும் சொல்லப்பட்டது.

சே. நரஸிம்ஹமாசாரியர்.

ஸ்ரீ:.

## ஸ்ரீராமாயணத்தில் சில விசேஷார்த்தங்கள்.

## III.

# ஸீதாப்பிராட்டி வைபவம்.

(தொடர்ச்சி.)

ஸீதாப்பிராட்டி பெருமாள் பிரிவை ஸஹியாமல் ப்ரேமத்தில் படும் சில அவஸ்தைகளை ஶ்லோகங்களைக்கொண்டு விவரித்து இந்த வைபவத்தை இந்த ஸஞ்சிகையில் முடிக்கிறோம்.

ஸீதாப்பிராட்டி ராமனைவிட்டுப் பிரிவால் ஆற்றாமையடைந்து அதனால் தன்ஜீவனைவிட்டுவிடப் பலவிதமாய் யத்நித்து அதை அயுக்தமென்று தானே நினைத்துச் சோகித்தாள்.

விஷஸ்ய தாதா ந ஹி மேஸ்தி கஶ்சித் விஷஸ்ய வா ஶஸ்த்ரஸ்ய தாம் ।
ந ஶக்யம் யத்பரித்யக்தும் ஆத்மச்ச்ஹந்தேந ஜீவிதம் ॥

என்பதினாலே தன்னுயிரைத் தானேமாய்ப்பது கூடாது என்று அறிந்த விவள் தற்கொலைவரையில் யத்நித்தது விரஹாவேகத்தால் உண்டான மதிமயக்கத்தின் கார்யம். பகவானைச் சரணமாக வடைந்தவன் தன் நினைவுடனிருந்தால் தன் ரக்ஷணத்திலும் தன் துக்க நிவ்ருத்தியிலும் ஸ்வதந்த்ரப் ப்ரவ்ருத்தி யில்லாமலிருப்பது ஸ்வரூபஜ்ஞானத்துக்கு அநுகுணம். விரஹமும் பக்தி என்கிற ப்ரேமமும் தலைமண்டையிட்டால் ஞானங்கலங்கி செய்யக்கூடாத செய்கையும் செய்யும்படிவரும். அப்படி பகவத்ப்ராவண்யத்தால்வரும் ஸ்வாதந்த்ரியம்போன்ற ப்ரவ்ருத்திகள் பாதகமல்லனவென்று ஆசார்யகள் நிர்வஹித்திருக்கிறார்கள். ‘ தத்தஸ்ய



ஸத்ருஶம்ஹவேத்’ ‘ ராமன் ராவணனை ஜயித்துத்தன்னை யழைக்க வேண்டுமே யல்லது, தானுப் அவரை யடைவதில் ஒரு ப்ரவ்ருத்தியும் செய்வதில்லை’ என்று இவளை சொல்லுகிறாள். இதுஞான நிலையிலிருப்பு; தான் செய்யும் கிஞ்சித்காரத்தை உபாயமென்று ப்ரமிப்பது மனம் கலங்கினதிலே. மேலும் பகவானாலேயே தனக்குப்பேறு என்றிருக்கும் ப்ரபந்நனும் மோக்ஷாநுபவத்துக்கு ஸத்ருஶமான கைங்கர்ய வ்ருத்தியை இங்குபெற்றபின், பக்தி யோக நிஷ்டனுக்கு ஏற்படும் பரமபக்தி, பரஞ்ஞானம், பரமபக்தி என்னும் நிலைகளை இவனும் பெறுகிறான். ப்ரபன்னனுடைய பக்தி பர்வாக்கள் இவனுக்கு கைங்கர்யத்தில் அந்வயித்து தேகத்தைத் தரிக்கும்வழியாக ஆகி, ருசிகரமாய் ஆகின்றன. அவை விதியால் வந்த உபாயாநுஷ்டாநத்தில் சேர்ந்தவைகளல்ல. இப்படியே பகவானிடத்தில் ப்ரேமாதிஶயத்தால் ஆற்றாமை கரைபுரண்டுவரும் அவஸ்தைகளும் ஸ்வநிஷ்டைக்கு ஹாநியை உண்டுபண்ணாது.

யா நஶக்யா புரா த்ரஷ்டும் பூதைராகாஶகைரபி ।
தாமத்ய ஸீதாம் பஶ்யந்தி ராஜமார்கதா ஜநா: ॥

ராஜஸ்த்ரீகள் அந்தப்புரத்தைவிட்டு வெளியில்வருகிறதில்லையென்கிற கட்டையும் தவிர்த்து ராஜமார்க்கத்தில் பெருமாளுடன்கூடக் காட்டுக்குப்புறப்பட்டாள். ‘ யஸ்யா ஸஹ ஸஸ்மேதா நிரயோ யஸ்யா விநா’ என்றும் ‘ விஷ்ட்வ மேத்ய வாஸ்யாத் ஆவிஶம் அஷிதாம் வஶம்’ என்றும் சொன்ன உறுதியினாலே, எல்லாரும் பார்க்கும்படி ராஜவீதியில் புறப்பட்டதும் ப்ரேமத்தின் கார்யந்தான்.

‘ ஊஹந்தீவ நிஶ்வாஸை: வ்ருக்ஷாந் பல்லவதாரிண: ॥ ’

பிரிவில் ஆற்றாமையால் தன் ஶ்வாஸத்தின் உஷ்ணம் வ்ருக்ஷங்களின் துளிர்களைச் சுடும்படியாயிற்று.

‘ உபவாஸ க்ருஶாம் தீநாம் நிஶ்வஸந்தீம் புந: புந: ॥ ’

ஆகாரமில்லாமல் இளைத்துத் தத்தளித்துப் பேராற்றாமையால் இடைவிடாமல் பெருமூச்செறிந்தாள்.

இந்த வாக்யங்களும்,

'ததஸ்ய ஸீதாம் உத்வேகாதுராம் நாவம் ஸந்நாமிவார்ணவே'
என்று தொடங்கி.

'வேஷ்டமாநாம் ததாவிஷ்டாம் பந்நகேந்த்ரவதூமிவ'
என்றும்,

'ப்ருத்வீமிவ வித்ரஸ்தாம் ஹதஶூராம் சமூமிவ' என்றும்,

'நிஷ்ப்ரபாம் ஸமாக்ராந்தாம் கஜராஜவதூமிவ'
என்றும், இன்னும் பலவிதமாயும் சொல்லப்பட்டிருக்கும் அவஸ்தைகளும் ப்ரேமத்தின் தலையெடுப்பைக் காட்டுகின்றன.

ஸா ஜீவிதம் க்ஷிப்ரமஹம் த்யஜேயம் விஷேண ஶஸ்த்ரேண ஶிதேந வாऽபி । விஷஸ்ய தாதா ந ஹி மேऽஸ்தி கஶ்சித் ஶஸ்த்ரஸ்ய வா வேஶ்மநி ராக்ஷஸஸ்ய ॥

'ஹா ராம ஸத்யவ்ரத தீர்கபாஹோ' என்றும், இன்னும் வேறுவாக்யங்களாலும் பெருமாளுடைய குணங்களை அனுஸந்தானம் செய்து அதனால் ஆற்றாமை அதிகரிக்கத் தற்கொலைபுரிய யத்தனித்தாள்.

விஷஸ்ய தாதா - இவ்வளவு நல்லஸுகத்தை எனக்குக்கொடுக்கும் உதாரர் இந்த ஊரிலுண்டோ? ஶஸ்த்ரஸ்ய வா - விஷம்போல் தாமதிக்காமல் உடனே முடிக்கும் கத்தியைத்தான் தருவாருண்டோ? வேஶ்மநி ராக்ஷஸஸ்ய - பிரித்து வைத்து உயிர்க்கொலையாக நலிக்கிற ராவணன் ஊரிலே கொலைக்கு ஸாதனங்களும் கிடைப்பது அரிதா? என்கிறாள். பரதந்த்ரனை ப்ரபந்நனுக்கு நினைத்தபோது முடியப்போமோ? 'மாயும் வகையறியேன், வல்வினையேன் பெண்பிறந்தேன்' என்றார் ஆழ்வாரும்.

'ஶரைஶ்ச து:க்ஷீதம் கிஞ்சித் ஶக்தோ ஹ்யஸி ந ஸம்ஶய:' விரோதிவர்க்கத்தைக் கிழங்கெடுத்து என்னை ரக்ஷிக்கைக்கு ஈடான



ஶக்தியையுடைய ஸ்ரீராமன், இதற்கு முன்பெல்லாம் எதிரிகள் மண்ணுண்ணும்படி சரந் தொடுத்தவர், நான் பெரியவருத்தத்திலிருக்கும்போது கடாக்ஷியாதிருப்பது என்? இதற்குக்காரணம் அவரிடத்திலாவது என்னிடத்திலாவது இருக்கவேண்டும். ஆனால் அவர்பேரில் சொல்லக்கூடியது ஒன்றையும் நானறியவில்லை. ஆகவே என்பேரில்தான் குற்றமிருக்க வேண்டும். அதுவும் என்பழைமையான பாபமாயிருக்கவேணும். ஆனால் 'கீத்ருஶம் து மயா பாபம் புரா ஜந்மாந்தரே க்ருதம் । யேநேதம் ப்ராப்யதே து:கம் மயா கோரம் ஸுதாருணம் ॥' 'நான் இந்த துக்கத்தை இப்போது அனுபவிக்க, முன் எந்த ஜன்மத்தில் என்ன பாபம் செய்தேன்' என்று கலங்குகிறாள்.

க்யாத: ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞஶ்ச ஸாநுக்ரோஶஶ்ச ராகவ: । ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோஶ: ஶங்கே மத்பாக்யஸங்க்ஷயாத் ॥

ப்ராஜ்ஞ: - தம்மால் அபிமாநம்பெற இருப்பார் அறிவின் குறைவால் இழக்கவேண்டாதபடி தம்மளவையும் அவர்கள் அளவையும் அறிகைக்கீடான அறிவுடையார். க்ருதஜ்ஞஶ்ச - கிட்டுமவன் அவர் பக்கல் வைமுக்யம் பண்ணுவதைத் தவிர்ந்து, அவன் ஓரடி வருகின்ற எல்லையையும் அறிபவர். அதாவது, அவன்செய்த கிஞ்சித்தையும் மேருவாக எண்ணுகிறவர். ஸாநுக்ரோஶஶ்ச - அறிவுகொண்டு கார்யங்கொள்ளவும் அறியாதிருக்குமவர்களுக்கு அவர்கள் வராததை அநுஸந்தித்து, 'ஐயோ' என்று இரங்குமவராயிருப்பார். ராகவ: - பிறந்தகுடியோ பெருமைப்பட்டது. ஸத்வ்ருத்த: - பிறருடைய ஆநந்தமும் நன்மையுமே ப்ரயோஜநமாயிருப்பவர். க்யாத: - ஶத்ருகோஷ்டியிலும் பிரஸித்தர். 'நிரநுக்ரோஶஶ்ஶங்கே' - இக்குணங்களையுடைய பெருமாள் இத்தன்மையில் எனக்கு முகங்காட்டாமையாலே, இக்குணங்களொன்று

மில்லாத நிர்க்குணரென்றே சங்கியா நிற்கிறேன். 'ஹா ராமஸ்ய ஸம்க்ஷயாத்' இது என் பாக்ய ஹாநியால், என்று தன்னை வெறுத்துக்கொள்ளுகிறாள்.

'ஸம்ஶ்ரவே மதுரம் வாக்யம் வைதேஹ்யா வ்யாஜஹார ஹ' என்கிறபடி, ஸீதைக்கு விஸ்வாஸமுண்டாகும்படி ஹநுமார் தசரதருடைய ப்ரபாவத்தையும், ராமனுடைய வ்ருத்தாந்தங்களையும், தான் ஸீதையைத்தேடி வந்திருப்பதையும் சொல்லிநிற்க, 'ராமகீர்த்தநஹர்ஷிதா', ராமன் பெயரைக்கேட்டமாத்ரத்தில் விஸ்வாஸம் பிறந்து, தன்கதையைச் சொல்லி, தன் அவஸ்தையையும்; "ஊர்த்வம் த்வாப்யாம் து மாஸாப்யாம் ததஸ்த்யக்ஷ்யாமி ஜீவிதம்" என்று ஸீதை குறிப்பிட்டாள். பிறகு அங்குநின்ற வாநரம் காமரூபியான ராவணன்தானோ என்று சங்கித்து, 'ஸ்வம் ஸைவ ஹி ராவண:' என்று சொல்லிப்பின்பு, வஞ்சகனான ராவணனும் ராமன் குணங்களைச்சொல்ல ஸஹியான் என்று மனதில் வைத்துக்கொண்டு, 'நமோஸ்து ராமஸ்ய ஸதய ப்ரியஸ்ய இதி வாநர' என்று கட்டளையிட்டு, பின்னும் கலங்கித்தான் காணும் வாநரம் ஸ்வப்நமோ என்று எண்ணி, அதையும் தானே மறுத்துச்சொல்லுகிறாள்.

கிந்நு ஸ்யாச்சித்தமோஹோ஽யம் பவேத்வாதகதிஸ்த்வியம்।
உந்மாதஜோ விகாரோ வா ஸ்யாதியம் ம்ருகத்ருஷ்ணிகா ॥

ராமகுணங்களைப்பரிந்து பேசுமிவன் ராவணனல்ல. ஸமுத்ரத்தைத் தாண்டி ராமதூதனும் வாநரம்வர ப்ரஸக்தியும் இல்லை. இது ஸ்வப்நமோ என்றால், குரங்கை ஸ்வப்நத்தில் கண்டால் கேடு வரும்; ராம குண ச்ரவணமாகிய பேராநந்தத்தை நான் அடைந்திருப்பதும் அதற்கு ஏற்காது. ஆகவே இது என் மனத்தின் ஓர் மயக்கமாகும், என்கிறாள். பின்னும், மயக்கத்துக்கு உறுப்பான



அறிவின்மை இல்லையாதலால் இதுமயக்கமில்லை யென்று தானே தெளிந்து, சரீர தாதுக்களில் ஒன்றாகிய வாதத்தின் செயலோ என்கிறாள். 'வாதகதிஸ்த்வியம்'. தேகத்தில் உள்ளூற உண்டாகும் வாத விகாரம் மற்றும் வெளிப்படையான கார்யங்களைச்செய்யு மாகையால், அவைகளில்லாமை பற்றி, இது வாதத்தின் செயலுமல்லவென்று துணிகிறாள். தன்னை யறியாமல் பித்தத்தின் ஆதிக்யம் ஏற்பட்டால், அதன் செயலும் விசித்ரமாயிருக்கு மாகையால், தனக்குப் பயித்தியம்பிடித்ததோ என்று சங்கிக்கிறாள். பிறகு, நான் என்னையுமறிகிறேன், குரங்கையும் காண்கிறேன்; இதரவஸ்துக்களையும் ப்ரமமில்லாமல் பார்க்கிறேன். தன்நினைவு அடிக்கடி மாறுதல் பயித்யத்தின் ஸ்வபாவம்; அதில்லாமல் இருப்பதால் இது உன்மாதமுமல்ல, என்கிறாள். பார்ப்பவன் கண்ணுக்கு ஒருதோஷமுமில்லாமலிருக்க, கானலில் வஸ்துக்களின் பிரதிபிம்பம் தெரிவதைக்கொண்டு நிலத்தை நீரென்று ஸ்வஸ்தேந்த்ரியர்களையும் ப்ரமிக்கப்பண்ணும் ஓர் விசித்ரமான 'ம்ருகத்ருஷ்ணிகை' இது. அதின்செயல் என்னை ஒன்றுமில்லா வனத்தில் குரங்கைப்பார்க்கும் படிக்கும் அது பேசுவதைக் கேட்கும்படிக்கும் செய்கிறது, என்று தர்க்கித்து, வெயிலில்லா வசோக வநிகையில் அதற்கும் ஸம்பவம் இல்லையென்று எண்ணி, இவன் ராவணனாகவே யாகும் என்று வெறுப்புற்று மௌநமாகிறாள்.

ஜீவந்தீம் மாம் யதா ராம: ஸம்பாவயதி கீர்த்திமாந்।
தத்த்வயா ஹநுமந் வாச்யம் வாசா தர்மமவாப்நுஹி ॥

ஸத்தையோடு கிடக்கிற வென்னை ஸத்தைபோவதற்கு முன்னே பெருமாள்வந்து நோக்கும்படி அவருக்கு விண்ணப்பம் செய்யவேணும், என்கிறாள், திருவடியைப்பார்த்து. 'உமக்கு ஒரு வார்த்தை; எனக்கு அது ஜீவதாரகம்'. இப்படித்தன் ஆற்றாமையின் அதிசயத்தை தூதன்வழியாய்த் தெரிவிக்கிறாள்.

'அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா ।

ஆதித்யனோடு ப்ரபைபோல் நான் பெருமாளோடு அநந்யை யாய் எப்போது இருப்பேன் என்று துடிக்கிறாள்.

ப்ரணயாச்சாபிமாநாச்ச பரிசிக்ஷேப ராகவம் ।
கிம் த்வா(அ)மந்யத வைதேஹ: பிதா மே மிதிலாதிப: ।
ராம ஜாமாதரம் ப்ராப்ய ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம் ॥

பெருமாள் காட்டுக்கு எழுந்தருளும்போது ஸீதாப்பிராட்டியை அயோத்தியிலிருக்கச்சொல்ல, என்னை ஒருத்தியைக் காப்பாற்ற மாட்டாமையுண்டோ? இதை என் பிதா கேட்டால் என்ன நினைப்பார்? ஒருஸ்த்ரீ ஆணுடையுடுத்துத் தன் பெண்ணை விவாஹம் செய்துபோனாள் என்று நினைக்கமாட்டாரோ? என்னை அழைத்தே போகவேணும், என்கிறாள்.

அக்ரதஸ்தே கமிஷ்யாமி ம்ருத்நந்தீ குசகண்டகாந் ।
ஈர்ஷ்யாரோஷௌ பஹிஷ்க்ருத்ய புக்தசேஷமிவோதகம் ।
நய மாம் வீர விஸ்ரப்த: பாபம் மயி ந வித்யதே ॥

நானும் உமக்கு மார்க்கத்தில் ஸஹாயம் செய்யவல்லவள். உமது திருவடிகளை உறுத்தும் குசங்களின் முள்ளுகளை முந்துற நடந்து ம்ருதுவாய்ச்செய்வேன். பிறருடைய மேன்மை கண்டால் பொறுக்கவேண்டாமோ? நான் தம்மோடு கூடவந்தால் அதனால் எனக்குவரும் ஏற்றத்தைக்கண்டு தாம் பொறாமைப்படலாமோ? என்று பெருமாளிடம் உண்டான தன் ஸ்நேஹத்தாலும் விஸ்வாஸத்தாலும், தன்னை விட்டுப்போவார் என்கிற பயத்தாலும் கோபமாய் வார்த்தைசொல்லுகிறாள். நயமாம்வீர - நான் பிரிவைச் சஹிக்காதவள் என்று தெரிந்துகொள்ளும். உம்மை நீர் அறியவில்லை. நீர் வீரர். உமக்கு ஒருகுறையுமில்லை. என்னை அழைத்துக்கொண்டுபோம்.



பாபம்மயி நவித்யதே-நீர் என்னைவிட்டுப்போனால் நீர்போய்த்திரும்பி வருமளவும் நான் தரித்திருக்கமுடியாது. அப்படித்தரித்திருப்பேனானால் அது என் பாபமே. நீர் என்னை விட்டுப்போனால் எனக்கு மரணமே நிச்சயம், என்கிறாள்.

யேநாஸௌ த்யஜதா ராஜ்யம் மாம் சாப்யரண்யம் நயத: பதாதிநா । நாஸீத்வ்யதா யஸ்ய ந பீர் ந ஶோக: கச்சித் ஸ தைர்யம் ஹ்ருதயே கரோதி ॥

ராமலக்ஷ்மணர்கள் உயிருடன் இருக்கிறார்களென்று ஹநுமாரிடம் கேட்டு, அப்படியிருக்க ஏன் என்னை விடுவிக்கவில்லை? முன் நான் கூடவர யத்தனித்தபோது தைர்யத்தைக் கைவிட்டவராய் என்னை வேண்டாமென்றதுபோல, என்பிரிவால் மறுபடி ஒருகால் ஸத்வமிழந்து தீனரானாரோ? 'கச்சித்ராமோ ந ஸீததி' அவர் வ்யஸநத்தில் மூழ்கி விட்டாரோ? தர்மத்தைப் பெரிதாய் நினைத்து ராஜ்யத்தை திக்கரித்து, அபலையான என்னையும் பயமில்லாமலும் சிரித்தமுகத்துடனும் உத்ஸாஹத்துடனும் காட்டுக்கு நடத்தி அழைத்துக்கொண்டுவந்த ராமன் இப்பொழுது ராக்ஷஸனுக்குப்பயந்து தைர்யத்தைக் கைவிட்டாரோ? பெருமாள் பித்ருவசன பரிபாலநம்பண்ணக் காட்டுக்கு வந்தவர் அல்ல; என்னை நலியச்செய்யவே வந்தார், என்று சீற்றத்துடன் அருளிச்செய்கிறாள். பிறருக்கு வந்த கேடைப்பரிஹரிக்கும் குடியில் பிறந்தவர், தனக்குவந்த வவமாநத்தைப் பரிஹரிக்க முயலாரோ, என்று தபிக்கிறாள்.

'பஶ்ய தேவ்யங்குலீயகம்' 'க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா பர்த்து: கரவிபூஷணம் । பர்த்தாரமிவ ஸம்ப்ராப்தா ஜாநகீ முதிதா(அ)பவத் ॥

பிராட்டி ஹநுமார் கொண்டுவந்த திருவாழி மோதிரத்தையும் ராவணன் மாயையோ என்று நினைத்துக் கல்வைக்காமலிருக்க,

இதைப்பார்க்க வேண்டுமென்று திருவடி க்ருஷி பண்ணவேண்டியதாயிற்று. பின்பு பெருமானுடையதென்று அறிந்தவள், 'வீக்ஷமாணா' அதைத்தவிர வேறொன்றிலும் நோக்கிலளாயானாள். 'ஹர்ஷ: ஸமவிஷ்ணம்' - 'ஜயமாஹ்ருத வைதேஹ்யம் கணஸ்ய ஸம்ப்ரதிகாமிவ ஸஹோத்தவ: ஸ்ம:' என்கிறபடி, விவாஹத்தில் தன்கையைப் பிடித்தபோது உறுத்தின மோதிரமன்றோ? 'ஹர்ஷாஸ்ரீவ ஸம்ஹ்ருஷ்டா' - இதைப்பார்த்ததும், பெருமானையும் அவர்தோளையும் நினைத்தாள். அப்போது அவர்கிட்ட இல்லை என்பதை மறந்தாள். 'ஜவ' என்று கவிசொல்வது தன் அபிஸந்தியாலே; பிராட்டி நினைவில் ராமன் கிட்டினதாகவே எண்ணம். க்ஷணம் தன்னைமறந்து 'வாமா ஸ்வஜநம் தஸ்யா:... ஸாஹ்ஸம்ஸர்த்த ஜவோபவாஸராத்' என்கிறபடி தான் விடுவிக்கப் பட்டவளாகவே கருதி மனம் மகிழ்ந்து முகமலர்ச்சி யடைந்தாள். பெருமானை நேரில் அடைந்தபோது அவர் கடுஞ்சொல்லைக் கேட்ட துக்கமும் இப்போது இல்லை யென்பது அர்த்தத்தின் ஸ்வாரஸ்யம்.

இப்படி லக்ஷ்மணன், பரதன், ஸீதாப்பிராட்டி இவர்கள் நிஷ்டைகளை விசதமாய் விவரித்தோம். இங்கு விவரித்ததில் ஏதாவது யோஜனாபேதம், தவறுதல்கள், முதலியன இருந்தால், அதை ஜ்ஞாதாக்கள் க்ஷமிக்கவேணும்.

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ:.

# ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயங்கள்.

(ஓர் யோஜனை.)

லோகஹித ப்ரவர்த்தர்களான மஹான்களால் ஏற்படும் ஸம்பிரதாயங்களுக்கு நாளடைவில் சிற்சில குறைவுகள் உண்டாகின்றன. இவைகள் அபிப்ராய பேதங்களடியாக ஜனித்துப் பின்பு பலவகையாய் வ்ருத்தியாகி ஸம்ப்ரதாய பேதங்களுக்கு ஹேதுவாகின்றன. இப்படிப் பின்ன ஸம்பிரதாயங்கள் ஜனித்த பிற்பாடு, இந்த வ்யத்தியாஸங்கள் புத்திவிஷயங்கள் என்று கொள்ளாமல், இவைகளை அனுஷ்டிக்கும் ஸம்பிரதாயிகளில் பெரும்பாலர் இந்த பேதங்கள் அடியாகக் கக்ஷிகளையும் வைஷம்யங்களையும் உண்டுபண்ணியும், வ்ருத்திசெய்தும் வருவதை நாம் பார்த்து வருகிறோம். இந்தக்கக்ஷிகளும் வைஷம்யங்களும் நிகமத்தில் ஸம்பிரதாயங்களாக ஆகிவிடுகின்றன. இப்படி மூல ஸம்ப்ரதாயங்களுக்குக் கிளைகள் கிளம்பி மஹான்கள் பஹுப்பிரயாஸை யெடுத்துக் க்ருஷி பண்ணினதெல்லாம் நிஷ்பலமாகி, லோகத்திற்கு ஹிதமல்லாதனவைகள் ஜனித்து நிற்கக்காண்கிறோம்.

கீழ்ச்சொன்ன ரீதியை நாத, யாமுந, யதிவரர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயமும் அடைந்திருக்கிறதென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். இது அத்யந்தம் சோகிக்கத்தகுந்த விஷயமாயிருந்தாலும், இவ்வுண்மையை யறிந்த ஆஸ்திகர்கள் இப்போதேற்பட்டிருக்கிற குறைகளை நிவர்த்தி செய்கிறதற்குத் தகுந்த முயற்சிகளைச் செய்யாமல் உதாஸீநராய் இருந்து வருகிறார்கள். இவ்வைஷம்யங்களை ஸாது என்று

இவர்கள் கிரஹித்திருக்கிறார்களென்று சொல்லவிடமில்லை. ஒருகால் இந்த வைஷம்யங்கள் ஸாம்யமாகும்படி நாம் எடுக்கும் பிரயத்தனங்கள் தலைக்கட்டாது என்று எண்ணியிருந்தாலும் இருக்கலாம். இந்த எண்ணத்துக்குக்காரணம் உத்ஸாஹக்குறைவும், எடுக்கும் முயற்சியில் பலதேசங்களிலிருக்கும் ஆஸ்திகர்கள் அன்வயிப்பார்களோ என்கிற நிச்சயக்குறைவு மென்றுமே சொல்லவேணும்.

நம்முடைய தேசத்தில் பஹுபேர்கள்கூடி ஸாதிக்கவேண்டிய அம்சங்களுக்கு ஸாதனங்கள் இன்னபடியென்று ஜனங்களுக்கு ப்ராயஶ: தெரியாது. ஸபைகள் என்றும் ஸமிதிகள் என்றும் பூர்வத்தில் ஏற்பட்டிருந்தாலும், காலதோஷத்தால் இவைகளின் ஸ்வரூபங்களும் உபயோகங்களும் மறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இதுவிஷயத்தில் ப்ரபலர்களான பாஶ்சாத்தியருடைய அநுபவத்தையும், அவர்களுடைய ஸங்கசக்தியையும் திருஷ்டாந்தமாகக்கொண்டு இத்தேசத்திலும் பஹுமுகமான பிரயத்னங்கள் நடந்துவருகின்றன. இப்படி யேற்பட்ட ஸபைகளில் நம்முடைய பொதுநன்மைக்காக ஏற்பட்ட “காங்கிரஸ்” என்று ப்ரஸித்தமான ஸபை இத்தேசத்தில் பிரபலமானது. இம்மாதிரியாகவே மதவிஷயங்களிலும் அநேக சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் சில, நம்முடைய ஆசாரங்களில் தோஷங்களிருக்கின்றன வென்றும் அவைகளை நிவ்ருத்திசெய்ய வேணுமென்றும், உத்யோகித்து வருகின்றன. இப்படி வைதிக மார்க்கஸ்தாபந விஷயத்தில் ப்ரபலமான ஸபைகள் இல்லாமையானது அநாதியான இந்த ஆஸ்திகதேசத்தவர்களுக்கு ஓர் பெரிய குறைவு.

வைதிக மார்க்கங்கள் தழைத்து வருவதற்காக ஆஸ்திகர்கள் ஸபைகூடிவருவது சிஷ்டாசாரமில்லை என்று சிலர் நினைத்தார்களாகில், ஸ்ரீ பாஷ்யக்காரர் நாளில் இப்படி ஸபைகள் ஏற்பட்டிருந்ததை இவர்களுக்கு ஸமாதானமாகச் சொல்லலாம். ஸ்ரீ பாஷ்யக்காரர் காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயம் எங்கும் பரவி, வெகுபேர்கள் அதில் அந்வயித்தார்கள். இந்தஸம்பிரதாயம் லோகத்தில் மறையாமலிருக்கும் பொருட்டும், ஜ்ஞாநாநுஷ்டாந பூர்த்தியில்லாதவர்களால் ஸம்ப்ரதாய ப்ரவசநம் நடவாமலிருக்கும் பொருட்டும், சிலரை ஆசார்ய புருஷர்களென்றும், மற்றவர்களை “சபையார்” என்றும் ஸ்ரீ பாஷ்யக்காரர் நியமித்தார் என்பது ப்ரஸித்தம். இதுதான் “சவையார்” என்று வழங்கி வருகிறது.



ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயாபிவ்ருத்திக்காக ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸபைகளை ஏற்பாடு செய்வது அத்யாவச்யகம் என்று சொல்வதற்கு ஒருவிரோதமும் இல்லை. இப்படி ஏற்படாவிட்டால் நம்முடைய வைஷம்யங்கள் ஶமநத்தை யடையாமலும் நம்முடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்க ளெல்லாம் நிஷ்பலங்களாயும், அந்ய ஸம்பிரதாயஸ்தர்கள் பரிஹஸிக்கும்படிக்கும் வரும் நிலைமை தான் மேலிட்டு நிற்கும்.

வைஷம்யங்களைக் கொண்டாடுவதால் ஏற்படும் அநிஷ்டங்கள் பல. அவைகளை ஒருவாறு எடுத்துக்கூறுவதில், அவைகளின் அபசாரக்ரௌரியம் தெரியாதவர்களுக்கு தெரியும்படிக்கும், தெரிந்தவர்களுக்கு நிர்வேதம், அல்லது சோகம், ஜனிக்கும்படிக்கும் இருக்குமாகையால், அதினால் ஒரு தோஷமுமில்லை. பிரதமத்தில், பகவத் ஸந்நிதிகள்விஷயமாக உண்டாகும் அபசாரங்கள் அநேகம். அவைகளாவன:—(1) “பாத்ரங்கள்” என்கிற வ்யாஜத்தையிட்டு பகவத் ஸந்நிதியில் சண்டையிடுதல். இது தண்டதரனான ஸர்வேஶ்வரன் முன்னிலையில் ஏற்படும் அபசார மாகையால், இதை அஸஹ்யாபசாரத்தில் சேர்க்கவேணும். (2) மேற்கண்ட வ்யாஜத்தையிட்டு, பகவத் பிம்பங்களுக்கு பின்னத்தைச் செய்தல். இது பகவானுடைய திருநெற்றியில் அலங்காரமாக விருக்கும் திருமண்காப்பை ஒருவிதமாக விருந்தால், மற்றொருவிதமாகச்செய்தல் முதலியது. இத்தொழிலில் கைகூசாதவர்களை ஸ்ரீ வைஷ்ணவர்கள் என்று வ்யவஹரிப்பது ஔபசாரிகம் என்று சொல்லவேணும். த்விபுஜமும் சதுர்புஜமும் கொண்டு மனங்கவரும் பெருமாளுக்கு திருமண்பேதத்தை ஸஹியீரோ? (3) எம்பெருமானுடைய திருவாரதா

னமும் மஹோத்ஸவங்களும் நடக்கவொட்டாமல் தடைசெய்தல். இது பகவானுடைய வைபவத்தைக் குறைக்கும்படி முடிவதால் இதில் இழிந்தவர்கள் த்வாதச புண்டர தாரானாலும் பசுத்தோல் போர்த்த புலியேபோன்ற ஆஸுரர்கள், நாஸ்திகர்கள் என்கிற கணக்கில் சேர்ந்தவர்கள் என்று சொல்வது அதிவாதமாகாது. (4) எம்பெருமானுடைய திருவோலக்கத்தில் அயலாரை சேஷவ்ருத்தி செய்யக்கூடாதென்று தகைதல். இது ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டி சேரவொட்டாமல், அநந்ய ப்ரயோஜநராய் கைங்கரியத்தில் உத்யோகித்தவர்களுக்கு மனம் புண்படச்செய்தலால், இந்த அபசாரத்தின் க்ரௌர்யம் ஸித்தம். இப்படி அபசாரத்தை விளைத்துத் தாங்கள் செய்யும் கைங்கர்யம் பகவானுக்கு உகப்பாகும் என்று நினைப்பது மோஹக்ருத்யம் என்பதில் சந்தேகமில்லை. இப்படியே ஆழ்வார் ஆசார்யர்கள் ஸந்நிதிகளில் ஏற்படும் அபசாரங்களும் அநேகம்.

இந்த வைஷம்யங்களடியாக, ஓரிடத்தில் தேசிகன் மணவாளமாமுனி பிம்பங்களில் திருநாவலிகத்தைப் பின்னப்படுத்திவிட்டார்கள். ஓரிடத்தில் தேசிகனுக்கு இல்லாத திருமண்காப்பை ஸமர்ப்பித்தும், ஸ்ரீபாஷியக்காரர் ஸந்நிதியில் தாங்கள் ஒருவருமே கோஷ்டி ஸுகம் அனுபவிக்கும்படிக்கும் செய்து வருகிறார்கள். சிலவிடங்களில் மணவாளமாமுனி ஸந்நிதியை ஆளவந்தார் ஸந்நிதியென்று மாற்றியும், தேசிகன் ஸந்நிதியை மணவாளமாமுனி ஸந்நிதியென்று மாறுபாடாயும் வ்யவஹரித்து வருகிறார்கள். மற்று மோரிடத்தில் தேசிக ஸம்பிரதாயிகள் கைங்கரியம் செய்யக்கூடாதென்று தகைத்துவருகிறார்கள். ஓரிடத்தில் மணவாளமாமுனி ஸந்நிதியை இல்லாமல் செய்துவிட்டார்கள். வேறோரிடத்தில் தேசிகனுக்கு மாறுபாடான திருமண்காப்பை ஸமர்ப்பித்து வருகிறார்கள். ஒருஸ்தலத்தில் தேசிகனுக்கு உத்ஸவாதிகள் நடக்கவொட்டாமல் தடைசெய்து வருகிறார்கள். ஓரிடத்தில் தேசிகன் ஸந்நிதியையெடுத்துவிட்டார்கள். சிலவிடங்களில் எம்பெருமானுக்கு உத்ஸவங்கள் நடக்கவொட்டாமல் சண்டையிட்டு வருகிறார்கள். இப்படி திவ்யதேசங்கள்தோறும் ஸ்ரீ வைஷ்ணவர்களால் அநேக துஷ்கிருத்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன.



இந்த வைஷம்யங்கள் ஸந்நிதிகளில் மாத்திரமேயல்லாமல் ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருமாளிகைகளிலும் படியேறி, கொடுக்கல் வாங்கல் முதலான கிருஹகிருத்தியங்கள் நின்றுவிட்டன. இப்படியே முஸித்ர்யம், மடம் என்று பேதப்பட்டு ஒருவரை மற்றொருவர் தாழநினைத்து வருகிறார்கள். தக்ஷிண தேசங்களில் இந்தப் பேதத்தை ப்ரபலமாய்க்காணலாம்.

ஸ்ரீ பாஷ்யக்காரர் பகவத்பாகவத ஸம்ருத்தியை வ்ருத்தி செய்தார். அவருடைய திருவடி ஸம்பந்திகள் பகவத் பாகவதாபசாரங்களை விருத்திசெய்து வருகிறார்கள். ஸ்ரீ பாஷியக்காரர் லோக ஹிதத்திற்காக ஸம்பிரதாயப் பிரவசனம் செய்தார். அவருடைய திருவடிஸம்பந்திகள் அந்த ஸம்பிரதாயத்தை வ்யாஜமாக்கி சண்டையிட்டு வருகிறார்கள். ஸ்ரீ பாஷியக்காரர் செய்த க்ருஷி இப்படி பர்யவஸித்திருப்பது நம்முடைய தௌர்பாக்கியமே யல்லாமல் வேறில்லை.

இப்படி வைஷம்யங்கள் மேலிட்டிருந்தாலும் நமக்குள் பரம ஆஸ்திகர்களும், அவைகளை திக்கரிக்கிறவர்களும், நடந்துவரும் துஷ்கிருத்யங்களை தலையெடாமல்செய்ய வேண்டுமென்கிற நினைவுள்ளவர்களும், ஐகமத்யத்தையும், ஜ்ஞாநாநுஷ்டாநங்களையும் வ்ருத்தி செய்ய வேண்டு மென்கிற சிந்தையுடையவர்களும் அநேகர் இருக்கிறார்கள். ஆனால் இவர்களெல்லாரும் ஒன்றுகூடி ஒருவிதமான முயற்சியும் இந்த விஷயத்தில் எடுக்கவில்லை. இப்போது சிஷ்ய சபை ஏற்பட்டிருப்பதால் இந்தச்சபையின் வருஷமகோத்ஸவத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் வைஷம்யங்களை நிவர்த்தி செய்வதற்கு வேண்டுமான முயற்சியையும், ஸாதனங்களையும் செய்யவும், ஏற்படுத்தவும், இன்னும் உத்தேசத்துக்கு அநுகூலமான உபாயங்களை ஆலோசனைசெய்து யத்தனிக்கவும் உபயோகமாக ஒருகமிட்டி ஏற்படுத்த வேணுமாய் பிரார்த்திக்கிறேன். இதற்கு முன்பாகவே ப்ரவஸித்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆஹ்வான பத்திரிகைகள் அனுப்பி அவர்களுடைய அபிப்ராயங்களை அறிந்துகொள்வது நலம்.

ஓர் ஸ்ரீவைஷ்ணவர்.

ஸ்ரீ:.

# ஸுபாஷிதமாலா.

த்விஜேந்த்ரோऽபி கலாட்யோऽபி க்ஷாரவாரி ஸமுத்ரகா ।
நித்யம் நிமஜ்ஜந் வ்யஸநே நாஸ்ய ஸுத்தோ ஸமத்யயம் ॥ ௧ ॥

ஒருவன் விப்ரச்ரேஷ்டனுயினும், மிகப்படித்தவனுயினும், சமுத்ரம் முதலான தீர்த்தங்களில் பலமுறை ஸ்நாநம் செய்தவனுயினும், நன்னடக்கையில்லாமல் தன்னிஷ்டப்படி செய்கிறவனுனுல், அவனுக்கு மனத்தின் சுத்தி ஏற்படாமல் போய்விடும். இதற்குச் சந்திரன் உதாஹரணம். யாகங்களின் காலங்களை நியமிப்பதால் த்விஜர்களுக்குத் தலைவனுயும், கலைகளால் பூர்ணனுயும், தினம் கடலில் முழுகுவோனுயுமுள்ள சந்திரனுக்கும் களங்கம் நீங்காததால், மேல்வெளுத்திருந்தும், உள் சுத்தி உண்டாகவில்லை.

---

ஸர்வஸ்வமபி தத்தாநாம் ஶிஷ்டாசாரபஹிஷ்க்ருதாம் ।
ஶாஸ்த்ரசக்ஷுர்விஹீநாநாம் ப்ரஸாதோऽபி விபத்ப்ரதா ॥ ௨ ॥

ஶிஷ்டாசாரத்தை அனுசரித்து நடக்காதவர்களும், சாஸ்த்ரமென்கிற கண் திறக்காமல் மூடியிருப்பவர்களும், தர்மமல்லாத மார்க்கங்களில் சேர்த்த போகங்களை யுடையவர்களுமா னவர்களுடைய அனுக்ரஹமும் தீங்கைச் செய்யுமேயொழிய நன்மைக்கு ஹேதுவாகாது. இதற்குப்பாம்பு திருஷ்டாந்தம். அதன் வ்ருத்தமும் (இருப்பும்) அவி என்னும் பர்வதத்திலே இருக்கும்; அதற்கு எப்பொழுதும் ச்ருதி (காது), கண்ணேயாகும்; அதன் போகமென்னும் சரீரமும், அதர்மம் அல்லது பாஹிம்ஸைக்கே ஆகும்; ஆகவே, அதன் ஆசி என்னும் பல்லும் விஷத்தைக்கக்குமே ஒழிய சுகத்துக்கு ஆகாது.

---

யாந்தி ந்யாயப்ரவ்ருத்தஸ்ய திர்யஞ்சோऽபி ஸஹாயதாம் ।
அபந்தாநம் து கச்சந்தம் ஸோதரோऽபி விமுஞ்சதி ॥ ௩ ॥



ஸந்மார்க்கத்தில் நடப்பவன் தன்செய்கைகளின் குணத்தால் காசரணுதிகளுள்ள தன் ப்ருத்யவர்க்கத்தையும் மற்றெல்லா ஜனங்களையும் தனக்கு பவ்யமாகச்செய்வதுடன், யானை குதிரை முதலான திர்யச்சுகளையும் தனக்குபகரணங்களாகச் செய்து கொள்ளுகிருன். வழிதப்பி நடப்போனுக்கு உடன்பிறந்தானும் துணையாகமாட்டான். இதன் உண்மையை ஸ்ரீராமனிடத்திலும் ராவணிடத்திலும் காணலாம். ராமன் குணத்தில் ஈடுபட்டு சகாயம் செய்தார்கள், வானரர்கள். துர்நடத்தையால் வெறுப்படைந்து ராவணனை விட்டு விலகினவன், உடன்பிறந்த விபீஷணன்.

---

விதிரேஷ விஹகேந ஹம்ஸக: பயஸோர்மிஶ்ரித
விவேகவிதி: । கதிவா திநாநி வத பயதோ நிபாநே, கலஶீ
ஸுத: கபளயந் ஜலதிம் ॥ ௪ ॥

வஸ்துக்களின் ஸ்வபாவ சக்திகளுக்குக் காரணம் விசாரிப்பது நிஷ்ப்ரயோஜனமாகும். அவைகள் ஈச்வரன் இச்சையால் ஸ்வதஸ்ஸித்தமாய் ஏற்பட்டவைகளா யிருக்கும். இதற்கு ஹம்ஸமும் அகஸ்த்யரும் நிதர்சனமாவார்கள். நீரும் பாலும் சேர்த்து வைத்தாலும் நீரைப்பிரித்துப் பாலையருந்தும் குணமுள்ளது ஹம்ஸம். இந்த சக்தியை அதற்கு யாரும் பயிற்றவில்லை. அகஸ்த்யர் கடலை உள்ளங்கையில் அடக்கி உண்டதும் அவருக்குண்டான மகிமையால்தான். இந்த சக்தியையும் அவர் பலதினங்கள் பயின்று அடைந்தா ரென்பதில்லை.

---

அத்யாவ கர்மஶ்சேந் ஜஹ்நோஸ்துஹிதுர் நிஷ்ஹவ: ।
கா கதா தஸ்ய போஷஸ்ய விஶ்வத்ராணைகபாக்யத: ॥ ௫ ॥

எவ்வளவு பராக்ரம சாலியும் கர்வமடைவது சரியல்ல; அவனுக்கு மேற்பட்டவன் ஸம்பவித்து அவன்கர்வத்தை யடக்குவது ஸகஜம். கங்கை என்னும் ஒரு நதியை மாத்ரம் குடித்து, அதின் கர்வத்தை அடக்கி அதைக் காதினுல்விட்ட ஜஹ்நுமஹர்ஷி பெரியவராயினும், பலநதிகளையும் அடக்கியுள்ள சமுத்ரத்தை உள்ளங்கையில் தேக்கிய அகஸ்த்யர் அவரினும் பெரியரே. ஆயினும், கடல்களுடன் எல்லா உலகங்களையும் தன்வயிற்றில் வைத்துத்தான் சிறு உருவெடுத்து ஆலிலையில் படுத்துறங்கும் சிறுவனுக்கு இவர் மகிமை எவ்வளவு?

---

(இன்னும் வரும்.)

☞ [கடிதங்கள் எழுதுகிறவர்களுக்கு அறிக்கை.—கடிதங்கள் எழுதுகிறவர்களின் அபிப்ராயங்களுக்குப் பத்ராதிபர் உத்தரவாதமில்லை. கடிதங்கள் நல்ல காகிதத்தில் ஒருபக்கத்தில் தெளிவாக எழுதப்படவேண்டும். எழுதுகிறவர்கள் பெயரும் விலாஸமும் பத்ராதிபருக்கு வ்யக்தமாய் அறிவிக்கப்படவேண்டும். வேதாந்ததீபிகை பத்ராதிபர்.]

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

—∘∘✢∘∘—

## (1)

### கதிரி.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

கதிரி என்பது பாகாலா - தர்மவரம் ரெயில் மார்க்கத்தில் அனந்தபுரம் ஜில்லாவைச்சேர்ந்த ஓர் பெரிய ஊர். இது விஜயநகரத்து ராயர்கள் அரசாட்சி செய்துவந்த நாளில் பிரபலமான ஸ்ரீ வைஷ்ணவ அக்கிரகாரமாகவிருந்ததாய்த் தெரியவருகிறது. தற்காலத்தில் இதர பட்டணங்களைப்போல இவ்வூர் க்ஷீணதசையை யடைந்திருந்தாலும் பூர்வத்தில் அடைந்திருந்த பெருமையின் சின்னங்களை இப்பொழுதும் இவ்விடத்தில் காணலாம். ஆந்திர தேசங்களிலும் மேல்நாட்டிலும் பிரசித்தி யுடையதான ஒரு பகவத்ஸந்நிதி இவ்வூரிலிருக்கிறது. இந்த ஸந்நிதி திருவெவ்வுளூர் ஸந்நிதியைக்காட்டிலும் இரண்டு பங்குபெரிது. இதில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன். உத்ஸவமூர்த்தி அதிஸுந்தரமாய் ஸேவை ஸாதிக்கிறார். இந்த ஸந்நிதி பூர்வத்தில் ஆதிவண் சடகோபஜீயருடைய அபிமானத்தைப்பெற்றுப் பின் காலத்தில் எழுந்தருளியிருந்த அழகியசிங்கர்களாலும் உத்ஸவாதிகள் நடத்தப்பெற்றுவந்தது என்று அவ்வூரில் நாளைக்கும் சொல்லிவருகிறார்கள். இந்த ஸந்நதிக்குள் இருக்கும் புஷ்கரிணிக்கு பவநாசி யென்றுபெயர் வழங்கிவருவதால் அகோபில ஸம்பந்தம் நன்கு விளங்குகின்றது. நிகமாந்ததேசிகன், ஸ்ரீபாஷ்யக்காரர், நம்மாழ்வார் இவர்களுக்குதனித்தனி ஸந்நிதிகள் ஏற்பட்டிருக்கின்றன. கோவிலுக்குப் பின்புறத்தில் நீராழி



மண்டபத்துடன் கூடின புஷ்கரிணியும் அதன் கரையில் பெரிதான திருமஞ்சன மண்டபமும் இருக்கின்றன. ஸந்நிதிக்கு முன்புறத்திலிருக்கும் வீதியில் உத்ஸவகாலங்களில் உலாகண்டருளுவதற்காக அழகியதான மண்டபங்கள் நிற்கின்றன. இந்த எம்பெருமான் வரப்ரஸாதி யாகையால் மேல்நாட்டிலிருந்து கணக்கிறந்த ஸேவார்த்திகள் வருகிறார்கள். இவர்கள் ஸமர்ப்பிக்கும் காணிக்கைகளைக்கொண்டும் 'நஸ்தீக்' வருமானத்தைக் கொண்டும் உத்ஸவாதிகளைச் சீராய் நடத்தி வருகிறார்கள். சென்ற தை மாசத்தில் பார்வேட்டை யுத்ஸவம் மிகச்சிறப்பாய் நடந்துவந்தது. ஊருக்கு வெளியில் பெருமாள் எழுநதருளி இதற்கென்று மிராசுதாரர்களான சில கிராமத்தார்கள் ஒரு புலியைப்பிடித்துக் கொண்டுவந்து உத்ஸவாந்தத்தில் அதை விட்டுவிடுகிறது வழக்கம். அப்படி விடுபட்டமிருகத்தை ஆயுதபாணிகளான ஜநங்கள் துப்பாக்கியால் சுட்டுவந்தார்கள். சுமார் 50 - வருஷங்களுக்கு முன் இந்த உத்ஸவத்தைக் கூட்டிருந்து நடத்திவந்த துரையொருவர் அக்காலத்தில் ஒருவருக்குநேரிட்ட அபாயத்தைக் காரணமாக்கி உத்ஸவத்தை நிறுத்திவிட்டார் என்று தெரியவருகிறது. இந்த ஸந்நிதியில் திருநாராயணபுரத்தில் நடந்துவரும் வழக்கம்போல ப்ரஹ்மோத்ஸவம் நடந்தபிற்பாடு மூன்று நாளைக்கு பஞ்சமர்கள் கோவிலுக்குள் அதற்காக நியமித்திருக்கும் இடத்தில் வந்து பெருமாளை ஸேவித்துப்போவது வழக்கமாயிருக்கிறது. இப்போது இவ்வூரில் இரண்டொரு ஸ்ரீ வைஷ்ணவர்கள் தவிர வேறே கிடையாது. கண்டிக்கோட்டையார் பெருமாளுக்கு திருவாராதனத்தைச்செய்துவருகிறார்கள், இந்த ஸந்நிதியின் சரித்திரத்தை விசாரித்துப்பார்த்தால் அகோபிலமடத்தின் பெருமை நன்றாய்த் தெரியவருகிறது.

ஓர் தேசாந்தரி.

---

## (2)

ஸ்ரீவேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு.

ருதிமதீ விவாஹவிஷயமாய்ச் சென்ற வைகாசிமாஸ ஸஞ்சிகையில் அடியேன் உதாஹரித்த வசநங்களெல்லாம் வைத்யநாத தீக்ஷிதீயம் - வர்ணாச்ரம காண்டம் - க்ரந்தலிபி 109 - 110 - வது பக்கங்களில் இருக்கின்றன. அவைகளை 'ஒரு ஆஸ்திகர்' கடாக்ஷிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

பரிதாபி௵ ஆடிமீ 30உ, }

புத்தங்கோட்டகம்,
ஸ்ரீநிவாஸாசார்யன்.

ஸ்ரீ:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**வேதாந்த தீபிகை.** இந்தப் பத்ரிகைக்குப் பத்ராதிபராயிருந்து ஆரம்பம்முதல் இதை ப்லாக்யமாய் நிர்வஹித்துவந்த ஸ்ரீ. எஸ். வாஸுதேவாசார்யர், இந்த கைங்கர்யத்தை நடத்திவரச் சில அஸௌகர்யங்களால் இனி ஸாத்தியப்படவில்லையென்று தெரிவித்ததின்பேரில், ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்யஸபையின் பொதுக்கார்யதர்சி, அவர் அபிப்ராயத்தை அநுஸரித்து, அவர் அதிகார நிவ்ருத்தியை அங்கீகரிக்க வேண்டியதாயிற்று. சென்ற ஆடிமாஸத்திய ஸஞ்சிகைமுதல் ஸ்ரீ. வாஸுதேவாசார்யருடைய பத்ராதிபத்வ ஸம்பந்தம் இதற்கு ப்ராப்தமாகவில்லை. இந்தப்பத்ரிகையை ப்ரசுரம்செய்துவரும் பொதுக்கார்யதர்சியே இனி இதன் பத்ராதிபத்வத்தை நிர்வஹித்து வருவதாய் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி நிர்வஹித்து வருவதில், ஏற்கெனவே பத்திரிகைக்கு விஷயப்ரதாநிகள் செய்துவந்த வித்வான்களின் உபகாரம் அவிச்சின்னமாய்ப் பிந்தியும் நடந்துவருமென்கிற நம்பிக்கையே முக்யமான ஆலம்பநம். பொதுவாய் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் விசேஷித்துத் தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கும் பகவத்ராமாநுஜ ஸம்ப்ரதாயத்தின் ஸ்வரூப ஸ்வபாவங்கள் விசதமாய்த் தெரியவேண்டியதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்தப்பத்ரிகையை ஆஸ்திகர்களான எல்லோரும் அபிமானிப்பார்களாகையால், இதை நடத்திவருவதற்கு ஏற்படும் பத்ராதிபர்கள் நிமித்த மாத்ரர்களாய் இருந்தால் போதுமானது. இதுவரையிலும் இந்தப்பத்திரிகையை ஆதரித்துவரும் ஸுஹ்ருத்துக்களின் ஸங்க்யை த்ருப்திகரமாகவே இருந்தாலும், செவ்வையாய்ப் பத்ரிகையை நடத்திவரவேண்டிய த்ரவ்யார்ஜநத்துக்குப் பர்யாப்தமாகி வரவில்லையாகையால், இதுவிஷயத்தில் பத்ரிகை ஸுஹ்ருத்துக்கள் ச்ரத்தைசெய்து இதன் வ்யாப்தியை விஸ்தரிப்பதில் உபகரிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது.



“[illegible]” என்று ஆசார்யன் பெருமாளிடம் விஜ்ஞாபநம் செய்தபடி, இதை இனி நடத்திவரும் ப்ரகாரங்களில் ந்யூநதை இருந்தாலும் அது பகவதிச்சாதீநமென்று எண்ணி நம்ஸுஹ்ருத்துக்கள் க்ஷமைகொள்ள வேணுமென்றும், அப்படி ந்யூநதைகள் வராமல் வித்வான்களும் இதரர்களும், பத்ரிகாக்ரஹணம் முதலான உபகாரங்களைச்செய்து அநுக்ரஹிப்பார்களென்றும் பிரார்த்திக்கப்படுகிறது. இதுவரையிலும் பத்ராதிபத்வத்தை நிர்வஹித்துவந்த ஸ்வாமிக்குச் சிஷ்யஸபையின் நிர்வாஹக கமிட்டியாருடைய நிரவதிகமான க்ருதக்ஞதையையும் இந்த அவஸரத்தில் ப்ரகாசிப்பது உசிதமாயிருக்கிறது. அந்த ஸ்வாமியின் மிகவும்ஜ்ஞாநப்ரதங்களான உபந்யாஸங்களைப்படித்துவந்த பத்ரிகை ஸுஹ்ருத்துக்கள் மேன்மேலும் அப்படிப்பட்ட உபந்யாஸங்களை விரும்புவார்களென்பதில் ஸந்தேஹமில்லை. இந்தப்பத்ரிகையின் வ்ருத்தியில் ஸதா அபிநிவேசமுள்ள அந்த ஸ்வாமியும் இந்த மநோரதத்தை யதாவஸரம் பூர்த்திசெய்து வருவாரென்பதும் நிச்சயம். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனின் கைங்கர்யரூபமாய் எண்ணி ப்ரசுரிக்கப்படும் இந்தப்பத்திரிகை விஷயத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயிகளின் ஆபிமுக்யம் வ்ருத்தியாகவேணுமென்று விசேஷமாய்ச் சொல்லவேண்டியதில்லையென்று நம்புகிறோம்.

**ஸ்வதேச பாஷைகள்.** இந்தத்தேசத்தில் வழங்கிவரும் பாஷைகளில் ஸம்ஸ்க்ருதத்தினிடம் ஸாக்ஷாத்தாய் உண்டாகாமல் ஸ்வதந்த்ரமாய் ஏற்பட்டிருப்பவைகள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கே. இவைகள் ஒவ்வொன்றிலும் ஸம்ஸ்க்ருத சம்பந்தமில்லாத ப்ரக்ருதிகளும் ப்ரத்யய வர்க்கங்களும் ஏராளமாய் இருப்பதால் இவைகளை ஸ்வதந்த்ர பாஷைகளென்று சொல்வது வழக்கமாக விருக்கிறது. ஆகிலும் இவைகளிலும் ப்ரஸித்தங்களான கத்ய காவ்யங்களும் பத்ய காவ்யங்களும் சாஸ்த்ரவிஷயங்களான க்ரந்தங்களும் பஹுவாய் ஸம்ஸ்க்ருத பத வ்யாமிச்ரங்களாகவே இருப்பது தெரிந்த விஷயம். இவைகளில் முந்தினதான தமிழ்ப்பாஷையில் ஸம்ஸ்

க்ருதக்கலப்பு மற்ற பாஷைகளில்போல் அவ்வளவு அதிகமில்லையென்று சொல்லலாம். ப்ராசீநங்களான சங்கத்தமிழ் என்னப்படும் காவ்யங்களில் தமிழ்ப்பதங்களே விசேஷமாயிருப்பதையும், பின்புள்ள கம்பன், புகழேந்தி, வில்லிபுத்தூரார் முதலானவர்களின் செயல்களில் ஸம்ஸ்க்ருத பதங்கள் அதிகமாயிருப்பதையும் பார்த்தால், ஸம்ஸ்க்ருத வித்வான்கள் சிறப்படைந்த காலங்களில் அந்தப்பாஷையிலிருந்து பதங்களை இதரகவிகளும் தாராளமாய் உபயோகித்து அதனால் கௌரவம் சம்பாதித்தார்களென்றே தெரிய வருகிறது. மேலும் ராமாயணம், பாரதம், வேதாந்தம், அலங்காரம், ஜ்யோதிஷம், முதலான விஷயங்களில் முதனூல்கள் ஸம்ஸ்க்ருதத்திலேயே இருப்பதுபற்றி அதுவிஷயமான தமிழ் க்ருந்தங்களிலும், ஸம்ஸ்க்ருதபதங்கள் விசேஷித்திருப்பது ஆச்சர்யகரமில்லை. நாமிங்கு தமிழுக்குச்சொல்வது மற்ற தேச்ய பாஷைகளுக்கும் ஸமாநம். விசேஷித்து ஸம்ஸ்க்ருதபதங்களை உபயோகிப்பதால் தான் தமிழ்ப்பாஷைக்குக் கௌரவமென்று சொல்வது மாத்ரம் சரியல்ல. கவியின் மகிமையால் சுத்தத்தமிழில் இருக்கும் க்ரந்தங்களும் படிப்பவர்களுக்கு எளிதில் அர்த்தத்தைக்கொடுத்து இனிமையாகின்றன. இதற்கு நம்மாழ்வாருடைய திருவாய்மொழியில் பலபாகங்களையே நிதர்சனமாகச் சொல்லலாம். ‘கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்’, ‘நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்’, ‘வாயுந்திரை யுகளும் கானல் மடநாராய்’ என்கிற திருவாய்மொழிகளும் மற்றும் அனேக திருவாய்மொழிகளும் ஸம்ஸ்க்ருதக்கலப்பு அனேகமாய் இல்லாதவைகளாயிருந்தும் எல்லோர்க்கும் எளிதில் பொருள்படக்கூடியவையாயிருப்பதை நாம் நன்றாய் அறியலாம். ஆகையால் அந்தந்த பாஷைக்கு ஸ்வரூபம் குறைவடையாமலிருக்க அந்தந்த பாஷாபிமாநிகள் இதரபாஷைகளின் கலப்பைக்குறைக்க வழிதேடுவதே முக்யம். எந்த அர்த்தத்துக்கும் அநுகுணமான பதங்கள் பாஷையிலிருக்க, வேறு பதங்களை வருவிப்பது, தனவானானவன் பொருளை மறைத்து வைத்துப் பிறரிடம் கடன்வாங்குவதை ஒக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆகிலும் வெகுகாலமாய்த் தமிழிலும் மற்ற பாஷைகளிலும் ஸம்ஸ்க்ருதபதங்கள் கலந்துவருவதால் அந்த வழக்கத்தைத் தவிர்த்துச் செந்தமிழில் எழுதுவது ச்ரமகரமாயும் அதைப்படிப்போர்க்கும் கஷ்டமாயும் ஆகிறது. மேலும் விசேஷமாய் ஸம்ஸ்க்ரு



தத்தில் பயிற்சியுள்ளவர்கள் தமிழ் தேசவாஸத்தினால் தமிழையே ஸ்வபாஷையாய்ச் செய்துகொண்டும் பேசுவதைத்தவிர மற்ற விதமாய்த் தமிழில் ச்ரத்தையற்றவர்களாய் ஆய்விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சௌகர்யத்துக்காகவே நம் ஸம்ப்ரதாயத்தில் ‘மணிப்ரவாளம்’ என்று சொல்லப்படும் ஸம்ஸ்க்ருதம் கலந்த தமிழ்நடை ஏற்பட்டிருக்கிறது. இந்த நடையை அநுஸரித்த க்ரந்தங்களில் திருவாய்மொழியின் வ்யாக்யாநமாகிய ஆறாயிரப்படியில் தமிழ் மிகக்குறைவாயும் ஸம்ஸ்க்ருதம் விசேஷமாயுமுள்ளது. பெரியவாச்சான்பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், நிகமாந்ததேசிகர், மணவாளமாமுனிகள் முதலானவர்கள் க்ரந்தங்களில் இரண்டு பாஷையும் சமபாகமாயிருக்கலாம். இவ்வளவு ஸம்ஸ்க்ருதம் கலந்ததால் சுத்தத்தமிழர்களுக்கு இது விசித்ரமாயிருப்பினும், இந்த க்ரந்தங்களைப்படிக்கும் ஸம்ஸ்க்ருதமறிந்த ப்ராஹ்மணாதிகளுக்கு இந்த மிச்ரபாஷை ஸஹஜமாகவே அர்த்தங்கொடுக்கக் கூடியதாய்விட்டது. பல ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் இந்த மணிப்ரவாளத்திலிருப்பதாலும், அவைகளெல்லாம் நம்மவர்களுக்கு அறியவேண்டிய உபதேச க்ரந்தங்களாய் இருப்பதினாலும், அவைகளைப்படிக்க உபகாரமாக ஆகவேண்டுமென்று இந்தப்பத்ரிகையில் ஸம்ஸ்க்ருதக் கலப்புள்ள நடையே உபயோகிக்கப்பட்டுவருகிறது. இதனால் இதிலடங்கிய விஷயங்களை சுத்தத்தமிழில் எழுதுவது சரியல்லவென்றாவது, கூடாதென்றாவது நாம் எண்ணவில்லை. தமிழிலுள்ள நாலாயிரப்ரபந்தம் முதலான க்ரந்தங்களின்பொருளை நன்றாக அறிய, நம்மவர்களும் தமிழை லக்ஷணக்ரந்தங்களுடனும் லக்ஷ்யக்ராந்தகளுடனும் கற்று அறியவேண்டுவது அவசியமே.

**உபாகர்மம்.**

இந்தத்தேசத்தில் ஆஸேதுஹிமாசலம் உள்ள எல்லாத்விஜர்களாகிய ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்யர்களும் தவறாமல் அநுஷ்டிப்பது உபாகர்மம் என்னும் கார்யம். ‘உபாகர்மம்’ என்பதற்கு, உபக்ரமம் அல்லது ஆரம்பம் என்று அர்த்தம். அதாவது வேதாத்யநத்தின் ஆரம்பம். ச்ராவண மாஸத்தின் பௌர்ணமாஸையில் யஜுர்வேதிகளும், அந்த மாஸத்தின் ச்ரவணநக்ஷத்ரம் கூடிய தினத்தில் ருக்வேதிகளும், அதற்கடுத்த மாஸத்தின் ஹஸ்தநக்ஷத்ரங்கூடிய தினத்தில் ஸாமவேதிகளும் இந்த உபாகர்மத்தை அநுஷ்டித்து

வருகிருர்கள். குரு, சுக்ராஸ்தமயங்களிளுலும், ஸங்க்ரமத்திளுலும், க்ரஹணத்திளுலும் ப்ரதமோபாகர்மமும் சிலவேளை இதரோபா கர்மங்களும் செய்யவேண்டிய திநங்கள் பேதிக்கும். இது சிஷ்டர் களிடத்திலும் ப்ராமாணிகமான பஞ்சாங்கங்களிலிருந்தும் அறிய வேண்டும். நம் சாஸ்திரங்களில் வேதாத்யயநத்துக்கு ஏற்பட்ட முக்யகாலம் உபாகர்மம் முதல் நாலரைமாதந்தான். இதன்முடிவில் வேதங்களின் உத்ஸர்க்கம் அல்லது விடுதல் என்னும் கர்மத்தைச் செய்ய வேண்டும். இது புஷ்யமாதம் பூர்ணிமையில் க்ரமமாய்ச் செய்யவேண்டியது. இப்படிச்செய்து கொஞ்சகாலம் அத்யயன த்தை நிறுத்திப் பிறகு சுக்ல பக்ஷத்தில் வேதாத்யயநமும் க்ருஷ்ண பக்ஷத்தில் அங்கங்களின் அத்யயநமும் செய்யவேண்டியது இப்படி உத்ஸர்க்கம் செய்யாத தோஷத்துக்குப் பிராயச்சித்தமாக உபாகர்ம திநத்தில் நாம் 'காமோऽகார்ஷீத் மந்யுரகார்ஷீத்' என்னும் மந் த்ரத்தை ஆயிரம் ஆவ்ருத்தி உச்சரிக்கிருேம். இப்படியே மறுதி நத்தில் நடத்திவரும் காயத்ரீஜபமும் 'மித்யாதீத ப்ராயச்சித்த' மாகச்செய்யப்படுகிறது. அதாவது வேதத்தின் உச்சாரணங்களில் ஏற்பட்ட ஸ்கலிதங்களுக்காக இந்தப்பிராயச்சித்தம் விதிக்கப் பட்டு அனுஷ்டிக்கப்படுகிறது. கொஞ்சமேனும் வேதாத்யயநத் தில் ச்ரத்தையில்லாத ஆதுநிகப்ராஹ்மணர்களும் இதரர்களும் இந் தப் பிராயச்சித்தங்களை நடத்திவருவது மிகவும் பரிஹாஸ்யமா கவே இருக்கிறது. ஆகிலும் விதிகளின்பலத்தால் இதை நித்யகர் மாவாக நினைத்து எல்லோரும் அனுஷ்டித்து வருகிருேம். இந்த அனுஷ்டாநம் யுக்தமாகும்படி சிலர்களாவது உபநயநத்துக்குப் பிறகு பாலர்களுக்கு முக்யமான சிலபாகங்களை அத்யயநம்செய்து வைத்தால் ப்ராஹ்மணர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பெரு மைக்கு அநுரூபமாயிருக்கும். இந்த உபாகர்மத்தின் முக்யபாகம் ஹோமமும், அத்யயனாரம்பமுமாகிலும், தத்காலத்தில் ப்ராயேண புது யஜ்ஞோபவீதம் தரிப்பதும், தர்ப்பணம் செய்வதுமே உபா கர்மத்தின் அர்த்தமாகிவிட்டது. இவ்வளவு ப்ராசீனமாய் நம் முன்னோர்கள் அனுஷ்டித்துவந்த கர்மமானது, இப்போது அநே கமாய் நாமமாத்ர சேஷமாய் ஆகிவிட்டது துக்ககரமாகவே இருக் கிறது.

---

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமட ஸிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] பரீதாபி௵ புரட்டாசி௴. [ஸஞ்சிகை 8.

## யஜ்ஞங்கள்.

ஆதிகாலந்தொடங்கி நம் தேசத்தில் யாகங்கள் செய்து வரப் பட்டன வென்பது எல்லாரும் அறிந்த விஷயம். வேதங்களில் முதன்மைபெற்ற ருக்வேதத்தின் முதல்வாக்யத்திலேயே அக்நி தேவதையை ஸ்துதிக்கும்போது "அக்நிமீளே புரோஹிதம் யஜ்ஞஸ்ய தேவம்ருத்விஜம் । ஹோதாரம் ரத்நதாதமம்" என்று ச்ருதி சொல்லுகிறது. அதாவது, அக்நியை யாகத்துக்கு ஹோ தா வென்றும், ருத்துவிக்கு என்றும் சொல்லுகிறது. தேவதைகள் மனுஷ்யர்களுக்கு மேற்பட்ட சக்திமான்களான ஒரு சேதநவர்க்க மென்றும், அவர்கள் மனுஷ்யர்களுக்கு இஷ்டப்படி லாபத்தையும் நஷ்டத்தையும் செய்யக்கூடியவர்களென்றும், அவர்களை ஸ்துதிப்ப திளுல் அவர்கள் ப்ரீதர்களாகி நமக்கு பசுமுதலான தநங்களைக் கொடுக்கவும் நம்முடைய சத்ருக்களை நிரஸிக்கவும் உபகாரமாகி ருர்களென்பதும் பல ச்ருதி வாக்யங்களால் ஏற்படுகிறது. அவர் கள் கோபமடைந்தால் நமக்கு நஷ்டத்தையும் அபஜயத்தையும் கொடுப்பார்களென்றும் அறிகிருேம். வேதங்கள் அபௌருஷே யங்களாகிலும், அவைகளெல்லாம் அர்த்தம் பொருந்தினவைக ளென்றும், அவைகளின் பாகங்களாகிற மந்திரங்களும் ஸ்தோத்

ரங்களான அர்த்தவாதங்களும் ஸாக்ஷாத்தாய் ஒன்றையும் விதிக்காவிடினும், விதிரூபமாயுள்ள வாக்யங்களுக்குப் பலவிதமாய் உபகாரகங்களாகின்றன வென்பதும் மீமாம்ஸகர்களுடைய கொள்கை. "வாயவ்யம் ஶ்வேதமாலபேத பூதிகாம: । வாயுர்வை க்ஷேபிஷ்டா தேவதா" என்கிற ஶ்ருதி, முன்பாகத்தால் வாயு தேவதையைக்குறித்து வெளுத்த அஜத்தைக்கொண்டு ஒருயாகம் செய்யவேணுமென்று விதித்துப் பின்பாகத்தினால் வாயுதேவதை மிகவும் சீக்ரகாரியான தேவதை யென்று சொல்லுகிறது. இதனாலிந்த யாகத்தைச் செய்கிறவன் அதன் ப்ரீதியால் சீக்கிரமாய் யாகபலமான ஐஶ்வர்யத்தை யடைவானென்று சொன்னதாயிற்று. இப்படி ப்ராஹ்மணங்களென்று சொல்லப்படும் வேதபாகங்களில் விதிக்கப்பட்டிருக்கிற யாகங்களை அனுஷ்டிக்கும் ஸமயத்தில் அதை யனுஷ்டிப்பவர்களுக்கு அதில் விசேஷமான ருசியுண்டாகவேணுமென்றும், அந்த யாகத்தில் செய்யும் கர்மாக்களுடையவும், கூப்பிடப்படும் தேவதைகளுடையவும், உபயோகப்படும் த்ரவ்யங்களுடையவும் ஸ்வபாவங்களும், மஹிமைகளும், ப்ரயோஜநங்களும் நன்றாய் யாகஞ்செய்வோருக்குத் தெரியவேண்டியதற் காகவும், இந்த மந்த்ரங்களும் அர்த்தவாதங்களும் வேதத்தில் ஏற்பட்டிருக்கின்றன வென்றும் மீமாம்ஸகர்கள் சொல்வார்கள். அதாவது, வேதங்கள் பலவாயினும் அவைகளில் கார்யகரமாய் முக்யமாயுள்ளவை 'யஜேத ஸ்வர்க்காம:' என்பது போன்ற விதி வாக்யங்களே. மற்ற வாக்யங்கள் வேதத்தில் சேர்க்கப்படாதபோனாலும் ஹாநியில்லை. ஆகிலும் அவைகள் சேர்க்கப்பட்டிருப்பதால் அவைகளுக்குப் பிரயோஜநம் சொல்லவேண்டியது அவசியம். இதை உத்தேசித்தே மேலே கண்டபடி மந்தரங்களுக்கும் அர்த்தவாதங்களுக்கும் பிரயோஜநம் சொல்லப்படுகிறது. இப்படி மந்திரங்களையும் அர்த்தவாதங்களையும் உபயோகப்படுத்தியே யாகத்தின் பொருள்களை அறியவேண்டும் என்பது விதி, என்றும் மீமாம்ஸகர்கள் நிச்சயம் செய்திருக்கிறார்கள். ஆதுநிக பாஶ்சாத்திய பண்டிதர்களோ, அபௌருஷேயத்வாதிகளின் ப்ராமாண்யத்தை ஒப்புக்கொள்ளுகிறதில்லை. வேதமந்த்ரங்களும், முக்யமாய் ருக்வேத மந்திரங்களும் ப்ராக்காலங்களில் இந்தத்தேசத்துக் கவிகளால் நிர்மிக்கப்பட்டு யாகங்களிலோ, மற்ற சந்தர்ப்பங்களிலோ, தேவதைகளை ஸ்தோத்ரஞ்செய்ய உபயோகிக்கப்பட்டன வென்றும்,



அந்தக்காலங்களில் அந்தக்கவிகளுக்கும் அவர்களை நியமித்த இதரர்களுக்கும் எது தேவையோ அதை அவர்கள் தேவர்களிடத்தில் பராத்தித்தார்களென்றும், இந்த ருக்குகள் ப்ராசீநகாலத்தில் ஜநங்களுடைய சாமான்ய க்ருத்யங்களையும் அவர்களடைந்திருந்த நாகரீகத்தின் நிலைமைகளையும் நன்றாய் விவரிக்கின்றன வென்றும் அபிப்பிராயப் படுகிறார்கள். மேலும் அந்தக்காலத்தில் இந்த மந்த்ரவாக்யங்கள் ஜநங்கள் பேசிவந்த பாஷையிலிருந்திருக்க வேண்டுமென்றும், பிந்தி இந்தப் பாஷை மாறி வ்யாகரணங்கள் ஏற்பட்டுப் பல விதமாய் ஸ்திரீக்ருதமாய் ஆகிவிட்டபடியால் இப்போது கேவலம் காவ்ய நாடகங்களில் வ்யுத்பத்தியுள்ள ஸம்ஸ்க்ருதஜ்ஞர்களுக்கு அந்தவாக்யங்கள் ஸுலபமாய் அர்த்தமாகிறதில்லையென்றும், ஆனால் இந்த பாஷையே லௌகிக ஸம்ஸ்க்ருதத்துக்கும் அதன் விகாரங்களான ப்ராக்ருதங்களுக்கும் மூலபாஷையென்றும் எண்ணுகிறார்கள். நம்தேசத்தார்களுக்கு ப்ராசீனகாலங்களின் வஸ்து ஸ்திதிகளையும் விருத்தாந்தங்களையும் அறிய ஒருகாலும் எண்ணம் உண்டாகிறதில்லையென்றும், சரித்ரமென்னும் புராதந வ்ருத்தாந்த விமர்சம் என்பதே அவர்களுக்குத் தெரியாதென்றும், அவர்கள் சரித்திரங்கள் என்று எண்ணும் புராணங்களும் இதிஹாஸங்களும் பல கல்பிதக் கதைகளையும் அஸம்பாவிதமான அம்சங்களையும் சேர்த்து வர்ணிப்பதால் நம்பிக்கைக்கு இடமன்னியில் இருக்கின்றன வென்றும், மேற்சொன்ன பாஶ்சாத்திய பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இப்படி இதிஹாஸ புராணங்களை இவர்கள் உபயோக மல்லனவென்று விலக்கினபோதிலும், வேதங்களையும் முக்யமாய் ருக்வேதத்தையும் ப்ராசீன ஸ்திதிக்கு நம்பக்கூடிய ஆதாரமென்று கொள்ளுகிறார்கள். நாம் மந்த்ரபாகங்களை விநியோகங்களை அநுஸரித்தே உபயோகித்து வந்தாலும், வஸ்து ஸ்திதியில் அவைகளின் யதார்த்தமான அர்த்தம் என்னவென்று விசாரிப்பதில் ஒருபிசகுமில்லை. அப்படி விசாரிக்கும் பக்ஷத்தில் அவைகள் அநாதியென்று ஒப்புக்கொள்ளாதவர்கள் அவைகளின் அர்த்தங்களால் ப்ராசீனர்களின் ஸ்திதியைப்பற்றி என்ன ஏற்படுகிறதென்று சொல்லுகிறார்களோ அது யுக்தமாவென்று நாமும் விசாரிக்கலாம். இப்படிப்பட்ட விமர்சங்கள் இதுவரையில் நம்தேசத்தில் இல்லாமலிருந்தாலும் தத்கால ரீதியை அநுஸரித்து இதரர்களுடைய ஆக்ஷேபங்களை நிர

வஹிக்கவாவது நம்தேசத்துப் பண்டிதர்கள் இப்படிப்பட்ட விமர் சங்களில் ப்ரவ்ருத்திப்பது அவச்யமென்று தோன்றுகிறது. அதாவது, வைதிகமார்க்கத்திலில்லாத பௌத்தாதிகளின் யுக்திகளை நம்மாசார்யர்கள் ப்ரதியுக்திகளால் நிரஸித்ததுபோல், நம்வேத வாக்யங்களை ப்ராசீநமான ருஷிகளின் வ்யாபாரங்களையும் மந நபலங்களையும் அநுபவங்களையும் விவரிக்கும் பௌருஷேய வாக்யங்களாகவே வைத்துக்கொண்டு, மீமாம்ஸகர்கள் க்ருத்வாசிந்தை என்று செய்வதுபோல் பௌருஷேய பக்ஷத்திலும் நம்முடைய வேதங்களை ஶ்லாக்யமாயும், அநுபவாநுகுணங்களாயும், சேதநர்களுக்கு உத்கர்ஷாபாதகங்களாயு முள்ள அர்த்தங்களை போதிக்கின்றனவென்று நாம் ரூபிப்பது உசிதமாகும்.

இப்படி ஆதுநிக ரீதியை அநுஸரித்துப் பார்த்தால், வேத மந்திரங்கள் ப்ராசீன ருஷிகளால் ப்ரயோகிக்கப்பட்ட தேவதா ஸ்தோத்ரங்களாகவும், பசுக்கள், அந்நம், தநம், புத்ரர்கள், யுத்த ஜயம் முதலான பலங்களைப் பிரார்த்திக்கும் உக்திகளாகவும் காணப்படுகின்றன. இதற்குச்சில ருக்குகளை உதாஹரணமாக எடுத்துக் காட்டுவோம்.

1. ஸ நஃ பிதேவ ஸூநவேऽக்நே ஸூபாயநோ பவ ।
ஸசஸ்வா நஃ ஸ்வஸ்தயே । (ருக்வே.) (ஸூக். க ருக். கூ)

அக்நியே, ஓர் பிதா தன் புத்ரருக்கு ப்ரீதியால் தாநங் கொடுப்பதுபோல், நீர் எங்களுக்கு நல்ல வஸ்துக்களைக்கொடுத்து, எங்கள் க்ஷேமத்துக்கு எங்களுடன் சேரும்.

2. மா நோ மர்தா அபிதுருஹந் தநூநாமிந்த்ர கிர்வணஃ ।
ஈஶாநோ யவயா வதம் । (ஸூ. ரு ருக். கo)

ஓ இந்திரனே, எங்களை மனுஷ்யர்கள் ஹிம்ஸைசெய்ய வேண்டாம். எங்களுக்கு வதம் நேராமல் காப்பாற்றவேணும்.

3. ஸம் கோமதிந்த்ர வாஜவதஸ்மே ப்ருது ஶ்ரவோ ப்ருஹத் ।
விஶ்வாயுர்தேஹ்யக்ஷிதம் । (ஸூ. கூ ருக். எ)

ஓ இந்திரனே, எங்களுக்குப் பசுக்களுடனும் அந்நத்துடனும் கூடிய பெரும் கீர்த்தியைக் கொடும். குறைவற்ற பூர்ணமான ஆயுஸ்ஸையும் கொடும்.



4. ஸர்வம் பரிக்ரோஶம் ஜஹி ஜம்பயா க்ருகதாஶ்வம் । ஆ தூ ந இந்த்ர ஶம்ஸய கோஷ்வஶ்வேஷு ஶுப்ரிஷு ஸஹஸ்ரேஷு துவீமக ॥ (ஸூ. உகூ ருக். எ)

தாநஶீலரான இந்திரனே, எங்கள் துக்கத்தை எல்லாம் போக்கடியும்; எங்கள் சத்ருக்களைக் கொல்லும், எங்களுக்குப் பசுக்களிலும், குதிரைகளிலும், ஆயிரம் மடங்கான தநத்திலும் சீக்கிரமாய்ப் பெருமை உண்டாகட்டும்.

இப்படிப்பட்ட ருக்குக்கள் நூற்றுக்கணக்காய் உதாஹரிக்கலாம். இவைகளால் நம் முன்னோர்களான ருஷிகள் விசேஷமாய் ஐஹிக பலங்களையே ப்ரார்த்தித்து வந்தார்கள் என்று விளங்குகிறது. இவைகளை யபேக்ஷித்துத் தேவதைகளுக்கு விசேஷமாய் ஸோம ரஸத்தையும், பிறகு பசுக்கள் என்னும் அஜங்களையும் யாகங்களில் கொடுத்து வந்தார்கள். இந்த்ராதிகளுக்கு ஸோமம், ஹவிஸ், முதலான த்ரவ்யங்களைக் கொடுத்து தங்களுக்கு பலத்தையும் ஆயுஸ்ஸையும் தநத்தையும் தங்கள் பூமிகளுக்கு மழையையும் பெற்றுவந்தார்கள். இப்படித் தேவதைகளை யுத்தேசித்துச் செய்யும் த்ரவ்ய த்யாகத்துக்கு யாகமென்று பெயர். 'யஜ தேவ பூஜாயாம்' என்கிற தாதுவிலிருந்து உண்டான யாகஶப்தம், தேவதைகளை யுத்தேசித்துச் செய்யும் த்ரவ்ய த்யாகத்துக்குப் பெயராக ஆகிவிட்டது. மனுஷ்யர்கள் தேவதைகளுக்குச் செய்யும் உபகாரம் ஹவிர்தானம். இதற்குத் தேவதைகள் செய்யும் பிரத்யுபகாரம், மழை முதலான பலங்கள். இந்த அர்த்தம் பகவத்கீதையில் நன்றாய் உபபாதிக்கப்பட் டிருக்கிறது.

தேவாந் பாவயதாऽநேந தே தேவா பாவயந்து வஃ ।
பரஸ்பரம் பாவயந்தஃ ஶ்ரேயஃ பரமவாப்ஸ்யத ॥ (ங, 11.)
அந்நாத் பவந்தி பூதாநி பர்ஜந்யாதந்நஸம்பவஃ ॥
யஜ்ஞாத் பவதி பர்ஜந்யோ யஜ்ஞஃ கர்மஸமுத்பவஃ ॥ (ங,14)

பகவான் சொல்லுகிறார்: 'நீங்கள் தேவதைகளை த்ருப்தி செய்து வையுங்கள். அவர்கள் உங்களுக்கு வ்ருஷ்டி முதலானதால் அநுகூலங்கள் செய்யட்டும். இப்படி பரஸ்பரம் அநுகூல வ்ருத்தியினால் இரண்டு பேருக்கும் மிகுந்த ஶ்ரேயஸ் உண்டா

கும்’. ‘நீங்கள் ச்ரமப்பட்டு த்ரவ்யார்ஜநம் பண்ணி யாகம் செய்தால் அதனுல் வ்ருஷ்டி யுண்டாகும். மழையால் நெல்முதலான பயிர்கள் விளைந்து ஆஹாரம் விசேஷமாய் லபிக்கும். அதனுல் ஜீவ கோடிகள் சரீரபுஷ்டி யடைந்து வ்ருத்தி யடைவார்கள்’.

இப்படி இந்த வாக்யங்களினுல் யஜ்ஞங்கள் நமக்கும் தேவதைகளுக்கும் ஏதோ விநிமயார்த்தமான வ்யாபாரம்போல் தோன்றினுலும், இது நம்ஸித்தாந்தத்தின் அந்தரங்கமான அர்த்தம் அல்ல. மனுஷ்யர்களுக்கு தன் ஸ்வம் என்கிற அபிமாநமே காமக்ரோதாதி தோஷங்களுக்கு நிதாநம். அதனுல் பரஸ்பரம் ஈர்ஷ்யாதிகளும் விரோதங்களும் உண்டாகி ப்ரபலமான யுத்தங்களும் உண்டாகின்றன. இது எவ்வளவு துக்ககரமென்பது ஸுவ்யக்தமாயிருக்கிறது. ஆகையால் இப்படிப்பட்ட காமக்ரோதங்களை விலக்குவதே மேல்கதிக்கு முக்ய ஸாதநம். இது பகவத்கீதையில் பல ப்ரகாரங்களால் விவரிக்கப்பட் டிருக்கிறது.

𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌾 𑌵𑍇𑌦𑌾 𑌨𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑍋 𑌭𑌵𑌾𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑍋 𑌨𑌿𑌰𑍍𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮 𑌆𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 ॥ ௨, ௪௫॥
𑌵𑌿𑌹𑌾𑌯 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌪𑍁𑌮𑌾𑌂𑌶𑍍𑌚𑌰𑌤𑌿 𑌨𑌿𑌃𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 ।
𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋 𑌨𑌿𑌰𑌹𑌂𑌕𑌾𑌰𑌃 𑌸 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ ௨, ௭௧॥
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑍌 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ।
𑌤𑌯𑍋𑌰𑍍𑌨 𑌵𑌶𑌮𑌾𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍𑌤𑍌 𑌹𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌪𑌨𑍍𑌥𑌿𑌨𑍌 ॥ ௩, ௩௪॥
𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑌤𑍀𑌨𑌾𑌂 𑌯𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌂 ।
𑌅𑌭𑌿𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌂 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂 ॥ ௫, ௨௬ ।

காமக்ரோதங்களை விலக்குவதற்கு என்ன உபாய மென்ருல், இது விஷயத்தில் பகவத்கீதையின் நிர்த்தாரணம், விஹிதமான எல்லாக் கர்மங்களையும் பலாபிஸந்தி யில்லாமல் செய்வதே காமக்ரோதங்கள் விலகச்சிறந்த உபாயமென்பதுதான். இது எதற்கு? பலத்துக்காக விஹிதங்களான கர்மங்களை பலாபிஸந்தி யில்லாமல் செய்வது ஸாத்யமா? அப்படியாவது என் அவைகளைச் செய்ய வேணும்? பலங்களைக் கோலாமல் அவைகளைச்செய்தால், யாருக்கு ப்ரீதி உண்டாகும்? அப்படிச் செய்வதனுல் காமக்ரோதங்கள் எப்படி விலகும்? மேலும் ‘𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌾 𑌵𑍇𑌦𑌾𑌃



𑌨𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑍋 𑌭𑌵𑌾𑌰𑍍𑌜𑍁𑌨 । 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑌯𑌾𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌃 𑌪𑌰𑌂𑌤𑌪’ ‘𑌏𑌵𑌂 𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑌾 𑌯𑌜𑍍𑌞𑌾 𑌵𑌿𑌤𑌤𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌮𑍁𑌖𑍇 । 𑌕𑌰𑍍𑌮𑌜𑌾𑌨𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌤𑌾𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍇𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇’ । என்று வாக்யங்கள் இருப்பதால் பகவத்கீதையிலேயே வேதோக்த கர்மங்கள் த்யஜிக்கப் படவேண்டியவைகள் என்றுசொல்லி இருக்க, அவைகளை பலாபிஸந்தி யன்னியில் செய்ய வேண்டிய தென்பது கீதையின் நிர்த்தாரணமென்று எப்படிச் சொல்லலாம், என்று சில ஆக்ஷேபங்கள் இங்கே செய்யலாம். இந்த ஆக்ஷேபங்களுக்கு ப்ரதிவசநம் கீதையிலேயே விசதமாய் இருக்கிறது. ஸாமாந்யமாய், ஒரு தேவதையிடத்தில் சில ஐஹிக பலங்களை உத்தேசித்து த்ரவயத்யாகம் செய்வது யஜ்ஞ சப்தத்தின் பொருளானுலும், பரமாத்மாவாகிய ஸ்ரீமந் நாராயணனிடத்தில் அவர் ப்ரீதியாகிய பலத்தை உத்தேசித்து த்ரவ்ய தாநம் செய்வதும் யாக சப்தார்த்தமாகக் குறையில்லை. பலத்தைக்குறித்துச் செய்யும் கார்யங்களைப்பார்க்கிலும் பலத்தை எதிர்பாராமல் செய்யும் கார்யங்கள் எவ்விதத்திலும் ச்லாக்யங்கள் என்பது நம் அநுபவத்தினுல் சொல்லலாம். நம்முடைய பத்நீ, புத்ரர் முதலான பந்துக்கள் நாம்செய்யும் உபகாரத்துக்காக நம்மிடத்தில் விச்வாஸமா யிருக்கிருர்களென்று நினைப்பதைப் பார்க்கிலும் வ்யாஜம் ஒன்றுமில்லாமல் கேவலம் நம்முடைய ஸம்பந்தத்துக்காக ப்ரீதிவைக்கிருர்களென்று நினைப்பதே உசிதம். அப்படி நினைத்தால் நமக்கும் அவர்களிடத்தில் வாஸ்தவமாய் ப்ரீதியுண்டாகும். இப்படியே, நமக்குச் சம்பந்தமில்லாத ஒருவனுக்கு ஏதாவது ஆபத்தில் நாம் உபகாரஞ் செய்தால், அவனிடத்தில் ப்ரத்யுபகாரம் பெறலாம் என்று எண்ணி உபகாரம் செய்வதைப் பார்க்கிலும், நமக்கு ப்ரத்யுபகாரத்தில் ஒரு அபேக்ஷையு மில்லாமல் நாம் உபகாரம்செய்தால் இதனுல் உண்டாகும் ஆஹ்லாதம் அளவற்றதென்பது ஒவ்வொருவரும் தம்மநுபவத்தினுல் நிச்சயிக்கலாம். ஸாமாந்ய தேவதையைக்காட்டிலும் உயர்ந்த, ஸர்வ பல ப்ரதாான ஒரு பரமாத்மா உண்டென்று நிச்சயித்து, நமக்குக் கிடைக்கும் பலங்களில் பரமநிஸ்ரேயஸமென்கிற மோக்ஷமே உத்தமமான பலமென்றும் நாம் நம்பின பிறகு, மற்ற பலங்களில் நமக்கு இச்சையும், மற்ற தேவதைகளை நாம் யாசிக்கவேண்டியதில் ஆவச்யகதையும் ஒழிந்துவிடும். இப்படியானுல் நாம் யாசங்

கள் செய்யவேண்டியதுதான் எதற்கு, என்று கேட்டால், ஐஹிக பலஸாதநங்களான கர்மாக்களேயும் இந்த்ரிய ப்ரீதிகரமான வ்யாபாரங்களேயும் திடீரென்று விட்டுவிட வேணுமென்று சாஸ்த்ரம் கட்டளையிட்டால் அந்தக் கட்டளையை அனுஷ்டிப்பது கஷ்டமாகும். மேலும் பலர் தங்களுக்குப் பலங்களில் இச்சையிருந்தும் கர்மங்களைச் செய்வது ச்ரமமாகுமென்கிற காரணத்தினுலும் ஆலஸ்யத்தினுலும் கர்மங்களை விட்டுவிட முயலுவார்கள். ஆகையால் கற்றறிந்தவர்கள் சாஸ்திரங்களில் சொல்லி இருக்கும் கர்மங்களை விடலாமென்றும், அஜ்ஞர்கள் மாத்திரம் ஶாஸ்த்ரோக்தமான கர்மங்களைச் செய்யவேண்டுமென்றும் சொல்வது சரியல்ல. இப்படிப்பட்ட அதிகாரி பேதத்தால் கர்மங்களைச் செய்யாமலே விட்டுவிடலாமென்கிற பக்ஷத்தை பகவான் கீதையில் பல இடங்களில் நிஷேதித்திருக்கிருர்.

நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண: । (௩, 8.)
கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய: । (௩, 20.)
யஜ்ஞதாநதப: கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத் । (௧௮, 5.)
நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோபபத்யதே । (௧௮, 7.)

விஹிதமான கர்மாக்களை அவைகளின் பலங்களில் இஷ்டமில்லையென்று ஒருவன் விட்டுவிடலாமாகில் ஶாஸ்த்ரப் ப்ராமாண்யம் ஒன்றிலும் நிலைநிற்கமாட்டாதென்றும், காமசாரமே லோகத்தில் பஹுவாய்விடும் என்றும் பயந்து இந்த வாக்யங்களில் கர்மத்யாகம் நிஷேதிக்கப்பட் டிருக்கிறது. மேலும் பகவானும் தான் கர்மங்கள் செய்து வருவதாயும் அப்படிச் செய்யாவிட்டால் லோகத்தார் தன்னை அநுஸரித்து கர்மங்களை விடுவார்கள் என்றும் பயப்பட்டுப் பேசுகிருர்.

உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம் ।
ஸங்கரஸ்ய ச கர்தா ஸ்யாமுபஹந்யாமிமா: ப்ரஜா: । (௩, 24.)

ஆனுல் கர்மங்கள் செய்யும்போது பலாபிஸந்தி யன்னியில் செய்யவேணு மென்பதும் நன்ருய் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசந । 12, 47.



த்யக்த்வா கர்மபலாஸங்கம் நித்யத்ருப்தோ நிராஶ்ரய: ।
கர்மண்யபிப்ரவ்ருத்தோ(அ)பி நைவ கிஞ்சித்கரோதி ஸ: ॥ (௪, ௨௦)
யோகிந: கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்மஶுத்தயே । (௫, ௧௧.)

மேலும் பலாபிஸந்தி யில்லாமல் கர்மங்கள் செய்வதுதான் கர்மயோகமென்றும், அந்தக் கர்மயோகமே ஸாக்ஷாத்தாய் ஆத்மாவலோகநத்துக்கும் பக்தி யோகத்துக்கும் காரணமாகும் என்றும் பகவத்கீதையில் உபபாதிக்கப்பட் டிருக்கிறது.

இப்படி விதிக்கப்பட்ட கர்மங்கள் பலவிதங்கள். சில நித்யங்களென்றும், சில நைமித்திகங்களென்றும், சில காம்யங்கள் என்றும் சொல்லப்படுகின்றன. இவைகளில் நித்ய நைமித்திகங்கள் அவச்யம் யாவஜ்ஜீவம் அனுஷ்டிக்கப்பட வேண்டியவைகள். காம்யங்கள் அனுஷ்டிக்கப்பட வேண்டியவைகளல்லவாயினும் அவைகளைக் காம்யங்களாய், அதாவது சில தேவதைகளை உத்தேசித்து பலத்தை வேண்டிச் செய்யாமல் பகவானுக்கு ப்ரீதிகரம் என்று ஒரு பலத்தையும் உத்தேசிக்காமல் செய்தால் யாதொரு விரோதமும் இல்லையென்றும், அவைகளைச் செய்வது ஶ்லாக்யந்தான் என்றும் நம்முடைய ஸித்தாந்தம். இதை ஸ்ரீ பாஷ்யக்காரர், "யஜ்ஞாதீநி கர்மாணி ஸர்வாணி பரமபுருஷ: கர்மவாஸநா ... ஸாக்ஷாத்த்வயோகநம் ஜநாதி" என்று கீதாபாஷ்யத்தில் அனுக்ரஹித்திருக்கிருர். ஸூத்ரபாஷ்யத்திலும் ஸர்வாபேக்ஷாதிகரணத்தில் "தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந" என்னும் ஶ்ருதியால் யஜ்ஞாதிகள் ஜ்ஞானத்தைஉண்டுபண்ணுமென்று நிச்சயிக்கப்படுகிறது. "விஹிதாநாம் கர்மணாம் பரமபுருஷாராதநதயா" என்றும் "ஏவம் மோக்ஷஸாதநம் நித்யநைமித்திக பரிகர்மாபேக்ஷா" என்றும் பாஷ்யத்திலும் தீபத்திலும் வாக்யங்கள். இதனுல் காம்யங்களான யஜ்ஞங்களும் பலகாமனை யன்னியில் பகவத்ப்ரீதிகரங்களாய் செய்யப்படும் பக்ஷத்தில் மோக்ஷஸாதநங்களாகுமென்று நிர்ணயிக்கப்பட் டிருக்கிறது. ஒரே கர்மமானது நித்யமாயும் காம்யமாயும் விதிக்கப்படுகிறதுண்டு; இதுக்கு அக்நிஹோத்ரம் என்னும் கர்மம் உதா

ஹாரணம். அதுபோல் ஒரே யஜ்ஞாதி கர்மங்களே பலத்தைக்குறித்தும் பகவத்ப்ரீதிக்காகவும் அபிஸந்தி பேதத்தாலாகலாம். இப்படியாவதை 'ஸம்யோக ப்ருதக்த்வ ந்யாய' மென்று மீமாம்ஸகர்கள் சொல்வார்கள். ஸ்ரீ பாஷ்யத்திலும் 'ஸஹகாரித்வேந ச' 'ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதி ச்ருதேரச்வவத்' என்னும் ஸூத்ரபாஷ்யங்களில் இந்த விஷயம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

'ஸர்வேऽப்யேதே யஜ்ஞவித:' (௪, ௩௰.) என்னும் ச்லோக பாஷ்யத்தில் 'யஜ்ஞவித:' என்னும் பதத்துக்கு, "ஸஹ யஜ்ஞை: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா' இத்யபிஹித மஹாயஜ்ஞ பூர்வக நித்ய நைமித்திக கர்மரூப யஜ்ஞவித:' என்று பாஷ்யம்செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஆளவந்தாரும் இந்த விஷயத்தை 'நித்ய நைமித்திகாநாம் ச பராராதந ரூபிணாம்' என்று ஸங்க்ரஹித்தார். ஆகையால் நம் சாஸ்த்ரங்களில் எல்லாகர்மங்களும் பலாபிஸந்தியில்லாமல் பகவத் ப்ரீதியை உத்தேசித்தே செய்யப்பட வேணுமென்றும் கேவல காம்யங்கள் செய்யப்பட வேண்டாமென்றும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. 'பலாபிஸந்தியுடன் சில தேவதைகளைக் குறித்துச் செய்யப்படும் யஜ்ஞங்களிலும் பகவான் தான் போக்தாவென்றும் அவரே அந்தந்த தேவதைகள் மூலமாய் பலப்ரதர் என்றும் 'போக்தாரம் யஜ்ஞ தபஸாம்' என்பது போன்ற பலவாக்யங்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி கர்மயோகத்துக்கு அங்கமாக நித்ய நைமித்திகங்களும் காமநாரஹிதங்களாய் நித்யங்களில் அந்தர்ப்பவித்து இருக்கும் யஜ்ஞாதிகளும் செய்யப்படவேணுமென்பது ஸித்தாந்தம்.

இவைகளில், நித்யங்களாய் ப்ரதிதிநம் ப்ராம்ஹணர்களால் செய்யப்படவேண்டியவைகள் மஹாயஜ்ஞங்கள் என்று சொல்லப்படும் ஐந்து யஜ்ஞங்கள். அவைகளாவன, ப்ரஹ்மயஜ்ஞம், தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம் பூதயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம், என்பவைகள். இவைகளின் ஸ்வரூபமும் செய்யவேண்டிய ப்ரகாரங்களும் ஆஹ்நிக க்ரந்தங்களிலிருந்து அறியவேண்டும்.



161991

இவ்வளவு கர்மகலாபங்களும் விதிக்கப்பட்டிருப்பதினால் நிரந்தரமாய் அஹோராத்ரமாகிய திநம்முழுவதும் இதுவே கார்யமாயிருந்தாலும் இவைகளுக்குக்காலம் போதாதென்றும் இவைகளை யதோக்தமாய்ச் செய்துமுடிப்பது அஸாத்யமென்றும் தோன்றலாம். ஆகிலும் இவைகளின் உத்தேசம் ஒவ்வொருவரும் தன்னால் இயன்றமட்டும் தேவ, பித்ரு, மநுஷ்ய, பூதங்கள் விஷயத்தில் க்ருதக்ஞதையைப் பாராட்டித்தன் வயிற்றுக்காகவே பாகங்கள் செய்யாமல் ஸர்வ ஜந ஹிதமாய் வர்த்திக்கவேண்டுமென்பதுதான். 'தே த்வகம் புஞ்ஜதே பாபா யே பசந்த்யாத்ம காரணாத்' என்று பகவத்கீதையில், தனக்காகப் பாகஞ்செய்து புஜிப்பவன் நரகத்தையடைவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இப்படி பலாபிஸந்தியில்லாமல் கர்மாநுஷ்டாநங்கள் செய்வதில் ஏதாவது கர்மங்கள் முடிக்கப்படாமல் பாதியில் விச்சேதத்தையடையும் பக்ஷத்தில், செய்தவரையில் அவைகள் கர்மவாஸனையைப்போக்கி மோக்ஷருசியை உண்டுபண்ணக்கூடியவைகள் என்பதும்,

'நேஹாபிக்ரமநாசோऽஸ்தி ப்ரத்யவாயோ ந வித்யதே।
ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்॥' (௨, ௪௰)

என்கிற ச்லோகத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் நம் சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்படாத அந்ய மதத்தார்களும் தாம் செய்யும் எல்லாக்கார்யங்களையும் ஸ்வப்ரயோஜநமாய்ச் செய்வது யுக்தமல்லவென்றும், 'கார்யமித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதேऽர்ஜுந' என்று சொல்லியிருக்கிறபடி, பலத்தைக்குறித்துக் கவனிக்காமல், தம் கடமையென்றும் அதைச்செய்தோமென்ற த்ருப்தியே தமக்குப் போதுமான ப்ரதிப்ரயோஜநமென்றும் எண்ணிச்செய்வதே உத்தமபுருஷர்களுக்குத் தகுதி என்றும் எண்ணுகிறார்கள். ஸாக்ஷாத்தாய் பகவானால் நமக்கு உபதேசிக்கப்பட்ட இந்தப் பரம தர்மத்தை நாம் நன்றாய் அறிந்து அநுஷ்டிக்கவேண்டியது நமக்கு மிகவும் அவச்யமென்பது இதனால் வ்யக்தமாக ஏற்படுகிறது.

டி. ராஜகோபாலாசாரியர்.

R65m211, N16VD
N1042

ஸ்ரீ:

# ஸௌபரி சரித்திரம்.

முன் ஒருகாலத்தில் ஸௌபரி என்னும் ஓர் மஹர்ஷி இருந்தார். அவர் பலவிதமான கடுந்தபஸ்ஸுக்களால் காயக்லேஶங்கள் செய்து வற்றி உலர்ந்துபோ யிருந்தது மன்றியில், வயஸ்ஸும் அதிகமாகித் தளர்ந்தவரா யிருந்தார். ஆனால் தபஸ்ஸின் மஹிமையால் பலவித ஸித்திகளை வஶ்யம் செய்திருந்தார். ஒரு ஸமயத்தில் அந்த ருஷி ஜலத்திற்குள் நுழைந்து ஶ்வாஸத்தை யடக்கி இடைவிடாமல் ப்ரஹ்ம த்யாநம் செய்யலானார். இப்படிப் பன்னிரண்டு வருஷங்கள் கடந்தன. இப்படித் தபஸ்ஸு செய்து வரும் காலத்தில் ஒருநாள் தாம் தபஸ்ஸு செய்துவரும் ஜலத்தில் ஒரு பெரிய மத்ஸ்யம் நூற்றுக் கணக்கான சிறுமத்ஸ்யங்களால் சூழப்பட்டு வருவதைக் கண்டார். அந்த மத்ஸ்யம் ஸம்மதனென்கிற மத்ஸ்யராஜன். வெகு நீளமும் பருமனும் பலமு முள்ளது. அதற்குப் புத்ரர்களும், புத்ரிகளும், பௌத்ரர்களும், பௌத்ரிகளும், தௌஹித்ரர்களும், தௌஹித்ரிகளுமாகச் சேர்ந்து ஏராளமான ப்ரஜைகள் இருந்தன. அவைகளெல்லாம் ஸம்மதனைச் சூழ்ந்து வருவதையும், அவைகளை முன்னும் பின்னும் பக்கங்களிலும் பாய்ந்து வரும்போது தடவிக்கொடுத்து, அவைகள் ஸ்பர்ஶத்தால் ஆநந்தமடைந்து இரவும் பகலும் இடைவிடாமல் அவைகளுடன் ஸம்மதன் விளையாடி வருவதையும் ஸௌபரிருஷி பார்த்து, மநம் சலித்துத் தன் ஸமாதியை மறந்து, அந்த மத்ஸ்யராஜன்போல் தானும் ரமிக்கவேணுமென்கிற எண்ணத்தை யடைந்தார். இந்த மீன்ஜன்மத்திலும் இவ்வளவு ஆநந்த மனுபவிக்கக் கூடுமானால், நம்முடைய உத்தமமான மனுஷ்ய ஜன்மத்தில் நாம் ஏன் விவாஹஞ் செய்துகொண்டு புத்ர பௌத்ரர்களைப்பெற்று, குழந்தைகளால் நாலுபக்கத்திலும்சூழப்பட்டு, அவர்கள் மழலைச்சொற்களைக்கேட்டு, அவர்கள் அழுக்கடைந்த அங்கங்களை ஆலிங்கநம் செய்துகொண்டு ஸுகிக்கலாகாது' என்கிற வாஞ்சை அபரவபஸ்ஸில் மஹர்ஷிக்கு நிரம்பவும் ப்ரபலித்தது. உடனே பலவர்ஷங்களாய்ச் செய்துவந்த தபஸ்ஸை நிறுத்திவிட்டு, ஜலத்திலிருந்து வெளிக்கிளம்பி, நல்ல கன்னிகையைத்தேடி விவாஹம் செய்து கொள்ளப் புறப்பட்டார். அந்தக் காலத்தில் மஹாப்ரஸித்தியுடன் அயோத்தியில் ராஜ்யம் செய்துகொண்டிருந்த மாந்தாதாவென்கிற சக்ரவர்த்திக்கு ஐம்பது பெண்கள் இருப்பதாய் அறிந்து மஹர்ஷி அவரிடம் போனார்.

அந்த அரசர் மஹர்ஷியை எதிர்கொண்டு அழைத்துப்போய்த் தகுந்தபடி அர்க்யபாத்யாதி ஸத்காரங்கள் செய்து, "ஓ மஹர்ஷியே, அடியேன் க்ருஹத்தைப் புண்யமாய் செய்தது உம்முடைய வரவு. என்னால் உமக்கு ஆகக்கூடியதென்ன?" என்று வணக்கமாய்க் கேட்டார். அதற்கு ஸௌபரி, "நிவேஷ்டுகாமோஸ்மி நரேந்த்ர கந்யாம் ப்ரயச்ச மே மா ப்ரணயம் விஹாஸீ: । நஹ்யர்த்திந: கார்யவஶாதுபேதா: ககுத்ஸ்தவம்ஶே விமுகா: ப்ரயாந்தி ।"

"ஓ மகாராஜனே, நான் விவாஹம் செய்துகொள்ள விரும்புகிறேன். உம்முடைய பெண்ணை எனக்குக் கொடுக்கவேணும். எனக்கு இப்போது ஸ்த்ரீவிஷயமாய் உண்டாயிருக்கும் காமம் நிரம்பவும் அதிகமாயிருக்கிறது. இதற்கு நீர் இடையூறு செய்யக்கூடாது. நான் ஸாமந்யமாய் உம்மை நினைத்துவரவில்லை. உம்முடைய குலம் இந்த்ரனுக்கு உபகாரம் செய்து மகிமைபெற்ற குலமல்லவா? இந்தக்குலத்து ராஜாக்களிடத்தில் இதுவரையில் வந்த அர்த்திகள் வ்யர்த்த மநோரதர்களாய்ப் போனார்களென்பதில்லை. ஆகையால் என் அபீஷ்டமும் உம்மிடம் தலைக்கட்டுமென்றே நம்பி உம்மிடம் நான் வந்திருக்கிறேன்" என்று மஹர்ஷி சொன்னார். பெண் விஷயத்தில் இவ்வளவு ஆவலுடனும் ஸம்ரம்பத்துடனும் பேசிய மஹர்ஷியின் வாக்யத்தைக் கேட்ட மாந்தாதா பயந்து உடனே பதில் சொல்லாமல் மௌநமாயிருக்க, மஹர்ஷி மறுபடியும், "மஹாராஜனே, கந்யைகளுள்ள அரசர்கள் பலர்களிருக்கிறார்கள். ஆகிலும் உம் குலத்தின் பெருமைக்கு ஆசைப்பட்டு நான் உம்மைக்கேட்கிறேன். உம்குலத்தாருக்கு யாசகர்கள் மநோரதத்தை பூர்த்திசெய்து வைப்பது வ்ரதமல்லவா? மேலும் நான் ஒருவரைக்கேட்டு அவர் மறுதலித்தால் அந்தத் துக்கம் எனக்கு ஆற்ற முடியாது. அருமையாய் ஒன்றிரண்டு பெண்களை வைத்திருப்பவர்கள் எனக்குத் தன்பெண்ணைக்கொடுக்க சம்மதிப்பது அரிது.

நீரோ விவாஹமாக வேண்டிய ஐம்பது பெண்களுள்ளவரா யிரு
க்கிறீர். ஒருபெண்ணை எனக்கு யோசியாமல் கொடும்'' என்று
நிர்ப்பந்தித்தார். இதைக்கேட்ட மகாராஜர் இந்தக் குரூபியான கிழ
வருக்கு எந்தப்பெண்ணை நாம் சம்மதித்துக் கொடுப்பது என்று
திகைத்தும், ஒருகால் ருஷி கோபத்தினால் சபிப்பாரோவென்று
பயந்தும், தலை தொங்கவிட்டுநிற்க, மஹர்ஷி அவரைத் தைர்யப்படு
த்தி, "ஓ ராஜனே, பெண்ணென்றால் பிறருக்குக் கொடுபடவே
ண்டியவள் தானே. அவளை நானேவந்து யாசிக்கும் போது நீர்
ஏன் தயங்குகிறீர்'' என்றார். இதைக்கேட்ட அரசர், ஒருவாறு
தன்மனதை ஸ்திரப்படுத்திக்கொண்டு, "மஹர்ஷியே, என்குலத்
தில் ஓர் வ்ரதம் உண்டு. அதாவது, எந்த நற்குலத்தோனாகிற
வரனை பெண் தானாய் விரும்புகிறாளோ அவனுக்குத்தான் அந்தப்
பெண்ணைக் கொடுப்போம். உம்மைப்போல ஶ்லாக்யமான வரன்
எனக்கு ஸ்வப்நத்திலும் கிடைக்காது. ஆகிலும் எங்கள் குல வ்ர
தத்துக்கு விரோதம்செய்ய நான் துணியவில்லை'' என்றார். இதைக்
கேட்ட முநி, 'நம்மை நிராகரிக்க இதோருபாயம்போ லிருக்கி
றது. ஆகிலு மிருக்கட்டும்' என்று நினைத்துப் புன்சிரிப்புக்கொ
ண்டு, "மாந்தாதரே, உம்முடைய வ்ரதத்துக்குப் பங்கம் வேண்
டாம். உம் அந்தப்புரத்தின் அதிகாரியை என்னுடன் அனுப்பும்.
நான் கன்னிகைகள் இருக்குமிடம் போகிறேன். அவர்களில் யார்
என்னை மறுதலிக்காமல் மணக்கச் சம்மதிக்கிறாளோ அவளை நா
னடைவதில் உமக்குத் தடையில்லையே?'' என்றார். இதைக்கேட்ட
மாந்தாதா துயரத்தைவிட்டு, இந்தக் கிழத்தை எந்தப் பெண்
வரிப்பாள் என்று தைரியப் படுத்திக்கொண்டு, அப்படியே செய்
யலாமென்று சொல்லி, ஓர் கஞ்சுகியைக் கூப்பிட்டு கன்யகைக
ளிடம் ருஷியை அழைத்துப்போக நியமித்தார். அந்த வர்ஷவரா
னும் மஹர்ஷியை அழைத்துப்போய் அரசன் கட்டளையைத் தெரி
வித்தான். ருஷி இதற்குள் தன்சக்தியால் தன் ஸ்வரூபத்தைமாற்றி,
அதிஸுந்தரமாய், யுவாவாய், மன்மதனைக் காட்டிலும் அதிக அழ
குள்ளதான ஒரு சரீரத்தை க்ஷணத்தில்தரித்து, அந்தரூபம் கன்யை
களுக்கு மட்டும் தோன்றும்படிக்கும் மற்றவர்களுக்குத் தன்
கிழச்சரீரமே தோன்றும்படிக்கும் செய்துகொண்டார். அந்தப்புர
த்துக் கன்னிகைகள் இவரைப்பார்த்ததும் ஒவ்வொருவரும் தனித்
தனியாய் ஆசைப்பட்டு, எனக்குத்தான் இவர் அநுரூபரென்றும்,



நான் இவர் வந்தவுடனே வரித்துவிட்டேன் என்றும், உனக்கு
இவர் கூடுமோ என்றும், பலவாறாகச் சண்டைசெய்ய ஆரம்பித்
தார்கள். இதைக்கேட்ட வர்ஷவரன் ப்ரமித்து எல்லோரும்
அவரை மணம்புரிய மூர்த்தங்யமா யிருப்பதை அரசனுக்குத் தெரி
வித்தான். அரசனும் கேட்டு, இவர் மாயையை யறியாமல் கன்
யைகளைக் கொடுப்பதாய்த் தான்சொன்ன வார்த்தை பொய்யாகக்
கூடாதென்று நினைத்து ஐம்பது கன்யைகளையும் மஹர்ஷிக்குப்
பாணிக்ரஹணம் செய்துகொடுத்தார்.

விவாஹ மானவுடன் மஹர்ஷி அவர்களைத் தன் ஆச்ரமத்
துக்கு அழைத்துக்கொண்டுபோய், தன் தபஸ்ஸின் பலத்தால்,
விச்வகர்மாவென்னும் தெய்வச் சில்பியைக் கொண்டு, ஐம்பது
தனித்தனியான மாளிகைகளையும், அதற்குத்தகுந்த உத்யாநங்
களையும், அழகான க்ரீடாஸரஸ்ஸுகளையும் அந்த ஸரஸ்ஸுகளில்
ரம்யமான புஷ்பங்களையும், மதுரத்வநிகளுடன்கூடின ஹம்ஸம்
முதலான பக்ஷிகளையும், இன்னும் பலவிதமான போகங்களையும்
ஸ்ருஷ்டிசெய்துவைத்து, ஒவ்வொரு க்ருஹத்தில் ஒரு பத்நியை
யிருக்கச்செய்தார். தானும் தன் மந்த்ரசக்தியால் ஐம்பது யௌ
வநமுள்ள மநோஜ்ஞமான சரீரங்களில் தன் ஆத்மசக்தியை ப்ர
வேசிப்பித்து, அந்த ராஜபுத்ரிகளுடன் ஒருவர் வ்ருத்தாந்தம் ஒரு
வர் அறியாமல் பல வர்ஷங்கள் ஸுகங்களை அனுபவித்துவந்தார்.
இவ்வளவுக்குள் இந்தப் பெண்களின் பிதா தன் பெண்களின்
துர்க்கதியை நினைத்து, கிழ ருஷியிடம் எப்படி அவர்கள் வஸிக்கி
றார்களோவென்றும், என்ன துக்கப்படுகிறார்களோ வென்றும் சிந்
தைகொண்டு அவர்களைப்பார்த்துப்போக மஹர்ஷியின் ஆச்ரமத்து
க்கு வந்தார். அங்கு பல மாளிகைகள் இருக்கக்கண்டு முதல் மாளி
கையில் நுழைய அங்கே ஒரு பெண்ணைக்கண்டார். அவளால்
உபசரிக்கப்பட்டராஜா அவளைப்பார்த்துப் 'பெண்ணே, நீஸுகமா
யிருக்கிறாயா? மஹர்ஷியின் சாபத்துக்குப்பயந்து அவரிடம் உன்
னைக்கொடுத்தேனே? என்ன கஷ்டப்படுகிறாய்' என்று கேட்
டார். இதைக்கேட்டபெண், பிதாவைப்பார்த்து, "எனக்கு ஒரு
குறைவுமில்லை. இந்த மாளிகையையும் இதின் பக்கத்திலுள்ள
அழகான தோட்டத்தையும், இந்த வ்ருக்ஷங்களில் பக்ஷிகள் ஸுக
மாய் சப்தித்துக்கொண்டு ஸஞ்சரிப்பதையும் நீரேபாரும். எனக்கு
சயநங்களும் வஸ்த்ரபூஷணங்களும் வாஹநங்களும் பரிசாரகர்க

ளும் மற்ற விபவங்களும் உம்மிடமிருந்ததற்கு மேலாகவே இருக்கின்றன. ஆகிலும் எனக்கு ஒரு வருத்தமிருக்கிறது. எங்களை எல்லாரையும் கலியாணம்செய்த என்பர்த்தா என் சகோதரிகளை அத்யந்தம் அநாதரித்துவிட்டார். அவர்கள் க்ரஹத்துக்கு ஒருகாலும் அவர் போகிறதில்லை. என்னைவிட்டு அவர் விலகிறதேயில்லை. இந்த ஒரு குறைதான் எனக்கு' என்று சொன்னாள். இதைக்கேட்ட ராஜா விஸ்மிதராய் ஒன்றும் பதில் சொல்லாமல் பக்கத்து மாளிகைக்குப்போனார். அங்கும் ஒரு பெண்ணைக் கண்டு அவளையும் குசலப்ரச்நம்பண்ண, அவளும் தன் பாக்யங்களையும் தன்னிடம் தன் பர்த்தாவின் அளவற்ற ப்ரீதியையும் சொல்லி, தன்னைவிட்டுத் தன் பர்த்தாவிலகாததால் தன் சகோதரிகள் அதந்யைகளாய் ஆகிவிட்டார்கள் என்று சொல்லித் துக்கித்தாள். இப்படியே ஐம்பது பெண்களிடமும்போய் பார்த்து அவரவர் பாக்கியத்தையும் தனித்தனியாய் மஹர்ஷியின் வால்லப்யத்தையும் கேட்டுப் பரமவிஸ்மிதராய்க் கடைசியில் ஏகாந்தத்தில் வீற்றிருந்த ஸௌபரி மஹர்ஷியைக்கண்டு, 'மகாநுபாவ, உம்முடைய தபஸ்ஸின் மஹிமையை நானறியாமல் அபசாரப்பட்டேன். என் குற்றத்தை க்ஷமிக்கவேணும். இவ்வளவு பெருமைக்கும் உம்முடைய தபஸ்ஸே காரணமென்று அறிந்தேன்' என்று சொல்லி ஸ்தோத்தித்தார். பிறகு ராஜா அவருடன் சிலகாலம் சுகமாயிருந்து மிகவும் ஸந்துஷ்டராய்ப் பெண்களால் பூஜிக்கப்பட்டு தன் நகரத்துக்குப்போனார். ஸௌபரி மஹர்ஷியும் அந்தப் பெண்களுடன் வெகுகாலம் கூடியிருந்து தான் மநோரதித்த ஸுகங்களையெல்லாம் அநுபவித்தார். நாளடைவில் அவருக்கு நூற்றைம்பது பிள்ளைகள் உண்டானார்கள். அவர்களிடத்திலும் பிறகு காலக்ரமமாய் உண்டான பௌத்ரர்கள், பௌத்ரிகளிடத்திலும் மனமுழுதும் செல்ல ருஷி தன் ப்ரஹ்மத்யாநத்தையும் தபஸ்ஸையும் மறந்துவிட்டார். இப்படி பலவர்ஷங்களான பிறகு, மஹர்ஷிக்கு ஒருநாள் தன் நினைவு வந்து, தான் ஸம்ஸாரத்தில் மூழ்கிவிட்டதையும் வீணில் காலம் போக்குவதையும் அறிந்து, தன் அக்ஞதையை நினைத்து நினைத்துத் துக்கித்துப் பின்வருமாறு தன்னை வெறுத்துக்கொண்டார். "ஐயோ, என் ஆசைகள் ஒன்றின்மேல் ஒன்றாய் வ்ருத்தியடைந்து முடிவற்றனவாய் ஆகிவிட்டன. முதலில் பிள்ளைகள் வேணுமென்றிருந்தேன். பிறகு அவர்கள் பார்யைகளுடன் சுகிப்பதைப் பார்க்க



விரும்பினேன். பிறகு அவர்களுக்குக் குழந்தைகள் உண்டாகவில்லையென்று கவலைப்பட்டேன். இப்படி ஒவ்வொரு ஆசையும் நிறைவேற மேன்மேல் ஆசைகள் ஜநித்தன. இதற்கெல்லாம் காரணமாய் என் ஸமாதியை நிர்மூலமாக்கினது ஜலத்தில் ஸகுடும்பனான மத்ஸ்ய ராஜனைக்கண்டது தான் என்று நிச்சயிக்கிறேன். ஓர் குடும்பியின் ஸங்கத்தினால் எனக்குக் குடும்பத்தில் ஆசையுண்டாயிற்று. அதனால் தபஸ்ஸின் விக்நங்களெல்லாம் உண்டாயின.

𑌨𑌿𑌃𑌸𑌙𑍍𑌗𑌤𑌾 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌪𑌦𑌂 𑌯𑌤𑍀𑌨𑌾𑌂 𑌸𑌂𑌗𑌾𑌦𑌶𑍇𑌷𑌾𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑌿
𑌦𑍋𑌷𑌾𑌃 । 𑌆𑌰𑍂𑌢𑌯𑍋𑌗𑍋𑌽𑌪𑌿 𑌨𑌿𑌪𑌾𑌤𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑌃 𑌸𑌂𑌗𑍇𑌨
𑌯𑍋𑌗𑍀 𑌕𑌿𑌮𑍁𑌤𑌾𑌲𑍍𑌪𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 ॥

ஸங்கத்தைத் தவிர்ப்பது மோக்ஷத்துக்கு ஹேது. ஸங்கத்தினால் எல்லா தோஷங்களும் உண்டாகின்றன. யோகம் ஸித்தித்து ஸ்திரசித்தனாயானவனுக்கும் ஸங்கம்நேர்ந்தால் அவன் கீழேவிழுவானென்பதற்கு நானே த்ருஷ்டாந்தம். யோகம் ஸித்திக்காதவனுக்கு ஸங்கம் விக்ந காரியென்பதற்குக் கேட்பானேன். ஆகையால் நான்இனி இந்தஸங்கம் முழுவதையும் விட்டு, மறுபடியும் தபஸ்ஸுசெய்து, எல்லாஜகத்துக்கும் காரணமாய், அணுவுக்கும் அணுவாய், ஈஶ்வரர்களுக்கும் ஈஶ்வரரான ஸ்ரீமந் நாராயணனை ஆராதிக்கிறேன்". இப்படி ருஷி தன்மநஸ்ஸில் நிச்சயித்து புத்ர பௌத்ர வர்க்கங்களைவிட்டுக் காட்டுக்குப் பத்நிகளுடன்போய், சிலகாலம் வாநப்ரஸ்தவ்ருத்தியை அநுஸரித்து, அதைவிட்டு ஸந்யாஸியாகி, எல்லாந்துறந்து சரீரத்தின்முடிவில், அஜராயும் அநந்தராயும் அச்யுதனுமான பகவானையடைந்தார்.

இவர் சரித்ரத்தினால் '𑌨 𑌜𑌾𑌤𑍁 𑌕𑌾𑌮𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑌾𑌮𑍁𑌪𑌭𑍋𑌗𑍇𑌨 𑌶𑌾𑌮𑍍𑌯𑌤𑌿 । 𑌹𑌵𑌿𑌷𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑍇𑌵 𑌭𑍂𑌯 𑌏𑌵𑌾𑌭𑌿𑌵𑌰𑍍𑌧𑌤𑍇' என்று சொல்லுகிறபடி, ஐஹிகமான ஸுகங்களை அநுபவித்து அவைகளில் த்ருப்தியடைவது அஸாத்யமென்றும், '𑌸𑌂𑌗𑌾𑌦𑌶𑍇𑌷𑌾𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑌿𑌦𑍋𑌷𑌾𑌃' என்று சொன்னபடி, போக்யமான விஷயங்கள் ஸமீபத்திலிருந்தால் இந்த்ரியங்களை யடக்குவது யோகிக்கும் கூடாதகார்யம் என்றும் நன்கு விளங்குகிறது.

ஓர் பௌராணிகர்.

ஸ்ரீ:

# ஸ்ரீ சதுஸ்லோகீ விவரணம்.

(தொடர்ச்சி.)

யஸ்யாஸ்தே மஹிமாநமாத்மந இவ த்வத்வல்லபோऽபி ப்ரபு: நாலம் மாதுமியத்தயா நிரவதிம் நித்யாநுகூலம் ஸ்வத: | தாம் த்வாம் தாஸ இதி ப்ரபந்ந இதி ச ஸ்தோஷ்யாம்யஹம் நிர்பயோ, லோகைகேஸ்வரி லோகநாததயிதே தாந்தே தயாம் தே விதந் || உ ||

முன் ஸ்லோகத்தின் முடிவில் 'உன்னை ஸ்துதிக்க நாம் எவ்வளவு' என்றதால் பிராட்டியின் மேன்மை ஸங்க்ரஹமாய் ஸூசிக்கப்பட்டது. அதை இரண்டாவது ஸ்லோகத்தில் விரிவாய் வர்ணித்துப் பிராட்டியின் தயாகுணத்தையும் தன் தயநீயமான தசையையும் எடுத்துச்சொல்லித் தான் ஸ்துதிப்பது யுக்தந்தான் என்று அருளிச்செய்கிறார்.

யஸ்யாஸ்தே - ஸ்ருதிகளிலும் ஸ்ம்ருதிகளிலும் ப்ரஸித்தையான உன்னுடைய. 'அஸ்யேஸாநா ஜகதோ விஷ்ணுபத்நீ', 'ஹ்ரீஸ்ச தே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ', 'ஈஸ்வரீம் ஸர்வபூதாநாம்' முதலான ஸ்ருதிகளிலும், 'விஷ்ணோஸ்ஸ்ரீரநபாயிநீ', 'ஸர்வேஷ்வவிஷ்ணுநாமாஞ்ச ஜகந்மாத்ரம் பராத்பரம்', 'ஸைஷ நாராயண ஸ்ரீமாந்' முதலான ஸ்ம்ருதிகளிலும் நிர்த்தாரணம் பண்ணப்பட்ட உன்பெருமை ஒருவராலும் அபலாபம் செய்யக்கூடியதில்லை, என்றுகருத்து. 'மஹிமாநம்' - முன்சொன்ன விபூதி



த்வய சேஷித்வம், ஸ்ரீ என்னும் பெயரால் ஸித்தமான சிறந்த குணங்களின் சேர்க்கை, இவைகளாகிற பெருமையை. 'ஆத்மந இவ' - தன்னுடைய பெருமையைப்போல், 'த்வத்வல்லப:' உன் ப்ரியதமரான பகவான், 'ப்ரபுரபி' - ஸர்வஜ்ஞராயும் ஸர்வ ஸக்தியாயும் இருக்கச்செய்தேயும். 'நாலம் மாதுமியத்தயா' - இவ்வளவென்று பரிச்சேதஞ்செய்யச் சக்தியற்றவர். அன்றிக்கே, 'ப்ரபு: த்வத்வல்லபோऽபி' - ஸர்வசக்தியான பகவானும் நீயுங்கூட, 'நாலம் மாதுமியத்தயா' - இவ்வளவென்று அறுதியிடச் சக்தியற்றவர்கள். இது கூடுமோ? ஸர்வஜ்ஞத்வம் நிலைநிற்க, இவள் பெருமை அவர் ஜ்ஞாநத்துக்கு அடங்கவேண்டாமோ? 'இவளும் அதை யறுதியிடச் சக்தியற்றவள்' என்பதும் சரியா? என்றால், அந்த மஹிமையின் ஸ்வபாவத்தைத் தெளிவிக்கிறார், 'நிரவதிம் நித்யாநுகூலம் ஸ்வத:' - என்று. 'நிரவதிம்' - ஸ்வபாவத்தில் எல்லையில்லாதது. எண்ணிலடங்கியதை அறியாதது ஸர்வஜ்ஞனுக்குக் குறைவாகும். எண்ணிறந்ததைப் பரிச்சிந்நமாயறிவதே ஸர்வஜ்ஞனுக்குத் தோஷம். இதை ஆழ்வான் ஸ்ரீ ஸ்தவத்தில் உபபாதித்திருக்கிறார். "தேவி த்வந்மஹிமாவதிர் ந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே, யத்யப்யேவமதாபி நைவ யுவயோ ஸர்வஜ்ஞதா ஹீயதே | யந்நாஸ்த்யேவ ததஜ்ஞதாமநுகுணாம் ஸர்வஜ்ஞதாயா விது:, வ்யோமாம்போஜமிதந்தயா கில விதந் ஜ்ஞாதேதி ந வ்யுச்யதே". இதனர்த்தம், 'தேவி, உன் மஹிமையின் எல்லையைப் பகவானும் அறியார், நீயுமறியாய். ஆகிலும் உங்களுக்குள்ள ஸர்வஜ்ஞர்கள் என்னும் பெருமைக்குக் குறைவில்லை. ஏனெனில், எது வஸ்துகதியில் இல்லாததோ, அதை இல்லையென்று அறிவதே ஸர்வஜ்ஞதைக்கு அநுரூபம். ககநாரவிந்தத்தை நான் நேரில் கண்டேன் என்போனை உலகத்தார் உன்மத்தனென்னத் தடையென்ன?'. வேதார்த்த ஸங்க்ரஹத்திலும் பிராட்டியை 'அநவதிக மஹிமா மஹிஷீ' என்று பகவான்பாஷ்

யக்காரர் நிர்த்தேசிக்கிருர். ஆகையால், உன் பெருமைக்கு அள வில்லை, என்கிருர். மேலும் அது 'நிருபாதிக ஸுகம் ஸதா' - நிருபாதிகமாயும் நித்யமாயுமுள்ள அநுகூலஸ்வபாவமுள்ளது. மற்ற வஸ்துக்கள் அனுகூலமாயிருப்பது ஒவ்வோரு பாதியைக்கொண்டு. பிராட்டியின் மஹிமை அவளை யடையு மெல்லார்க்கும் நிர்ஹேதுக மாய் ஆநந்தத்தைக் கொடுக்கக்கூடியது. இதனுல் பகவானை யடை வோர் ஸ்ரீ விஸிஷ்டனுன பகவானையே அடைவதால் இவள்மஹி மைக்கு ப்ராப்யத்தில் அந்தர்ப்பாவமுண்டென்றதாயிற்று. இந்த மஹிமையின் வைசித்ரியத்தை ச்ரத்தாஸூக்தம், மேதாஸூக் தம், க்ஷிதி ஸூக்தம், வாக்ஸூக்தம் முதலானதுகளிலும் விசேஷ மாய் ஸ்ரீ ஸூக்தத்திலும் பரக்கக்கண்டு கொள்ளவேணும்.

தாம—ஸர்வஜ்ஞனறியப் பெருமைபெற்ற. ஸ்வாம - வேத ப்ரதிபாதிதமான பெருமையையும் ஆச்ரயிப்போருக் கநுகுணமான ஸௌலப்யத்தையு முடைத்தான வுன்னை; இந்த ஸௌலப்யத் தால் என் ஸ்தோத்ரத்தைக் கேட்கச் செவிசாய்த்துக் கருணையுடன் அபிமுகமாயிருக்கும் உன்னை. 'தாஸஜதி' - இதுவரையிலும் மற ந்திருந்த ஸ்வபாவ ஸித்தமான தாஸத்வத்தை இப்போதறிந்த நான். 'தாஸபூதா ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மந: பரமாத்மந:' - என்றல்லவோ ப்ரமாணமிருப்பது. 'ப்ரபந்நஜதிவ' - நிற்கதி யாய் உன்னைச்சரணமாகவடைந்து. 'ப்ரேஷ்யஸ்ய க்ஷமிதவ்யம் மே ந க்ஷந்தவ்யாஸ்த்வயி' என்கிறபடி நான் உன்னைச்சரணமடை ந்ததால் நீ என் குற்றங்களை நீக்கி என் ஸ்துதியை அங்கீகரிக்கவே ணுமென்கிருர். 'நிர்பயஸ்தோஷ்யாமி' - பயமற்றவனுய் ஸ்தோ த்ரம் செய்கிறேன். நித்யஸூரிகளாலும் வேதங்களாலும் பூர்ண மாய் ஸ்துதிக்கமுடியாத உன்னை, 'அஹம்' - அநாதியாய் ஸம் ஸாரத்திலுழலும் பாபியாயும், உன்னை அறிந்து ஸ்துதிக்கச் சக்தி யற்றவனுயு மிருக்கிற நான். அன்றிக்கே, இதுவரையிற்போலில்லா



மல் என் தாஸத்வத்தை யறிந்து உன்னைச்சரணமடைந்த நான். 'ஸ்தோஷ்யாமி' - முன்னடைந்த சங்கையைத்தவிர்த்து ஸ்தோ த்ரம் செய்யலானேன். நானெங்கே, உன்மஹிமை எங்கே? என்று ஒதுங்கிநின்ற நிலையைவிட்டு, ஸ்தோத்ரஞ்செய்யத் துணிந்தேன், என்கிருர். நம்மைச்சரண மடைவதென்ன? நமக்கு ஈஸ்வரத்வம் உண்டோ? என்று பிராட்டிகேட்கச் சொல்லுகிருர். 'லோகேஸ்வரி' - சேதநாசேதநங்களான ஸமஸ்தத்துக்கும் எவர் ஒருவரே ஈஸ்வரரோ அவருக்குப் பத்நியானவளே. ஈஸ்வர னென்பதால் மற்றெல்லாத்துக்கும் நியந்தாவாய்ச் சேஷியானவர், என்று பொருள். தான் ஒன்றுக்கும் நியாம்யமா யில்லாமல் எல்லாவற்றையும் தானே ஆளுபவர் ஈஸ்வரராவர். 'பதிம் விஸ்வஸ்யாத்மேஸ்வரம்' என்னும் ஸ்ருதியும், முதலில் விஸ்வத்துக்கும் சேஷியா யிருப்பதைச்சொல்லித் தன்னையே தனக்கு ஈஸ்வர னுயுள்ளவர் என்று சொல்வதால், ஈஸ்வரத்வம் சேஷித்வத்தை யும் அடக்கியுள்ளது என்பதாயிற்று. அப்படியே, 'யோ லோக த்ரயமாவிஸ்ய பிபர்த்யவ்யய ஈஸ்வர:' என்னும் கீதாவாக்யத் தின் பொருளை ஸங்க்ரஹித்த ஆளவந்தாரும் 'வ்யாபநாத் பர ணாத் ஸ்வாம்யாத் நாராயண: புருஷோத்தம:' என்ருர். அதாவது, ஈஸ்வர ஸப்தார்த்தமாக வ்யாபநத்தையும் பரணமாகிய நியந் த்ருத்வத்தையும் ஸ்வாமித்வமாகிய சேஷித்வத்தையும் சேர்த்து வ்யாக்யாநம் செய்தார். அப்படிப்பட்ட ஈஸ்வரனுக்கு பத்நீ யாகையால் உன்னையடைந்த நான் மற்ற ஈஸ்வரத்வாபிமானி களுக்குப் பயப்படவேண்டுவதென்ன? என்கிருர்—'லோகே ஸ்வரி' என்பதால். என் ப்ரஸாதமிருந்தென்ன? உன் அப ராதங்களைத் தண்டதாரான பெருமாள் ஸிக்ஷியாரோ என்ன, 'லோகநாயதயிதே' என்கிருர். லோகநாதருக்கு நீ வல்லபையல் லவோ? அவர் உன் இஷ்டத்தைத் தவிர்த்து சிக்ஷிக்கவல்லரோ? உன் ப்ரஸாதமிருந்தால் அவரிடமும் எனக்குப் பயமில்லை, என்

கிறார். நீ அபராதியானால் நான் தான் எப்படிப் பொறுப்பது? சாஸ்த்ரங்களை நிரர்த்தமாக்குவது எனக்குத்தர்மமோ? என்ன, தாஸோऽயம் விதித - நான் தாஸன், அதாவது என் தாஸத்வத்தை யறிந்து இனிப் பாபாபிஸந்திகளை நிறுத்தி, உன்னைச் சரணமடைந்தவன். என்னைப் போன்றவர்களிடத்தில் உன் வாத்ஸல்யம் ப்ரஸித்தமன்றோ? நீ அநுக்ரஹைக சீலையன்றோ? 'நித்யஜ்ஞாத நிக்ரஹாம்' என்பது உன்ஸ்வரூபமன்றோ? நான் என்னவபராதியாயினும் உன்னையடைந்த மாத்ரத்தில் உன்கருணை விஜ்ரும்பிக்காதோ? 'யதி நித்ய தயாபாத்ர ப்ரஹ்மணோ ஸத்யவாதிநி। ப்ரஶ்ரிதே தாஸீமேவ ஸமேவ நிவஸாம்யஹம்'॥ என்று நீயே யருளிச் செய்திருக்கிறாய். ஆகையால் நிர்ப்பயமாய் உன்னை ஸ்தோத்ரம் செய்கிறேன், என்கிறார். 'கருணாம் வேதமாதரம்' 'கருணாம்ருத தேவீம்' என்கிற நாமங்களும் இவளுக்குத் தயை அந்யாத்ருசை யென்பதைக் காட்டுகின்றன.

ஆக முதலில் ஸ்தோத்ரம் செய்ய எப்படிக்கூடும் என்று ஆக்ஷேபித்து, நிர்ப்பயமாய் ஸ்தோத்ரம் செய்கிறேன் என்று முடித்த இரண்டுஶ்லோகங்களினால் லக்ஷ்மியின் ஸ்தோத்ரமே செய்யப்பட்டதென்று அறியவேண்டும். இரண்டுஶ்லோகங்களினாலும் பிராட்டியின் உபயவிபூதி சேஷித்வமும், ஆஶ்ரயணீயத்வமும், புருஷகாரத்வமும், வாத்ஸல்யாதி குணபூர்த்தியும், நிரவதிக மஹிமவத்வமும், அநுக்ரஹஶீலத்வமும், கருணாப்ரசுரத்வமும், ஆச்ரித தோஷாதர்ஶித்வமும் சொல்லப்பட்டன.

இப்படிப் பிராட்டிக்கு உபயவிபூதி சேஷித்வ மிருக்கச் செய்தேயும் விஷ்ணுபத்நீத்வத்தினால் ஸித்தமான பகவத் சேஷத்வமும் ததீயத்வமும், ப்ராமாணிகமாகையால், இதை நிஷேதிப்பது போல் தோன்றும் வசநங்களுக்கு என்ன பரிஹாரம் என்று சிலர் கேட்கலாம். அப்படிப் பட்ட வசநங்கள் எவைகள் என்றால், 'யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கிதபராதீநோ விதத்தேऽகிலம்' என்றும், 'ஜகந்நாயகோऽபி நாராயணோ யந்நய ஸம்ரக்ஷணாத்வ யத்ஸாந்நாந் தாதேஶ்வர:' என்றும் இருக்கிற கூரத்தாழ்வான் வசநங்களும்,

'ஶ்ரியை ஸமஸ்த சிதசித் விதாந வ்யஸநம் ஹரே: ।
அங்கீகாரிபிர் ஆலோகை: ஸார்த்தயந்த்யை க்ருதாஞ்ஜலி: ॥'

'யத்ப்ரூபங்கா: ப்ரமாணம் ஸ்திரசரரசநா தாரதம்யே முராரே:'

'தவ ஸாம்ராஜ்யம் ஸஹவதீம் ஶ்ரியம் ஸ்வதந்த்ராவ்யூடேந்த்ர: வயமிஹ ஶரண: ஶ்ரீரங்கநாதம்'

'தவஸம்பந்தீஶம் ஸம்ஸ்துதி கமலே மங்களவதம்'



என்கிற பட்டர் வாக்யங்களும், இன்னும் இதுபோன்ற வாக்யங்களுந்தான். இந்தவாக்யங்களால் பகவானுக்கு ஸ்ருஷ்டியாதி கார்யங்களில் லக்ஷ்மீபராதீநதையும், அவளுடைய ஈக்ஷணத்தினால் அநுக்ரஹமும், சில காரணங்களால் அவளுக்கு ஆதிக்யமும், அவளாலேயே மங்களத்வமும் உண்டாகிறதாய் ஏற்படுகிறது. இது யுக்தமா?

இந்த ஆக்ஷேபம் சரியல்ல. இந்த வாக்யங்கள் லக்ஷ்மியிடத்தில் பகவானுக்கு இருக்கும் ப்ரேமாதிசயத்தைத் தெரிவிக்கின்றன. லௌகிக தம்பதிகளைப்போல் இந்த ஆதி தம்பதிகளுக்கும் பரஸ்பரம் ஏற்பட்டிருக்கும் வால்லப்யத்தைக் காட்ட, ஆழ்வான் முதலான ஆசார்யர்கள் கொஞ்சம் அத்யுக்தியாக வாக்யங்களை ப்பிரயோகித்திருக்கிறார்கள் என்று கொள்ளவேணுமே யொழிய,

ஸ்திரமான இதரப்பிரமாணங்களுக்கு விரோதமாய் நிர்த்தாரணம் பண்ணினார்களென்று சொல்வது யுக்தமல்ல. பகவானுக்குப் பத்நீ ஸ்வதஸ்ஸித்தமான விசேஷணமாகையால் அவளால் அவருக்கு உத்கர்ஷமும் மாங்கள்யமும் சொன்னது அவர் பெருமையையே பங்க்யந்தரமாய்ச் சொன்னதாகுமே யல்லாமல், அவருக்கு ஒரு தோஷத்தையும் உண்டு பண்ணாது. இந்தப் பரிஹாரத்தை ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அனுக்ரஹித்து, "ஸம்வாதே³ ப்ரணீதாந்யாந்யபி காமிநீ ஸூக்திவாக்யாநி ப்ரமாணாநாம் ஸ்வவாக்யாந்தராணாம் வா விரோதே⁴ ந ஸ்வார்த²பராணி" என்று அருளிச் செய்திருக்கிறார். அதாவது, பத்நீத்வத்தால் பிராட்டிக்கு ஏற்படும் பகவத்சேஷத்வம் ப்ராமாணிக மாகையால் அதற்கு விருத்தமாகத் தோன்றும் ஆப்தர்களின் வாக்யங்கள் அதற்கநுகுணமாய் அர்த்தம் பண்ணப் படவேண்டும், என்கிறார். இப்படிக் கொள்ளாத போது 'ந தத்ஸமஶ்சாப்⁴யதி⁴கஶ்ச த்³ருஶ்யதே' 'ஸநகஸ்ஸஹாஸா ந த்³விதீயோऽஸ்தி ஸாஹ்ஸா' முதலான ப்ரமாணங்கள் விரோதிக்கும். இன்னும் பிராட்டியின் ஸ்வரூப குண விபவங்களில் உண்டாகும் சோத்யங்களை ஶ்லோக வ்யாக்யானங்களின் முடிவில் அநுவதித்துப் பரிஹரிப்போம்.

விஷ்ணுதாஸன்.

---

## வேதாந்த தீபிகை சந்தாதாரர்களுக்கு அறிக்கை.

இந்தப் பத்ரிகையின் நாளது வரை செலுத்திய சந்தாத் தொகையை இதுவரையிலும் செலுத்தாதவர்கள் ஷை தொகையை க்ருபைசெய்து மானேஜர் விலாஸத்துக்குத் தாமதமின்றி அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. அடுத்த ஸஞ்சிகையை வி. பி. மூலமாய் அனுப்பும்படி எழுதினால் அப்படியே செய்யப்படும்.

☞ வருஷக் கட்டணம் ரூபா. 2—0—0.

---

ஸ்ரீ:

# ருதுமதீ விவாஹம்.

சென்ற ஆடி மீ ஸஞ்சிகையில் அச்சிட்டிருந்த அபரார்க்கர்மதம் என்ற விஷயத்தின் கடைசியில், 'அவர்களநுமதியை அபேக்ஷிக்க வேண்டுவதில்லை' என்பதற்குப்பிந்தி அடியிற்கண்டபடி அபரார்க்கர் வ்யாக்யானத்தில் இருக்கின்றது. அதன் அர்த்தத்தில் பின்னாபிப்ராயங்களைக்காட்டி இந்த ஸஞ்சிகையில் பிந்தி இரண்டு கடிதங்கள் அச்சிட்டிருக்கிறோம். இந்தப் பாகத்தை 'ஓர் ஆஸ்திகர்' சேர்த்து மொழிபெயர்க்காததினால், அதன் விபரம் பத்திரிகை ஸஹ்ருதயர்கள் அறிய, அந்த ப்ரகரணத்தின் முடிவுவரையிலும் மூலத்தையும், நாமறிந்தவரையில் சரியான தமிழ்ப் பிரதியையும் இங்கு அச்சிடுகிறோம்.

யதா²ஹ போ³தா⁴யந:—

'த்ரீணி வர்ஷாண்ய்ருதுமதீ காங்க்ஷேத பித்ருஶாஸநம் ।
ததஶ்சதுர்தே² வர்ஷே து விந்தே³த ஸத்³ருஶம் பதிம் ॥
அவித்³யமாநே ஸத்³ருஶே கு³ணஹீநமபி ஶ்ரயேத் ॥'

ஸத்³ருஶோ கு³ணவாந் । யதா² விஜ்ஞாநேஶ்வர:—

'க³ம்யம் த்வபா⁴வே தா³த்ரூணாம் கந்யா குர்யாத் ஸ்வயம்வரம்' ॥
இதி । கு³ணவத்³வராபா⁴வே ஸதி த்³ரஷ்டவ்ய: ।
தத³பா⁴வே து வர்ஷத்ரயப்ரதீக்ஷாவஸநீயம் ॥

அத்ர மநு:—

'அலங்காரம் நாத³தீ³த பித்ர்யம் கந்யா ஸ்வயம்வரா ।
மாத்ருகம் ப்⁴ராத்ருத³த்தம் வா ஸ்தே²யம் ஸ்யாத்³யதி³ தம் ஹரேத் ॥'

பௌதாயந ஸ்ம்ருதி ஸ ஏவாஹ—

‘வித்ருந் ந ஈத்ருஶாத்ஸூர்த்வம் தத: கந்யா ஸ்ருதா ஶீலம் ஸம்வது ।
ஸ ஹி ஸாம்யாதிக்ராமதே ஸ்ரூதந் ப்ரதிரூபாய நாச ॥’

இதனர்த்தம் :—

(இந்தவிஷயத்தில்) போதாயநர் சொல்லுவதாவது :—‘ருது வையடைந்தவள் மூன்று வருஷம் வரையில் பிதாவின் கட்டளையை எதிர்பார்க்கக் கடவள். பிறகு நான்காவது வருஷத்தில் தகுந்த பதியை (தானாகவே) அடையலாம்’. ‘தகுந்த’ (ஸத்ருஶம்) என்றால் ‘குணமுள்ள’ என்றுபொருள்.

‘மூன்று ருதுக்கள் கடந்தே கந்யை ஸ்வயமாக வரிக்கவேண்டும்’ என்று விஷ்ணுஸ்ம்ருதியில் இருக்கிறதே யென்றால், அது குணமுள்ள பர்த்தாகிடைத்தால் அந்தப்பக்ஷத்தில் சொன்னதாக அறியவேண்டும். அப்படிக் கிடைக்காவிட்டால் மூன்று வர்ஷங்கள் எதிர்பார்க்கவேண்டியது.

இங்கே மநுவசநம்—

தானாய் வரிக்கும் கந்யை பிதாவினாலாவது, தாயாரினாலாவது, சகோதரனாலாவது போடப்பட்ட பூஷணங்களை எடுத்துக் கொள்ளக்கூடாது. அப்படிச் செய்வது திருட்டாகும்.

வரன்விஷயத்திலும் அவரே (மனு) சொல்வது : “ருதுவான கந்யையை அடைகிறவன் (அவள்) பிதாவுக்குச் சுல்க்கம் கொடுக்கக்கூடாது. அவர் ருதுக்களைத் தடுத்ததினால் பெண்ணின் ஸ்வாம்யத்திலிருந்து விலகினவராய் ஆகிறார்.”

பத்ராதிபர்.

ஸ்ரீ:

# ஸுபாஷிதமாலா.

(தொடர்ச்சி.)

பலம் கதகவ்ருக்ஷஸ்ய யத்யப்யம்பு ப்ரஸாதகம் ।
ந நாமக்ரஹணாதேவ தஸ்ய வாரி ப்ரஸீததி ॥ ௬॥

தேத்தாங்கொட்டையைத்தேய்த்து ஜலத்தில் கலந்தால் சிலகாலத்துக்குள் அது நன்றாய் தெளிந்துவிடுமென்பது வாஸ்தவமே. ஆகிலும் அப்படிச் செய்யாமல் அந்தக்கொட்டையின் பெயரை வெகு பக்தியாய் அந்த ஜலத்துக்கு அபிமந்த்ரணம் மாத்ரம் எவ்வளவுகாலம் செய்தாலும் அதுதெளியுமா? அதுபோல், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வர்ணத்துக்கும் ஆச்ரமத்துக்கும் உரித்தான அநுஷ்டாநங்களைச் செய்தால் மாத்ரம் அவர்களுக்குச் சரீரம் சுத்தமாகி ஜ்ஞாநம் சிறக்குமேயொழிய, கேவலம் உயர்ந்த வர்ணாச்ரமங்களின் அடையாளங்களைத் தரிப்பதாலே அவர்கள் மேன்மையடையார்கள்.

---

க்ருஷ்ணோऽபி கர்ஜந் பரிதோऽப்யதிகம் ஸசஞ்சலாம் தநும் ததோऽபி । ஜீவநதாந மஹிம்நைவ ஸ ஏவ விஶ்வவஶ்யதாமேதி ॥ ௭॥

ஒருவன் எவ்வளவு துஷ்டசாரித்ர முள்ளவனானாலும், எவ்வளவு கர்வத்துடன் கர்ஜிப்பவனானாலும், ப்ரதிக்ஷணம் மாறுதலடையும் சித்தவ்ருத்தியுள்ளவனானாலும், இதர்களின் பிழைப்புக்குத் தகுந்த த்ரவ்யம் கொடுப்பவனானால், அவனை உலகம் எல்லாம் சூழ்ந்து புகழும். இதற்கு மேகந்தை உதாஹரணமாகக் கொள்ளலாம். இது கறுத்தும், கர்ஜித்துக்கொண்டும், சபலையென்னும் மின்னல் நிறைந்த சரீரத்தை யுள்ளதாயிருந்தும் மழையை (ஜீவநத்தை) த்தரும் குணமிருப்பதால் எல்லாராலும் ப்ரியத்துடன் பார்க்கப்படுகிறது. (இது கபிஸ்தலம் ரெங்காசார்யர் ஸ்வாமி ஸுபாஷிதம்.)

---

நீயந்தே தோயதே ந ஹி தீக்ஷ்ணதா க்ஷாரா:
ஶ்ரவ ஸ்வயந்தே ஶ்வேதம் பரஸ்ய த: கிம் த்யாங்க்ஷதி ।
ஸ்வயம் ஹ்ருதே பாவிஶோ ந பவே பம்ஹதி க்ஷிதி:
கதயந்தே ஸந்திதி: கஸ்ய கிம் நஸ: க்ஷாம்யதி ॥ ௮॥

குணகுணங்களை அறியச்சக்தியில்லாத மூடர்களின் அபிப்ராயங்கள் எவ்விதமானாலும், அவை மதிக்கத்தகுந்தவைகளல்ல. அவர்கள் புகழும் நிந்தையும் இரண்டும் ப்ரயோஜந மற்றவைகள். இதற்குத் த்ருஷ்டாந்தங்கள் பல சொல்லலாம். ஒருவன் ஸூர்யனிடத்தில் த்வேஷத்தினால் அவரைப்பார்ப்பதில்லை யென்று கண்களை மூடிக்கொண்டாலும், ஸூர்யன் உலகத்துக்கு மறைக்கப்படுவாரோ? எவருக்கும் இனிமையான குரலையுள்ள குயிலின் சப்தத்தில் அவமதியைப் பாராட்டி ஒருவன் தன் காதுகளை யடைத்துக்கொண்டால், அந்தக்குயில் காக்கையாகிவிடுமோ? விளையாட்டில் தன்னைச்சுற்றிக் கொள்ளும் அறிவிலிகள் உலகம் சுழல்வதாய் தப்பெண்ணங்கொண்டால், அதுபற்றி உலகம் சுழலுமோ? வெறிகொண்டவொருவன் ஆகாயத்தை அடித்து நொறுக்குவதாய்த்தன் முஷ்டிகளால் முயன்றால், ஆகாயத்துக்கு ஏதாவது கலக்கமுண்டாகுமோ? 'ஹஸந்தி ஜ்ருஂபமாணாய ஹஸ்த ஸ்தய ஶஶிநம் பதி ஜநாஃ' என்பதுபோல், யதாவஸ்திதமான வஸ்துஸ்வபாவங்களும் தத்வங்களும், ஆக்ரஹத்துடன் மந்தமதிகள் செய்யும் க்ஷேபங்களினால், மாறுதலடையா.

---

ஸந்நா நாவிக யஷ்டிரம்புநிபதிதா ஶைலஶ்ச ஸம்க்ஷோபிணீ, ஸம்யாஃ பஶ்யத ஶர்கரா ஜலதரோ ஶ்லிஷ்டா ந தாரா பயஃ । ஹா ஹா தாரக ஶர்வரீ ஜலநிதிஃ ஜீர்ணா ச நௌர்மாருதம், தீரம் ஸ்வயம் தூரம் பஶ்ய வா ஹஸ்தே தவா ஸ்மத்து பயம் ॥ ௬.

ஸம்ஸாரத்தில் துக்கப்பட்டு உதவியற்றவர்களாய் உய்யும்வகை யறியாமல் தபிக்கிறவர்கள் பகவானைச் சரணமடைவதை யல்லாமல் வேறுகதி யற்றவர்கள். அவர் கருணைகூர்ந்து கடைத்தேறச்செய்தாலொழிய வேறுமார்க்கமில்லை. தன் முயற்சியாலேயே பிழைப்பதென்பது சாத்தியமில்லை. இந்த அர்த்தத்தை ஓர் கவி அந்யாபதேசமாய் ஓர் ஓடக்காரன் சொல்வதுபோலப் பின்வருமாறு சொல்லுகிறார். 'ஓ மாருதமே, நடுக்கடலில் அகப்பட்டிருக்கும் என் ஓடத்துக்கு வந்திருக்கும் ஆபத்துகளைக்கேளும். வழக்கமாய் ஓடம் செல்லும்வழி மறைந்து விட்டது; ஓடத்தைத்தள்ளத் துடுப்பும் கடலில் கை நழுவி விழுந்துவிட்டது. போகும்வழியில் மலைகள் நெருங்கி இருக்கின்றன. ஆகாயம் மேகங்களால் நிறைந்து இருண்டிருப்பதால், நட்சத்திரங்களும் மறைந்துவிட்டன. கரையும் கண்களுக்கு எட்டினவரையில் காணப்படவில்லை. இந்தஸ்திதியில் ஓடமும் உடைந்து தண்ணீர்கொண்டுவருகிறது. இந்த ஆபத்துகளில் இருக்கும் படகைக் கவிழ்க்கவும் ம்ருதுவாய் கரையில் சேர்க்கவும் உமக்குத்திறமை உண்டு. நீர் இதை நல்லவழிக்குக்கொண்டுவரக் கருணைகூரவேண்டும்', என்கிறார்.

---

☞ [கடிதங்கள் எழுதுகிறவர்களுக்கு அறிக்கை.—கடிதங்கள் எழுதுகிறவர்களின் அபிப்ராயங்களுக்குப் பத்ராதிபர் உத்தரவாதமில்லை. கடிதங்கள் நல்ல காகிதத்தில் ஒருபக்கத்தில் தெளிவாக எழுதப்படவேண்டும். எழுதுகிறவர்கள் பெயரும் விலாஸமும் பத்ராதிபருக்கு வ்யக்தமாய் அறிவிக்கப்படவேண்டும். வேதாந்ததீபிகை பத்ராதிபர்.]

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## (1)

## ருதுமதீ விவாஹம்.

சென்ற வருஷம் பங்குனி மாஸத்தில் காஞ்சீபுரத்தில் நடந்தேறிய பரிஷத்தில் விசாரிக்கப்பட்ட விஷயங்களில் ஒன்றாகிய ருதுமதீ விவாஹத்தைப்பற்றிச் சிலமாதங்களாய் இம்மாதாந்தரப் பத்ரிகையில் சில உபந்யாஸங்கள் ப்ரசுரமாகி வருகின்றன.

அவ் வுபந்யாஸங்கள், காஞ்சீபுரம் பரிஷத்தில் ஏற்பட்ட நான்கு விதமான அபிப்ராயங்களில் மூன்றுவிதமான அபிப்பிராயங்களைக் கண்டித்தும், ஒருவித அபிப்ராயத்தைப் போஷித்தும் வருவனபோல் காணப்படுகின்றன. ஆனால் கண்டிக்கப்படும் பக்ஷங்களுக்கு ஏற்பட்ட ப்ரமாணங்களைப் பாதிக்கும் யுக்திகள் ஒன்றும் எழுதப்படவில்லை. மேற்படி பரிஷத்தில் ஏற்பட்ட அபிப்ராய பேதங்களும், அவைகளின் ப்ரமாணங்களுமாவன.

(1) கந்யகைகளுக்கு ருதுவான பிறகு விவாஹம் செய்வதுதான் ஶாஸ்த்ரீயம். இதற்கு ப்ரமாணங்கள் :—முதலாவது, மந்த்ர லிங்கங்கள். அதாவது விவாஹவிதியில் விநியோகிக்கப்பட்டிருக்கும் மந்திரங்களின் அர்த்தங்களை விசாரிக்குமளவில், அவைகள் அக் கந்யகை யுவதியாயிருக்க வேண்டுமென்று ஜ்ஞாபிக்கின்றன. இந்த மந்திரார்த்த ஸாமர்த்தியத்தைச் சாஸ்திரங்களில் மந்த்ரலிங்கங்களென்று வ்யவஹரிப்பது வழக்கம். இந்த வைதிக லிங்கங்கள் ஸ்ம்ருதிகளைவிட ப்ரபலப் பிரமாணங்களென்று பட்ட குமாரிலர் தந்த்ர வார்த்திகத்திற் சொல்லி யிருக்கிறார்.

இரண்டாவது: விவாஹத்தின் நான்காவது இராத்திரியில் விவாஹாங்கமான ஸமாவேசநம் முதலிய சப்தங்களால் ஸம்போகத்தை விதிக்கும் போதாயநாதி க்ருஹ்ய ஸூத்ரங்கள்.

(2) கந்யகைளுக்கு கர்ப்பாஷ்டமம் முதல் ருதுவாகும் முன்வரையில் விவாஹம் செய்வது முக்கியம். எந்தக் காரணத்தாலாவது அந்த முக்கிய காலத்தில் விவாஹம் நடவாவிடில் ருதுவானபின் நான்கு வருஷம் வரையில் கௌணகாலம். இதற்கு மந்வாதிஸ்ம்ருதி வசநங்களே பிரமாணம்.

(3) ருதுவானபிறகு நான்கு வருஷங்கள் வரையில் விவாஹஞ்செய்வது ஆபத்கல்பம். அதற்குப் பிரமாணங்கள் இரண்டாவது அபிப்பிராயக்காரர்கள் சொல்லிய ஸ்ம்ருதி வசநங்கள் தான்.

(4) ஸம்வர்த்தாதி ஸ்ம்ருதிகளில் ருதுமதீ விவாஹம் நிஷேதிக்கப்பட்டிருப்பதால் ருதுவாகும் முன்னமேதான் கன்னிகைகளுக்கு விவாஹம்செய்யவேண்டும். இரண்டு மூன்று பக்ஷக்காரர்கள் சொல்லிய அஸ்வதந்த்ர வசநங்கள் பாராசரஸ்மிருதிக்கு விருத்தமாக விருப்பதால் யுகாந்தரவிஷயங்களென்று ஒதுக்கிவிடவேண்டும். முதல் பக்ஷக்காரர்கள் சொல்லும் ஶ்ருதிலிங்கங்கள் ஸ்மிருதிகளுக்கு விருத்தமாக விருப்பதால் ஆதரிக்கத்தக்கவையல்ல. இதற்குப் பிரமாண வாக்கியங்களெல்லாம் காஞ்சீபுரம் பரிஷத்துக் கம்மிட்டியாரால் அச்சிடப்பட்டிருக்கும் புஸ்தகத்தைப்பார்க்க விஶதமாகும்.

அப்படிக்கல்லாமல் தற்காலமிருக்கும் லோகாசாரத்திலுள்ள ச்ரத்தாதிசயத்தை மாத்திரம் முன்னிட்டு, சில நிஷேத வசநங்களை மாத்திரம் வரைந்து, ஜனங்களை வ்யாமோஹிக்கச்செய்து பரிஷத்தில் அபிப்பிராயம் கொடுத்தவர்களை அப்பிராமாணிகர்களென்றாவது நாஸ்திகர்களென்றாவது எண்ணும்படி குறிப்பிப்பது எப்படி உசிதமாகும்?

ஆகையால் உபந்யாஸிகளாகிய வித்வான்களின் அபிப்பிராயத்தை நன்காராய்ந்து கால தேச வைஷம்யத்தினால் ஜனங்களுக்கு உண்டாயிருக்கும் கஷ்டநிஷ்ரேங்களையும் தற்காலத்திலாசாரம் எவ்வாறு நடந்துவருகிறதென்பதையும் பர்யாலோசித்து தத்வார்த்தத்தை விளக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இதுநிற்க, சென்ற ஆடி மாஸத்தில் பிரசுரமான ஸஞ்சிகையில் அபரார்க்கர் மதமென்று தலைப்பெயரும் ஆஸ்திகரென்னும் கையொப்பமுமுள்ள ஓர் உபந்யாஸம் காணப்படுகிறது. அவ்வுபந்நியாஸத்தில் பெண்களுக்கு ருதுவாகு முன்னமே விவாஹம் செய்வது தான் அபரார்க்க தேவருடைய அபிப்பிராயமென்கிற தாத்பரியமடங்கி யிருக்கிறதாய்த் தோன்றுகிறது. அந்தக் கிரந்தத்தில் விவாஹ காலத்தைப்பற்றிச் சொல்லிய ப்ரகரணத்தை முற்றிலும் பார்க்கும்பொழுது ஆஸ்திகர் கூறியபடி ருதுவாகு முன்தான் கந்யகைகளுக்கு விவாஹம் பிரசஸ்தமென்று ஏற்பட்டாலும், ருதுவானபிறகும் நான்கு வருஷம் வரையில் விவாஹம் செய்யலாமென்று காணப்படுகிறது.



அஃது எப்படி யென்றால்:—

ஶ்லோ ॥ கம்யந்த்வபாவே தாத்ரூணாம் கந்யா குர்யாத்ஸ்வயம்வரம் । யாஜ்ஞ, 1 - 64. । (வ்யாக்யாநம்) தாத்ரூணாம் - பித்ராதீநாம், அபாவே ஸ்வயமேவ கந்யா கம்யம் - கமநார்ஹம் ஸவர்ணம் உத்க்ருஷ்டவர்ணம் வா பாதித்யாதிதோஷரஹிதம் வரம் ஸத்வரம் குர்யாத் । ஏதச்ச ப்ராக்ரஜோதர்ஶநாத் । ருதௌ த்ருஷ்டே தஸ்மிந் பித்ராதிஷு ஸத்ஸ்வபி ஸ்வயமேவ கந்யா வரம் குர்யாத் । ந பித்ராதி ஶாஸநமபேக்ஷேத । யதாஹ போதாயநஃ । த்ரீணி வர்ஷாண்ய்ருதுமதீ காங்க்ஷேத பித்ருஶாஸநம் । ததஶ்சதுர்தே வர்ஷே து விந்தேத ஸத்ருஶம் பதிம் ॥ அவித்யமாநே ஸத்ருஶே குணஹீநமபி ஶ்ரயேத் ॥ ஸத்ருஶோ குணவாந் । யத்து விஷ்ணுநோக்தம் - ருதுத்ரயமுபாஸ்யைவ கந்யா குர்யாத்ஸ்வயம்வரம் - இதி, தத் குணவத்வராபேக்ஷமிதி த்ரஷ்டவ்யம் । ததபாவே து வர்ஷத்ரயமுபாஸநீயம்

இந்த வாக்யங்களால் 'பிதாமுதலிய தாதாக்கள் ஒருவருமில்லாவிடில் கந்யகை தானாகவே சாஸ்திரத்தில் சொல்லிய குணங்கள் பொருந்திய ஓர் வரனை ருதுவாகு முன் வரித்துக்கொள்ள வேண்டும். பிதாமுதலிய தாதாக்களிருப்பாராயின் ருதுவாகி மூன்று வருஷம் வரையிலும் அவர்களுடைய தானத்தை எதிர்பார்க்கவேண்டும். அதற்குள்ளவர்கள் தானம் செய்யாவிடின் நான்காவது வருஷத்தில் அவர்களனுமதியை எதிர்பாராமலே சாஸ்திரோக்த குணங்கள் பொருந்திய ஓர்வரனைத் தானாகவே வரித்துக்கொள்ளவேண்டும். குணவான் கிடைக்காவிடில், குணமில்லாதவனையாவது வரித்து விடவேண்டும். ஒருஸமயம் உத்தமகுணங்களையுடைய வரன் கிடைத்தால் மூன்று ருதுகாலம் வரையில் பிதாவினுடைய தானத்தை எதிர்பார்த்து, அவர் தானம் செய்யாவிடின், தானேவரித்துக் கொள்ளலாம். குணமுள்ளவரன் கிடைக்காவிடின் மூன்று வருஷம் வரையில் எதிர்பார்த்தே தீரவேண்டும்' என்னும் அர்த்தம் விஶதமாய் ஏற்படுகிறதல்லவா?

தவிரவும், கம்யம் த்வபாவே தாத்ரூணாம் - என்கிற மூலவசனத்திற்கு, பிதா முதலியோர் இல்லாவிடில் கன்னிகை ருதுவாகும் முன் குணவானுன வரனைத்தேடி வரித்துக்கொள்ள வேண்டுமென்று வ்யாக்கியானஞ் செய்து விட்டுப் பிறகு போதாயனுதி வசனங்களினுல் நான்கு வருஷம் வரையில் விவாஹகால முண்டென்று நிரூபித்திருப்பது அபரார்க்க தேவரைத்தவிர வேறு யாரபிப்பிராயமென்று கொள்ளலாம். இப்படிக்கிருக்க இந்த பிரகரணத்தின் முன்பாகத்திலுள்ள சில வசனங்களை மாத்திர முதாஹரித்து, கந்யகைகளுக்கு ருதுவாகுமுன் விவாஹம்செய்வது மாத்திரந்தான் அபரார்க்கமதமென்று சொல்லியிருப்பது பொருந்துமா வென்பதை ஆஸ்திகரே கொஞ்சம் நிதானத்துடன் யோசிக்கவேண்டியதில்லையா? தவிரவும் ஆஸ்திகர் அபிப்பிராயத்திற்கு அவர் உதாஹரித்த வசநமே விரோதமல்லவா? எப்படியெனில், நாரத: - கந்யா நர்தும் உபேக்ஷேத பாந்தவேப்யோ நிவேதயேத்। ந சேத் தத்யுஸ்தாம் பித்ராத்யாஸ்தே ஸ்யு: ப்ரூணஹபிஸ்ஸமா: ॥ இந்த வசநமாஸ்திகரால் உதாஹரிக்கப் பட்டிருக்கிறது. இதனர்த்தம்: கன்னிகை தான் ருதுவானதை உபேக்ஷிக்கலாகாது. பிதாமுதலியோருக்குத் தெரியப்படுத்தவேண்டும். அவர்கள் சரியான வரனைத்தேடிக் கொடுக்காவிடில் கர்ப்பவதம்செய்த தோஷத்தை யடைகிறுர்கள், என்பது. இந்த வசநமே ருதுவான பிறகும் கந்யகைக்கு விவாஹகால முண்டென்பதற்குப் பிரமாணமாகவில்லையா? ஆகையால் இந்த ப்ரகரணத்தை ஆநுபூர்வியாக விசாரிக்குமளவில் ஆஸ்திக ருதாஹரித்த - 'பித்ருவேஶ்மநி யா கந்யா ரஜ: பஶ்யத்யஸம்ஸ்க்ருதா। ப்ரூணஹத்யா பிதுஸ்தஸ்யா: ஸா கந்யா வ்ருஷலீ ஸ்ம்ருதா' ॥ என்கிற காஶ்யப வசனமும், 'யஸ்தாம் வரயேத் கந்யாம் ப்ராஹ்மணோ ஜ்ஞாநதுர்பல:। அஶ்ராத்தேயமபாங்க்தேயம் தம் வித்யாத் வ்ருஷலீபதிம் ॥' என்கிற ஸம்வர்த்த வசநமும் குணவானுன வரன் கிடைத்திருந்தும் ருதுவாகும் முன் தானம் செய்யப்படாத கன்னிகையின் விஷயத்திலும், எவ்வளவு அனுப்பத்தியிருந்தாலும் ருதுவுக்குப்பின் மூன்று அல்லது நான்கு வருஷம் விவாகம் செய்யப்படாத கன்னிகையின் விஷயத்திலும், அந்தக் கன்னிகையை விவாஹம்செய்த வரன் விஷயத்திலும் சரிதார்த்தமாக வேண்டுமென்பது நியாயமல்லவா? இந்த விஷயங்களில் ஆஸ்திகர் அபரார்க்கமதமென்பது என்ன அபிப்பிராய முள்ளதென்று எண்ணியிருக்கிறுர் என்று அவருபந்நியாஸத்திலிருந்து தெரிந்துகொள்ளக்கூடவில்லை. அதையடுத்த ஸஞ்சிகையில் விவரிப்பாராஞல் உலகத்தாருக்கு மிகுந்த உபகாரமாயிருக்கும்.

ஸ்மார்த்த தத்வ விமர்சீ.



(2)

இந்த ஸஞ்சிகையில் ருதுமதீ விவாஹவிஷயமாய் 'ஸ்மார்த்த தத்வ விமர்சீ' எழுதி யிருக்கும் லிகிதத்தைப் பத்ராதிபர் க்ருபையால் நான் முந்திப்பார்த்தேன். அதில் அபரார்க்கர் மதவிஷயமாய் நான் தமிழில் எழுதியிருந்ததைப்பற்றின ஆக்ஷேபத்தைப்பற்றி மாத்ரம் இங்கு ஸமாதானம் எழுதுகிறேன். காஞ்சீபுரம் பரிஷத்தின் நிர்ணய விஷயமான புஸ்தகம் இன்னும் கிடைக்காததினுல் அதன்விஷயமான ப்ரத்யுத்தரம் இப்பொழுதுசொல்லக்கூடவில்லை. லிகிதத்தில் கண்ட 4-பக்ஷங்களில், அல்லது முதல் மூன்று பக்ஷங்களில் 'தத்வ விமர்ஶி' க்கு அபிமதமானது எதுவென்று கடிதத்திஞல் தெரியவில்லை. அதை விஶதமாய் அறிவித்து, அதன் ஸாதகப்ரமாணங்களைக் கொஞ்சம் விரிவாய் எழுதினுல், மீமாம்ஸகர்களும், இதரபண்டிதர்களும் அந்தப்பக்ஷத்தின் ஸாதுத்வத்தை விசாரிக்க முடியும். ஸ்தூலமாய் 4-வது பக்ஷத்தார்கள் மற்றப் பக்ஷங்களுக்குச்சொல்லும் ஆக்ஷேபங்களை 'தத்வ விமர்சி' அவர்களே சொல்லியிருப்பதால், அதைத் திரும்பவும் சொல்வது அநாவசியம்.

இதுநிற்க, 'தத்வ விமர்சி' எழுதி யிருப்பதில், 'அபரார்க்கருடைய விவாஹப்ரகரணத்தைப் பார்க்கும்பொழுது, ஆஸ்திகர் கூறியபடி ருதுவாகுமுன்தான் கன்னிகைகளுக்கு விவாஹம் ப்ரசஸ்தமென்று ஏற்பட்டாலும், ருதுவானபிறகும் நான்கு வருஷம் வரையில் விவாஹம் செய்யலாமென்று காணப்படுகிறது' என்று கண்டிருக்கிறது. மேற்படி கடிதத்தில், எடுத்தெழுதிய அபார்க்கவசனத்தில், "ஊர்த்வம் து தஸ்மிந், பித்ராதிஷு ஸத்ஸ்வபி ஸ்வயமேவ கந்யா வரம் குர்யாத்। ந பித்ராதிஶாஸநமபேக்ஷேத' என்கிற வாக்யங்களின் அர்த்தம் கவனிக்கப் படவில்லை. இந்த வசநம்வரையில் தமிழில் மொழிபெயர்த்ததற்குக் காரணம், பிந்தி உதாஹரித்த வசநங்கள் முன்வாக்யங்களுக்கு விரோதமாயிருப்பதால் மதாந்தரோபந்யாஸ மாகவே இருக்கவேணும் என்கிற எண்ணத்திஞல்தான். "ஸத்ஸு ப்ராதுர்ஜோ உபருந்தாஸ்। ஊர்த்வம் து தஸ்மிந்' என்கிற வாக்யசைலியையும் து ஶப்தத்திஞல் ஏற்படும் பக்ஷவ்யாவ்ருத்தி ஸ்வாரஸ்யத்தையும் பார்த்தால் ரஜ: ப்ராதுர்ப்பாவம் முதலே கன்னிகைக்கு ஸ்வயம்வர ஸ்வாதந்தரியத்தை அபரார்க்கர் ஒப்புக்கொண்டதாகத் தோன்றுகிறது. அப்படிக்கில்லாவிட்டால், "ஊர்த்வேऽபி தஸ்மிந் வர்ஷத்ரயம் யாவத் கந்யா பித்ராதிஶாஸநமபேக்ஷேத।

தயா வ வொயாயநீ: '' என்று எழுதி இருக்கலாம். அஸங்குசிதமாய் 'நவிருாழி ஶாஸந ஃவெக்ஷத' என்றிருப்பதாலும், அதை அபரார்க்கர் வ்யக்தமாய்த்தானே ஸங்கோசம்செய்து வாக்யம் ரசனைசெய்யாதிருப்பதாலும், போதாயந, விஷ்ணுவசநங்கள் மதாந்தரோபந்யாஸங்கள் என்றும், 'தஜுரொஹ த வஷுருய ஃவாஸநீயம்' என்பதும் அந்தமதத்தில் வ்யாக்யாநமென்றும் கொள்ளுவதில் அநௌசித்யம் தெரியவில்லை. அபரார்க்கர் பிந்தி உதாஹரித்திருக்கும் மநுவசனமாகிய, "விதெரு ந ஜஜ்ராணூக்ஷும் த கநூ்ரா ஃரு தஃதீம் ஹரந | ஸஹிவூாஃ்ரா ஜதிகுாஃெ ஜருதடுநாம் வுதிரெயநாகு'' என்கிற வசனத்தில் 'ஐதஃதீம்' என்கிற பதத்திலும் ஸங்கோசம் செய்ய யாதொரு ப்ரமாணமும் தெரியவில்லை. ருதுப்ரதிரோதனம் என்னும் தோஷம் விவாஹம் செய்துவைக்காத பிதாவுக்கு ருதுவாய் மூன்று வருஷம் வரையிலும் அதற்குப்பிந்தியும் ஸமாநம். போதாயந வசநம் உதாஹரித்த மாத்ரத்தால் அதை வ்யாக்யாதா அப்யுபகமம் செய்ததாய் எண்ணினுல், பிந்தி நியோகவிதியை வ்யாக்யாநம் செய்யும் காலத்தில் அதை ஸ்வ வாக்யத்தால் நிஷேதிக்காத அபரார்க்கர், அதையும் இந்தக்காலத்துக்கு அர்ஹமாய் ஒப்புக்கொண்டதாய் ஆகும். அங்கே ப்ருஹஸ்பதியின் நிஷேதவசனங்கள் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றனவென்றுல், இங்கும் முந்திலேயே காஶ்யப, ஸம்வர்த்தாதி வ்யக்த நிஷேத வசனங்களிருப்பதால் அதுவும் பரத்யுக்தம். இதனுல் போதாயநாதி வசநம் ப்ரமாணமில்லையென்று சொன்னதல்ல. பாராசரஸ்ம்ருதிக்கு விருத்தமா யிருப்பதால் யுகாந்தர விஷயமென்கிற நிர்வாஹமே யுக்தமென்று தோன்றுகிறது. போதாயநவசநம் அபரார்க்கருக்கு அபிமதமென்னும் பக்ஷத்தில், போதாயந வசநத்தினுல் ருதுவுக்குப்பிறகு கந்யாவிவாஹம் செய்யலாமென்று ஏற்பட்டாலும், அது ஆபத்கல்ப மென்றும், அதினுல், ருதுதர்சநத்தினுல் பிதாவுக்கு ஏற்பட்ட தோஷம் நிவாரண மாகவில்லை யென்றும், கன்யையின் ஸ்வாதந்த்ரியம் ருதுகாலமுதல் உண்டாகி இருக்க, மூன்றுவருஷம் வரையில் பிதாவினுல் நிர்த்தேசிக்கப்பட்ட வரனை அவள் வரிக்கவேண்டு மென்றும், பிந்தி அவளுக்குப் பூர்ணஸ்வாதந்த்ரியம் என்றும் அர்த்தம் உசிதமேயொழிய, ருதுவுக்குப்பின் நடக்கும் விவாஹ ஸம்ஸ்காரம் அதற்கு முந்தி நடக்கும் ஸம்ஸ்காரம்போல் அநிந்த்யம் என்று அபரார்க்கர் மதமென்று சொல்வது சரியல்ல. ப்ரபல வ்யாதிகளால் அசக்தனுனவன் ச்ராத்தாதிகளை விடுவதுபோல், அதய்ந்தம் தாரித்ரியாதிகளாலும் அஸாமர்த்யத்தாலும் ஆதுரனுன பிதா கந்யையை விவாஹம்செய்து கொடுக்காவிட்டால், அதற்கு உசிதமான ப்ராயஶ்சித்தம் ஏற்படுத்தி, கந்யை தானே விவாஹம் செய்துகொள்வது ஶாஸ்த்ரஸம்மதமாகட்டும். மூன்று ருதுவுக்குமேல் குணவானுன வரன்கிடைத்தால் பிதாவின் அநுஜ்ஞை வேண்டுவதில்லை என்பதுபோல், மூன்று வர்ஷத்துக்குள் பிதா ஒருவரனை நிர்த்தேசித்தால் அவனைக் கந்யை அங்கீகரிக்க வேணுமென்பது சாஸ்த்ர தாத்பர்யமேயொழிய, ருதுவுக்கு முன்புபோல் பிந்தி மூன்றுவருஷம் வரையில் பிதாவுக்கு நிர்துஷ்டமான அதிகாரமென்றும், அப்படி விவாஹம்செய்வது, முன் விவாஹத்துடன் ஸமாந கல்பமென்றும், அல்லது விஹிதமான கௌண கல்பமென்றும் சொல்வது யுக்தமல்ல. 'மூன்று வருஷம்வரையில் எதிர்பார்த்தே தீரவேண்டும்' என்று தத்வவிமர்ஶி சொல்வது சரியாக இருக்கட்டும். அது கந்யையின் ஹிதத்துக்காகவே யொழிய பிதாவின் அதிகாராநுவ்ருத்தியைச் சொல்ல வந்ததல்ல. இந்தக் காரணங்களினுல் தான் அபரார்க்கர் மதத்தை முன்விவரித்தபோது ஸ்வயம்வராதிகாரம் ருதுமுதல் என்பது அவர் அபிப்ராயமென்று நிறுத்தினது. இந்த ஹேதுக்களை தத்வவிமர்சியும் நிதானமாய் கவனிப்பாரானுல் இதன் ஔசித்யம் விளங்கும்.



'கநூ்ரா நதுூ ஃவெக்ஷத' என்கிற வசநம் ருதுவுக்குப் பிறகு பிதா முதலானவர்களின் தாநாதிகாரத்தை ஸ்தாபிப்பதால் அது என் அபிப்ராயத்துக்கு விரோதமென்று 'தத்வவிமர்சி' யால் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இந்த வசநத்தின் ஸ்வாரஸ்யத்தினுல் 'விதஃமெடுஹெ' 'ஃாதாவெவ' முதலான வசநங்களையும் ஸங்கோசப்படுத்தி, மூன்று வருஷத்துக்குப்பிறகு விவாஹமாகும் கந்யை விஷயத்தில் அவைகளை சரிதார்த்தமாக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆக்ஷேபம் 'தத்வவிமர்சி' யின் அபிப்ராயத்துக்கே விரோதமாகும். எப்படி யென்றுல், விவாஹமில்லாமல் ருதுப்ராதுர்ப்பாவத்தையும், அதற்குப்பிறகு விவாஹத்தையும் ஶாஸ்த்ரீயமென்று அபரார்க்கர் நினைத்திருந்தால், இந்த ஸந்தர்பத்திலேயே போதாயந வசநத்தை உதாஹரித்து, மூன்றுவருஷம் வரையில் காலமிருப்பதால், அதற்குமேல்தான் தோஷமென்றும் அப்படியே மற்றவசநங்களையும் ஸங்கோசம் செய்யவேணுமென்றும் சொல்லி இருக்கலாம். அப்படிச்சொல்லாமல், 'கா ஃ ஃாஃரணாகு' என்னும் வசநத்தை அர்த்தவாதமாக அர்த்தஞ்செய்து, 'ந த கநூ்தடுஜஶடுந ஃஜொஷ தி தெதூ்வஃயடும்' என்றும், 'தயாஸதி வவநாஹுர விரொயஃ' என்றும் உபபாதித்திருக்க வேண்டியதில்லை. ஆகையால், ஆபத்கல்பமான அநுஷ்டானத்தின் ருதுப்ராதுர்ப்பாவத்திலும், கந்யை நிவேதநம் பண்ணவேண்டியவளென்று சொன்னதினுல், அதற்குப்பிந்தியும் ஶாஸ்த்ரீய விவாஹம் ஸம்பவிக்கலாம் என்று சொன்னதாய் ஏற்படாது.

மேற்சொன்ன வசனங்… …ஸங்கோசப்படுத்தக்கூடாதென்றும், இதர வசனங்கள் யுகாந்தர விஷயங்களென்று சொல்வதுதான் யுக்தமென்றும் சொல்ல, இந்த வசனங்களையே மூலத்தில் ப்ராயஶ்சித்தகாண்டம் 7 - வது அத்யாயம் 6-வது 7-வது ஶ்லோகங்களாய் நிபந்தித்திருக்கும் பராஶரர் க்ரந்தமே பர்யாப்தமான ப்ரமாணம். ‘விதஹ்ருதெ…ஹெ’ என்னும் வசனம் மாநவமென்று ஸம்ருதி மாதவீயத்திலிருப்பதால், அதற்கநுகுணமாய் மற்ற மனு வசனங்கள் நயிப்பிக்கப்படவேண்டும்.

ஓர் ஆஸ்திகர்.

---

## (3)

## ஓர் ப்ரஶ்நம்.

ஸ்ரீவேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு,

வேதாந்ததீபிகையில் முன் சில ஸஞ்சிகைகளிலும், சில ஸம்பரதாய க்ரந்தங்களிலும், எழில் திருக்குருகாபுரியில் அவதரித்த ஸ்ரீ சடகோபனுக்கு ‘நம்மாழ்வார்’ என்று திருநாமம் உண்டானதற்கு அடியாக ஓர் ஐதிஹ்யம் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது, ஆதிவண்சடகோபஜீயர் கண்ணிநுண் சிறுத்தாம்பை அநுஸந்தித்து ப்ரார்த்தித்ததின்பேரில், மறைந்திருந்த ஆழ்வார் ஜலத்தில் மிதந்துவந்து ஜீயருக்கு ஸேவை ஸாதித்ததாகவும் ஜீயர் ஆநந்தமடைந்து ‘நம்மாழ்வார்’ என்று எழுந்தருளப் பண்ணினதாகவும், அதுமுதல் ஆதிப்பிரான் நியமநத்தால் ‘நம்மாழ்வார்’ என்கிற பெயர் வழங்கி வருவதாயும் எழுதப்பட்டிருக்கிறது. இதனுல் அதற்கு முந்தி ‘நம்மாழ்வார்’ என்கிற திருநாமம் ஏற்படவில்லையென்று சொன்னதாயிற்று. ஆனுல், அதற்கு முந்தியே, தூப்புல்குல மணிவிளக்கான ஸ்ரீ தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரத்தில் பரதேவதா பாரமார்த்யா திகாரத்தில் “ப்ரபந்ந ஸந்தாந கூடஸ்தரான நம்மாழ்வாரும் ‘ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக் கண்ட சதிர் கண்டேன்’ என்றருளிச்செய்தார்” என்றும், ஸிமெஹாவாய ஶெரயநாதிகாரத்தில், “உபாயோபேய பரமான வாக்யத்வயத்திலும்” என்று தொடங்கி, “நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின்கோயில் சீய்த்து என்றும் நம்மாழ்வார் அருளிச்செய்தார்” என்றும், உபகாரஸங்க்ரஹமென்னும் ரஹஸ்யத்தில், “மயர்வற மதிநலம் பெறும்படி அருளப்பட்ட நம்மாழ்வார்” என்றும், இன்னும் அனேக ஸ்தலங்களில் ‘நம்மாழ்வார்’ என்றும் அருளிச்செய்திருக்கிறபடியால், மேற்சொன்ன ஐதிஹ்யம் எப்படி உபபந்நமாகும்?

இந்த ஸம்சயத்தைக் கடாக்ஷித்து வித்வான்களான ஸ்வாமிகள் நிவ்ருத்தி செய்யவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

சின்னுமு. ர. ஸ்ரீநிவாஸ பாட்டராசார்யர்,

ஸ்ரீ:

# பிரிவுகளின் அறிக்கை.

## மதிராஸ் - சைதாப்பேட்டைப் பிரிவு.

சென்ற ஆவணிமீ 17ௗ ஞாயிற்றுக்கிழமை பகல் 4 - மணிக்குத் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் இந்தப்பிரிவின் ஸங்கம் ஒன்று கூடிற்று. பல அங்கத்தினர்களும் இதரர்களும் வந்திருந்தார்கள். அப்போது ஸ்ரீ சேட்லூர் நரஸிம்ஹமாசாரியர் ஸ்வாமி திருப்பாவையின் 6 - ம் பாட்டாகிய ‘புள்ளும் சிலம்பினகாண்’ என்பதைப்பற்றி விஸ்தாரமாய் பிரஸங்கித்தார். பிறகு அதே மாஸம் 24ௗ ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் அந்த ஸ்வாமியே திருப்பாவை 7 - ம் பாட்டாகிய ‘கீசு கீசென்றெங்கும்’ என்பதைப்பற்றி உபந்யாஸம் செய்தார். உபந்யாஸங்கள் வழக்கம்போல் விசேஷமான அர்த்தபுஷ்டி யுள்ளவைகளாயும் ச்ரோதாக்களுக்கு ஆநந்த ஜநகங்களாயு மிருந்தன.

### உபந்யாஸ ஸங்க்ரஹம்.

ஆறும்பாட்டில், வ்ரதாநுஷ்டாந வ்யாஜமாய்க்கிளம்பின சில கோபிகைகள் பகவத் த்யாநத்தில் ஆழ்ந்து உறங்கினவர்கள்போல் கிடக்கும் இதர கோபிகளை எழுப்ப உத்யோகித்தார்கள். இதற்கு நிதாநம், “ந கஸ்வாது… ந ஸஹஜீத” என்று ந்யாயமிருப்பதால் தாங்கள்செய்யும் க்ருஷ்ணநுபவத்தை யவர்களும் செய்யவேண்டுமென்கிற அபிஸந்திதான். அப்படி எழுப்ப ஓர் கோபிகையின் மாளிகைக்குப்போக, அவள் ‘பொழுது விடிந்ததோ? க்ருஷ்ண கத மநஸ்கைகளான உங்களுணர்த்தி விடிந்ததற்குக் காரணமல்லவே’ என்ன, ‘நீபோன்ற பக்தர்கள் ஸம்ஶ்லேஷத்திலும் விரஹத்திலும் தஞ்சமாய் எண்ணும் பட்சிகள் ஸ்வபாவமாய் விழித்துச் சப்திக்கின்றன’ என்றார்கள். ‘இதுவு மடையாளமல்ல, உங்களரவம் அவைகளுறக்கத்தையும் பாதித்தது’ என்ன, ஆர்த்த த்ராணத்தில் த்ருதவ்ரதனுன பகவானும், தனக்கு ஈடான த்வரையில்லையே யென்று தபித்து அறைந்து செலுத்திப்போகும் கருடாழ்வான் காவல்கொண்ட கோயிலிலே, பாஞ்சஜன்ய த்வநி போல் யுத்தத்துக்கு அழைக்காமல், கைங்கர்யபரர்களெல்லாரையும் கண்விழிக்கச் செய்யும் சங்க த்வாநம் கேட்கிறதே, உனக்கேன் இவ்வளவு உறக்கமென்றார்கள். இதற்கும் கடுக எழுந்திராதவளைப் பயசங்கையால் கிளப்ப எண்ணங்கொண்டு, பகவான் பேய்முலை நஞ்சுண்டதையும் அவருக்கு ஶகடாஸுரனுல் விளைந்த ஆபத்தையும் ஸ்மரிப்பிக்கிறார்கள். இந்தப் பயங்களும், அவைகள் நிவ்ருத்தி

யானதை உணர்ந்த கோபிகைக்கு ப்ரேமவ்ருத்திக்கும் உறக்கத்துக்குமே காரணமாயின. அதை யறிந்த கோபிகைகள், மதுகைடபாதி ப்ரபல விரோதிகளுள்ள நடுக்கடலில் துயில்கொண்ட ஸாஹஸத்தை ஸ்மரிப்பிக்கிறார்கள். அதைக்கேட்ட கோபி, ஸம்பிரமத்துடன் எழுந்திருந்தால் திருவுள்ளத்தில் கிடக்கும் பகவானுக்கு என்னவருமோவென்று பயப்பட, உன்னைப்போல் உள்ளத்தில் துயிலும் பகவானை வஹிக்கும் யோகிகளும் முநிவர்களும் மெள்ளவெழுந்து 'ஹரி' என்று பல தடவை கூறும் சப்தத்தைக் கேட்கவில்லையோ? பரிவுள்ள நீயும் நிச்சங்கமாய் எழுந்திராய், என்றார்கள்.

ஏழாம்பாட்டில், க்ருஷ்ணாநுபவத்தில் பழையளாயிருந்தும் புதியவள்போல் வர்த்திக்கும் வேறொரு கோபிகையை எழுப்புகிறார்கள். அவளும், பொழுது விடிந்ததோவென்ன, எங்களரவத்தைக்கேட்கை யன்றிக்கே தாங்களே ஆணும் பெண்ணும் ஒன்றோடொன்று கலந்து பேசும் பாரத்வாஜபக்ஷிகளின் சப்தம் ஸர்வதிக்கிலும் கேட்கவில்லையோ? என்றார்கள். உஷ: காலத்தில் அவைகளும் கலக்கை உசிதமோ? கலக்கும்போதும் பேசுவது ந்யாயமோ? நானுறங்கினபடியால் கேட்கப் பெற்றிலேனென்ன, போகமுத்கூலமாய் ப்ரணயி மேல்விழுந்தால் ஶாஸ்த்ர வஶ்யர்களும் ஒதுங்குவார்களோ? பரஸ்பர நாமக்ரஹணமும் அநுசிதமோ? நீ கேட்டும் கேட்காதவள்போல் நடிக்கிறாய். விடிந்ததற்கு வேறும் அடையாளமுண்டு. இவ்வூரார் அதிகாலையில் வளைகளின் சப்தம் கிளம்ப, க்ருஷ்ணநிஷ்ட மநஸ்கர்களாய்த் தயிர்கடையும் காலத்தில், ஆநந்த பரிதர்களாய் வாஸனையுள்ள புஷ்பமாலைகளசையக் கைவிசையாய்த் தயிர்கடையும் ஓசைகேட்கவில்லையோ? மந்தரபர்வதத்தினால் கடல் கடைவதை இந்த ஆரவாரம் ஒத்திருக்க, அதுவும் உன்காதில் படவில்லையோ? அந்தக் கோபிகள் கடையும்போது செய்யும் காநத்வநியும் உன் காதில் ஏறவில்லையோ? '[illegible]' என்கிறபடி தயிர் விற்கிறவளும் தன்னை மறந்து தயிர் வேணுமோ என்று கூறாமல் கோவிந்தன் வேணுமோ என்று கூப்பிடும் ஊராகையால், தயிர்கடைகிறவர்களும் காநத்துடன் தயிர்கடைந்து எல்லோரையும் எழுப்புகிறார்களே? நீ உறங்குவதென், என்கிறார்கள். உண்மையில் உறங்காத கோபி இதைக்கேட்டுக் கொஞ்சம் சீற்றமடைய நாயகப் பெண்பிள்ளாய், நீயல்லவோ எங்களுக்குத்தலைவி, நீ பிராட்டிக்கு அபர சரீரமானவளன்றோ? நாங்கள் உன் அதீநர்களல்லவோ? என்று அநுநயிக்கிறார்கள். அவளையுணர்த்தக் கேசவநாமத்தை உச்சரிக்க, அதைக்கேட்டும் த்யாநத்தில் மூழ்கிக் கோபி, தூங்குகிறவள்போல் முட்டாக்கிட்டுக்கொள்ள, அவள் முட்டாக்கைத்தவிர்த்து அவள் தேஜஸ்ஸைப் பார்த்து இவள் பெரியபிராட்டியோடு ஒப்பாவாள் என்று நினைத்து மறுபடியும் எழுப்புகிறார்கள். இதனால் '[illegible]' என்கிறபடி பரஸ்பர போதநம் பாகவத க்ருத்யமென்று ஸூசிக்கப் பட்டது.

ஸ்ரீ:

# திருப்பாவை - ஶ்லோகங்கள்.

'புள்ளும்சிலம்பினகாண்', 'கீசுகீசென்று' என்கிற பாட்டுகளுக்குச் சரியாய்ப் பின்வரும் ஶ்லோகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

டி. ராஜகோபாலாசாரியர்.

ஸ்ரீ:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

---

சிஷ்யஸபையின் அடுத்த மஹாஸங்கம்.

ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யஸபையின் மூன்றாவது வருஷத்து மஹாஸங்கம் அடுத்த டிசம்பர் மாஸத்தின் கடையில் வழக்கம் போல் கூட்டப்படும். அதன் இடமும் மற்றவிபரங்களும் பிந்தித் தெரியப்படுத்தப்படும். அந்த ஸங்கம் அவச்யமென்பதும் அது சரிவர நிறைவேறிவர வேண்டியதில் ஸபையின் அங்கத்தினர்கள் தகுந்த முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதும் எல்லோருக்கும் தெரிந்திருந்தும், அதைப் பெரிய கார்யமாய் நினைத்து அநுகூலிக்கவேண்டியது எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் கடமை என்பதைப்பற்றி இந்த ஸமயத்தில் கொஞ்சம் விவரிப்போம். ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்தம் என்கிற ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் அநாதியாய் ஏற்பட்டுள்ளது. 'நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர:' என்கிறது முதலான ச்ருதிகளும், 'ந தைவம் கேசவாத் பரம்', 'விஷ்ணோஸ் ஸகாசாதுத்பூதம் ஜகத் தத்ரைவ ச ஸ்த்திதம்', 'ஆபோ நாரா இதி ப்ரோக்தா:........தேந நாராயண: ஸ்ம்ருத:' என்பன முதலான ஸ்ம்ருதிகளும் பகவான் நாராயணனே பரதத்வம் என்று முறையிடுகின்றன. இந்த உண்மையை ப்ரதானமாய்க்கொண்டு ஸ்ரீமந் நாராயணனே ப்ராப்யரென்றும் ப்ராபகரென்றும் நம்பி வர்த்திக்கும் இந்த ஸம்பிரதாயஸ்தர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் ஸம்பிரதாயம் வ்ருத்தி ஆகக் கூடியவரையில் ச்ரமப்படவேண்டியது அவச்யமல்லவா? இந்த ஸம்பிரதாய வ்ருத்திதான் ஸ்ரீ சிஷ்யஸபைக்கு முதன்மையான உத்தேசம். இந்த உத்தேசத்தை நிறைவேற்ற, வருஷாந்த ஸங்கங்களில் பண்டிதர்களைக்கொண்டு ஸித்தாந்த விஷயங்களில் உபந்யாஸங்கள் செய்விக்கப்படுகின்றன. இப்



படிப்பட்ட உபந்யாஸங்கள் பல இடங்களிலும் இடைவிடாமல் நடந்துவரும்படி ஏற்பாடுகள் செய்தால் மிகவும் ச்லாக்யமாக விருக்கும். விசேஷமாய்ச் சாஸ்த்ரங்களைக் கஷ்டப்பட்டு அப்யஸித்து ஆசார்யர்களை உபாஸித்து ஸம்பிரதாயார்த்தங்களை நன்கு அறிந்திருக்கும் பல வித்வான்கள் க்ருபையுடன் அல்பஜ்ஞர்களான இதர வைஷ்ணவர்களுக்கு ஸம்பிரதாயத்தின் ஸ்தூலமான அர்த்தங்களை எடுத்துச்சொல்ல ஸித்தமாயிருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த பிரயோஜநங்களைச் செய்துவைத்து அவர்கள் உபந்யாஸங்களை ஸாதரமாய்க் கேட்டு ஸம்பிரதாயத்தில் ருசி ஜநித்த பிறகு, தந்தம் ஆசார்யர்களை நெருங்கி ஸூக்ஷ்மார்த்தங்களைக் க்ரமப்படி அறியவேண்டியது மற்றெல்லார்க்கும் ந்யாய்யமாகும். அப்படியிருக்க அனேகர் நம்முடைய அருமையான ஸித்தாந்தத்தில் கொஞ்சமேனும் ச்ரத்தையில்லாமல் ஸ்வ கார்யங்களிலேயே வ்யாப்ருதர்களா யிருப்பதைப் பார்க்க நிரம்பவும் துக்ககரமாயிருக்கிறது. ஐச்வர்யத்திலும் ப்ரௌடிமையிலும் புத்தி கூர்மையிலும் இதர ஸம்பிரதாயிகளுக்குப் பின்வாங்காமல், பிரஸித்தியடைந்த ஸ்ரீவைஷ்ணவ ப்ரபுக்கள் பலபேர்களி ருக்கிறார்கள். அவர்கள் வீணில் செலவு செய்யும் காலத்திலும் த்ரவ்யத்திலும் ஒரு சிறு பாகத்தை இந்தஸபையில் ஸம்பிரதாய வ்ருத்தி என்கிற உத்தேசத்துக்கு உபகாரமாகச் செலவழிப் பார்களாகில், அவர்களும் அவர்கள் மூலமாய் பல ஸாதாரண ஜநங்களும் நன்மை யடைவார்களென்பதில் ஆக்ஷேபமில்லை. இந்த ஸம்பிரதாய ப்ரவர்த்தந விஷயத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களைத் தவிர மற்றவர்கள் தற்காலம் நல்ல பரிச்ரமத்தை எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்று சொல்லலாம். அத்வைத ஸபையார் உபந்யாஸங்களைப் பற்றி இந்த ஸஞ்சிகையில் பிந்தி எழுதியிருக்கிறோம். திருப்பதியில் மத்வ ஸம்பிரதாயிகளின் ப்ரபலமான ஸம்மேளநமும், அவர்கள் வ்யாபாரங்களும், ஆஸ்க்தியும், ச்ரத்தையும் எல்லாரு மறிந்தவிஷயம். சைவ ஸித்தாந்திகளும் சிலகாலமாய் மிகவும் புகழத்தக்க முயற்சியுடன் தங்கள் ஸம்பிரதாயத்தை உபந்யாஸங்களாலும் பத்ரிகைகளாலும் பிரசாரம் செய்து வருவதைப் பார்க்க ஆநந்த மாயிருக்கிறது. இந்த விஷயத்தில் நம்மவர்களுக்குத் தகுந்த ச்ரத்தை உண்டாகவேண்டியது அவச்யமென்பதற்கு ஸந்தேகமில்லை. ஸ்ரீ சிஷ்யஸபையார் ப்ரவ்ருத்தி

இந்த விஷயத்தில் பலனைக்கொடுக்க வேண்டுமானால் அதற்கு எல்லாரும் த்ரவ்யத்தினாலும் பரிச்ரமத்தினாலும் அநுகூலிக்க வேண்டும். இந்த நகரத்திலும் வெளி நகரங்களிலும் தனிகர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களில் சிலராவது சேர்ந்து நல்ல பண்டிதர்களை முக்யஸ்தலங்களில் உபந்யாஸங்கள் செய்யும் படிக்கு ஏற்பாடு செய்வார்களானால் அது மிகவும் ச்ரேயஸ்கரமான கார்யமாயிருக்கும். அப்படிச் செய்ய அவர்களுக்குத் தோன்றுவிக்கும்படி பகவானைப் ப்ரார்த்திக்கிறோம்.

மேலும் இந்த ஸம்பிரதாயப் பிரவர்த்தந விஷயத்தில் பத்ரிகைகள் பிரசுரிப்பதும் ஒரு முக்யமான மார்க்கம். இந்தக் காலத்தில் ஒவ்வொரு விஷயத்திலும் பல பத்ரிகைகள் ஏற்படுகின்றன. இனி முன் காலங்கள்போல் இதர வ்யாபாரங்களை நிறுத்தி ஸம்பிரதாயார்த்தங்களை அறிய ஆசார்யர்களைத்தேடி பஹுவாய் ஸ்ரீ வைஷ்ணவர்கள் போவார்களென்பது ச்ரமமாய் ஆகிவிட்டது. அப்படி ஆசார்யகளிடத்தில் விச்வாஸத்துடன் போனாலும் ஒரு க்ரந்தத்தையாவது ஆநுபூர்வியாக அவர்களிடம் க்ரஹித்து அதை அனுஷ்டிக்கக் காலவிளம்பம் ஏற்படுமென்றும் தோன்றவில்லை. இந்த ஸ்திதியில் சில விடுதிகாலங்களிலாவது பத்ரிகைமூலமாய் ஸம்பிரதாய விஷயங்களை ஸ்தூலமாய்ப் பார்ப்பதும் அவைகளில் ருசிவுண்டாவதும் அவச்யமென்றே தோன்றுகிறது. இதை உத்தேசித்தே இந்த வேதாந்ததீபிகை சிஷ்யசபையாரால் ஸ்தாபிக்கப்பட்டு நடத்திவரப்படுகிறது. இதைச் சரிவர நடத்திவர த்ரவ்ய ஸகாயம் விசேஷமாய்ச் செய்யவேண்டியதும் அவச்யமென்பதை நாம் விஸ்தரிக்க வேண்டியதில்லை. இது உபயோகமுள்ள ப்ரவ்ருத்தி என்று நிச்சயமாய் எண்ணுகிறவர்கள் இதுவிஷயத்தில் சந்தாதாரர்களைச் சேர்ப்பதிலும் மற்றும் த்ரவ்ய ஸகாயம்செய்வதிலும் ச்ரத்தை வைப்பார்களானால் இது நிரந்தரமாய் நடந்துவரும். இப்படி இந்தப் பத்ரிகைக்கு த்ரவ்யஸகாயம் செய்வதன்னியில் வேறொரு உபகாரமும் அவச்யமாயிருக்கிறது. அதாவது, இந்த ஸம்பிரதாயத்தில் ச்ரத்தையுள்ள பண்டிதர்கள் அடிக்கடி இதற்கு விஷயப்ரதானம் செய்வார்களானால் அது அவர்களுக்கு ஸ்வயம் ப்ரயோஜநமாகவும் ஆகி பல ஸம்பரதாயிகளுக்கு உபகாரகமாகவும் ஆகும். இந்த அம்சத்தில் இந்த பத்ரிகைக்குப் பண்டிதர்கள் செய்யக்கூடிய ஸஹாயம் மிகவும் முக்யமானது. விசேஷமாய்



ஸம்பிரதாய ப்ரவசநத்தில் ஸாமர்த்யமுள்ள வித்வான்கள் இந்த கார்யத்தை உபேக்ஷித்தால், ஸம்பிரதாய ஜ்ஞாநமும் ருசியுமில்லாத இதரர்கள் இது விஷயத்தில் ச்ரத்தை வைப்பார்களென்று எண்ண ந்யாயமில்லை. ஆகையால் விசேஷமாய் பலஸித்தியில்லையென்கிற காரணத்தால் நம் பண்டிதர்களுக்கு உண்டாயிருக்கும் அவஸாதத்தை ஒருவாறு குறைத்து, இம்மாதிரியான பத்ரிகைகளை ஆதரிப்பதும் போஷிப்பதுமான வ்யாபாரத்தில் தங்கள் பரிச்ரமத்தைக் கொஞ்சம் செலவழிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

---

**அத்வைத உபந்யாஸங்கள்.**

சென்ற மாஸத்தில் வித்வான் ப்ரஹ்மஸ்ரீ. கருங்குளம் க்ருஷ்ணசாஸ்த்ரிகள் ஸ்ரீ சங்கராசார்யருடைய தசச்லோகீ விஷயமாய்த் திருநெல்வேலியில் பத்து உபந்யாஸங்கள் செய்துவந்து, கடைசி உபந்யாஸத்தைச் சென்ற செப்டம்பர் மாஸம் ஏழாந்தேதியில் செய்தார்கள். இந்த உபந்யாஸங்கள் கும்பகோணம் அத்வைத ஸபையாருடைய ஏற்பாட்டின் பேரில் செய்யப்பட்டன. மகாகனம் ஸ்ரீ. ஜஸ்டிஸ் ஸுந்தரய்யரவர்களால் இதன் செலவுக்குச் சாச்வதமாய் த்ரவ்ய நிக்ஷேபம் செய்யப்பட்டு அதன் வரும்படியைக்கொண்டு இந்த உத்தமமான தர்மம் நடத்துவருகிறது. உபந்யாஸ விஷயங்களாவன: (1) வேதப்ராமாண்யம், (2) தேஹாத்மவாத நிராகரணம், (3) ஜீவ ஸ்வரூப நிரூபணம், (4) தர்மம், (5) அவஸ்தாத்ரயம், (6) ஸாக்ஷி நிரூபணம், (7) ஈச்வர தத்வம், (8) உபாஸ்தி, (9) சிஷ்யாசார்ய நிரூபணம், (10) சுத்தப்ரஹ்ம நிரூபணம், என்பவைகள். இந்த விஷயங்களை சாஸ்த்ரிகள் சாஸ்த்ரமறியாதவர்களும் எளிதில் அறியும்படி தெளிவாயும், வாசகதாடியாயும், எல்லாரும் அபிநந்திக்கும்படி உபந்யாஸம் செய்தார்கள். முடிவில் ம-ா-ா-ஸ்ரீ. எ. கிருஷ்ணஸாமி அய்யரவர்கள் ஜஸ்டிஸ் அய்யரவர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த பரமோபகாரமான தர்மத்தை ச்லாகித்துப்பேசி, அத்வைத சபையாருடைய ச்ரத்தையையும் அவர்கள் செய்துவரும் நன்மைகளையும் வெளியிட்டார். மேலும் அவர்கள் இந்தச் சபைக்கு முன் பண்டிதராயிருந்து இப்போது காலஞ்சென்ற மஹாவித்வானாகிய கணபதிசாஸ்த்ரிகளின் மிகவும் துக்ககரமான

மரணத்தைப் பற்றியும், அதனால் சபைக்கு நேர்ந்த நஷ்டத்தைப் பற்றியும் எடுத்துப்பேசி, ம-ா-ா-ஸ்ரீ. சுந்தரராமய்யர் அவர்கள் மதவிஷயத்தில் காட்டிவரும் ச்ரத்தையையும், அதனால் உண்டாகும் பெரிய லாபங்களையும் பற்றிப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

இப்படிப்பட்ட உபந்யாஸங்கள் அடிக்கடி நடந்து வரவேண்டியது ரொம்பவும் அவச்யம். ப்ரஹ்மஸ்ரீ. கிருஷ்ணஸாஸ்த்ரிகளின் உபந்யாஸங்களைச் சேர்த்து ஓரேக்ரந்தமாய் அச்சுப் போட்டால் கேட்டநுபவிக்கச் சந்தர்ப்பப் படாதவர்களுக் கெல்லாம் நிரம்பவும் அநுகூலமாயிருக்கும். அத்வைத ஸபையார் இந்த விஷயத்தில் தகுந்த முயற்சிசெய்வார்கள் என்று நம்புகிறோம்.

இவைபோன்ற உபந்யாஸங்கள் விசிஷ்டாத்வைதம், த்வைதம் இந்த ஸம்பரதாயங்களிலும் ஏற்பட்டால் அந்தந்த ஸம்பிரதாயிகளுக்கு உபகாரமாயிருக்கு மென்பது சொல்லவேண்டியதில்லை. இதுவிஷயத்தில் நம் மடாதிபதிகள் ச்ரத்தை வைத்தால் ஸுலபமாய் ஏற்பாடுகள் செய்யலாம். மத்வ ஸபையாரும் அஹோபில மடத்துச் சிஷ்யஸபையாரும் வருஷாந்தங்களில் நடத்திவரும் உபந்யாஸங்கள் இந்த ரீதியை அனுசரித்தவைகளானாலும், அவைகள் போதுமானவைகளல்ல. வித்வான்கள் பாண்டித்யமும் ஜ்ஞானமும் வீண்போகாமல் அவர்களை ஆதரிப்பதும், விசேஷமாய் மதவிஷயங்களை அறியச் சௌகர்யமில்லாதவர்களின் மதச்ரத்தையை வ்ருத்திபண்ணவும் இப்படிப்பட்ட உபந்யாஸங்கள் பலவிடங்களில் நடந்து வரவேண்டியது அவசியம். இந்த விஷயத்தில் ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் ப்ரமுகர்களான லௌகிக கனவான்களும் ச்ரத்தைவைத்தால் தகுந்த ஏற்பாடுகள் செய்யலாம்.

---

**பாஷாத்வைதம்.**

சிலகாலமாய் இந்தத்தேசத்தில் ஓர் புதியதான யத்நம் செய்யப்பட்டு வருகிறது. அது என்னவெனில், இந்தத் தேசத்திலுள்ள முப்பதுகோடிக்கு மேற்பட்ட ஜநங்களும் ஓரேபாஷையை அப்யஸித்துப்பேசி வரவேணுமென்றும், அப்படிச்செய்தால் பலபாஷைகளைக் கற்பதில் ச்ரமம் குறைவதுடன் ஆஸேது ஹிமாசலமுள்ள பலஜாதி



யாரும் ஸுலபமாய் ஒருவருடன் ஒருவர் கலந்துபேசி தங்கள் அபிப்ராயங்களை மற்றவர்களுக்குத் தெரிவிக்கலாமென்றும், அதனால் ஐகமத்யம் அதிகமாய் ஏற்பட்டு தேசத்துக்கு க்ஷேமம் உண்டாகுமென்றும் இந்த பாஷையின் அத்வைதத்தை அதாவது ஏகபாஷா ப்ரசாரத்தை விரும்புவோரின் தாத்பர்யம். அப்படியொரே பாஷையில் எல்லாருக்கும் எண்ணமுண்டானால், அதுக்கு யோக்யமானபாஷை 'ஹிந்தி' என்னும் பாஷையாகத்தான் இருப்பது உசிதமென்றும் இவர்கள் சொல்லுகிறார்கள். இந்த பாஷை வடக்குதேசங்களில் 9-கோடிக்குமேற்பட்ட ஜநங்களால் பேசப்பட்டுவருகிறது. இந்த ஒருபாஷையை அறிந்தால் இந்தியாதேசம் முழுவதும் ச்ரமமில்லாமல் யாத்ரைகள்செய்து எல்லோருடனும் சம்பாஷிக்கலாம். இதைப்போல் அவ்வளவு ஜாஸ்தி ஜநங்கள்பேசி வருகிறபாஷை வேறொருபாஷையுமில்லை. இதற்கு அடுத்தபடியாக பங்காளிபாஷை யிருந்தபோதிலும் ஹிந்திபாஷையே மேற்சொன்ன பலகாரணங்களால் ஏகபாஷையாக விருக்கத் தகுந்ததென்று சொல்லுகிறார்கள். மற்றபாஷைகளையும் அதன் க்ரந்தங்களையும் வீணாக்குவது துக்ககரமான கார்யமாயிருந்தாலும், ஓரேபாஷையை அப்யஸித்துப் பழகிவருவதில் உள்ள பலங்களை உத்தேசித்து, நாம் மற்ற பாஷைகளின் ப்ரசாரத்தை நிறுத்தத் துணியத்தான் வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். இந்த அபிப்ராயம் ஏதோசில அவிம்ருஶ்யகாரிகளின் அபிப்பிராயமல்ல. பங்காளத்தில் ப்ரசித்தியுடன் ஹைகோர்ட்டு ஜட்ஜாக இருந்த ஸ்ரீ. சாரதா சரண மித்ரர் என்னும் கனவானும், நம்தேசத்தில் மிகப்புகழுடன் பலவிஷயங்களில் எல்லாருக்கும் முதன்மையடைந்து இப்போது காலஞ்சென்ற ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களும் இந்த அபிப்ராயத்துக்குப்பொறுத்த போஷகர்கள். இன்னும் பல புத்தியும் சாமர்த்யமும் ஊக்கமும் உள்ள கற்றறிந்தவர்கள் ஓரேபாஷையாய் எங்கும் அப்யஸிப்பது நம்தேசத்துக்கு நிச்சயமாய் ஐகமத்யத்தையும் க்ஷேமத்தையும் கொடுக்குமென்றும் அதை யுத்தேசித்து மற்றைய அசௌகர்யங்களையும் அந்தந்த சில்லரை பாஷைகளிலுள்ள அபிமாநத்தையும் தூரவைக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள்.

இப்படிப் பாஷையின் அத்வைதம் நமக்கு ஸித்திக்காவிட்டாலும், லிபியின் அத்வைதம் அவசியம் ஏற்படவேணுமென்று

மறுபடி இவர்களே சொல்லுகிறார்கள். பலபாஷைகள் ஒன்றுக்கொன்று நெருங்கின ஸாஜாத்யத்தை அடைந்திருக்கின்றன. ஸம்க்ருத ப்ரசுரங்களாயும் அதிலிருந்து உத்பந்நங்களுமான ஹிந்தி பங்காளி, குஜராத்தி, மராட்டி, முதலான பாஷைகளில் பல ஸமமான பதங்களிருப்பதால் எல்லாத்துக்கும் ஒரே லிபியை உபயோகித்துவந்தால் ஒருபாஷை தெரிந்தவர்கள் ஸுலபமாய் மற்றொரு பாஷையைக்கற்க ஹேதுவாகும். தமிழ்முதலான தெற்கிலுள்ள பாஷைகள் ஸம்ஸ்க்ருதத்தின் விகாரங்களல்லாவிடினும் ப்ராயேண ஸமஸ்க்ருத ப்ரசுரங்கள்தான். இவைகளுக்கெல்லாம் ஒரே லிபியாயிருப்பது மிகவும் ஸௌகர்யம் என்று சொல்லுகிறார்கள். அந்த லிபி ஹிந்தி, மராட்டிமுதலான பாஷைகளில் இப்போது உபயோகப்பட்டுவரும் நாகரி அல்லது தேவநாகரி எழுத்தே. இந்தலிபி இப்போது ஸம்ஸ்க்ருதத்துக்கு ஸாதாரணமான லிபியாய் ஆகிவிட்டது. க்ரந்தம், தெலுங்கு, முதலானவைகளைவிட தேவநாகரியில் அச்சிட்ட ஸமஸ்க்ருதப் புஸ்தகங்களே இப்போது விசேஷமாய் ப்ரசாரமுள்ளவைகளாய் இருக்கின்றன. ஆகையால் இந்த லிபியை ஸார்வத்ரிகமாய் அப்யஸித்து அந்தந்தபாஷைகளில் ஏற்படும் க்ரந்தங்களையும், கடிதங்களையும், மற்ற வ்யவஹாரங்களையும் இந்தலிபியாலேயே செய்வது உசிதமென்கிறார்கள்.

ஸமீபத்தில் இந்தவிஷயத்தில் ஆர்யஸமாஜமென்னும் ஸங்கத்தார் யத்நத்தில் பேரில் ஒருசபை கூடி கனம்பொருந்திய ஜஸ்டிஸ் ஸதாசிவய்யரவர்கள் அக்ராஸநாதிபதியாயிருந்து இதன் அநுகூல யுக்திகள் விவரிக்கப்பட்டன. ஜட்ஜவர்களும் இந்த ஏகபாஷாபிநிவேஶம் பலபேர்களுக்கு முதலில் ஏற்றுக்கொள்ள அசக்யமாயிருப்பினும், பொதுக்ஷேமத்தைக்கருதினால் இது அவச்யமாய்ச் செய்யவேண்டிய கார்யந்தானென்றும் பொதுலிபி விஷயத்தில் ரோமகலிபி என்னும் இப்போது வழங்கிவரும் இங்கிலீஷ் லிபியே சில அவச்யமான மாறுதல்களுடன் உபயோகப்படுத்த மிகவும் தகுந்ததென்றும் பிரஸங்கித்தார்கள். இந்த இரண்டுவிஷயங்களும், எல்லாரும் தீர்க்கமாய் யோஜிக்கவேண்டியவைகளே. ஒரே ராஜாங்கத்தார் ஆளுகையின்கீழ் இருக்கும் நாமெல்லாரும் ஐகமத்யமடைவது அவச்யமாகையால் அதையுத்தேசித்துப் பாஷையிலும் லிபியிலும் செய்ய யத்நிக்கும் சீர்திருத்தம் அவச்யமானதே, ஆனால்



வழக்கப்பட்ட பந்தாவிலிருந்து அந்தந்த பாஷாபிமாநிகளைப்பேர்ப்பது ஸாத்யமாவென்றும் அதுவிஷயமாய்ச்செய்யும் பிரயத்நம் ஸபலமாக ஏதாவது ஆஸ்பதமுண்டாவென்றும் புத்திசாலிகள் யோஜிக்கவேணும்.

---

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயங்கள்.

இந்தப்பெயருடன் ஓர் உபந்யாஸம் ஓர் ஆஸ்திகரான ஸ்ரீவைஷ்ணவரால் அனுப்பப்பட்டு சென்னமாஸத்திய ஸஞ்சிகையில் அச்சிடப்பட்டது. அதைப் பத்ரிகை ஸுஹ்ருத்துக்கள் நன்றாய்ப் படித்திருப்பார்களென்று நம்புகிறோம். எந்த விஷயங்களிலும் மதபேதங்களுண்டாகி வைஷம்யங்கள் முற்றுவது சோககரமான கார்யமே. அவை உண்டாகாமல் சாத்தியப்பட்டவரையில் முயற்சிசெய்வது உத்தமமான கார்யம். ஆனால் லோகோ பிந்நருசி: என்கிற ஸாமாந்ய ந்யாயம் மதவிஷயத்திலும் பரவி பின்ன பின்னமான அந்தர்மதங்கள் ஒவ்வொரு பெரியமதத்திலும் உண்டாகி யிருப்பதை நாம் காண்கிறோம். இவைகளைப்பரிஹரித்து எல்லோரும் ஏகாபிப்ராயமாயிருப்பது மிகவும் ச்லாக்யந்தான். அபிப்ராயபேதங்கள் அநிவார்யங்களானாலும் தத்ப்ரயுக்தமான த்வேஷாதிகள் உண்டாகாமல் எல்லாரும் ஸௌஹார்த்தத்தைப் பாவிப்பது உசிதம். அப்படியில்லாமல் ஒருதிறத்தாருக்கு உத்வேககரமான கார்யத்தை மற்றொருவர் செய்வதும், அவரபிப்ராயங்களை இகழ்ந்துபேசுவதும் முதலான பேதவர்த்தகமான செய்கைகளை நிவர்த்திப்பதே இக்காலங்களில் உசிதமென்று தோன்றுகிறது. இதனால் அவரவர்கள் ஆசார்யர்களிடத்தில் விஶ்வாஸக் குறைவு உண்டாகவேண்டுமென்று சொல்வதாய் எண்ணக்கூடாது.

---

# ஸ்ரீ அஹோபில மடத்துச்

## சிஷ்ய ஸபையின்

### நிர்வாஹக கமிட்டியார்.

(1911 - 12.)

| | | |
|---|---|---|
| ஸபாத்யக்ஷர் :— | | ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர் எம்,எ., பி. எல்., சென்னை. |
| உபஸபாத்யக்ஷர் :— | ,, | வே. க்ருஷ்ணமாசார்யர் பி.ஏ., டிப்டி கலெக்டர். |
| கார்யதர்ஶி :— | ,, | வி. ராஜகோபாலாசார்யர் பி.ஏ., பி.எல்., சித்தூர். |
| மற்றவர்கள் :— | ,, | வி. ராகவாசார்யர் பி.ஏ., பி.எல்., சென்னை. |
| ,, | ,, | எஸ். வாஸுதேவாசார்யர் பி.ஏ, எல்.டி., சென்னை. |
| ,, | ,, | டி. கோதண்டராம ஐயங்கார் பி.ஏ., எம்.எல்., தஞ்சாவூர். |
| ,, | ,, | எஸ். க்ருஷ்ணமாசார்யர், தஞ்சாவூர். |
| ,, | ,, | எஸ். ராஜகோபாலாசார்யர், பி.ஏ., பி.எல்.,கடலூர். |
| ,, | ,, | எஸ். டி. க்ருஷ்ணஐயங்கார் பி.ஏ., பி.எல் ,மதுரை. |
| ,, | ,, | பி. என். க்ருஷ்ணஸாமி ஐயங்கார் பி.ஏ., பி.எல்., கோயம்புத்தூர். |
| ,, | ,, | பி. கே. கருடாசார்யர், பி.ஏ., பெங்களூர். |
| ,, | ,, | டி. ரங்கஸ்வாமி ஐயங்கார் எம்.ஏ., டிப்டி கலெக்டர். |
| ,, | ,, | எம். ஆர். தேஶிகாசார்யர், திருச்சி. |
| ,, | ,, | எஸ். ஆராவமுது ஐயங்கார், திருக்குடந்தை. |
| ,, | ,, | க்ருஷ்ண ஐயங்கார், கோமல். |
| ,, | ,, | ஆர். நரஸிம்ஹாசார்யர், பி.ஏ., சென்னை. |
| ,, | ,, | பி. டி. ஶேஷாத்ரியாசார்யர், பாலூர். |
| ,, | ,, | வி. துரைஸ்வாமி ஐயங்கார், சென்னை, |

ADRAS.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] பரிதாபி௵ ஐப்பசி௴ [ஸஞ்சிகை 9.

## ஸ்ரீ பாகவத தனி ஶ்லோகி.

ஶ்ருத்வா குணாந் புவநஸுந்தர ஶ்ருண்வதாம் தே நிர்விஶ்ய கர்ணவிவரைர் ஹரதோ(அ)ங்கதாபம்। ரூபம் த்ருஶாம் த்ருஶிமதாமகிலார்த்தலாபம் த்வய்யச்யுதாவிஶதி சித்தமபத்ரபம் மே ॥ ஸ்ரீ பாகவதம், 10, 52, 37.

ஸ்ரீ க்ருஷ்ணபகவான், * "துவரிக்கனிவாய் நிலமங்கை துயர் தீர்ந்துய்யவும்," † "விண்கொளமரர்கள் வேதனைதீரவும், முன் மண்கொள் வசுதேவர்தம் மகனாய் வந்து திண்கொளசுரரைத்தேய வளர்ந்து" வரும்போது, "ராகவத்வே(அ)பவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி" என்றும், "யாந்யந்யாநி யதாஸர்வம் விஹரத:" என்றும், "யஜ்ஞாவேஷவ்யஶ்வியே ஷ்டதாநாம் பாவாம் ஸ்வயம் பிஹ்ரதீ" என்றும் சொல்லுகிறபடியே, பகவானுடைய அவதாரங்கள் தோறும் தானுமொக்க அவதரிக்கும் ஸ்வபாவமுடைய பெரியபிராட்டியும் இந்த ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்துக் கேற்றபடி

* பெரி - திரு. 8. 8. 9.
† பெரியா - திரு. 1. 3 16.

ஸ்ரீ ருக்மிணீதேவியாகக் குண்டிநபுரமென்னும் பட்டணமாண்டு வந்த பீஷ்மகர் என்ற ராஜாவுக்குப் புத்ரியாய் அவதாரஞ்செய்து, ஒருமகள் தன்னையுடைய அவரால் உலகம்நிறைந்த புகழால் திருமகள்போல வளர்க்கப்பட்டுவந்தாள். அப்போது தகப்பனார் ஸபைக்கு வருகிற ப்ராஹ்மணர்களால் புகழ்ந்து பேசப்பட்ட ஸ்ரீக்ருஷ்ணனுடைய திவ்யகல்யாண குணங்களையும் திவ்யஸௌந்தர்யத்தையும் ஸ்ரீ ருக்மிணீதேவி கேட்டு அந்தப்பகவானையே தனக்கு அநுரூபமான பதியாக நினைத்து, * "வாராரும்இளங்கொங்கை வண்ணம் வேறாயினவாறெண்ணாள், எண்ணில் பேராளன் பேரல்லால் பேசாள்" என்கிறபடியே, அவனிடத்திலேயே கரைபுரண்ட காதலுடையவளாயிருக்க, இதைக்கண்ட பீஷ்மகமஹாராஜனும்

† "நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும் சோரும்
நெடிதுயிற்கு.மூண்டறியா ளுறக்கம் பேணாள்
நஞ்சரவிற் றுயிலமர்ந்த நம்பீ யென்னும்
வம்பார்பூம் வயலாலி மைந்தா வென்னும்
அஞ்சிறைய புட்கொடியே யாடும் பாடும்
அணியரங்க மாடுதுமோ தோழீ யென்னும்
என்சிறகின் கீழடங்காப் பெண்ணைப் பெற்றேன்
இருநிலத்தோர் பழிபடைத்தே னேபாவமே"

என்று சிந்தார்ணவகதராய், ‡ "தந்தையும் தாயு முற்றாரும்நிற்கத் தனிவழி போயினா ளென்னும் சொல்லு வந்த பின்னைப் பழிகாப்பதரி" தாகையால் நாமேயிவளை ஸ்ரீக்ருஷ்ணனுக்கு நல்லதோர் கண்ணாலம் செய்துகொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கும் போது, ஆஸுரப்ரக்ருதி யாகையால் கம்ஸ பக்ஷத்தைச் சேர்ந்தவனாயும் ஜந்மஸித்தமான க்ருஷ்ண த்வேஷமுள்ளவனாயுமிருந்த ருக்மியென்கிற மூத்தகுமாரன் க்ருஷ்ணனைப் பலவாறாகத் தூஷித்து ருக்மிணியை சிசுபாலனுக்குக் கொடுக்க வேணுமென்று நிர்ப்பந்திக்க, பீஷ்மகரு மதற்கிசைந்து விவாஹ ஸந்நாஹங்களைச் செய்தார். இந்த வ்ருத்தாந்தத்தை ஸகிகளால் சொல்லக்கேட்ட ருக்மிணிதேவியும் மிகவும் மநம்நொந்து,

* பெரி - திரு. 5. 5. 7.
† திருநெடுந். 12.
‡ நாச் - திரு. 12. 3



* "வாளாய கண்பனிப்ப மென்முலைகள் பொன்னரும்ப
நாணாளும் நின்னினைந்து நைவேற்கோ மண்ணளந்த
தாளாளா! தண்குடந்தை நகராளா! வரையெடுத்த
தோளாளா! என்றனக்கோர் துணையாள னாகாயே."

என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

அவ்வளவில், நெடுநாள் தன்னிடத்தில் பழகினவராய் மிகவும் தனக்கு ஆப்தரான ஒரு வ்ருத்தப் பிராஹ்மணர் வரக்கண்டு அவரை ருக்மிணி,

† "வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீ ழடிவீழ்ச்சி விண்ணப்பம்
கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள்
தங்குமே லென்னாவி தங்குமென் றுரையீரே"

‡ 'என்காத லென்துணைவர்க் குரைத்தி யாகில்
இதுவொப்ப தெமக்கின்ப மில்லை'

என்று பிரார்த்திக்க, அவரும் ஒப்புக்கொள்ளவே, ஏழுஶ்லோகங்களை எழுதிப் பத்ரிகையைப் பிராஹ்மணர் கையில்கொடுத்தாள். அவரும் அதை எடுத்துக்கொண்டு த்வாரகைக்குச்சென்று ஸ்ரீ க்ருஷ்ணனை அணுகி, அவரால் யதார்ஹம் பூஜிக்கப்பட்டு, இளைப்பாறினபிறகு, ஸ்ரீ க்ருஷ்ணனால் வந்தகாரணத்தைக் கேட்கப்பட்டார். அதற்கவர்,

ருக்மிண்யா ப்ரேஷிதோऽஹம் ஸகாஶம் புருஷோத்தம ।
தஸ்யாஸ்ஸந்தேஶலேகோऽயம் க்ரியதாம் தத்ஸமீஹிதம் ॥

"உம்மிடத்தில் ருக்மிணியால் அனுப்பப்பட்டு வந்தேன். அவள் சில சமாசாரங்களை எழுதியனுப்பியிருக்கிறாள். அதைக் கேட்டவநந்தரம் செய்யலாம்" என்று சொல்லிப் பத்ரிகையைத் திருவடியில் ஸமர்ப்பித்தார். 'நீரே இதைப்படியு' மென்று பெருமாள் நியமிக்க, ப்ராஹ்மணர் பத்ரிகையில் எழுதியிருக்கும் ஶ்லோகங்களை விண்ணப்பம் செய்கிறார். அவைகளில் 'ஶ்ருத்வாகுணாந்' என்பது முதல் ஶ்லோகம்.

* பெரி - திரு. 3. 6. 5.
† நாச் - திரு. 8. 7.
‡ திருநெடுந். 27.

இதில், ஒருபெண் முற்படமுகமறியாத புருஷனிடத்தில் லஜ்ஜாபயங்களைவிட்டுத் தன்னபிப்ராயத்தை வெளியிடுவது ஸாஹஸக்ருத்யமன்றோ, என்கிற சங்கையைப் பரிஹரிக்கிறாள். ஹே புவநஸுந்தர - லோகங்களுக்குள் அழகுள்ளவனே. லோகங்களுக்குள் அழகுள்ளவனென்று ப்ரஸித்தனான மன்மதனுங்கூட 'ஸாக்ஷாந்மந்மதமந்மத:' என்கிறபடி உம்முடைய அவயவங்களின் ஏகதேசத்தின் ஸம்பந்தத்தினால் அவ்விதமாய் ப்ரஸித்தியடைந்தவனன்றோ? என்று தாத்பர்யம். * 'அழகியான்தானே அரியுருவன்தானே' என்றார்களிறே. ச்ருண்வதாம் - கேட்பவர்களின். கர்ணவிவரை: - காதுகளின் த்வாரங்கள் வழியாய். நிர்விச்ய - உள்புகுந்து. 'ச்ருணோதி தத்வ்ரண்யஸக்ஷணாத்:' என்றும், † 'கேளாச்செவிகள் செவியல்ல கேட்டாமே' என்றுமிருப்பதால், பகவத்குணங்களைக் கேட்காதசெவிகள் செவிகளல்ல, அவைகளைக்கேட்கும் செவிகளே கர்ணவிவரங்கள், என்றதாயிற்று. அங்கதாபம் - சரீரத்தினுடைய எல்லாதாபத்தையும். அன்றிக்கே, 'அங்க' என்பது ஸம்புத்தியாய், ஹே க்ருஷ்ண, தாபம் - ஸம்ஸாரத்தி லுண்டான தாபத்தை, என்னவுமாம். ஹரத: - போக்குகிற, ‡ 'நமனும் முற்கலனும்பேச நரகில் நின்றார்கள் கேட்க, நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி' என்கிறபடியே, பகவத்குணங்கள் கேட்கப்பட்டால் தாபங்கள் தாமே நிவ்ருத்தங்களாகும், என்றதாயிற்று. ¶ 'அடியார் படுதுயராயின வெல்லாம், நிலந்தரஞ்செய்யும்' என்கிறபடியே அவனால் பெறுவதெல்லாம் அவனுடைய குணாநுஸந்தாநத்தால் பெறலாமிறே. ஆகையாலிறே, திருநாமம் பணிப்பொன், அவன் கட்டிப்பொன், என்று நம்பூர்வர்களின் வார்த்தை. + 'அரியென்றபேரரவம், உள்ளம்புகுந்து குளிர்ந்து' என்கிறபடியே களர்பிளந்தவிடத்தில் ஒருபாட்டம் மழைவிழுந்தாற்போல் தாபங்களைமாற்றி உள்ளத்தைக் குளிரச்செய்யும் என்றதாயிற்று. அன்றிக்கே,

* நான்முகன்திருவந். 22.
† பெரி - திரு. 11. 7. 2.
‡ திருமாலை. 12.
¶ பெரி - திரு. 1. 1. 9.
+ திருப்பாவை. 6.



'ஹரிர்ஹரதி பாபாநி துஷ்டசித்தைரபி ஸ்ம்ருத:' என்கிறபடியே, ஸம்ஸாரிகளின் ஸகல துக்கங்களையும் போக்கடிக்கும், என்றாகவுமாம். அன்றிக்கே, தகப்பனார் ஸதஸ்ஸில் ப்ராஹ்மணனைத் தமர்கள் சொல்லக்கேட்டதுமுதல் அந்தக் குணங்கள் தனக்கு ரஸித்தபடியைச் சொல்லுகிறாளாகவுமாம். தே - உம்முடைய.

குணாயத்தம் லோகே குணிஷு ஹி மதம் மங்களபதம் விபர்யஸ்தம் ஹஸ்திக்ஷிதிதர பவே தத்த்வயி புந: । குணாஸ்ஸத்யஜ்ஞாநப்ரப்ருதய உத த்வத்கததயா சுபீபூயம் யாதா: இதி ஹி நிரணைஷ்ம ச்ருதிவசாத் ॥ (உலகத்தில் குணவான்களுக்கு மாங்கள்யம் குணங்களால் உண்டாகும். உம்விஷயத்தில் இது விபரீதமாயிற்று. ஏனென்றால், ஸத்யம், ஜ்ஞாநம் முதலானகுணங்கள் உம்மையடைந்ததால் சுபங்களாயின வென்று ச்ருதிசொல்லுகிறது.)

என்கிறபடியே, பொன்னுமா யிராவினுப்போலே, அந்தக் கல்யாண குணங்களுக்கும் மேன்மையைக் கொடுக்கக் கூடிய ஸ்வரூப கௌரவத்தை யுடைய உம்முடைய, என்றதாயிற்று. தே குணாந் - உம்முடைய குணங்களை. குணங்களும் உம்முடைய தாகையாலேயே எனக்கு ரஸித்தன வத்தனைபோக்கி குணவானாகையாலே நீர் ரஸித்தீர் என்பதில்லை, என்று தாத்பர்யம். 'ஸகுணாந்' என்று பதத்தைப்பிரித்துக் கொள்ளவுமாகும். அப்பொழுது, * 'குரவையாய்ச்சியரோடு கோத்ததும்' என்பது முதலான உம்முடைய விசித்ர ஸ்வபாவங்களை, என்றதாயிற்று. † 'கடியன் கொடிய னெடியமா லுலகங்கொண்ட வடியன் அறிவருமேனிமாயத்தன் ஆகிலும் கொடியவென் னெஞ்சமவனென்றே கிடக்கும் மெல்லே' என்றும், ‡ 'என்கண்ணன்கள்வம் எனக்குச் செம்மாய் நிற்கு' மென்றும் சொல்லுகிறபடியே நீ முலையடியே நடந்து திரிந்தபடியை யநுஸந்தித் தென்றாகவுமாம். அதுவுமன்றிக்கே, சக்ரவர்த்தித் திருமகனைப்போல், 'நரா: வாநராச்சைவ வக்ஷ்யந்தி பச்யதி' என்கிறபடியே ஏகதார

* திருவாய். 6. 4. 1.
† திருவாய். 5. 3. 5.
‡ திருவாய். 9. 6. 6.

வ்ரதமன்றிக்கே, * ‘தொடுவேசெய்திள வாய்ச்சியர் கண்ணினுள் விடவேசெய்து விழிக்கும்பிரான்’ என்கிறபடியே, யதேஷ்டவ்யாபாரங்களைச் செய்தபடியை, என்றுகவுமாம். இத்தால் ஊர்ப்பொது எனக்குக் கிடைக்காமற்போவதோ, என்ருளாயிற்று.

த்ருஷ்டிமதாம் - கண்படைத்தவர்களின். த்ருஷாம் - கண்களுக்கு. அகிலப்ரயோஜநாஸம் - ஸர்வ ப்ரயோஜநங்களின் லாபமாயிருக்கிற. ரூபம் - உம்முடைய ஸௌந்தர்யத்தையும். ஶ்ருதவாந் - கேட்டு. ‘ததேவ யத்த்ருஷ்டி தத் வக்ஷுஷ:’ என்றும், † ‘காணுதார் கண்ணென்றும் கண்ணல்ல கண்டாமே’ என்றும் சொல்லுகிறபடியே, பகவானுடைய திவ்யரூபத்தைப் பார்த்தவர்களே கண்படைத்தவர்கள், மற்றவர்கள் கண் படைத்தவர்களல்ல, என்று தாத்பர்யம். அவனைப்பார்த்த மாத்ரத்தில், ‘பித்யதே ஹ்ருதயக்ரந்தி: சித்யந்தே ஸர்வஸம்ஶயா: । க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி’ என்றிருப்பதால், அவனைப்பார்ப்பதே ஸர்வபுருஷார்த்தங்களுக்கும் காரணம், என்று தாத்பர்யம். அன்றிக்கே, ‡ ‘பாவிநீயென்றொன்றுசொல்லாய் பாவியேன் காணவந்தே’ என்றும், ¶ ‘ஒருநாள் காணவாராயே’ என்றும் சொல்லுகிறபடியே, அவனைக் காண்கையே ஸர்வ புருஷார்த்தலாபம், என்றுகவுமாம்.

அச்யுத - நழுவவிடாதவரே. உம்மை யடைகிறவர்களை ஒருநாளும் நழுவ விடுகிறதில்லை யென்கிற உம்முடைய திருநாமத்தை யதார்த்தமென்றெண்ணி நான் உம்மை ஆச்ரயிக்கிறேன், என்கிருள். + ‘தம்மை யுகப்பாரைத் தாமுகப்ப ரென்னும்சொல், தம்மிடையே பொய்யானுற் சாதிப்பாராரினியே’, உம்முடைய பேரும் உம்முடைய வார்த்தையும் மெய்யாக வேண்டிற்ருகில் நீர் என்னைக் காப்பாற்றவேண்டிய தவஶ்யம். அப்படிக் கில்லாவிட்டால்,

* திருவாய். 1. 7. 5.
† பெரி - திரு. 11. 7. 1.
‡ திருவாய். 4. 7. 3.
¶ திருவாய். 8. 5. 1.
+ நாச் - திரு. 11. 10.



ஹொஜவ ஸாகர வொவொ
ஸாகர வஹிநஷ்டி தாஸிவம் தஹ வசநம் ।
(ஹவெத்வம் ஸாதரவொஷ
ஸ்ஸாதரவஹிநெ தாஜயம் தவ வசநம் ।)

என்கிறபடியே, மெய்ம்மைபெரு வார்த்தகளாகிற உம்முடைய ‘ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:’ ‘கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணஶ்யதி’ இத்யாதிகளும் ஸமுத்ர கோஷங்களைப்போல் நிரர்த்தங்களாய், உம்முடைய அச்யுதன் முதலிய திருநாமங்களும் மஹாவ்ருக்ஷ ஸமாக்யை உபாதியாய் விடும், என்று கருத்து. அன்றிக்கே, உம்மைச் சேர்ந்தவர்கள் திரும்பி வருவதுண்டோ? ‘ந ச புநராவர்த்ததே’, * ‘போயினற்பின்னை யித்திசைக்கென்றும் பிணைகொடுக்கிலும் போகவொட்டாரே’, ‘யாம் ப்ராப்ய ந நிவர்த்தந்தே’ இத்யாதிகளைக் கண்டிருந்தும் என்னுடைய மனஸ்ஸு உம்மிடத்தில் ப்ராவண்யத்தை யடைந்ததே. இனி அது நமக்கு ஸ்வாதீந மாகுமோ, என்கிருளாகவுமாம்.

† ‘மடநெஞ்ச மென்றுந் தமதென்று மோர்கரு மங்கருதி
விடநெஞ்சை யுற்ருர் விடவோ வமையுமப் பொன்பெயரோன்
தடநெஞ்சங் கீண்ட பிரானுர் தமதடிக்கீழ் விடப்போய்
திடநெஞ்ச மாயெம்மை நீத்தின்று காறுந் திரிகின்றதே’

என்கிறபடியே, இவ்வளவு நான் பழகித்திரிந்த எம்மையும் மறந்து தம்மையும் மறந்து தாம்வந்த கார்யத்தையும் மறந்து அவனிடத்தில் ஏகீபவித்துவிட்டதே. ஆகையால், ‘அச்யுத’ - தன்னை யடைந்தவர்களை நழுவவிடாதவனே, என்கிருளென் ருகவுமாம். ‡ ‘ஆய்மிகு காதலோடு யானிருப்ப யான் விடவந்த வென்தூதியோடே, நீ மிகுபோகத்தை நன்குகந்தாய் அதுவுமுன் கோரம்புக் கேற்கும்’ என்கிருள்.

அபத்ரபம் - லஜ்ஜையைவிட்டு உன்னை வந்தடைந்தது. அதாவது, அவன் நெஞ்சம் கீண்டபிரான் என்பதையும் மறந்து,

* பெரியா - திரு. 4. 5. 2
† திருவிரு. 46.
‡ பெருமா - திரு. 6, 4.

ஸ்த்ரீகளுக்கு அவசியம் வேண்டுவதும் ஸ்வாபாவிகமுமான லஜ்ஜையையும் விட்டது. நான் என்நெஞ்சத்தைப் பறிகொடுத்ததோபாதி, தானும் தன் லஜ்ஜையைப் பறிகொடுத்தது என்கிருள். சித்தம் - என்று நபும்ஸகமாகச் சொன்னதால், 'நபும்ஸகமிதி ஜ்ஞாத்வா தம் ப்ரதி ப்ரேஷிதம் மந: । தத்து தத்ரைவ ரமதே ஹதா: பாணிநிநா வயம்' என்பதுபோலாயிற்று, என்கிருள். அதாவது, நபும்ஸகமென்று தூதுவிட்டோம். அதுவும் நம்மைப் போலவே லீலாரஸத்தை அனுபவியா நின்றது. பாணிநி சொன்னதை நம்பி மோசம் போனேம், என்கிருள். ஸ்வயமாவிஶதி - உம்மிடத்தில் ப்ரவேசித்து விட்டது. அகாதமான கடலில் முழுகினவஸ்து இனி நம்மால் கண்டெடுக்கப்போமோ? நீரும் கடல் வண்ணனல்லவோ? 'ஸமுத்ர இவ காம்பீர்யே' என்றல்லவோ உம்மையும் சொல்லுகிறது. உம்மை ஆச்ரயித்தவர்களை 'பரமம் ஸாம்யமுபைதி' என்றல்லவோ ச்ருதி சொல்லுகிறது. அப்படி உம்மிடம் ப்ரவேசித்த வஸ்து நம்மால் கண்டுபிடிக்கப் போமோ, என்கிருள்.

இத்தால்,

* 'பேரெயில் சூழ்கடல் தென்னி லங்கை
செற்றபிரான் வந்து வீற்றி ருந்த
பேரெயிற் கேபுக்கென் னெஞ்சம் நாடிப்
பேர்த்துவர வெங்குங் காண மாட்டேன்
ஆரையி னியிங்கு டையம் தோழி
என்னெஞ்சங் கூவவல் லாரு மில்லை
ஆரையி னிக்கொண்டென் சாதிக் கின்ற
தென்னெஞ்சம் கண்டது வேகண் டேனே'

என்கிறபடியே, என்னெஞ்ச மவரால பகரிக்கப் பட்டது. இனி மீளப் போகிறதில்லை. இனிநெஞ்ச மில்லாமல் என்னால் செய்யலாவ தொன்றுமில்லை. ஆகையால், அடங்காப் பெண்ணைப் பெற்றவள் பெண்ண பிப்ராயத்தைத் தானநுசரிக்குமாப் போலே நெஞ்சம்போன விடத்தே நானு மநுஸரித்தேன்.

ஆகையால் என்னிடத்தில் தோஷக்ரஹணம் பண்ணவழியில்லை என்கிருளாயிற்று.

சே. நரஸிம்ஹமாசாரியர்.

* திருவாய். 7. 3. 7.

ஸ்ரீ:.

ஸ்ரீ க்ருஷ்ணாய பரமாத்மநே நம:.

# பகவத் கீதா தாத்பர்யம்.

நம் ஸித்தாந்தத்துக்கு மூலப்ரமாணம் வேதம். அதன் உட்கருத்தைச் சந்தேகம், தவறுத லன்னியில் தெரிந்துகொள்வது மந்தமதிகளுக்கு முடியாத கார்யம். ஆகையால் வேதார்த்தங்களைத் தெளிவிக்க, உபப்ரஹ்மணங்களென்று சொல்லப்படும் ஸ்ம்ருதி, புராண, இதிஹாஸங்கள் உண்டாயிருக்கின்றன. இவற்றுள், வேதத்தின் பூர்வபாகமாகிற கர்மகாண்டத்தின் பொருளை ஸ்ம்ருதிகள் வெளியிடுகின்றன. உத்தரபாகமாகிற உபநிஷத்துக்களின் பொருளைப் புராணங்களும் இதிஹாஸங்களும் வெளியிடுகின்றன. புராணங்களைக் காட்டிலும் இதிஹாஸங்கள் உபப்பிரஹ்மணத்தில் சிறந்தவைகள். இதிஹாஸங்களாவன, ஸ்ரீமத் ராமாயணமும் மஹாபாரதமும். ராமாயணத்தில் பல விசேஷார்த்தங்களை லக்ஷ்மணன், பரதன், இவர்களின் நிஷ்டைகளைப் பற்றினவும், ஸீதாப்பிராட்டியின் வைபவத்தைப் பற்றினவுமான உபந்யாஸங்களால் முன் வேதாந்ததீபிகை ஸஞ்சிகைகளில் விவரித்தோம். இப்போது பாரதத்தில் முக்ய பாகமான பகவத்கீதையில் குறிப்பாய் சில ஸாராம்சங்களை, மூலஶ்லோகங்களை உதாஹரித்துச் சுருக்கமாய் விவரிக்கிறோம். ஸ்ரீராமாயணத்தில், 'ஸீதாயாஶ்சரிதம் மஹத்' என்று சொன்னபடி சிறையிருந்தவளாகிய ஸீதாப்பிராட்டியின் ஏற்றமே முக்யமானதுபோல, பாரதத்திலும் பாண்டவர்களுக்காகத் தூது போன கண்ணன் ஏற்றமே முக்யமானது. தர்மஸம்ஸ்தாபநத்திற்காக அவதரித்து ஸௌலப்யமே பரமாகக்கொண்ட ஸ்ரீ க்ருஷ்ணன் ஸாரத்யம் செய்யப்புகுந்து தன் ப்ரியசிஷ்யனை அர்ஜுநனுக்குச் செய்த ஜ்ஞாநோபதேசம் கீதாஶாஸ்த்ரத்தில் அடங்கி யிருப்பதால், உபநிஷ தர்த்தங்களின் உபப்ரஹ்மணமான இந்த கீதா சாஸ்த்ரம் எல்லோர்க்கும் அத்யந்தம் உபாதேயம். இதில் உபபாதிக்கப்படுகிற அம்சங்களாவன:—

## 1. ஆசார்ய வரணம்.

𑌅𑌸𑍍𑌥𑌾𑌨 𑌸𑍍𑌨𑍇𑌹 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮 𑌧𑌿𑌯𑌾𑌽𑌽𑌕𑍁𑌲𑌮𑍍 ।
𑌪𑌾𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨 𑌉𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌵𑌤𑌰𑌣𑌂 𑌕𑍃𑌤𑌮𑍍 ॥

என்று, ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்தபடி, இடத்துக்கும் காலத்துக்கும் தகாதபடி பந்துக்கள் பக்கல் ஸ்நேஹ காருண்யங்களாலும், தன்னுடைய க்ஷத்ரிய தர்மத்தில் அதர்மபுத்தியாலும் அர்ஜுநன் கலங்கி, '𑌨 𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯𑍇' 'நான் யுத்தம் செய்யமாட்டேன்' என்று யுத்தத்தைவிட்டு நீங்க எண்ணி, மறுபடியும் என்ன செய்வதென்று தோன்றாமல், '𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌤𑌨𑍍𑌮𑍇 𑌶𑌿𑌷𑍍𑌯𑌸𑍍𑌤𑍇𑌽𑌹𑌂 𑌶𑌾𑌧𑌿 𑌮𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌮𑍍' நான் தேவரீருக்கு ஶிஷ்யன், சரணமடைகிறேன், எனக்கு எது ஹிதமோ அதை உபதேசிக்க வேண்டும், என்று வணங்கிநிற்க, அவனை யுத்தத்துக்குப் போகும்படி செய்வதை வ்யாஜமாக்கி லோகோஜ்ஜீவநமாக ஸகல ஸாரார்த்தங்களையும் உபதேசித்தார். இதனால் ஆசார்யவரணம் முக்யமென்றதாயிற்று.

## 2. தத்வ விவேகம்.

𑌨𑌤𑍍𑌵𑍇𑌵𑌾𑌹𑌂 𑌜𑌾𑌤𑍁 𑌨𑌾𑌸𑌂 𑌨𑌤𑍍𑌵𑌂 𑌨𑍇𑌮𑍇 𑌜𑌨𑌾𑌧𑌿𑌪𑌾𑌃 ।
𑌨𑌚𑍈𑌵 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑌯 𑌮𑌤𑌃𑌪𑌰𑌮𑍍 ॥ (2, 12.)

'நானும் நீயும் இந்த ராஜாக்களும் மற்றெல்லாரும் எப்போதும் நித்யமாயிருப்பவர்கள்' என்று ஸர்வேஶ்வரன் தன்னைப்போல ஸகல இதராத்மாக்களையும் நித்யர்களென்று சொல்லித் தானும் அவர்களும் பரஸ்பரம் பின்னர்களென்று ஜீவாத்ம பரமாத்ம பேதத்தையும் உபதேசித்தார்.

𑌦𑍇𑌹𑌿𑌨𑍋𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌯𑌥𑌾𑌦𑍇𑌹𑍇 𑌕𑍌𑌮𑌾𑌰𑌂𑌯𑍌𑌵𑌨𑌂𑌜𑌰𑌾 ।
𑌤𑌥𑌾𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑌰𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑍍𑌧𑍀𑌰𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌨𑌮𑍁𑌹𑍍𑌯𑌤𑌿 ॥ (2, 13.)

என்கிற ஶ்லோகத்தால், ஆத்மாவுக்கு ஒரு தேஹஸம்பந்தத்தில் யௌவந வார்த்தகாதி தர்மங்கள் உண்டாவதாய்க்காணப்பட்டாலும், அந்த அவஸ்தைகளில் ஆத்மா ஸ்திரமா யிருப்பதுபோல், தேஹாந்தரத்தை அடையுங்காலும் அதே ஆத்மா அநுவர்த்திப்பதால் ஆத்ம நாஶ மில்லையென்றும், மரணம் ப்ரக்ருதி தர்மம் என்றும் ஆகிய இந்த தத்வவிவேகத்தை வெளியிட்டார். இங்கே 'தத்வ விவேக' மென்றது ஆத்ம நித்யத்வத்தையும், ஜீவாத்ம பரமாத்மபேதத்தையும், ப்ரக்ருத்யாத்ம விவேகத்தையும் பற்றிச் சொன்னது.



## 3. தேஹாநித்யத்வம்.

𑌅𑌨𑍍𑌤𑌵𑌨𑍍𑌤 𑌇𑌮𑍇 𑌦𑍇𑌹𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌾𑌃𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑌃 ।
𑌅𑌨𑌾𑌶𑌿𑌨𑍋𑌽𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌭𑌾𑌰𑌤 ॥ (2, 18.)

தேஹம் புண்யபாபரூப கர்மங்களால் வந்தது. அவைகள் நசித்தால் தேகமும் நசிக்கும், அதாவது புநர்ஜந்ம மில்லை. அது வரையில் தேகஸம்பந்தம் விடாது. ஆனால் தேகம் அநித்யம், ஆத்மா நித்யன். யுத்தத்தில் இறப்பவருக்குப் பழையசரீரம்போய் விலக்ஷணமான புதுசரீரம் கிடைப்பதால், பழைய வஸ்த்ரத்தைக் களைந்தெறிந்து புதுவஸ்த்ரம் தரிப்பதுபோலாயிற்று யுத்தத்தில் மரணம். இதை,

'𑌵𑌾𑌸𑌾𑌂𑌸𑌿 𑌜𑍀𑌰𑍍𑌣𑌾𑌨𑌿' (2, 22.)

என்கிற ஶ்லோகம் சொல்லுகிறது.

## 4. பரமாத்மா சேதநாசேதந சரீரீ.

𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌪𑍋𑌽𑌨𑌲𑍋𑌵𑌾𑌯𑍁𑌃 𑌖𑌂𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍇𑌵𑌚 ।
𑌅𑌹𑌂𑌕𑌾𑌰𑌇𑌤𑍀𑌯𑌂𑌮𑍇 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌷𑍍𑌟𑌧𑌾 ॥ (7, 4.)

𑌅𑌪𑌰𑍇𑌯𑌮𑌿𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂𑌵𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑍇𑌪𑌰𑌾𑌮𑍍 ।
𑌜𑍀𑌵𑌭𑍂𑌤𑌾𑌂𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌯𑌯𑍇𑌦𑌂𑌧𑌾𑌰𑍍𑌯𑌤𑍇𑌜𑌗𑌤𑍍 ॥ (7, 5.)

பஞ்சபூதங்களும், மனஸ் முதலான இந்த்ரியங்களும், மஹத், அகங்காரங்களும், ஆகிய எட்டுவிதமான ப்ரக்ருதியும் பகவானுக்கு அதீநமாய் அவருக்குச் சரீரமானது. இதற்கு மேற்பட்டதாய் ஜ்ஞாநஸ்வரூபமாயுள்ள ஜீவதத்வமும் பகவானுக்குச் சரீரபூதம். இந்த ஜீவதத்வத்தாலும் முன்சொன்ன ப்ருக்ருதி தரிக்கப்படுகிறது. ஜீவவர்க்கத்துக்கும் ப்ருக்ருதி போக்யமாய்ச் சரீரமாய் ஆனதென்றபடி.

मत्तः परतरं नान्यत् किञ्चिदस्ति धनञ्जय ।
मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव ॥ (7, 7.)

यच्चापि सर्वभूतानां बीजं तदहमर्जुन ।
न तदस्ति विना यत्स्यान्मया भूतं चराचरम् ॥ (10, 39.)

अहमात्मा गुडाकेश सर्वभूताशयस्थितः ।
अहमादिश्च मध्यं च भूतानामन्त एव च ॥ (10, 20.)

பகவானுக்கு மேற்பட்ட தத்வமில்லை. சேதநாசேதந ரூபமான ஸகல ஜகத்தும் காரண நிலையிலும் கார்ய நிலையிலும் எப்போதும் பகவானுக்குச் சரீரமாய், ஒரு நூலில் கோர்க்கப்பட்ட மணிகள்போலுள்ளவை. எல்லாத்துக்கும் பகவான் அந்தராத்மா. இந்த அர்த்தத்தை அந்தர்யாமி ப்ராஹ்மணத்திலும், 'உடல்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்' என்கிறது முதலான ஆழ்வார் பாசுரங்களிலும் காண்க.

## 5. பகவானுடைய ஸர்வநியந்த்ருத்வம்.

'सर्वस्य चाहं हृदि सन्निविष्टो मत्तः स्मृतिर्ज्ञानमपोहनं च' (15, 15.)

பகவான் எல்லோர் ஹ்ருதய கமலத்திலு மிருந்து, எல்லாவற்றையும் தன் ஸங்கல்பத்தாலே நியமிக்கிறார். எல்லோர் ஜ்ஞாநத்துக்கும் ஜ்ஞாந நிவ்ருத்திக்கும் அவரே காரணம். பிரமாண ப்ரவ்ருத்தியை ஊஹிக்கும் ஜ்ஞாநத்துக்கும் அவரே காரணம். வேதோக்த கர்மங்களுக்கு பலப்ரதரும் அவரே. தேவதைகளுக்கும் அவரே அந்தர்யாமி யாகையால் வேதங்கள் இதர தேவதைகளைச் சொல்வதெல்லாம் பகவானைச் சொன்னதாகிறது.

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन्सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥ (18, 61.)

ஸகலரையும் ஆளுவதே ஸ்வபாவமான பகவான் தன்னால் நியமிக்கப்பட்ட ப்ரக்ருதி என்னும் யந்திரத்தில் ஸகலரையும் ஏற்றி அவரவர் குணத்துக்குத் தக்கபடி ப்ரவர்த்தித்துக் கொண்டிருக்கிறார்.



## 6. புருஷோத்தமத்வம்.

'उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।
यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥' (15, 17.)

ஸம்ஸாரிகள், முக்தர், நித்யஸூரிகள் ஆகிய மூவகைப் பட்ட சேதநரைக் காட்டிலும் வேறானவர் பகவான். ஆதலால் புருஷோத்தமர் என்னப்படுகிறார். அசேதநத்திலும், அதோடுகலந்த பத்தர்களிலும், அதைவிட்டு நீங்கிய முக்தர்களிலும், ப்ரக்ருதி ஸம்பந்தம் ஒருகாலுமில்லாத நித்யர்களிலும் ப்ரவேசித்து எல்லோரையும் தரித்துத்தான் அழிவில்லாமலிருப்பவர் பகவான். 'नित्यो नित्यानां चेतनश्चेतनानाम्' என்கிற ச்ருதி இங்கே அநுஸந்திக்கப் படுவது.

## 7. விச்வரூபம்.

'पश्यामि देवान्' (11, 15.)

'द्रष्टुमिच्छामि ते रूपम्' என்று பிரார்த்தித்த அர்ஜுநனுக்குப் பகவான் திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்துத் தன்ரூபத்தையும்காட்ட, அர்ச்சுநன் கண்ணனுடைய திருமேனியில் ஸகல தேவர்களையும், ஸர்வவிதப் பிராணிகளையும், சதுர்முகப் பிரஹ்மாவையும், அவரிடம் அடங்கியுள்ள ஈசனையும், மற்ற ருஷிகள் முதலானவர்களையும் காண்கிறான். அங்குதோன்றும் துர்யோதநாதிகளில் பலர் மாண்டுபோவதைக் காண்கிற அர்சசுநனைப் பார்த்துப் பகவான்,

'मयैवैते निहताः पूर्वमेव' (11, 33.)

இவர்கள் என்னால் முன்னமேயே கொல்லப் பட்டார்கள், நீ நிமித்தமாத்ரமா யிருக்கவேணு மென்கிறார். இப்படி ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைப் பண்ணுகையாகிற நியந்த்ருத்வம் இதனாலும் வெளியாயிற்று.

## 8. அநந்தமான விபூதிகளும் மகிமையும்.

பகவானுடைய விபூதிகளும் மஹிமையும் அளவல்லன வாகையால் அவைகளில் சிலவற்றைமட்டும் பகவான் சொல்லுகிறார்.

"ஹந்த தே கதயிஷ்யாமி திவ்யா ஹ்யாத்மவிபூதய: ।
ப்ராதாந்யத: குருஶ்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே" (10,19

ஆழ்வாரும் "எண்ணுமா றறியமாட்டேன்" என்கிறார்.

## 9. பக்தியென்னும் உபாயம்.

பகவான் ஸர்வகாரணனாய் ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்தியா யிருப்பவராயிற்றே, நாம் அவனை அடைவது கூடுமோ? என்று பயப்படவேண்டாம். தைலதாரைபோல் அவிச்சின்னமான ஸ்ம்ருதிரூபமாயுள்ள பக்தி என்னும் ஜ்ஞானத்தால் அவனை நாமடையலாம்.

பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோऽர்ஜுந ।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥ (11,54)

"பக்தியில்லாமல் நம்மையுள்ளபடி யறிதல் முடியாது. நம்மையே நாடிய பக்தியுண்டானால் மாத்ரம் நம்மையடைவது கூடும்." அதன் ஸ்வரூபம்,

மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு । (18, 65.)
மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோऽஸி மே ॥

என்கிற ஶ்லோகத்தால் தெரிகிறது. "நம்மிடத்தில் மிகவும் ப்ரீதனாய், ப்ரீதிரூபமான த்யானத்தைச்செய். நம் ஆராதநமே பொழுதுபோக்காயிரு. நம்மையே ப்ரீதியோடு வணங்கு. நீ நம்மையே அடைவாய்" என்று பகவான் சொல்லுகிறார். இப்படிப்பட்ட மஹாபக்தனைத் தனக்கு ஆத்மாவென்கிறார். 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' 'உண்ணும்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணனே' என்றபடி யிருக்கும் இந்த மஹாத்மாவுக்குப் பகவானே தாரகபோஷக போக்யமாகிறார். அப்படிப்பட்ட மஹாத்மா துர்லபனென்கிறார்.

'வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:' (7,19.)

## 10. ஸௌலப்யம்.

தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்யயுக்தஸ்ய யோகிந: । (8, 14.)



பக்திமான்களுக்கு அவன்கிடைப்பது எளிது. 'பத்துடையடியவர்க்கெளியவன்'. இவர்களைக்காப்பாற்றவே அவன் அவதாரம். 'அஜாயமாநோ பஹுதா விஜாயதே'

பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் ।
தர்மஸம்ஸ்தாபநார்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥ (4, 8.)

'பல பிறப்பாய் ஒளிவருமியல்வினன்', 'சாதுசனத்தை நலியும் கஞ்சனைச்சாதிப்பதற்கு ஆதியம் சோதியுருவை அங்கு வைத்திங்குப்பிறந்தவன்' என்கிற பிரமாணங்களால் சொல்லப்பட்ட ஸௌலப்யம் இங்கு,

"யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்" (4,11.)

என்பதால் சொல்லப்படுகிறது. இதை 'தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந்தானேயாய்' என்றும், 'அவனிவனென்று கூழேல்மின், நெஞ்சினால் நினைப்பான்யவன் நீள்கடல் வண்ணன்' என்றும் சொன்னார்கள். இதனால் பகவான் கேவலம் தேவமனுஷ்யாதி அவதாரங்களைச் செய்ததுமாத்திரமல்லாமல் பக்தர்கள் உகந்த மூர்த்திகளைத் தன் திருமேனியாக்கிக் கோயில்களிலும் க்ரஹங்களிலும் ஸேவை ஸாதிக்கும் அர்ச்சாவதாரமெடுத்த ஸௌலப்யத்தை வெளிப்படுத்தினதாயிற்று.

## 11. பக்திக்குக் கர்மயோகம் அங்கம்.

கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசந । (2, 47.)

மயி ஸர்வாணி கர்மாணி ஸந்ந்யஸ்யாத்யாத்மசேதஸா ।
நிராஶீர் நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர: ॥ (3, 30.)

அப்யாஸேऽப்யஸமர்தோऽஸி மத்கர்மபரமோ பவ । (12, 10.)

அதைதத்ப்யஶக்தோऽஸி கர்தும் மத்யோகமாஶ்ரித: ।
ஸர்வகர்மபலத்யாகம் தத: குரு யதாத்மவாந் ॥ (12, 11.)

பக்திக்குக் கர்மயோகமும் ஜ்ஞானயோகமும் அங்கங்கள். முதிர்ந்த பக்தி யோகநிஷ்டையிலிருக்க முடியாதவர்கள் பகவத் குணங்களின் த்யானத்தை அப்யாஸம் செய்யவேண்டும். அதுவும்

முடியாதவர்கள் பகவத் கைங்கர்யமாகிற ஆலய நிர்மாணம், நந்தவந கைங்கர்யம் இவைகளைச் செய்யலாம். அதுவும் முடியாமற்போனால் யாதொன்றிலும் பற்றில்லாமல், பலங்களில் அபேக்ஷையன்னியில், ஆத்மாநுஸந்தாநமென்னும் அக்ஷரயோகத்தை ஆச்ரயித்து, அதற்கு உபாயமாக பகவதாராதநரூபமாய் ஸ்வஸ்வகர்மங்களைச் செய்யவேணும்.

‘ 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌤𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃 ’ (18, 46.)

என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்மயோகமும் ஜ்ஞாநயோகமும் தனித்தனியே முக்திக்குக் காரணங்கள். ஜ்ஞாநயோகத்தைக்காட்டிலும் கர்மயோகம் ச்ரேஷ்டமென்றும், ஸுலபமென்றும், சீக்ரம் தன் பலமாகிய ஆத்மாவலோகநத்தைக் கொடுக்கக்கூடியதென்றும்,

‘ 𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃 ’ (3, 20.)

ஜ்ஞாநாக்ரேஸராராகிய ஜநகர் முதலானோர் கர்மயோகத்தாலேயே ஸித்தியை யடைந்தார்களென்றும், ஶிஷ்டர்களென்று லோகத்தில் வ்யபதிஷ்டர்களான முக்யமானவர்கள் லோகாநுக்ரஹத்தை யுத்தேசித்துக் கர்மயோகத்தையே செய்வார்களென்றும், நித்யநைமித்திகங்கள் விடப்படாதவைகளென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. “ நீர்நுமதென்றிவை மாய்த்திறை சேர்மின் ” என்று ஆழ்வாரும் ஸர்வபல ஸங்கத்யாகங்களை பக்திக்கு அங்கமாகவெளியிட்டார்.

## 12. உபாய விரோதிகள்.

𑌚𑌞𑍍𑌚𑌲𑌂 𑌹𑌿 𑌮𑌨𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑌿 𑌬𑌲𑌵𑌦𑍍𑌦𑍃𑌢𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌵𑌾𑌯𑍋𑌰𑌿𑌵 𑌸𑍁𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌮𑍍 ॥ (6, 34.)

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌾𑌨𑌿 𑌗𑍁𑌣𑍈𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ।
𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑌰𑍍𑌤𑌾𑌹𑌮𑌿𑌤𑌿 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 ॥ (3, 27.)

இந்தக் கர்மயோகாங்கமான பக்தியின் அநுஷ்டாநத்தில் ஏற்படும் விரோதிகள் எவை யென்றால், முக்யமாய் மனஸ்ஸின் சாஞ்சல்யத்தால் ஏற்படும் விஷய ஸங்கங்களும், ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் ஏற்பட்ட கர்த்ருத்வத்தைத் தன்னில் ஆரோபித்து வரும் கர்த்ருத்வ புத்தியும், அதடியாகவரும் அஹங்காரமமகாரங்களும்தான்.



‘ 𑌅𑌸𑌂𑌶𑌯𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 ’ (6, 35.)

இவைகளை நிவர்த்திக்க வைராக்யமும் அப்யாஸமுமே மார்க்கங்கள். ஆத்மா ஜ்ஞாந ஸ்வரூபமானதால் அதில் ருசியால் இதர ப்ராக்ருத விஷயங்களில் வெறுப்புண்டாகி அப்யாஸத்தால் மனஸ்ஸைக் கட்டிப்பிடிக்கவேண்டும்.

## 13. அங்கப்ரபத்தி.

𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯 𑌯𑍁𑌕𑍍𑌤 𑌆𑌸𑍀𑌤 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃 । (2, 61.)

𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌤𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥ (7, 14.)

𑌤𑌮𑍇𑌵 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌚𑍍𑌛 𑌸𑌰𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨 𑌭𑌾𑌰𑌤 । (18, 62.)

𑌤𑌮𑍇𑌵 𑌚𑌾𑌦𑍍𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰
𑌸𑍃𑌤𑌾 𑌪𑍁𑌰𑌾𑌣𑍀 ॥ (15, 4.)

பக்தர்களின் நான்கு விதம்,

𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌾 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌂 𑌜𑌨𑌾𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑌿𑌨𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌆𑌰𑍍𑌤𑍋 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍁𑌰𑌰𑍍𑌥𑌾𑌰𑍍𑌥𑍀 𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌚 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ॥ (7,16.)

என்னும் ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களாவன, முடிவில், ஐச்வர்யார்த்திகளும், ஆத்மஸ்வரூப ப்ராப்தியையே விரும்பும் கைவல்யார்த்திகளும், பகவானை யடைய விரும்பும் ஜ்ஞாநிகளுமாய் மூன்று பேர்கள்தான். இவர்கள் எல்லார்க்கும் இந்திரிய ஜயாதிகள் வேண்டும். இந்த இந்த்ரிய ஜயத்துக்குப் பரமோபாயம் பகவத்க்ருபையே. அதில் த்ருடமான நம்பிக்கையுடன் பகவானைச் சரணமடைதல் விரோதி நிரஸநத்துக்கு உபாயம். இந்தப்ரபத்தி பக்திஸித்திக்க அங்கமாகச் செய்யப்படுவதால் அங்கப்ரபத்தி என்னப்படுகிறது.

## 14. ஸ்வதந்த்ரப்ரபத்தி.

𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌮𑌾𑌮𑍇𑌕𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌵𑍍𑌰𑌜 । (13, 66.)
𑌅𑌹𑌂 𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌾 𑌶𑍁𑌚𑌃 ॥

கீழ்ச்சொன்னது, விரோதி நிரஸநத்துக்கும் பக்தியோக வ்ருத்திக்கும் ப்ரபத்தி யென்கிற சரணாகதியே காரணமென்று. இனி, உத்தம புருஷார்த்தமாகிய மோக்ஷத்துக்கும் பக்தியோகம்போல், ப்ரபத்தியும் ஸ்வதந்த்ரமாய்க் காரணம் என்று சொல்லப்படுகிறது. 'सर्वधर्मान्' என்கிற ஶ்லோகத்தால், வர்ணாச்ரம தர்மங்கள் ஸரியாயநுஷ்டிக்கமுடியாததாலும், அஜ்ஞானம், அசக்தி முதலியவைகளினால் பக்தியோகம் ஸாத்ய மில்லாதபோதும், சில ஆசார்யர்கள் அபிப்ராயப்படி, பக்தியோகத்தைவிட ப்ரபத்தியே நம் ஸ்வரூபத்துக்குத் தகுந்ததானபோதும், கீழ்ச்சொன்ன உபாயங்களைவிட்டு பகவானையே உபாயமாகப்பற்றினால் அவர் நம்மை பாபங்களினின்று விடுவித்து நமக்கு மோக்ஷத்தைக் கொடுக்கிறார் என்று சொல்லப்படுகிறது. கடவல்லியில் "नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन । यमेवैष वृणुते तेन लभ्यः" என்கிற உபநிஷத்தில் சொல்லியிருப்பதே இங்கு கீதையில் சொல்லப்படுகிறது. இந்த ஶ்ருதியில் கேவல வேதாப்யாஸம், ஜ்ஞாநம், ஶ்ரவண மநநாதிகள் இவைகளெல்லாம் பகவானை யடைய உபாயங்களல்ல. ப்ரீதிருபமான ஜ்ஞாநமாகிற பக்தியே அவரையடைய உபாயம் என்று சொல்லப்படுகிறது. அவர் யாரை தனக்ருபையால் வரிக்கிறாரோ அவரால் தான் பகவான் அடையப்படுகிறார் என்று சொல்லப்படுகிறது, என்று இந்த ஶ்ருதியை சரணாகதி சாஸ்த்ரமாய்ச் சில ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். வேதபுருஷன் இதில் ஆதரம் தோற்ற இந்த வாக்யத்தை முண்டக உபநிஷத்திலும் கடவல்லியிலும் படித்திருக்கிறார். இந்த உபாயத்துக்கு பகவத்க்ருபைதான் முக்யமான ஸாதநம். இதற்கு விஶ்வாஸமே ப்ரதாநம். இது எல்லா ஜாதியார்களும் அநுஷ்டிக்கக்கூடிய உபாயம். 'நம்பிரான் சரணே சரண்' 'ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தாய்' என்று ஆழ்வாரும் அருளிச்செய்தார்.

## 15. பகவானுக்கு எல்லாரும் ஸமம்.

समोऽहं सर्वभूतेषु न मे द्वेष्योऽस्ति न प्रियः । (9, 29.)



பகவானை ஆச்ரயிக்கும் விஷயத்தில் இன்னான் உயர்ந்தவன். இன்னான் தாழ்ந்தவன் என்பது இல்லை. இந்த விஷயத்தில் க்ஷத்ரிய வைஶ்யர்களும் ஸ்த்ரீ ஶூத்ரர்களும் ப்ராஹ்மணனுக்கு ஸமானம். பக்தியற்ற உயர் பிறப்பும் ப்ரயோஜநமாகாது.

'आढ्योऽभिजनवानस्मि' (16, 15.)

தான் உயர்குலத்தில் பிறந்தவன் என்றும் தனக்கு யஜ்ஞாதிகளில் அதிகாரமிருக்கிறதென்றும் கர்வப்படுகிறவன் இந்த ஶ்லோகத்தில் தூஷிக்கப்படுகிறான். கேவலம் ஜ்ஞாநதபஸ்ஸுக்களால் ப்ரயோஜனமில்லை.

'तपस्विभ्योऽधिको योगी' (6, 46.)

பகவத்பக்திக்கு பரிசுத்தமான ஹ்ருதயமும் த்ரிகரண சுத்தியும் பகவானிடத்தில் பரிவுமே அவச்யம்.

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति ।
तदहं भक्त्युपहृतमश्नामि प्रयतात्मनः ॥ (9, 26.)

எளிதில் சம்பாதிக்கக்கூடிய இருத்துமாய், புஷ்பம், பழம், தீர்த்தம், இவைகளில் எதையாவது பகவானுக்குப் பக்தியோடு ஸமர்ப்பித்தால் அதைக்கிடையாதது கிடைத்ததுபோல் மிகவும் ஆதரத்தோடு, பெரும் பசியன் அன்னத்தைப் புஜிக்குமாப்போல், பகவான் புஜிக்கிறார். இதனால் பகவான் ஸுலபமாய் ஆராத்யன் என்றும் ஏற்படுகிறது.

ஆக, 'எல்லாப்பொருளும் விரித்து,' 'நெறியெல்லாம் எடுத்துரைத்த', என்றபடி, தத்வங்களின் ஸ்வபாவம், பகவானுடைய ஸௌலப்யாதி குணங்கள், விரோதிகளின் ஸ்வபாவம், அதை நிவர்த்திக்க உபாயம் பகவானே என்பது, ப்ரபத்தி ஸ்வதந்த்ர உபாயம் என்கிறது முதலான பலஸாராம்ஶங்களை இங்கே ஸங்க்ரஹமாய்ச்சொல்லி முடித்தோம்.

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ:.

# விபீஷணர் சரணாகதியில்

# லக்ஷ்மணனபிப்ராயம்.

[illegible] ।
[illegible] ॥

ஸ்ரீ விபீஷணாழ்வான்சரணாகதி ப்ரகரணத்தில், பெருமாளை விபீஷணன் சரணம்புகும்போது, பகவானால் “ [illegible] ” என்று பிந்தி லாகிக்கப்பட்ட இளையபெருமாள் தன்னபிப்ராயத்தை ஒன்றையும் விவரிக்காததற்கும், அவரைப்பெருமாளும் இதைப்பற்றி யொன்றையும் கேளாததற்கும் என்னகாரணமென்று சென்ற ஏழாவது ஸஞ்சிகையில் பாரத்வாஜர் என்கிற ஒருஸ்வாமி கேட்டிருக்கிறார்.

அடியேன் அல்பஜ்ஞனாகையால் அதற்குச்சமாதானம் சொல்லாமல் விரமிப்போமென்று பார்த்தாலும், “ [illegible] ” என்கிறபடியே இவ்விதசர்ச்சையினால் நிஷ்க்ருஷ்ட ஜ்ஞான லாபமுண்டாகுமென்கிற ஓர் பேராசையே இவ்விஷயத்தில் அடியேனை ஏவுகின்றதாகையால் அந்தக் கேள்விக்கு யதாமதி சிலவற்றைச் சமாதானமாக விஜ்ஞாபிக்கத் துணிகிறேன்.

இளையபெருமாள் அந்தப்ரகரணத்தில் சுக்கிரீவனோடு சேர்ந்து தாமும் ஓர் அபிப்பிராயத்தை ஸ்ரீ சக்கரவர்த்தி திருமகனிடத்தில் தெரிவிக்காமலிருந்ததற்குக் காரணமாவது:— ஸ்ரீ விபீஷணாழ்வான் சிறுதெய்வத்தின் சித்தமிரங்கினாலல்லது பெருந்தெய்வத்தைப்பெற நமக்கோர்விரகில்லை என்று ஆர்யர்களான சுக்கிரீவன் முன்னோர்களைக்கிட்டி “ நிவேதயத மாம் ” என்று அதிதைந்யத்துடன்வேண்ட, “ [illegible] ” என்கிறபடியே சத்ருவின் பக்கலுள்ளாரைச் சேர்த்துக்கொள்ளவொண்ணாதென்பதை மாத்திரம் கண்டறிந்த சுக்கிரீவன் விபீஷணாழ்வானுடைய த்வநியைக்கேட்டு, மிகவும் பரபரப்புற்று ஸ்ரீ ராமபிரானைநோக்கிச் சிலவற்றை விஜ்ஞாபனம் பண்ணும்பொழுது,

“ லக்ஷ்மணஸ்யாக்ரதோ ராமம் ஸம்ரப்தமிதமப்ரவீத் ”

என்று தன்வாக்யத்துக்கு முக்யோத்தேஸ்யரான ஸ்ரீராமனோடன்றோ லக்ஷ்மணனைக் கூட்டிப்பேசி இருக்கிறார்.

“ ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசநமப்ரவீத் ”

என்கிற ஸ்ரீ இளையவருடைய வாக்யத்திற்குப் பெருமாளும் பிராட்டியும் உத்தேஸ்யமானதுபோல், இவ்விடத்தில் இவ்விருவரும் சுக்ரீவன் வாக்யத்திற்கு உத்தேஸ்யமாகவன்றோ தோற்றுகிறது. இப்படி இளையபெருமாளையும் உத்தேஸ்யகக்ஷியில் சேர்த்ததினால் பலிப்பதுயாதெனில்:— முக்யோத்தேஸ்யரான சக்ரவர்த்தித் திருமகனுக்குப்போல தனக்கும் ப்ரத்யுத்தரத்திலேயே அதிகாரமேயொழிய, ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகனிடத்தில் இவர்சுக்கிரீவனோடுசேர்ந்து அபிப்ராயத்தை சொல்லுவது இங்கு ஸந்தர்ப்பசைலிக்கு விருத்தமாகையால் இளையவர் சுக்கிரீவரோடு கலந்து அபிப்ராயம் கொடுக்கவில்லை என்னலாம்.

மேலும், “ ஸர்வஜ்ஞேந ச்ருதஜ்ஞேந ” என்கிறபடியும் “ இங்கிதஜ்ஞஸ்ய ஸௌமித்ரே: ” என்கிறபடியும் இளையபெருமாள், பெருமாளுடைய குணசேஷ்டிதங்களினால் அவருடைய பாவத்தை முன்சரணமடைந்த சுக்ரீவாதிபக்கலில் அனுபவித்திருப்பவராகையாலும், இவ்விடத்தில் தன்வாக்யம் நிஷ்பலமாமென்றெண்ணி விபீஷணனுக்கு ப்ரதிகூலமான ஒருவசனத்தையும் எடுத்துரையாமல் இருந்தாரென்றுமாகலாம்.

மேலும் இந்த இளையவருடைய அவதாரம் சேஷத்வகாஷ்டாப்ரதர்சனார்த்தமாகவன்றோ நம்பூர்வாசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். முன்னொருகால் இந்த இளையவர் பஞ்சவடியில் பெருமாளுடன் சென்றவளவில், அங்கு நல்லதோரிடம்தேடி ஒரு ஆஸ்ரமத்தைச் செய்தருளும்படி பெருமாள் இவரை நியமிக்க, அதற்கு இளையபெருமாள்,

“ பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே ।
ஸ்வயந்து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத ”

என்று தனக்கனுஷ்டேயமாவது சேஷத்வமென்றே பேசியிருக்கிறார். ஆகவித்தாலும் தான் ஸ்வாதந்த்ரியத்தை மேற் போட்டுக்கொண்டு பேசித்திரியாம லிருந்தா ரென்னவுமாம். ஆகையாலன்றோ இவருடைய ஸ்வரூபமறிந்த பெருமாளும் விபீஷணாழ்வானைத்தான் அங்கீகரிப்பதில் இளையபெருமாளுடைய அபிப்ராயத்தை ஒன்றையும் கேட்டவரில்லை. பெருமாள் கேட்கிலும் முன்சொன்னபடி சேஷத்வ காஷ்டையில் பிடிவாதம் கொண்ட இந்த ஸௌமித்ரீ உத்தாம் கொடுப்பரோ? கொடுத்தால் தான் தகுமோ? தன்னிலை குலையாதோ? அது குலையாமைக்காகவன்றோ இவர் வீட்டையும் அடிமையையும் விட்டுக் காட்டுக்குப் புறப்பட்டது?

இதையெல்லாம் ஆலோசித்தன்றோ பெருமாள் சுக்ரீவன் வாக்யம் முடிந்தபின் இளயவரை தம்மோடுகூட்டிக்கொண்டு மற்றவரின் அபிப்ராயத்தை கேட்டது. ஆனால் "மந்த்ரே விசக்ஷண:" என்று இவருக்கு ஆலோசனை விஷயத்தில் வைசக்ஷ்ண்ய மிருப்பதாக ச்லாகிக்கப் பட்டிருக்கிறதே. அது எதற்காக வெனில், ஆலோசனை இந்த இளையபெருமாளுக்கு ப்ராப்தமாகில் அப்பொழுது இவ்வைசக்ஷண்யம் விநியோகிக்கக் கூடியதென்று காட்டுகைக்காகவே என்னலாம்.

ஆனால் இப்பொழுது விபீஷணனுடைய பரிக்ரஹவிஷயத்தில் இவருக்கு ஆலோசனை ப்ராப்தமில்லையிறே. ஏனெனில் ஸ்ரீலக்ஷ்மணன் தன்னிஷ்டைகுலைந்து போய்விடுமென்று பயந்து இவ்விஷயத்தில் வெகுதூரம் விலகிநின்றார். பெருமாளும் இவரிடத்தில் தன்வாக்யம் வ்யர்த்தமாகுமென்றெண்ணி இவரை ஆலோசனைகேளாமலே இருந்துவிட்டார். இப்படி இருவருமிருக்க இவருக்கு ஆலோசனை எப்படி ப்ராப்தமாயிற்று?

ஆனால், இங்கொரு சங்கை ஜநிக்கக்கூடும்: அதாவது—இங்ஙனம் லக்ஷ்மணன் தன்னுடைய பகவத்பாரதந்திரயம் அழிந்து போகுமென்று பயந்து விபீஷண ஸ்வீகார விஷயத்தைப்பற்றி ஒருத்தரமும் கொடாமலிருந்தா ரென்பது வாஸ்தவமே யாகில், மேலே சக்ரவர்த்தித்திருமகன் ஸேது பந்தநத்திற்காக ஸமுத்ரராஜனைச் சரணம் புகுவதைப்பற்றி இளையபெருமாளையும் சுக்ரீவரையும் தம் தம் அபிப்ராயத்தைக்கேட்க, அந்த சுக்ரீவரோடு ஸௌமித்ரியும் "கிமேஷாம் நல நவஸ்ரஹ்ய மஹாவிஷ்யதி ராகவ" என்றிறே அநுமதி கொடுத்திருக்கிறதாகத் தோற்றுகிறது. அப்பொழுது தன்னிலைகுலையாதோ வெனில், பெருமாள் இளையவரிடமிருந்து உத்தரம் கேட்கவேணு மென்கிற எண்ணத்துடன் கேட்டதும் அவர் அதற்குப்பதில் சரியாகக்கொடுத்திருப்பதும் உண்மையாகில், இதுகேட்டது ந்யாயமே; இந்தப்ரகரணத்தை விமர்சித்துப்பார்க்கில் அதப்படித்தோற்றவில்லையே. அது எங்ஙனேயென்னில், சமுத்திரத்தை கடப்பதற்காக ஹனுமான் சுக்ரீவன் இவ்விருவரும் விபீஷணாழ்வானோடு ஆலோசிக்க, அதற்கு அவர் ஸாகர சரணாகதியையே உபாயமாகக்கூற, அதுகேட்டு சுக்ரீவன் பெருமாளிடம் தெரிவிக்க,



'ஸ லக்ஷ்மணம் மஹாதேஜா: ஸுக்ரீவம் ச ஹரீச்வரம் ।
ஸத்க்ரியார்த்தம் க்ரியாதக்ஷ: ஸ்மிதபூர்வமுவாச ஹ ॥"

என்றிறே மஹர்ஷி அருளிச்செய்திருக்கிறார். இந்த பத்யத்தில் ஒவ்வொரு பதத்தையும் ப்ரயோஜந புரஸ்ஸரமாகப் பராமர்சிப்போம். இவ்விடத்தில் 'லக்ஷ்மணம்' என்பது ஸௌமித்ரியின் அவதாரத்திற்கு அஸாதாரணமான செஷத்வமாகிற சிந்ஹத்தைப் பராமர்சிக்கிறது. ஸௌமித்ரி என்றும் ராமாநுஜ னென்றும், இன்னு மனேகமான திருநாமங்கள் இருக்கச்செய்தேயும் இவ்விடத்தில் லக்ஷ்மணமென்று மஹாகவி எடுத்தது இளையபெருமாளுடைய சேஷத்வத்தை பெருமா ளறிந்திருக்கிறார் என்பதைக் காட்டுகைக்காக வென்றே தோற்றுகிறது. அது இவருக்கு எவ்வாறு தெரியுமென, அருளிச்செய்கிறார்—"மஹாதேஜா:" என்று. ஆக இவ்விரண்டு பதங்களினாலும் ஸ்ரீ லக்ஷ்மணனுடைய பகவத்சேஷத்வம் பெருமாளுக்கு வ்யக்தமாகத் தெரியுமென்பதாயிற்று.

இப்படியிருக்கப் பெருமாள் இளையவரை ஆலோசனைகேட்கலாமோ? இது விரோதியாதோ வென்ன, அருளிச்செய்கிறார், "ஸத்க்ரியார்த்தம்" என்று. இதற்குக் கருத்தாவது—ஒரு மஹாஸதஸ்ஸில் ஸபாத்யக்ஷர் வ்யாபகரான ஒருவரை நீக்கி மற்றவர்களின் அபிப்ராயத்தைக் கேட்கில் அவர்கள் மஹாகர்வம்கொண்டு அந்தவ்யாபகரை இகழ்ச்சி செய்வதன்றோ லோகத்தின் வழக்கு. அதுபோல் பெருமாள் இங்ஙனம் மற்ற வானரர்கள் எல்லோரையும் அபிப்ராயங்கேட்டு இளையவரைக்கேட்காவிடில் எல்லாவான

ரர்களுக்கும் இந்த லக்ஷ்மணன்மீது அலக்ஷ்யபுத்தி ஜநிக்குமென்பதை திருவுள்ளம்பற்றி இவ்விடத்தில் இவரை அபிப்ராயம்கேட்பவர்போல் பெருமாள் அபிநயித்தா ரென்கிறதே யாகலாம்.

இது அபிநயமென்பதை த்ருடீகரிக்கிறார், "ஸித்வைருவக்ஷம்" என்பதினுல். இதின் கருத்தாவது, ஓ ஸௌமித்ரியே, உம்முடைய ஸ்வரூபத்தை நானறிவேன். ஆகிலும் நான் இப்படி உம்மை அநுயோகம்செய்வது ஏதோ ஒரு உத்தேசித்தினுல் என்று எண்ணக்கடவீர், என்பதே.

பெருமாள் இப்படி சலோக்திபண்ண நிதானமேதெனக் கவி அருளிச்செய்கிருர் — "க்ரியாதக்ஷ:" என்று. ஆக இந்த ஶ்லோகத்தால் பெருமாள் ஸ்ரீ லக்ஷ்மணனை ஆந்தரமாய் ஆலோசனை கேட்டதாகத்தெரியவில்லை. மேலும், "சுரு ஜநஸ்ய நக்ஷவர்ஜ ஸௌஸௌரகமிகதமரதெளை" என்று மஹாகவி சொன்னபடியே அக்ரஜனுகிய சக்ரவர்த்தித்திருமகன் போல் தாமும் க்ரியாதக்ஷராகையாலே இவர் பெருமாளுக்கோருத்தரம் கொடுக்கும் விஷயத்தில் ஸ்வாதந்த்ரியத்தை மேற்போட்டுக் கொள்ளாமலே,

"கிமேஷ்டம் நஸ நாவந்ராவ்ய ந ஶராவிஷ்ரதிராவவ" என்றும்

"விபீஷணஸ்ய ஶஶ்ரவஸ்ய யஶாஸ்டம் க்ரியதாம் வவ:"

என்றும், அதாவது— ஓ ரகு குலோத்தமனே! தேவரீராலோசிக்கும் வ்யாபாரங்கள் அடியோங்களுக்கு ஏன் ருசிக்கமாட்டாது? நாங்கள் என்ன ஸ்வதந்த்ரர்களா? தேவரீருக்கே பரதந்த்ரர்களன்ருே? தேவரீர் நியமித்ததை அநுஷ்டிப்போமேயல்லது நாங்கள் நியந்தாக்களாகிறேருமில்லையே. லோகத்தில் சரீரமல்லவே ஆத்மாவை நியமிப்பது, என்று இளையவர் தன் நிஷ்டையால் ஸுக்ரீவரையும் கூட்டிப்பேசியிருக்கிருர்.

அநந்தரம், "ஓ லக்ஷ்மணு! லோகத்தில் மந்த்ரிகள் அதிபதிக்குப் பரதந்த்ரர்களாக இருப்பர்களே யாகிலும், ஸ்வாதந்த்ரியத்தை தங்கள்மீது ஆரோபித்துக்கொண்டன்ருே அவரவர்கள் மந்த்ரிபதத்தை அதிஷ்டித்திருப்பது. இல்லாவிடில் ஒருவருமே மந்த்ரிகளாகாமல் போகவேண்டியதாக வருமே? ஆகையால் நீங்களும் அவ்வாறு ஆரோபித ஸ்வாதந்த்ர்யர்களாய் இவ்விஷயத்தில் உதவி செய்வீர்களென்று சொன்னேன்", என்று பெருமாள் மறுபடி நிய



மித்ததாக ஆசங்கித்துக்கொண்டு, ஓ ராமபிரானே! நாமல்லோம் இவ்விஷயத்தில் சக்தர்கள். இவ்விஷயத்தில் சூராக்ரேஸராகிய விபீஷணன் தேவரீருக்கு ஹிதைஷியாய் ஸமயத்தில் யுக்தாயுக்தம் சொல்லவிருக்கிருர். அவர்சொன்னபடி நடத்திக்கொள்ளலாம், என்று சொல்லித் தன்பேரில் ஸ்வாதந்த்ர்யத்தை ப்ரஸங்கிக்கவொட்டாமல் செய்துகொண்டாரென்று வ்யக்தமாய் தோற்றுகிறது.

மேலும் ஆரோபித ஸ்வாதந்த்ர்யமென்பது க்வசித் அநர்த்தாவஹமுமாகிறது. அதெங்ஙனே யென்னில், முன்னம் பெருமாள் "உஹாக்ஷம் ஸவ ஸந்நயு:" என்கிற வாக்யத்தால் இந்த இளையவரைப்பிராட்டியின் ரக்ஷணத்திற்காக நியமித்தவிடத்தில், ஆந்தராகாரம் ஓர்பக்கலி லிருக்கச்செய்தேயும் பாஹ்யாகாரத்தால் இளைய பெருமாள் ஸ்வாதந்த்ர்யத்தை ஆரோபித்துக்கொண்டு பெருமாள் நியமனத்தைத் தள்ளி நடந்தா ரென்று பெருமாளறிந்து, பாஹ்யாகாரத்தாலேயே இளையவரின்பேரில் நிந்தாவாக்யம் மொழிந்தாரென்பதை நாம் கேட்டிருக்கிறேமல்லவா? ஆகையால் ஸ்வாதந்த்ரயம் ஆரோபிதமானுலும் அநர்த்தாவஹமேயாம்.

ஆரோபித ஸ்வாதந்த்ரயம் என்பது அனேகமாக நிஷ்பலமாகவே யாகிறது. அதையும் இளையவரிடத்திலேயே காணலாம். இங்கு ஸ்தாலீபுலாக ந்யாயத்தாலே ஓரிடம் எடுத்துக்காட்டப்படுகிறது. முன் தன்தாயின் அபிப்ராயாநுஸாரமாக பித்ருவாக்யத்தை நிறைவேற்றுகைக்காகப் பெருமாள் வநம் செல்லுகைக்கு உத்தேசிக்க, அப்பொழுது இந்த ஸ்ரீ லக்ஷ்மணன் தன்ஸ்வரூப ஸித்தமான பகவத்பாரதந்த்ர்யத்தை அடியோடுமறந்து ஸ்வாதந்த்ர்ய வேஷம் கொண்டு மிகவும் அமர்ஷாவேகத்துடன்,

"நஶோபநமிதம் ஸௌம்ய ப்ராயேண யஸ்ய ராவணோ வநம் ।
த்யக்த்வா ராஜ்யஶ்ரியம் மஹ்யம் ஸித்யா ஶரஜ்வஸம்மதம் ॥

விபரீதஸ்ச வ்ருத்தஸ்ச விஷயைஸ்ச ப்ரயக்ஷித:।
ந்ருப: கிமிவ ந ப்ரூயாத் ஸோதிஸ்ரோ ந: ஸமந்மய: ॥"

என்றுதடங்கி, சுஹம் ஹநிஷ்யே விதரம் வ்ருத்தம் காமவஶம்கதம் ।
ஸ்த்ரியா யுக்தம் நிஸங்கம் பாலபக்ஷம் ந்ருபாயயா ॥"

என்றும், மயா வாச்யஸ் ஸ யந்தா தவ ப்ராத்ருஸ்ய ராகவ ।
கிம் ஸுமைத்ரேயாஸ் ப்ரியம் கர்த்தும் க்ருதாம் த்வய்யேவ திஷ்டத: ॥
நிர்ப்பந்தஸ்யா மமோம் க்ருத்வா மயோபாயம் மநுஜர்ஷப ।
சிக்ஷயாமி ஶரோத்ஸ்தோக்ஷ்ண: யதி ஶ்ராவ்யஸி விப்ரியே ॥

என்றும் சொல்லுகிறபடியே, இவர் பெருமாளை வசம்போக வொட்டாமல் மறுத்துவிட உத்தேசம் கொண்டாரே யொழிய ஏதாவது இவரெண்ணம் கிஞ்சித்தேனும் நிறைவேறிற்ருே? இல்லையே; ஆகையால் ஸ்வாதந்த்ர்யாரோபண மென்பது நிஷ்பலமா மென்பதில் சந்தேஹமேயில்லை.

ஆனல் சில வாக்யங்களில் இளையபெருமாள் சுக்ரீவரோடு ஸமாஞ்பிப் ப்ராயராய் இருந்தார்போ லிருக்கிறதே யென்னில், இது ஆபாதமாகத் தோற்று மத்தனையே யொழிய விமர்சித்துப் பார்க்கில் இளையவர் சுக்ரீவனேடு கலந்ததாகவே தோற்றவில்லை. ஆபாதமாகத் தோற்றுமிடமும்,

“ ஏவமுக்தஸ்து ராமேண ஸுக்ரீவ: ஸஹலக்ஷ்மண:
உத்தாயேதம் மஹாப்ராஜ்ஞ: ப்ரணதோ வாக்யமப்ரவீத் ॥ ”

என்கிறவிடந்தானே. இங்கு சுக்ரீவன் லக்ஷ்மணனையும் கூட்டிக்கொண்டு சடக்கென்றெழுந்து ப்ரதிஷேத வாக்யமிட்டாரென்றிறே இதில் ஆபாதமாகத்தோற்று மர்த்தமாகிறது. பூர்வோத்தர ஸந்தர்ப்பங்களை இங்கு பராமர்சித்துப்பார்க்கில் ப்ரகரணார்த்தம் வேருகவேயன்ருே தோற்றுகிறது.

அதாவது—சுக்ரீவன் முற்பட விபீஷணழ்வானை அங்கீகரிக்கக்கூடாதென்று வாய்மொழியாக ப்ரார்த்திக்க, அதற்கு ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகன்

“ ஶ்ரூயதே ஹி கபோதேந சத்ரு: சரணமாகத: ।
அர்ச்சிதஸ்ச யதாந்யாயம் ஸ்வைஸ்ச மாம்ஸைர் நிமந்த்ரித: ॥ ”

என்கிற கபோதோபாக்யானத்தாலும்,

“ ருஷே: கண்வஸ்ய புத்ரேண கண்டுநா பரமர்ஷிணா ।
ஶ்ருணு காதாம் புரா கீதாம் தர்மிஷ்டாம் ஸத்யவாதிநா ॥



பத்தாஞ்ஜலிபுடம் தீநம் யாசந்தம் சரணாகதம் ।
ந ஹந்யாதாந்ருசம்ஸ்யார்த்தமபி சத்ரும் பரந்தப ॥
ஆர்த்தோ வா யதி வா த்ருப்த: பரேஷாம் சரணாகத: ।
அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா ॥ ”

என்கிற பகவத் கண்டோக்யானத்தாலும் ஸாமான்யமாக சரணுகதிக்குண்டான அவாங்மனஸ கோசர ப்ரபாவத்தையும் அதை அநாதரிக்கில்வரும் ப்ரத்யவாயத்தையும் அருளிச்செய்து, ப்ரக்ருதத்தில் விபீஷணழ்வான் சரணுகதியையே தலைக்கட்டத் திருவுள்ளம்பற்றியிருக்க, ஸுக்ரீவன் தாமும் அச்சரணுகத்யுபாயத்தை அநுஷ்டித்து தம்மபிப்ராயத்தை நிறைவேற்ற எண்ணங்கொண்டு விபீஷணன் சரணுகதியைக் காட்டில் தம் சரணுகதிக்கோர் ஸங்க்யாதிசய ரூபமான ஏற்றத்தை சம்பாதிக்கக்கருதி, பகவதைக பரதந்த்ரரான ஸ்ரீ இளையபெருமாளை பலாத்காரமாகத் தட்டிக்கொடுத்து ஓராளாக்கித் தம்மபிப்ராயத்தில் இரண்டுசரணுகதி யிருப்பதாகக் காட்டி கார்யஸாதனம் பண்ண யத்னித்தாரென்று தோற்றுகிறதே யொழிய, ஸ்வதஃ ஸ்ரீ லக்ஷ்மணன் இதில் ப்ரவர்த்தித்ததாகத் தோற்றவில்லையே.

அப்படி ப்ரவர்த்தித்தா ரென்பது உண்மையாகில் எங்கேயாவது தனிவாக்ய மிட்டிருக்கலாமே; ஆகையால்தான் மஹாகவியும் சுக்ரீவனேடு இளையவரும் அபிப்ராயம் கொடுத்தாரென்கிற விடத்தில் ஸுக்ரீவரை ப்ரதானமாகச்சொல்லி இவரை அப்ரதானமாகச் சொல்லியிருக்கிருர். “ ஸஹலக்ஷ்மண: ” என்றிறே அவ்விடத்தில் இவரைச் சொல்லியிருப்பது. இந்தப்பதம் “ ஸஹயுக்தேऽப்ரதாநே ” என்கிற அநுசாஸனத்தால் அநுசிஷ்டமானதால் இளையவரிடத்தில் அப்ராதான்யத்தையன்ருே காட்டுகிறது. இவரை இப்படி சொல்லுகையால் வால்மீகியினுடைய திருவுள்ளம் ஒருவிதமாக ஏற்படுகிறது. அதாவது—சுக்ரீவன் ஸௌமித்ரியை தம் அபிப்ராயத்துக்கு வாருமென்றழைக்க, இந்த லக்ஷ்மணன் பாரதந்த்ரனுகையால் நான்மாட்டேன் என்று சொல்ல, அதுகேட்டு சுக்ரீவன் ஓ ஸௌமித்ரியே! உம்முடைய நிலையை நான் குலைக்கவரவில்லை. ஆனல் இவ்விஷயத்தில் நீர் அப்ரதான உபகாரம் பண்ணவேண்டும். அது யாதெனில், நீர் அப்ரதான

ராக நிற்பீரேயாகிலும் உம்மை நான் தொட்டுக்காட்டி உம்முடைய சரணாகதியையும் நானே சேர்த்து அநுஷ்டித்து என்சரணாகதியை த்விகுணமான வுபாயமாக்கி ஏகாகியான விபீஷணன் சரணாகதியை அழியச்செய்து என் கார்யஸாதநம் பண்ணிக்கொள்ளுகிறேன், என்று பற்பல உபச்சந்தனோக்திகளால் ப்ரார்த்திக்க, அநந்தரம் ஸ்ரீ இளையவரும் சுக்ரீவனுடைய ப்ரார்த்தனைக்கிரங்கி, இப்படி யாகில் நம்பாரதந்த்ர்ய வ்ருத்திக்கோர் தீங்கும் வாராதென்றெண்ணி அவர் சரணாகதி பண்ணும்பொழுது தான் அப்ரதானராக பக்கத்திலிருந்தாரென்று தோற்றுகிறதேதவிர, தான் தம்ஹ்ருதயத்தால் சரணாகதியை யனுஷ்டித்தாரென்று மஹாகவி வாக்யத்தால் தோற்றவில்லையிறே.

ஆனால் அவர் சுக்ரீவன் வாக்யத்திற்கு இரங்கினார் என்பதற்கு பலம் யாதெனில், தான் சரணாகதிபண்ணுகிறதாக சுக்ரீவன் சொல்லும்போது நிஷேதியாம லிருந்தா ரென்பதே யாகலாம்.

சுக்ரீவன் சரணாகதிபண்ணினா ரென்னுமிடம் எங்ஙனேயெனில் « உஸாரயேஹம் ஶோகார்த்தராஜு: ஶரணமேதா வாக்யஶேஷவீக்ஷ » என்கிறவிடத்தில் « ஶரணகத: » என்கிற பதத்தாலே இவர் ப்ரபத்திபண்ணி யிருக்கிறதாக நம்பூர்வாசார்யர்கள் அருளிச்செய்திருக்கிறார்களிறே; அப்படிக்கிந்த ப்ரணத பதத்தால் சரணவரணம் அவிவக்ஷிதமே யாகில் முதலில் ப்ரயோகிக்கப்பட்ட நிஷேதவாக்யமொன்றே போதும்; மறுபடி இந்த சுக்ரீவனுடைய நிஷேதவாக்யம் பௌநருக்த்யதோஷ க்ரஸ்தமாகையால் நிஷ்பலமாக வேண்டியதாகவரும்.

ஆகையால் முன்வாக்யத்தைக் காட்டில் இரண்டாவது வாக்யத்திற்கு ஏதோ ஒருபலம் இருப்பதாகச் சொல்லுவதன்றோ யுக்தமாகத் தோற்றுகிறது. இங்கு ப்ரணத பதத்தை சரணவரணபரமாக வங்கீகரிக்கில் முன்வாக்யத்தைகாட்டிலும் இரண்டாவது வாக்யத்திற்கு சரணாகதி பரத்வரூபமான பலத்தைக்காட்டி ஸார்த்தக்யத்தை ஸம்பாதித்துக் கொள்ளலாம்.

ஆகையால் இந்த ப்ரணதபதம் சரணாகதியைக் குறிக்கிறது என்கிற பூர்வாசார்யர்களின் நிர்வாஹம் நிர்ப்பாதமாகத் தோற்றுகிறது.

மையூர். வ. ஸ்ரீநிவாஸாசாரியர்.

ஸ்ரீ:

# புஸ்தக விமர்ஶம்.

விவாஹகால விமர்ஶம்—இந்தப்பெயர்கொண்ட ஓர் க்ரந்தம் ஸம்ஸ்க்ருதபாஷையில் மைலாப்பூர். ஸம்ஸ்க்ருதகாலேஜ் - தர்மஶாஸ்த்ர பண்டிதர் ப்ரஹ்மஸ்ரீ. டி. வி. ஸ்ரீநிவாஸ ஶாஸ்த்ரிகளவர்களால் ரசநம் செய்யப்பட்டு நாகர எழுத்தில் சென்னை ஆநந்த அச்சாபீஸில் அச்சிடப்பட்டு நம்முடைய விமர்ஶத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தென் இந்தியா விவாஹச்சீர்திருத்தத்துக்காக ஏற்பட்டிருக்கும் சபையார் வேண்டுகோளின்பேரில், ருதுமதீ விவாஹம் ஶாஸ்த்ரீயம் என்கிற நிர்த்தாரணம் ஸப்ரமாணமாய் இந்தக்ரந்தத்தில் செய்யப்பட்டிருக்கிறது. 64 - பக்கங்களடங்கிய இந்தக்ரந்தத்தில் விஷயம் மூன்று பரிச்சேதங்களாகப் பிரிக்கப்பட்டு முதலில் ஸ்ம்ருத்யேக வாக்யதையும், இரண்டாவதில் ப்ரத்யேகம் ஸ்ம்ருத்யபிப்ராயமும், மூன்றாவதில் க்ருஹ்ய ஸூத்ரார்த்தங்களும், செவ்வையாய் விசாரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த க்ரந்தத்துக்கு அநுபந்தமாக 88 - பக்கங்களில், விவாஹஸம்பத்தமான ஆபஸ்தம்ப போதாயநாதிகளான 13 - க்ருஹ்யஸூத்ரங்களும் முக்யமானவைகளுக்கு பாஷ்யங்களும், மநுபோதாயநாதிகளான 23 - ஸ்ம்ருதிகளிலிருந்து வசநங்களும், ஹேமாத்ரி, பராஶரமாதவீயம் முதலான 7 - நிபந்தந க்ரந்தங்களிலிருந்து வாக்யங்களும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றன. கொஞ்சம் விஸ்தாரமாய் எல்லாவிஷயங்களுக்கும் ஒரு விஷயஸூசிகையையும்சேர்த்து, அசுத்தங்களும் குறைவாய் ஏற்பட்டிருந்தால் இந்த பரிச்ரமம் இன்னமும் ஶ்லாக்யமாக இருக்கும். ஆகிலும் இவ்வளவு மூலவசநங்களையும் பக்ஷபாதமில்லாமல் ஒருங்கு சேர்த்திருப்பதே பரமோபகார மென்று எண்ணவேண்டும். தத்காலம் ருதுமதீ விவாஹவிஷயமாய் ஏற்படும் விவாதங்களுக்கு இப்படிப்பட்ட மூலவசநஸங்கலநம் ப்ரதமாபேக்ஷிதமென்பதில் சந்தேகமில்லை. இவ்வளவு பரிச்ரமத்தை வஹித்த ஶாஸ்த்ரிகளுக்கும் அவரை ப்ரேரித்த சபையாருக்கும் எல்லாரும் க்ருதஜ்ஞதை பாராட்டவேண்டியது கடமையாகிறது.

இந்த க்ரந்தத்தின் முடிவான அபிப்ராயம் இதில் 8 - வது பக்கத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ரஜோதர்ஶநம் வரைக்கும் கந்யைகளின் விவாஹத்துக்கு முக்யகாலமென்றும், அதற்குப்பிறகு மூன்றுவருஷம் வரையில் களணம் அல்லது முக்யமல்லாத காலமென்றும், அதற்குப்பிறகு பிதாமுதலியோருக்கு தாநாதிகாரமில்லையென்றும் கந்யகையே ஸ்வயம்வரம்செய்து கொள்ளலாமென்றும், அதுவும் ருதுவாகி 4-வது வர்ஷத்தில்தான் கந்யைசெய்யக் கூடுமென்றும், அதற்குப்பிறகுதான் விவாஹமாகாத த்விஜ

கந்யை 'வ்ருஷலீ' என்று பெயருள்ளவளா யாகிறாளென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ருதுவானபிறகு நாலுவருஷம் வரையில் செய்யும் விவாஹமும் தர்மார்த்தமான விவாஹமென்றும், அதற்குப்பிறகு விவாஹமாகாவிட்டால் தான் கந்யை, பிதா இவர்களுக்குத் தோஷமென்றும், நிந்தாவசநங்களெல்லாம் இந்த தாத்பர்யத்துடன் அர்த்தஞ்செய்யப்படவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ம்ருதிகளில் கௌணமென்று சொல்லப்படும் ப்ரௌடா விவாஹமே க்ருஹ்ய ஸூத்ரங்களின் அபிப்ராயத்துக்கு ஏற்றவைகளென்று சொல்ல இடமுண்டாகிலும், கேவலம் க்ரமங்களையும் கல்பங்களையும் உபதேசிக்கவந்த ஸூத்ரங்களைக்காட்டிலும் இதம்பரமாய் விதிநிஷேதங்களைச்செய்யும் ஸ்ம்ருதிகளே ப்ரபலம் என்று சொல்லவேண்டியதாகையால் ப்ரௌடாவிவாஹம் கௌணகல்பமாகத்தான் சொல்லப்படக்கூடும் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிர்ணயங்களுக்கு யுக்திகளும் பூர்வபக்ஷங்களின் கண்டநயுக்திகளும் எழுதப்புகுந்தால் விஸ்தரிக்கு மாகையால் இந்தக்ரந்தத்தைத்தருவித்து அந்தயுக்திகளை ஆஸ்தையுள்ள எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டியது.

சாஸ்த்ர ப்ராமாண்யத்தில் ருசியுள்ள எல்லாவைதிகர்களும் லௌகிகர்களும் இந்தக்ரந்தத்தை ச்ரத்தையுடன் வாங்கிப்பார்த்து அதின்நிர்த்தாரணங்களின் யுக்தாயுக்தங்களையறிந்துகொள்ள வேண்டியது ஆவஶ்யகம். சாஸ்த்ரப்ராமாண்யத்தை யபேக்ஷிக்காமலே விவாஹ சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்று சிலரும், தமக்கு சாஸ்த்ரங்களில் ச்ரத்தையில்லாவிடினும் அதில் ச்ரத்தையைப் பாராட்டும் மந்தமதிகளைத்திருப்ப சாஸ்த்ரங்களும் இப்படிப்பட்ட கார்யங்களை அநுமதிக்கின்றன வென்று ரூபிப்பது ஸமர்த்தமான மார்க்கமென்று சிலரும் எண்ணுமிக்காலத்தில், ருஜுவாய் ஶாஸ்த்ர ப்ராமாண்யத்தை ஒப்புக்கொண்டு, ஶாஸ்த்ர ஸம்பிரதிபந்நமான வ்யவஸ்தா ப்ரகாரங்களை அவலம்பிக்கும் இந்தக்ரந்தம் எல்லாவைதிகர்களாலும் அவஶ்யமாய் அபிநந்தநீயந்தான். இதின் நிர்ணயங்கள் தங்களுக்கு ருசிக்கவில்லை யென்ற காரணத்தால், இதின் ரசனையில் வ்யக்தமாயிருக்கும் குணங்களை ஒருவரும் உபேக்ஷிக்கலாகாது. அதாவது, லளிதமாயும் யாவதுபயுக்த மாயுமுள்ள வாக்யரசனையும், ஸங்கோசமில்லாமல் பூர்வபக்ஷோபந்யாஸமும், கொஞ்சமேனும் ஆக்ரஹம், ஸம்ரம்பம், கடுசப்தம், முதலான தோஷங்களில்லாமல் ஸ்வமதோபந்யாஸமும், மீமாம்ஸைமுதலான சாஸ்த்ர பரிசயத்தினால் சிக்ஷிதமான புத்திகௌசலமும், ஆகிய குணங்கள் இந்தக்ரந்தத்தில் நன்றாய்க் காணப்படுகின்றன.

இந்தக்ரந்தம் ப்ரஹ்மஸ்ரீ. கணபதி சாஸ்த்ரிகளின் "வயோநிர்ணய" க்ரந்தத்துக்குக் கண்டநமாகையால் அதையும்சேர்த்து இத்துடன் படிப்பது உசிதம். இவ்விரண்டில் எது யுக்தமென்கிற விஷயத்தில் பண்டிதர்களே ப்ரமாணம்.

---

[கடிதங்கள் எழுதுகிறவர்களுக்த அறிக்கை.—கடிதங்கள் எழுதுகிறவர்களின் அபிப்ராயங்களுக்குப் பத்ராதிபர் உத்தரவாதமில்லை. கடிதங்கள் நல்ல காகிதத்தில் ஒருபக்கத்தில் தெளிவாக எழுதப்படவேண்டும். எழுதுகிறவர்கள் பெயரும் விலாஸமும் பத்ராதிபருக்கு வ்யக்தமாய் அறிவிக்கப்படவேண்டும். வேதாந்ததீபிகை பத்ராதிபர்.]

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

## நம்மாழ்வார் என்னும் திருநாமம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு,

சென்ற ஸஞ்சிகையில் 326-ம் பக்கத்தில் ஸ்ரீ ஶடகோபனுக்கு நம்மாழ்வார் என்கிற திருநாமம் உண்டானதற்குக் காரணமாய் முன் ஒருஸஞ்சிகையில் எழுதியிருந்த ஐதிஹ்யம் ஸ்ரீ நிகமாந்த தேசிகன் ஸ்ரீஸூக்திக்கு விருத்தமானதினால் எப்படி உபபந்நமாகுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு இங்கே எழுதியிருப்பதே ப்ராமாணிகமான ஸமாதானமாய்த்தோன்றுகிறது.

1. ஸ்ரீ தேசிக ஸூக்திகளில் சிலஇடங்களில் 'நம்மாழ்வார்' என்றும், ஸம்ப்ரதாயபரிசுத்தி, ரஹஸ்யத்ரயஸாரம் முதலான சில இடங்களில் 'ஆழ்வார்' என்றும் இருக்கிறது. ஆறாயிரப்படியிலும் முப்பத்தாறாயிரப்படியிலும் பஹூதரமாய் ஆழ்வாரென்றே காணப்படுகிறது. அபாதிதமான ஐதிஹ்ய ப்ரமாணாநுகுணமாய் முன் ஆழ்வார் என்றே திருநாமமிருந்திருக்கவேண்டும்.

2. முனித்ரயம், மடம் ஆகிய இரண்டு ஸம்ப்ரதாயங்களிலும் ஆசார்ய புருஷர்களின் பரம்பரையிலும் ஸ்ரீ ஆதிவண்சடகோப ஸ்வாமியினுடைய தனியனை அநுஸந்திக்காதவர்களில்லாததினால் அவர் நியமநத்தை அநுஸரித்து அச்சுக்ரந்தங்களிலும் மற்றக்ரந்தங்களிலும் நம்மாழ்வார் என்று எழுதப்பட்டிருப்பது ஒருவருக்கும் பாதகமாகாது.

3. மேலும் ப்ராசீன ஏட்டுக்ரந்தங்களில் ஆழ்வார் என்று இருந்து பிந்தின ப்ரதிகளில் நம்மாழ்வார் என்று மாற்றப்பட்டிருக்கிறதென்று சொல்

வதும் அஸம்பாவிதமில்லை. இப்போது க்ரந்தங்களுக்கும் முன்க்ரந்தங்களுக்கும் அனேக பாடபேதங்கள் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திலேயே காண்கிறோம்.

4. தவிரவும், 'நம்மாழ்வார்' என்றே ஸ்ரீதேசிகஸூக்தி இருந்ததென்று நிர்ப்பந்தமாய்ச் சொன்னாலும், அதனால் மேற்சொன்ன ஐதிஹ்யத்துக்கு யாதொரு அநுபபத்தியுமில்லை. அதெப்படியென்றால், ஸ்ரீதேசிகன் பிரபன்னஸந்தான கூடஸ்தராயும் குருபரம்பரா ப்ரதாநராயுமுள்ள ஆழ்வாரிடத்தில் ஆதராதிசயத்தால் 'நம்பாணநாத' னென்று அதிகாரஸங்க்ரஹத்தில் ஸாதித்ததுபோல், 'நம்மாழ்வார்' என்று அருளிச்செய்திருக்கலாம். பிறகு, ஸந்நிதிகுருபரம்பரை 19-வது பக்கத்தில் எழுதியிருக்கிறபடி, ஸ்ரீ ஆதிப்பிரான்நியமனத்தால், 'நம் ஆழ்வார்' என்று ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமியால் யௌகிகமாய் ஸாதிக்கப்பட்ட திருநாமமே யோகரூடமாய் ஆகிவிட்டதென்பதே உசிதமான ஸமாதானம். இப்போது அச்சிடப்பட்டிருக்கும் ஸந்நிதிகுருபரம்பரை க்ரந்தமும் ப்ராசீனமான கருடகிரி துர்யவைபவமென்கிற பெரிய குருபரம்பரா ப்ரபாவத்தை அநுஸரித்ததாகையால் இதிற்கண்ட ஐதிஹ்யத்தில் அப்ராமாண்யபுத்தி சரியானதல்ல.

5. ஸ்ரீ தேசிகன்காலத்துக்குமுன் ஆழ்வாருக்கு நம்மாழ்வார் என்று திருநாமம் சாத்தப்பட்டதாய் வேறு ஐதிஹ்யமொன்றிருப்பதாகத் தெரிந்தாலொழிய, ஸ்ரீ ஸந்நிதி குருபரம்பரையில் கண்ட ஐதிஹ்யம் அமூலமென்றுசொல்ல ந்யாயமில்லை.

புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

(2)

# ஓர் நல்ல தர்மம்.

ஸ்ரீவேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு,

விசேஷமாய் ப்ராசீனவித்யைகளை அநாதரிக்கும் இந்தக்காலத்தில் மிகவும் ஆஸ்திகர்களான இரண்டுபேர்கள் செய்துவரும் அடியில்கண்ட தர்மத்தை வேதாந்ததீபிகையில் ப்ரசுரம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

செங்கற்பட்டுஜில்லா பென்னலூர் க்ராமத்திலிருக்கும் வரதப்பநாயுடு என்னும் ஓர் குடும்பியான வைஷ்ணவாபிமானி, சின்னகாஞ்சீபுரம் யதோக்



தகாரி வீதியிலிருக்கும் மதுராந்தகம் ஸ்ரீ. சடகோபாசார்யர் என்னும்ஸ்வாமியிடம் ஸமாச்ரயணம், ஸம்ப்ரதாய ஜ்ஞாநம், முதலானதுகளைப்பெற்று அந்த க்ருதஜ்ஞதையால், தன்னுடையதான சுமார் 11½-ஏகர் நிலத்தையும் ரொக்கத்தையும் சேர்த்து ரூ. 10000-வரையில் பொருமான ஸொத்துக்களைத்தன் ஆசார்யரான சடகோபாசார்யர் ஸ்வாமியிடம் ஸமர்ப்பித்துச் சென்ற ஜூலை ௴த்தில் தானசாஸநமும்செய்து ரெஜிஸ்டர் செய்துவிட்டார். இவருடைய அபிஸந்தியை நன்றாயறிந்த அந்தஸ்வாமியும் இந்தஸொத்து முழுவதையும் தர்மத்துக்கே விநியோகிப்பதாய் நிஶ்சயித்து இதையும் தன்னுடைய ஸ்தாவர ஜங்கம ஸொத்துக்களையும் சேர்த்து அதன்வரும்படிகளைக்கொண்டு தானிருக்கும் வீதியில் ஓர் வேதபாடசாலையை ஸ்தாபித்து அதற்குத்தகுந்த விசாரணைக்கர்த்தர்களையும் ஏற்படுத்தியிருக்கிறார். இப்பொழுதே 8-பிள்ளைகள்சேர்ந்திருப்பதாயும் இன்னம் இதைவிஸ்தரித்து ஸாஹித்யம், சாஸ்த்ரங்கள், முதலானவைகளும் கற்பிக்க ஏற்பாடுசெய்யப் போவதாயும் தெரியவருகிறது. இந்தஸ்வாமி ஏற்கெனவே காஞ்சீபுரம், மதுராந்தகம் முதலான இடங்களில் விசேஷகைங்கர்யங்கள் செய்திருப்பதால் இவரால் ஆரம்பிக்கப்பட்ட இந்ததர்மமும் உத்ஸாஹமாய் குறைவன்றியில் நடந்தேறி வருமென்பதில் சந்தேகமில்லை. இந்த தர்மஸம்பந்தமாய் நிரந்தரமாய் விசிஷ்டாத்வைத ப்ரவசநம் செய்ய ஓர் தகுந்த வித்வானை ஏற்படுத்தவேண்டியதும், பல க்ராமங்களுக்கும்போய் உபந்யாஸங்கள் செய்து ஸ்ரீ பகவத்ராமாநுஜ ஸித்தாந்த ப்ரவசநம் செய்யவேண்டியதற்காக ஒரு வித்வானை நியமிக்கவேண்டியதும் அவச்யம். இந்த உத்தேசங்களை நிறைவேற்ற இன்னும் த்ரவ்யம் வேண்டியதாகையால் இது விஷயத்தில் தனிகர்களின் ஒத்தாசையை இந்தஸ்வாமி அபேக்ஷிக்கிறார்.

விசேஷவிரக்தியுடன் ஸ்ரீ. வரதப்பநாயுடு என்பவர் தன்பூமியைத் தர்மத்துக்கு தானம்செய்ததும், அதைச்சரியாய் விநியோகித்துவர ஸ்ரீ. சடகோபாசார்யர் ஏற்பாடுசெய்து வருவதும் மிகவும் ஶ்லாகிக்கத்தகுந்த விஷயங்களே. இந்தப்பாடசாலை முதலான தர்மங்கள் சரிவரநடந்துவர எல்லா ஆஸ்திகர்களும் சக்த்யநுகுணமாக உபகரித்தால் இந்த தர்மம் ப்ரஸித்தியை யடையும். இதற்குத்தகுந்த தஸ்தாவேஜிகளும் தகுந்த டிரஸ்டிகளும் ஏற்பாடு செய்து சீக்கிரத்தில் ஸ்ரீ. சடகோபாசார்யர் தர்மத்தை ஸ்திரப்படுவார் என்று நம்புகிறேன்.

ஓர் சபை அங்கத்தினர்.

## (3)

## ஒரு புதிய உபசபை.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

நாளது அற்பசி மீ 4உ ஞாயிற்றுக் கிழமையாகிய அக்டோபர்மீ 20உ விஜயதசமி தினத்தில், மதுராந்தகத்தில் ஸ்ரீ அகோபில மடத்துச் சிஷ்யர்களின் ஒரு சபை கூடிற்று. அதில் ஸ்ரீ மாந். மாம்பாக்கம், ஆழ்வார் ராமாநுஜாசார்யர் ஸ்வாமி ஸபாத்யக்ஷராய் எழுந்தருளியிருந்தார். சித்தூரிலிருந்து ஸ்ரீ சிஷ்ய சபையின் பொதுக்கார்யதர்சி ஸ்ரீமாந். ஸி. ராஜகோபாலாசார்யர் ஸபைக்கு வந்திருந்து சபையின் நோக்கங்களையும் வ்யாபாரங்களையும் பற்றி விவரித்துப் பேசி, ஸ்ரீ ஸந்நிதியின் வைபவத்தை ப்ரகாசப் படுத்துவதும் ஸ்ரீராமாநுஜ மதத்தைப் பிரவசனம் செய்வதுமே இந்தச் சபைக்கு முக்கிய உத்தேசங்களென்று வெளியிட்டார். அம்மணம்பாக்கம் ஸ்ரீமாந். விஜயராகவாசாரியர் ஸ்வாமி, இப்பொழுது ஸ்ரீ அழகியசிங்கர் க்ருபையால் திருநாராயண புரத்தில் ஆதிவண்சடகோபஸ்வாமி ப்ருந்தாவநம் திருப்பணி செய்யப் பட்டிருப்பது போல், பலவிடங்களில் மடங்களும், கட்டடங்களும், புதுப்பிக்கப் படுவதை அந்தயந்தமாய் அபேக்ஷிக்கின்றன வென்றும், இதற்கு நிதர்சனமாக த்யாகராஜ புரத்தில் ஸ்ரீமந்நாராயண ஸ்வாமி ப்ருந்தாவநம் பராமர்சிக்கப் படவேண்டியது அவச்யமென்றும், அப்படிச் செய்யாமலிருப்பது தன்னைப்போல் அந்த ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்த பல பேர்களுக்கும் துக்ககரமாயிருக்கிற தென்றும் விஜ்ஞாபித்தார். அகோபிலத்தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதிகளின் சிதிலமான ஸந்நிவேசங்கள் முன்னே தயார் செய்யப்பட்ட படங்கள் மூலமாய் வந்திருந்தவர்களுக்குக் காண்பிக்கப்பட்டன. பிறகு வித்வான். ஸ்ரீ திருவேங்கடாசாரியரும் மற்று மெழுந்தருளியிருந்த ஸ்வாமிகளும் மதுராந்தகத்திலும் ஓர் சபையின் பிரிவு ஏற்படவேண்டு மென்று சொல்ல, பின்வரும் தீர்மானங்கள் க்ரமமாய் செய்யப்பட்டு எல்லாராலும் அங்கீகரிக்கப் பட்டன.

(1) மதுராந்தகத்தில் ஸ்ரீ அகோபில மடத்துச் சிஷ்யஸபையின் ஓர் பிரிவு ஏற்படுத்தப் பட்டது. அதற்கு ஸ்ரீ. அன்னப்பிள்ளை திருவேங்கடாசாரியர் ஸபாத்யக்ஷராகவும், ஸ்ரீமாந் ஆயநம். க்ருஷ்ணஸாமி அய்யங்கார் கார்யதர்சியாகவும் ஏற்படுத்தப் பட்டார்கள்.



(2) அடுத்த சிஷ்யசபையின் மஹாஸங்கம் வரும் டிஸம்பர் மாஸத்தில் மதுராந்தகத்தில் கூட்டப் படவேண்டு மென்றும், அந்தப்படி ஏற்பாடு செய்யச்சபை அத்யக்ஷரிடம் இந்தத் தீர்மானம் தெரியப் படுத்தப்பட வேண்டு மென்றும் தீர்மானிக்கப் பட்டது.

நடந்த ஸபையின் அத்யக்ஷரான ஸ்ரீமாந். ஆழ்வார் ராமாநுஜாசாரியரும் ஸ்ரீமாந் பகல் தீவட்டி. சடகோபாசார்யரும் இந்த மதுராந்தகத்தில் பலகைங்கர்யங்கள் செய்து கோவிலுக்குப் பூமிகளும் ஸமர்ப்பித்திருக்கிறார்கள். இவ்வளவு கைங்கர்யத்திலும் ஸம்ப்ரதாய வ்ருத்தியிலும் ச்ரத்தையும் ஊக்கமுமுள்ள ஸாதுக்கள் வஸிக்கும் இந்தப் புராண ஸ்தலத்தில் அடுத்த மஹாஸங்கம் கூடவேண்டுமென்று செய்திருக்கும் ஏற்பாடு மிகவும் ச்லாகிக்கத் தகுந்ததே. இவ்வளவு ஹிதைஷிகளான ஸ்வாமிகள் அபிவ்ருத்திக்குக் குறைவொன்று மில்லாமல் எல்லாரும் ஐகமத்யமாய் அடுத்த மஹாஸங்கத்தைச் சிறப்புடன் நிறைவேற்றிப் பிரிவையும் மேன்மேல் வ்ருத்தியடையச் செய்வார்களென்பதில் ஸந்தேகமில்லை. அப்படி நடக்க ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் க்ருபை செய்யவேணு மென்று பிரார்த்திக்கிறேன்.

மதுராந்தகம். }
அற்பசி மீ 5 உ. }

ஓர் மடத்துச் சிஷ்யர்.

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு-ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபால ஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது) ... ... | 0 | 2 | 0 |
| 3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் சிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யாற் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |

வேண்டுமவர்கள் சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதி வீதியில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ:

# பத்ராதிபரின் குறிப்புகள்.

தத்கால ஸங்கங்கள்.

இக்காலங்களில் ஜநங்கள் பற்பலவிஷயங்களில் பற்பல ஸமாஜங்களைச் சேர்த்து ஒவ்வொரு கார்யங்களை நடத்திவருவதை நாம் காண்கிறோம். ஒரேமாதிரியான விஷயத்தில் பின்னபின்னமான அபிப்ராயங்களைப் போஷித்து ஸங்கங்கள் சேருவதையும் காண்கிறோம். இதற்கு உதாஹரணமாக, வித்யை விஷயத்தில் ஸம்ஸ்க்ருதத்தை வ்ருத்திசெய்யவும், தமிழ், தெலுங்கு, கன்னடம், முதலானபாஷைகளை வ்ருத்திசெய்யவும் வெவ்வேறு ஸங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பொதுவான க்ஷேமங்களை வ்ருத்திசெய்ய ஆந்த்ரர்களும், வைச்யர்களும், ஸாரஸ்வதர்களும், இன்னும் பலகூட்டத்தார்களும் தங்கள் தங்கள் ப்ரத்யேக க்ஷேமங்களையே கருதி கூட்டங்கள் சேருகிறார்கள். இப்படியே மதவிஷயங்களிலும் ஹிந்துக்களும், மகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும், தங்கள் தங்கள் மதவ்ருத்தியை உத்தேசித்து ப்ரத்யேக ஸங்கங்களைச்சேர்க்கிறார்கள். பொதுவாய் நூறு ஜநங்களானாலும் மற்றவர்களுக்கு ஸம்பந்தமில்லாத ஒருபொது விஷயம் தங்களுக்கு ஏற்பட்டால், அதின் ப்ரகாரங்களை சர்ச்சைசெய்து நிர்ணயம்செய்ய ஸமாஜங்கள் ஏற்படுத்துவதை நாம் பார்த்து வருகிறோம். நம்முடைய விசேஷ ஆதரத்துக்குப் பாத்ரமான ஹிந்துமதத்திலும் இந்தரீதியை அநுஸரித்து ப்ராசீனமான த்வைத, அத்வைத, விசிஷ்டாத்வைத விபாகங்களும், நவீநங்களான ஆர்யஸமாஜம், ப்ரஹ்மஸமாஜம், தியோஸாபிகல்ஸமாஜம், ராமக்ருஷ்ணஸமாஜம், முதலான பலவிபாகங்களும் ஏற்பட்டிருப்பதால், அந்தந்த விபாகத்தார் தங்களுத்தேசங்களை நிறைவேற்ற தனித்தனிக்கூட்டங்களை ஏற்படுத்தி தங்



கள் மதவ்ருத்திக்கு அநுகூலமான கார்யங்களை நிர்த்தாரணஞ்செய்துவருகிறார்கள். இவைகளில் சிலஸமாஜங்கள் ஸாமான்யமாகவும் சிலஸமாஜங்கள் விசேஷாம்சங்களை ஆதரித்தும் ஏற்படுகின்றன. பொதுவாய் வேதங்களையும் ஸ்ம்ருதி புராணங்களையும் நன்றாய் ப்ரசாரணஞ்செய்யவும், அவைகளுக்கநுகுணமாய் அவச்யமான சீர்திருத்தங்களை ஏற்படுத்தவும், ஸம்ஸ்க்ருதத்தினுடையவும் ஹிந்திமுதலான தேசபாஷைகளுடையவும் அப்யாஸத்தை வ்ருத்திசெய்யவும், தேவாலயங்களிலும், மதஸம்பந்தமான மற்ற ஸ்தாநங்களிலும் தர்மங்கள் ஸரிவரநடந்து வரும்படியாய் தகுந்த விசாரணைத்திட்டங்களை ஏற்படுத்தவும், வர்ணாச்ரம தர்மங்கள் விதிப்படி நடக்கவேண்டிய ஏற்பாடுகள்செய்யவும், இதுபோன்ற இன்னம் பல நன்மைகளைச்செய்யவும் புதியதாய் ஸ்ரீ பாரத தர்ம மஹாமண்டலம் என்றபெயரால் ஒரு ஸங்கம் உண்டாக்கப்பட்டு சிலகாலமாய் வடதேசத்தில் நடந்துவருகிறது. மேற்கண்ட உத்தேசங்களுடன் ஸம்ஸ்க்ருத பாடசாலைகள் ஏற்படுத்துவதும் இந்த ஸங்கத்தாருக்கு உத்தேசந்தான். இந்த ஸங்கத்தாரால் இங்கிலீஷிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் பத்ரிகைகள் ப்ரசுரிக்கப்பட்டு வருவதாயும் தெரியவருகிறது.

இப்படிப்பட்ட ஸங்கங்கள் மிகவும் க்ஷேமகரங்களென்பதில் ஆக்ஷேபமில்லை. பலவிஷயங்களில் ஸங்கங்கள் ஏற்படுவது ஐகமத்யத்துக்குப் பாதகமாகுமென்று சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். ஆகிலும் பரஸ்பர மாத்ஸர்யத்தைவிலக்கி அவரவர்களுக்கு ஹிதமாகத் தோற்றும் விஷயங்களை உத்ஸாஹமாய் கவனித்துவந்தால் எல்லோருக்கும் பொதுவான விஷயங்களிலும் ஐகமத்யமும் உத்ஸாஹமும் ஸித்தமாயுண்டாகும். ஒரு குடும்பத்தில் ஒவ்வொருவருடைய சரீராரோக்யாதிகளை நியந்தாவா யிருப்போன் கவனிக்கவேண்டி யிருப்பதுபோல், அந்தந்த ஜநபாகங்களின் நன்மைகளையும் ப்ரத்யேகமாய் அவரவர்கள் கவனிப்பார்களானால் அதினால் முடிவில் க்ஷேமமே உண்டாகும். இதை உத்தேசித்துத்தான் ஸ்ரீ வைஷ்ணவ ஸாமான்யத்துக்குப் பலவிஷயங்களில் ஹிதகரங்களான அநேக ப்ரவருத்திகள் தற்காலம் அபேக்ஷிதங்

களா யிருக்கச்செய்தேயும், ஸ்ரீ அகோபிலமடத்துச் சிஷ்யர்களென்னும் பாகத்துக்கு ப்ரத்யேகமான சில சீர்திருத்தங்கள் அத்யந்தாபேக்ஷிதங்களென்கிற காரணத்தால், ஸ்ரீ அகோபிலமடத்துச் சிஷ்யஸபை என்கிற ஸங்கம் சேர்க்கப்பட்டு மடத்துச் சீர்திருத்தங்களில் கூடியவரையில் மூன்று வருஷகாலமாய் வ்யாபரித்து வருகிறது. இந்தச் சபைக்கு இப்படி விசேஷோத்தேச மிருப்பினும், மற்ற ஸ்ரீ வைஷ்ணவர்களுடன் இந்த ஸபையாருக்கும் ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்தாபிவ்ருத்தி என்கிற ஸாமான்யோத்தேசம் முக்யமாய் வேரூன்றிருக்கிறது. இப்படியே ஒவ்வொரு விசேஷோத்தேசத்தைநாடி ஏற்படும் சபைகளும் மதத்துக்கோ அல்லது தேசத்துக்கோ எது பொதுவான உத்தேசமோ அதை மறக்காமல் தாங்கள் அப்படிப்பட்ட விஷயங்களில் அங்கபூதர்கள் என்பதைக்கவனித்து அதற்கநுகுணமாக நடக்கவேணும். அப்படிச் செய்யும்பக்ஷத்தில் பலசபைகள் ஏற்பட்டாலும் பேதங்கள் வ்ருத்தியடையாமல் ஐகமத்யமே தலைக்கட்டிநிற்கும்.

**சிஷ்யஸபையின் அடுத்த மஹாஸங்கம்.**

சிஷ்யஸபையின் அடுத்த மஹாஸங்கத்தைப் பற்றியும் அதற்காகப் பொதுவாய் ஸ்ரீ வைஷ்ணவர்கள் செய்யக்கூடிய ஹிதகரமான வ்யாபாரங்களைப்பற்றியும் சென்ற ஸஞ்சிகையில் கொஞ்சம் சொன்னோம். சிலதினங்களுக்குமுன் செங்கற்பட்டு ஜில்லா மதுராந்தக மென்னும் ஸ்தலத்தில் மடத்துச் சிஷ்யர்களின் ஒருஸமாஜம் சேர்ந்ததாகவும், அதில் வெகு உத்ஸாஹத்துடன் பல ச்ரத்தையுள்ள ஸ்வாமிகள் கூடியிருந்து சிஷ்யஸபைக்கு மதுராந்தகத்தில் ஒரு உபசபை ஏற்படுத்தி, அதற்கு அத்யக்ஷர், கார்யதர்சி முதலான வ்யாபகர்களை நியமித்ததாகவும் நமக்குத்தெரியவருகிறது. இந்த சபையில் பொது சபையின் விதிகளும் உத்தேசங்களும் விசாரிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டு, ஸ்ரீ அழகிய சிங்கருக்கு விரோதமாய் யாதொரு ப்ரவ்ருத்தியும் செய்யாமல் மடத்துக்குவேண்டிய ஹிதவ்யாபாரங்களைச் செய்வதே சிஷ்யஸபைக்கு யுக்தமான க்ருத்யமென்றும்



அபிப்ராயப்படப்பட்டதாம். இந்த ஸபையின் முக்யமான தீர்மானங்களைப்பற்றி வேறோரிடத்தில் இந்தஸஞ்சிகையில் ஓர்கடிதம் ப்ரசுரித்திருக்கிறோம். அடுத்த மஹாஸங்கம் மதுராந்தகத்தில் சேரவேணுமென்று இந்த உபசபையார்கள் தீர்மானித்திருப்பதாயும் அந்தப்படி பொதுக்கார்யதர்சிக்கு எழுதியிருப்பதாயும் தெரியவருகிறது. இந்த உபசபையாருடைய ச்ரத்தையும் மடத்தின் க்ஷேமத்தில் ஆஸ்தையும் மிகவும் சந்தோஷகரமா யிருக்கின்றன. இந்த உபசபைக்கு ஸ்ரீமாந் அன்னப்பிள்ளை திருவேங்கடாசார்யர் ஸ்வாமி அத்யக்ஷராயும், ஸ்ரீமாந் ஆயனம். க்ருஷ்ணஸாமி அய்யங்கார்ஸ்வாமி கார்யதர்சியாகவும் ஏற்பட்டிருக்கிறார்கள். இந்தச் சபை விசேஷ வ்ருத்தியடையுமென்றும், இவர்களாதரத்தில் மூன்றாவது மஹாஸங்கம் முன்ஸங்கங்களுக்குக் குறைவில்லாமல் இன்னம் அதிக விமர்சையாகவே நடத்தப்பட்டு வருமென்றும் நம்புகிறோம். இதங் விஷயத்தில், ஸ்ரீராமன் கோவில்கொண்டிருக்கிறவும் பெரியநம்பிகள் ஸ்ரீபாஷ்யக்காரருக்கு த்வயோபதேசம் செய்ததால் ப்ரஸித்தி பெற்றதாயுமிருக்கிற ஸ்ரீ மதுராந்தகத்திலுள்ள எல்லா ஸ்ரீவைஷ்ணவஸ்வாமிகளும் ஒன்றுசேர்ந்து, மூன்றாவது மஹாஸங்கத்தை நிறைவேற்றி வைப்பார்களென்பதில் சந்தேஹமில்லை.

அடுத்த மஹாஸங்கத்தில் தகுந்த வித்வான்கள் உபந்யாஸங்கள் செய்யவேண்டியதற்காகக் கார்யதர்சி பலவித்வான்களுக்கு உபந்யாஸங்களைப் பிரார்த்தித்துக் கடிதமெழுதுகிறார். இந்தப் பொது கைங்கர்யத்தில் உத்தேசமிருக்கும் வித்வான்கள் ஒருகால் நேரில் ப்ரார்த்திக்கப்படா விட்டாலும் பொதுக் கார்யதர்சிக்காவது சபை அத்யக்ஷருக்காவது தங்கள் விருப்பத்தை தெரிவிப்பார்களானால் அதைப் பெரிய உபகாரமாயெண்ணி அப்படிப்பட்ட உபந்யாஸங்களுக்குக் கூடியவரையில் அவகாசம் ஏற்படுத்தப்படும். இந்த விஷயத்தில் செய்யும் பிரார்த்தனை பொதுவாய் எல்லா ஸ்ரீ வைஷ்ணவ வித்வான்களுக்கும் செய்யப்படுகிற தென்பதையும் இதனால் விஜ்ஞாபநம் செய்கிறோம். உபந்யாஸங்களின் பிரகாரங்களையும், மகாஸங்கத்தின் மற்ற விவரங்களையும் அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

# ஸ்ரீ அஹோபில மடத்துச்

# சிஷ்ய ஸபையின்

## நிர்வாஹக கமிட்டியார்.

(1911 - 12.)

ஸ்பாத்யக்ஷர் :— ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர் எம்,ஏ., பி. எல்.,
சென்னை.

உபஸபாத்யக்ஷர் :— ,, வே. க்ருஷ்ணமாசார்யர் பி.ஏ., டிப்டி கலெக்டர்.

கார்யதர்ஶி :— ,, ஸி. ராஜகோபாலாசார்யர் பி.ஏ., பி.எல்., சித்தூர்.

மற்றவர்கள் : ,, வி. ராகவாசார்யர் பி.ஏ., பி.எல்., சென்னை.

,, ,, எஸ். வாஸுதேவாசார்யர் பி.ஏ., எல்.டி., சென்னை.

,, ,, டி. கோதண்டராம ஐயங்கார் பி.ஏ., எம்.எல்.,
தஞ்சாவூர்.

,, ,, எஸ். க்ருஷ்ணமாசார்யர், தஞ்சாவூர்.

,, ,, எஸ். ராஜகோபாலாசார்யர், பி.ஏ., பி.எல்., கடலூர்.

,, ,, எஸ். டி. க்ருஷ்ண ஐயங்கார் பி.ஏ., பி.எல்., மதுரை.

,, ,, பி. என். க்ருஷ்ணஸாமி ஐயங்கார் பி.ஏ., பி.எல்.,
கோயம்புத்தூர்.

,, ,, பி. கே. கருடாசார்யர், பி.ஏ., பெங்களூர்.

,, ,, டி. ரங்கஸ்வாமி ஐயங்கார் எம்.ஏ., டிப்டி கலெக்டர்.

,, ,, எம். ஆர். தேஶிகாசார்யர், திருச்சி.

,, ,, எஸ். ஆராவமுது ஐயங்கார், திருக்குடந்தை.

,, ,, க்ருஷ்ண ஐயங்கார், கோமல்.

,, ,, ஆர். நரஸிம்ஹமாசார்யர், பி.ஏ., சென்னை.

,, ,, பி. டி. ஶேஷாத்ரியாசார்யர், பாலூர்.

,, ,, ஸி. துரைஸ்வாமி ஐயங்கார், சென்னை.



ஸ்ரீ அஹோபிலம்.

K. R. PRESS, MADRAS.

ஸ்ரீ:

[illegible] நம:.

# வேதாந்த தீபிகை

[illegible]

ஸ்ரீ [illegible] பத்ரிகை.

[illegible] ] [illegible] [ஸஞ்சிகை 10.

## வேத[illegible]ம்.

[illegible] களும் பொரு [illegible] கப்படும். அவை [illegible] முதல்முதலில் ப்ர [illegible] பட்டு அத[illegible] ண்டானவை. [illegible] யமென்று [illegible] ங்களுக்குள் [illegible] அறிவாய் இரு[illegible] கள். ராமாயண[illegible] பௌருஷேயங்கள். [illegible] ஷேயங்களான வேத[illegible] வேதங்கள் [illegible] வைப் பட[illegible] த்திலும் மக் [illegible] ம், உபநிஷத் [illegible] இருக்கின் [illegible] வேதத்திலும் பத[illegible] வாக்யங்களுடை [illegible] ஸ்வரங்களின் [illegible] அறிகைமை [illegible] கொண்டிருக்கின்றன. வேதங்களை [illegible] [illegible]. அத்யயநம்செய்து பதக்ரமத்தையும் ஸ்வ [illegible]



ஸ்ரீ அ[illegible]

MADRAS.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] பரீதாபி௵ கார்த்திகை௴ [ஸஞ்சிகை 10.

## வேதங்களின் நித்யத்வம்.

உலகத்தில் உபயோகிக்கப்படும் எல்லா வாக்யங்களும் பௌருஷேயமென்றும் அபௌருஷேயமென்று மிருவகைப்படும். அவைகளில் பௌருஷேயமென்பன ஓர் புருஷனால் முதல்முதலில் ப்ரயோகிக்கப்பட்டு அதற்குமுன் இராமல் புதிதாயுண்டானவை. அபௌருஷேயமென்றால் இன்னகாலத்தில் இன்ன மனுஷ்யனால் அல்லது தேவதையால் முதலில் உச்சரிக்கப்பட்டதென்று சொல்ல முடியாமல் அநாதியாய் இருந்து கொண்டுவருவதாய்ச் சொல்லப்படும் வாக்யங்கள். ராமாயணம், பாரதம், குமாரஸம்பவம் முதலான க்ரந்தங்கள் பௌருஷேயங்கள். வேதங்கள் அபௌருஷேயங்கள். அபௌருஷேயங்களான வேதங்கள் நித்யங்கள், அதாவது அநாதியாய் உள்ளவை. வேதங்கள் ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம், என நான்குவகைப் பட்டன. ஒவ்வொரு வேதத்திலும் மந்த்ரம், ப்ராஹ்மணம், உபநிஷத் என்கிற பாகங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு வேதத்திலும் பதங்களுடையவும் வாக்யங்களுடையவும் வரிசையும் ஸ்வரங்களின் க்ரமமும் அநாதிகாலமாய் மாறுதலடையாமலே வந்துகொண்டிருக்கின்றன. வேதங்களை ஒருவரிடமிருந்து மற்றொருவர் அத்யயநம்செய்து பதக்ரமத்தையும் ஸ்வ

ரங்களையும் அவதானம் செய்துவந்ததால் இந்த க்ரமங்கள் மாறுமல் அநுவ்ருத்தமாய் வருகின்றன. ஆசார்யமுகமாய் அத்யயநஞ்செய்தே க்ரஹிக்க வேணுமென்றும் புஸ்தகபாடம் கூடாதென்றும் நியமமிருப்பதால் வேதங்கள் உத்ஸந்நங்களாகாமல் வருகின்றன. ஒவ்வொரு வேதத்திற்கும் பல சாகைகளுண்டென்றும், சில சாகைகள் இந்தக் காலத்தில் அத்யயநம் செய்யப்படவில்லை யென்றும், அதனுல் லுப்தமாய்ப் போய்விட்டன வென்றும் சொல்லுகிறதுண்டு. ஆனுல் இதைச்சில பெரியோர்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. அதாவது, ஒவ்வொரு க்ருதயுகத்திலும் எல்லாச் சாகைகளுக்கும் பூர்ணமாய் அத்யேதாக்கள் உண்டென்று சாஸ்த்ரங்கள் சொல்வதால் ப்ரசுரமாய் அத்யயநமில்லாத சாகைகளுக்கும் சில மஹர்ஷிகள் அத்யேதாக்களாய் மறைந்திருந்து கொண்டு க்ருதயுகாரம்பத்தில் அந்த சாகைகளை ப்ரசுரம்செய்கிறுர்களென்று கொள்ளவேணும். ஆகையால் ஒவ்வொரு இடங்களில் ஒவ்வொரு சாகைகள் லுப்தங்கள்போல் தோன்றினுலும் வாஸ்தவத்தில் வேதத்தின் ஒருபாகத்துக்கும் அத்யந்த லோபமில்லை யென்பது ஸித்தாந்தம். ஆகவே வேதம் நித்யமென்றும் அபௌருஷேய மென்றும் நம் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன.

இங்கே சிலர் ஆக்ஷேபிப்பது என்னவென்றுல், "இந்த வேத நித்யத்வ மெல்லாம் இந்தக்காலத்துக்கு அநுகுணமா? இதை இனி நாம் நம்புவது ஸாத்யமா? ஈச்வரனை நித்யமாய் ஒப்புக்கொள்ளும் நையாயிகர்களும் வேதங்கள் ஈச்வரனுல் செய்யப்பட்டனவென்று சொல்லுகிறுர்களே? வேதங்கள் ஈச்வரனுற்கூடச் செய்யப்பட்டனவல்ல வென்றும் அவரைப்போல் நித்யங்களென்றும் சொல்லும் வேதாந்திகளும், ஸ்வதஃப்ரமாணமாய் நித்யங்களென்றுசொல்லும் ஈச்வரனையும் ஒப்புக்கொள்ளாத மீமாம்ஸகர்களும் இந்த விஷயத்தில் நமக்கு ஆதரணீயர்களல்ல. இதிஹாஸ புராணங்களைப்போல் வேதங்களும் பல புராதந ப்ராஹ்மணர்களாலும் க்ஷத்ரியர்களாலும் அந்தந்த அவஸரங்களில் இந்த்ரன் அக்நிமுதலான தேவதைகளைக்குறித்துச் செய்யப்பட்ட ஸ்தோத்ரங்கள். பசு, புத்ரன், ஐச்வர்யம், முதலான ஐஹிகப்பிரயோஜநங்களை உத்தேசித்து தாங்கள் தேவதைகளென்று அபிமானித்த சிலவஸ்துக்களைக்குறித்துச் செய்யப்பட்ட சந்தோரூபமான வாக்யங்களே மந்த்ரங்களென்று சொல்லப்படுகின்றன. இவைகளின் அர்த்தங்களையும் இவைகளின் விநியோகங்களையும் விவரிப்பவை ப்ராஹ்மணங்களென்பவைகள். இவை மந்த்ரபாகத்துக்குப்பின் உண்டானவை. இவைகளுக்குப்பிறகு பல அநுமானங்களினுல் இந்த்ராதி தேவதைகளுக்கும் ப்ரதானமாய் ஒரு தேவதை இருக்கவேண்டுமென்று நினைத்து அதன் விஷயமாய் பலபேர்கள் பல சிந்தைகள் செய்து வாக்யங்கள் ரசனை செய்தார்கள். இவைகள் தான் உபநிஷத்துக்கள். ஆகையால் பின்ன பின்ன காலங்களில் பலகர்த்தாக்களால் செயயப்பட்ட பாகங்களையுள்ள க்ரந்தம் வேதமாகையால் அதை அபௌருஷேமென்றும் நித்யமென்றும்சொல்வது ச்ரத்தாக்ருதமான அறிவின்மையே ஒழிய யுக்தமல்ல.



"மேலும் வேதங்கள் கல்பிதங்களென்பதற்குப்பலஹேதுக்கள் சொல்லலாம். (1) காடகம், காலாபகம், பைப்பலாதம் என்று வேதபாகங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெயர்களே கடர், கலாபர், பிப்பலாதர் முதலானவர்கள் அவைகளுக்குக் கர்த்தாக்கள் என்பதைத் தெரிவிக்கின்றன. 'விச்வாமித்ரஸ்ய ஸூக்தம் பவதி' என்றும், "நமோ ருஷிப்யோ மந்த்ரக்ருத்ப்யஃ" என்றும் இருக்கும்வாக்யங்களும் வேதங்கள் பலர்களால் செய்யப்பட்ட க்ரந்தங்களென்றே காட்டுகின்றன. (2) வேதங்களில் பலபூர்வகதைகள் சொல்லப்படுகின்றன. 'பபரஃ ப்ராவாஹணிரகாமயத' என்றும் 'உசந் ஹ வை வாஜச்ரவஸஃ ஸர்வவேதஸம் ததௌ' என்றும் 'ருஷயோ வை ஸரஸ்வத்யாம் ஸத்ரமாஸத' என்றும் வாக்யங்களிருக்கின்றன. இவைகள் அந்தக்கதையில் சொல்லப்படும் புருஷர்கள் காலத்துக்குப்பிறகு ஏற்பட்டவைகளென்றே சொல்லவேணும்.

"த்வமாவித ஸுச்ரவஸம் தவோதிபிஃ
தவ த்ராமபிரிந்த்ர தூர்வயாணம்।
த்வமஸ்மை குத்ஸமதிதிக்வமாயும்
மஹே ராஜ்ஞே யூநே அரந்தநாயஃ॥" (ருக்.I.35.10.)

'ஓ இந்த்ரனே, நீர் உம் உதவிகளால் ஸுச்ரவஸ்ஸையும், தூர்வயாணனையும் காப்பாற்றினீர்; குத்ஸன், அதிதிக்வன், ஆயு, என்

கிறவர்களையும் இந்தப்பெரிய ராஜபுத்ரன் முன்னிலையில் அவம தித்தீர்,' என்பது முதலான பல வேதவாக்யங்களில் நித்யர்களல் லாத இந்த்ராதிகளின் சரித்ரங்கள் கூறப்பட்டுள்ளதால் வேதங் கள் அநித்யங்களென்றே சொல்லவேணும். (3) 'பபர: ப்ராவாஹணி:' 'குஸுருவிந்த ஔத்தாலகி:' முதலான வேதவசநங்களால் பல ப்ராஹ்மண வாக்யங்கள் மந்த்ரங்களின் வ்யாக்யாந ரூபங்களாக வும், அதனால் பிந்தியுண்டானவைகளாயும் வ்யக்தமாய் காணப்படு கின்றன. 'உதாஹ' என்கிற பதங்களை உபயோகித்தும் பல இடங்களில் மந்தரங்கள் ப்ரஹ்மாணங்களில் விவரிக்கப்படுகின் றன. இதுவும் அநித்யத்வத்துக்கே உபபாதகமாகிறது, (4) "நைதத்³வித்³மோ ப்³ராஹ்மணா வா ஸ்மோ(அ)ப்³ராஹ்மணா வா' என்றும் "கோ ஹி தத்³வேத³ யத்³யமுஷ்மிம்ல்லோகே(அ)ஸ்தி வா ந வா" என்றும் இருக்கிற வாக்யங்கள் இதரவாக்யங்களில் ப்ரஸித்தமான ப்ராஹ்ம ணத்வத்தையும் பரலோகத்தையும் நிஷேதிக்கின்றன. இதனால் வேதங்கள் பரஸ்பர விரோதங்களைக் காட்டுவதால் அவிஸ்வஸ நீயங்கள். (5) 'யஜமாந: ப்ரஸ்தர:' என்றும் 'ஸுமிர-ஷ:' என் றும் 'ஆபோவைஶாந்தா:' என்றும் நிஷ்ப்ரயோஜநமாயும் நிரர் த்தகமாயும் பலவாக்யங்களிருக்கின்றன. நித்யமாய் ஆப்தமான வாக் யங்களில் இவைகள் இருப்பது அஸம்பாவிதம். (6) இப்படியே, 'வநஸ்பதய: ஸத்ரமாஸத' என்றும் 'நவ்யவித்³யாஶ்மி ஶ்ருத வ்யா நாஸ்திகே ந தி³வி' என்றும் 'ஶ்ருணோத க்³ராவாண:' என்றும் அஸம்பாவிதார்த்தங்களைச் சொல்லியும் நிஷேதித் தும் பலவாக்யங்க ளிருக்கின்றன. (7) மேலும், யாவருக்கும் இதுவரையிலும் அர்த்தமாகாத பலவாக்யங்க ளிருக்கின்றன; "ஸ்ருண்யேவ ஜர்ப⁴ரீ துர்ப²ரீதூ" என்றும் "இந்த்³ர: ஸோமஸ்ய காணுகா" என்றும் இதுபோன்ற மற்ற வாக்யங்களும் ஒரு அர்த்தமும் இல்லாதவைகளாய் தோன்றுகின்றன. இவைகளையெல் லாம் பார்க்குமிடத்தில் வேதங்களை நித்யங்களென்றும் அபௌ ருஷேயங்க ளென்றும் சொல்வது அஸங்கதமான கார்யம்" என் கிறார்கள்.



இந்த ஆக்ஷேபங்களை எல்லாம் நம்பூர்வகளே எடுத்துக் கூறி அவைகளை நிரஸநம் செய்திருப்பதால் அந்த நிரஸநங் களைப் பூர்வமீமாம்ஸை, உத்தரமீமாம்ஸை முதலான க்ரந்தங்களி லும் வ்யாக்யாநங்களிலும் பார்த்தறிந்து சக்தர்கள் ஸந்தேஹம் தெளியவேணும். அவைகளை விஸ்தரித்து உபபாதநம் செய்ய இங்கு அவகாசமில்லை யாகையால் ஸங்க்ரஹமாய் நித்வத்வம், அபௌருஷேயத்வம் இவைகளின் ஸாம்ப்ரதாயிக அர்த்தங்களை யும் மேற்சொன்ன தூஷணங்களுக்குப் பரிஹாரங்களையும் ஸூசிப் பிக்கிறோம்.

பூர்வ மீமாம்ஸையில், ஶப்தத்துக்கும் அர்த்தத்துக்கும் அநா தியாய் ஸம்பந்தம் ஏற்பட்டிருக்கிறதென்றும், அது ஸ்வாபாவிக மென்றும், புருஷக்ருத மல்லவென்றும் நிச்சயிக்கப்பட் டிருக்கிறது. இன்னவஸ்துவுக்கு இன்ன பெயரென்பது ஆதுநிகர்களால் பெரி யோர்களின் வ்யவஹாரத்தினால் அறியப்பட்டாலும், அந்தப் பெரி யோர்கள் தங்கள் பூர்வர்களிடத்தில் அறிந்தார்கள் என்கிற க்ரமத் தால் ஈஶ்வர ஸங்கேதமு மல்லாமல் அநாதியாய் சப்தார்த்த ஸம் பந்தம் ஏற்பட்டுள்ள தென்பது மீமாம்ஸகர்கள் கொள்கை. மேலும் சப்தமே நித்யமென்பதும் அவர்கள் ஸித்தாந்தம். அதாவது, அகார ககாராதி வர்ணங்கள் நித்யங்கள். நாம் உச்சரிக்கும்போது அவைகள் வ்யக்தமாகி உடனே நசிப்பதுபோல் தோன்றினாலும் அப் படித் தோன்றுவதெல்லாம் வர்ணவ்யக்திகளே ஒழிய வர்ணஜாதி கள் எப்போதும் நித்யமாயிருக்கின்றனவென்று மீமாம்ஸகர்கள் சொல்லுகிறார்கள். வையாகரணர்களோ 'கௌ:' என்றும் 'ஸோம:' என்றும், 'காத்யாயநீ' என்றும் இதுபோன்ற பலவிதமான சப் தங்களை க்ரமமாய் உச்சரிக்கும்போது, முதலில் உச்சரிக்கப்படும் வர்ணங்கள் கடைசி வரணோச்சாரண காலத்தில் நஷ்டமாய் விடு வதால் எல்லா வர்ணங்களாலும் ஒரு அர்த்தம் மனஸ்ஸில் ஸ்புரி க்கவேண்டியதற்காக நசிக்கும் வர்ணங்கள் 'ஸ்போடம்' என்னும் ஒரு சக்தியைவைத்துப் போகின்றனவென்றும் அதனால்தான் அர் த்தம் ஸ்புரிக்கிறதென்றும் ஸ்போடந்தான் சப்தம் என்றும் வர்ணங்கள் அநித்யங்களென்றும் சொல்லுகிறார்கள். மற்ற ந்யா யம், வேதாந்தம் முதலான தர்சநங்களில் ஸ்போடவாதத்தை ஒப் புக்கொள்ளுகிறதில்லை. நம் விசிஷ்டாத்வைதத்திலும் சப்தம் அநி

த்யமென்றே ஸாதிக்கப்படுகிறது. ஆகிலும் வேதப்ராமாண்யத்துக்குக் குறைவில்லையென்றும் உபபாதிக்கப் படுகிறது.

இப்படி சப்தத்தை நித்யமாய் ஒப்புக்கொண்டு அதனுல் வேதம் ப்ரமாணமென்றும் மீமாம்ஸகர்கள் சொல்லுகிறுர்கள். இதனுல் எல்லா சப்தங்களும் ப்ரமாணமாகுமோ? இல்லை. வேதங்களும் அவைகளை யநுஸரித்த சப்தங்களுமே ப்ரமாணம். ஏனென்றுல் வேதங்களின் கர்த்தா இன்னுரென்று ஒருவராலும் சொல்லப்படவில்லை. மனுஸ்ம்ருதி முதலான க்ரந்தங்களின். கர்த்தாக்களை ஸ்மரித்திருப்பதுபோல் உலகத்தார் வேதகர்த்தாவை ஸ்மரிக்கவில்லை. இதனுல் வேதம் அபௌருஷேயம் என்றும் நித்யமென்றும் சொல்லப்படுகிறது. அபௌருஷேயமென்று சொன்னதினுல் வேதத்திற்கு தோஷங்களில்லையென்று சொன்னதாயிற்று. புருஷக்ருதமான க்ரந்தங்களில் ப்ரமத்தினுலும், பிறர்களை மோசஞ்செய்ய வேணுமென்கிற எண்ணத்தினுலும் பல அபார்த்தங்கள் இருப்பதை நாம் பார்க்கிறோம். புருஷ கர்த்ருகம் அல்லவென்று சொல்வதால் அப்படிப் பட்ட தோஷங்கள் வேதத்தில் உண்டாகக் காரணமே யில்லையென்று மீமாம்ஸகர்களும் வேதாந்திகளும் சொல்லுகிறுர்கள். ஆப்தரான ஈச்வரனுல் கல்பிதங்கள் என்று சொல்வதைப் பார்க்கிலும் வேதங்கள் ஈச்வரனைப்போல் நித்யங்களென்று சொல்வதே உசிதமென்று வேதாந்திகள், சொல்லுகிறுர்கள். மீமாம்ஸகர்களோ ஈச்வரனையும் ஒப்புக்கொள்ளாதவர்களாய் நித்யமான வேதங்கள் ஸ்வத: ப்ரமாணங்களாகையால் ஈச்வரனில்லாவிட்டாலும் வேதப்ராமாண்யத்துக்குக் குறைவில்லையென்று ஸமர்த்திக்கிறுர்கள்.

வேதம் நித்யமானுல் முன்சொன்ன ஆக்ஷேபங்களுக்குச் சமாதானமென்ன? என்றுல், முக்யமான ஆக்ஷேபம் 'அநித்யஸம்யோகாத்'; அதாவது அநித்யர்களான இந்த்ரன், முதலானவர்களை அவலம்பித்த வாக்யங்களும், கடர், கலாபர், விச்வாமித்ரர் முதலானவர்களால் செய்யப்பட்டதாய் தோன்றுவதுமே நித்யத்வத்துக்கு முக்யமான ஆக்ஷேபம். இதற்குச் சமாதானம் பூர்வ மீமாம்ஸை முதலத்யாயம் முதல் இரண்டு பாதங்களிலும், ப்ரஹ்ம ஸூத்ரம் முதலத்யாயம் மூன்றும் பாதத்தில் (27-28-29-வது) 3-ஸூத்ரங்களிலும் விசேஷித்துச் சொல்லப்படுகிறது. இந்த விஷயத்தில் நம் ஸித்தாந்தத்துக்கு அநுகுணமான ஸமாதானத்தை இங்கே விவரிக்கிறோம்.



இந்த்ரன் முதலான தேவதைகளும் கடர், கலாபர், வஸிஷ்டர், விச்வாமித்ரர் முதலான ரிஷிகளும் நம் ஸித்தாந்தத்தில் அதிகாரி புருஷர்களாய் எண்ணப்படுகிறுர்கள். ப்ரதிகல்பம் வேறு அதிகாரி புருஷர்களுண்டானுலும் இந்த்ரன் முதலான பெயர்கள் அநுவருத்தமாய் வருகின்றன.

'ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத்' என்றும்
'ருஷீணாம் நாமதேயாநி யாஶ்ச வேதேஷு த்ருஷ்டய: ।
ஶர்வர்யந்தே ப்ரஸூதாநாம் தாந்யேவைப்யோ ததாத்யஜ: ।'

என்றும் சொல்லுகிறபடி ஒவ்வொரு கல்பத்திலும் ப்ரஹ்மா இந்த்ரன் முதலான அதிகாரி புருஷர்களை ஸ்ருஷ்டிக்கிறுர். இந்த ப்ரவாஹம் அநுதியாய் நடந்துவருவதால் இவர்களெல்லாம் ப்ரவாஹ நித்யர்களேன்று சொல்லப்படுகிறுர்கள். ஆனுல் வேதத்தில் ஒருகாலத்தில் இருந்த இந்த்ர வ்யக்தியைக் குறித்துச் சில குணங்கள் சொல்லப்பட்டால் அது மற்ற இந்த்ர வ்யக்திகளுக்கும் ஸமானமாகுமோ வென்றுல், இதற்கும் முன் உதாஹரித்த வாக்யமே ஸமாதானமாக வேண்டியிருக்கிறது. அதாவது ப்ரதி ஸ்ருஷ்டியிலும் அதிகாரி புருஷர்கள் ஸமான பல வீர்ய சேஷ்டிதங்களுள்ளவர்களாய்ச் சொல்லப்படுகிறுர்கள். மேலும் ப்ரதி கல்பாரம்பத்திலும் ப்ரஹ்மா சில அதிகாரி புருஷர்களான ரிஷிகளை ஸ்ருஷ்டித்து அவர்களுக்கு அத்யயநமில்லாமல் வேதங்களை வர்ணங்களின் வரிசையும் ஸ்வரங்களும் பேதிக்காமல் அறியச் சக்தியை கொடுக்கிறுர். அப்படிப்பட்ட ருஷிகளால் ப்ரவசனம் பண்ணப்படுவதால் அந்தந்த சாகைகளுக்கு ப்ரவக்தாக்களான கடர் கலாபர் முதலான ரிஷிகளின் பெயரால் அந்தந்த சாகைகள் வழங்கி வருகின்றன. இந்தக் காரணத்தால் தான் அவர்களுக்கு 'ருஷய:' என்கிற பெயரும் உண்டாகிறது என்று ஸித்தாந்தம். ஆனுல் மஹாப்ரளயத்தில் நம் ஸித்தாந்தப்படி ப்ரஹ்மாவும் நசித்துப்போய் பகவான் ஒருவர்தவிர மற்ற ப்ரக்ருதி விகாரங்களெல்லாம் அவரிடத்தில் லயிப்பதால். பிறகு ஸ்ருஷ்டியின் ஆரம்பத்திலாவது வேதங்கள் முதல் முதல் உத்பன்னங்களாய் சொல்லப்பட வேண்டு

மே என்றால், இதுவும் சரியல்ல. ஏனென்றால், 'யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை' என்று சொல்லுகிறபடி, ஆதிபுருஷன் கல்பங்களின் தொடக்கத்தில் ப்ரதி ப்ரஹ்மாவுக்கும் தான் ஸர்வக்ஞதையாலே ஸ்வயமாய் பூர்வாநுபூர்வியை அநுஸரித்தே வேதங்களை உபதேசிக்கிறார். ஆகையால் இந்த ஆநுபூர்வியும் ஸ்வரங்களும் தொடர்ந்து வருவதாலும் ப்ரதமோச்சாரணம் இன்னகாலத்தில் இன்னாரால் செய்யப்பட்டதென்று சொல்ல முடியாததாலும் தான் வேதங்களை நித்யமென்றும் அபௌருஷேயமென்றும் நாம் சொல்லுகிறோம். இப்படி வேதங்கள் நித்யமென்பதை 'அநாதிநிதநா ஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா। ஆதௌ வேதமயீ திவ்யா யத: ஸர்வா: ப்ரவ்ருத்தய:' என்று மநுவும் சொன்னார். வேதங்களுக்குக் கர்த்தா இருக்கும் பக்ஷத்தில் க்ருதக்ஞர்களான மஹர்ஷிகள் அவர்களில்லையென்று நிக்ஷேபிப்பதாகச் சொல்வது ஸாஹஸமாகுமென்று ஸ்ரீ நிகமாந்த தேசிகன் ஸேஶ்வர மீமாம்ஸையில் அருளிச்செய்கிறார். இந்த அநித்ய ஸம்யோகத்தினால் உண்டாகும் ஆக்ஷேபத்தை 'உக்தம் து ஶப்தபூர்வத்வம்' என்பது முதலான ஸூத்ரங்களால் பகவான் ஜைமினி ஸமாதாநம் செய்தார். அதாவது ப்ரவாஹாநாதியாய் உச்சாரணம் செய்யும் ஒவ்வொருவரும் முன் உச்சாரணம் செய்தவனை அநுஸரித்துச் செய்வதினால் வேதங்கள் நித்யம். அல்லது எல்லாத்துக்கும் காரணமான பகவானும் வேதசப்தங்களையே ஸ்மரித்து ஜகத்ஸ்ருஷ்டி முதலான கார்யங்களைச் செய்வதால், அந்த வேதங்கள் அநாதியென்று ஏற்படுகிறது. இதை மநுஸ்ம்ருதியும்,

ஸர்வேஷாம் து ஸ நாமாநி கர்மாணி ச ப்ருதக் ப்ருதக்।
வேதஶப்தேப்ய ஏவாதௌ தேவாதீநாம் சகார ஸ:॥

என்று சொல்லுகிறது. அதாவது ஈஶ்வரன் லோக ஸ்ருஷ்டி செய்யும்போது வேதத்தில் உள்ள சப்தங்களையும் அவைகளின் அர்த்தத்தையும் ஸ்மரித்து அதற் கநுகுணமாய் வஸ்துக்களை ஸ்ருஷ்டித்து பெயர்களையும் கொடுக்கிறார், என்று சொல்லப்பட்டது.

இன்னும் மற்ற ஆக்ஷேபங்களுக்கும் மந்த்ரா திகரணத்திலும் அர்த்தவாதா திகரணத்திலும் ஸமாதாநம், சொல்லப்பட் டிருக்கிறது.



மேலும் பொதுவாய் வேதம் ஸமக்ரமாய் ப்ரமாணமென்றாலும் ஒவ்வொரு வேதபாகத்திற்கு ஒவ்வொரு விஷயத்தில் முக்ய தாத்பர்யமென்றும் சொல்லப் படுகின்றது. அதாவது விதிபாகத்துக்குப் பூர்ணமாய் தன் அர்த்தத்தில் தாத்பர்யமென்றும், மந்த்ரங்களுக்கு த்ரவ்ய தேவதாதி அர்த்தப்ரகாசநத்தில் தாத்பர்யமென்றும், அர்த்தவாதங்களுக்கு ஸ்தோத்ரங்கள்செய்து விதிகளை ப்ரரோசனம் செய்வது கார்யமென்றும் சொல்லப்படுகிறது. இதனால் கார்யபரமான விதிவாக்யங்களே வேதத்தில் முக்யபாகமென்றும் மற்ற பாகங்களுக்குத் தன் அர்த்தங்களில் தாத்பர்யமில்லையென்றும், விதிசேஷமாய் அதாவது விதிகளின் அநுஷ்டாநத்துக்கு உபகாரகங்களாய் மந்த்ரங்களும் அர்த்தவாதங்களும் ப்ரயோகிக்கப் படுகின்றனவென்றும் மீமாம்ஸகர்கள்கொள்கை. வேதாந்திகளோ கார்ய பரமில்லாத 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' முதலான வாக்யங்களுக்கும் ப்ராமாண்யத்தை ஒப்புக்கொண்டு ப்ரத்யக்ஷத்துக்காவது யுக்திக்காவது விரோதமில்லாத பக்ஷத்தில் அர்த்தவாதங்களும் உபநிஷத்பாகங்களும் ஸ்வார்த்தத்தில் தாத்பர்யமுள்ளவையென்றும் அதனால் உபநிஷத்துக்களில் சொல்லப்படும் ப்ரஹ்ம குணங்களும் மோக்ஷ ஸ்வரூபாதிகளும் ப்ரமாணங்களென்றும் சொல்லுகிறார்கள். நாம் ஸாமாந்யமாய் ஸ்துதியென்றால் ஒருவனுக்கு இல்லாத குணத்தைச் சொல்வது என்று எண்ணுகிறோம். இந்தப் பிரயோகம் ஔபசாரிகம். அதாவது ஸ்துதி சப்தத்துக்கு முக்யமல்ல. ஆகிலும் 'யதார்த்தா வ்யாஹ்ருதி: ஸா ஹி ந ஸ்துதி: பரமேஷ்டிந:' என்கிற காளிதாஸ வாக்யத்தில் இந்த அர்த்தத்திலேயே ஸ்துதிசப்தம் ப்ரயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் 'குணநிஷ்ட குணாபிதாநம் ஸ்துதி:' அதாவது வாஸ்தவமான குணங்களைச் சொல்வதுதான் ஸ்துதிஶப்தார்த்தம் என்று நம் மாசார்யர்கள் சொல்லுகிறார்கள். இதனால் ஸ்துதியைப் ப்ரயோஜநமாகக் கொண்ட அர்த்தவாதங்களும் ஸ்வார்த்தத்தில் வேறு பாதக மில்லாதபோது பிரமாணங்க ளென்பது நம் ஸித்தாந்தம். இந்த விஷயத்தில் மீமாம்ஸகர்களுக்கும் நம் ஸித்தாந்தத்துக்கும் உண்டான பேதத்தை ஓர் உதாஹரணத்தால் விவரிக்கலாம். 'வநஸ்பதய: ஸத்ரமாஸத' 'வ்ருக்ஷங்கள் சேர்ந்து யாகங்கள் செய்தன' என்பது ஓர் அர்த்தவாதம். அதன் தாத்

பர்யம், 'அசேதநங்களான வ்ருக்ஷங்களும் சேர்ந்து யாகம் செய்தன; ஆகையால் சேதநர்களான நாமும் செய்யவேண்டும்' என்று யாகத்தை ஸ்துதிசெய்ய அஸம்பாவிதமான அர்த்தத்தை வேதம் சொல்லுகிறது' என்று மீமாம்ஸகர்கள் சொல்லுகிறார்கள். ஸ்ரீநிகமாந்ததேசிகன் ஸேஸ்வர மீமாம்ஸையில் இந்த வாக்யத்தின் ப்ரயோஜனம் ஸ்துதியாகிலும் ஸ்வார்த்தமும் ப்ரமாண மாகையால், இங்கு 'வநஸ்பதி' பதம் வ்ருக்ஷங்களுக்கு அபிமானிகளான தேவதைகளைச் சொல்லுகின்றதென்றும் ஒரு காலத்தில் வாஸ்தவமாய் வநதேவதைகள் யாகம்செய்ததை ப்ரவாஹாநாதியான வ்ருத்தாந்தமாக்கி ஸ்ருதி சொல்லுகிறதென்றும் அர்த்த மருளிச் செய்கிறார்.

இப்படியே தேவதைகள் வாஸ்தவமாய் உண்டா? அல்லது மந்த்ரங்களும் அதிலுள்ள இந்த்ராதி சப்தங்களுமே தேவதைகளா?, என்கிற விஷயத்தில் ஈஸ்வரனில்லாவிடிலும் வேதங்கள் ப்ரமாணமானதுபோல், தேவதைகள் இல்லாவிடிலும் யாகாதி கர்மங்கள் தங்களுடைய அபூர்வமென்கிற சிரஸ்தாயியான சக்தியால் ஸ்வர்க்காதி பலங்களை கொடுக்கின்றனவென்றும், தேவதைகளையும் அவர்களுக்கு விக்ரஹாதி பஞ்சகத்தையும் ஒப்புக்கொள்ளவேண்டாமென்றும் நிரீஸ்வர மீமாம்ஸகர்களின் ஸித்தாந்தம். விக்ரஹாதி பஞ்சகமாவது, சரீரம், ஹவிஸ்ஸைப் பெற்றுக்கொள்ளுதல், அதை புஜித்தல், அதால் த்ருப்தி, அதினால் யஜமாநனிடத்தில் ப்ரீதியுண்டாகி யாகபலனை யளித்தல் ஆகிய ஐந்து. இந்த சரீராதிகள் தேவதைகள் விஷயத்தில் இல்லையென்றும் கர்மங்களே அபூர்வத்வாரா பலப்ரதமென்றும் மீமாம்ஸகர்கள் கொள்கை. இது மீமாம்ஸையின் வாஸ்தவமான தாத்பர்யமல்லவென்றும் ஜைமினியாகிய ஸூத்ரக்காரருக்கும் உபவர்ஷர் முதலான ப்ராசீன வ்ருத்திகாரர்களுக்கும் தேவதைகளை நிஷேதிப்பதில் தாத்பர்ய மில்லையென்றும், தேவதைகளில்லாவிட்டாலும் கர்மங்கள் அனுஷ்டேயங்களென்று "கொடுஸாஸவயநம்" அல்லது யாகாதி கர்மங்களில் ச்ரத்தையை வளர்க்க இந்தப்படி மீமாம்ஸையில் சொல்லப்பட்டதென்றும் நம்ஸம்பிரதாயத்தில் பல ஆசார்யர்கள் நிச்சயித்திருக்கிறார்கள். இந்த தேவதைகளுக்கு ப்ரஹ்ம வித்யையை அப்யஸிப்பதிலும் உபாஸநங்கள் செய்வதிலும் அதிகாரமுண்



டென்று ப்ரஹ்ம ஸூத்ரம் 3-வது பாதத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அங்கும், "ஶப்த இதி சேந்நாத: ப்ரபவாத் ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம்" (I. 3. 27) என்னும் ஸூத்ரத்தில், தேவதைகளுக்குச் சரீராதிகளிருந்தால் நச்வரமான அந்த பதார்த்தங்களைச்சொல்லும் வேதத்துக்கு அநித்ய ஸம்யோகமென்னும் முன் சொன்ன ஆக்ஷேபம் வருமேயென்று ஆக்ஷேபித்து, வராதென்று ஸமாதானம் செய்யப்பட்டிருக்கிறது. ஏனென்றால், 'அத: ப்ரபவாத்', இந்த்ராதி சப்தங்கள் ஒரு வ்யக்தியைக் குறிக்காமல் ஒரொருஜாதி விசேஷத்தை 'கௌ' முதலான சப்தங்களைப்போல் குறிக்கின்றன. ப்ரதி 'கௌ' வ்யக்தி நசித்துப்போனாலும் ஜாதி ஸ்திரமாயிருப்பதுபோல் இந்திரத்வம் ஸ்திரமாயிருப்பதாலும் ஒவ்வொரு இந்த்ராதி வ்யக்தியையும் ப்ரஹ்மா வேத சப்தங்களிலிருந்து அறிந்த குணசேஷ்டிதங்களுடன் ஸ்ருஷ்டிப்பதால் இந்த தோஷமுண்டாகாதென்றும் ஸமாதானம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு ப்ரத்யக்ஷமென்கிற ஶ்ருதியும் அநுமாநமென்கிற ஸ்ம்ருதியும் ப்ரமாணமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. 'அத ஏவ ச நித்யத்வம்' என்கிற அடுத்த ஸூத்ரத்தினால் ப்ரவாஹ நித்யதையை அங்கீகரிப்பதால் வேதங்களுக்கு நித்யத்வம் ஸித்தமாகிற தென்று சொல்லப்படுகிறது. 'ருஷ்ய: மந்த்ரத்ரஷ்டார:' என்றும் 'விஶ்வாமித்ரஸ்ய ஸூக்தம் பவதி' என்றும் இதுபோன்ற வசநங்கள் அந்தந்த மந்தரங்களுக்கு முதல் முதலான கர்த்தாக்களைச் சொல்வனவல்ல; அந்தந்த மந்த்ரங்களை ஈஶ்வரனால் சக்திகொடுக்கப்பட்ட சிலர் முன் அந்த மந்தரங்கள் அத்யயநம் பண்ணப்பட்டுவந்த க்ரமத்துடனே தபோபலத்தால் கண்டுபிடித்தார்களென்றும், அப்படி மந்த்ரங்களை கண்டுபிடித்தவர்கள் அதிகாரி புருஷர்களாகையால் ப்ரதிகல்பம், ப்ரதி மந்வந்தரம், ப்ரதி சதுர்யுகம் அப்படிப் பட்டவர்கள் உண்டாகிறார்களென்றும், இந்தக் காரணங்களால் இவர்களைச்சொல்லும் வேதங்கள் நித்யங்களே யென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

'ஸமாந நாமரூபத்வாச்சாவ்ருத்தாவப்யவிரோதோ, தர்ஶநாத் ஸ்ம்ருதேஶ்ச' என்னும் அதற்கு அடுத்த (I. 3. 29) ஸூத்ரத்

தில், ப்ரஹ்மாமுதல் எல்லாரும் நசிக்கும் ப்ராக்ருத ப்ரளயத்தில் வேதங்கள் அத்யேதாக்களில்லாத்தால் நஷ்டமாக வேணுமே யென்கிற ஆக்ஷேபத்துக்கு ஸமாதானம் சொல்லப்படுகிறது. ஆதி கர்த்தாவாகிய ஈச்வரன் ப்ரளயாந்தத்தில் ஸ்ருஷ்டிக்கு ஆரம்பிக்கும்போது ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து அவருக்குப் பூர்ணமாய் வேதத்தை யுபதேசித்து அதில் கண்டபடி ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டிக்கும்படி ப்ரஹ்மாவுக்கும் நியமித்து தானும் அப்படியே செய்கிறார். ஆகையால் வேதத்தின் நித்யத்வத்துக்குக் குறைவில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதனால் வேதம் நித்யமென்பதற்கு '[illegible]' அதாவது வர்ணங்களுடையவும் சப்தங்களுடையவும் ஆநுபூர்வி இப்போதைக்கு இருப்பதுபோல் எப்போதும் இருந்ததென்றும் ப்ரளயகாலத்தில் ஈச்வரஜ்ஞானத்தில் அந்தர்ப்பவித்து நஷ்டமாகாத வேதம் ஸ்ருஷ்டிகாலத்தில் ப்ரஹ்மாவுக்கு உபதேசிக்கப்பட்டு வருகிறதென்றும், ப்ராயேண எல்லாரும் குருமுகமாய் அத்யயநம் செய்து வேதத்தை ரக்ஷித்துவந்தாலும் சில விசேஷ புண்யசாலிகளான புருஷர்கள் அத்யநமில்லாமல் தாங்களே ஈச்வரனால் கொடுக்கப்பட்ட சக்தியால் சிலசில பாகங்களை கண்டுபிடித்து வந்தார்களென்றும், சிலர் விசேஷமாய் ஒவ்வொரு சாகையை ப்ரவசனம் செய்ததால் அவர்கள் பெயரால் அந்தந்த சாகைகள் ப்ரஸித்திபெற்றனவென்றும் நம்முடைய ஸித்தாந்தம். இப்படிக் கொள்ளாதபோது நம்முடைய ஸ்ம்ருதிகளும் புராணங்களும் விரோதிக்குமென்றும் இப்படிக்கொள்வதில் ஒரு யுக்திக்கும் பாதகம் இல்லை யென்றும், இருந்தாலும் ஸ்ம்ருதி புராண ப்ராமாண்யத்தில் ருசியுள்ளவர்களுக்கு வேறுகதியில்லையென்றும் நம்மாசார்யர்கள் நிர்த்தாரணம் செய்திருக்கிறார்கள்.

ஆனால் ப்ரத்யக்ஷத்துக்கும் யுக்திக்கும் விருத்தமான ச்ருதியின் அர்த்தங்கள் ப்ரமாணமாகுமா என்று கேட்கலாம். ப்ரத்யக்ஷத்துக்கு விரோதமான ச்ருதிகள் ப்ரமாண மில்லைதான். அப்படி ச்ருதிகளிருந்தால் அவைகளுக்கு ப்ரத்யக்ஷத்துக்கு விருத்தமில்லாத தாத்பர்யங்களைக் கல்பித்து கௌணவ்ருத்தியாலாவது



லக்ஷணா வ்ருத்தியாலாவது அர்த்தம் செய்வது ஶாஸ்த்ர ஸம்மதம். மேலும் அப்ரத்யக்ஷமாயும் யுக்தியால் நிச்சயிக்க முடியாததாயுமுள்ள பாரலௌகிகமான விஷயங்களிலும் ஜீவேஶ்வர ஸ்வபாவங்களிலும் குணங்களிலுமே ஶ்ருதிக்கு முக்யப்ரவ்ருத்தியானதால் அந்த விஷயங்களில் ச்ருதி ப்ரமாண மென்கிறவர்களுக்கு ப்ரத்யக்ஷமாவது அநுமாநமாவது விரோதமாக வேண்டியதில்லை. இந்த ந்யாயத்தை அநுஸரித்தே ஸ்ரீ பாஷ்யத்தில் ஶாஸ்த்ரயோநித்வாதிகரணத்தில், அநுமாநத்தால் யதாவத்தாய் ஈஶ்வரனை ஸாதிக்க முடியாதென்று பஹுக்ரந்தத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. அதீந்த்ரியமான விஷயத்தில் சப்தம் என்கிற வேதமே ப்ரமாணம் என்றும் அதை அந்த விஷயங்களில் ப்ரதிகூல தர்க்கங்களால் பாதிக்கக் கூடாதென்றும் பலவிடங்களில் சொல்லியிருக்கிறது.

"ஆர்ஷம் தர்மோபதேஶம் ச வேதஶாஸ்த்ராவிரோதிநா
யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர:"

என்கிற மநுவசநமும், தர்க்கமென்கிற மீமாம்ஸாசாஸ்த்ரத்தையநுஸரித்து வேதங்களுக்கும் ஸ்ம்ருதிகளுக்கும் அர்த்தஞ் செய்ய வேண்டு மென்று சொல்லுகிறது. ஸ்ரீ நிகமாந்த தேசிகனும்,

'[illegible]'

என்பதால், அதீந்த்ரியமான விஷயங்களில் சாஸ்த்ர ப்ராமாண்யத்தை ஒப்புக்கொள்ள வேணுமென்று அருளிச் செய்கிறார். ஆகையால் நம் சாஸ்த்ரங்களில் வேதங்களின் நித்யதையும் ப்ராமாண்யதையும் உபபாதிக்கப் பட்டாலும் வேதங்கள் எந்த அர்த்தத்தில் நித்யங்களென்றும் வேதத்தின் ஒவ்வொரு பாகங்களும் எந்தெந்த அம்சங்களில் ப்ரமாணங்களென்றும் அறிய வேண்டியது அவச்யம்.

இந்த விஷயத்தில் நம்மாசார்யர்கள் என்ன அபிப்ராயப்பட்டிருக்கிறார் களென்பதை அவர்கள் க்ரந்தங்களை அநுஸரி

த்து மேல் விவரித்தோமே யொழிய நாம் ஸ்வாபிப்ராயமாய் யா தொன்றும் இங்கே சொல்லவில்லை. வஸ்து தத்வங்களிலாவது பூகோள ககோள ஸந்நிவேச விஷயங்களிலாவது ச்ருதிபுராணங் களுக்கும் ப்ரத்யக்ஷா நுபவங்களுக்கும் விரோதம் ஏற்பட்டால் அந்த விஷயங்களில் வேதத்தின் தாத்பர்யத்துக்கு விரோதமாய் நிர்த்தாரணம் செய்தாலும் ச்ருதிப்ராமாண்ய வாதத்துக்கு பாதகம் வராதென்று சொல்ல இடமுண்டு. புராணாதிகளில் சொல்லும் லோகநிர்மாண ரீதிகளும் ராஜவம் சாநுசரிதங்களும் பரஸ்பர விருத்தங்கள் என்றும் ஆதுநிக பரீக்ஷையில் அதத்யங் களாகக் காணப் படுகின்றனவென்றும் பஹுவாய் எண்ணப்படுகின் றன. இது வாஸ்தவமாயிருந்தாலும் இந்த விஷயங்களில் ச்ரு திக்கு தாத்பர்ய மில்லையென்றும் அதீந்த்ரிய விஷயங்களில் மாத் ரம் ச்ருதிக்கு தாத்பர்ய மென்று மெண்ணுவது ஸம்ப்ரதாயத் துக்கு விரோத மாகாது. இந்த விரோதங்கள் இக்காலத்தில் பஹுவாய் எற்பட்டு பலவைதிக விஶ்வாஸிகளை ப்ரமிக்கப் பண் ணுவதால் இப்படிப்பட்ட விஷயங்களில் எதுவரையில் ச்ருதி விரோதம் ஸஹ்யமென்று ஶாஸ்த்ரஜ்ஞர்கள் விசாரிக்க வேண்டும்.

டி. ராஜகோபாலாசாரியர்.

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு-ரங்கநாதா சார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபால ஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது) ... ... | 0 | 2 | 0 |
| 3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ் யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யாற் செய்யப் பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |

வேண்டுமவர்கள் சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதி வீதியில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ:.

# ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம்.

(தொடர்ச்சி.)

ஈஷத்த்வத்கருணாநிரீக்ஷணஸுதாஸந்துக்ஷணாத்ரக்ஷ்யதே நஷ்டம் ப்ராக்ததலாபதஸ்த்ரிபுவநம் ஸம்ப்ரத்யநந்தோதயம் । ச்ரேயோ நஹ்யரவிந்தலோசநமந:காந்தாப்ரஸாதாத்ருதே ஸம்ஸ்ருத்யக்ஷரவைஷ்ணவாத்வஸு ந்ருணாம் ஸம்பாவ்யதே கர்ஹிசித் ॥ ௩ ॥

முன் இரண்டு ஶ்லோகங்களினால் லக்ஷ்மியின் பரத்வத்தை யும் ஸௌலப்யத்தையும் சொல்லி இந்த ஶ்லோகத்தில் எல்லா புருஷார்த்தங்களுக்கும் அவள் அநுக்ரஹமே ஹேதுவென் றரு ளிச்செய்கிறார். அன்றிக்கே, பரத்வமும் ஸௌலப்யமுமிருக்க நம் மிஷ்டப் பிராப்திக்கு அவளிடம் அவ்காசமுண்டோ என்கிறசங் கையைப் பரிஹரிக்கிறார்.

த்ரிபுவநம் - மூன்றுலகங்களும், அதாவது, மூன்றுலக ங்களிலுள்ள சேதநர்களும். பூலோகம், புவர்லோகம், ஸுவர் லோகம் ஆகிய மூன்றுலோகங்கள். இது ப்ரக்ருதி மண்டலத் திலுள்ள எல்லா லோகங்களுக்கு முபலக்ஷணம். எல்லா உலகங் களிலுமுள்ள ஸம்ஸாரி சேதநர்களென்றபடி. ஈஷத் - கொஞ் சம். உன் அநுக்ரஹத்தின் ஒருலேசமு மென்றபடி. த்வத் கரு ணா நிரீக்ஷண ஸுதா ஸந்துக்ஷணாத்-உன் க்ருபாவலோ கநமாகிய அம்ருதத்தால் உஜ்ஜீவிக்கப்பட்டு. ரக்ஷ்யதே - காப் பாற்றப்படுகிறது. 'வர்ஷேண பீஜம் ப்ரதிஸஞ்ஜஹர்ஷ' என்னு மாப்போலே, (வாடினபயிர்கள் மழையால் கிளம்பி விளங்குமாப் போலே) எல்லோரும் உன்கருணையின் ஓர்துளிபட்ட மாத்திரத்

தில் உயிர்பிழைத்து எழுந்து ஹ்ருஷ்டர்களாகிருர்கள், என்றபடி. ஓர் துளியே பிழைப்பதற்குப்போரும். கருணைவர்ஷத்தில் நனை பவர்களின் ஆநந்தம் சொல்லத்திறமில்லை. '[illegible]' என்ருர் பட்டர். அதாவது இரண்டு, மூன்று கடாக்ஷபாதங்களே இந்த்ரன் முதலான பதவிகளுக்குக் காரணங்கள். மேற்பட்ட கடைக்கண்பார்வைகளோ பரப்ரஹ்மத் துக்கேதகும். '[illegible]' உன்பார்வை எந்த திக்கில் விழுமோவென்று தாங்களும் போய்ச் சேர ஸம்பத்துகள் அவரை ப்ரதீக்ஷங்களாயின வென்ருர் கவிதார்க்கிகஸிஹ்மன். காருண்யநிரீக்ஷணம் - கருணைகூர்ந்த பார்வை, கருணையாலுண்டாகும் பார்வை யென்றதாயிற்று. ஸர்வாநிஷ்டத் தையும் போக்கி அபீஷ்டத்தைக் கொடுப்பது உன் க்ருபையின் ஸ்வபாவம் அன்ருே? அந்தக்கருணையா லுண்டாகும் பார்வை, என்றபடி. உன்கருணை அந்யாத்ருசமன்ருே? பகவானே காருண்யத்துடன் நிக்ரஹபுத்தியை மறந்தாரில்லை. நீ '[illegible]' யன்ருே? '[illegible]' '[illegible]' '[illegible]' '[illegible]' என்பவை முதலான வசநங்கள் இங்கே அநுஸந்தேயங்கள். அன்றிக்கே, காருண்யநிரீக்ஷணம் - கருணைக்கு விஷயமாக்குதல், ஸ்வதஸ்ஸர்வ வ்யாபியான கருணை [illegible] ஸங்க்ருதத்தால் யார் பக்கல் சேருகிறதோ அவர் கருணாநிரீக்ஷிதராகிருர். அம்ருதம்போல் உயிரிழந்தவரைப் பிழைப்பித்தலால் 'ஸுதா' என்று கருணாநிரீக்ஷணத்தைச் சொன்னது. மோஹித்தவர்களையும் அஸ்திமாத்ரர்களையும் சக்தி விசேஷத்தால் பிழைப்பித்தல் அம்ருதத்தின் குணம். இங்கே மோஹித்தவரும் உயிரிழந்தவரும் யாரென்ருல், ப்ராக் - முன், அதாவது, நீ உபேக்ஷையுட னிருந்தபோது, அதாவது, உன்



கருணை எட்டாதபோது. ததநாஹ்ருத: - அந்த நிரீக்ஷணம் கிடைக்காமல். அப்போதும் உனக்குக்கோபம் என்னலாகாது. நீ கோபமே அறியாதவ ளன்ருே. கோபத்துக்கு ஹேது இருக்கச்செய்தேயும், '[illegible]' என்றும் '[illegible]' என்றுமல்லவோ உன் பாசுரங்கள். நஷ்டம்-உயிரிழந்தது. '[illegible]' என்றதோடந்வயம். ஸம்ப்ருதி - உன் நிரீக்ஷணமுண்டானவுடன். [illegible] - பட்டமரம் கப்பும் கிளையுமாய்க் கிளம்பினாற்போல் ஸர்வதோமுகமான ஸம்பத்துடன் கூடினதாயிற்று. ஸ்ருஷ்டிக்கும் ஸ்திதிக்கும் உன்கருணையே காரணம். ஸம்ஹாரத்துக்கு உன் உபேக்ஷையே ஹேதுவென்றதாயிற்று.

'[illegible]'

என்றது, '[illegible]' என்று சொல்லக் கூடிய உனக்கும் துல்யம், என்கிருர். '[illegible]' என்றபடி ப்ரஹ்மேந்த்ராதிகளுக்கும் துக்கங்கள் நேர்ந்தால் அவைகளின் நிவர்த்தநம் உன் அதீனமாயிற்று.

முன்னொருகால் துர்வாஸஸ் சாபத்தால் த்ரைலோக்ய ராஜ்யத்தை இழந்த இந்த்ரனும் நஷ்டைச்வயர்களான தேவதைகளும் பகவான் அநுக்ரஹத்தால் அம்ருதமதநம் செய்தார்கள். அந்த அவஸரத்தில் உத்பந்நையான லக்ஷ்மி மஹர்ஷிகளாலும் தேவதைகளாலும் ஸ்துதிக்கப் பட்டவளாய், "[illegible]" என்கிறபடி பகவானை அடைந்தாள். அந்தலக்ஷ்மியால் பார்க்கப்பட்ட தேவதைகள் அம்ருதபாநஞ் செய்து ஜயமடைந்தார்கள். இந்த்ரன் தன் பூர்வைச்வர்யத்தை யடைந்து லக்ஷ்மியை ஸ்தோத்ரஞ் செய்யுங்கால், இங்கு சொல்லியிருக்கும் அர்த்தத்தை சொல்லுகிருன்,

த்வயா தே³வி பரித்யக்தம் ஸகலம் பு⁴வநத்ரயம் ।
விநஷ்டப்ராயமப⁴வத் த்வயேதா³நீம் ஸமேதி⁴தம் ॥

அதாவது, உன்னால் விடப்பட்ட மூன்று லோகங்களும் நசித்தன போலாகி, இப்போது உன்னால் அநுக்ரஹிக்கப் பட்டு வ்ருத்தியை யடைந்திருக்கின்றன, என்கிறான்.

இப்படி லக்ஷ்மியின் கடாக்ஷத்தால் உதயமென்றும் அவள் உபேக்ஷையால் விபத்து என்றும் சொல்வதை ப்ரளயாநந்தர ஸ்ருஷ்டி காலங்களுக்கும், விசேஷித்து சேதநர்கள் உதயாப்யுதய காலங்களுக்குமாக இரண்டு விதமாகவும் அர்த்தஞ் செய்யலாம். இதற்கு, முன்சொன்ன இந்த்ர வ்ருத்தாந்த மன்னியில், "ப்³ரஹ்மாத்³யா: ஸகலா தே³வா: மநுஷ்யா: பஶவஸ்ததா² । விஷ்ணுபத்ந்யா: ப்ரஸாதே³ந ஜீவந்தி ச ஜக³ந்தி ச ॥" என்றும் 'யஸ்யா: கடாக்ஷம் ப்ரேக்ஷணம் ஸர்வலோகா: ப்ரதீக்ஷந்தே த்ரிலோகேஶ்வரா:' என்றும் இருக்கிற வசநங்களும் ப்ரமாணம்.

இப்படி லக்ஷ்மீகடாக்ஷத்தால் பொதுவாய் அப்யுதய முண்டாகு மென்று சொல்லி, பகவத் பக்தர்களுக்குப் பார்த்தநீய மான புருஷார்த்தங்களும் லக்ஷ்மியின் அதீநமென்கிறார். ஸா விஸ்ருஜ்யோ பவேந்நித்யம் புண்ட³ரீகாக்ஷவல்லபே - புண்டரீகாக்ஷனை ஸ்ரீமந் நாராயணனுக்கு அபிமதையான பத்நீயாகிய உன் க்ருபையைத் தவிர்த்து, கதா³சித் - ஒரு பொழுதும், ந்ருணாம் - மநுஷ்யர்களுக்கு, ஸம்ஸ்ருத்யக்ஷரவைஷ்ணவாத்⁴வஸு - ஐச்வர்யம், ஆத்மப்ராப்தி, பரமபதம் ஆகியமூன்று மார்க்கங்களிலும் ஶ்ரேயோ நஹி ஸம்ஹாவ்யதே- வேறு ச்ரேயஸ் ஸாதநம் இருக்கயாயமில்லை. இங்கே 'ந்ருணாம்' மென்றது ப்ரஹ்மாதி தேவர்களுக்கு முபலக்ஷணம்.

வஜ்ரியோ நிர்தி³ஷ்டம் ப்ரஸந்நம் ஸம்ப்ரோக்தம் த்வத: ஸ்ரீஶ ।
ஜிஹ்வாம்ப³ரா ஸத்ப்ரஸாதே³ந ஶ்ரேயஸ்தத்³வ ஸாத⁴யந்து ॥



19 DEC 1912 MADRAS

என்று பாத்ம புராணத்தில் சொல்லுகிறபடி—எல்லா ஸம்ஸாரி சேதநர்களுக்கும் லக்ஷ்மியின் அநுக்ரஹம் அவரவர் விரும்பும் இஷ்டங்களையடைய த்வாரமாகிறது, என்று கருத்து.

மேலும், 'ஸர்வேஶ்வரேஶ்வரீ' என்றதால்,

ஜாயதே ஹி ப்ரபா⁴வம் யம் ப்ரஸ்ய ஈஶ்வரஸ்ய த³ஶநா: ।
ஸாக்ஷிகஸ்ய தா விஜ்ஞேயா: ஸ தேவ ஶோகாபநோதிநீ ॥

என்று எவருடைய பார்வைக்கு ப்ரபாவம் சொல்லப் பட்டிருக்கிறதோ அவருடைய பத்நீ, என்ற தாயிற்று. 'உபகாரா' என்றதால் இருவரும் பரஸ்பராநு கூலர்களாய் வர்த்திக்கும் ஸ்வபாவம் சொல்லப்பட்டது. இதை 'யஸ்யா வீக்ஷ்ய முக²ம் தத³ங்கி³த தவ ராஜீவோ வித³தா⁴தி விஷயம், ஶ்ரீரேஷ வஶ்யா நாத²ப்ரியாஸ்ய ஸதா³ வஸ்யாத்³வேஸ்யாத³ஸ்யா' என்று ஆழ்வான் அருளிச்செய்தார். 'ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்⁴வஸு' என்றது 'வைஷ்ணவா க்ஷரயாயாத்ர ஐஶ்வர்யமபரமாக்ஷிதநாம்' என்றதுடன் ஸமாநார்த்தம். 'அக்ஷரம்' என்றால் ப்ரக்ருதிவியுக்த ஆத்மஸ்வரூபம், அதாவது பரிசுத்தாத்மஸ்வரூபம். பகவத்கீதையில் 'கிம் தத் ப்³ரஹ்ம' என்னும் ப்ரச்நத்துக்கு ப்ரதிவசநமாகிய 'அக்ஷரம் ப்³ரஹ்ம பரமம்' என்னுமிடத்தில், 'அக்ஷரம் - ப்ரக்ருதிவிநிர்முக்தாத்மஸ்வரூபம்' என்று கீதாபாஷ்யம். இதை மறுபடியும் 'யத³க்ஷரம் வேத³விதோ³ வத³ந்தி' (8, 11) என்றும், யாதி பரமாம் க³திம் (8, 13) என்றும் சொல்லி, 'அவ்யக்தோக்ஷர இத்யுக்தஸ்தமாஹு: பரமாம் க³திம் । யம் ப்ராப்ய ந நிவர்தந்தே தத்³தா⁴ம பரமம் மம (8, 21) என்று முடிக்கையாலும், மேல், 'புருஷ: ஸ பர: பார்த²' (8, 22) என்று பகவானே வேறாய்ச் சொல்வதாலும், அக்ஷர சப்தம் - ப்ரக்ருதி வியுக்தமாய் யதாவஸ்திதமாய், அதாவது ப்³ரஹ்மாத்மகமாயுள்ள சுத்தஜீவாத்மாவைச்சொல்லுகிறது. ஐஸ்வர்யார்த்தி, ஜிஜ்ஞாஸு, ஜ்ஞாநி என்கிற விபாகம் இங்கேயும் சொல்லப்பட்டது.

இந்த மூன்றுபேர்களும், பகவதுபாஸகர்களென்றும், இவர்களில் ஜிஜ்ஞாஸுவும் ஜ்ஞாநியும் அபுநராவ்ருத்தியுள்ளவர்க ளென்றும், ஜ்ஞாநீ விளம்பமில்லாமல் ப்ரஹ்மப்ராப்தி யுள்ளவனென்றும், ஜிஜ்ஞாஸு வென்கிற கைவல்யார்த்தி, ஆத்மாநுபவமாகிற கீழ்பட்ட ஆநந்தத்தில் விளம்பித்துப் பிறகு பரமபதத்தை அடையவேண்டியவனென்றும் நம்மாசார்யர்கள் ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். 'ஆர்த்தயார்த்தார்த்திந: ஸாதநாநுஷ்டாநஸ்ய ச ஸமாநத்வேऽபி ப்ரஹ்மஜ்ஞயதீதி ப்ரஹ்மப்ராப்தி ஸமாநாத் கைவல்யஸ்ய ஸாத்த்வம் ப்ரஹ்மாத்மகதயா ப்ரஹ்மஶேஷத்வைக ரஸதயா ந ஸம்ஶயம்' என்று கீதாபாஷ்ய வாக்யம். ஐஶ்வர்யம் போலே கைவல்யமும் முமுக்ஷுவுக்கு ஹேயமென்பது பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த புருஷார்த்தங்களைச் சேர்த்து, 'ஐஶ்வர்யமக்ஷரகதிம் பரமம் பதம் வா' என்று பட்டரும் அநுஸந்தித்தார்.

இந்த கைவல்யர்த்தியைத் தவிர நம்ஸித்தாந்தத்தில் வேறொரு கைவல்யார்த்தியும் உண்டு. அவன் முன்சொன்னவனிலும் ஹேயன்தான். அந்த் கைவல்யார்த்திக்கு புநராவ்ருத்தி உண்டு. முன்சொன்ன கைவல்யார்த்திக்குப்போல் புநராவ்ருத்தி இல்லாமல் விளம்பித்தாவது ப்ரஹ்மப் ப்ராப்தி இல்லை. இந்த இரண்டுவித கேவலர்களின் ஸ்வபாவத்தை அர்த்தபஞ்சகாதிகாரத்தில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் தெளிவித் திருக்கிறார். "ப்ராப்திவிரோதியாவது" என்று தொடங்கி "ஆத்மப்ரவணரையும் ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டம், ப்ரக்ருதிவியுக்த மென்கிறவிரண்டு படியிலும் ப்ரஹ்மத்ருஷ்டியாலே யாதல், ஸ்வரூபவைரூப்யத்தாலே யாதல் உபாஸிக்கமூட்டி அவை நாலுவகைக்கும் பலமாக அல்பாஸ்வாதங்களைக்கொடுத்து புநராவ்ருத்தியைப் பண்ணியும், ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மதர்ஶந ப்ரவ்ருத்தரானவர்களையும் ஸ்வாத்மஶரீரக பரமாத்மதர்ஶநபரரையும் அந்தராயமான ஆத்மாநுபவத்தாலே யாதல் அஷ்டைஸ்வர்ய ஸித்திகளாலே யாதல், ஸ்வாத்மஶக்தி ப்ராப்தி ப்ரஹ்மகாய நிஷேவணாதிகளாலே யாதல்...போகங்களில் கால்தாழப்பண்ணி கர்மபராக்கி ஸமவகஸ்ப்ராப்திக்கு விலக்காயிருக்கும்" என்று அங்கேவாக்யம். ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மதர்ஶநப்ரவ்ருத்த ரென்றது பகவத்கீதை 7-வது அத்யாயத்தில் சொல்லப்பட்ட ஜிஞ்ஞாஸு வென்பவன்தான். அவனைப்போல் பஞ்சாக்நி வித்யா நிஷ்டனும் இந்த அந்தராயமான ஸ்வாத்மாநுபவத்தில் இச்சையுள்ளவன். இவர்களுக்கு ப்ரஹ்ம ப்ராப்திக்கு விளம்பம் எவ்வளவு காலமென்று வரையற முடியாததால் இவர்களிச்சை ஹேயமென்னப் படுகிறது. இருவரும் வைஷயிக ஸுகவைத்ருஷ்ணாவஹமான ஆத்மாநுபவ ஸுகத்தின் ஆகர்ஷத்தில் அகப்பட்டு பரமபுருஷார்த்தமான பகவதநுபவத்தை பஹுகாலம் இழக்க நேரிடும். பக்தியோகம் காமநாபேதத்தாலே ஆர்த்தவ்யோகநஸுவ ரூபமான இந்த அக்ஷரபத மென்கிற வ்யவதாநத்துக்கு ஹேதுவாகும். இதை "யேதாஶிஷ்டாஸ்த்ரயோயோகா: ஸமகாராஹிதே ரதா: । ஸர்வே ப்ரவந யோகாணாம் ப்ரதிபந்தஸ்து மோக்ஷ ஹா" என்று அநுகீதை பிரித்து வெளியிட்டது. சரமஶ்லோகாதிகாரத்திலும் ஜீவமாத்ரோபாஸகனுக்கு அர்ச்சிராதிகதியும் ப்ரஹ்ம ப்ராப்தியும் இல்லையென்றும் பஞ்சாக்நிவித்யா நிஷ்டனுக்கு ஆத்மமாத்ராநுபவம் வந்தாலும் க்ரமேண அர்ச்சிராதிகதியும் ப்ரஹ்மப்ராப்தியும் உண்டென்றும் சொல்லப்பட் டிருக்கிறது.



இந்த கைவல்ய நிஷ்டையை ஆழ்வாரும்
'அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்,
செற்றது மன்னுறில் அற்றிறை பற்றே' (I. 2. 5.)

என்கிற பாசுரத்தில் 'வீடு' என்கிற பதத்தால் ஸூசிப்பித்து, ஆத்மமாத்ராநுபவத்தை நிந்தித்து 'மன்' என்று நித்ய புருஷார்த்தமான பகவத்ப்ராப்தியை ப்ரகாஶித்தார். 'இறுக லிறப் பென்று ஞானிக்கு மப்பயனில்லையேல்' (v. i. 10.) என்றபாட்டிலும் அதன் வ்யாக்யாநங்களிலும் இந்த அர்த்தம் வெளியாகிறது.

ஸ்ரீ ஸ்தோத்ர பாஷ்யத்திலும் 'கைவல்யம்' ஶப்த வ்யாக்யாநத்தில் "கைவல்யம் [illegible] ஸ்வாத்மாநுபவ: ஸ்வாத்மாநந்தாநுபவஸ்ய । [illegible] கைவல்யம் । [illegible] ஸ்வாத்மாநந்தாநுபவ கைவல்யம் [illegible]" என்றும் ஆசார்யன் அருளிச் செய்திருக்கிறார். இந்த கைவல்யம் நித்யமாவென்றும், இரண்டு கைவல்யார்த்திகளும் அடைவது ஒரே ஸ்தானமா வெவ்வேறுவென்றும், கைவல்யார்த்திகளின் ஸ்தாநம் ப்ரக்ருதி மண்டலத்திலா அதற்கு வெளிப்புறத்திலா வென்றும், இன்னும் இது சம்பந்தமான பல விஷயங்களில் விஸ்தாரமான விசாரங்கள் ஆசார்யர்களின் க்ரந்தங்களில் இருக்கின்றன. அவைகளை அங்கே பார்த்துத் தெளிய வேணும்.

ஆக விம்மூன்று விதமான புருஷார்த்தங்களுக்கும் லக்ஷ்மியின் கடாக்ஷண மென்கிற அனுக்ரஹமே காரணமென்றதாயிற்று. இந்த ஶ்லோகத்தால் லக்ஷ்மிக்கு மோக்ஷஹேதுத்வமும் சொன்னதாயிற்று. இதை "ஆத்மவித்யா ச தேவி த்வம் விமுக்திபலதாயிநீ" என்று இந்த்ரனும் லக்ஷ்மீஸ்தோத்ரத்தில் சொன்னான்.

விஷ்ணுதாஸன்.

16199
600 003.

ஸ்ரீ:

# ஸ்ரீ பாகவத தனிஶ்லோகீ.

(தொடர்ச்சி.)

உ௩. யஸ்யாங்க்ரிபங்கஜ ரஜஸ்ஸ்நபநம் மஹாந்தோ வாஞ்சந்த்யுமாபதிரிவாத்ம தமோபஹத்யை । யர்ஹ்யம்புஜாக்ஷ ந லபேய பவத்ப்ரஸாதம் ஜஹ்யாமஸூந் வ்ரதக்ருஶாந் ஶதஜந்மபிஸ்ஸ்யாத் ॥ 10, 52, 45.

ஸ்ரீ ருக்மிணிப்பிராட்டி, "இந்த ஶ்லோகத்தில் நான் ப்ரார்த்தித்தபடி எனக்கு க்ருபைசெய்யாவிட்டால் நான் ப்ராணனை விட்டுவிடப் போகிறேன்" என்கிறாள். 'ஜீவஞ்சம் ஶரம் யயா ஸ்ரஜ:' என்றாளிறே. மஹாந்த: - லோகபாலர்களென்று பெயர்பெற்றவர்களும் அண்டாதிபதிகளும். ஆத்மதமோபஹத்யை - தங்கள் தங்கள் தமோகுணத்தை, அதாவது, அதினாலுண்டான அஜ்ஞானத்தைப் போக்கடித்துக் கொள்ளுவதற்காக. யஸ்யாங்க்ரிபங்கஜ ரஜஸ்ஸ்நபநம் - யாதொரு உம்முடைய திருவடிகளின் தூளிகளால் ஸ்நாநத்தை. உமாபதிரிவ - ருத்ரன்போலே, 'ஶிரஸா தாரயாமாஸ ஶேஷாத்ரீஸ்யாயதாரணாத்' என்கிறபடி, ருத்ரன் திருவடிகளிலுண்டான கங்கையைச் சிரஸ்ஸினால் வஹித்தார். அதனால், 'யச்சௌச நிஸ்ஸ்ருத ஸரித்ப்ரவரோதகேந தீர்த்தேந மூர்த்த்யதிக்ருதேந ஶிவஶ்ஶிவோऽபூத்' என்கிற படியே, சிவன் என்று பெயர் பெற்றார். அதுபோல், வாஞ்சந்தி -

N 1102

விரும்புகிறீர்களோ, உம்முடைய திருவடித்தூளிகளை சிரஸ்ஸால் தரிக்க விரும்புகிறீர்களோ, என்றதாயிற்று. ‘ஶிரஸா பாதஸ்ய ஸம்ஸ்ப்ருஷ்டி’ என்றும், ‘காங்க்ஷம் வஹ ஸதத பௌஸவிஸர்ஷணம் நம’ என்றும், * ‘நின் செம்மாபாதபற்புத்தலைசேர்த்து’ என்றும் மஹான்கள் ஆசைப்பட்டார்களிறே.

ஸவஸ்வாஸாத - அப்படிப்பட்ட உம்முடைய அனுக்ரஹத்தை. ந ஞெஹெய யதி - நானடையாமல் போவேனாகில். உமக்கு ப்ரணயினியாயிருந்து உம்முடைய ப்ரணயத்துக்கு நான் விஷயமாயாகாமற் போனேனேயாகிலும், லோகத்தாரோபாதி உம்முடைய அநுக்ரஹத்துக்குப் பாத்ரமாயாகாமற் போனேனேயாகில். ஹெஸம்பவ்ஜாக்ஷ - தாமரைப் புஷ்பங்கள் போன்ற கண்களையுடையவனே. † ‘உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக் கண்ணு’ என்றும், ‘விஶ்வாஸிர க்ஷண விஹாரக்ருதக்ஷணெ ஷெ’ என்றும் சொல்லுகிறபடியே ஸம்ஸார தவா நல தஷ்டரான ஜீவர்களை அம்ருதவர்ஷம் போன்ற கடாக்ஷ லஹரிகளால் எல்லாத் தாபமுந் தீரும்படி கடாக்ஷிப்பதற்காகத் தாமரைக் கண்களைப் பெற்றீரென்று நினைத்திருந்தோம். எம் திறத்தில், ‡ ‘உன்தாமரை புரை கண்ணிணையும் செவ்வாய் முறுவலும் ஆகுலங்கள் செய்ய வழிதற்கே நோற்றேமேயாம்’. எல்லாருக்கும் உஜ்ஜீவநமாயிருப்பது என் ஒருத்திக்கு அழிவதற்குக் காரணமாகும்படியானது நான் பண்ணின கர்மபலமோ? என்கிறாள் ¶ ‘ஏழையராவியுண்ணுமிணைக்கூற்றங்கொலோ’, என்று சொல்லுகிறபடியே ம்ருத்யுவைப் போல் க்ரூரங்களான § ‘தாமரைக்கண்கள் கொண்டீர் தியலோ?’ என்னை ஒருத்தியை மாத்ரம் இவைகளைக் கொண்டு ஹிம்ஸிக்க நினைத்தாயோ? என்கிறாள்.

---

* திருவாய். ii. 9. 1.
† பெரிய - திரு. vii. 1. 9.
‡ திருவாய். vi. 2. 2.
¶ ஷை vii. 7. 1.
§ ஷை x. 3. 1.



இப்படி, ‘வ்ருஸாதவாஜௌ நாயெள’ என்கிறபடி உம்முடைய பரத்வத்தையடக்கி உமக்கு ஸ்வரூபமென்னலாம்படியான க்ருபை என் விஷயத்தில் மாறினால், ஜஹ்யாதவஸூந் - ப்ராணங்களை விட்டுவிடுவேன்.

* ‘உடம்பினாற் குறைவில்லா வுயிர்பிரிந்த மலைத்துண்டம்
கிடந்தனபோல் துணிபலவா வசுரர்குழாம் துணித்துகந்த
தடம்புனல சடைமுடியன் தனியொருகூ றமர்ந்துறையும்
உடம்புடையான் கவராத வுயிரினாற் குறைவிலமே’

என்கிறாள். தங்கள் தங்களை ஈஶ்வரனாக அபிமானித்திருக்கும் துர்மானிகளுக்கும் ப்ரயோஜநாந்தர பரர்களுக்கும் கொடுக்கக்கடவ உம்முடைய வுடம்பை, அநந்ய ப்ரயோஜனையாய் அதையே ஆசைப்பட்டு அது கிடையாமையாலே முடியப்போகிற எனக்குக் கொடுத்தாலாகாதோ? இப்படி ஸர்வ ஸாதாரணமான பேற்றையும் யான் பெறாவிடில், உயிருடனிருந்து என்ன ப்ரயோஜநம்? ‘வஸதி ஜீவந்த ஶாநந்தம’ என்பதும் என்னிடத்தில் பொய்யாமத்தனை யாகாதோ? ஆகையாலினி ப்ராணனைச் சுமக்கேன்’ என்கிறாள். அத்தலைக் குறுப்பாகாதவை யெல்லாம் வ்ருதா, என்றபடி. ‘யாஶயஸ்ராஜெநா ஷெஹம்’ என்றானிறே பெருமாளைத் திருவடி; அந்தப்பழிக்கு நானாளாகேன், என்கிறாள். ‘வாவம் ஶயி ந விஜ்யெத’ வீணான ஊர்ப்பழி சுமக்கும்படியான பாவம் என்னிடத்தில் இல்லை. இங்கு பாவமென்றது பெருமாளை விட்டுப்பிரிந்துயிரோடிருக்கக் காரணமாகிய கர்மவிசேஷத்தை. ப்ராணனை விடுவதென்றால் அதற்கோர் காரணம் வேண்டாவோ? நீ நினைத்தவுடனே விடமுடியுமோ வென்னில், தானே கார்ச்யத்தை யடைந்தபடியால் அது எனக்கு அசக்யமன்று காண், என்கிறாள். வ்ருதக்ஷயாநு - வ்ருதோபவாஸாதிகளால் இளைத்துப்போன, அதாவது மரணத்துக்குப் பாதிவழியில் இருக்கிற ப்ராணன்கள், என்றபடி.

---

* திருவாய். iv. 8. 10.

அன்றிக்கே, வ்ருதக்ருஶாநு - லோகத்தில் ப்ராணனை வைத்துக் கொண்டிருப்பது, 'ஏதி ஜீவந்தமாநந்தோ நரம் வர்ஷஶதாதபி', என்றேனுமொருநாள் தான் ஸுகம்பெறலா.மென்கிற நசையாலே. எனக்கு இப்பொழுது கிடைக்காத உம்முடைய அநுக்ரஹம் இனி எந்தக் காரணத்தால் கிடைக்கப்போகிறது. ஆகவே அந்த நசையுமில்லாமையாலே, இதுவரையி லநுபவித்த, * 'மாசுடை யுடம்பொடு தலையுலறி வாய்ப்புறம்வெளுத் தொருபோது முண்டு' என்றபடி பட்டகஷ்டங்களெல்லாம் அமையும், என்கிறாள். இப்படியாகில் உனக்கென்ன ஸித்தித்தது ஏன்னில், மேல் சொல்லுகிறாள், 'ஶதஜந்மஸஹஸ்ரம்', என்று.

இங்கே ஶதமென்றது உபலக்ஷணம். அநேக ஜந்மங்கள் கழித்தாவது எனக்கு அது கிடைக்கும். அன்றிக்கே, இப்பொழுது ப்ராணனை விட்டாயாகில் அடுத்த ஜன்மத்தில் உன் அபீஷ்டம் கிடைக்கு மென்பது என்ன நிச்சயம்? அப்படிக் கிடைக்காமல் அந்த ஜன்மத்திலேயும் இப்படியே மரணமடைய நேரிட்டால் என்செய்வாய்? எனச் சொல்லுகிறாள், ஶதஜந்மஸஹஸ்ரம் - அநேக மாயிரம் ஜன்மங்களிலும் இப்படியே ப்ரார்த்தித்து இஷ்டத்தைப் பெறாமல் மரணமடைவேன். அதனாலுனக்கென்ன ஸித்திப்ப தென்னில்,

† 'கதியென்றுந் தானாவான் கருதாதோர் பெண்கொடியை
வதைசெய்தா ரென்னும்சொல் வையகத்தார் மதியாரே.'

ஸர்வரக்ஷகனான ஒருவன் அவனையே நம்பியிருந்த ஒரு பெண்ணை ரக்ஷிக்காமல் அவள் மரணமடையக் காரணமானான், என்கிறவார்த்தையை லோகத்தார் தெரிந்துகொள்ள மாட்டார்களோ? லோகத்திலெங்கும் கருணாநிதியென்று பெயர் பெற்று அதனால் எல்லா ஆர்யர்களும் வந்து சரணம்புகும்படி நின்றவனுடைய ப்ரஸித்தியை யழித்து நிஷ்கருணனென்று பெயராகும்படி பண்ணுகிறேன், என்றாளாகவுமாம்.

அன்றிக்கே 'ஶதஜந்மஸஹஸ்ராஸு' என்று பாடமானபோது, அநேகமாயிரம் ஜன்மங்கள் இப்படிப்பல மடையாமல் முடிந்தாலும் என்னபீஷ்டம் கிடைக்காமற் போகாது. என்றேனும் ஒரு நாள் கிடைத்துவிடும். அவனுக்கும் நமக்குமுள்ள சேஷசேஷிபாவ ஸம்பந்தம் * 'உறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது', என்றபடியே, நம்மாலும், அவன் தன்னாலும், இருவரும் சேர்ந்தாலும் ஒழிக்க ஒழியா தாகையாலும் சேஷி சேஷபூதனை ரக்ஷிக்கை ஸ்வதஸ்ஸித்தமாகையாலும் நம்முடைய ரக்ஷை தவறாது, என்றாளாகவுமாம். அன்றிக்கே, ஶதஜந்மஸஹஸ்ராஸு - 'நீயல்லவோ முடியப்போகிறாய். அத்தாலெனக்கென்ன நஷ்டம்' என்றிருக்கிறாய் நீ. அதுவோ உன் கருத்து?

† 'தொழுதுமுப் போதுமுன் னடிவணங்கித் தூமலர் தூய்த்தொழு தேத்துகின்றேன், பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே பணிசெய்து வாழப் பெறாவிடில்நான், அழுதழு தலமந் தம்மாவழங்க ஆற்றவு மதுவுனக் குறைக்குங் கண்டாய், உழுவதோ ரெருத்தினை நுகங்கொடு பாய்ந்து ஊட்டமின் றித்துறந் தாலொக்குமே'.

இந்தப் பெண்கொடியை, உபேக்ஷித்த பாவம் உன்னை நூறு ஜன்மங்களாலும் அநுபவித்தும் முடியாததாகு மென்கிறாளாகவுமாம்.

சே. நரஸிம்ஹமாசாரியர்.

* நாச் - திரு. i. 8.
† ஷை viii, 9.

* திருப்பாவை. 28.
† நாச் - திரு. i. 9.

# ப்ரச்நங்கள்.

## (1)

### க்ரஹணத்தின் தத்வம்.

1. சாந்தோக்ய உபநிஷத்தில் "அச்வ இவ ரோமாணி விதூய பாபம் சந்த்ர இவ ராஹோர்முகாத் ப்ரமுச்ய" என்கிற வாக்யத்திஞல் க்ரஹணகாலத்தில் ராஹுவிஞல் சந்த்ரன் விழுங்கப் படுகிருனென்று அர்த்தமாகிறது.

2. ஸ்ரீமத் ராமயணத்திலும் ஸுந்தர காண்டத்தில் "ராஹுக்ரஸ்தேவ சந்த்ரமா:" என்பது முதலான வாக்யங்களால் சந்த்ராதிகளுக்கு க்ரஹணகாலத்தில் துக்கமுண்டாவதுபோல் காணப்படுகிறது.

3. 'அடலரவ முண்டுமிழ்ந்த வருக்கன்போல' என்கிற ஸ்ரீ தேசிக ஸூக்தியாலும் இந்த அர்த்தம் அநுவதிக்கப் படுகிறது.

4. ஸ்ரீ பாகவதம் 5-வது ஸ்கந்தம், 24-வது அத்யாயத்தில் 'ய: பர்வணி தத்வ்யவதாநக்ருத வைராநுபந்த: ஸூர்யாசந்த்ரமஸாவபிதாவதி' என்கிற வாக்யத்தில் 'வ்யவதாந' ஶப்தத்திஞலும், அதன் வ்யாக்யாநமான 'ஸ்வச்சாயாக்ருதிஹ்ராஸம் ஸூர்யாசந்த்ரமஸோ: ஸூர்யாசந்த்ரமஸௌ, நது வஸ்துதோ க்ராஸோஸ்தி, இதிபாவ:' என்கிற வாக்யத்திஞலும் மறைப்பதே க்ரஹணமென்று ஏற்படுகிறது. அப்படியாஞல் முன்சொன்ன துக்கத்துக்கு ஹேதுவில்லை.



5. ஆகையால் ஸ்ருதி விருத்தமானதால் இந்த விஷயத்தில் புராணம் அநாதரணீயமா? அல்லது, ஸ்ருத்யநுகுணமாய் புராணம் அர்த்தம் பண்ணப்படவேண்டியதா? அல்லது புராணாநுகுணமாய் ஸ்ருதியை நயநம் பண்ணவேண்டுவது யுக்தமா? இந்த ஸந்தேஹத்தை அபிஜ்ஞர்கள் தெளிவிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

கண்கொடுத்தவணிதம்.<br>அற்பசிமீ 22உ. } விஜய ராகவ தாஸன்.

---

## (2)

### துளஸீக்ரஹணம்.

1. துளஸீக்ரஹணத்துக்குக் கால நியமங்களும் மந்த்ர நியமங்களும் ஶாஸ்த்ரங்களில் சொல்லியிருப்பது எல்லார்க்கும் ப்ரஸித்தம். அப்படியிருக்க ஸ்ரீரங்காதி ஸ்தலங்களிலும் மற்ற இடங்களிலும் மந்த்ராதி நியமாநர்ஹர்களான சூத்ரர்களும் சூத்ரைகளும் அதை க்ரஹித்துவருவது வழக்கமாயிருக்கிறதே? இந்த ஆசாரம் சிஷ்ட ஸம்மதமாயு மிருக்கிறதே? இது யுக்தமா? இந்த ப்ரச்நத்துக்கும் வித்வான்கள் ப்ரதிவசனம் செய்வார்களென்று ப்ரார்த்திக்கிறேன்.

கண்கொடுத்தவணிதம்.<br>அற்பசிமீ 22உ. } விஜய ராகவ தாஸன்.

---

**பூர்ணசந்த்ரோதயம்.**—சென்ற இரண்டரை வர்ஷகாலமாய் நடைபெற்றுவரும் **பூர்ணசந்த்ரோதயம்** என்னும் சிறந்த மாதாந்தரப்பத்ரிகை நமக்கு அனுப்பப்பட்டுவருகிறது. இது மதுரையில் ப்ரஹ்மஜ்ஞாநக்கிளைச் சங்கத்தாருடைய ஆதரவின்பேரில் ப்ரஹ்ம ஸ்ரீ. நாராயணஐயர். B. A. B. L. F. T. S. அ. ரங்கஸாமிஐயர். B. A. B. L. F. T. S. ஆகியஇரண்டு பத்ராதிபர்களால் ப்ரசுரப்படுத்தப்பட்டு வெளிவருகிறது. இதில் ப்ரஹ்மஜ்ஞாந (Theosophy) விஷயமான பல சிறந்த வ்யாஸங்களும், யோகம், வேதாந்தம், ஸ்ம்ருதி, புராணங்கள் சம்பந்தமான பற்பல உபந்யாஸங்களும் இன்னும் கல்பிதமான விவேகத்தை வ்ருத்திசெய்யும் கதைகளும் வெளிவருகின்றன. பல கற்றறிந்த தமிழ் வித்வான்கள் இதற்கு விஷயங்கள் எழுதி வருகிறர்களாகையால் இதைப்படிப்பது மிகவும் ஆநந்தகரமாயிருக்கிறது. இதன் வருஷச்சந்தா ரூ. 2—0—0.

[கடிதங்கள் எழுதுகிறவர்களுக்கு அறிக்கை.—கடிதங்கள் எழுதுகிறவர்களின் அபிப்ராயங்களுக்குப் பத்ராதிபர் உத்தரவாதமில்லை. கடிதங்கள் நல்ல காகிதத்தில் ஒருபக்கத்தில் தெளிவாக எழுதப்படவேண்டும். எழுதுகிறவர்கள் பெயரும் விலாஸமும் பத்ராதிபருக்கு வ்யக்தமாய் அறிவிக்கப்படவேண்டும். வேதாந்ததீபிகை பத்ராதிபர்.]

## கடிதங்கள்.

ஸ்ரீ:

# ஸ்ரீ அஹோபில யாத்திரை.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு.

வாழ்குமரன் மேற்கனக வஞ்சகன்மே லோர்முகத்தே
சூழ்கருணை யும்முனிவுந் தோன்றியவால்—கேழ்கிளரும்
அங்கவேள் குன்ற வழல்சரபத் தைப்பிளந்த
சிங்கவேள் குன்றத்தி னார்க்கு.

திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார்.

ஸ்ரீ ஸந்நிதி சிஷ்ய ஸபையார் ஸ்ரீ அஹோபில ஸந்நிதியின் பூர்வீகப் பெருமையையும் வைபவத்தையும் ப்ரகாசப்படுத்தின மஹோபகாரத்திற்குக் கைம்மாறு இல்லாவிடினும், அந்த உபகாரத்தினடியாக அநேகருக்கு ஸ்ரீ அஹோபிலத்தை ஸேவித்து வரவேணு மென்கிற ஆசை உண்டானதே ப்ரதிக்ருதமாக அந்த ஸபையார்கள் நினைப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்படி ஆசை உண்டானவர்களி லொருவனான அடியேன் அது தலைக்கட்டும் நாள் வாய்க்காத வளவிலே “ஸமே யாத்ரா நிவேந நிவேந” என்றபடி திக்கு நோக்கித்தண்டனிட்டு நிற்கிற காலத்தில், தற்செயலாக ஒருஸமயம் ஏற்பட்டு, அஹோபில யாத்திரையாகப் புறப்பட்டேன்.

சென்னையில் முதல் நாள் இராத்திரி $9\frac{1}{4}$ - மணிக்கு பம்பாய்மெயில் வண்டியில் புறப்பட்டு விடியற்காலம் 3-50-க்கு எற்றகுன்டலா என்கிற ஸ்டேஷ



னில் இறங்கினேன். இறங்கினதும் அங்கே “ஓபய்யா” “ஓபலய்யா” என்று ஒருவரை யொருவர் ஆஹ்வானம் செய்வதைக்கேட்டு, ‘இது அஹோபிலம் என்கிற திவ்யதேசத்தின் எல்லைநிலமாகையால் அந்த திவ்யதேசத்தின் திருநாமத்தால் பெயரிட்டழைக்கிறார்கள்’ என்கிற எண்ணமும் அதனடியாக ஸந்தோஷமும் ஜநித்தன. ஸ்டேஷனுக்கு வெளியேவந்து 8-மைல் தூரத்திலுள்ள புரோதத்தூர் என்கிற ஊருக்கு எட்டணுவுக்கு மாட்டுவண்டிபேசிச் சென்றேன். வழியில் மண்ணுவது சுண்ணும்பாவது கலவாமல் கடப்பைக்கற்களால் அமைக்கப்பட்ட வீடுகளே காணப்பட்டன. ஜலமில்லாமல் வற்றிக்கிடந்த பெண்ணையாற்றைக்கடந்து பனைத்தோப்புவழியாக காலை 9 - மணிக்கு புரோதத்தூரை யடைந்தேன்.

அவ்வூரில் ஒரு வைஷ்ணவாலயமிருக்கிறது. இக்கோயில் பூசாரிக்கு (அந்தத்தேசத்து அர்ச்சகருக்கு இப்படித் திருநாமம்) அஹோபிலமடத்தில் ஸமாச்ரயணம் என்கிற ப்ரஸ்தாவமுண்டாகையால் இந்தக் கோயில் ஒருகாலத்தில் ஸ்ரீ ஸந்நிதியின் ஆதீனத்தில் இருந்திருக்க வேண்டுமென்று நினைக்க இடமுண்டாகிறது. மேலும், களத்தூர் அழகியசிங்கர் எழுந்தருளியிருந்தகாலத்தில் இவ்வூரார் ஸ்ரீ ஸந்நிதிக்குப்போய் ஷை கோயிலுக்குத் தீர்த்த பரிக்ரஹம் உண்டாக்கி வைக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்ததாயும், அதற்குக் காணிக்கையாக அபேக்ஷிக்கப்பட்ட த்ரவ்யத்தை இவர்கள் ஸமர்ப்பிக்க அசக்தர்களாய்த் திரும்பிவிட்டார்களென்றும் சொல்லிவருகிறார்கள்.

புரோதத்தூரிலிருந்து அஹோபிலத்துக்கு அல்லகட்டா என்னுமூர் வழியாகப்போவது ஸுலபம். அல்லகட்டா சிறுவேல் தாலூகாவுக்கு ப்ரதான ஸ்தானம். இராத்திரியில் பிரயாணம் செய்தாலும் மார்க்கத்தில் பயமில்லையென்று கேட்டு, இராத்திரி 10 - மணிக்கு புரோதத்தூரைவிட்டு மறுநாட்காலை 9 - மணிக்கு அல்லகட்டா வந்து சேர்ந்தேன். அங்கே வஸதியான லோகல்பண்டு சத்திர மொன்றிருக்கிறது; அதில் தங்கினேன். மார்க்கத்தில் இராத்திரிவேளையில் அடிவானத்தில் ஸ்தூலமாய்ப் புலப்பட்ட நல்லமலைத் தொடரில் எரியாநின்ற காட்டுத்தீயானது அத்புதமான காட்சியாக விளங்கிற்று. இந்தக்காட்சியைக்கண்டு விஸ்மித்த திருமங்கை யாழ்வார்,

*“ நின்றசெந்தீ மொண்டுசூறை நீள்விசும் பூடிரிய
சென்று காண்டற் கரியகோயில் சிங்கவேள் குன்றமே.”

என்று அருளிச்செய்த பாசுரத்தில் அதிசயோக்தி ஒன்றுமில்லை யென்று தெரிந்தது. காண்டற்கரிய கோயிலாகையால் ஸ்ரீ அஹோபிலத்தை நேரில்

* இந்தக் கடிதத்தில் உதாஹரித்த பாட்டுகளைப் பெரிய திருமொழி முதல் பத்து 7 - ம் திருமொழியில் காண்க.

ஸேவிக்காதவர்களுக்கு உபயோகமாக அவ்விடத்து ஸந்நிவேசங்களைப் படங்களில் பிடித்து வைப்பதற்காகத் தகுந்த ஸகாயமாக ஒரு மனுஷ்யரைக் கூட்டிக்கொண்டு, இராத்திரியே அல்லகட்டாவைவிட்டு அஹோபிலம் நோக்கிச் சென்றேன். இராத்திரிமுழுதும் பிரயாணம் செய்தோம். அருணோதயத்தில் உத்தேச்யமான திவ்யதேசத்தின் எல்லையை அடைந்தோம். "நெரிந்த வேயின் முழையுணின்று நீணெறிவா யுழுவை, திரிந்தவானைச் சுவடுபார்க்குஞ் சிங்கவேள் குன்றமே" என்கிறபடியே காடடர்ந்து வளர்ந்திருந்த பர்வத ப்ரதேசங்கள் கண்ணுக்குத்தெளிவாய்ப் புலப்பட்டன. வழியில், புதர் மூடிநின்ற மண்டபங்களும், இடையிடையே புல்லும் முள்ளும் வ்ருத்தியாகி மனுஷ்ய ஸஞ்சாரத்தைப் பெறாத கோனேரிகளும், ஸந்நிதி ஸாமீப்யத்தைக்காட்டின. சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த மலைவாஸிகளுடைய குடிசைகளைக்கண்டோம். இவைகளைத்தாண்டி மலைப்புறமாக வண்டி திரும்பியதும், எதிரில் விருக்ஷங்கள்மத்தியில் பூர்ணமாய் வெளுக்காத கீழ்வானத்தின்மேல் தாங்கினதுபோல் நின்ற ஒரு வெண்மையான விமானம் ஸேவையாயிற்று. வண்டியினின்றும் கீழே இறங்கி, விமானத்திற்கு அஞ்சலிசெய்து ஹ்ருஷ்டர்களாய், கால்நடையாய் ஸந்நிதியைக்கிட்டினோம். ப்ரஸித்தமான இந்த ஸந்நிதியின் விமானத்தில் ப்ரகாசமான கலசங்க ளொன்றுமில்லை. ப்ராகாரத்திற்கு நாற்புறமும் காணப்பட்ட மணல்மேடுகள் அங்கே பூர்வத்தில் திருமாளிகைகள் இருந்தனவாகத் தெரிவித்தன. ப்ராகாரமுழுவதும் புல்பூண்டுகள் முளைத்துக்காடாய் வ்ருத்தியடைந்திருப்பதோடு மதில்களும் பலவிடங்களில் இடிந்து விழுந்திருக்கின்றன. எந்த இடத்தைப் பார்த்தாலும் விசாரணைக்குறைவும் அனாதரவும் மேலிட்டு இருப்பதாய்த் தெரிந்தது. ப்ரதக்ஷிணமாகவந்து ஸந்நிதியின் கீழ்வாசலில் வந்தோம். இந்தவாசலுக்கு நேராக உள்ள திருவீதியில் விமானத்துடன்கூடின நாற்கால் மண்டபங்கள் அடுத்தடுத்து நிற்கின்றன. உத்ஸவ காலங்களில் இந்த மண்டபங்களில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன்ஸேவார்த்திகளுக்கு ஸேவை தந்தருள்வதற்காக இவைகள் ஏற்பட்டிருக்கவேண்டும் என்பதற்குச் சந்தேகமில்லை. வீதியின் இரண்டு பார்ச்வங்களிலும் தாழ்வான கல்கட்டடங்கள் புல்மூடிக் காணப்படுகின்றன. இவைகள் பூர்வத்தில் கடைகளுக்காக உபயோகப்பட்டுவந்தன வென்று தோன்றுகிறது. இந்தவீதிக்கு அடுத்த தென்வட்லாய்ப்போகிற வீதியிலும் இம்மாதிரியான மண்டபங்கள் இருக்கின்றன. ஆனால் இவைகளைப் பாரஸ்டு இலாகாவில் சேர்த்துவிட்டார்க ளாகையால் ஸந்நிதிக்கு இனிச் சேர்ந்தனவாகச்சொல்ல இடமில்லை. கீழ்வாசலில் கோபுரமில்லை. இந்த வாசல் வழியாக ஸந்நிதியுள்ளே சென்றால் வளர்ந்திருக்கும் புற்பூண்டுகளும் முட்செடிகளும் கொஞ்சத்தில்



கீழ் அஹோபிலம் - ஸந்நிதிவீதி.





[illegible] கலெக்டர் இந்த [illegible]. இதற்கு வட [illegible] சக்கிர புஷ்கரிணி [illegible] இடிந்து கிடக்கின்றன. [illegible] இடிந்து தூர்ந்துவிட்ட [illegible] இருக்கும் இரைஞ் [illegible] வருகிறது. [illegible] நவரும் உண்டா [illegible]

[illegible] அமைக் [illegible] ஸந்நிதியில் மூல [illegible] இந்த ஸந்நிதியில் [illegible] தெரிகிறது.

[illegible] சென்றால் [illegible]

[illegible] தனித் [illegible] மண்டபங் [illegible] கோபுரத் [illegible] தென் [illegible] கின்றன. [illegible]

கால்பாவ விடுகிறதில்லை. ப்ரஹ்மோத்ஸவகாலத்தில் கவர்ன்மெண்டார் இந்த விடத்தில் தீவைத்து இவைகளைக் கொளுத்தி விடுகிறார்கள். இதற்கு வடபுறத்தில் ஸ்ரீபாஷ்யக்காரர் ஸந்நிதியும் தென்புறத்தில் ஸந்நிதி புஷ்கரிணியும் இருக்கின்றன. புஷ்கரிணியின் படித்துறைகள் இடிந்து கிடக்கின்றன. முன்பு இதற்கு வந்து கொண்டிருந்த நீர்க்கால் இப்பொழுது தூர்ந்துவிட்டபடியால் புஷ்கரிணி வறண்டிருக்கிறது. அதன் மத்தியில் இருக்கும் கிணற்றிலிருந்து சேற்றுடன் மிஶ்ரமான ஜலந்தான் உபயோகப்பட்டு வருகிறது. இந்த ஜலத்தை உபயோகிப்பதால் வயிற்றில் கட்டியும் ஜ்வரமும் உண்டாகின்றன என்பது ஆச்சரியமில்லை.

ஸ்ரீபாஷ்யக்காரர்ஸந்நிதி முகமண்டபத்தோடு கூடி அழகாய் அமைக்கப்பட்டிருக்கிறது. ஷை ஸந்நிதிக்குக் கதவு கிடையாது. ஸந்நிதியில் மூலவரான ஸ்ரீ பாஷ்யக்காரர்தான் எழுந்தருளியிருக்கிறார். இந்த ஸந்நிதியில் ஆராதனம் நடக்கவில்லை. உத்ஸவகாலங்களில் முகாம் போட்டுக்கொள்ளுகிற உத்யோகஸ்தர்கள் இந்த ஸந்நிதியில் இறங்கிவருவதாகத் தெரிகிறது.

இரண்டாவது வாசலிலும் கோபுரமில்லை. இதைத்தாண்டிச் சென்றால் இன்றைக்கோ நாளைக்கோ விழும் என்னும் படியான த்வஜஸ்தம்பம் நிற்கிறது. இதன் இரண்டு பக்கங்களிலிருக்கும் மண்டபங்கள் அவ்விடத்திற்கு வரும் வண்டிமாடுகள் கட்டும் இடங்களாக உபயோகப் பட்டு வருகின்றன.

இதற்கு எதிரில் மூன்றாவது வாசல். இங்கே சிலாசாஸனங்கள் தனித்தனியாக நட்டு வைக்கப் பட்டிருக்கின்றன. இவைகள் என்ன ஶாஸனங்களோ ஒருவருக்கும் தெரியாது. இந்த வாசலின் மேலிருந்த கோபுரத்தைச் சிலவருஷங்களுக்குமுன் அப்போதிருந்த மடத்து அதிகாரிகள் இடித்துவிட்டார்களாம்; பின்பு புதிதாய்க் கோபுரம் கட்டுவதற்காக ஒருவித முயற்சியும் செய்யப்பட்டதாகக் காணப்படவில்லை. இந்த வாசல் வழியாக உள்ளே சென்றால் பூர்த்திபெறாத மிகநேர்த்தியான மண்டபம் ஒன்று காணப்படுகிறது. இதைப்பார்த்த துரை ஒருவர் இம்மண்டபம் பூர்த்தியாய் முடிந்திருந்தால் இதற்கு ஸமானமான மண்டபம் வேறே இராது என்று அபிப்பிராயப் பட்டிருக்கிறார். தென்புறத்தில் பெரிதான பல கல்தொட்டிகளோடு கூடின விசாலமான திருமடைப்பள்ளி அமைக்கப் பட்டிருக்கிறது. தென்மேற்கு மூலையில் ஸ்ரீவரதன் ஸந்நிதியும் கல்யாண மண்டபமு மிருக்கின்றன. இந்த மண்டபத்திலும் வேறிடத்திலும் ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமிக்கு பெருமாள் காஷாயம் தந்தருளின வ்ருத்தாந்தத்தை சித்ரரூபமாய் ஸேவிக்கலாம். ஆழ்வார்கள் ஸந்நிதியும், பட்டாபிராமன் ஸந்நிதியும் மற்றொருபக்கத்திலிருக்கின்றன. இந்த ஸந்நிதிகளிலும் திருவாராதனம் கிடையாது. முதல் முதல் தென்பட்ட விமானத்தின்கீழ் பெருமாள் ஸந்நிதியும் பக்கத்தில் லக்ஷ்மீ ஸந்நிதியும் இருக்கின்றன. பெருமாள் ஸந்நிதியில் உத்ஸவமூர்த்தி வெகு

ஸுந்தரமாக ஸேவை ஸாதிக்கிறார். இந்த ஸந்நிதிகளில் ஏற்படும் உபசார, திருவாராதனாதிகளில் குறைவுகளையெல்லாம் ஆப்தர்களான ஸ்வாமிகளைக் கொண்டு விசாரித்து அவைகளை நிவர்த்தி செய்வதற்கான. ஏற்பாடுகளை ஸ்ரீ அழகிய சிங்கர் நியமித்தருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

-- இந்த ஸந்நிதியிலிருந்து மேல் அஹோபிலம் ஐந்துமைல். "கனைத்ததீயும் கல்லுமல்லா வில்லுடை வேடருமாய்" என்றும், "காய்த்தவாகை நெற்றொலிப்பக் கல்லதர் வேய்ங்கழைபோய், தேய்த்ததீயால் விண் சிவக்கும்" என்றும், "நெல்லிமல்கிக் கல்லுடைப்பப் புல்லிலையார்த் ததர்வாய், சில்லி சில்லென் றொல்லறாத்" என்றும், அருளிச் செய்யப்பட்டபடியே, அடர்ந்த காடுவழியாகப் போய் பவநாசிநீ என்னும் நதியில் ஜலங்கள் விழுந்தெழும் ஓசையும், தீயெழுந்து சூறையாடி இரையும் இரைச்சலும், வ்யாக்ரங்கள் கர்ஜித்து அதன் ப்ரதித்வானங்களும் எங்கும் நிறைந்திருக்கும் மார்க்கத்தில் உத்தேஶமாய்ச் சென்றால் "தெய்வமல்லால் செல்ல வொண்ணாச் சிங்கவேள் குன்றத்தை" யடைந்து, "செங்கணாளியிட்டிறைஞ்சும் சிங்கவேள் குன்றுடைய எங்களீச னெம்பிரானை" ஸேவிக்கலாம்.

மேல் அஹோபிலம் ஸந்நிதியின் விமாநஸேவையையும் கீழ் அஹோபிலம் ஸந்நிவேசங்களையும் காட்டக்கூடிய படங்கள் இந்த ஸஞ்சிகையில் அமைக்கப்பட் டிருக்கின்றன.

இந்த ஸந்நிதிக்கு வருஷம் 1 - க்கு உத்ஸவ வரும்படிகள் உள்பட ரூ. 3500 வரக்கூடுமென்றும் ஸகல செலவுகளு முள்பட ரூ. 1200-செலவாகலாமென்றும் அங்கு விசாரித்ததில் தெரியவருகிறது. க்ரமமாய் எல்லாச் செலவுகளும் இப்போது செய்யப்பட வில்லை யென்றும் தெரிகிறது. இப்போது ஒரு குத்தகைதாரர் சுமார் ரூ. 1000 - வரும்படியுள்ள குண்டாலா க்ராமம் நீங்கலாக மற்றெல்லா வரும்படிகளையும் அனுபவித்துக் கொண்டு எல்லாச் செலவுகளையும் செய்ய ஒப்புக்கொண்டு ரூ. 300. ஸ்ரீ ஸந்நிதிக்குக் கொடுத்து வருவதாய்த் தெரியவருகிறது.

இந்த ஸந்நிதியைச் சேர்ந்த கட்டடங்களைச் சீர்செய்து ஆராதனங்களையும் க்ரமமாய் செய்வித்து வரவேண்டியது ஸ்ரீ ஸந்நிதிக்கு முதல் உத்தேஶ்யமாய் எண்ணப் படவேண்டும். இது விஷயத்தில் ஸந்நிதி சிஷ்யர்கள் ஸ்ரீ அழகிய சிங்கரிடத்தில் தகுந்தபடி விஜ்ஞாபநம் செய்து இதன் ஆவச்யகதையைத் திருவுள்ளத்தில் படும்படியாய்ச் செய்யவேணு மென்பது இது எழுதினதின் கருத்து.

ஸ்ரீ அஹோபில நம்பி.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# பிரிவுகளின் அறிக்கை.

## மதிராஸ் - சைதாப் பேட்டை பிரிவு.

சென்ற நவம்பர்மீ 17௳ ஞாயிற்றுக்கிழமை தினம் பகல் 4- மணிக்குத் திருவல்லிக்கேணி ஸ்ரீ. அஹோபில மடத்தில், ஷை பிரிவின் வருஷாந்தச் சங்கம் சேர்ந்தது. அப்பொழுது, ஸபையின் அத்யக்ஷராகிய ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியர் அக்ராஸநாதிபதியாக இருந்தார். சென்ற ஸெப்டம்பர்மீ 30- ௳ யுடன் முடிவான வருஷத்தின் அறிக்கையும் அவ்வருஷத்தின் வரவு செலவு கணக்கும் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப் பட்டன. பிறகு ப்ரக்ருத வருஷத்திற்காக பின்வருமாறு மானேஜிங் கமிட்டியார் நியமிக்கப் பட்டார்கள் :

| | |
|---|---|
| ஸபாத்யக்ஷர் :— | ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியர். |
| உபஸபாத்யக்ஷர் :— | ,, வி. ராகவாசாரியர். |
| கார்யதர்ஶி :— | ,, எஸ். வாஸுதேவாசாரியர். |
| இதர மெம்பர்கள்: — | ,, ஸி. துரைஸ்வாமி ஐயங்கார். |
| ,, | ,, ஆர். க்ருஷ்ணமாசாரியர். |
| ,, | ,, ஆர். நரஸிம்ம ஐயங்கார். |
| ,, | ,, ஸி. ஸ்ரீநிவாஸாசாரியர். |
| ,, | ,, டி. வெங்கடராம ஐயங்கார். |
| ,, | ,, டி. ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார். |

இது முடிந்தவுடன், பொது ஸபையின் எக்ஸிக்யுடிவ் போர்டில், 16 - வது விதிப்படி, இந்தப் பிரிவின் ப்ரதிநிதியாக இருக்கும் பொருட்டு ஸ்ரீ. வி. ராகவாசாரியர் நியமிக்கப் பட்டார். பிறகு, திருப்பாவையில் எட்டாவது பாசுரத்தைப்பற்றி ஸ்ரீ. சேட்லூர். நரஸிம்மாசாரியருடைய உபந்யாஸம் நடந்தது. பிறகு ஸங்கம் கலைந்தது.

### ஷை பிரிவின் சென்றவருஷத்திய அறிக்கை.

சென்ற வருஷத்தில் பிரிவின் அங்கத்தினர்கள் தொகை 57. இவர்களில் 10- பெயர்கள் முதல் வகுப்பினர், 46 - பெயர்கள் இரண்டாவது வகுப்பினர்; ஒருவர் அஸ்ஸோஸியேட்.

வருஷம் ஆரம்பம்முதல் வருஷம்முடிவுக்குள் 9-மீடிங்குகள் நடந்தன. இவைகளில், ராஜபக்தியைப்பற்றி ஸ்ரீ. வெங்கடராமஐயங்கார் செய்த உபந்யாஸமும், மடத்து விஷயங்களைப் பற்றியும் ஸபைவிஷயங்களைப் பற்றியும்

நடந்த இரண்டு ஆலோசனை சங்கங்களும் ஆக மூன்று மீட்டிங்குகள்போக, பாக்கி 6-மீடிங்குகள் ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹமாசாரியருடைய திருப்பாவை ஸம்பந்தங்களான உபந்யாஸங் களுக்காகவே சேர்க்கப்பட்டன. இந்த உபந்யாஸங்கள் மிகச்சிறந்தவையாக இருந்தபடியால், ஸங்கங்கள் எல்லாம் பல ஸ்ரீ வைஷ்ணவர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. இவ்விதமாக உபந்யாஸம் செய்த ஸ்வாமிகளுக்கும், இன்னும் மற்றவிதமாக உபகரித்த ஸ்வாமிகளுக்கும் ஸபையாருடைய க்ருதஜ்ஞதை ஆவிஷ்கரிக்கப்படுகிறது.

ஸபையின் ஆய வ்யயங்கள் அதிக த்ருபதிகரங்களாக இல்லை. அங்கத்தினர்களில் அநேகர் இன்னும் தங்களுடைய சந்தாத் தொகையை செலுத்தாமல் இருக்கிறார்கள். கார்யங்களின் ஸித்தி பெரும்பாலும் ப்ரவர்த்தகர்களின் ஊக்கத்தை சார்ந்திருப்பது உண்மையே ஆனாலும், அநேகமாக அர்த்தாதீநமாகவும் இருக்கிறது என்பது எல்லாராலும் அங்கீகரிக்கத் தகுந்தது. ஆகையால் ஶ்ரத்தாளுக்களான இந்த ஸபையின் அங்கத்தினர்கள் எல்லாரும் ஸரியான காலத்தில் தங்கள் சந்தாவைச் செலுத்தி உபகரிப்பார்களென்று நம்புகிறோம்.

---

வருஷாந்த வரவு சேலவு கணக்கு.

1912-ம் வரு

| | | | வரவு. | | | செலவு. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வரவு. | சென்ற வருஷத்திய பாக்கி | ரூ. | 0 | 2 | 11 | | | |
| ,, | முதல் வகுப்பினரின் சந்தா | ,, | 20 | 0 | 0 | | | |
| ,, | இரண்டாவது ௸ | ,, | 13 | 0 | 0 | | | |
| ,, | உபந்யாஸ ஸம்பந்தமான ஸ்பெஷல் சந்தா | ,, | 7 | 4 | 0 | | | |
| செலவு. | ஸபையின் 26-வது விதிப்படி பொதுக் காரியதர்ஶிக்கு அனுப்பியது | ,, | | | | 13 | 3 | 3 |
| ,, | ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹமாசாரியருக்கு உபந்யாஸார்த்தம் ஸமர்ப்பித்துக்கொண்டது | ,, | | | | 13 | 0 | 0 |
| ,, | ஸ்டாம்பு வகையரா | ,, | | | | 3 | 8 | 6 |
| ,, | அச்சுக்கூலி | ,, | | | | 1 | 0 | 0 |
| | ஆக | ரூ. | 40 | 6 | 11 | 30 | 11 | 9 |
| ,, | 30—9—12 ல் இருப்பு | ,, | | | | 9 | 11 | 2 |
| | ஆக | ரூ. | 40 | 6 | 11 | 40 | 6 | 11 |

மயிலாப்பூர்,
17-11-02.

எஸ். வாஸுதேவன்.

கார்யதர்ஶி.

ஸ்ரீ:

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**நமது புதிய கவர்ணர் அவர்கள்.**

நம்முடைய ராஜதானிக்குச் சிலதினங்களுக்குமுன் புதிதாய் விஜயஞ்செய்து, நம்மெல்லோரையும் இனி பாதுகாக்க இந்த நகரத்தில் ராஜப்ரதிநிதியாய் கவர்ணர் என்னும் அதிகாரத்தை வஹித்துவரும் லார்ட் பெண்ட்லண்டு துரையவர்களுக்கும் அவர் பார்யையாகிய லேடி பெண்ட்லண்டு அம்மாளுக்கும் நாம் வணக்கத்துடனும் பக்தியுடனும் இந்த சமயத்தில் நல்வரவு கூறுகிறோம். ப்ரஜைகளின் க்ஷேமம் ராஜாக்களாலென்பதை நன்றாயறிந்த நாம் பல விதங்களில் அநுபவித்துவரும் க்ஷேமங்களுக்காக துரைத்தனத்தாரிடம் க்ருதஜ்ஞதை பாராட்டிவருவது அவசியம். அந்த துரைத்தனத்தாரின் கார்யங்களை இப்போது ப்ரதாநமாய் நியமித்துவருகிற கவர்ணரவர்கள் விசேஷமாய் ப்ரஜைகளின் நன்மையைக் கருதுகிறவரென்றும், அவரால் நமக்கு மிகுந்த அநுகூலங்கள் உண்டாகுமென்றும் அவரை முன்னதிகாரங்களில் அறிந்தவர்கள் ஏகமுகமாய்ப் புகழ்ந்து பேசுகிறார்கள். இங்கு அவர் வந்த ஒரு மாசமாயும் நாம் பார்த்து வருவதில் அவர் ஸௌலப்யமும் ப்ரஜைகளின் விஜ்ஞாபனங்களில் ஆபிமுக்யமும் மற்ற அவஶ்யமான நற்குணங்களும் வ்யக்தமாயிருக்கின்றன. அவர் சரீராரோக்யத்துடனும் துஷ்டியுடனும் நம்முடைய ராஜதானியைப் பரிபாலித்து நமக்கெல்லோர்க்கும் பேரானந்தத்தை அளிக்க வேணுமென்று நாம் பகவானைப் ப்ரார்த்திக்கிறோம்.

**ஸ்ரீ ஶிஷ்ய ஸபையின் அடுத்தமஹாஸங்கம்.**

சென்ற ஸஞ்சிகையில், ஶிஷ்யஸபையின் மூன்றாவது மஹாஸங்கம் செங்கற்பட்டுஜில்லா மதுராந்தகமென்னும் திவ்யதேசத்தில் கூடப்போகிற தென்பதையும் அது விஷயமாய் ஸ்ரீ மதுராந்தகத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளில் பலர் அதிக

உத்ஸாஹத்துடனும் ஆஸ்தையுடனும் முயற்சிகள் செய்துவருகி
றார்களென்றும் அறிவித்தோம். இவர்களுடைய விருப்பத்துக்
கும் முயற்சிக்கும் அநுகுணமாய் அந்த ஸங்கத்தைப் பெரு
மைப் படுத்துவதற்குப் பர்யாப்தமான ஜ்ஞாநத்தையும் ஸம்ப்ர
தாயத்தில் ஶ்ரத்தையையும் உடைய அக்ராஸநாதிபதி ஒருவர்
ஶிஷ்ய ஸபையாரால் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார் என்பதை
யும் அறிவிக்கிறோம். திருவளூரில் எழுந்தருளியிருக்கும் டிஸ்த்
ரிக்ட்டு ஜட்ஜாகவிருந்து இப்போது பென்ஷன் பெற்றுவரும்
டிவான். பஹதூர். ஸ்ரீ மாந். டி. டி. ரங்காசார்யர் ஸ்வாமி இந்த
ஸங்கத்துக்கு அக்ராஸநாதிபதியாக விருக்க இசைந்திருக்கிறார்.
அந்த ஸ்வாமி அக்ராஸநாதிபதித்வத்தை ஏற்றுக்கொண்டது சபை
யாரின் பாக்யமென்றே நாம் எண்ணுகிறோம். அவருடைய ஜ்ஞா
நாதிசயங்களைப்பற்றி விஸ்தரிப்பதற்கு ஸந்நிதி நடக்கப் போகிற
ஸதஸ்ஸே தகுந்த இடமாகையாலும், அங்கு அவருபந்யாஸத்தைக்
கேட்டு ஆநந்திக்கப் போகிற ஸதஸ்யர்களே சரியான அதிகாரி
களாகையாலும் அந்தவிஷயத்தில் நாம் சொல்லவேண்டிய தொன்
றுமில்லை. விசேஷமாய் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வாமிகள் சேர்ந்துவந்து
ஸபையை அலங்கரிப்பார்கள் என்றும், ஸ்ரீ. உபய. ரெங்காசார்
யர் ஸ்வாமியின் ப்ரவர்த்தநத்தையும் நியமநத்தையும் ஸதஸ்யர்
கள் நன்குமதித்து அவர் வசநங்களால் ஆஹ்லாத மடைவார்க
ளென்றும் நாம் நம்புகிறோம். ஸ்ரீ. உபய வேதாந்த ப்ரவர்த்தகர்
களான திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்யர், கபிஸ்த
லம் தேசிகாசார்யர், சேட்லூர் நரஸிம்ஹாசார்யர், புத்தங்கோட்
டகம் ஸ்ரீநிவாஸாசார்யர், ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யர் முத
லான பல வித்வான்கள் ஸபைக்கு எழுந்தருளுவதாயும் ஒவ்வொரு
விஷயத்தில் உபந்யாஸம் செய்வதாயும் அப்யுபகமம் செய்திருக்கி
றார்கள். அடுத்த மார்கழிமீ 11-ம் தேதிக்குச்சரியான டிஸம்பர்மீ
25 - ம் தேதியிலும் அதற்கடுத்த இரண்டு தினங்களிலும் இந்த
மஹாஸங்கம் சேருவதாய் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.
உபந்யாஸங்களின் விபரங்களும் மற்ற ஸங்கத்தின் ஸம்பந்தமான
அறிக்கைகளும் ஸபையின் அதிகாரிகளால் க்ரமமாய் முந்தி ஸ்வா
மிகளுக்கு அறிவிக்கப்படும். இடையூறின்றி ஸதஸ் சேர்ந்து உத்
தேசித்திருக்கிற உபந்யாஸங்களும் மற்ற கார்யங்களும் த்ருப்தி
யாய் நடந்துவர வேண்டுமென்பதற்கு ஸர்வ நியந்தாவான ஸ்ரீலக்ஷ்



மீந்ருஸிம்ஹன் கருணையே ஸாதநமாகையால் அதையே நாம்
நம்பியிருக்கிறோம்.

ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஓர் விஜ்ஞாபநம்.

அடுத்த ஸங்கத்திலும் முன் ஸங்கங்களில்போல் ஸ்ரீ சிஷ்ய
ஸபையார் ஸ்ரீ ஸந்நிதியின் வ்ருத்தியைக்குறித்
துப் பலவிதமான ஆலோசனைகள் செய்து தங்
களுக்குத்தோன்றும் விஷயங்களைத் தீர்மானங்க
ளாகச்சேர்த்து ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில்
விஜ்ஞாபநம் செய்வார்களென்பதற்கு ஸந்தேஹமில்லை. இப்படிச்
செய்யும் விஜ்ஞாபநங்கள் ஸ்ரீ அழகிய சிங்கர்கள் திருவடிகளில்
ஆச்ரயித்த, ஸ்ரீ ஸந்நிதியின் பெருமையில் ஆஸ்தை யுள்ளவர்க
ளான ஸ்ரீ வைஷ்ணவர்களாலேயே செய்யப்படுகிறதென்றும் நிச்
சயமாய்ச் சொல்லலாம். பெரிய கூட்டத்தாராகிய ஸந்நிதி சிஷ்
யர்களின் ஆசார்யரான ஸ்ரீ அழகிய சிங்கர் அந்த விஜ்ஞாபநங்களை
ஹிதபுத்தியால் செய்யப்பட்டனவென்று திருவுள்ளம் பற்றுவதே
உசிதம். ஸபையார் இதுவரையிலும் செய்துவந்த தீர்மாநங்கள்
எல்லாம் ஸ்ரீ ஸந்நிதியின் வைபவத்துக்குக் குறைவு வராமலிருக்க
வேணுமென்கிற எண்ணத்துடன் செய்யப்பட்டவைகளே யொழிய
ஸ்ரீ அழகியசிங்கர் ஆஜ்ஞையை அதிலங்கநம் பண்ணவேணுமென்றா
வது வேறுவிதமாய் ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடிகளில் அபசாரப்
படவேணுமென்றாவது செய்யப்பட்ட தீர்மானங்களல்ல. இந்தத்
தீர்மானங்களில் முக்யமானவை எவை என்று கொஞ்சம் விசாரிப்
போம். அநுஸ்யூதமாய் முன் இரண்டு ஸங்கங்களிலும் வேதா
ந்த தீபிகையில் பலவிடங்களிலும் சலிக்காமல் சொல்லிவந்த விஷ
யம் ஒன்றுண்டு. அதாவது, ஸ்ரீ ஸந்நிதியில் வரவுசெலவு கணக்கு
களையும் மற்ற ஸந்நிதிகார்யங்களையும் நன்றாய்ப் பார்த்துவரத் தகு
ந்த சம்பளத்தில் ஓர் மானேஜர் என்னும் ஸ்ரீ கார்யக்காரர் வேண்டு
மென்று விஜ்ஞாபநம் செய்துவரப்பட்டது. இதில் என்ன அநௌ
சித்யம்? வருஷத்தில் லட்சரூபாய்வரையில் வரும்படிவரக் கூடிய
தாயும் பல தேவஸ்தான விசாரணைகளை உள்ளடக்கினதாயு மிருக்
கிற ஸ்ரீ ஸந்நிதியில் 100 ரூபாய் வரையில் மாஸச் சம்பளம் கொடு
த்துத் தகுந்த ஒரு உத்யோகஸ்தர் நியமிக்கப்பட்டால், அவருடைய
ஸமர்த்தமான விசாரணையால் அவர் சம்பளம் அளவுக்கு லாபம்
சேர்க்கப்படுவதுடன், மேற்கொண்டு விசேஷ க்ஷேமத்துக்கும் இட

முண்டென்றே பல ஸந்நிதி சிஷ்யர்களின் நம்பிக்கை. ஒருகால்
மேற்சொன்ன சம்பளம் இப்போது கொடுப்பது ச்ரமப்படுமானா
லும் 50 ரூபா யாவது கொடுத்துத்தகுந்த ஒருவர் நியமிக்கப்பட
வேண்டியது மிகவும் அவச்யமென்றே சொல்லவேண்டும். இப்
போது ஸந்நிதியில் வேலைபார்த்துவரும் ஸ்ரீ. குப்புஸ்வாமி ஐயங்
கார் மடத்தைச்சேர்ந்த க்ராம கார்யங்கள், கோர்ட்டுவேலைகள்,
கட்டட ரிபேர்கள், புதுக்கட்டட நிர்மாணங்கள், தேவஸ்தான
கார்யங்கள், ஸ்ரீ அழகியசிங்கருடன்கூட இருந்து ஸ்ரீ கார்யத்தை
நிர்வஹித்து அந்தரங்க ஸேவகராயிருத்தல் ஆகிய பலவேலை
களையும் ஒருவராகவே பார்த்துவருகிறார் என்று தெரிகிறது. இது
இவ்வளவு பெரிய ஆஸ்தாநத்துக்கு உசிதமா? வ்யயத்தை ஸங்
கோசம் செய்வதாலேயே ஏதோ ஸ்ரீ ஸந்நிதிகார்யங்கள் நடந்து
வருகின்றனவென்பதிருக்கட்டும். க்ரமமாய் வரக்கூடியதும் கொஞ்
சம் முயற்சியால் கிடைக்கக்கூடியதுமான வரும்படிகள் சரிவர
கிடைக்காமற் போனால் ஸ்ரீ ஸந்நிதியின் செலவுகளெல்லாம் முன்
காலத்தில் சேகரிக்கப்பட்ட த்ரவ்யத்தைக்கொண்டே நடந்தேறி
வரவேணும். மேன்மேல் வரும்படிகள் வராமலிருந்தால் செலவுக
ளுக்கும் தட்டு உண்டாகிவரும். ஆனால் ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்கள்
வரவுசெலவு விஷயத்தில் விசாரம் செய்வானேன்? ஸந்நிதி ஆரா
தநங்களும் ஆசர்யகத்துக்கு எடுத்ததான ஸமாச்ரயணங்களும்
நடந்துவரவில்லையாவென்று கேட்கலாம். இது விஷயத்தில் ஸ்ரீ பிள்
ளைபாக்கம் அழகிய சிங்கருடையவும் திருக்குடந்தை அழகிய
சிங்கருடையவும் அநுஷ்டாநங்களே உசிதமான ப்ரத்யுத்தரம்.
இந்த இரண்டு அழகிய சிங்கர்கள் காலங்களிலும் தினந்தோறும்
அழகிய சிங்கர் முன்னிலையில் கணக்குகள் படிக்கப்பட்டுவந்தது
எல்லோர்க்கும் ப்ரஸித்தம். இந்த க்ரமம் அநுசிதமாயிருந்தா
லும் அழகிய சிங்கர் ஆஸ்தாநத்திற்கு அநர்ஹமாயிருந்தாலும்
அவர்கள் நடத்தி இருக்கமாட்டார்கள். அந்த ஸம்ப்ரதாயம் இப்
போதும் நின்றுவிடாமல் நடந்துவந்தால் அது சிஷ்யர்களுக்கு த்ரு
ப்தியை உண்டாக்கும். தெய்வாதீனமாய் ஸ்ரீ அழகியசிங்கர் திருமே
னியின் அஶக்தியால் ஏற்படும் ஆராதனை ஸங்கோச விஷயங்க
ளில் சிஷ்யர்களுக்கு வருத்தமில்லை. ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ள
மிருந்தால் நிவார்யமான அம்சங்களில், ஸபையார்கள் வருஷாந்த
ஸங்க தீர்மானங்களால் செய்துவரும் விஜ்ஞாபநங்களை ஸ்ரீ அழகிய



சிங்கர் அநாதரிக்காமல் தகுந்த ஏற்பாடுகளை உசிதப்படி செய்ய
நியமித்தால் அது எல்லாசிஷ்யர்களுக்கும் ஸந்தோஷத்தை உண்டு
பண்ணும். அப்படிப்பட்ட விஷயங்கள் எவையென்றால், முதலா
வது, இந்த ஸபையின் உத்தேசங்களை அநுமோதித்து ஸ்ரீ அழகிய
சிங்கர் அதற்குப் போஷகராய் எழுந்தருளி இருந்து அநுக்ரஹிக்க
வேணும் என்பது. இரண்டாவது, ஸ்ரீ ஸந்நிதியிலும், பெருமாள்
கோவில், திருநாராயணபுரம் திருக்குடந்தை முதலான ப்ரஸித்த
வைஷ்ணவஸ்தலங்களில் ஏற்பட்டிருக்கும் ஸந்நிதிக் கட்டடங்களி
லும் தகுந்த வித்வான்களை ஏற்படுத்தி ஸம்பரதாயப்ரவசனம் செய்
வித்துவந்தால் மிகவும் அழகாயிருக்கும் என்பது. இந்த விஷயங்க
ளில் ஸ்ரீ அழகியசிங்கருக்குத் திருவுள்ள முண்டாகாம லிருப்பது
சிஷ்யர்களின் தெளர்ப்பாக்யந்தான். வெண்ணாற்றங்கரையில் நடந்த
ஸதஸ்ஸுக்கு ஸ்ரீ அழகிய சிங்கர் நியமநத்தின்பேரில் வந்த சிலர்,
அவ்விடத்தில் நடந்த விஷயங்களை நேரில் விஜ்ஞாபநம் செய்திருப்
பார்கள். அவைகளில் ஸ்ரீ அழகியசிங்கருக்காவது மடத்துக்காவது
ப்ரதிகூலங்களாய் ஒன்றுமில்லை. பிறகு நீடாமங்கலம் ஸதஸ்ஸில்
நடந்தவிஷயங்களிலும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளில் அபசா
ராவஹமான விஷயங்கள் ஒன்றுமில்லை. இது போலவே அடுத்த
மதுராந்தக ஸங்கத்திலும் சேரப்போகிற ஸபையார் முன்போல்
ஸர்வஸம்மதமான விஷயங்களில் விஜ்ஞாபநங்களைச் செய்வார்
களே ஒழிய அநுசிதமான விஜ்ஞாபநங்கள் செய்யமாட்டார்கள்.
இதை ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளத்தில்வைத்து அந்த ஸதஸ்
ஸுக்கு தன் ஸ்தாநத்துக்கும் கௌரவத்துக்கும் அர்ஹமான
ஒரு வித்வானை தன் ப்ரதிநிதியாய் அனுப்பத் திருவுள்ளப்பட்டால்,
அந்த ஸ்வாமியை ஸ்ரீ அழகிய சிங்கராகவே எண்ணி சிஷ்ய
ஸபையார் ஆநந்த மடைவார்கள். அப்படிச்செய்தால் ஸபையா
ருடைய விசாரங்களும் கார்யங்களும் விஜ்ஞாபநங்களும் எப்ப
டிப் பட்டவைகளென்றும் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு நன்றாய்த் தெரி
யக்கூடும்.

ஸந்நிதி ஶிஷ்யர்கள்.

ஸ்ரீ ஶிஷ்ய ஸபைக்குப் பிரிவுகள் ஏற்பட்டிருக்கும் இடங்க
ளிலும் பிரிவுகள் ஏற்படாத ஸந்நிதி ஶிஷ்யர்க
ளடங்கிய க்ராமங்களிலும் மற்ற இடங்களிலும்
கார்யதர்சிகளுடையவும் மற்றைய அங்கத்தினர்
களுடையவும் முயற்சியால் அடுத்த மஹாஸங்கங்க விஷயமாய் பூர்

வாங்கமான ஸங்கங்கள் சேர்க்கப்பட்டு வருமென்று நம்புகிறோம். மஹா ஸங்கத்துக்கு எழுந்தருளக்கூடிய ஸ்வாமிகளை நிர்ணயம் செய்யவேண்டியது அவசியமானதால், அதுவிஷயத்தில் இந்த ஸபையாரின் முயற்சியை ஸபலமாக்க எல்லா ஸந்நிதி ஶிஷ்யர்களும் அநுகூலிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். எத்தனை பேர்களை ப்ரதி நிதிகளாய் நியமித்து மதுராந்தகத்துக்கு அனுப்பினாலும் அவர்கள் தங்கி ஸதஸ்ஸை அநுக்ரஹித்துப் போகும்வரையில் அவர்களுக்குத் தகுந்த ஏற்பாடுகள் நடத்தப்படுமென்பதில் ஸந்தேகமில்லை. ஸந்நிதி ஶிஷ்யர்கள் விசேஷமாய் இந்த ஸபையாரின் முயற்சியை அங்கீகரிக்கிறார்களென்கிற நம்பிக்கைதான் இவர்களுடைய ப்ரயத்நங்களுக்கு முக்யகாரணம். அந்த அங்கீகாரம் ஶிஷ்யர்கள் நேரில்வந்து ஸதஸ்ஸில் தங்கள் தங்கள் அபிப்ராயத்தை தெரிவிப்பதனாலேயே வெளியாகவேணும். ஏதோ ஸ்ரீ அழகிய சிங்கருக்கு விருத்தமான வ்யாபாரங்களைச் சிஷ்ய ஸபையார் நடத்துகிறார்கள் என்கிற ப்ரமமெல்லாம் இப்போது ப்ராயேண தெளிந்திருக்குமென்று நம்புகிறோம். ஆகையால் எல்லா ஸந்நிதி சிஷ்யர்களும் நேரிலாவது, தாங்கள் கூட்டம் சேர்ந்து ப்ரதிநிதிகளை அனுப்பியாவது ஸ்ரீ மதுராந்தகத்தில் நடக்கப்போகிற மூன்றாவது மஹாஸங்கத்துக்குவந்து அங்கே நடக்கும் கார்யங்களில் அந்வயிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். அப்படியே ஸந்நிதி சிஷ்யர்களல்லாத ஸ்ரீ வைஷ்ணவர்களும், ஸ்ரீ பகவான் ராமாநுஜன், ஸ்ரீ வேதாந்த தேசிகன் முதலான ஆசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகளை அவலம்பித்த உபந்யாஸங்களே நடக்கப்போகிறபடியால் எல்லோரும் அவைகளைக் கேட்டும் வேறுவிதமாய் அவைகளில் அந்வயித்தும் ஆநந்தித்துப்போக இடமுண்டு. ஆகையால் அடுத்த மஹாஸங்கத்துக்கு எல்லோரும் எழுந்தருளவேண்டுமென்று இதனால் ப்ரார்த்திக்கப் படுகிறது.

இன்னும் ஒரு விஷயத்தைச் சொல்லி இந்தக் குறிப்புகளை முடிக்கிறோம். தற்காலம் ஸ்ரீ அழகியசிங்கர் த்ருடகாத்ரராய் எழுந்தருளி இருப்பதால், பிறகு அந்த ஸ்தாநத்தில் யார் ஏற்படவேண்டுமென்னும் விஷயத்தில் சிஷ்ய ஸபையாருக்கு ஒரு வ்யக்தியைப்பற்றியும் யாதொரு ஆக்ரஹமு மில்லையென்பதை எல்லா ஸந்நிதி சிஷ்யர்களும் அறியவேண்டும். ஸ்தாநத்தின் கௌரவத்துக்கு அநுரூபமான குணங்கள் இரண்டொரு ஸ்வாமிகளிடம் தான்



பூர்ணமாய் இருக்கின்றனவென்பது ஸ்ரீ அழகிய சிங்கருக்கும் ஸந்நிதி சிஷ்யர்களுக்கும் மனதில் நன்றாய்த் தெரியும். அது விஷயமான சர்ச்சைகள் அநாவசியமான பேதத்தை உண்டு பண்ணுமானதினால் ஏகமுகமாய் எல்லாரும் அபிப்ராயப்பட்டாலொழிய ஒரு ஸ்வாமியையும் உத்தேசித்து இப்போது அபிப்ராயம் கொடுப்பது சரியல்ல. இந்த எண்ணத்தினால் தான் நீடாமங்கலம் ஸங்கத்தில் இது விஷயத்தில் ஒரு தீர்மானமும் புதிதாய் ஏற்படவில்லை. ஏற்கெனவே வெண்ணாற்றங்கரையில் ஏற்பட்ட தீர்மானத்தைவிட வேறு விசேஷித்துச் செய்யக்கூடிய நிர்ணயத்துக்கு இப்போதும் ஸமயம் ஏற்படவில்லை யென்று தோன்றுகிறது. இந்த விஷயத்தில் மதுராந்தகத்தில் சேரும் ஸந்நிதி ஶிஷ்யர்கள் விவாதமில்லாமல் இருப்பது உசிதம்.

ஸ்ரீ அஹோபிலம்.

இந்த ஸஞ்சிகையில் ஸ்ரீ அஹோபில யாத்ரை விஷயமாய் ஓர் பக்தர் நமக்கு அனுப்பியிருக்கும் கடிதம் அச்சிடப்பட்டிருக்கிறது. நம்முடைய ஸம்ப்ரதாயத்துக்கு மூலஸ்தாநமான அஹோபிலத்தில் கீழ் ஸந்நிதியிலும் மேல் ஸந்நிதியிலும் பழுதுபார்க்கவும் புதுப் பிக்கவும் வேண்டியதான பாகங்கள் அநேகம் இருக்கின்றனவென் பது இந்த ஸஞ்சிகையில் அச்சிடப்பட்டிருக்கும் படங்களால் வ்யக்தமாய்த் தெரியும். ஸ்ரீ அஹோபிலத்துக்கு ஸமீபத்திலும் இதர ஸ்தலங்களிலும் இருக்கும் உபபந்நர்களான ஸந்நிதி சிஷ்யர் கள் இந்த விஷயத்தில் ப்ரத்தை வைத்தால் க்ரமமாய் வேலைகள் ஸ்ரீ அழகிய சிங்கரின் நியமநத்தின்பேரில் நடத்திவிடலாம். இது போன்ற பலவிடங்களில் கட்டட நிர்மாணங்கள் அவசியமாயிருந் தாலும் மற்ற வேலைகளைப்பார்க்கிலும் இது அத்யந்தம் ப்ரதான மென்பது நாம் சொல்லவேண்டியது இல்லை. இந்த விஷயத்தில் ஶிஷ்யஸபையார் அடுத்த ஸங்கத்தில் தகுந்தவிசாரம் செய்து ஸ்ரீ அழகிய சிங்கரிடத்தில் விஜ்ஞாபநம் செய்யவோ அல்லது வேறு ஏற்பாடு செய்யவோ தகுந்தபடி உத்யோகிப்பார்களென்று நம்பு கிறோம்.

## விளம்பரம்.

# பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தியில்லாதவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

### வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் சிவப்பு சன்னக்கம்பி பட்டைக்கரை ருத்திராக்ஷக்கரை போட்டவை கீழேகண்ட விலைகளுக்குக் கிடைக்கும்.

| நீளம் | முழம் | அகலம் | | விலை ரூபா. | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | ,, | 2½ | ,, | 6 முதல் | 8 | வரை | |
| 5 | ,, | 3 | ,, | 7 | ,, 9 | ,, | |
| 6 | ,, | 2½ | ,, | 8 | ,, 9 | ,, | |
| 6 | ,, | 3 | ,, | 9 | ,, 12 | ,, | |
| 7 | ,, | 3 | ,, | 10 | ,, 13 | ,, | |
| 8 | ,, | 3 | ,, | 12 | ,, 15 | ,, | |
| 9 | ,, | 3 | ,, | 14 | ,, 16 | ,, | |
| 10-12 | ,, | 3 | ,, | 15 | ,, 20 | ,, | |
| 15-16-18 | ,, | 2½-3, சேலைகள் | | | | | |

நயம் விலை ரூபா. 20 முதல் 30 வரை.

இந்த வேஷ்டிகள், ஜரிகைக்கரை போட்டும் கிடைக்கும். உடல் சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மேகவர்ணம், காஷாயநிறம் இன்னமும் வேண்டிய நிறங்களிலும் கிடைக்கும்.

### பீதாம்பரப் பட்டுச்சேலைகள்.

16-முழம் நீளம் 2½ - அகலம் விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள் உடல் சாதா. சகல நிறங்களிலும் சேலைகள் கிடைக்கும். நயம் சேலை 1-க்கு ரூ. 30-முதல் 200-வரை. மட்டம் சேலைகள் ரூ. 20 முதல் 30-வரை. ஷை சேலைகள் உடலிலும் ஜரிகைப்பூபுட்டா போட்டது. நயம் ரூ. 35-முதல் 300-வரை. மட்டம் ரூ. 25-முதல் 30 - வரை.

### ரவிக்கைகள்.

ரவிக்கைகள் விளிம்பு முந்தி ஜரிகைவேலைசெய்ததும், உடலிலும் ஜரிகை பூக்கள்போட்டதும். ரவிக்கை 1-க்கு ரூ. 2-முதல் ரூ. 15-வரை கிடைக்கும்.

### பட்டுதுப்பட்டாக்கள்.

6-முதல் நீளம், 2½-முதல் அகலம்; விளிம்பு முந்தி ஜரிகை வேலைகளும் உடலில் ஜரிகை பூக்கள்போட்டது. மட்டம் ரூ. 7 - முதல் 15 - வரை. நயம் 15-முதல் 50 - வரை.

### காஷ்மீர் சால்வைகள்.

கம்பளி (Woollen) காஷ்மீர் சால்வைகள் 6-முழம் நீளம், 2½-அகலம். விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள், மூலையில் மாங்காய்போட்டது. மட்டம் ரூ. 9-முதல் 15-வரை. நயம் 15-முதல் 100-வரை.

சகல பட்டு பீதாம்பர காட்லாகு இனமாக அனுப்பப்படும்.

விலாசம் :—மானேஜர்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.


MADRAS

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] பரீதாபி௵ மார்கழி௴ [ஸஞ்சிகை 11.

## அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம். *

இந்த மஹா ஸங்கத்தை அலங்கரிக்க உகந்தருளிய அசேஷ
ஸ்வாமிகள் ஸந்நிதியில் ப்ரணம பூர்வகமாய் விஜ்ஞாபநம் செய்து
கொள்ளுகிறேன். இந்த ஸங்கத்தின் அக்ராஸநத்தை தேவரீர்க
ளின் நியமநத்தினால் வஹிக்கிறேன். அதற்கு அர்ஹதை அடியே
னிடத்தில் கொஞ்சமேனு மில்லை. அடியேனிடம் வெளிப்படும்
குற்றங்களைப் பொறுத்து அவைகளையே குணங்களாக அங்கீகரிக்க
வேண்டுமெனப் ப்ரார்த்திக்கிறேன்.

### ஸ்ரீ ஸந்நிதியின் சீர்திருத்தங்கள்.

ஸ்ரீ ஸந்நிதியினுடைய சீர்திருத்தங்களைப் பற்றியும், அதன்
மூலமாய் ஸம்ப்ரதாயத்துக் குண்டாகக்கூடிய அபிவ்ருத்தியை
க்குறித்தும் ஸபாத்யக்ஷரான ஸ்ரீ மாந். ராஜகோபாலாசாரியராலும்
மஹாமஹோபாத்யாயர். பெருகவாழ்ந்தான். ஸ்ரீ. உ.ப. ரங்காசார்
யர் ஸ்வாமியினாலும் முன் மஹாஸங்கங்களில் செய்யபபட்ட உபந்
யாஸங்களை எல்லா ஸ்வாமிகளும் நேரில் கேட்டாவது வேதாந்த

* இந்த உபந்யாஸம் ஸ்ரீ அஹோபில மடத்துச்சிஷ்யஸபையின் மூன்று
வது மதுராந்தக மஹாஸங்கத்தில் 25-12-12ல் டிவான் பஹதூர்.
ஸ்ரீமான். டி. டி. ரங்காசார்யர் ஸ்வாமியால் செய்யப்பட்டது.

தீபிகையில் வாசித்தாவது நன்றாய் அறிந்திருப்பார்களென்று நம்புகிறேன்.

ஸ்ரீ ஸந்நிதியின் ஆஸ்தாநத்திற் கெழுந்தருளும் ஸ்வாமிகள் ஜ்ஞாதாக்களாயும், அநுஷ்டாதாக்களாயும், பகவத்பக்தர்களாயும், ஸம்ப்ரதாயத்திலும் அதைச் சேர்ந்தவரிடத்திலும் விச்வாஸமுள்ளவர்களாயும் இருக்கவேண்டுமென்றும், ஸ்வயம் ஜ்ஞாதாக்களினால் சூழப்பட்டு எப்போதும் காலக்ஷேப பரர்களாயிருக்கவேண்டுமென்றும், ஸ்ரீ நரஸிம்ஹாராதநத்தையும் ததீயாராதநத்தையும் குறைவின்றி நடத்திவரவேண்டுமென்றும், அந்த ஸ்வாமிகள் விசாரணைக்குட்பட்ட பகவத் ஸந்நிதிகளின் ஸம்ரக்ஷணவிஷயமாய் ப்ராயேண தர்மகர்த்தரெனப் பெயர்கொண்டவருக் குண்டான அபக்யாதி ஸ்வாமிகளைத் தொடராமலிருக்கவேண்டு மென்றும், பகவத்ஸ்வாபஹாரத்தில் பயந்தவர்களாயும், பகவத்பக்தியுள்ள வர்களாயும், நிர்வாஹ ஸமர்த்தர்களாயு மிருக்கப்பட்ட கார்யஸ்தர்களைக் கொண்டு மேற்சொல்லிய திவ்யதேசங்களுடைய விசாரணையையும் ஸ்ரீ ஸந்திக்குரிய க்ராமாதி விசாரணையையும் நடத்திவரவேண்டுமென்றும், ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஸ்ரீ ஸந்நிதியைக் குறித்தும் ஸந்நிதிக்கு ஸம்பந்தப்பட்ட திவ்ய தேசங்களைக் குறித்தும் செய்யும் ஹிதமான விஜ்ஞாபநங்களைக் கேட்டு அவை அங்கீகாரார்ஹமாயிருக்கிற வரையில் அவற்றின்படி காரியங்களை நடத்தவேண்டுமென்றும், அவற்றை யோசிக்காமல் திரஸ்கரிப்பதும் ஹிதவசனம் சொல்வோரை த்வேஷிகள் என்று நிராகரிப்பதும் ஆஸ்தாந நிர்வாஹத்துக்குப் பொருந்தாதென்றும், ஸ்வாமிகள் நிர்யாண காலத்துக்கு முன்னதாகவே ஜ்ஞாதாக்களாகவும் லௌகிகத்தில் ஏற்றமுள்ளவர்களாகவு மிருக்கிற ஸ்ரீஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்களுடன் யோசித்து ஸம்ப்ரதாயஸ்தர்களுக்குள் ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யாத்யாத்மகுண பூர்த்தியில் ச்ரேஷ்டரான ஒரு ஸ்வாமியை ஆஸ்தாந நிர்வாஹத்துக்கு நியமிக்கவேண்டு மென்றும், இந்த ரூபமான யோசனைகள் இங்கு எழுந்தருளியிருக்கும் ஸகலஸ்வாமிகளுக்கும் உண்டாயிருக்கு மென்பதில் அடியேன் சந்தேகப் படவேயில்லை. இந்த எண்ணங்கள் பலதசைக்குவரும் வரையில் நமதுஸம்ப்ர



MADRAS.

தாய ஸபையார் அதற்குத்தக்க ப்ரயத்நங்களையெல்லாம் செய்வார்களென்று நம்புகிறேன்.

ஸ்ரீ அழகிய சிங்கரிடம் தகுந்தபடி விஷயங்களை விஜ்ஞாபநம் பண்ணி. ஸ்ரீ ஸந்நிதி கார்யங்களைச் சீர்திருத்தலாமென்னும் ப்ரத்யயம் ஸபையாருக்குள்ளவரையில் அவர்கள் ததநுகுணமான உத்யோகஸஹிதரா யிருக்க ப்ராப்தம். ஆதலா லடியேன் அந்த விஷயமாய் விசேஷித்துச் சொல்லுவதற் கிடமில்லை. இடமிருந்த போதிலும் ஸ்ரீமாந் ராஜகோபாலா சார்யரால் முன் ஸங்கங்களில் செய்யப்பட்ட உபந்யாஸங்களால் அடியேனால் சொல்லக்கூடிய அம்சங்கள் யாதொன்றும் மிகுதி நிற்கவில்லை.

ஸ்ரீ அழகியசிங்கருக்கு மேலே விசாரித்த அம்சங்களில் ஆபிமுக்யம் குறைவாயிருந்த போதிலும், ஸம்ப்ரதாய ஸபையார் ஸம்ப்ரதாய வ்ருத்திக்காகவும், ரக்ஷணத்திற்காகவும், செய்யக் கூடிய விஷயங்களையே முக்யமாகவெண்ணி தேவரீர்கள் முன்னிலையில் கொஞ்சம் விஜ்ஞாபநம் செய்யலாமென்று நினைக்கிறேன். இந்த அம்சங்களிலும் ஸபாத்யக்ஷர் செய்திருக்கிற உபந்யாஸங்களுக்குமேல் விவரிக்கக் கூடியது அடியேனுக்குத் தோற்றவில்லை.

## ஸம்ப்ரதாய வ்ருத்தி.

ஆனாலும் அவற்றில் புநருக்தி தோஷமாகாதென்று அடியேனுடைய அத்யவஸாயம். வ்யக்திவிபாகத்தால் மாத்திரம் வைதிகர்களென்றும் லௌகிகர்களென்றும் சொல்லக் கூடிய பஹு ஸ்வாமிகள் இங்கு கூடி ஸேவைஸாதிப்பது நம் ஸம்ப்ரதாயத்துக்கு மேன்மேலும் யோகக்ஷேம ஸூசக மாயிருக்கிறது. கால வைகுண்யத்தால் நமது வைதிக ஸம்ப்ரதாயங்களில் ஜநங்களுக்கு விச்வாஸ மாந்த்யம் ஜநித்திருக்கிறது. பூர்வத்தில் சார்வாகரெனப் பெயர்கொண்டு ஸகலாஸ்திகர்களுக்கும் ப்ரதிபந்திகளாய் வெகு புத்திமான்க ளிருந்தார்களென்பது ப்ரஸித்தம். அவர்கள் கேவலம் யுக்திகளைக் கொண்டே நாஸ்திகவாதம் செய்தவர்கள். ஆதுநிக நாஸ்திகர்கள் அவர்களிலும் ப்ரபலர்கள். இவர்கள் நாஸ்திகரெனப் பெயர்கொள்ளாமல், ப்ரபஞ்சத்தைக்காட்டிலும் வேறான கிஞ்சித் உண்டென்று அநுமிக்கக் கூடியதாயினும் அதன் ஸ்வரூபமாவது ப்ரகாரமாவது மனுஷ்யர்களுடைய ஜ்ஞாநத்தினால் வேத்யமன்றென வாதிக்கின்றவர்கள். இந்த அம்சமானது ஸகலாஸ்திகர்களினாலும் ஒருவிதமாய் ஒப்புக்கொள்ளக் கூடியதே.

## பஶ்சிமவித்வான்களின் நாஸ்திகவாதம்.

பஶ்சிம வித்வான்கள் ப்ராக்ருத பதார்த்தங்களைக் குறையறப் பரிசோதித்து ஸர்வபூத ஸங்காதங்களுக்கும் மூலபூதமாயும் அத்யல்பமாயும் அசாக்ஷுஷமாயு மிருக்கும் பூதாணுக்களை விபாகம் செய்யும்போது சில ப்ராக்ருத தத்வங்களைத்தவிர வேறொன்றும் தெரியவில்லையென்றும், அந்த தத்வங்களின் சேர்க்கையினாலேற்பட்ட பூதாணுக்களில் ஒருவித சலனம் மாத்திரம் ப்ரத்யக்ஷீகரிக்கக் கூடியதென்றும், அந்த பூதாணுக்களின் சேர்க்கையினாலேயே பிபீலிகை முதற்கொண்டு பர்வதாக்ருதியுடன்கூடிய ம்ருகங்களுள்பட மனுஷ்யர்கள் பர்யந்தமாக ஸர்வ ப்ராணிவர்க்கங்களுமுண்டாகின்றனவென்றும், இந்தப் பரம்பரையில் மனுஷ்யர்களுக்கு ஸந்நிஹித பித்ருக்கள் ஒருவித புச்சஹீநமான வாநர ஸமூஹங்களென்றும் ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள்.

அணுபூதங்களில் சலனரூபமாய்த் தெரிகிறது தத்ஸங்காதங்களில் சைதந்யரூபமா யாவிர்பவிக்கின்றதென்று சொல்லி ப்ராக்ருத தத்வங்களையும் தத்ஸங்காதத்தையும் காட்டிலும் தனியாய் ஒரு சேதநன் சரீரியாயிருக்கிறானென்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. அப்படிப்பட்ட சேதநன் ப்ரத்யக்ஷத்தினாலு மநுமாநத்தினாலும் ஸித்திக்கமாட்டானென்று அவர்கள் உதாஹரிக்கிறார்கள். இப்படிப்பட்ட வித்யாபரிசயம் நமக்குள் அநேகம்பேருக்கு ஸம்பவித்திருக்கிறது. இவர்களுக்குள் பலர் ததநுகுணவாதங்களைக் கைக்கொண்டு அப்படிப்பட்ட மதாநுப்ரவேசிகளாகவுமிருக்கிறார்கள். ஏனையோர் இவ்வித யோசனைகளில் தேறாமல் பர்யாய நாஸ்திகர்களா யிருக்கின்றனர். இந்த விஷயத்தில் ஆஶ்சர்யத்துக் கிடமில்லை. “ஸம்ஸர்கஜா தோஷகுணா பவந்தி” என்பது ப்ராசீநாநுபவம். இந்த நிலைமையில் பஶ்சிம வித்யா பாரங்கதர்களா யிருக்கும் சில ஸ்வாமிகளாவது ஆஸ்திகாக்ரேஸரர்களாயிருந்துகொண்டு இந்த ஸத்ஸம்ப்ரதாய மஹாஸங்கத்தில் எழுந்தருளியிருப்பது நமது பாக்யவிசேஷமே.

## பரிணாமவாதம் ச்ருதிஸித்தம்.

பூத ஸ்ருஷ்டியானது பகவத் ஸங்கல்பத்தினால் ஒரே காலத்தில் ஸமமாக உண்டாகிறதென்பது ச்ருதி ஸித்தமன்று. பஶ்சிம வித்வான்கள் யோசனையின்படியே பரிணாமக்கிரமத்தினால் ஸித்திக்கின்றதாகவே ச்ருதி வெளியிடுகின்றது. இந்த க்ரமத்தை ஆதுநிகர்கள் சொல்லுகிறபடி விவரமாய்ச்சொல்ல ச்ருதிக்கு அவகாசமில்லை. பதார்த்த சாஸ்த்ர நிர்வாஹத்தை ச்ருதி தன் க்ருத்யமாய் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏகவிஜ்ஞாநத்தினால் ஸர்வவிஜ்ஞாந ப்ரதிபத்தியை நிர்வஹிக்கும் வாக்யங்கள் “ஆகாஶாத் வாயு: வாயோரக்நி:” எனப் பரிணாமவாதத்தை ஸங்க்ரஹமாக ஸூசித்துவிட்டன. பஶ்சிமவித்வான்களும் ப்ராக்ருதவிகாரங்களில் பூர்வாவஸ்தைகளை ஆகாசபர்யந்தம் அநுமித்திருக்கிறார்கள். ஆகாயம் தொடங்கிப் பரிணாமக் கிரமத்தை ச்ருதிக்கு விரோதமில்லாமல் அவர்கள் ஸாதிக்கிறார்களென்றே ஒப்புக்கொள்ளக்கூடும். மூல ப்ருக்ருதியுடன் அவிநாபூதமான சக்தியொன்றை அவர்கள் அநுமித்து அது ப்ராக்ருதாணுக்களின் பரஸ்பர ஸம்யோக வியோகங்களுக்கு ஹேதுபூதங்களான சக்த்யதிசயங்களா யிருப்பதாக யோசிக்கிறார்கள். ப்ராக்ருத ஸங்காதங்களைக்காட்டிலும் தனியான சேதநனொருவன் அந்தரிந்திரியத்துக்கும் பாஹ்யேந்திரியங்களுக்கும் அகோசரனா யிருப்பதால், அவனுடையவும் அதே காரணங்களினால் ஈச்வரனுடையவும் அஸ்தித்வபுத்தி அஸமீசீநமென்பது அவர்களுடைய மதமாகும்.



## நாஸ்திகவாத நிரஸநம்.

சாஸ்த்ர ப்ரமாணத்தினாலும் ஸம்யக்தர்க்காநுக்ரஹீத யுக்திகளினாலும் அஸ்மத் தேசிகாதிகள் நாஸ்திகவாதத்தை நிராகரித்திருக்கின்றனர். நாஸ்திகவாதம் இருக்கிறபடியாவது:— “ப்ரத்யக்ஷாதி வேதாவிஷயம் வஸ்து ப்ரஹ்ம ஜகத்பதிதி விஶேஷதோ ந ஸம்ஸ்து | ப்ரத்யக்ஷ த்ருஷ்டவஸ்து க்ரஹணகாரணாபாவாச்ச தத்வம் ஸத்பாவம் நாஸ்த்யேவ ப்ரஹ்ம” என்று. இதைக்குறித்துத் தான் ச்ருதியும் - “நைவ வாசா ந மநஸா ப்ராப்தும் ஶக்யோ ந சக்ஷுஷா | அஸ்தீதி ப்ருவதோऽந்யத்ர கதம் தது³பலப்⁴யதே” என்று சொல்லிற்று.

அஸ்தி என்று சொல்லிக்காட்டுவது சாஸ்த்ரமே. ஜீவபரமாத்மாக்களுக்கு புத்யாத்யகோசரமாயிருத்தல் ஸமானம். ஆனபடியால் உபயாத்ம விஷயமான ப்ரமாணங்களை இங்கு எடுத்துக் காட்டலாம். ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும்—

“ப்ரத்யஸ்தமிதபேதம் யத் ஸத்தாமாத்ரமகோசரம் |
வசஸாமாத்மஸம்வேத்யம் தஜ்ஜ்ஞாநம் ப்ரஹ்மஸம்ஜ்ஞிதம் ||” என்றும்

"யாதீதகோசரா வாசாம் மநஸாம் சாவிஶேஷணா |
ஜ்ஞாநிஜ்ஞாநபரிச்சேத்யா ||"

என்றும் இருக்கிற ஜீவாத்ம ஸம்பந்தமான ப்ரமாணங்கள் ஜீவன் புத்யாத்யகோசரனென்பதை விளக்குகின்றன. "அயமாத்மா(அ)நந்தரோ(அ)பாஹ்ய: க்ருத்ஸ்ந: ப்ரஜ்ஞாநகந ஏவைதேப்யோ பூதேப்ய: ஸமுத்தாய தாந்யேவாநுவிநஶ்யதி | ந ப்ரேத்ய ஸம்ஜ்ஞாஸ்தி" என்று யாஜ்ஞயவல்க்யரிடம் அவர் பார்யை மைத்ரேயி கேட்டு, பின்பு தன்னை அவர் மோஹத்தில் கொண்டுபோய் விட்டதாய் சொன்னாள்.

அதற்கு அவர் "ந வா அரே அஹம் மோஹம் ப்ரவீமி அவிநாஶீ வா அரே அயமாத்மா(அ)நுச்சித்திதர்மா" என்றும், "யேநேதம் ஸர்வம் விஜாநாதி தம் கேந விஜாநீயாத்" என்றும், விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்" என்றும் உபதேசித்தது ஸர்வ நாஸ்திக வாதத்துக்கும் ஸமாதாநமாகக்கூடும். விஜ்ஞாதாவின் ஸ்வரூபம் கொஞ்சமேனும் தெரியாமலிருக்கையில், அவன் ப்ரக்ருதியைக்காட்டிலும் வேறல்லன் என்னவும் ஒண்ணாது. அவனால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட விஷயங்களுக்கு அஸ்தித்வத்தை ஒப்புக்கொண்டு ஒவ்வொரு ப்ரதீதியுடன் ஸ்வதஸ்ஸித்தனைப் ப்ரகாசித்துக்கொண்டு விஷயங்களையு மறிகின்றவனை இல்லையென்று சொல்வது நாஸ்திகவாதலக்ஷணம். ஆகவே பச்சிம வித்யா பாரங்கதர்களான அநேக பச்சிமஜாதீய பண்டிதர்களைப்போல் தத்வித்யா நிஷ்ணாதர்களான அஸ்மத்தேசீயபண்டிதர்களும் ஜீவேச்வரர்களுடைய அஸ்தித்வோபலப்தியை சாஸ்த்ரமுகத்தினாலும் யோகப்ரத்யக்ஷத்தினாலும் ஒப்புக்கொள்ளக் கூடுமென்பதை "அஸ்தீத்யேவோபலப்தவ்யஸ்தத்வபாவேந சோபயோ:" என்று ச்ருதி நிர்த்தேசித்தது.

## யோகிப்ரத்யக்ஷம்.

யோகமாவது

"யதா பஞ்சாவதிஷ்டந்தே ஜ்ஞாநாநி மநஸா ஸஹ |
புத்திஶ்ச ந விசேஷ்டதே தாமாஹு: பரமாம் கதிம் ||



தாம் யோகமிதி மந்யந்தே ஸ்திராமிந்த்ரியதாரணாம் |
அப்ரமத்தஸ்ததா பவதி யோகோ ஹி ப்ரபவாப்யயௌ ||"

என்று ச்ருதி வெளியிட்டபடி தத்காலம் தஸ்ஸாத்யம். ஆனபடியால் ப்ராசீநகாலத்திய நிஷ்பக்ஷ யோகிகளுடைய அநுபவம் நமக்கு சாஸ்த்ரம்போலே ப்ரமாணமாகிறது. ஒரு பச்சிம வித்வான் ப்ரபஞ்சத்தை அதிக்ரமித்து, ஜநங்கள் நம்புகிறதுபோல், ஈச்வரன் ஒருவன் இல்லை என்று ஸாதிக்க,

"ந வித்மோ ந விஜாநீமோ யதைதத் அநுஶிஷ்யாத் |
அந்யதேவ தத்விதிதாதத அவிதிதாததி |
யத்வாசா நப்யுதிதம் யேந வாகப்யுத்யதே |
யந்மநஸா ந மநுதே யேநாஹுர்மநோ மதம் |
யச்சக்ஷுஷா ந பஶ்யதி யேந சக்ஷூம்ஷி பஶ்யதி |
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே |
யதி மந்யஸே ஸுவேதேதி தப்ரமேவாபி நூநம் த்வம்
வேத்த ப்ரஹ்மணோ ரூபம் | விஜ்ஞாதமவிஜாநதாம் |
ந தத்ர சக்ஷுர்கச்சதி ந வாக்கச்சதி நோ மந: ||"

என்கிற கேநோபநிஷத் வாக்யங்களையும் "அஸ்தீதி ப்ருவதோ(அ)ந்யத்ர கதம் ததுபலப்யதே" என்கிற கடவல்லி வாக்யத்தையும் உதாஹரிக்கிறான். ஈச்வரனுடைய ஸ்வரூப ரூப குணங்கள் ஸாதாரணமாய் மனுஷ்யர்களுடைய அந்தரிந்திரியங்களுக்கும் பாஹ்யேந்திரியங்களுக்கும் எட்டாத விஷயங்கள் என்று ச்ருதி சொல்வதை யார் நிராகரிக்கப்போகின்றனர். ஆகையால் ச்ருதியினால் ஈச்வரவிஷயமாய் நமக்குக்கிடைத்திருக்கிற அஸாதாரண ஜ்ஞானத்தை நாம் ஏன் அங்கீகரிக்கக்கூடாது?

மேலே விவரித்தவிதம் அந்யமதஸ்தர்களைக்காட்டிலும் நமக்கேற்பட்டிருக்கும் விசேஷத்தை பச்சிமவித்வான்களும் நம் தேசத்திய புத்திமான்களும் ஸ்மரிக்க வேண்டியவர்கள். அந்யதேசத்தாருக் கிரிதாகிய ச்ருத்யநுக்ரஹீதமான ப்ரமாண ஜ்ஞானம் நமக்கு ப்ரபலமாய் கிடைத்திருக்க ஆஸ்திகத்வத்தை விலக்கி

நிற்பது நம்மவர்களுக்குள் எவர்க்கும் ந்யாயமில்லை. ஆனாலும் தேசகால வைகுண்யத்தினாலும் ப்ராசீன கர்மவாஸனையினாலும் ஸம்ஸர்க்க தோஷங்களையிட்டும் நம்முடைய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த பலர் பகவத் பராங்முகராய் இப்போது இருக்கிறார்கள். இவர்கள் இந்த நிலைமையை ஏன் அடைந்தார்களென்று விசாரித்தால், அதில் ஸம்ப்ரதாய ரக்ஷணத்தை வஹிக்கும் ஆசார்யர்களுக்கும் வஹிக்காத பண்டிதர்களுக்கும் கிஞ்சித் ஸஹகாரி காரணத்வம் ஏற்படும்.

## ஆஸ்திகர்களின் க்ருத்யம்.

பதார்த்த சாஸ்த்ர நிபுணர்களான பஶ்சிமவித்வான்கள் மொத்தமாக மதங்களை யெல்லாம் குறித்துச்சொல்லும் தூஷணங்களைப் பராமர்சியாமல் விடுவதும் உசிதமன்று. ப்ரத்யக்ஷ சாஸ்த்ரவிருத்தமான அம்சங்கள் ஸர்வமத க்ரந்தங்களிலும் ஸம்பாவிதங்கள் தான். இதற்குத்தக்க ஸமாதானங்களை நம்முடைய பண்டிதர்கள் எடுத்துக்காட்டுவது நலம். மேலேசொன்ன தூஷணங்கள் ஸர்வ மதங்களுக்கும் ஸமானம். ஆனால் ஔபநிஷதமதத்தின்மேல் விசேஷமாக ஏறமாட்டா. தூஷணங்களை ஆதரிக்கின்றவர்கள் எல்லா மதங்களையும் விலகி நிற்கின்றார்கள். அவர்களுக்குள் சிலர் எல்லா மதங்களுக்கும் பொதுவாயிருக்கிற ஈஶ்வராஸ்தித்வம் முதலான சில அம்சங்களை மாத்திரம் ஒப்புக்கொண்டு மதங்களுக்குள்ள மூலப்ரமாணங்களையெல்லாம் ப்ரமாணங்களாக ஒப்புக்கொள்ளாமலிருக்கிறார்கள். தூஷணங்களேற்படும் காரணத்தினாலேயே ப்ரமாணங்களுக்கு ப்ரமாணத்வம் போய்விடாதென்று அவைகளுக்குச் சில உசிதமான பரிஹாரங்களைச் சொல்லிவிட்டு மதாபிமானத்தை அவலம்பிக்கின்ற பச்சிமவித்வான்கள் பலர். இவரையொத்து நமது பண்டிதர்களும் தூஷணங்களைக்கேட்டுத் தக்க பரிஹாரங்களைச் சொல்லக் கடமைப்பட்டவர்கள்.

பஶ்சிமவித்வான்கள் அஜ்ஞர்களென்றும் அவர்கள் செய்திருக்கிற பதார்த்த தத்வ விசாரங்கள் அநுபாதேயமென்றும் சொல்லிவிடுவதினால் மாத்திரம் ஸமாதானம் ஏற்படமாட்டாது. நம்முடைய கொள்கைகளுக்கு ஆக்ஷேபங்கள் கூறுபவனைக் கேவலம் தூஷித்தலாலும் ஔதாஸீந்யத்தாலும் நிராகரித்து விட்டதாக எண்ணுமல் அவனே நமது தர்சநத்தை ஸ்திரமாய் ஸ்தாபிக்க இன்னும் அவஸரம் கொடுக்கிற உபகாரகனை எண்ணுதல் வேண்டும்.



“நாஸ்தி வேத் நாஸ்தி வேதா ஹானி ரஸ்திசேத் நாஸ்திகோ ஹத:”

என்று சொல்வதால் மட்டும் ஈஶ்வராஸ்தித்வம் நிலைக்கமாட்டாது. ஆஸ்திக்யம் உலகத்தில் நிலைக்கவேண்டுமாகில் தத்தம்மதங்களுடைய மூலப்ரமாணங்கள் ஜீவிக்கவேண்டியது அவசியமாகும். ரயில் யந்திரம், கப்பல் யந்திரம், இவை முதலானவற்றையொத்து யுக்தியினால் ஈஶ்வரனையும் ஜீவனையும் உண்டுபண்ணல் கூடுமோ? ஈஶ்வரன் வேண்டுமாகில் அவனுக்கு சாஸ்த்ர யோநித்வம் அநிவார்யம்.

## ஆஸ்திக லக்ஷணம்.

ஆஸ்திகதை பலருக்கு அவரவருடைய மதத்தைப்போல் ஜந்மஸித்தம். ஈஶ்வரபக்தியும் சாஸ்த்ரஜ்ஞாநமின்றி உண்டாகக் காண்கின்றோம். ஆனால் “ஸங்க்ஷேபம் மஹதோ ஸத்ர ஶாஸ்த்ரமேதத் ஜநார்தநம்” என்னும் வண்ணம் ஶாஸ்த்ர ஜ்ஞாநமின்றி ஈஶ்வரனுடைய ஸ்வரூபரூப குணவிபவங்களை யதாவத்தாய் அறிவது கூடாதாகையால் யாவரும் யதாசக்தி ஶாஸ்த்ரார்த்தத்தை ஆசார்யமூலமாய்க் கேட்பது யுக்தம். ஜ்ஞாநமநுஷ்டாநத்தினால் ப்ரகாசிக்கும். “ஆசாரஹீநம் ந புநந்தி வேதா:” என்று கேட்டிருக்கிறோம். ஆதலால் பஶ்சிம வித்யா ப்ரவேசமிருந்தாலும், நமது ப்ராசீன வித்யாவாஸனையை யடைந்திருந்தாலும், ஆஸ்திகர்களுக்கு சாஸ்திரஜ்ஞானமும், ஸதநுஷ்டானமும், இருத்தல்வேண்டும். அவை யிருக்கையிலும் ச்ருதியினால் பால்யம் முதல் அநுஷ்டிக்க வேண்டியவையாய் விதிக்கப்பட்டபடி, ஸத்யத்தில் நிலையும், தர்மத்தில் அபிருசியும், அஸத்யத்தில் நின்றும், அதர்மத்தில் நின்றும் விலகிநடத்தலும் நம்மவர்களுக்கு ப்ரதிதினமும் அநுஸந்தேயமான விஷயங்கள். இது யாவர்க்குந் தெரிந்ததே; இதைச் சொல்லவும் வேண்டுமோ? என்னுமிடத்தில் ஸர்வ ஸம்ப்ரதிபந்நமான விஷயமும் அடிக்கடி ஸ்மரிப்பித்தல் வேண்டுமாகில் அதைச் செய்வதே நன்மை. ஸாக்ஷாத்க்ருத ஶாஸ்த்ரார்த்தர்களான ஆசார்யர்கள் துர்லபர்களாயிருக்கிறார்கள். பகவதநுக்ரஹத்தை சிஷ்யர்களுக்குக் கிடைப்பிக்க ஸமர்த்தர்களாயினும், ததநுக்ரஹ ப்ரதீக்ஷனை சிஷ்யனுடைய பூர்வசரித்ரத்தை ப்ராயேண அவர்கள் சங்கிக்கிறதில்லை. முன்காலத்தில் ப்ராஹ்மணர்கள் ராஜாக்களாலும் ப்ரபுக்களினாலு மாதரிக்கப் பட்டவர்களாய் த்ரு

ணேஷ்வஸக்தர்களாய், ஸ்வதர்மத்தில் நின்றும் கொஞ்சமேனும் தவறாம லிருந்தார்கள். அப்படிப்பட்ட காலத்திலேயே மாந்யத்வம் கேவலம் விப்ரத்வ மாத்ரத்தினால் ஸித்திக்கமாட்டாதென்று கருதி, ஸம்வாந்,

"விப்ராந் ஸ்வாசாரஸந்துஷ்டாந் ஸர்வபூதஹிதே ரதாந் । நிரஹங்காரிண: ஶாந்தாந் நமஸ்யே ஶிரஸா ஸதா ॥"

என்று திருவுள்ளம் பற்றும்படி யிருந்தது. இப்போது விப்ரர்களை ஆதரிக்கத்தக்க ராஜாக்களும் ப்ரபுக்களும் சசவிஷாண கல்பர்களாய் விட்டனர். ஆதலால் விப்ரனுக்கு நைஸர்க்கிகமாய் ஏற்பட்ட தாரித்ரியத்துக்கும், ஸத்யதர்மாதிகளுக்கும் ஸாமாநாதிகரண்யம் எவ்விதம் உண்டாகும்? தாரித்ரியம் விவாஹாதிகளுக்குமாத்ரம் ப்ரதிபந்தகமாவதில்லை. உபபத்தி யில்லாதவர்களுக்கும் குடும்ப வ்ருத்திக்கு உபரோதமில்லை. "காவ்யாய ஶ்ராத்தம் க்ருத்வா" ஸதர்வ்யர்கள் தானாகவே ஏற்படுவார்கள். இவ்விதமாக ஸத்யவசனம், தர்மத்தில் புத்தி, இவற்றிற்கு அவகாசம் குறைகின்றது. காரணமிருந்து முதலில் இவற்றிற்கு லோபம் ஸம்பவித்த போதிலும் காரணம் விலகினபிறகும் இவற்றின் த்யாகம் அநுவர்த்தித்து நிற்கிறது. அந்த த்யாகத்தினால் அர்த்தார்ஜந ஸௌகர்யங்களைக் கண்டவர்கள் அர்த்தாபேக்ஷை நிலைக்கும்வரையிலும் ஸத்யதர்மத்யாகங்களையும் விடுகிறதில்லை. ஆகவே, "ஸத்யம் வத - தர்மம் சர - ஸத்யாந்ந ப்ரமதிதவ்யம் - தர்மாந்ந ப்ரமதிதவ்யம்" என்றும், "ஸத்யமேவ ஜயதே நாந்ருதம், ஸத்யேந பந்தா விததோ தேவயாந:" என்றும், "धर्मं सत्यपराक्रमं - कीर्तिं सत्यवाक् यज्ञः - कृत्यं ... धर्मो ... धर्मार्थः सत्यसंयुक्तं धर्मं सनातनम्" என்றும் ஏற்பட்ட பஹு ப்ரமாணங்கள் புஸ்தகாலங்காரமாய் மாத்ரமிருந்து விடலாமா? நம்மவர்களுக்குள் இவ்வசனங்கள் அவ்வண்ணமாகவே யிருக்கிறதென்று பரர்க்ளபிப்ராயப் படுகிறார்கள். நம்மவர்களிலும் அப்படிப்பட்ட அபிப்ராயம் சிலரிடம் இருப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால் மேற்கூறிய வசனங்களை நம்மவர்கள் இப்போ திருப்பதைக்காட்டிலும் கொஞ்சம் அதிகமாக ஆதரிப்பது பரம்பரையாக ஐஹிகாமுஷ்மிகங்களுக்கு பஹுவிதமாய் உபகாரமாய் இருக்குமென்று விநயத்துடன் விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறேன்.



### ஸம்பரதாய ஸபையின் ப்ரயோஜநம்.

இந்த ஸம்ப்ரதாயஸபை உண்டான க்ரமத்தையும், இந்த மஹாஸங்கம் கூடிய க்ரமத்தையும் ஆலோசித்தால் ஜ்ஞாதாக்களாயும் அநுஷ்டாதாக்களாயும், ஸத்யதர்ம ரதர்களாயும், வெகு ஸ்வாமிகள் இவ்விடம் எழுந்தருளி யிருக்கின்றார்களென்று அடியேன் நிஸ்சயிக்கிறேன். ஆகையால் நமது ஸபையும் ஸங்கமும் ஸ்வரக்ஷணார்த்தமாக ஏற்பட்டதாக எண்ணவேண்டியதே யன்றி, பரர்களுக்கு யாதொரு அஹிதத்தையும் உத்தேசித் துண்டாகவில்லையென்று நம்புகிறேன். ஜ்ஞாதாக்களாயும், ததநுகுண சிஷ்டாசாரயுக்தர்களாயும் ஸத்யதர்மாதிகளில் அபிருசி யுள்ளவர்களாயும், ஸத்ஸம்ப்ரதாயாபி வ்ருத்தியை அபேக்ஷித்தவர்களாயு மிருக்கிற பஹுஸ்வாமிகளால் அநுக்ரஹிக்கப்பட்ட ஸபையானது ஸர்வத்ர அநுகூலபுத்தியைப் பண்ணுமே யொழிய ப்ராதிகூல்யத்தை ஸ்மரணத்திலுங் கொள்ளாது. இவ்விதம் இந்த ஸபையைச்சேர்ந்த ஸப்யாளொவ்வொருவருக்கும் ஸபையினிடத்தே நிரந்தர விச்வாஸமன்றிக்கு ஸபைக்கு க்ஷேமம் நிலையாது. லோகத்தில் நாம் ஸாதாரணமாய்க் காண்கிறபடியே நம் தர்சனத்தில் நமக்கு விச்வாஸம் உண்டாகுமாகில் பகவத்கடாக்ஷம் நம்மிடம் வளருமென்று ஊஹிப்பதற் கிடமில்லை. சில விடங்களில் கேவலாபி நிவேசம் தர்சன பக்ஷபாதத்திற்கு ஹேதுவாகிறது. இந்த அபிநிவேசம் பெரும்பாலும் ஸாராஸார விவேகாபாவத்தினால் உதிக்கிறது. இன்னும் சிலவிடங்களில் பரர்களிடம் வைரமொன்றே ஸ்வதர்சன விச்வாஸகாரணமாகி தத்தர்சன நிஷ்டர்களுக்குள் ஒற்றுமைக்கு அநுகூலமாகிறது. இவை யெல்லாம், ஆத்ம யாதாத்ம்ய ஜ்ஞாநம் அவித்யா திரோஹிதமாகி ப்ரகாச மற்றுப்போன அந்தரிந்த்ரிய ஜங்யங்கள். அபிநிவேசத்தி லுண்டாகும் தர்சந விச்வாஸமும் பரத்வேஷத்தினால் தர்சந நிஷ்டர்களுக்குள் உண்டாகும் பரஸ்பர ஸ்நேஹமும் ஈஸ்வர ப்ரீதி விஷயமாமென்று அடியேனுக்குத் தோற்றவில்லை. சிலசில விடங்களில் தர்சந விச்வாஸமும் தர்சனஸ்தர்களுக்குள் ஐகமத்யமும் வ்ருத்யுபாயங்களாய் பரிணமிக்கப்

பார்க்கிறோம். அப்படிப் பட்டவர்களிடம் ஈச்வர நிக்ரஹமும் சிந்திக்கத்தக்கதே. ஆதலால் ஸம்ப்ரதாயத்தில் விச்வாஸமானது விவேகத்தில் ஜநித்து, அநுஷ்டாநத்தால் நிலைத்து, ஸத்ய தர்மாதிகளடியாய் பரஹிம்ஸையின்றி வளர்ந்ததாகில் அதுதான் பகவத்ப்ரீதிகரமாகிறது.

ஸம்ப்ரதாய பேதங்களால் த்வேஷம் கூடாது.

தத்காலத்தில் நம்தேசத்தில், உபநிஷத், கீதை, ப்ரஹ்மஸூத்ரம், இவைகளை மூலப்ரமாணங்களாயும், பாராசர்யவ்யாஸர், ப்ரதமாசார்யராயும், அங்கீகரிக்கப் பட்டுண்டாயிருக்கும் ஸம்ப்ரதாயங்களநேகம். அவற்றுள் பரஸ்பரத்வேஷம் வ்ருத்தியாயிருப்பது நம்முடைய தேசத்திற்கு க்ஷேமாவஹமன்று. இந்த மதபேதங்கள் மதிபேதங்களை ஆச்ரயித்து உண்டானபடியாலும், மதிபேதங்கள் லோகத்தில் அநிவார்யமா யிருக்கிறபடியாலும், ஸ்வரக்ஷணர்த்தமாயும் பர நிரஸநத்தை உத்தேசித்தும் பிறந்த பஹு க்ரந்தங்கள் மதபேதங்களை இதுவரையில் நிவர்த்திக்காத காரணத்தையிட்டும், மதப் ப்ரயுக்தமான வைரங்கள் நமது தேசத்துக்கும் ப்ராஹ்மண ஸமூஹத்திற்கும் அநர்த்தாவஹமா யிருக்கிறதைக்குறித்தும், மதபேதமும் மதிபேதமும் லோக ஸ்வபாவமென்று நிச்சயித்து, அதனடியாய் உண்டாகும் த்வேஷங்களை விலக்கி, எந்தெந்த கார்யங்களில, ஸர்வ சம்ப்ரதாயஸ்தர்களும் ஏகமநஸ்கராய் தேச க்ஷேமார்த்தமாய் ப்ரவ்ருத்திக்கலாமோ, அவற்றை ஸாதிப்பது எல்லோர்க்கும் கடமை.

பரமார்த்த தசையை எல்லோரு மபேக்ஷிப்பார்கள் என்பதில் ஸந்தேகமில்லை. பரமார்த்ததசையில் மனுஷ்யர்களுக்குள்ளாவது மற்ற வஸ்துக்களிலாவது, அந்தர்யாமியை மறந்து பேதபுத்தி செய்தல் ஹாநியை உண்டுபண்ணும். ஸர்வாந்தராத்மாவான பரமாத்மாவி னநுஸந்தான ஸஹிதமாக விஷயப்ரதீதிகள் உண்டாக வேண்டி யிருக்கிறது. "𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌂 𑌪𑌰𑌾𑌦𑌾𑌦𑍍 𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑍇𑌦" என்றும், "𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌸𑍍𑌸 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌯 𑌇𑌹 𑌨𑌾𑌨𑍇𑌵 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿" என்றும் இருக்கிற ஶ்ருதி ப்ரமாணங்களைக்கொண்டும்,

"𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 ।
𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌤𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌭𑍇𑌦𑍇𑌨 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 ॥"



"𑌸𑍋𑌽𑌹𑌂 𑌸𑌚𑌤𑍍𑌵𑌂 𑌸𑌚𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌤𑌤𑍍
𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌤𑍍𑌯𑌜 𑌭𑍇𑌦𑌮𑍋𑌹𑌮𑍍 ।
𑌇𑌤𑍀𑌰𑌿𑌤𑌸𑍍𑌤𑍇𑌨 𑌸 𑌰𑌾𑌜𑌵𑌰𑍍𑌯𑌃
𑌤𑌤𑍍𑌯𑌾𑌜 𑌭𑍇𑌦𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 ॥"

என்றுமுள்ள, அநேகஸ்ம்ருதி ப்ரமாணங்களைக் கொண்டும், பேதத்தில் புத்தி குறைவதற்கு முக்யஹேதுவாய் நிற்கும் ஸர்வ சராசரங்களுக்குள்ளும் அந்தராத்மாவாயும், நியந்தாவாயும், சேஷியாயும் பகவான் நிற்கிறான் என்னும் ஜ்ஞானம் ஆத்மோஜ் ஜீவநத்தை அபேக்ஷிக்கிற ஸகலர்களுக்கும் க்ஷணகாலமும் மறக்கத் தக்கதன்று.

"𑌸𑌰𑍍𑌵𑌂 𑌖𑌲𑍍𑌵𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌜𑍍𑌜𑌲𑌾𑌨𑌿𑌤𑌿 𑌶𑌾𑌨𑍍𑌤 𑌉𑌪𑌾𑌸𑍀𑌤 - 𑌇𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌇𑌦𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 - 𑌇𑌮𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 - 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 - 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵𑌾𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿। 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌚𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌤𑌤𑍋 𑌨 𑌵𑌿𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌤𑍇 ॥ 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌂𑌯𑍋𑌮𑌾𑌂𑌭𑌜𑌤𑌿 - 𑌆𑌤𑍍𑌮𑍌𑌪𑌮𑍍𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌂𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌯𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 । 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌦𑍈𑌤𑍍𑌯𑌾𑌃 𑌸𑌮𑌤𑌾𑌮𑍁𑌪𑍇𑌤 𑌸𑌮𑌤𑍍𑌵𑌮𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌸𑍍𑌯 - 𑌏𑌤𑌾𑌵𑌾𑌨𑍇𑌵 𑌲𑍋𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌃 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌪𑌰𑌃𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 । 𑌏𑌕𑌾𑌨𑍍𑌤𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑍇 𑌯𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌤𑌦𑍀𑌕𑍍𑌷𑌣𑌂" இத்யாதி ப்ரமாணங்களை புத்தியில்கொண்டு ஸர்வத்ர அநுகூலமதியை முமுக்ஷுவானவன் பண்ணவேண்டியவன்.

"பலபேர் பலமதங்களை அபிமாநிக்கிறார்கள். எல்லாமதங்களும் ஸரியாயிருக்கக் கூடுமா? ஆபாதகூட மநபாயமாயிருக்கிற நம்முடைய ஸம்ப்ரதாயத்துக்கு ஸமாநமாய் மற்றொன்றை ஒப்புக்கொள்ள இசையுமோ? இதர மதங்களை எல்லாம் நம்முடைய பூர்வாசார்யர்கள் கண்டித்திருக்க வில்லையா? 'ப்ரதிகூலரைக் கண்டால் ஸர்ப்பாக்னிகளைக் கண்டாற்போல வெருவி வர்த்திப்பான். அநுபயரைக்கண்டால் காஷ்ட லோஷ்டாதிகளைக் கண்டாற்போலே த்ருணவத்கரித்து வர்த்திப்பான்,' என்று பரமாசார்யன் திருவுள்ளமன்றோ? ஸர்வத்ர ஆத்ம தர்சனத்தை அஸ்மத் ஸம்ப்ரதாயஸ்தர்களைத் தவிர மற்றவர்களிடம் எவ்விதம் செய்

வது. பகவத் த்வேஷிகள், ஆசார்ய நிந்தனை செய்பவர்கள், இவர்கள் விஷயமாய் "யதாசக்தி நிரூபணீயாஸ் சைவ தாமஸாந்தி நிகாரு" என்று வசநமில்லையா? " இந்த ரீதியாக அநேக ப்ரச்நங்கள் பிறக்கலாம். இந்த விஷயத்தில் சில யோசனைகள் காலாநுகுணமாகச் செய்யவேண்டியதுண்டு. மதபேதமாவது, ஸம்ப்ரதாய பேதமாவது மனுஷ்யர்களுக்குள் இருக்கவேண்டிய ஒற்றுமைக்கு விரோதமாக மாட்டாது. இப்படிப்பட்ட பேதங்களையிட்டு ஒரு தேசத்தார் ஐக்கியத்தை இழந்தாராகில், அதனால் ஐஹிகத்தில் ஸம்பவிக்கும் கடுங்கேடு யோசனைக் கெட்டக் கூடியதன்று. இந்தக் கேட்டுக்கு அத்யந்த நிதர்சனம் நம்முடைய தேசந்தான். ஸர்வ ஸம்ப்ரதிபந்நமாய் உத்கர்ஷம் யாதொரு ஸம்ப்ரதாயத்திற்கும் இன்னும் ஏற்படவில்லை. தத்தத் ஸம்ப்ரதாயாபிமானிகள் அந்தந்த ஸம்ப்ரதாயத்தையே ஏற்றமாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் ஸம்ப்ரதாய பேதங்களும், மதபேதங்களும் போகாதென்று தெரிந்துகொண்டு ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் ஸம்ப்ரதாயத்தில் நிலைத்தவிச்வாஸம் கொண்டு நடக்க, இதரஸம்ப்ரதாய த்வேஷங்களை விட்டுவிடவேண்டியது உசிதம். ப்ரதிகூலராவார் பகவத் த்விட்டுக்க ளென்று திருவுள்ளமாகையாலும் அந்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள் தீர்க்காலோசனையில் பகவத்த்வேஷிகளாக ஏற்பட்மாட்டார்களாகையாலும், கேவலம் ஹிரண்யகசிபு, ராவணன், சிசுபாலன் இவர்கள் போன்றவர்களைத் தவிர மற்றவரை ப்ரதிகூலராகப் பாவித்தல் வேண்டியதில்லை. அநுபயர்கள் பகவத் ஸ்மரணமற்ற கேவலஸம்ஸாரிகள். பகவதாஜ்ஞா கைங்கர்ய பாதஸேவநா காலங்களிலும், பகவத் த்யாந ஸமயத்திலும், க்ரந்தகாலக்ஷேப காலங்களிலும், கேவல ஸம்ஸாரிகள் ஸர்ஸர்க்காநர்ஹர்கள் என்று ஏற்படுமே யன்றி,

"அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ர: கருண ஏவ ச |"

என்னும் கீதாவசனத்தாலும்,

"ஸர்வபூதாத்மகே தாத ஜகந்நாதே ஜகந்மயே |
பரமாத்மநி கோவிந்தே மித்ராமித்ரகதா குத: ||
த்வய்யஸ்தி பகவாந் விஷ்ணு: மயி சாந்யத்ர சாஸ்தி ஸ: |
யதஸ் ததோऽயம் மித்ரம் மே சத்ருச்சேதி ப்ருதக் குத: ||"



என்கிற ஸ்ரீ விஷ்ணுபுராண வசனங்களினாலும், ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் மதபேதங்களையிட்டு த்வேஷங்கள் கூடாதென்பது விளங்கலாமோ? மித்ரபாவம் ஸர்வஜனங்களிடமும் எப்பொழுதும் பாராட்டவேண்டியது பாகவதன்கடமை.

ஸம்ப்ரதாய ரக்ஷணார்த்தமாக அந்யமதவிஷயமாய் ஆசார்யர்கள் ஸாதித்தக் கிரந்தங்கள் நமக்கு உபாதேயமே; அப்படிப்பட்ட க்ரந்தங்களில்லாவிட்டால் ஸ்வஸம்ப்ரதாயத்தில் நிலைத்த நம்பிக்கையும் நீடித்த விச்வாஸமும் உண்டாவது கஷ்டம். பரமததூஷணங்களும் ததர்த்தம் சிந்திக்கத் தக்கவைதான். ஆனால் இவை வாதிகளையிட்டு எழுதப்பட்டவை. ஸாதாரணமாக இதரமதாவலம்பிகளையிட்டன்று. வாதங்களே நின்றுபோன காலத்தில் வாதப்ரயுக்தமான தூஷணங்களுக்கு மிடமில்லை. தூஷணங்களுக்கு அவகாச மற்றவளவிலே "ஸத்த்வஸ்வரூபாணி" என்கிற ஹிதவசநத்தை அநுஸரிப்பதில் யாதொரு கஷ்டமுமில்லை. நமக்கு அத்யந்த ஸந்நிக்ருஷ்ட ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் நமக்கும் இருக்கும் தத்காலவைஷம்யங்கள் நினைக்கக்கூடியவையன்று.

"பக்ஷபாத: கலயேச்வர: ஸ ஹி ந: ப்ரத்யக்ஷமேவோக்தவாந்" என்னும் வாக்யத்தை யாவரும் எக்காலத்திலும் மறக்கக் கூடாது. சமயசோடிகளெல்லாந் தந்தெய்வ மெந்தெய்வமென்று என்றுந் தொடர்ந் தெதிர்வழக்கிடவும், ஸதா மௌனமாய் நிற்கும் ஸர்வேஸ்வரன் ப்ரத்யக்ஷமாகி நமக்குள் ளிருக்கும் மதிவைஷம்யங்களைப் போக்கப் போகின்றானா?

"ஆசார்யவத்தயா மோக்ஷோ தஸ்மாதாசார்யவாந் பவேத்"

என்கிறபடியே ஆசார்யவான்களாயும்,

"ஆசார்யாத்தைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபதிதி"

என்கிறபடியே ஆசார்யர்கள் திருவடிகளிலே நிரந்தர பக்தர்களாயும், "வெள்ளைப்பரிமுகர் தேசிகர்" என உணர்ந்து ஆசார்யர்கள் திருவுள்ளம்பற்றிய அவ்வவ்வர்த்தங்களை மிகவாதரத்துடன் பெற்றுக்கொண்டு அநுஷ்டிக்க வேண்டியவர்களாயும், எல்லாஸம்ப்ரதாயஸ்தர்களு மிருக்க ப்ராப்தம்.

அந்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள் நம்மையொத்து ஆசார்ய பக்திபண்ணுகிறவர்களாதலால், அதற்காக அவர்களிடத்தில் த்வேஷபுத்திக்குஹேதுவில்லை. மதவிஷயங்களில் எதுவரையில் அவர்களுடன் கலக்கலாமோ; அதுவரையில் அவர்களுடன் ஒத்துவர்த்திப்பதேயுசிதமாகும். இதரவிஷயங்களில் எல்லா ஸம்ப்ரதாயஸ்தர்களுக்குள்ளும் ஸ்நேஹம் வ்ருத்தியடைவது யாவருக்கும் ஹிதகரமானதே; இதைநாமெல்லோரும் மறவாமலிருப்பதை இந்தநாட்டின் க்ஷேமம் ஆச்ரயித்து நிற்கிறது.

## ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயம்.

ஸ்ரீ மதாதிவண் சடகோப மஹாதேசிகன் ஸம்ப்ரதாயஸ்தர்களாக நாம் இவ்விடம் கூடியிருக்கிறோம். அந்தமஹா தேசிகனுக்கும் நிகமாந்தமஹா தேசிகனுக்கும் ஸம்ப்ரதாய பேதம் கொஞ்சமேனுமில்லை. "ரஹஸ்யத்ரய ஸாரத்தின் ரஸமுரைப்போன்" என்றும் 'ரஹஸ்யம் முப்பத்திரண்டும் ரஸித்துரைத்தான்' என்றும் விருதுகள் ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹாதேசிகனுக்கு அநாதியாக ஏற்பட்டிருக்கின்றன. நிகமாந்த மஹாதேசிகன் ஸம்ப்ரதாயஸ்தரெல்லாரும் ஸ்ரீ ஸந்நிதியின் ப்ரதமாசார்யன் திருவடி ஸம்பந்தத்தை விலக்கக் கூடியவர்களன்று. இது போலவே ஷஷ்டபராங்குச ஸ்வாமி ஸம்பந்தமும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த ஸ்வாமிகாலம், வரையில் தேசிகன் ஸம்ப்ரதாயத்தில் பேதமில்லை. பின்னும் பஹுகாலம் வரைக்கும் ஸம்ப்ரதாயம் ஒன்றாய் வளர்ந்து ஆசார்ய பரம்பரையில் மாத்ரம் பேதமுண்டாகி நின்றது. இது இப்படிநிற்க, சிலவிஷயங்களில் அபிப்ராயபேதம் ஆசார்யர்களுக்குள் உண்டான காரணத்தால் ஏக ஸம்ப்ரதாய நிஷ்டர்களுக்குள் பரஸ்பரம் த்வேஷமாவது, ஔதாஸீந்யமாவது உண்டாதல் நன்மை பயக்குமோ? சிலவித்வான்கள் அத்யல்பமான சில அபிப்ராய பேதங்களையிட்டு க்ரந்தங்களை ப்ரசுரப்படுத்தி த்வேஷங்கள் ஊர்ஜிதமாகும்படி செய்திருக்கிறார்கள். தேசிகன் திருவடிகளில் நிலைத்த பக்தியுடையவர்கள் இத்தன்மைய ஸம்ப்ரதாய பேதங்களில் நோக்குவைக்கக் கூடாது. ஜ்ஞாதாக்கள் பலர் சேர்ந்து ஒரு விஷயத்தைப் பராமர்சிக்கும் போது அபிப்ராயபேதங்கள் அவசியம் ஸம்பவிக்கும். ஸம்ப்ரதாயங்களில் ஒற்றுமைக்குக் காரணங்களைத் தூக்கிக்காட்டி, பேதகாரணங்களைப் புறங்காட்டி வர்த்திப்பது பாகவதர்களுக்கு முக்யதர்மம்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:

# ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம்.

(தொடர்ச்சி.)

ஶாந்தாநந்தமஹாவிபூதி பரமம் யத்ப்ரஹ்ம ரூபம் ஹரே:
மூர்த்தம் ப்ரஹ்ம ததோऽபி தத்ப்ரியதரம் ரூபம் யதத்யத்
புதம் | யாந்யந்யாநி யதாஸுகம் விஹரதோ ரூபாணி
ஸர்வாணி தாந்யாஹு: ஸ்வைரநுரூபரூபவிபவை
ர்காடோபகூடாநி தே || ௨ ||

இந்த ஶ்லோகத்தில், பகவானுக்கு ஸஹதர்மசாரிணியான பிராட்டி அவரை ஒருகாலும்விட்டு விலகி நிற்பதில்லை யென்பதும் அவரைப்போல் பிராட்டியும் முக்தர்களினால் முக்யமாய் அடையப்பட வேண்டியவளென்றும் சொல்லப்படுகிறது.

ஶாந்தாநந்த மஹாவிபூதி - இது ரூபமென்பதற்கு விசேஷணம். ஶாந்தமாவது விகாரங்களுச்கு ப்ரஸக்தி யில்லாமலிருத்தல். மற்ற சேதநர்களின் ஸ்வரூபம்போல் ஜ்ஞாநஸங்கோச விகாஸங்களுள்ளதா யிராமலிருத்தல். அநந்தமாவது தேசத்தினாலும் காலத்தினாலும் ஸ்வரூபத்தினாலும் அளவற்றதாயிருத்தல். இந்த இடத்தில் இல்லையென்றும் இந்தக்காலத்தில் இல்லை என்றும், இவ்வளவுதான் என்றும் வரையறுத்தல் கூடாமலிருத்தல். மஹாவிபூதி - மஹத்தாய், அதாவது பெரியவைகளாயுள்ள, விபூதிகளை, அதாவது - நித்யவிபூதி, லீலாவிபூதி என்கிற இரண்டு வஸ்துவர்க்கங்களையும் தனக்கு அடங்கின ஐஶ்வர்யமாயுள்ளது. பகவானுக்குச்சேஷமான இரண்டு விபூதிகளும் பிராட்டிக்கும் சேஷமென்றபடி. பரமம் - ஸர்வோத்க்ருஷ்டமாயுள்ளது.

ஶ்ருஹ - மிகப்பெரிதான. யசஃ ரூபம் ஹரேஃ - பகவானுடைய ஸ்வரூபமும். இங்கு பகவானுடைய ஸ்வரூபத்தை, அதாவது ஸத்ய ஜ்ஞாநாநந்தாதி குணயுக்தமாய் ஶ்ருதிப்ரஸித்தமான ஸ்வரூபத்தை ரூபஶப்தம் சொல்லுகிறது, மேல் ரூபஶப்தம் விக்ரஹங்களைச்சொல்லுகிறது, என்று விபாகம். ஹரேஃ - ஆச்ரிதர்களின் தோஷங்களைப் போக்கடிக்கிற பகவானுடைய. "ப்ருஹாணத்வம் ஶ்ராவணம் ச யதம் வாரணமேவ ச । நிகர்ஹஹ ஹரதே யஸ்மாத் தஸ்மாத்ரி ஹரிரீயதே ॥" என்கிற ஹரிசப்தத்தின் புராணநிருக்தியை யநுஸரித்து, எல்லாரையும், எல்லாவற்றையும், ப்ரளய காலங்களில் ஸம்ஹரிக்கிற, என்றும் பொருள் கொள்ளலாம்.

இனி பகவானுடைய திவ்யமங்களவிக்ரஹங்களைச் சொல்லப் புகுந்து, முதலில், ச்ருதியிலும் பகவச்சாஸ்த்ரத்திலும் ப்ரஸித்தமான பரரூபத்தைச் சொல்லுகிறார். ததோऽபி - முன்சொன்ன ஸ்வரூபத்தைக்காட்டிலும். தத்ப்ரியதரம் - பகவானுக்கு மிகவும் உகப்பான. ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதி குணங்களுள்ளதாகையால் இந்தப்பரரூபம் தன்ஸ்வரூபத்தைக் காட்டிலும் ப்ரீதிக்கு விஷயபூதமென்றபடி. ப்ரத்யக்ஷம் - ஸ்பர்ஶம், ரூபம்முதலான குணங்களுள்ள தாகையால் இந்த்ரியங்களுக்கு ப்ரத்யக்ஷமான. அன்றிக்கே அளவிடக்கூடியதாய் ஸ்ரீவைகுண்டமாகிற ஸ்தாந விசேஷத்தில் நித்யர்களாலும் முக்தர்களாலும் ப்ரத்யக்ஷீகரிக்கக் கூடியதான ப்ருஹ - ப்ருஹத்தாயும் ப்ருஹ்மணகுணமுள்ளதாயுமான, அதாவது பெரிதாயும் ஆச்ரிதர்களின் புத்தி விகாஸத்துக்குக் காரணமுமான. அத்யத்புதம் ரூபம் - ஸந்நிவேச குணங்களினாலும் சேஷ்டா ஸாமர்த்த்யங்களினாலும் மிகவும் ஆச்சர்யகரமானரூபம். முன்சொன்னபடி இது பரரூபத்தைச் சொல்லுகிறது.

இந்தப் பரரூபத்திலிருந்து விஜ்ரும்பிதங்களான வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சா ரூபங்களை மேல் சொல்லுகிறது. யாந்யந்யாநி ஸர்வாணி ரூபாணி - மற்ற எல்லா ஆவிர்ப்



பாவங்களிலும் ப்ரஸித்தமான ரூபங்களும். யதாஸுகம் விஹரதஃ - கர்மவச்யரன்றிக்கே "ஸ்வேச்சயா க்ருஹீதாநி ஶரீராணி தேஹஃ" என்கிறபடி தன்னிச்சையாலே தன் ஸ்வபாவங்களை யொன்றையும் விடாமல் க்ரீடார்த்தமாய் அவதாரம் செய்கிற பகவானுடைய ரூபங்க ளெவ்வளவோ அவ்வளவும். தவ - உனக்கு அஸாதாரணமான. தை ஸ்தநாரூபானுரூபவிக்ரஹைஃ - அந்தந்த சரீரங்களுக்கு பாத்வ ஸௌந்தர்யாதி குணங்களால் அநுரூபமாயுள்ள உன்னுடைய ரூபங்களினால். ஸமாலிங்கிதாநி - நன்றாய் ஆலிங்கனம் செய்யப்பட்டனவென்று. ஆஹுஃ - ச்ருதி ஸ்ம்ருதிகளை யறிந்த மஹான்கள் சொல்லுகிறார்கள். பகவானுடைய ஜ்ஞாநாநந்த ஸ்வரூபத்துக்கு அநுரூபமாய் லக்ஷ்மிக்கு ஸ்வரூபமும், பரரூபத்துக்கு ஸத்ருசமான திவ்யமங்கள விக்ரஹமும், அவதார ரூபங்களுக்கு அநுரூபமான ஸீதா ருக்மிண்யாதி விக்ரஹங்களும் உண்டாயிருப்பதினால், பிராட்டியை விட்டுப் பிரிந்த ஸ்வரூபமாவது ரூபமாவது ஒன்றும் பகவானுக்கு இல்லை, என்றதாயிற்று. உபாயதசையில் பகவானைப்பயமின்றி எல்லோரும் நெருங்கும்படியையும், ப்ராப்தி தசையில் பாலும் சர்க்கரையும் கலந்தாற்போல் போக்யமாய் இருக்கும் படியையும் 'ஸமாலிங்கித' சப்தம் ஸூசிப்பிக்கிறது. பகவான் ஸ்வயம் போக்யனா யிருக்கச்செய்தேயும், ஸர்வாவஸ்தையிலும் லக்ஷ்மீ விசிஷ்டனாய் இருப்பதினால் அவன் அத்யந்த போக்யனா யிருக்கிறபடியை இந்தச்லோகம் சொல்லிற்று. இதை "நித்யைவைஷா ஜகந்மாதா" "விஷ்ணோஃ ஸ்ரீரநபாயிநீ" என்றும், "தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ" என்றும், 'ராகவத்வேऽபவத்ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி' என்றும் ப்ரமாணங்கள் சொல்லுகின்றன. 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப' என்றும், 'நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்' என்றும், 'அகலகில்லே னிறையுமென் றலர்மேல் மங்கையுறை மார்பா' என்றும், இருக்கிற ஆழ்வார் பாசுரங்களும் இந்த வர்த்தத்தையே தெரிவிக்கின்றன.

ஆக இந்த நான்கு ஶ்லோகங்களாலும், பகவானுக்கு ஏற்பட்ட ஸ்வாமித்வம், ஸௌலப்யம், மோக்ஷ ப்ரதத்வம், ப்ராப்யத்வம் ஆகிற நான்கு ஸ்வபாவங்களிலும் லக்ஷ்மீக்கு அநுரூபமான ஆகாரங்களினால் பிரியாத ஸம்பந்தமுண்டென்று சொல்லப்பட்டது; அர்த்தாத், லக்ஷ்மீதத்வம் பகவானாகிய நாராயணனுக்கு அசித்தைப்போலவும் சித்தைப்போலவும் அப்ருதக்ஸித்த விசேஷணமாயும், ஸ்வயம் சேதநரூபமாயும், மற்ற சேதநர்களைப்போலன்றிக்கே உபய விபூதிக்கும் சேஷித்வமுள்ளதாயும், பகவானுக்குப்பத்நீ ஸ்தாநீயமாயும், பகவானை ஆச்ரயிக்கும் சேதநர்களுக்கு அவனை அணுகுவதில் பயத்தை நிவர்த்தித்து, அவர்களின் மேல் பகவானுக்குள்ள நிக்ரஹ புத்தியைச் சமநம்செய்து, அநுகூலிப்பதால் புருஷகார ரூபமாயும், பகவானுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கார்யங்களிலும் அவதார கார்யங்களிலும் ஸஹகாரியுமான ஓர் தத்வம் என்றதாயிற்று.

ஸ்ரீ பாஷ்யக்காரர் ஸம்ப்ரதாயங்கள் எல்லாத்திலும் லக்ஷ்மீக்குப் புருஷகாரத்வம் நிர்விவாதமாய் ஒப்புக்கொள்ளப் படுகிறது. இதை ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் '[illegible]' என்று அநுக்ரஹித்திருக்கிறார். புருஷகாரமாவது, 'ஸாபேக்ஷனான புருஷனுக்கு அபேக்ஷிதம் தலைக்கட்டிக் கொடுக்கவல்ல சேதநன் அபிகம்யனைக்கு உபாயமாக வரிக்கப்பட்ட சேதநாந்தரம்' என்று ஆசார்யன்வாக்யம். இந்தப் புருஷகாரத்துக்கு ப்ரமாணங்கள்,

[illegible] ।
[illegible] ॥

என்கிற காரிகையால் ஸங்க்ரஹிக்கப் பட்டன. இதனர்த்தம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் த்வயாதிகாரத்தில் விஶதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புருஷகாரத்துக்கு அநுகூலமான குணங்களை 'ஸ்ரீ' ஶப்த நிர்வசநாவஸரத்தில் முன்பே சொன்னோம். '[illegible]' என்கிறது முதலான வாக்யங்களிற் சொன்ன லக்ஷ்மீக்குப் பகவானுடன் ஏற்பட்ட நித்யயோகம்



'ஸ்ரீமத்' ஶப்தத்தில் ப்ரத்யத்தாலும் சொல்லப்பட்டது. இந்த நித்யயோகம் உபாயதசையிலும் பலதசையிலும் விலகாமல் நிற்பது. ஆகையால் பிராட்டிக்கு புருஷகாரத்வமும் அதற் கநுகுணமான நித்யயோகமும் பாத்வ ஸௌலப்ய ஸதாநுக்ரஹமயத்வாதி குணயோகங்களும் நிராக்ஷேபமாய் ப்ரமாண ஸித்தங்களா யிருக்கின்றன.

ஸ்ரீபாஷ்யக்காரர் ஸம்ப்ரதாயத்தை அநுஸரிக்காத சிலர் பிராட்டியின் ஸ்வரூபத்திலும் குணங்களிலும் பலவிதமான விப்ரதிபத்திகளைச் செய்கிறார்கள். அவைகளை ஸங்க்ரஹமாய்ச் சொல்லி அவைகள் அநாதரணீயங்களென்று மாத்ரம் இங்கே சொல்லுகிறோம்:

சிலர் லக்ஷ்மீ என்பது ஓர் சேதநவஸ்து அல்லவென்றும் பகவானுடைய ஓர் சக்திவிசேஷத்தையே லக்ஷ்மீ யென்று சொல்வதென்றும் கூறுகிறார்கள். சிலர் லக்ஷ்மீ என்பது பகவானுக்கு விதேயமான ப்ரக்ருதி தானென்று சொல்லுகிறார்கள். இதற்கு '[illegible] ஸ்ரீரிதி [illegible]' என்கிற ப்ரமாணத்தையும் உதாஹரிக்கிறார்கள். சிலர் பகவானுடைய வித்யையே லக்ஷ்மி யென்கிறார்கள். வேறு சிலர் பகவான் அஸுரமோஹநத்துக்காக எடுத்த ஸ்த்ரீரூபமே லக்ஷ்மி யாகையால் அவளை பிந்நமான சேதநமாகச்சொல்வது ஸரியல்லவென்று சொல்லுகிறார்கள். மற்றும் சிலர் பகவானுடைய ஸ்வரூபத்தின் ஒருபாகமே கார்யார்த்தமாய் ஸ்த்ரீரூபமாய் லக்ஷ்மீ என்று பேர்கொண்டது என்று எண்ணுகிறார்கள். இன்னும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமே பரிணமித்து ஸ்ரீரூபமாகிறதென்று சிலரும், ஏதோ உபாதிபேதத்தினால் ப்ரஹ்மமே ஸ்த்ரீயாகவும் புருஷனாகவும் வ்யவஹரிக்கப்படுகிறதென்று சிலரும் சொல்லுகிறார்கள். இந்தப் பக்ஷங்களெல்லாம் நம்மாசார்யர்களால் கண்டிக்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் லக்ஷ்மியை சேதநாந்தரமாயும் விஷ்ணு பத்நியாயும் சொல்லுகிற வ்யக்தார்த்தமான ஶ்ருதி ஸ்ம்ருதி வாக்யங்களிருப்பதுதான். '[illegible]' '[illegible] ஸ்ரீரநபாயிநீ' முதலான வாக்யங்கள் இங்கே அநுஸந்தேயங்கள்.

பிராட்டியின் உபயவிபூதி சேஷத்வத்தையும் புருஷகாரத்வத்தையும் அப்யுபகமம்செய்து அவளுக்கு ஈச்வரீத்வத்தையும் ஸாக்ஷாத் மோக்ஷ ப்ரதத்வாதிகளையும் ஒப்புக்கொள்ளாத சில ஆசார்யர்கள் அவளை அணுவென்றும் அவளுக்கு விபுத்வம் சொல்லும் வாக்யங்கள் ஓர் சக்தி விசேஷத்தினால் விகாஸமுண்டாகி சில காலங்களில் விபுபோல் இருப்பதைச் சொல்லுகின்றன வென்றும், அவளுக்கு ஜீவர்களுக்குப்போல் பகவத் பாரதந்த்ரியமும் சேஷத்வமும் இருப்பதினால் ஸாமாந்ய ஜீவர்களுக்கு மேற்பட்ட, பகவானுக்கு அஸாதாரண திசயாவஹமான, ஓர் ஜீவதத்வமே அவளென்றும், பகவந்நித்யேச்சையால் ஏற்பட்டிருக்கும் நித்ய யோகமும் புருஷகாரத்வமும் இந்த ஜீவஸ்வபாவத்துக்கு விரோதிக்காதென்றும் அபிப்ராயப் படுகிறார்கள். இவர்கள் அபிப்ராயத்தில் இதற்குமேல் சொல்லும் விபுத்வாதி விபவங்களெல்லாம் ஸ்துதி பரங்களென்று தாத்பர்யம். இந்த அணுத்வபக்ஷம் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவுள்ளத்துக்கு இசைந்ததில்லையென்று ஸுலபமாய்ச் சொல்லலாம். தத்வத்ரயாதிகாரதில், இவ்வீச்வரன் 'நிதெ்யவைஷா ஜகந்மாதா' 'விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ' இத்யாதிகளின்படியே ஸர்வாவஸ்தையிலும் ஸபத்நீகனாய்க்கொண்டு இருக்கும்" என்றும், "தண்டதரத்வமும் புருஷகாரத்வாதிகளும் எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் கூறுகவிப்ஜித்த வ்யாபாரங்கள்" என்றும் இருக்கிற வாக்யங்களும் அவைகளின் ப்ரகரணமும் பிராட்டி ஈச்வரகோடிப்ரவிஷ்டையென்றும், மேற்சொன்ன தண்டதரத்வாதி விபக்ஷ தர்மங்கள் தவிர மற்ற விபுத்வமும் ஜகத்காரணத்வ, மோக்ஷப்ரதத்வ, ப்ரதாந ப்ராப்யத்வங்களும் பகவானுக்கும் பிராட்டிக்கும் ஸமாநமென்றும் ஸ்வரஸமாய்ச் சொல்லுகின்றன. இந்த வ்யாக்யாநத்துக்கு ஆலம்பநமான சது: ச்லோகீ பாஷ்யத்திலும் "நநுஸம்பவதவமோக்ஷப்ரதக்வம்" என்று ஆக்ஷேபித்து, "நைவம்" என்று நிஷேதித்து, மேல் க்ரந்தத்தில் "ஸம்ஸாரார்ணவதாரிணீ" "ஸர்வம்பாபஹாரிணீ" "விமுக்தி பலதாயிநீ" என்னும் நாமநிர்த்தேசங்களைச்சொல்லி 'ப்ரப்யதவிதி:', என்று முடிக்கையால், ஆசார்யனுக்கு லக்ஷ்மீ மோக்ஷப்ரதை என்னும் பக்ஷமே ஹ்ருதயங்கம மென்று வ்யக்தமாகிறது. 'பரிவாதிணீ நாஸ்ய ப்ரதாநஸங்கல்பஸ்ய ஸம்பவதஸ்ய மோவா ஸவத்ரீகஸ்யவேதி யதாப்ரமாணம்ஸவத" என்கிற தடஸ்தம் போலிருக்கும் வாக்யமும் இதராபிப்ராயத்துக்குக் கௌரவாபாதகமாக மாத்ரம் தோன்றுகிறது. பிராட்டியை ஈச்வரகோடியில் சேர்த்து பகவானுடன் ஸமாநப்ரபாவையாய்ச் சொன்னால் ஈச்வரத்வித்வமும் பகவான் 'நிஸ்ஸமாப்யதிக' ரென்கிற ப்ரமாணத்துக்கு விரோதமும் வாராதோவென்று கேட்கில், இதற்குப் பரிஹாரம் பத்நீ என்கிற நிர்த்தேசத்தால்வரும் பதிபாரதந்த்ரியத்தால் ஸித்தம். "நாதயோவிருத்யதைவதம்" "வாசகத க்ஷமிவோநிதள", "உபயாயிஷ்டாநம்வெகம் செஷிகம்"



"ஏகஸ்யாஸ்ஸ்தத்துதிஸ்வப்ரவம்வோ
வ்யாவ்யஸ்தீசஸ்யத ஸாபி ஸவம் ।
தயாபி ஸாயாரணீசிதத்வம்
ஸ்ரீஸ்ரீசயோர்தவ ஸதைகசேஷீ"

என்கிற ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் உதாஹரித்த ப்ரமாண வாக்யங்களும் இங்கே அநுஸந்தேயங்கள்.

(இன்னும் வரும்.)

விஷ்ணுதாஸன்.

ஸ்ரீ:.

# மதுராந்தக மஹாஸங்கம்.

## அக்ராஸநாதிபதியின் உபஸம்ஹாரம்.

சென்ற டிஸம்பர்மீ 27 - ம் தேதி ராத்ரி ஸுமார் 8 - மணிக்கு உபந்யாஸங்களின் முடிவில் டிவான் பஹதூர். ஸ்ரீமான். டி. டி. ரங்காசாரியர் ஸ்வாமி பின்வருமாறு உபந்யஸித்து மஹாஸங்கத்தைத் தலைக்கட்டினர்.

மஹான்களே,

நமது மஹாஸங்கத்தின் மூன்றாவது ஸம்வத்ஸரோத்ஸவ வைபவம் ஒருவாறு முடிவுக்கு வந்தது. இந்த வர்ஷோத்ஸவத்தைக்குறித்து ஒரு ப்ரகாரத்தாலும் ந்யூநதை என்பதற்கு ஸர்வத்ர ஸ்மரணம் உண்டாகாதவண்ணம் தேசகால ப்ரயுக்தமான குறைவுகளைத் திரஸ்கரித்து இவ்விடம் அதிதிகளாய் எழுந்தருளிய அசேஷஸ்வாமிகளும் ஸர்வவிதத்தாலும் த்ருப்தர்களாகும்படி ஆதரித்து ஸம்ப்ரதாய வ்ருத்திக்கு உபகரித்த ரிஸப்ஷன் கமிட்டியார்களாகிய ஸ்ரீமதுராந்தக ஸ்வாமிகளுக்கு நாமனைவரும் ஸபையாரை முன்னிட்டுக்கொண்டு வந்தநமளிக்கின்றோம். அந்த ஸ்வாமிகளில் விசேஷேண ஸ்ரீ. உபய. மாடபூசி - திருவேங்கடாசாரியரும், அன்னப்பிள்ளை திருவேங்கடாசார்யரும், க்ராமமுனிசிப் ராகவாசாரியரும், பள்ளிப்பட்டு திருவேங்கடாசாரியரும் நம்மால் ஸதா ஸ்மரிக்கத்தக்கவர்கள். இந்த ஸங்கத்தின் ச்ரேயஸ்ஸைத் திருவுள்ளம்பற்றி இதைச்சேர்ந்த மஹோத்ஸவம் பரிமளிக்கவேணுமென்கிற அநுக்ரஹபூர்வமாய் ஸ்ரீமதுராந்தகம் அஹோபிலமடத்தை ததீயாராதனத்துக்கு ரிஸப்ஷன் கமிட்டியாருக்கு உதவிய ஸ்ரீ அழகிய சிங்கருக்கு நம்முடைய பூயோபூய: ப்ரமாணங்களை நிவேதநம் செய்கிறேன்.

ஜ்ஞாதாக்களான பஹுஸ்வாமிகள் இவ்விடம் எழுந்தருளி வேதாந்த விசாரத்தையும் பகவத்குணாநுபவத்தையும் விஷயீகரித்து ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யபாதாரவிந்தங்களில் ஏகாந்த பக்தராயிருப்பவர்க்கு ஹ்ருதயங்கமமாகப் பல உபந்யாஸங்களைப் பண்ணினதற்கு ஸபையாருக்கு ப்ரதிநிதியாக அடியேன் மிகுந்த க்ருதஜ்ஞதையைப் பாராட்டுகிறேன். ஸ்வகார்யங்களைத் தவிர்த்து ஸபாப்ரயுக்தமாய் நடத்துவருகிற இந்த வர்ஷோத்ஸவத்தைச் சிறப்பிக்கக்கருதி எழுந்தருளின ஸ்வாமிகளனைவர்க்கும் ஸபையாரின் வந்தநத்தை அடியேன் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறேன். இந்த ஸ்தாநத்துக்கு ஸர்வ



விதத்திலும் அநர்ஹனாயிருக்கும் அடியேனை ஒரு பதார்த்தமாய்க்கொண்டு அந்த அநர்ஹதையையே அர்ஹதையாய் அப்யுபகமம் பண்ணி அடியேனிடம் ப்ரகாசித்த தோஷங்களைப் பாராட்டாமல் இந்த ஸங்கத்தின் மேன்மையையே முக்யமாய் யோசித்து, இது நிர்விக்நமாயும் யாவர்க்கு மாஹ்லாதகரமாயும் நடந்தேறும்படி அநுக்ரஹித்த ஸர்வஸ்வாமிகளுக்கும் [illegible] ப்ரணாமம் செய்கிறேன்.

ஸபையின் நிரந்தரமான உத்யோகம் ஸங்கத்தின் நிரந்தரமான ஆநந்தத்துக்கு ஹேதுவாகிறது. இப்படி ஜ்ஞாநாதிசய ப்ரகாசத்தையும் உபந்யாஸ ஸௌஷ்டவத்தையும் ஸாக்ஷாத்கரித்த ஸ்வாமிகளுக்கு இந்த விசேஷங்கள் மேன்மேலும் வ்ருத்தியடைய வேண்டுமென்கிற விஸ்வாஸத்தை ஸர்வேச்வரன் உண்டுபண்ண வேணுமென்பதே ஸபையாருடைய கருத்து. லோகத்திற்கு ஹிதமான வ்யாபாரங்கள் ப்ராயேண ஏதேனுமொரு ஆச்ரயமின்றி நடைபெறமாட்டா. ஸர்வநியந்தாவைப்பற்றிவரும் ஜ்ஞாநபக்த்யாதிகளும் அவனுடைய திவ்யகுணங்களை எடுத்துக்காட்டும் தத்ஸம்பந்தமான கதைகளும் அவனையொத்து அநாதியாக நிற்கின்றன. ஸமஸ்தகல்யாண குணஸ்வரூபனையும் ஸ்வசக்திலேசத்தால் ஸர்வபூதங்களையும் வ்யாபித்துத் தரிக்கின்றவனையும், அசேஷஜகத்துக்கும் ஹிதத்தையே அவலம்பித்துப் ப்ரபந்நர்களுக்கு ஸதா அநுபவயோக்யமாய்க் கர்மநிமித்த மன்றிக்கே ஸ்வஸங்கல்பத்தாலே திருவுள்ளமுகந்த பலதிவ்யாவதாரங்களைச் செய்பவனையுமிருக்கும் புருஷோத்தமன் விஷயமான ஜ்ஞாநபக்திகளுக்கும் திவ்யசரித்ரங்களுக்கும் ஆதியாவது அந்தமாவது ஊஹிக்கக்கூடியதன்று. '[illegible]'. ஆதலால் இவையற்றுப் போமென்று நமக்குச் சோக காரணமாகாது. இவற்றைத்தாம் அடைந்தநுபவித்து இதரர்களுக்கும் அவற்றின் அநுபவத்தைத் தரவல்ல மஹாத்மாக்கள் குறைகின்றார்களென்பதே நமக்குப்பயத்தைக் கொடுக்கிறது. உபநிஷத்து, கீதை இவைஸம்பந்தமான உபந்யாஸங்களுக்கும் ஹரிகதைகளுக்கும் ராஜதாநியிலும் பெரியபட்டணங்களிலும் தத்காலம் குறையில்லையென்று ஆக்ஷேபிக்கக்கூடும்.

[illegible]

என்கிற நிந்தைக்கு இங்கு நடந்த உபந்யாஸங்களும் கதையும் பூர்ணமாய் விலக்கானவை என்பதை ப்ராஜ்ஞர்கள் அறியவேண்டும்.

[illegible]

என்று ஸ்ரீபாகவத வசநமிருக்கிறது. ஆனபடியால் மஹாத்மாக்களென மேலே குறித்த பாகவதாக்ரேஸரர்கள் நமது நன்னாட்டில் பெருகவும் அவர் களுபந்யாஸங்களால் ஸ்ரீவைகுண்ட கதாஸுதையைப்பலரும்பருகவும், வேண் டியப்ரயதநங்களை, ஸ்ரீபகவத் ராமாநுஜ நிகமாந்த மஹாதேசிக ஸம்ரக்ஷி தமான ஸம்ப்ரதாயத்தை ஆச்ரயமாகக்கொண்டு, நமது ஸபையார் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஸம்ப்ரதாயத்துக்கு ஸமுதாயா சார்யரான ஸ்ரீ ஆதிவண்ஶடகோப மஹாதேசிகன் அநுக்ரஹித்த ஆஸ்தாநத்தினுடைய வும், அந்த ஆஸ்தாநம் எந்த திவ்யதேசத்தை ஆச்ரயித்து உண்டானதோ அந்த ஸ்ரீமத் அஹோபிலத்தினுடையவும், அந்த ஆஸ்தாந நிர்வாஹம் செய் யும் ஸ்வாமிகள் எந்தெந்த திவ்யதேசங்களின் தர்மபரிபாலநத்தை அங்கீக ரித்திருக்கிறார்களோ அந்த திவ்யதேசங்களி னுடையவும் ச்ரேயஸ்ஸையும் ஸபையார் ஆநுஷங்கிகமாய் ப்ரார்த்திக்கிறார்கள். எவ்விதத்தாலாவது மட த்தை ஆச்ரயித்தும் திவ்யதேசங்களை ஆச்ரயித்தும் பகவத் கைங்கர்யங்கள் யதாவத்தாய் நடக்கவேண்டியதையும் அப்படிப்பட்ட கைங்கர்யங்கள் ஜ்ஞாந பக்தி வைராக்யாதி ஸம்பந்நர்களான ஸ்வாமிகளின் ஸம்ருத்தியன்றி உண் டாகமாட்டா வாகையால் அப்படிப்பட்ட ஸ்வாமிகள் ஸம்ருத்தியையும், அவர் களுடைய தேஹயாத்ரை ச்ரமமின்றி நடக்கவேண்டியதையையும் உத்தே சித்தே ஸபையார் யத்நபரர்களா யிருக்கின்றனர். ‘ [illegible] ’ என்னும் வண்ணம் ஜ்ஞாநக்ரியாபஜந ஸம்பத் துடன்கூடிய ஸ்வாமிகள் தாத்ருஶ ஸம்பத்தால் இந்தஸபைக்கு உபகரிக்கத் தக்கவர்கள். ஐஹிகத்தில் உபபந்நர்களான ஸ்வாமிகள் த்ரவ்ய ஸஹாயத் தால் ஸபையை ரக்ஷிக்கத்தக்கவர்கள். ‘ [illegible] ’ என்னும் பொதுவான வார்த்தைக்கு அபவாதத்தை, அதா வது, இலக்காகாமலிருத்தலை நம்ஸம்ப்ரதாயத்தை அபிமாநித்த ஸ்வாமிகள் தேடவேண்டு மென்பது அடியேன் ப்ரார்த்தனை.

ஸ்வாமிகள் ஹ்ருதயத்தில் அநுப்ரவேசித்து ஸ்வகர்மத்தில் நிமித்தமா த்ரமா யிருக்கும்படி அடியேனை ஆஜ்ஞாபித்து ஸ்வகுண சேஷ்டிதங்களை ஸ்வபக்தர்களைக்கொண்டு விஸ்தாரமாக வெளிப்படுத்தி இந்தஸங்கத்தை ஸ்வ யமே உபக்ரமித்து உபஸம்ஹாரம்செய்த ஶரண்யனை நாம்ஸதாஸ்மரிக்கத் தக்கவர்கள். தத்ஸ்மரணத்தைச் சில புராண ஶ்லோகங்களால் செய்கிறேன்.

[illegible]



[illegible]

[illegible]

இப்படிக் கேவலம் பகவத்திவ்ய குணங்களினுடையவும் திவ்யசேஷ்டி தங்களினுடையவும் [illegible] மாய்ப் பரிணமித்த மஹாஸங் கத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்வாமிகளைக்குறித்தும் இந்தவிஷயங்களை வேதாந்த தீபிகை மூலமா யறியப்போகிற ஸ்வாமிகளைக்குறித்தும்,

[illegible]

என அவனே திருவுள்ளம்பற்றி யிருக்கிறபடியால் மஹர்ஷிகளால் அநுக்ர ஹிக்கப்பட்ட பலஶ்ருதியை ஸ்மரிப்பித்து முடிக்கிறேன்.

[illegible]

[illegible]

## மதுராந்தக மஹாஸங்கம்.

அபார காருண்ய நிதியான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் கடாக்ஷ வீக்ஷணத்
தால் ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்ய ஸபையின் மூன்றாவது மஹாஸங்கம்
ஸ்ரீ மதுராந்தகத்தில் சென்ற டிசம்பர்மீ 25, 26, 27 - ம் தேதிகளில் பூர்
வமே நிர்த்திஷ்டமான க்ரமத்தை அநுஸரித்து மிகவும் சிறப்பாகவும் எல்
லோர்க்கும் ஆஹ்லாதகரமாகவும் நிறைவேறிற்று. 24 - ம் தேதி பகலிலேயே
ஸபாத்யக்ஷரான ஸ்ரீமான். ராஜகோபாலாசார்யரும், கார்யதர்சி ஸ்ரீமான்.
சித்தூர். ஸி. ராஜகோபாலாசார்யரும், நிர்வாஹ கமட்டியில் அங்கத்தினராய்
ஏற்கெனவே இந்த மஹா ஸங்கத்துக்காக மதுராந்தகத்துக்குவந்து ஏற்
பாடுகள் செய்த ஸ்ரீமான். வி. ராகவாசார்யரும் இன்னும் சிலரும் மதுராந்த
கத்துக்கு வந்துவிட்டனர். ராத்திரி சுமார் 8 - மணிக்குச் சபையில் அதிக்ருதர்
களும் மதுராந்தகத்தார்களாகிய அன்னப்பிள்ளை திருவேங்கடாசாரியர் முத
லான ரிஸப்ஷன் கமிட்டி மெம்பர்களும் ஸங்கத்துக்கு அக்ராஸநாதிபதியாக
வரிக்கப்பட்ட ஸ்ரீமான். டிவான். பஹதூர். டி. டி. ரங்காசார்யர் வரவை எதிர்
பார்த்து ரெயில்வே ஸ்டேஷனில் சேர்ந்தார்கள். திருவளூரிலிருந்து ரெயிலில்
ஸ்ரீமான். ரங்காசார்யர். எழுந்தருளவே, முன் சொன்னவர்கள் எல்லாரும்
அந்த ஸ்வாமியை வாத்யகோஷத்துடன் மிக உத்ஸாஹமாய் ஊருக்குள் எழுந்
தருளப்பண்ணி அந்த ஸ்வாமிக்கு உத்திஷ்டமான விடுதியில் கொண்டுபோய்
விட்டனர்.

செவ்வாய்க்கிழமை இரவிலும் புதன் காலையிலும் வெளியிடங்களிலிரு
ந்து சபை அங்கத்தினர்களும் சபையின் ப்ரவ்ருத்தியிலும் ஸம்ப்ரதாய வ்ரு
த்தியிலும் ச்ரத்தாளுக்களான ஓவகு ஸ்வாமிகளும் எழுந்தருளிக்கொண்
டிருந்தார்கள். புதன் காலையில் ஸ்ரீ அழகியசிங்கர் அநுமதியால் மஹாஸங்க
ததியாராதநத்துக்கு அளிக்கப்பட்ட அதிவிஸ்தாரமாயும் ஸ்ரீ ஆதிவண்
சடகோப ஸ்வாமியினுடைய ஸாந்நித்யத்தினால் மஹநீயமுமான மடத்தில்
திருப்திகரமாய் யாவர்க்கும் ததீயாராதநம் நடந்தபிறகு, எல்லோரும் மது
ராந்தக ஹைஸ்கூல் கட்டிடத்தில் விஸ்தாரமானவும் அழகாயுமுள்ள நடுஹா
லில் சேர்ந்தனர். சபைக்கு அங்கத்தினர்களாகவும் அதிதிகளாகவும் உபந்யா
ஸச்ரவணத்தில் கௌதுகமுள்ளவர்களாகவும் வந்திருந்தவர்கள் 300 - பேர்க
ளுக்குக் குறைவில்லை. அப்படி வந்தவர்களில் உபந்யாஸங்கள் செய்வதாய்
ஒப்புக்கொண்ட ஸ்ரீ. உபய. திருப்பதி தேசிகாசார்யர், திருக்கோட்டியூர்
ஸௌம்ய நாராயணாசார்யர், சேட்லூர் நரஸிம்ஹாசாரியர், புத்தங்கோட்
டகம் ஸ்ரீநிவாஸாசார்யர், ராயம்பேட்டை க்ருஷ்ணமாசாரியர், நடாதூர்.
க்ருஷ்ணமாசாரியர் முதலான பஹு ஜ்ஞாந வைராக்யாநுஷ்டாந நிதிகளான
வைதிக ஸ்வாமிகளும் எ. வி. கோபாலாசார்யர், வேலூர் க்ருஷ்ணமாசார்
யர், தஞ்சாவூர் கோதண்டராமய்யங்கார், பெங்களூர். கருடாசார்யர், அஸிஸ்
டெண்டு கம்மிஷனராயிருந்து பென்ஷன் பெற்றவராயிருக்கிற பங்களூர்.
நாராயணய்யங்கார், மதுரை. எஸ். டி. க்ருஷ்ணய்யங்கார் சென்னை டி. நர



ஸிம் ஹய்யங்கார், சேலம் துரைஸாமி அய்யங்கார், புரோதத்தூர் ரெங்கா
சார்யர் முதலான ப்ரௌடர்களான பல லௌகிகர்களும் வந்திருந்தார்கள்.
இந்த ஸங்கத்துக்கு உ-வது. ௩-வது. தினங்களிலும் கூர்மம். ஸ்ரீ ரங்காசார்
யர், கட்டம் ரெங்காசார்யர் முதலான பல ப்ரபுக்கள் எழுந்தருளினார்கள்.

சுமார் 12-மணிக்கு எல்லோரும் சேர்ந்த உடனே ஸ்ரீ உபய. மாடபூசி.
திருவேங்கடாசாரியார் ஸாதரமாக எல்லோருக்கும் நல்வரவளித்தார். பிறகு
சபாத்யக்ஷர். ஸ்ரீமான் ராஜகோபாலாசார்யர் உசிதமான வசநங்களால்
ஸ்ரீமான் ரங்காசார்யரை அக்ராஸநாதிபதியாக விருக்கவேண்டினர். இதை
எல்லோரும் கரகோஷத்துடன் அங்கீகரிக்க, அந்தஸ்வாமி அக்ராஸநத்தை
அலங்கரித்தனர். உடனே அக்ராஸநாதிபதி ஸ்ரீமான் சேலம். விஜயராகவா
சார்யரிடமிருந்துவந்த ஒரு பத்ரிகையை விஜ்ஞாபநம் செய்தார். அதில் இந்த
ஸபையில் தனக்கு இருக்கும் விச்வாஸமும் தன்னால் வரக்கூடாத விஷ
யத்தில் வருத்தமும் இந்த மஹாஸங்கம் சிறப்புடன் நடக்கவேணுமென்கிற
ஆஸ்தையும் ஸ்ரீமான் விஜயராகவாசார்யரால் நன்றாய் விவரிக்கப்பட்டிருந்
தன. கோனேரி ராஜபுரம் வீரராகவாசார்யர் முதலான இன்னும் சில
ஸ்வாமிகளால் அனுப்பப்பட்ட அநுமோதந பத்ரிகைகளும் கார்யதர்சியால்
விண்ணப்பம் செய்யப்பட்டன. இதற்குப்பிறகு அக்ராஸநாதிபதி தன் உபந்
யாஸத்திற்கு முற்பட, இந்த தேசத்துக்குச் சில மஹாபாபிகளால் ஏற்பட்ட
ஓர் அவமான கரமான துக்கத்தைத் தெரிவித்தார். அதாவது நம்முடைய
சீர்பெற்ற சக்கரவர்த்திக்கு ப்ரதிநிதியான லார்ட் ஹார்டிஞ்சும் அவர் பத்நி
யும் புது ராஜதானியான டில்லிநகரை அலங்கரிக்க உத்தேசித்து ப்ரதமப்
ப்ரவேசம் செய்யுங் காலத்தில் யாரோ ஒரு துஷ்டன் ஓர் ஹிம்ஸாகர
மான யந்த்ரத்தை அவர் ஏறியிருந்த யானைக்கெதிராகப் போட்டதாகவும்
அதனால் கூட இருந்தவர்களில் ஒரு ஜமேதார் இறக்கவும் ராஜப்ரதிநிதிக
ளுக்கு தேகத்தில் காயம்பட்டு யானையை நிறுத்தி ஆஸ்பத்ரியில்போய் வ்ர
ணத்துக்குப் பரிஹாரம் செய்யவேண்டியதாய் ஆயிற்றென்றும் சமாசாரத்
தைத் தெரிவித்து அந்த விஷயத்தில் மஹாஸங்கத்தில் சேர்ந்த அனைவ
ருடைய கடுந்துக்கத்தையும் இந்த க்ரூரமான பாபிவிஷயத்தில் அளவற்ற
கோபத்தையும், ராஜப்ரதிநிதி யவர்களுக்கு சீக்ரம் உடம்பு ஸ்வஸ்தமாகி
நம்மை ஸுகமாய் அவர் பரிபாலித்து வரவேணுமென்று பகவானுக்கு நாம்
செய்யும் ப்ரார்த்தனையையும் காட்டி ஓர் தந்தி விண்ணப்பம் ஸங்கத்திலிரு
ந்து அனுப்பப்படவேணுமென்றும் பிரஸ்தாவித்தார். இதைக்கேட்ட அனைவ
ரும் இது அவச்ய கர்த்தவ்யமென்று சம்மதிக்க உடனே ப்ரதிநிதியின் அந்த
ரங்க கார்யதர்சிக்கு மேற்சொன்ன விஷயங்களடங்கிய ஓர் தந்தி அனுப்பப்
பட்டது. இதற்குமேலே சென்னபட்டணத்துக்குச் சென்ற மாசத்தில் புதி
தாய் கவர்னராகவந்து நம்முடைய க்ஷேமத்தைக்கருதிப் பரிபாலித்துவரும்
லார்ட் பெண்ட்லண்டுதுரைக்கும் அவர் பார்யைக்கும் நாம் நல்வரவு கூற
வேண்டுமென்று அக்ராஸநாதிபதி சொல்ல அப்படியே எல்லாரும் அனுமதி
த்து அந்த விஷயமாயும் ஒரு தந்தி கொடுக்கப்பட்டது.

பிறகு அக்ராஸநாதிபதி அவருடைய விசேஷமான பாண்டித்யத்தையும் ஸித்தாந்தாபிமானத்தையும் விளக்கும் ஓர் உபந்யாஸத்தைச் செய்தார். அதில் ஸ்ரீ அழகியசிங்கரும் சிஷ்யர்களும் ஸந்நிதி ஸம்ப்ரதாயாபிவ்ருத்திக்குச் செய்யவேண்டிய கார்யங்களும் பொதுவாய் ஆஸ்திகதை வ்ருத்தியடையச் செய்யவேண்டிய கார்யங்களும் நன்றாய்ச் சொல்லப்பட்டன. நம்முடைய ஶ்ருத்யநுகுணமான ஸித்தாந்தம் பாஶ்சாத்யர்கள் நிர்த்தாரணம் செய்திருக்கும் பரிணாமவாதத்தை ஏற்றுக்கொண்டதென்றும் ஆதுநிக நாஸ்திகவாதங்கள் யுக்திக்கும் ப்ரமாணங்களுக்கும் விருத்தங்களென்றும் தெரிவிக்கப்பட்டது. நம்முடைய ஸித்தாந்தம் யோகதசையில் மஹர்ஷிகளால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட தத்வார்த்தங்களடங்கியதாகையால் அது மிகவும் ஆதரணீயமென்று நிச்சயிக்கப்பட்டது. ஸத்யம், தர்மம், பூததயை, ஸமதர்சநம் முதலான நற்குணங்கள் எப்போதும் ஆஸ்திகர்கள்பக்கல் இருக்கவேண்டுமென்றும் ஸம்பரதாய பேதத்தால் விரோதங்கள் கூடாதென்றும் இதர ஸம்ப்ரதாயத்வேஷமில்லாத ஸம்பிரதாயாபிமானமே ஶ்லாக்யமென்றும் சொல்லப்பட்டது. தத்காலம் ஸம்பிரதாய வ்ருத்திக்குச் சிஷ்யஸபை அவஶ்யாபேக்ஷிதமென்றும் ஸபை ஏற்படாவிட்டால் ஸம்பரதாயம் நாமமாத்ரா வசேஷமாய் ஆய்விடுமென்றும் சொல்லப்பட்டது. இந்த ஸபையாருக்கு ஸ்ரீ அழகியசிங்கர் ஆநுகூல்யம் அவசியம் கிடைக்கவேண்டியதென்றும் இந்த விஷயத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் ஔதாஸீந்யம் அயுக்தமென்றும் எடுத்துக் கூறப்பட்டது. பெருமாள் ஸந்நிதிகளில் அர்ச்சகாதிகள் அபசாராவஹமான கார்யங்களைச் செய்யக்கூடாதென்றும் அப்படிச் செய்வதனுல் உண்டாகும் குறைகளை ஆஸ்திகர்கள் உபேக்ஷிக்காமல் நிவர்த்திக்க வேணுமென்றும் சொல்லப்பட்டது. இன்னும் பலவிதமான ஹிதோபதேசங்களைச் செய்து ஸர்வச்ரோதாக்களுக்கும் ஆநந்தாவஹமாய் மிகவும் அபிநந்தநீயமாயிருந்த உபந்யாஸத்தை அக்ராஸநாதிபதி சொல்லி முடித்தார். பிறகு ஸ்ரீமான். வாஸுதேவாசார்யர், ஸ்ரீ அஹோபிலமடத்தையும் ஸந்நிதி சிஷ்யர்கள் இனிச் செய்யவேண்டிய கார்யங்களையும் பற்றி விஸ்தாரமாய் உபந்யஸித்து நம்முடைய மடமென்னும் ஆஸ்தானம் பகவத் க்ருபையால் ஜ்ஞாநாநுஷ்டாநஸம்பந்நர்களாயும் வ்ருத்தர்களாயும் விரக்தியுள்ளவர்களாயுமுள்ள ஸ்வாமிகளாலேயே நிர்வஹிக்கத்தகுந்த தாகையாலும் பித்ருபுத்ர பரம்பரையாய் வரும் ஆசார்யபங்க்தியில் ஜ்ஞாநாநுஷ்டாநாநுவ்ருத்தி ஸித்தமென்று சொல்லமுடியாதாகையாலும் இந்த ஜ்ஞாநக்குறைவு முதலான ஸம்பாவிதங்களைக் கணிசித்தே இந்த ஆஸ்தாநம் ஏற்பட்டிருப்பதாலும் இந்த ஸம்பரதாயத்திலும் நல்ல ஸ்வாமிகள் ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளாமல் போனல் அது சிஷ்யர்களின் தௌர்ப்பாக்யம் என்றும் அந்த ஸம்பவங்கள் ஏற்படும் காலங்களில் சிஷ்யர்கள் உசிதமாய் ஸங்கங்களைச் சேர்த்து தங்களுக்குத் தோன்றும் சீர்திருத்தங்களை ஸ்வாமிகள் ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்யவேண்டியது அவஶ்ய கர்த்தவ்யமென்றும் இன்னும் பலவாறான நல்ல யுக்திகளையும் அபிப்ராயங்களையும் தெளிவாயும் வாசகதாடியும் ஸ்ரீ அழகிய சிங்க



ரிடத்தில் இருக்கவேண்டிய ப்ரதிபத்திக்குக் குறைவில்லாமலே கேட்டவர்கள் எல்லோரும் சிரக்கம்பம்பண்ணி அப்யுபகம் செய்யும்படியான விதமாய் உபந்யஸித்தார்.

இது முடிந்தவுடன் ஸ்ரீமான். கபிஸ்தலம் தேசிகாசார்யர் ஸ்வாமி விசிஷ்டாத்வைதத்தைப்பற்றி 1½ - மணி ஸாவகாசம் உபந்யாஸம் செய்தார். அந்த ஸ்வாமியும் தன் விசேஷமான பாண்டித்யத்துக்கு அனுகுணமாய், த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் ஆகிய மூன்று மதங்களிலிருக்கும் தாரதம்யங்களைச் சில வேதாந்தாதிகரணங்களினல் எடுத்துக்காட்டி, நம்முடைய ஸ்ரீ பாஷ்யத்துக்கு ஸூத்ராநுகுண்யம் மிகவும் ஸரளமாய் ஏற்பட்டிருக்கிறதென்றும், இதரமதங்கள் ஸூத்ரங்களின் முக்யார்த்தங்களைப் பல விடங்களில் விடவேண்டியதாயிருக்கிறதென்றும், தான் காசி முதலான விடங்களுக்குச் சமீபத்தில் எழுந்தருளினகாலத்தில் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் க்ரந்த ஸம்பந்தமான உபந்யாஸங்கள் பல விடங்களில் செய்ததாயும், அத்யாதரமாய் பல வடக்கு தேசத்திய வித்வான்கள் கேட்டுவந்ததாயும், நம் ஸம்ப்ரதாயங்கள் எல்லாம் ஏக ஸம்பரதாயங்களென்றும், ஊநாதிரேக பேதங்கள் நிர்நிபந்தநங்களென்றும் இன்னும் பஹுவிதமாக ஸரளவசனங்களினல் உபந்யஸித்தார். இத்துடன் ஸங்கத்துக்குக் கொஞ்சம் விராமம் கொடுப்பது அவசியமென்று அக்ராஸநாதிபதி சொல்ல, ஸங்கம் கலைந்தது.

பிறகு அரைமணிக்கெல்லாம் ஏற்கெனவே ஸதஸ்ஸுக்கு எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உபய. வித்வான். திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணுசாரியர் ஸ்வாமி ப்ரதமோத்திஷ்டமான ஶ்ருதி கீதை யென்கிற விஷயத்தைப் பார்க்கிலும் ஆசார்ய சிஷ்யபாவம் என்னும் விஷயம் ஸதஸ்ஸின் ரீதிக்கு அநுகுணம் என்று திருவுள்ளம்பற்றி அந்த விஷயத்தைப்பற்றி அஸ்தமயம் வரையில் உபந்யஸித்தார். இந்த ஸ்வாமி "பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத்" என்பது முதலான ஶ்ருதி வாக்யங்களை விஷய வாக்யமாய்ச்செய்துகொண்டு அதிநிபுணமாயும் விசேஷ அர்த்த ஸம்பூர்ணமாயும் வைஶத்யகாஷ்டையைத் தரித்ததாயும் விசித்ரார்த்தங்களினலும் லோக பரிசிதங்களான உதாஹரணங்களினலும் ச்ரோதாக்களின் மனஸ்ஸுகளை ஆகர்ஷித்து அம்ருதவர்ஷம்போன்ற வசந ப்ரவாஹத்தினல் அத்யாத்ருஶமான ஸௌஹித்யத்தை உண்டுபண்ணினர். இதைக்கேட்ட ஸங்கம் ஏக மனஸ்ஸாய் இப்படிப்பட்ட வசநங்களை நிறுத்துவது அஸஹ்யமென்று எண்ணினதால் அதையறிந்த ஸபாத்யக்ஷரான ஸ்ரீமான். ராஜகோபாலாசார்யர் ஸத்யாநந்தரமும் இந்த உபந்யாஸத்தை நடத்தி ப்ருக்ருத ஶ்ருதி விவரணத்தைத்தலைக்கட்டவேணும் என்று ஸ்ரீ ஸ்வாமியை ப்ரார்த்தித்தார். இதை உடனே ஸ்வாமி அப்யுபகமம்செய்ய ஸபை கொஞ்சம் கலைந்து மறுபடி ஏழரை மணிக்கெல்லாம் ஔத்ஸுக்ய பரிதர்களாய் எல்லோரும் சேர்ந்தனர். ஸ்ரீ ஸ்வாமி பிறகு முன்போலவே ஆஹ்லாதகரமான வ்யாக்யா

னத்தைச்செய்து "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்னும் ப்ரதம ஸூத்ரத்தின் விஷயமான மேற்சொன்ன ச்ருதியை பாலர்களும் எளிதில் அறியும்படியும் புநருக்தியை யபேக்ஷிக்காத வைசத்யத்துடனும் ப்ரஸங்கித்து எல்லோரையும் ஆநந்திப்பித்தார்.

மறுநாள் 1-மணிக்கு ஸங்கம் மறுபடியும் சேர்ந்தது. ஸ்ரீமான். எ. வி. கோபாலாசார்யர் ஸ்வாமி "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என்னும் வாக்யத்தில் உபக்ரமித்த சாண்டில்யவித்யையைப்பற்றி உபந்யஸித்தார். ஸ்ரீபாஷ்யம், ச்ருதப்ரகாசிகை, பாமதி, நயமயூகமாலிகை, தத்வமார்த்தாண்டம் முதலான ப்ரௌடக்ரந்தங்களில் அவருக்குண்டாயிருக்கும் விசதமான ஜ்ஞாநத்தைத் தெரிவித்து, வந்திருந்த வித்வான்களுக்கு மிகுந்த மநோல்லாஸத்தை உண்டு பண்ணினார். லௌகிக வ்யாபாரங்களிருக்கச்செய்தேயும் துரூஹமான விஷயத்தில் இந்த ஸ்வாமி பாண்டித்யம் ஸம்பாதித்திருப்பது எல்லோர்க்கும் விஸ்மயத்தை உண்டுபண்ணிற்று. இதற்குப் பிறகு ஸ்ரீமான். ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யர்ஸ்வாமி ஸ்ரீநிகமாந்த தேசிகன் கவிதை விஷயமாய்த்தான் உபந்யஸிக்க விரும்புவதாய் ஸாதிக்க அபிநவ பாணபட்டரென்று பிருதும் காவ்யரசனையில் துரீணதையுமுள்ள இந்த ஸ்வாமியின் வசநத்தை எல்லாரும் அநுமோதித்தார்கள். உடனே அந்த ஸ்வாமி யாதவாப்யுதயம், ஹம்ஸஸந்தேசம், ஸங்கல்பஸூர்யோதயம் முதலான காவ்யச்லோகங்களை உதாஹரித்து ஸ்ரீகாளிதாஸகவிதைக்குப் பலவிதத்தில் ஏற்றம் ஸர்வஸம்ப்ரதிபன்னமாயிருந்தும் பல ஸந்தர்ப்பங்களில் நிகமாந்த தேசிகன் திறமைக்கு அது ஸத்ருசமாகாதென்று எல்லோரும் எண்ணும்படி ப்ரஸங்கித்து ஆஹ்லாதத்தை உண்டுபண்ணினார். ஸ்ரீமான் புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசார்யர் மோக்ஷஸ்வரூப விஷயமான உபந்யாஸம் இந்த இரண்டாவது தினத்திலேயே நடந்தது. அதில் அந்த ஸ்வாமி சார்வாக, பௌத்த, ஜைந, ந்யாய வைசேஷிகாதி தர்சநங்களில் மோக்ஷஸ்வரூப விஷயமான அபிப்ராயங்களை உபந்யஸித்து அவைகள் அயுக்திகமென்றும் பலத்தில் மந்தங்களென்றும் சொல்லி அத்வைதிகளுடைய ப்ரக்ரியையும் ப்ரமாணவிருத்தமென்று காட்டி நம் ஸித்தாந்தத்தின் மோக்ஷவிஷய நிர்த்தாரணங்கள் ஸர்வ ப்ரமாணாநுகுணங்களென்றும் எடுத்து ஸாதித்தார். இந்த விஷயமும் துரூஹமானாலும் உபந்யாஸகரின் விசதமான வசநங்களாலும் யுக்திகளாலும் எல்லோரும் அறிந்து ஆநந்திக்கக்கூடியதாயிருந்தது.

மூன்றாவது தினமாகிய வெள்ளிக்கிழமை பகல் 12-மணிக்கு ஸங்கம் மறுபடியும் சேர்ந்தது. வந்திருந்தவர்கள் ஸங்க்யையாவது அவர்கள் உத்ஸாஹமாவது கொஞ்சமேனும் குறையவில்லை. இந்த தினத்தில் பகல்நிவட்டி சடகோபாசார்யர் ஸ்வாமி பகவத்கைங்கர்ய விஷயமான உபந்யாஸத்தைச்செய்தார். அவர் நம்முடைய ஸம்ப்ரதாயாபிவ்ருத்திக்கு ஆசார்ய க்ரந்தங்களை காலக்ஷேபம்செய்வதே அவச்யாபேக்ஷிதமென்றும் அதற்குப் பண்டிதர்கள்



உபந்யாஸங்களுடன் பல விடங்களில் பாடசாலைகள் ஏற்படுத்துவது அவச்யமென்றும் அப்படிச்செய்தாலொழிய நம் ஸம்ப்ரதாயம் மழுங்கிப்போய் விடுமென்றும் தமிழ்ப் பாஷையை வ்யாகரண ஸஹிதமாய் கற்றாலொழிய நாம் திருவாய்மொழி முதலான விஷயங்களை அறிய முடியாதென்றும் இந்தப் பாடசாலை விஷயமான ப்ரவ்ருத்தி தான் செய்துவருவதாயும் அதில் எல்லோரும் அந்வயித்து உபகரித்தால் நன்றாயிருக்குமென்றும் உபந்யஸித்தார். அக்ராஸநாதிபதியும் இந்த ஸ்வாமியின் நிஸ்ப்ருஹமான கைங்கர்யங்கள் லோகப்ரஸித்தமாகையால் இந்த விஷயத்தில் யாவரும் யதா சக்தி உபகரிக்க வேணுமென்று எடுத்துக்கூறினார்.

பிறகு சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி பகவத்விஷயத்தைப்பற்றி உபந்யஸித்தார். நம் ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் "பகவத்விஷயம்" என்கிற அஸாதாரணத் திருநாமத்தின் காரணத்தையும் திருவாய் மொழியின் சதகார்த்தங்களையும் ப்ரதம சதகத்தில் முதல் தசகத்தின் அர்த்தங்களையும் ஸங்க்ரஹித்து, '[illegible]' என்றும் '[illegible]' என்றும் சொல்லப்பட்ட ப்ரகரணங்களில் முதலான "அஞ்சிறைய மடநாராய்" என்னும் திருவாய்மொழியின் முதற் பாசுரத்தைமாத்ரம் விவரித்து அதினால் எல்லோருக்கும் நிரதிசயமான ஆஹ்லாதத்தை உண்டுபண்ணினார். வந்திருந்தவர்களெல்லோரும் அஸ்தமயம் ஸமீபிக்கிறதே யென்று துக்கிக்கும்படியாயிருந்தது. பிறகு ஸ்ரீமான் ராயம்பேட்டை ஸ்வாமி "பக்தியோக" விஷயமாய் ஒரு சிறந்த உபந்யாஸத்தைச்செய்தார். இதில் ஸங்க்ரஹமானாலும் நல்ல உபபாதநத்துடனே பக்தியின் ஸ்வரூபம், அதின் அதிகாரியின் லக்ஷணங்கள், அதின் அங்கங்கள், அதின்பலம், ப்ரபந்நனுக்கும் பக்தனுக்கும் உள்ளவாசி இவை ஸ்ரீபாஷ்யாதி வாக்யோதாஹரண பூர்வகமாய் விவரிக்கப்பட்டன. அநந்தரம் ஸ்ரீ. உபய. அபிநவ ஸரஸ்வதி. நடாதூர் க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி ந்ருஸிம்ஹ வைபவ விஷயமான ஓர் உபந்யாஸத்தைச் செய்தார். அதில் ஸபையையும் அக்ராஸநாதிபதியையும்பற்றி ச்லாகாவஹமான சில ஸ்வநிர்மிதமான ஸரளபதயங்களைச்சொல்லி ந்ருஸிம்ஹாவதார விஷயமான சில ச்லோகங்களை மதுரமாய் கானம் செய்து அவதார கட்டத்தை உபந்யஸித்தார். இத்துடன் ஸந்த்யார்த்தமாய் ஸபைகலைந்தது.

பிறகு ராத்திரி 8-மணிக்கு ஸ்ரீ. உப. திருப்புல்லாணி ரகுபதி அய்யங்கார் ப்ரக்ருதோபயோகமாய் ஸபாவ்ருத்தி விஷயத்தைத் தான் சொல்வதாய்ப் புகுந்து, இந்த ஸபையின் ஆவச்யகதையையும், ஸ்ரீ அழகிய சிங்கர் இதனிடத்தில் விச்வாஸம் செய்யவேணுமென்பதையும், இந்த ஸபையின் பலங்கள் உடனே கிடைக்கவில்லையென்று அதிர்ப்தி கூடாதென்பதையும் சொல்லி, சபையின் செலவில் இரண்டு பண்டிதர்கள் ஸமர்த்தர்களாய் நியமிக்கப்படவேணுமென்றும், அவர்கள் பல ஜில்லாக்களில்போய் உபந்யஸித்தால் ஸம்ப்ர

தாயவ்ருத்தி சீக்கிரம் கைகூடுமென்றும், இந்த மார்க்கத்தாலும் வேதாந்த தீபிகையின் ப்ரசாரணத்தாலும் நம்மநோரதங்களெல்லாம் ஸித்திக்குமென்றும் வசநதாடியாய்ப் பலரும் ஆநந்திக்கும்படி உபந்யஸித்தார். கடைசியில் மதுராந்தகம் ஸ்ரீ. மாடபூசி. திருவேங்கடாசார்யர் ஸ்வாமிகளின் ததீயாராதந விஷயமாகத் தாங்கள் செய்த ஏற்பாடுகள் குறைவுள்ளவைகளாயினும் அவைகளைப் பூர்ணங்களாய் எல்லாரும் பாவிக்கவேண்டுமென்றும் ஸ்ரீ அழகியசிங்கர்களில் அனேகர் மதுராந்தகத்தில் முன் காலத்தில் எழுந்தருளி அநுக்ரஹித்தார்கள் என்றும் மற்றும் ஸ்ரீ பாஷ்யக்காரருக்குப் பெரிய நம்பிகள் த்வய மநுக்ரஹித்த மஹிமை அவ்வூருக்குண்டென்றும் உபந்யஸித்தார்.

இதற்குப்பிறகு ஸ்ரீ அக்ராஸநாதிபதி மறுபடியும் ஓர் சிறந்த உபஸம்ஹார ரூபமான உபந்யாஸம் செய்தார். அதில் ஸ்ரீ மதுராந்தக ஸ்வாமிகளின் ச்ரத்தையையும் உபசாரங்கள் பரிபூர்ணமாய் திருப்திகரமாயிருந்ததையும் சொல்லி, ஸ்ரீ அழகிய சிங்கருக்கு மடம் உதவிய விஷயத்தில் சபையார் க்ருதஜ்ஞதையையும் வெளியிட்டு ஸம்ப்ரதாய வ்ருத்திக்கு அவச்யமான சில உபதேசங்களையும் சொல்லி முடித்தார். அநந்தரம் ஸபாத்யக்ஷரான ஸ்ரீமான் ராஜகோபாலாசார்யர். அக்ராஸநாதிபதியின் அஸாத்ருசமான ஸாமர்த்யத்தையும் ஸபைக்கு எழுந்தருளி விஸ்தாரமான உபந்யாஸங்களைச் செய்ய ஏற்றுக்கொண்ட க்ருபையையும் புகழ்ந்து, அந்த ஸ்வாமிக்கு எல்லோரும் அக்ருத்ரிமமான க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரணம்பண்ண வேணுமென்றுசொல்ல ஸங்கத்தார் அனைவரும் மிக உத்ஸாஹத்துடன் கரகோஷங்கள் செய்தனர். பிறகு ஸ்ரீ மதுராந்தகம் ஸ்கூல் அதிகாரிகள் ஸங்கம் நடந்த ஹாலை உபகரித்ததற்கும், ஸ்ரீ மதுராந்தகம் ரிஸெப்ஷன் கமிட்டியார் செய்த விசித்ரமான ஏற்பாட்டுக்கும் எப்பொழுதும், ப்ரேஷ்யர்களாய் ஸந்நிஹிதர்களாயிருந்து கார்யங்களை நிர்வஹித்த "வாலண்டியர்கள்" என்னும் சிறுவர்களுக்கும், அவர்கள் தலைவரான ஸ்ரீமான். வி. எஸ். ரங்கஸ்வாமி அய்யங்காருக்கும் மஹாஸங்கத்தைச் சிறப்பித்த ஸ்வாமிகளுக்கும் தன் வந்தநங்களை தெரிவித்தார். முடிவில் ஸபாத்யக்ஷர்,

ஹோவர்த்தணஸ்ய ரயாயிந ராமோ ந்ருஜ நிஷேவிதம் ।
வந்தே ஜாநகீஜாநிம் கருணா வருணாலயம் ॥

என்று, ஸ்ரீராமவிஷயமாய் ஓர் ச்லோகத்தை விஜ்ஞாபநம்செய்து இந்த ஸங்கத்தைக் குறைவின்றி நிறைவேற்றி அநுக்ரஹித்த பகவானை அநுஸந்தித்தார். இத்துடன் ஸங்கம் கலைந்தது.

இந்த ஸங்க தினங்களான மூன்றுநாள்களிலும் சுமார் 300 - பேர் வரையில் ஸ்வாமிகள் எழுந்தருளி ததீயாராதநத்தை அலங்கரித்தார்கள். அக்ராஸநாதிபதி சொல்லியிருக்கிறபடி யாதொரு குறைவில்லாமல் ததீயாராதனத்தை நிர்வஹித்து ஸதா ஜாகரூகர்களாய் எல்லோரையும் உபசரித்த ஸ்ரீமான் அ. திருவேங்கடாசார்யர், க்ராம முனிசீப் வி. ராகவாசார்யர், அருணபுரம். ராகவாசார்யர், வி. எஸ். ரங்கஸ்வாமி அய்யங்கார், பள்ளிப்பட்டு திருவேங்கடாசார்யர் முதலான ஸ்வாமிகளின் ச்ரத்தையும் ஔதார்யமும் நிர்வாஹஸாமர்த்யமும் எல்லோர்க்கும் ஆநந்தத்தை அளித்தன. இதற்குத்தகுந்த கைம்மாறு அவர்களுக்குச் சபையார் செய்யக்கூடியது யாதொன்றுமில்லையென்பது ஸித்தம். ஆனால் இந்தவிஷயத்தில் ப்ரத்யுபக்ருதியையாவது ச்லாகையையாவது அவர்கள் அபேக்ஷிக்காதவர்கள் என்று நன்றாய்த் தெரியவந்தது. இப்படி மஹாஸங்கத்தைச் சிறப்புடன் நடத்திவைத்த ஸ்வாமிகளுக்கு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் பூர்ணமான ஐச்வர்யத்தையும் ஆரோக்யத்தையும் மற்ற புருஷார்த்தங்களையும் கொடுப்பார் என்பதில் ஸந்தேஹமில்லை.



இந்த மஹாஸங்க தினங்களில் இரண்டாவதான வியாழக்கிழமைதினம் உபந்யாஸாரம்பத்தில் அக்ராஸநாதிபதி சபையின் அங்கத்தினர்களின் மீடிங்கை உபக்ரமித்துப்பின் வரும்தீர்மானங்களை எல்லா அங்கத்தினர்களின் அபிப்ராயமாக நிர்த்தாரணம் செய்து வெளியிட்டார். அந்தத் தீர்மானங்களை இதனடியில் அச்சிட்டிருக்கிறோம். மேலும் சபையின் கார்யதர்சியால் படிக்கப்பட்ட சென்ற வருஷத்திய ரிபோர்ட்டை எல்லாரும் அங்கீகரித்தார்கள். பிறகு சபையின்விதிக்கு அநுகுணமாய் புதியவருஷத்துக்குப் பின்வரும் நிர்வாஹ கமிட்டியார் ஏற்படுத்தப்பட்டார்கள். மேலும் 8 - வது தீர்மானத்தை அநுசரித்துச்சிலர் த்ரவ்யசகாயம் செய்வதாய் ஒப்புக்கொண்டு உடனே தங்களால் உபகரிக்கக்கூடிய தொகையையும் குறிப்பிட்டார்கள். வேதாந்ததீபிகை இந்தஸபையின் வ்ருத்திக்கு அவச்யமென்று பலபேரும் புகழ்ந்து அதன் விஷயமாயும் பலஸ்வாமிகள் உபகரிப்பதாய் அறிவித்தார்கள். இவர்கள் உத்ஸாஹத்தைப்பார்த்து மற்றவர்களும் இப்படியே செய்வார்களென்று நம்புகிறோம்.

ஸ்ரீ:.

# ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யஸபை.

மதுராந்தக மஹாஸங்கத்தில் டிஸம்பர் 25, 26, 27ஷ களில் நடைபெற்ற விஷயங்களின் ஸூசிகை.

## டிவான பஹதூர் டி. டி. ரங்காசார்யா ஸ்வாமி அக்ராஸநாதிபதி.

**மார்கழிமூ 11ஷ புதன்கிழமை.**

பகல் 11-30 மணி
1. நல்வரவு அளித்தல். ஸ்ரீமான். மாடபூசி. திருவேங்கடாசாரியர், மதுராந்தகம்.
2. அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம்.
3. 'அஹோபிலமடமும் அதன் சிஷ்யர்களும்' ஸ்ரீமான். எஸ். வாஸுதேவாசார்யர் பி-ஏ,. எல். டி.

3 மணி
4. 'விசிஷ்டாத்வைதம்' ஸ்ரீ. உபய. கபிஸ்தலம் தேசிகாசார்யர்.
5. 'ஆசார்ய சிஷ்யபாவம்' - ஸ்ரீ உபய திருக்கோட்டியூர். ஸௌம்ய நாராயணா சார்யர்.

**மார்கழிமூ 14ஷ வியாழக்கிழமை.**

காலை 9 மணி நிர்வாஹக கமிட்டியார் மீடிங்.

பகல் 1 மணி அங்கத்தினர்கள் மீடிங்.

2 மணி
1. 'ஶாண்டில்ய வித்யை' ஸ்ரீமான். ஏ. வி. கோபாலா சார்யர் எம். ஏ. பி. எல்.
2. 'மோக்ஷ ஸ்வரூபம்' ஸ்ரீ உபய. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.
3. 'ஸ்ரீ வேதாந்த தேசிகரின் கவிதை' ஸ்ரீ உபய ராயம்பேட்டை. க்ருஷ்ணமாசார்யர்.

இரவு 9 மணி
• 'ஹரிகதை, விபீஷணர் சரணாகதி' ஸ்ரீமான் எம். கே. தாதாசாரியர். பி. ஏ.

**மார்கழிமூ 13ஷ வெள்ளிக்கிழமை.**

பகல் 1 மணி
1. 'கைங்கர்ய வைபவம்' ஸ்ரீ உபய. பகல்தீவட்டி சடகோபாசார்யர்.
2. 'பகவத்விஷயம்' ஸ்ரீ உபய. சேட்லூர். நரஸிம்ஹா சார்யர்.
3. 'லக்ஷ்மீந்ருஸிம்ஹ வைபவம்' ஸ்ரீ உபய. நடாதூர் - க்ருஷ்ணமா சார்யர், நாச்சியார் கோயில்.
4. 'பக்தியோகம்' ஸ்ரீ உபய. ராயம்பேட்டை க்ருஷ்ணமா சார்யர்.

இரவு 8 மணி
1. 'ஸபாவ்ருத்தி' ஸ்ரீ உபய. திருப்புல்லாணி ரகுபதி ஐயங்கார்.
2. அக்ராஸநாதிபதியின் உபஸம்ஹாரம்.

ஸ்ரீ:.

# எக்ஸிக்யுடிவ் போர்ட்டாரின் மீடிங்.

(மார்கழிமீ 12ஷ-டிசம்பர் 26ஷ.)

ஸ்ரீ மதுராந்தகத்தில் நடந்த மூன்றுவது மஹாஸங்க தினங்களில் இரண்டாவதான மார்கழிமீ 12ஷ காலை 9 - மணிக்கு ஸ்ரீ சிஷ்யஸபையின் எக்ஸிக்யுடிவ் போர்ட்டார் அக்ராஸநாதிபதியின் வஸதியில் சேர்ந்தார்கள். ஸபாத்யக்ஷர் ஸ்ரீமாந். ராஜகோபாலாசாரியர் அக்ராஸநாதிபதியா யிருந்தார். ஸ்ரீமான் டிவான் பஹதூர். ரங்காசார்யர் ஸ்வாமி ஸந்நிஹிதராய் எழுந்தருளியிருந்து உசிதமான ஹிதங்களை அந்தந்த ஸமயத்தில் சொல்லி வந்தார். இந்த ஸங்கத்தில் நிர்ணயித்த விஷயங்கள்.

1. ஸ்ரீமான் கார்யதர்சி சித்தூர் ராஜகோபாலா சார்யரால் முன்வருஷத்திய ரிபோர்ட்டு படிக்கப்பட்டது. அதில் இரண்டொரு அம்சங்களைமாற்றி மற்றதுகளையும் அதுஸம்பந்தமான கணக்குகளையும் ஆடிட்டர் ரிபோர்ட்டையும் அங்கத்தினர் மீடிங்கில் தெரிவிக்க வேணுமென்று நிச்சயிக்கப்பட்டது.

2. ஸ்ரீ வேதாந்ததீபிகையின் சந்தாதாரர்தொகை அதிகமாக வேணுமென்றும் அதன் வ்ருத்திக்கு சுமார் 500 - ரூபாய் வரையில் முன்பணம் தேவையென்றும் ஸ்ரீமான். வாஸுதேவா சார்யர் தெரிவித்தார். அதன் பேரில் தகுந்தபடி அங்கத்தினர்களுக்குத் தெரிவித்து ஷை தொகையைவசூல் செய்து பத்ரிகையை நிறுத்தாமல் நடத்திவரவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது.

3. அங்கத்தினர் மீடிங்கில் தீர்மானிக்கவேண்டிய விஷயங்கள் இன்ன இன்னவையென்று சர்ச்சைசெய்து நிர்ணயிக்கப்பட்டது. இதன் விவரம் பின் அச்சிட்டிருக்கும் மீடிங்கின் தீர்மானங்களினால் தெரியவரும்.

## அங்கத்தினர் மீடிங்கும் அதில்செய்த தீர்மானங்களும்.

மார்கழிமீ 12உ வியாழக்கிழமை சுமார் 1 - மணிக்கு உபந்யாஸங்கள் ஆரம்பிக்குமுன் அக்ராஸநாதிபதி அங்கத்தினர்களுக்கு ஏற்கெனவே எக்ஸிக்யுடிவ் போர்ட்டாரால் நிர்ணயித்த விஷயங்களை அறிவித்து அவைகளுக்கு விப்ரதிபத்தி இல்லாமல் எல்லோரும் ஸம்மதித்ததை கரகோஷங்களினால் வெளிப்படுத்தின. அந்த தீர்மானங்களாவன.

(1) ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்யஸபையின் அநுவ்ருத்தமான வ்ருத்தியை உத்தேசித்து ஸ்ரீ அழகியசிங்கர் ஸபையின் போஷகராக இருக்க வேணுமென்று மறுபடியும் ப்ரார்த்திக்கப் படவேண்டும்.

(2) ஸ்ரீ ஸந்நிதியின் ஆதாயவ்யயங்களைச் சேர்ந்த கணக்குகளைச் சரிவர வைத்து வரவும், வரக்கூடிய வரும்படிகளைச் சிதறாமல் வசூலிக்கவும், பல ஸ்தாவர சொத்துக்கள் அந்யாக்ராந்தமாய்ப் போய்விடுவதால் அவைகளைக்கெவனித்து நடவடிக்கைகள் ஏற்பாடுசெய்யவும், மற்றும் ஸ்ரீ ஸந்நிதியின் லௌகிக கார்யங்களைக் கெவனித்துவரவும் ஸமர்த்தரான ஒரு மானேஜரை, தகுந்த சம்பளத்தில் நியமிக்க ஸ்ரீ அழகியசிங்கர் க்ருபைசெய்யவேண்டும்.

(3) ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்களின் ஆத்மோஜ்ஜீவநம் அத்யந்தம் முக்கியமானதால் அதற்கு அவஶ்யா பேக்ஷிதமான க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபம் ஸ்ரீ ஸந்நிதியில் ஸ்ரீ அழகிய சிங்கரால் உபக்ரமிக்கப்பட்டாலும் அது ஸ்திரப்பட அடிக்கடி சிந்தனை செய்விக்க வேண்டியது அவசியமானதால், அதற்காக சரீரதார்ட்யம், வசனபாடவம், பாண்டித்யம், அநுஷ்டாநம் முதலானகுணங்கள் பொருந்திய வித்வான்களை ஸ்ரீ ஸந்நிதியிலும் இதரமுக்யஸ்தலங்களாகிய திருக்குடந்தை, பெருமாள் கோவில், திருவளூர், திருநாராயணபுரம், திருப்பதி, மதுராந்தகம் முதலான இடங்களிலும் ஸ்ரீ அழகிய சிங்கர் நியமிக்க க்ருபை செய்யவேண்டும்.

(4) ஸ்ரீ மடத்தின் அபிவ்ருத்திக்காகவும் ஸம்ப்ரதாய வ்ருத்திக்காகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஸ்ரீ வேதாந்ததீபிகை என்னும் பத்ரிகை ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த யாவர்க்கும், அதிலும் விசேஷமாய் ஸம்ஸ்க்ருத ஜ்ஞானமும் ஸாவகாசமும் இல்லாத பல லௌகிக ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் உபயுக்தமான ஸாம்ப்ரதாயிக விஷயங்களை எளிதில் அறிய மிகவும் உபகாரகமா யிருப்பதால் அதுவிஷயத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் த்ரவ்ய ஸஹாயஞ்செய்து க்ருபைசெய்யவேணும்.



(5) இந்த ஸபையாருடைய ப்ரதம ப்ரார்த்தனையாகிய திருநாராயணபுரம் ஸ்ரீ ஆதிவண் ஶடகோபஸ்வாமி ப்ருந்தாவநத்தின் பரிஷ்காரத்தை ஆஜ்ஞாபித்து. அதை பூர்த்திசெய்வித்தநுக்ரஹித்த ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடிகளில் இந்த ஸபையார் தங்கள் க்ருதஜ்ஞதையை ஸவிநயமாய் விஜ்ஞாபநம் செய்திருக்கிறார்கள்.

(6) ஸ்ரீ வேதாந்ததீபிகையில் ப்ரசுரமாயிருக்கிற படங்களினால், நம் ஸம்ப்ரதாய ஸ்தாபநாசார்யரான ஸ்ரீ ஆதிவண் ஶடகோபஸ்வாமிக்கும் மற்ற பின அழகியசிங்கர்களுக்கும் ஆராத்ய தெய்வமாகிய ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு மூலஸ்தாநமாகிய ஸ்ரீ அஹோபிலம் கீழ்மேல் ஸந்நிதிகள் அத்யந்தம் ஜீர்ணமாயிருப்பதாய் வ்யக்தமாகிறபடியால், அது விஷயத்தில் தகுந்த ஜீர்ணோத்தார வ்யாபாரத்தை ஸ்ரீ அழகியசிங்கர் நியமித்து த்ரவ்யஸஹாயமும் செய்யவேணுமென்றும், அது விஷயமாய் வேண்டியதைச்செய்ய உத்யுக்தர்களான ஸ்ரீமான் புரோதத்தூர் ரெங்காசார்யர் முதலான ஸ்வாமிகளை இந்த கார்யத்தில் நியமிக்கவேண்டுமென்றும் சிஷ்யஸபையாரால் ப்ரார்த்திக்கப் படுகிறது.

(7) ஸ்ரீ ஸந்நிதிக்குச் சொந்தமாயும் விசேஷமாய்ப் புதுப்பித்தலை அபேக்ஷிக்கிறதுமான மடங்களும் கட்டடங்களும் திருப்பதி, மைசூர், மதுராந்கம், முதலான பலவிடங்களில் இருப்பதால் அவைகளின் புதுப்பித்தல் விஷயத்திலும் ஸ்ரீ அழகிய சிங்கர் உசிதமான த்ரவ்ய ஸஹாயம் செய்து அங்கு இருக்கும் உபபந்நராயும் பக்தர்களாயுமுள்ள சிஷ்யர்களின் ஸஹகாரித்வத்தை நியமித்து க்ரமஶ: எல்லா கட்டடங்களையும் புதுப்பித்து வரவேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது.

(8) இந்த ஸபையின் வ்யாபாரங்களில் முக்யமானவை பண்டிதர்களைக் கொண்டு பலவிடங்களில் உபந்யாஸங்கள் செய்விக்க வேண்டியதும் வேதாந்த தீபிகையை விடாமல் இதுவரையில் நடந்துவந்த ரீதிக்கு மேற்பட்டே நடத்திவரவேண்டியது மாகையால் இந்த இரண்டு விஷயங்களில் ஒவ்வொன்றுக்கும் ஶ்ரத்தாளுக்களான எல்லா ஸ்வாமிகளும் த்ரவ்யஸஹாயம் செய்ய வேண்டுமென்றும், அந்த த்ரவ்யங்கள் தனித்தனியாய் ஸபையின் பொது பணடென்றும் தீபிகை பண்டென்றும் பெயருள்ளனவாய் இருக்கவேண்டியதென்றும், அவைகளின் ரக்ஷணம், பூரணம், விநியோகம் முதலான எல்லா கார்யங்களுக்கும் ஸபையின் எக்ஸிக்யுடிவ் போர்ட்டாரே அதிக்ருதர்களாயிருக்கவேண்டுமென்றும், இந்த த்ரவ்யங்களைக்கொண்டு யதாசக்தி பண்டி

தர்கள் நியமனமும் தீபிகையின் ப்ரசாரமும் நடத்தப்பட்டு வரவேண்டிய தென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(இந்தத் தீர்மானத்தை அநுஸரித்து வந்திருந்தவர்களில் பல உபபந்நாகளான ஸ்வாமிகள் ரூபாய் 1000 - வரையில் பொதுபண்டுக்கும், ரூபாய் - 315 வரையில் தீபிகை பண்டுக்கும் உபகரிப்பதாய் கையெழுத்துச் செய்திருக்கிறார்கள். இவைகளின் விவரம் இந்த ஸஞ்சிகையில் வேறிடத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

(9) இந்த வருஷாந்த ஸங்கத்தை அநுஸரித்ததாய் ஒரு பண்டித ஸதஸ்ஸும் வித்யார்த்திகள் பரீக்ஷையும் ஒவ்வொருவருக்கும் உசிதமான ஸம்மானமும் ஏற்படுத்தவேண்டியது அவச்யமென்றும் இந்த விஷயத்திலும் எக்ஸிக்யுடிவ் போர்ட்டார் உசிதமான ஏற்பாடுகள் செய்து த்ரவ்யார்ஜனமும் செய்து அதன் வரவு செலவுகளுக்குச் சரியான கணக்குகளை அடுத்த ஸங்க காலத்தில் அங்கத்தினர்களுக்கு அறிவிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(10) இந்த ஸங்கத்தின் தீர்மானங்களில் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு விஜ்ஞாபநம் செய்யவேண்டியவைகளை ஸபையின் அதிகாரிகள் ஸ்ரீ அழகிய சிங்கரிடம்போய் விஜ்ஞாபநம் செய்யவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த மீடிங்கில் ஸபையின் விதிகளில் 16-வது விதியில் 'பொது செக்ரிடெரி' என்பதற்குமுன் 'ஒன்றல்லது அதிகமான' என்று சேர்க்கப்பட்டது. இப்படி மேற்சொன்ன தீர்மானங்களைச் செய்தவுடன் புது வருஷத்துக்கு அத்யக்ஷர், உப அத்யக்ஷர், கார்யதர்சிகள் ஆகிய முக்யாதிகாரிகளை நியமிக்க அக்ராஸநாதிபதி ப்ரஸ்தாவிக்க, அடியில்கண்டபடி அவர்களும் பிறகு ஸபையின் விதிகளை யனுஸரித்து நிர்வாஹககமிட்டியின் மற்றைய அங்கத்தினர்களும் வந்திருந்த அங்கத்தினர்கள் எல்லாரும் ஸந்தோஷத்தினால் அங்கீரிக்கும்படியாய் நியமிக்கப்பட்டார்கள். பிறகு உபந்யாஸங்கள் நடந்தன.

---

## 1913 - ம் வருஷத்திய

# நிர்வாஹக கமிட்டியின் அங்கத்தினர்.

ஸபாத்யக்ஷர் :— ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர் எம்,ஏ., பி. எல்., சென்னை.

உபஸபாத்யக்ஷர் :— ,, வே. க்ருஷ்ணமாசார்யர், பி.ஏ., டிப்டி கலெக்டர்.

கார்யதர்சிகள் :— ,, ஸி. ராஜகோபாலாசார்யர், பி.ஏ., பி.எல்., சித்தூர்.

,, ,, டி. கோதண்டராம ஐயங்கார், பி.ஏ., எம்.எல்., தஞ்சாவூர்.

மற்றமெம்பர்கள் : ,, வி. ராகவாசார்யர், பி.ஏ., பி.எல்., சென்னை.

,, ,, எஸ். வாஸுதேவாசார்யர், பி.ஏ., எல்.டி., சென்னை.

,, ,, டிவான்பஹதூர். டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்., திருவளூர்.

,, ,, அ. திருவேங்கடாச்சார்யர், மதுராந்தகம்.

,, ,, பி. டி. ஸேஷாத்ரியாசார்யர், பி.ஏ., பரவூர்.

,, ,, எஸ். ராஜகோபாலாசார்யர், பி.ஏ.,பி.எல்.,கூடலூர்.

,, ,, எஸ். ஆராவமுது ஐயங்கார், திருக்குடந்தை.

,, ,, எஸ். க்ருஷ்ணமாசார்யர், தேவஸ்தாநம் மானேஜர். ஷை

,, ,, பி. என். க்ருஷ்ணஸாமி ஐயங்கார், பி.ஏ., பி.எல்., கோயம்புத்தூர்.

,, ,, டி. ரங்கஸ்வாமி ஐயங்கார் எம்.ஏ., டிப்டி கலெக்டர்.

,, ,, எஸ். டி. க்ருஷ்ணஐயங்கார் பி.ஏ., பி.எல்., மதுரை.

,, ,, வி. துரைஸ்வாமி ஐய்யங்கார், சேலம்.

,, ,, ரங்காசார்யர், பிளீடர், புரோகதத்தூர்.

,, ,, பி. கே. கருடாசார்யர், பி.ஏ., பெங்களூர்.

,, ,, ஸத்தாந க்ருஷ்ணய்யங்கார், கோமல், தஞ்சாவூர்.

,, ,, டி. நரஸிம்ஹ அய்யங்கார், சென்னை.

,, ,, ஸி. துரைஸ்வாமி ஐயங்கார், சென்னை.

,, ,, ஆர். க்ருஷ்ணமாசார்யர், பி.ஏ., மைலாப்பூர்

,, ,, ஆர். நரஸிம்ஹ அய்யங்கார், சென்னை.

ஸ்ரீ:.

# ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யஸபை.

சென்ற மூன்றுவது ஸங்கத்தில்
செய்யப்பட்ட 8 - வது தீர்மானத்தை அநுஸரித்து
இரண்டு பண்டுக்களுக்கும் உபகரிப்பதாய் கையெழுத்துச்
செய்திருப்பவர்கள் பெயரும் தொகையும்.

## பொது பண்டு.

| | | | | ரூ. அ. பை. |
|---|---|---|---|---|
| (1) | ஸ்ரீமான். | என். க்ருஷ்ணமாசார்யர், வேலூர் | ... | 300—0—0 |
| (2) | ,, | பி. டி. சேஷாத்ரியா சார்யர், பாலூர் | ... | 200—0—0 |
| (3) | ,, | வி. ராகவாசார்யர், சென்னை | ... | 100—0—0 |
| (4) | ,, | ஸி. ராஜகோபாலா சார்யர், சித்தூர் | ... | 100—0—0 |
| (5) | ,, | டி. நரஸிம்ஹய்யங்கார், சென்னை | ... | 100—0—0 |
| (6) | ,, | எஸ். டி. க்ருஷ்ணய்யங்கார், மதுரை | ... | 100—0—0 |
| (7) | ,, | பி. கே. கருடாசார்யர், பங்களூர் | ... | 100—0—0 |
| | | மொத்தம் ரூபா | ... | 1000—0—0 |

## வேதாந்த தீபிகை பண்டு.

| | | | | ரூ. அ. பை. |
|---|---|---|---|---|
| (1) | ஸ்ரீமான். | டி. நரஸிம்ஹய்யங்கார், சென்னை | ... | 50—0—0 |
| (2) | ,, | பி. டி. சேஷாத்ரியாசார்யர், பாலூர் | ... | 50—0—0 |
| (3) | ,, | பி. கே. கருடாசார்யர், பங்களூர் | ... | 50—0—0 |
| (4) | ,, | டி. கோதண்டராமய்யங்கார், தஞ்சாவூர் | ... | 50—0—0 |
| (5) | ,, | எஸ். க்ருஷ்ணய்யங்கார், கோமல் | ... | 50—0—0 |
| (6) | ,, | நரஸிம்ஹாசாரியர், ஸப்ரிஜிஸ்ட்ரார், திருச்சுழி | | 15—0—0 |
| (7) | ,, | எஸ். ராஜகோபாலாசார்யர், கூடலூர் | ... | 10—0—0 |
| (8) | ,, | வி. துரைஸ்வாமி அய்யங்கார், அதோணி | ... | 10—0—0 |
| (9) | ,, | நீர்வளூர். ஸ்ரீநிவாஸாசார்யர், காஞ்சீ | ... | 10—0—0 |
| (10) | ,, | எம். ஸ்ரீநிவாஸாசார்யர், தாசில்தார், ஆர்க்கோணம் | | 10—0—0 |
| (11) | ,, | வி. ஸி. சேஷாசார்யர், பிளீடர், வேலூர் | ... | 5—0—0 |
| (12) | ,, | பி. எஸ். ராகவாச்சாரியர், ஹெட்மாஸ்டர், மஹந்துஸ்கூல், வேலூர் | ... | 5—0—0 |
| | | மொத்தம் ரூபா. | | 315—0—0 |

ஸ்ரீ:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

**ராஜ ப்ரதிநிதி. லார்ட் ஹார்டிஞ்சுக்கு நேரிட்ட அபாயம்.**

சென்ற டிஸம்பர்மீ 23உ மஹாப்ரபுவான ராஜப்ரதிநிதி யவர்கள் டில்லிநகரில் ப்ரதமப்ரவேசொத்ஸவம்செய்யுங்காலத்தில் அதிக்ரூரனை யாரோ ஒருவன் ஒருநாசகமான யந்த்ரத்தை அவர்பேரில்போட்டதும், அதினுல் அவருடன்கூட இருந்த பகாம்பூர் ஜமேதாருக்கு ப்ராணஹாநி யுண்டானதும், ராஜப்ரதிநிதி யவர்களுக்கு தேஹத்தில் வ்ரணங்கள் உண்டாகி தெய்வாநுகூலத்தால் உயிருக்கு அபாயமில்லாமல் அநுகூலமாகி வருவதும் தந்திகள் மூலமாய் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இந்த அதிகோரமான க்ருத்யத்தைச்செய்த் ஸர்வஜநத்ரோஹிவிஷயத்தில் இந்த தேசத்தில் யாவர்க்கும் அபாரமான கோபமும் அவன் நிர்க்ருணமாய் வத்யனென்கிற அத்யவஸாயமும் உண்டாயிருக்கின்றன. பல மஹாராஜாக்களும் ப்ரபுக்களும் செய்தவன் இன்னனென்று தெரிவிப்போனுக்கு நிரம்ப த்ரவ்யமளிப்பதாய் விளம்பரங்கள் செய்திருக்கிறுர்கள். நமக்கு இந்த அவஸரத்தில் உண்

டாயிருக்கிற துக்கம் அளவிடக்கூடாதாகிலும், ராஜப்ரதிநிதி யவர்
களை இதுவரையில் பகவான் அனுகூலித்து ஜீவபயமில்லாமல்
செய்திருக்கும் அபாரகருணையை நினைத்தால் நாம் பகவானுக்கு
நம்முடைய ப்ரார்த்தனைகளை நிரந்தரமாய்ச்செய்து, அவர் லார்ட்
ஹார்டிஞ்சு அவர்கள் வஜ்ரசரீரமாய்ப் பலவர்ஷங்கள் இருந்து நம்
முடைய ஹிதங்களைப் பிரவர்த்திப்பிக்கும்படி அநுக்ரஹிக்கவே
ணுமென்றும், இந்த ஆபத்காலத்தில் லேடி ஹார்டிஞ்சு அம்மா
ளுக்குப் பகவான் தைர்யத்தைப் பூர்ணமாய்க்கொடுத்து நிர்வஹிப்
பரென்றும் நாம் ப்ரார்த்திப்பதே முதலில் செய்யவேண்டிய
கார்யம் என்று தோன்றுகிறது. 'ஸதஸ்ஸுஸு ஸிஹ்நாநமு ஸதி
யெவ ஸாஜ்ஞகஃ। கயாகாரம் வ்ருதீகாரஃ க்ஷு கொடிமரெத
ரவி ॥ என்கிறபடி, துர்ஜநனுக்கு நல்லவர்கள் இருப்பதே ஆகா
தகார்யம். இல்லாவிட்டால் ஓர்கெடுதியையும் ஜநங்களுக்கு ஸ்வ
ப்நத்திலும் நினைக்காமல் பயங்கரமாய் இந்ததேசத்தில் பரவிய
ஜனங்களின் அத்ருப்திகளை நிரஸித்த மஹாபுருஷராகிய ப்ரதி
நிதிகளிடத்தில் நிஷ்காரணமாய் எவருக்கும் துரோஹசிந்தை
உண்டானதற்குக் காரணம் சொல்வது ஸாத்யமில்லை. யிஸுபா
லாதிகள் பகவானிடம் த்வேஷித்ததற்கு என்னகாரணம் சொல்
லமுடியும்? உன்மத்தனில்லாமலிருக்கும் எந்தபாபியும் செய்யத்
துணியாத இந்தக்கார்யத்தை ஒருவன் செய்தபோதிலும் அதன்
மூலமாய் ஆத்யந்திகமான ஹாநி நிவர்த்திக்கப்பட்டதே என்கிற
ஸந்தோஷம் எல்லா ப்ரஜைகளுக்கும் ஸாதாரணமா யிருக்கிறது.
ஸமீபத்தில் இந்த ஆததாயியை க்ரஹணம் செய்து அதிகாரிகள்
சிக்ஷைசெய்வார்களென்று நம்புகிறோம்.

**மதுராந்தகத்தில் நடந்தேறிய மூன்றாவதுமஹாஸங்கம்.**

இந்த ஸஞ்சிகையின் முந்தின பக்கங்களில் நாளது மார்கழிமீ
11, 12, 13-ம் தேதிகளில் நடந்த மஹாஸங்கத்
தின் வரலாறுகளும் அங்கத்தினர்கள் மீடிங்கின்
வரலாறுகளும் விஸ்தாரமாய்த் தெரிவிக்கப்பட்
டிருக்கின்றன. ஸபையின் சென்ற வருஷாந்த
அறிக்கையும் கணக்குகளும் ஆடிட்டர் ரிபோ



ர்ட்டுடன் அடுத்த மாதப்பத்ரிகையில் போடப்படும். இந்த ஸஞ்
சிகையின் ஆரம்பத்தில் ஸ்ரீ. டிவான் பஹதூர் ரெங்காசார்யரு
டைய உபந்யாஸம் முதற்பாகம் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன்
பாக்கி அடுத்த ஸஞ்சிகையில்வரும். இந்த ஸஞ்சிகையிலேயே
அக்ராஸநாதிபதியின் உபஸம்ஹாரமும் அச்சிடப்பட்டிருக்கிறது.
ஸ்ரீமான் வாசுதேவாசார்யருடைய உபந்யாஸமும் இன்னும் சில
உபந்யாஸங்களும் யதாவகாசம் பின் ஸஞ்சிகைகளில் வரும்.
இவைகளை யெல்லாம் நமது பத்ரிகை ஸஹ்ருதுக்கள் ஸாவ
தானமாய்ப்படித்து அவைகளின் ஸாராம்சங்களை விடாமல் க்ர
ஹிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்த மஹாஸங்கம் மிகவும் விமர்சையாய் நடந்தேறியதென்
றும் அதில் ஸம்பந்தப்பட்ட எல்லாஸ்வாமிகளும் இந்தஸங்கம்
ஸரிவர நடக்கவேண்டிய விஷயத்தில் பூர்ணமாய் ஜாகரூகர்களாயி
ருந்தார்களென்றும் நன்றாய்த் தெரியவருகிறது. நாநா பாகங்களி
லிருந்தும் இந்த மஹாஸங்கத்துக்கு ஸ்வாமிகள் எழுந்தருளினதே
இந்த ஸபையின் கார்யங்களுக்கு ஸாமான்யமாய் ஸந்நிதி சிஷ்
யர்களின் அநுமோதநம் ஏற்பட்டு விட்டதென்று சொல்லப்பல
மான காரணமாகின்றது. இந்தஸங்கத்திலும் முன்ஸங்கங்களிலும்
ஏற்பட்ட ஸ்ரீ ஸந்நிதி ஸம்பந்தமான தீர்மானங்கள் மிகவும் யுக்
தங்களென்றும் நிராக்ஷேபங்க ளென்றும் சொல்ல ஸந்தேஹமி
ல்ல. அப்படிக்கல்லாமல் அவைகளில் எதுவாவது ஆக்ஷேபத்தி
ற்கு இடமாய் எந்தஸ்வாமிகளுக்காவது தோன்றி அவர்களாக்ஷே
பத்தை நமக்கு எழுதினால் அதை நாம் பத்ரிகையில் போட்டு
தகுந்த ஸமாதாநத்தையும் தெரிவிக்க ஸித்தமாயிருக்கிறோம். பல
விடங்களிலு மிருக்கும் ஸந்நிதி சொத்துக்கள் விஷயமாயும் கட்
டங்கள் விஷயமாயும் ஸபையாருக்குப் பூர்ணமான விபரங்களை
ஆஸ்திகரான சிஷ்யர்கள் இந்தப் பத்ரிகைக்கு அனுப்புவார்களா
கில் அவற்றை பத்ரிகையில் போடுவதுடன் ஸ்ரீ அழகிய சிங்க
ரிடம் அவைகள் விஷயமாய் விஜ்ஞாபநமும் செய்யப்படும்.

ஸ்ரீமான். டி. டி. ரெங்காசார்யர் இந்த மஹா ஸங்கத்துக்கு அக்ராஸநாதிபதியாயிருந்தது எல்லோருடையவும் பெரிய பாக்கியத்தாலென்றே சொல்லவேணும். மிகவும் ஜ்ஞாநப்ரதமாயும் ஹிதகரமானவுமான உபந்யாஸங்களைத் தான் செய்ததுடன் இதரர்களின் உபந்யாஸங்கள் ஒவ்வொன்றும் முடிந்தவுடன் அதின் ஸாரத்தை இந்த ஸ்வாமியே எடுத்துக்கூறி அவைகளை யுக்தப்படி ஶ்லாகித்து உபந்யாஸகர்களை கௌரவப்படுத்தியது மிகவும் த்ருப்திகரமாயிருந்தது. ஸ்ரீ சிஷ்ய ஸபையின் கர்த்தவ்யங்களையும் ஆவஶ்யகதையையும் ஸ்ரீமான் அக்ராஸநாதிபதி தெளிவாய் எடுத்துச்சொல்லி இருக்கிறார். கேவலம் வருஷாந்தத்தில் பல உபந்யாஸங்களினால் மாத்ரம் ஸம்ப்ரதாய வ்ருத்தி ஸித்திக்க மாட்டாது. பண்டிதர்கள் பல விடங்களிலும் ஸஞ்சாரம்செய்து ஆஸ்திகர்களை ஒன்றுசேர்த்து அவர்களுக்கு லளிதமாய் ஸம்ப்ரதாயார்த்தங்களை எடுத்துச்சொல்லி ருசி பிறப்பித்தல் முக்யமான கார்யம். இது விஷயத்தில் பலர் த்ரவ்யஸஹாயம் செய்ய உத்யுக்தர்களாய் இருப்பதாகத்தோன்றுகிறது. இந்த உபகாரங்களை ஏகமுகமாய் உபயோகப்படுத்தி பல பர்யந்தமாக்குவது ஸபைக்கு முக்ய உத்தேசமா யிருக்கவேண்டும்.

ஸ்ரீமதுராந்தக ஸ்வாமிகள் விஷயத்தில் அக்ராஸநாதிபதியும் ஸபாத்யக்ஷரும் சொன்ன ஶ்லாகா வாக்யங்கள் கேவலம் ஔபசாரிகங்கள் அல்ல. வைஷ்ணவர்களில் ஐகமத்யமென்பது விசேஷமாயிராதென்பதற்கு இவர்களிலிருக்கும் போஜநாதிகளில் ஏற்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளே முக்யகாரணம். இப்படிப்பட்ட வைஷம்யங்கள் ஒன்றும் வெளிக்குவராமல் விசேஷ ஆஹ்லாதத்துடன் நாநாதேசீயர்களான ஸ்வாமிகளும் ஒன்றுகூடி ப்ரஸாத ஸ்வீகாரம் செய்து ஸல்லாபங்கள் செய்துவந்தது ஸ்ரீ மதுராந்தக ஸ்வாமிகளுடைய பர்யாப்தமான ஏற்பாடுகளாலேயே ஏற்பட்டது. இப்படியே இந்தஸபை கூடுகிற இடங்களிலெல்லாம் எல்லோரும் ஸுஹ்ருத்துக்களாகி ஒத்து வர்த்திப்பார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை.



அக்ராஸநாதிபதி ஸாதித்தபடி மதத்வேஷமும் தம்தம் ப்ரதிதந்த்ரங்களில் ஆக்ரஹமும் உசிதமல்ல. ஸ்வாசார்யர்களிடத்தில் த்ருடவிச்வாஸம் தங்கள் தங்கள் ஜ்ஞாந வ்ருத்திக்கு ஹேதுவே ஒழிய இதர நிந்தைக்கும் மாத்ஸர்யங்களுக்கும் ஹேதுவாகக்கூடாது. இப்படிப்பட்ட சித்தவ்ருத்தி துர்லபமானாலும் இந்த ஸபையின் வ்யாபாரங்களினால் அது க்ரமமாய் ஸர்வ ஸாதாரணமாய்விடுமென்று நம்புகிறோம்.

ஸ்ரீ அழகிய சிங்கரிடத்தில் மஹா ஸங்கத்தின் தீர்மானங்களை விஜ்ஞாபநம்செய்ய ஸபையாரில் சிலர் எழுந்தருளி இருக்கிறார்கள். அவர்கள்போய் விஜ்ஞாபநம் செய்ததை ஸ்ரீ அழகிய சிங்கர் க்ருபையுடன் அங்கீகரிப்பார் என்று நம்புகிறோம். ஹிதத்தில் ச்ரத்தையுள்ள ஸபையாரின் ப்ரார்த்தனைகள் வீண் போகாதென்று ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனையே நம்பி இருக்கும் நமக்கு த்ருடமாய் விஶ்வாஸம் உண்டாகி இருக்கிறது. இந்த ஸபையின் கார்யங்கள் யுக்தங்களென்றும் ஹிதகரங்களென்றும் ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம்பற்றி இருப்பதாகவே நாமறிந்தவரையில் தெரியவருகிறது. அந்தத் திருவுள்ளத்தை வெளிப்படையாகத் தெரிவித்து ஸபையின் ப்ரார்த்தனைகளை யதோசிதமாய் நிறைவேற்றவேணுமென்பது எல்லா ஆஸ்திகர்களுடையவும் கோரிக்கை.

# விள்ம்பரம்.

## பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தியில்லாதவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

### வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் சிவப்பு சன்னக்கம்பி பட்டைக்கரை ருத்திராக்ஷக்கரை போட்டவை கீழேகண்ட விலைகளுக்குக் கிடைக்கும்.

| நீளம் | முழம் | அகலம் | | விலை ரூபா. | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | ,, | 2½ | ,, | 6 | முதல் | 8 | வரை |
| 5 | ,, | 3 | ,, | 7 | ,, | 9 | ,, |
| 6 | ,, | 2½ | ,, | 8 | ,, | 9 | ,, |
| 6 | ,, | 3 | ,, | 9 | ,, | 12 | ,, |
| 7 | ,, | 3 | ,, | 10 | ,, | 13 | ,, |
| 8 | ,, | 3 | ,, | 12 | ,, | 15 | ,, |
| 9 | ,, | 3 | ,, | 14 | ,, | 16 | ,, |
| 10-12 | ,, | 3 | ,, | 15 | ,, | 20 | ,, |
| 15-16-18 | ,, | 2½-3, சேலைகள் | | | | | |

நயம் விலை ரூபா. 20 முதல் 30 வரை.

இந்த வேஷ்டிகள், ஜரிகைக்கரை போட்டும் கிடைக்கும். உடல் சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மேகவர்ணம், காஷாயநிறம் இன்னமும் வேண்டிய நிறங்களிலும் கிடைக்கும்.

### பீதாம்பரப் பட்டுச்சேலைகள்.

16-முழம் நீளம் 2½-அகலம் விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள் உடல் சாதா. சகல நிறங்களிலும் சேலைகள் கிடைக்கும். நயம் சேலை 1-க்கு ரூ. 30-முதல் 200-வரை. மட்டம் சேலைகள் ரூ. 20 முதல் 30-வரை. ஷை சேலைகள் உடலிலும் ஜரிகைப்பூபுட்டா போட்டது. நயம் ரூ. 35-முதல் 300-வரை. மட்டம் ரூ. 25-முதல் 30 - வரை.

### ரவிக்கைகள்.

ரவிக்கைகள் விளிம்பு முந்தி ஜரிகைவேலைசெய்ததும், உடலிலும் ஜரிகை பூக்கள்போட்டதும். ரவிக்கை 1-க்கு ரூ. 2-முதல் ரூ. 15-வரை கிடைக்கும்.

### பட்டுதுப்பட்டாக்கள்.

6-முதல் நீளம், 2½-முதல் அகலம்; விளிம்பு முந்தி ஜரிகை வேலைகளும் உடலில் ஜரிகை பூக்கள்போட்டது. மட்டம் ரூ. 7 - முதல் 15 - வரை. நயம் 15-முதல் 50 - வரை.

### காஷ்மீர் சால்வைகள்.

கம்பளி (Woollen) காஷ்மீர் சால்வைகள் 6-முழம் நீளம், 2½-அகலம். விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள், மூலையில் மாங்காய்போட்டது. மட்டம் ரூ. 9-முதல் 15-வரை. நயம் 15-முதல் 100-வரை.

சகல பட்டு பீதாம்பர காட்லாகு இனமாக அனுப்பப்படும்.

விலாசம் :—மானேஜர்.
பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.


ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.


ஸம்புடம் 2.] பரீதாபி௵ தை௴ [ஸஞ்சிகை 12.


## அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம்.

(தொடர்ச்சி.)

### கலாபேதத்தால் வளரும் வைஷம்யங்கள்..

பகவத்ராமானுஜ ஸித்தாந்தாபிமானிகளெனப்பெயர் வஹி
த்த தக்ஷிணோத்தர கலா நிஷ்டர்களுக்குள் பஹுகாலமாய் அங்யத்
ராத்ருஷ்டமான ஒரு வைஷம்யத்தைக் காண்கிறோம். இது யதீந்
த்ரன் மதத்துக்கு மிகவும் ஹாநிகரம். அந்யமதஸ்தர்களுடைய
பரிஹாஸத்துக்கும் இது ஓர் லக்ஷ்யமாயிருக்கிறது. இந்தக்கலாவை
ஷம்யம் ப்ரதமத்தில் ஆசார்ய பரம்பராபேதத்தில் அங்குரிதம்.
அநிவார்யமான அபிப்ராயபேதங்கள் காலக்ரமத்தில் ஜநிக்க, இந்த
பேதங்களையே ப்ரதானமாய் ஆதரித்தவர்கள் ஏக ஸம்ப்ரதாயத்
துக்கு ஸம்ப்ரதாயத்வித்வத்தை உண்டுபண்ணி விட்டார்கள். இத
னுடைய ஆதுநிக விஸ்தாரங்கள் இவ்விடத்தில் விவரிக்க வேண்
டியதில்லை.

“ பஹூநி வராணிஹ க்ருதாநி த்வேஷம் கலஹம் திலேததஃ ।
ஸோஸ்யாந்யஹோ திநேஹந ஸ்யாத்தாநீதி உநீஷிணா ॥”

என்கிறபடியே இந்த கலா ப்ரயுக்தமான த்வேஷங்கள் அந்தந்த கலாநிஷ்டர்களான ஜ்ஞாதாக்களினுல் மிகவும் சோகிக்கத்தக்கவை. “ ஸந்நாஸ்தீயாநந்யாந்யேவாஜநீ விஜஹாகவஸு யா” என்னும் ப்ரார்த்தனையும் வீணுக்கப்பட்டதன்ருே? தத்காலஸ்திதியில் இதற்குப் பரிஹாரம் சொல்ல அடியேனுக்குச் சக்தியில்லை. இதைக்குறித்து ஆஸ்திகர்கள் எல்லாரும் யோசிக்கவேணும்.

## ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயத்தின் தத்காலக் குறைவுகள்.

ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஸங்க்யையானது சென்ற ஐம்பது வர்ஷத்துக்குள் மிகவும் குறைவை யடைந்திருக்கிறதென்று யாவர்க்கும் தெரிந்தவிஷயம். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிஹ்மன் திவ்ய நியமநத்தினுல் இந்த ஸம்ப்ரதாயத்தை ஸகலதேசங்களிலும் பரவச்செய்ய வேண்டிய நம்முடையஸ்வாமிகள் ஸஞ்சாரமென்பதை அடியோடு விட்டுவிட்டார்கள். நமக்குள் வயோதிகர்களுக்கும் தெரிந்தவரையில் ஒரு ஸ்வாமியாவது நமக்குக் குலதெய்வம் திருக்கோயில் கொண்டருளிய ஸ்ரீ மதஹோபிலத்தை மிதித்தாரில்லை. ஸ்வாமிகளுடைய ஸஞ்சாரமாத்திரமே ஸம்ப்ரதாயத்துக்கு யோகக்ஷேமாவஹமன்று. ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யாதிகளில் ஸ்ரீ ஸந்நிதியி லெழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளுக்குக் கொஞ்சமேனும் க்யாதிலோபம் வரக்கூடாது. க்ரந்த காலக்ஷேபாதிகளும் ஸ்ரீந்ருஸிஹ்மாராதனமும், ததீயா ராதனமும் ஸ்ரீ ஸந்நிதிக்கு ஏற்பட்டஅங்கங்கள். இவைகளிலும் க்யாதிலோபம் ஸர்வதா பரிஹரணீயம். இந்த அம்சங்கள் யதாவத்தாய் நிலேக்கும்படியாக ஸ்ரீஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்கள் எப்பொழுதும் யதாசக்தி ப்ரயத்நஸஹிதர்களாயிருப்பது நலம். ஸ்ரீ ஸந்நிதிக்கு ஏற்பட்டகுறைவுகளைத் தெரிந்துகொண்டு அவையுண்டான காரணங்களை ஆராய்ந்து அவைகள் மறுபடியும் உண்டாகாமலிருக்கத்தக்க



யோசனைகளையும், ப்ரயத்னங்களையும் செய்யவேண்டும். இது விஷயங்களில் ஸ்ரீ அழகிய சிங்கருடைய அபிப்ராயம் நமதை யொத்திருந்தபோதிலும் நமது ஸம்ப்ரதாயம் தழைத்தோங்க வேண்டுமென்ருல் காலதேச வைகுண்யங்களை யபேக்ஷித்து, ஸ்ரீ அழகிய சிங்கருடைய ப்ரயத்நமாத்ரத்தினுலே அது ஸித்திக்க மாட்டாதாகையால், ஸம்ப்ரதாய நிஷ்டர்களாயும், ஜ்ஞாதாக்களாயுமிருக்கும் ஸ்வாமிகளைக்கொண்டு முக்யமான திவ்யதேசங்கள் தோறும் காலக்ஷேபாதிகள் மூலமாயும், உபந்யாஸங்கள் மூலமாயும் ஸம்ப்ரதாயத்தைப் பரவச்செய்வது ஸ்ரீ அழகிய சிங்கருக்கும் இந்தஸபையாருக்கும் பொருந்தியகடமை. பரஸ்பரவிரோதிகளாயும், ஏகஸம்ச்ரயம் துர்லபமாயுமுள்ள ஸ்ரீஸரஸ்வதிகளுக்கு லோகக்ஷேமார்த்தமாய் ஸத்துக்களிடம் ஸங்கதம். உண்டாகவேண்டியிருப்பதால் ததர்த்தம் த்ரவ்யார்ஜநம் செய்யக்கூடுமாகில் அதை இந்த ஸபையார் செய்யத் தக்கவர்கள். நமது ஸம்ப்ரதாயம் நிலேக்க வேண்டுமாகில் அதில் விச்வாஸமுள்ள ஜ்ஞாதாக்கள் அவச்யம் ஆதரிக்கத் தக்கவர்கள். பெரும்பாலும் நம்மவர்கள் எல்லோரும் தமது சிறுவரை ராஜபாஷையைக் கற்பிக்கும் வித்யாசாலைகளுக்கு அனுப்பி விடுகிறபடியால் ஸம்ப்ரதாய விஷயத்தில் வித்யார்த்திகள் ஏற்படுவதுஅரிது. அதற்காக வித்யார்த்திகள் போஷணை விஷயமாயும் த்ரவ்ய ஸம்பாதநம் உசிதம். ஸ்ரீ ஸந்நிதிக்குரிய ஒவ்வொரு மடத்திலும் இந்த ஏற்பாடுகள் நிலேக்கும் வரையில் ஸபையாருடைய ப்ரயத்நத்துக்கு விராமம் வருவது நன்றன்று.

“ விஸ்ராணிதஸ்வயமுபஸ்வஸ்வி திவாநக்தம்
பஹிஷ்குஸ்ருதெந ஸ்தைஸிகஸம்ப்ரதாயரஷி
தெஸ்ஷ்யாவிநாமுக்ஷிதஃ ।”

என்னும் வண்ணம், பரமபுருஷனுடைய ஸ்வரூப ரூப குணவிபூதிகளில் அத்யந்தம் ஈடுபட்ட நம்முடைய ஆசார்யர்கள்முகமாய் நமக்கு ப்ராப்தமான ஸத்ஸம்ப்ரதாயத்தை ஆதரத்துடன் நாம் ரக்ஷிக்கவேண்டு மாகையால் அதற்காக நமக்குள் ஐகமத்யமும், பரஸ்பரவிச்வாஸமும் தலைக்கட்டிநிற்குமென நம்புகிறேன். இந்த

நிலைமை ஸம்ப்ரதாய வ்ருத்தியின் பொருட்டு ஏற்பட்ட ஸபையை நாம் குறைவின்றிக் காப்பாற்றினலல்லது ஸ்திரப்படாது. ஸபையைச் சேரக்கூடிய ஸம்ப்ரதாயஸ்தர்கள் அனைவரும் அதில் சேருவதுடன் அதற்கு உத்தேச்யமான வ்யாபாரங்களைச் சரிவர நடத்த த்ரவ்யஸஹாயமும் செய்யக்கடமைப் பட்டிருக்கிறார்கள். இப்போது இந்தஸபை ஏற்படாவிட்டால் ஸம்ப்ரதாயம் நாமமாத்ராவசேஷம் ஆகுமென்பதில் அடியேனுக்கு ஸந்தேகம் ஜநிக்கவில்லை.

ஸம்ப்ரதாய ஸபையார் செய்யவேண்டியது.

ஸ்ரீ அழகிய சிங்கர் கிருபைபண்ணுமல், ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸம்பத்து ததனுக்ரஹ ஜந்யமான ஸம்ப்ரதாயக்ஷேமத்திற்கு உபயோகப் படாமல் போய்விட்டாலும் ஸம்ப்ரதாயாபிமானிகள் செய்யக்கூடிய கார்யம் பல உண்டு. அவற்றைப்பற்றி பூர்வமே விஜ்ஞாபநம் பண்ணிக்கொண்டேன். "दैवेन देयमिति कापुरुषा वदन्ति". எல்லாம் பகவத் ஸங்கல்பத்தினுல் ஆகவேண்டுமென்று உத்யோக ஹீநர்களாயிருப்பது புருஷத்தன்மைக்கு ஒவ்வாது. ப்ரயத்நம் நம்முடையது. பலம் ஈச்வராதீனம். "कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन" என்று அவனே காட்டியிருக்கிறான். பலம் ஸித்திக்காத தசையிலும், "न हि कल्याणकृत् कश्चित् दुर्गतिं तात गच्छति" என்னும் பகவத்வாக்யம் ஸ்மரிக்கத்தக்கது. ஈஸ்வரப்ரத்யக்ஷம் கலியுகத்தில் துர்லபம்.

"[illegible]
[illegible]"

என்பது ஸ்ரீபாகவதவசனம். ஆதலால் பகவத் கைங்கர்ய ரூபமாகச் செய்யப்பட்ட ஸத்ப்ரவ்ருத்திகளுக்கு பலம் கைகூடாததைக் கொண்டு பகவதானுகூல்யமில்லை என ஊஹித்தல் யுக்தமன்று. பலம் உண்டாக ப்ரதிபந்தங்கள் பலவாருக இருக்கலாம். கலியில் பகவான் பெரும்பாலும் ஆவிர்ப்பவிப்பதில்லை.



"[illegible]
[illegible]
[illegible]
[illegible]" என்றும்,

"वेदान्तदेशिकपदे विनिवेश्य बालं
देवो दयाशतकमेतदवादयन्माम् ॥"

என்றும் ஸ்ரீமத்வேதாந்ததேசிகன் திருவுள்ளம்பற்றி யிருப்பதினுலும், அந்த பரமாசார்யன் திருவேங்கடமுடையான் தீர்த்தத்தினமே அவதரித்தபடியாலும், அந்த மஹாதேசிகன் திருக்குமாரர்,

"वेङ्कटेशावतारोऽयं तद्घण्टांशोऽथवा भवेत्"

என்று ஸாதித்திருக்கிறபடியினுலும்,

"[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥"

என்றும்,

"[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

என்றும் மஹாப்ராஜ்ஞர்கள் வசநமிருக்கிறபடியே, அந்யத்ராத்ருஷ்டமான அசிந்த்ய மஹிமையை யோசித்தும், ஒருவிசேஷமான பகவதம்சாவிர்ப்பாவத்தை நிகமாந்த மஹாதேசிகன் பக்கல் ஊஹிக்கக்கூடுமோனுலும், கேவலம் கதைகளை நம்பியே ஸ்ரீபகவான் மனுஷ்யலோகத்தில் ஸ்வஸாந்நித்யத்தை ஆவிஷ்கரணம்

பண்ணுகிறானென்று இந்த யுகத்தில் யோசிக்க இடமில்லை. அதற்கு அத்யந்தம் நிதர்சநமாக நம்முடைய தேசத்தில் சென்ற ஆயிரம் வருஷத்தினுடைய சரித்திரமேபோதும். அந்யதேசங்களுடைய சரித்திரத்தினாலும் இதை நன்றாக அறிந்து கொள்ளலாம். நிரபராதிகளா யிருக்கிறவர்கள் அபூர்வமான ஹிம்ஸைக்கு லக்ஷ்யமாக விருந்தும் இருந்துகொண்டு மிருக்கிறார்கள். பரம ஸாதுக்கள் ப்ரஹ்மஹத்யாதிகளுக்கும் விஷயமாகின்றார்கள். ஸ்வஸத்தையால் மாத்ரம் அப்ராதிகளாகிறவர்கள் பலர். ஆத்யாத்மிகமாகவும், ஆதிபௌதிகமாகவும், ஆதிதைவிகமாகவும், மனுஷ்யர்களுக்கு உண்டாகும் கஷ்டங்களை எண்ணிமுடியாது. எவ்வளவுதான் கதறினாலும் சரண்யன்வந்து ரக்ஷிப்பதில்லை. தர்மம் தலைகாக்கவில்லை. ஸத்யம் ரக்ஷிக்கவில்லை. எவ்வெவ்விதத்தினாலும் எல்லாமனுஷ்யர்களும் அர்த்தார்ஜன பரர்களாகவே நிற்கின்றனர். நிகமாந்த மஹாதேசிகன் திருவுள்ளத்தில் காஷாய தண்டமாத்ர சரணர்களான கலியுகஸந்யாஸிகளின் நைரபேக்ஷ்யத்தைப் பற்றி,

“ [illegible]
[illegible]
[illegible]
[illegible] ”

என்று துஷ்டஸந்யாஸ தூஷணப்ரகரணத்தில் ஸ்மரிக்க நேரிட்டதை யோசித்தால், “[illegible]” என்பது மிகவும் இக்காலத்தில் பொய்யாகாது. ஒருவன் ஆர்ஜ்ஜனசீலனைப் பலர் ரிக்தராதல் ஸாதாரணம். இத்தன்மைய லோகத்தில் நாம் பகவத் ப்ரஸாதத்தை யுத்தேசித்துச் செய்யும் கர்மங்களுக்கு அவனது அப்யுபகமரூபமாகத் தெரியவேண்டிய பலங்களை ப்ரதீக்ஷிக்க அர்ஹர்களன்று. கர்மாநுகுணமாக ப்ரஜைகள் பலாநுபவ மடைகின்றார்கள் என்பது ப்ரமாணஸித்தம். ஆனாலும் அந்தவிஷயம் போக்தாக்களுடைய புத்திகோசரமாக வெளியாகிறதில்லை.



## பகவத் ஸந்நிதிகளில் துராசாரங்கள்.

ப்ரஸக்தாநு ப்ரஸக்தமாயிங்கு யோசிக்கதக்கது ஒன்றுண்டு. வேதாந்ததீபிகையில் சிலமாஸங்களுக்கு முன் பகவத் ஸந்நிதிகளின் கைங்கர்யங்களில் அந்வயித்தவர்களுடைய துராசாரங்களினால் பிம்பங்களில் பகவத் ஸாந்நித்யத்திற்கு ஹாநிஸம்பவிக்குமோ என்னும் அம்சத்தைப்பற்றிச் சில கடிதங்கள் எழுதப்பட்டன. இதுவிஷயமாய் பாத்மஸம்ஹிதையில் சர்யாபாதத்தில் நித்யாராதன ப்ராயஸ்சித்தாத்யாயமான பதினெட்டாவது அத்யாயத்தில்,

“ [illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]

என்றும்—

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

என்றும், இவ்விதமான வசநங்கள் ஸ்மரிக்கத்தக்கன. திவ்யமங்கள விக்ரஹங்களில் ஸாந்நித்யத்தைக் குறைக்கும் ஸாமக்ரிகள் மேலே விவரித்தவண்ணமும் வேறு ப்ரகாரமாகவும் ஸம்பவித்திருக்க, தத்ஸாமக்ரீயுக்தர்களாக ப்ரத்யக்ஷத்தில் தோற்றுகிற திவ்யதேச கிங்கரர்களை தர்சித்துக்கொண்டும், அபராத ஸஹஸ்ரம் ப்ரதிதினம் ஸம்பாவிதமாயிருக்க, தத்பரிஹாரார்த்தமாக விதிக்கப்பட்ட நிஷ்க்ரியைகளைச் செய்யாமலிருப்பதை நிரீக்ஷித்துக்கொண்டும், திவ்யதேசங்களை யதாபூர்வம் ப்ரஸ்தாத ஸ்வீகார பர்யந்தமாக அங்கீகரித்தல்கூடுமோ என்னும் விஷயத்தில் பண்டிதர்கள் விமர்சிக்கத்தக்கவர்கள்.

"[illegible]" என்றும், "[illegible]" என்றும் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் பாகவதவாஸமாகிற ஔசித்யத்தை திருவுள்ளம்பற்றியதும் அநுஸந்திக்கத்தக்கது. க்ருத க்ருத்யனுக்கு யோக்யமான வாஸஸ்தாந விசேஷசிந்தையில்—

"[illegible]
[illegible] ।
[illegible] ॥"



என்று ஆசார்யன் ஸாதித்தபடியன்றோ? சரணாகதி கத்யத்தில் ஸ்ரீபாஷ்யக்காரர் "அத்ரைவ ஶ்ரீரங்கே ஸுகமாஸ்வ" என்று திவ்யதேசவாஸத்தை ப்ரபந்நனுக்கு விதித்திருக்கவும், துருஷ்கர்களினால் ஸ்ரீரங்காதி திவ்யதேசங்களுக்கு ஸம்பவித்த விபரீதங்களைக் கண்ணுற்ற ஸ்ரீநிகமாந்த தேசிகன் தந்நிவாரணார்த்தமாய் அருளிச்செய்த அபீதிஸ்தவத்தில்,

"[illegible]
[illegible] ।
[illegible]"

என்று ஸாதித்ததை யோசித்தால் பரமைகாந்திகள் வாஸம்பண்ணுகிற காரணத்தினாலேயே திவ்யதேசங்களில் பகவான் ஸாந்நித்யம் பண்ணுகிறானென்று ஏற்படுகிறது. முன்வாஸம் பண்ணினகாரணத்தாலன்றோ இப்போது தத்பாவத்திலும் ஸாந்நித்யம் அநுமிக்கத்தக்கது. "[illegible] ।
[illegible] ॥" என்னும் ச்லோகார்த்தத்தையும் இங்கே ஸ்மரிக்கவேண்டும். ஸாந்நித்ய விரோதங்கள் மாத்ரம் வ்ருத்தியாகின்றால் திவ்யதேசங்களின் கதியென்ன? சென்ற ஸம்வத்ஸரத்தில் பெருமாள் கோவிலில் தர்மபரிபாலகர்கள் அர்ச்சகர்களை நிவர்த்தித்த காரணத்தால் உண்டான விபரீதங்களையும், தந்நிமித்தமாக நம்முடைய ஸம்ப்ரதாயஸ்தர்களில் பண்டிதபாமரர்களுள்படப் பெரும்பான்மையோர் ஸந்நிதியினின்று ஒருப்ரகாரமாய் விலகிநின்றதையும் இங்கு ஆலோசிக்கக்கூடியதே.

ஆனால் ஸ்ரீசைலம் முதலான திவ்யதேசங்களில் பகவத்ஸாந்நித்ய நிதர்சநமாக அநேக அநுபவங்கள் ச்ருதிகோசரமாயில்லையா என்றால், இந்த அநுபவங்களனைத்தும், ஆர்த்தர்களும் அர்த்தார்த்திகளும் செய்துகொண்ட ப்ரார்த்தனைகளில் விஸ்மரணம் நேரிட்டகாலங்களில், சிலரிடம் பகவான் அநுப்ரவேசம்பண்ணி நிறைவேராத ப்ரார்த்தனம்சங்களை நிறைவேற்றுவித்தலில் முடிவுபெறும். துஷ்டநிக்ரஹ ரூபமாயும், சிஷ்டரக்ஷண ரூபமாயும் தர்ம பரிபாலநார்த்தமாகவும் உண்டான பகவதநுப்ரவேசத்தை

எங்கும் இக்காலங்களில் காணேம். நாம் தெரிந்துக்கொண்ட அநுபவங்கள் தேவஸ்வாபஹாரம் செய்வோரை தத்வ்யாபாரங்களிலிருந்து தடுத்ததாகக் கண்டதில்லை. ஆகையால் திவ்யதேசங்களில் ஸம்பவித்திருக்கும் தோஷங்களை யதாசக்தி நிவர்த்திக்க ப்ரவ்ருத்திப்பதைவிட்டு ததங்கீகார ஸஹிதர்களாய், அங்கே நிரந்தரம் வஸிக்கும் அபராதிகளுடைய ஸம்ஸர்க்கத்தையும் அடையப்பெற்றால் அதனடியாக முமுக்ஷுவுக்கு அநுகூலமே வருமென்று சொல்ல அடியேன் துணியமாட்டேன்.

## பலாபேக்ஷை நிவர்த்திக்கவேண்டியது.

ப்ரக்ருதஸ்திதியில் நாம் கேவலம் சாஸ்த்ரைக சரணர்களாய் நிற்கிறோம். சாஸ்த்ரமென்பதில் ஆசார்யர்கள் நமக்கு அநுக்ரஹபூர்வமாய்கொடுத்த க்ரந்தங்களும் சேர்கின்றன. இவைகாட்டின வழியே நாம் பகவானிடம் ஏகாந்தமநஸ்கராயிருந்து கொண்டு ததநுகூல ப்ரவ்ருத்திகளில் ரதர்களாய் வர்த்திக்கக் கடவோம். இப்படி நாமிருந்தால் நமது ப்ரயத்நங்களைக்குறித்து பலாபேக்ஷை நமக்கு உண்டாக வேண்டியதில்லை.

"த்வதாராதந ஸித்திஜ்ஞாநாய ஸ்ரீ மத்ரஸ்ததாவந ।
நயாமி த்ருஷ்டஸம்விஷ்டபாவ நாநுஸ்ம்ருதி த்ருவம் ॥"

என்கிறபடியே அவனுடைய கைங்கர்ய புத்தியினாலேயே ப்ரவ்ருத்திப்பவர்களுக்கு அந்த ப்ரவ்ருத்தியே பலமாகிறது பின்னுமோர் பலத்தை அவர் எதிர்பார்த்தல்கூடாது இந்தயுகத்தில் அப்படிப்பட்ட பலம் கிட்டாமல் போவது ஸம்பாவித மாகையால் "யாவ நாநுஸ்ம்ருதி த்ருவ." என்னும் வசனம் ஸ்மரிக்கவேண்டியதாகிறது.

## ஸர்வபூதஹிதத்தில் ரதி.

ஈஸ்வரபயமும், லோகஸங்க்ரஹமுந்தான் அஸத்ப்ரவ்ருத்திகளைத் தடுக்கக்கூடியவை. லோகஸங்க்ரஹத்தைக் கருதியே எல்லோரும் கர்ஹித கார்யங்களை விட்டிருக்க மாட்டார்கள். ஈஸ்வரபயம் நாஸ்திகர்களுக்கில்லை. ஒருவன் நாஸ்திகனே அன்றோ என்பது அவனது கர்மங்களினால் ஸுலபமாக ஊஹிக்கக் கூடியது. ஈஸ்வரபயத்தால் அஸாதுகர்மங்களை விடுகிறவன் மாந்யனே. ஆகிலும் அவன் உத்தமாதிகாரியாக மாட்டான்.



"பக்த்யா த்வநந்யயா சக்ய அஹமேவம்விதோऽர்ஜுந ।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥"

என்று பகவத்வாக்யமிருக்கிற படியால், பக்தனன்றோ பகவதநுகூல ப்ரவ்ருத்திகளில் புகுந்து உத்தமாதிகாரியாகிறான். பகவான் பக்திக்கே ஸுலபன் என்பதற்கு

"ஏதேந்ய யநாஹிஜந ஸ்ருஷ்வ தவஸ்ருத்ஸஜ
ஸேஜ்ய: ப்ரவாவ ஸம ஸர்வாஷ்ட ஸூர்யோபம: ।
நாராயணாய ஹி ஸவந்தி பரஸ்ய பும்ஸ:
ஸ்ரீக்ருஷ்ண ஸந்தோஷ ஸமவாப்த ஜயப்ரியாய ॥"

என்னும் ஸ்ரீ பாகவதவசனம் ப்ரமாணம். ஈஸ்வரபக்தியுண்டாகில் அது நம்மைத் தானே ஸாதுப்ரவ்ருத்தியில் ஏவிவிடும். ஈஸ்வரன் நமக்கு மிக்க விச்வஸநீயனாகில் ததர்த்தமே பதிபார்யா புத்ராதிகளும் ஸர்வபூதங்களும் ப்ரியமாகின்றன. "ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி । ஆத்மநஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி" என்று ஆரம்பித்து "ந வா அரே ஸர்வஸ்ய காமாய ஸர்வம் ப்ரியம் பவதி । ஆத்மநஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி" என்று உபநிஷத்து முடிக்கிறது. அத்யாத்ம சாஸ்த்ரத்தின் அஸக்ருத்விமர்சத்தினால் இந்த ஜ்ஞாநம் நமக்கு உண்டாகவேண்டியிருக்கிறது. இதிஹாஸ புராணங்களில் உத்தமாதிகாரிகளுடைய கதாபரிசயமும் நமக்கு இவ்விதமான ஏற்றங்களை விளைவிக்கும். அதெப்படியெனில், ஸர்வவிதமான விஷயபேச்சையும் நமக்கு ஸ்வரூபவிருத்தம். ஆகிலும்.

"யதி ராஸீச மே காமாந் வராம்ஸ்த்வம் வரதர்ஷப ।
காமாநாம் ஹ்ருத்யஸம்ரோஹம் பவதஸ்து வ்ருணே வரம் ॥"

என்று ஸர்வவரப்ரதனாய் பகவான் ப்ரத்யக்ஷமாய் நிற்குங்கால் வரங்கேட்பது எங்கேயாயினும் கேட்டதுண்டோ? முக்திப்ரதன் ப்ரஸந்நனாய் முக்தியளிக்க ஸித்தமாய்நிற்க, ஸாதாரண மனுஷ்யர்களையிட்டுச் சோகயுக்தனாய்,

“ ஏவம் ஸ்வகர்மபதிதம் பவவைதரண்யாம்
அந்யோந்யஜந்மமரணாசநபீதபீதம் ।
பச்யஞ் ஜநம் ஸ்வபரவிக்ரஹவைரமைத்ரம்
ஹந்தேதி பாரசர பீப்ருஹி மூடமத்ய ॥

கோ ந்வத்ர தே(அ)கிலகுரோ பகவந் ப்ரயாஸ
உத்தாரணே(அ)ஸ்ய பவஸம்பவலோபஹேதோ: ।
மூடேஷு வை மஹதநுக்ரஹ ஆர்தபந்தோ
கிம் தேந தே ப்ரியஜநாநநுஸேவதாம் ந: ॥

நைவோத்விஜே பர துரத்யயவைதரண்யா:
த்வத்வீர்யகாயநமஹாம்ருதமக்நசித்த: ।
சோசே ததோ விமுகசேதஸ இந்த்ரியார்த-
மாயாஸுகாய பரமுத்வஹதோ விமூடாந் ॥ ”

என்று ப்ரார்த்திக்க ப்ரஹ்லாதனைத்தவிர மற்றொரு புருஷனைக் கதையின்கண் கேட்டதுண்டோ? ஸர்வஜனங்களுக்கும் முக்தியைத்தராவிட்டால்,

“ நைதாந் விஹாய க்ருபணாந் விமுமுக்ஷ ஏக:
நாந்யம் த்வதஸ்ய சரணம் ப்ரமதோ(அ)நுபச்யே । ”

என்றுரைத்துத் தனக்கும் முக்தியை அவனொருவனன்றோ நிராகரித்தான். இத்தன்மைய அதிகாரி உலகின்கண் நின்றிருந்தாலும், இல்லாவிட்டாலும், அத்தன்மையுடையோன் புத்திக்கெட்டினதே நம்பெரியோர்பெருமை. இப்படிப்பட்ட மஹாபாகவதன் நிஸ்சயித்துரைத்தபடியே ஸர்வபூதஹிதம் பகவதாராதனங்களில் முக்யமாகிறபடியால் அந்ததர்சனத்தைக் காட்டிக்கொடுக்கும் ஸர்வபூத ஹிதே ரதியும் நமக்குப் பரமோத்தேச்யமாகக் குறையில்லை. இவ்விதமே பகவான் ஆராதிக்கப்பட்டு ப்ரஸந்நனுகில்,

“ த்ரிவர்கம் ஸ்வத ஏவாஸ்ய ஸர்வதஸ்ஸுலபம் ।
யச்சாயதுகாமேச்சரோ க்ருதகாமோ ॥ ” என்கிறபடியே

கேவல தர்மார்த்தகாமங்களை த்யஜித்தவராய்க்கொண்டு,



“ ஸோ(அ)ஸ்மி த்ராஸ ப்ரூஹ கரோர நஷ்டாச
நிஸ்ஸம்சயோ ம்ருக்திஸமவ்யாத: ”

என நிஸ்சயித்து தானுகக்கிடைக்கப்போகிற முக்தியையும் அபேக்ஷித்தல் கூடாதென்றல்லவோ மஹாபாகவத வசந மிருக்கிறது. ஆதலால்.

“ ஜ்ஞாதஸ்வதாஸ்ய தத்ஸ்வாம்ய ஹ்ருதூர்தாநவரோத்ருநா: ”

என்னும்படி நமக்கு நிருபாதிகமாய்க் கிடைத்த பகவத்தாஸ்யமும், பகவானுடைய நிருபாதிக ஸ்வாம்யமும், அறிந்தவர்களாய், அவன் ஸர்வஜனங்களுக்குள்ளும் அந்தராத்மாவா யிருக்கிறபடியால் அவர்களிடம் நாம்செய்யும் ஹிதப்ரவ்ருத்தியானது அவனுக்கு அபிமதாராதனமாய் இருக்கும் படியையும் உணர்ந்து, அந்த ப்ரவ்ருத்தியானது பஸ்சிமவித்யா பாரங்கதர் எல்லோருக்கும் உத்ஸாஹ ஹேதுவாயிருப் பதையிட்டும், தத்காலம் அந்த ப்ருவ்ருத்தியே தேசத்தின் க்ஷேமத்திற்கு முக்யகாரணமாயிருப்பதினுலும் யாவர்க்கும் யதாசக்தி அதில் புத்தியைச் செலுத்துவது உத்தமம்.

ஸங்கிஹித பந்து போஷணம் அப்படிப்பட்ட ஹிதாசரணமாக ஒப்புக்கொள்ளத் தக்கது. தூர பந்துக்களை இந்த புத்தியினுலாதரித்தால் பகவான் ப்ரீதனுகிறுன். ஸ்வஸமூஹத்தில் ஹிதப்ரவ்ருத்தியுண்டானுல் அது பகவானுக்கு இன்னும் ப்ரீதிகரம். அது தேசமெங்கும் பாவியதாகில் அப்படிப்பட்ட ப்ரவ்ருத்தியுடன் கூடிய புருஷன் பகவானுக்கு மேன்மேலும் ப்ரியதமன். ஸர்வபூத ஹிதத்தில் ப்ரவர்த்தித்தவனைப் பற்றியன்றே “ ஸர்வபூதஹிதே ரதா: ” என்றும் “ ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம் ” என்றும் பகவான் அறுதியிட்டான். ஆனுல் அதற்கு எல்லோரும் அதிகாரிகளாகார்.

அவர்கள் மஹாத்மாக்கள். ஸுதுர்லபர்கள். இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகள் நமக்கு பகவத்ஸம்பந்தம் ஸ்ரீ மதாதிவண் சடகோபமஹாதேசிகன், வேதாந்ததேசிகன், பாஷ்யகாரர் இவர்களடியாக கிடைத்த படியைநினைத்து இப்படியே பக

வத் ஸம்பந்தமடைந்தவரிடமெல்லாம் நமது ஸம்ப்ரதாயாபிரவ்ருத்தியைக் கருதி ஹிதபுத்தி செய்தல் ஸுகரம். ஸம்ப்ரதாயாபிவ்ருத்தியை உத்தேசித்துச் செய்யும் ஸகல ப்ரயத்நமும் பகவதாராதன ரூபமாய்ப் பரிணமித்து பஹுஜனங்களுக்கு ஐஹிகாமுஷ்மிகங்களில் நன்மையைப் பயக்கும். இந்தரீதியாகவே நம்ஸம்ப்ரதாய ஸபை உண்டானதாய் நம்புகிறேன்.

### நம் ப்ரயத்நங்கள் பகவத் ப்ரீணநங்கள்.

ஆதலால் அதன் விஷயமாய் நாமெல்லோரும் செய்யும் அநுகூல ப்ரயத்னங்கள் பகவத் ப்ரீணநமாகு மென்பதில் ஸந்தேஹமில்லை. இந்த ஸபையும் அதைச் சேர்ந்த ஸ்வாமிகளும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய க்ருபைக்கு மிகவும் பாத்ரர்களாயிருக்கிறார்கள். இவ்விடம் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளை விட நம்ஸம்ப்ரதாயாபிமானிகளை நாம் எங்கே காணக்கூடும்; இந்த ஸபையைச் சேர்ந்து இந்த ஸங்கத்தை ஆதரிக்க ஸவப்ரயோஜனத்தை மறந்து ஸம்ப்ரதாயாபிவ்ருத்தியைக் கருதியே எழுந்தருளியிருக்கிற ஸ்வாமிகளை விட்டுவிட்டு, மற்ற யாருடன் கூடி ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ பகவத்ராமானுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமராய் வீற்றிருக்கப் போகின்றனர். இவ்வளவும் "ஸூராபேக்ஷாம் நஶிக்ஷய" என்னும்வண்ணம் விஜ்ஞாபநம் செய்கிறபடி. இதை ஸ்ரீ அழகிய சிங்கர் நன்றாய்ப் பராமர்சித்தால் திருவுள்ளம் பற்றக் கூடியதாகவே யிருக்கும்.

### உபஸம்ஹாரம்.

அடியேனே மித்ஜ்ஞன். ஹிதாஹித க்ரம மறியாமல் தேவரீர்களின் நியமநத்தினால் மனதில் தோன்றினதை வாக்கினால் வெளியிட்டேன். இதை க்ஷமையுடன் தேவரீர்கள் கேட்டுக்கொண்டிருந்ததற்கு அடியேன் மிகவும் க்ருதஜ்ஞதையைப் பாராட்டுகிறேன்.

ஶுபமஸ்து.

---

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களும்.*

விஶ்வஸ்யாதிரயே ஹேதுர் யத்ர ஸ்ரீ ஸ்வஸ்யா ஸவி ஸ்வயம் |
வியத்தேர்திஶயம் நாயஸ்தம் ப்ரபத்யே ஶ்ரிய: ஶ்ரியம் ||

நிமக்நா: ஸம்ஸாரார்ணவே தேஷாம் ஸாக்ஷீ திஷ்டதி ய: ப்ரபு: |
விசித்ரஶக்திர் நிர்தோஷ: ஸ ஏவ ஶரணம் மம ||

ஸ்ரஷ்டா விஶ்வம் ஶ்ரியா ஸார்த்தம் ப்ரவிஶ்ய
யோ(அ)ந்தர்ஸ்தோ ரூபம் நாம ச வ்யாகரோதி |
யம் வாஜாநு விஸ்ப்ருஷ்டா லோக ஸங்கா:
க்ஷேத்ரஜ்ஞா நஷ்டாந் யோ(அ)யமவ்யாத் ந்ருஸிம்ஹ: ||

நிவ்ருத்தாத்மஜம் ப்ரணத: பிதாமஹமாதரம் ப்ராசார்ய வாரம்பர்யம் யோகிராஜவநவாஸாந் மாதிமணாந் ஸாயம்ஶ்ச ஶாஸ்த்ரஜ்ஞாந் - வாசாஜ்யம் வாரம்ஷோத்தமஸ்ய ந்ருஹரேர் ராஜ்யம்ய மாஸம் ஹ்ருதா ஸத்யம் வஹ்நி மஹாஜநா: | கிமவி தத்ர தத்ப்ரியம் க்ஷத்ராதாம். ||

ஸதஸ்யேப்ய ஸ்ஸதஸஸ்பதயே ச நம:—

ஸ்வல்ப திநங்களுக்கு முன்னே, இந்தச் சிஷ்யஸபையின் அத்யக்ஷரான ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர், அடியேனைப் பார்

* இது, சென்ற மார்கழிமீ 11உ புதன்கிழமை ஸ்ரீ மதுராந்தகத்தில் நடந்த ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்யஸபையின் மூன்றாவது மஹாஸங்கத்தில் ஸ்ரீ. உ. வாஸுதேவாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

த்து, 'நீ இந்த ஸம்வத்ஸரத்து மஹாஸங்கத்தில், ஸ்ரீமடம் இப்பொழுது இருக்கும் ஸ்திதியைப் பற்றியும், அந்த ஸ்திதிவிஷயமாக மடத்து ஶிஷ்யர்கள் செய்யவேண்டிய ப்ரயத்நத்தைப்பற்றியும் ஓர் உபந்யாஸம் செய்யவேண்டும்' என்று நியமித்தார். அப்பொழுது, அடியேனுடைய மநஸ்ஸில், 'இப்பொழுது ஸ்ரீ மடமோ த்ருப்திகரமான ஸ்திதியில் இல்லை; இதைப்பற்றி அடியேன் ஏதாவது சொன்னால் அது ஸத்தாயாதார்த்யமாக இருந்தாலும் சிலருக்கு அப்ரியமாக இருக்குமே!' என்கிற பீதி ஜநித்தது. ஆனாலும், அடியேனுக்கு ஸர்வவிதத்தாலும் ஆப்தராக இருக்கும் ஸ்ரீ ஸபாத்யக்ஷரின் நியமநத்தை அதிலங்கநம் செய்வது ஸ்வரூபமன்று என்று எண்ணி, அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டிய வரையில் ஸ்ரீமடத்தின் தத்கால விஷயங்களைப்பற்றி இந்த மஹாஸதஸ்ஸுக்குச் சிலவற்றை மாத்திரம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகிறேன். அதில் ந்யூநாதிரேகங்கள் இருந்தால், அவைகளை, மஹத்தான ஔதார்யத்தையுடைய மஹாங்கள் க்ருபையுடன் க்ஷமித்தருளவேணும்.

ப்ரபஞ்சத்தின் ஆஶ்சர்ய வ்யாபாரங்களைச் சற்று ஊன்றிப் பார்த்தால், கணக்கற்ற ஜீவகோடிகள் தங்கள் தங்கள் அபிவ்ருத்தியைமாத்திரமே தேடுவதில் முயற்சிசெய்வதையும், மற்றும் எல்லையில்லாத பலர் மாயையால் மறைக்கப்பட்ட ஜ்ஞாநத்தையுடையவர்களாய்த் தமது ஆத்யந்திக ஶ்ரேயஸ்ஸைக் கிஞ்சித்தும் அறியாமல் தாத்காலிக ஆஹ்லாதத்தைக் கொடுக்கக்கூடிய வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்திப்பதையும், மற்றும் பலர் ஜகத்தின் உபகாரத்தையே பெரிதாகக் கருதி ஸம்ஸார தாபத்தில் வருந்தும் பல ஜீவகோடிகளுக்குத் தங்களால் இயன்றமட்டும் தனியாகவும் தம்மைப் போன்ற சிலரோடு ஒன்றுசேர்ந்தும் உபகரிப்பதையும், மற்றும் இம்மாதிரியான பல பல வ்யாபாரங்களில் மற்றும் பலர் ஸதா ப்ரவ்ருத்தித்து நிற்பதையும் நாம் காணலாம். "நஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்." ஏதாவது ஒரு வ்யாபாரத்தைச் செய்துகொண்டே ஒவ்வொருவரும் தமது காலத்தைப் போக்குகிறார். ஆனால், இந்த ப்ரவ்ருத்திகளையெல்லாம் ஸாதுவான ப்ரவ்ருத்திகள் என்று சொல்ல முடியாது. கேவலம் ஆத்மபரர்களாக இருந்துகொண்டு புண்ய பாப விசார மற்றுத் தங்களு



டைய மநஸ்ஸின் த்ருப்தியையே தேடுபவர்கள் ஸாதுக்களாக மாட்டார்களன்றோ? தங்களுடைய க்லேஶத்தைக் கவனியாமலே பிறருடைய நன்மையைத் தேடுபவர்கள்தான் நல்லோர்கள். 'ஈஶ்வரன் ஒருவன் உண்டு' என்று ஒத்துக்கொண்டால், அவனுக்கு, இவர்களுடைய வ்யாபாரங்களே முகோல்லாஸகரங்கள். "பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம்" என்றன்றோ பகவதவதாரரஹஸ்யத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறது?

இந்த ஸாத்விக ப்ரவ்ருத்தியிலும் இருவகை உண்டு: ப்ரஜைகளின் ஐஹிக ஸுகத்தை அபிவ்ருத்தமாக்கும்பொருட்டு முயல்வது ஒருவகை; ஆமுஷ்மிக ஶ்ரேயஸ்ஸைத் தேடுவது மற்றொருவகை. ப்ரஜைகளின் ந்யாய்யமான பரிபாலநத்தை உத்தேஶித்துத் தங்களுடைய ஸுக துக்கங்களைச் சிறிதேனும் பாராட்டாமல், தனியாகவும் காங்க்ரெஸ் என்று சொல்லப்படும் ஸதஸ்ஸில் ஒன்றுசேர்ந்தும் அநேக மஹாங்கள் பரிஶ்ரமப்படுவதையும், ஜநங்களுடைய ஹிதார்த்தமென்று எண்ணி ஸமுத்ரயாநம் ருதுமதீ விவாஹம் முதலிய சில சீர்திருத்தங்களைச் செய்யும்பொருட்டு விஶால மநஸ்கர்களான சிலர் ப்ரயத்நப் படுவதையும், அஜ்ஞாநத்தால் அந்தகாரத்திலேயே மூழ்கிக்கிடக்கும் ஜீவகோடிகளுக்குத் தத்வஜ்ஞாநத்தை உண்டுபண்ணும்பொருட்டுச் சில கருணார்த்ர சித்தர்கள் உசிதமான பலவித ஏற்பாடுகளைச் செய்வதையும் நாம் நாலாபக்கங்களிலும் பார்க்கிறோமல்லவா? இவர்கள் எல்லாரும், பரதுக்காஸஹிஷ்ணுக்களாக, 'என்ன செய்தால் அந்தத் துக்கத்தைச் சிறிதேனும் ஆற்றலாம்?' என்கிற ஆவேகத்துடன் ப்ரவ்ருத்தித்தவர்களே. ஆனால், இவர்களுக்குள், ஐஹிக ஸுகத்தை வ்ருத்திசெய்ய யத்நிக்கும் மஹாங்களைவிட, ஆத்மோஜ்ஜீவநத்தைத் தேடுவதில் ப்ரயத்நம் செய்யும் ஆஸ்திகர்களே மிகவுஞ் சிறந்தவர்கள். இந்த ப்ரவ்ருத்தியைத்தான் பகவான் விஶேஷித்துத் திருவுள்ளம்பற்றுகிறார். ஆத்மஜ்ஞாந ரூபமாகிய தர்மத்திற்கு க்லாநி வரும்பொழுதெல்லாம், இவ்விதமாக இதர ஜீவங்களை நிமித்தமாகக் கொண்டு தர்மஸம்ஸ்தாபநம் செய்வதல்லாமல், தானே பகவாந் அவதரிக்கிறார் என்றும் நாம் கேட்டிருக்கிறோம். "யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத । அப்யுத்தாநமதர்மஸ்ய ததாऽऽத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥"

இப்படி ப்ரஜைகளுக்கு ஆமுஷ்மிக ஶ்ரேயஸ்ஸை ஸம்பாதிக்க ப்ரயத்நப் படுகிறவர்கள் பலர் உண்டு. நம்முடைய வேதத்தை ஒத்துக்கொள்ளாமல் இதர வேதங்களை அவலம்பித்து அவைகளிற் சொல்லியிருக்கிறபடி தத்வோபதேஶம் செய்பவர் பலர்; நம்முடைய வேதத்தை ஒத்துக்கொண்டே அதில் இருக்கும் வாக்யங்களுக்குப் பிந்ந பிந்நங்களாக அர்த்தங்களைச் செய்துகொண்டு அந்த அந்த அர்த்தத்திற்கு இணங்கியபடி தத்வ ஹித புருஷார்த்தங்களை இதரர்களுக்கு விவரிப்பவர் பலர். இவர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் ஸித்தாந்தத்தைப் பிறருக்குப் போதிப்பதில் மிகுந்த ஊக்கத்துடன் வெகு காலமாக உழைத்து வந்தார்கள் என்பதை நாம் அறிவோம். இந்தக் காலத்தில், வேதபாஹ்யமான க்ரைஸ்தவ மதத்தை அநுஸரிக்கும் ப்ரஜைகளிடம் இந்த ப்ரவ்ருத்தி மிகுதியாக இருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். நமது தேஶத்திலும், பூர்வகாலத்தில், ஸர்வபூத ஸுஹ்ருத்துக்களாக இருந்த நமது பூர்வாசார்யர்கள், அஜ்ஞாநத்தால் தடுமாறுகிற ப்ரஜைகளிடம் க்ருபை கூர்ந்து அவர்களும் ஜ்ஞாநம்பிறந்து உஜ்ஜீவிக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணத்துடன் கணக்கற்ற ஏற்பாடுகளைச் செய்து வந்தார்கள். ஆனால், நமக்குத் தெரியாத ஏதோ ஒரு துஷ்க்ருத விஶேஷத்தால் அந்த ஏற்பாடுகள் எல்லாம் மலிநங்களாகிவிட்டன. ஈஶ்வரேச்சை இப்பொழுது இவைகளுக்கு உந்மேஷத்தைக் கொடுக்கவில்லை. காலவைபரீத்யத்தால் இவைகளுக்கு ஒரு துர்த்தஶை ஜநித்து, நமது பூர்வாசார்யர்களாற் செய்யப்பட்டுள்ள தத்வோபதேஶத்தை நன்றாக உணர்ந்து அநுஷ்டித்துவரும் நமது பெரியோர்களை நாம் அநாதரிக்கும்படியாகவும், நமது பாஷை ஆசாரம் இவைகள் எல்லாவற்றிற்கும் அநபிஜ்ஞர்களான தேஶாந்தரவாஸிகளிடம் முழு நம்பிக்கைகொண்டு பெருமை பாராட்டும்படியாகவும், மதஸ்தாபகரென்று பெயர்பூண்டுவரும் அவர்களிற் சிலரிடம் நாம் ஆசார்ய விஶ்வாஸம்வைத்து உத்தாரக புத்தி பூர்வக க்ருதஜ்ஞதையை அவர்களிடம் அநுஸந்திக்கும்படியாகவும்நேர்கிறது. இது மாத்திரமோ? நமக்கு ஸ்வபாஷையான ஸம்ஸ்க்ருதம் த்ராவிடம் முதலிய பாஷா ப்ரவசநத்திற்குக் கூட நமது தேஶத்திய பண்டிதர்களைவிட தேஶாந்தரீயர்களுக்கு ப்ராவீண்யம் அதிகமென்று அபிஜ்ஞர்களும் எண்ணும்படியாகவும் நேர்ந்துவிட்டது. "காலோ ஹி துரதிக்ரம:."



இப்படிப்பட்ட மாலிந்யம் வந்திருந்தாலும், 'பூர்வகாலத்தில் நமது பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட வ்யவஸ்தைகள் என்ன? எவ்விதமான அபிப்ராயத்துடன் அவைகள் ஏற்படுத்தப்பட்டன? இப்பொழுது நேர்ந்திருக்கும் மாலிந்யத்திற்கு ப்ரதீகாரம் ஏதாவது உண்டோ?' என்பதைச் சிறிது விசாரிப்போம். இந்த வ்யவஸ்தைகளில் மிகவும் முக்கியமானது, ஆசார்ய ஸ்தாந கல்பநம் என்பது தான். அதாவது - உபநிஷத்துக்கள் முதலிய நமது ஶாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கும் தத்வ ஹித புருஷார்த்தங்கள் எல்லாம் கேவலம் பண்டிதர்களுக்கு மாத்திரமன்றிக்கே ஸ்த்ரீ ஶூத்ர ஸாமாந்யமாக எல்லாருக்கும் உபயோகப்பட்டு ஸகல ப்ரஜைகளும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்கிற நல்ல எண்ணத்துடன் அநேக ஆசார்ய ஸ்தாநங்களை ஏற்படுத்தியும், நமது ஸித்தாந்தத்தில் ஶ்ரத்தையில்லாதவர்களுக்கும் ஶ்ரத்தை உண்டுபண்ணும் பொருட்டும் ஶ்ரத்தாளுக்களான ஆஶ்ரித ஜநங்களுக்குத் தத்வத்தை உபதேஶித்து உஜ்ஜீவந உபாயங்களைச் செய்யும்பொருட்டும் அந்த ஆசார்யர்களுக்கு அதிகாரம் கொடுத்தும், இந்த வ்யவஸ்தைக்கு ஒரு தார்ட்யத்தை உண்டுபண்ணும்படி அந்த ஆசார்யர்களுக்கும் அவர்களை ஆஶ்ரயித்த ஶிஷ்யர்களுக்கும் ஶாஶ்வதமான ஒரு ஸம்பந்தத்தை ஏற்படுத்தியும், இதரர்களுடைய பரிஶ்ரமமன்றிக்கே தனக்குத்தானே வ்ருத்தியடையும்படி நமது பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டுமுள்ள ஒரு ஏற்பாடு. இது, இப்பொழுது, ஆசார்யபுருஷ ஸம்ப்ரதாயமென்றும், ஸ்ரீ அஹோபிலம் வாநமாமலை முதலிய ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயமென்றும், முநித்ரய ஸம்ப்ரதாயமென்றும் பலவகைப்பட்டு வழங்குகின்றது. இந்த வ்யவஸ்தையின் தீர்க்க கால அநுஷ்டாநத்தினாலேயே, நமது ஸித்தாந்தம் இவ்வளவு தூரம் ப்ரசாரமாகியிருக்கின்றது என்று சொல்லவேண்டும். இம்மாதிரியான ஒரு வ்யவஸ்தை வழங்கிவாராமலிருக்கும் பக்ஷத்தில், நமது வித்யை ப்ராயஶ: ஸ்வல்பகாலத்திலேயே லுப்தமாகி, நாம் எல்லாரும் இப்பொழுது இருள் சூழ்ந்தவர்களாக க்ருமி கீடங்கள் போலவே இருந்திருப்போம். அவ்விதமான துர்த்தஶையிலிருந்து நம்மைக் காப்பாற்றினதற்கு, இந்த வ்யவஸ்தையின் ஆதி கர்த்தாக்களே ப்ரதாந காரணம். ஆனால், எந்த வ்யவஸ்தையும், மிகுந்த ஆலோசனையுடன் உண்டுபண்ணப்பட்டிருந்தபோதிலும், அது ஸங்குசித ஜ்ஞாநர்களான

மநுஷ்யர்களுடைய ஹஸ்த கதமாகி அவர்களால் ஸ்வல்பகாலம் அநுஷ்டிக்கப்பட்டு வந்தால், அவைகளின் ஸாத்விக பாகமாகிற யாதார்த்யம் மறைந்து, அப்ரதாநமாகிற சில அம்ஶம் 'தலையெடுத்து, முடிவில் வஸ்துலோபம் வராவிட்டாலும் விபரீதமாகப் பர்யவஸிக்கின்றது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அம்மாதிரியாகவே, இந்த வ்யவஸ்தையும், காலக்ரமேண சில வைபரீத்யங்களை அடைந்தது. ஆசார்ய புருஷ ஸம்ப்ரதாயம் என்கிற ரீதியைக் கைப்பற்றினவர்களின் விஷயத்தில், ஸதாசார்யர்களுக்கு அஸாதாரணமாக இருக்கவேண்டிய ஜ்ஞாநாநுஷ்டாநம் முதலியவை பொருந்தாமலிருக்கும் அநேகர், கேவலம் பூர்வாசார்ய ஸந்ததி ஜாதர்களென்கிற காரணத்தினால் ஆசார்யகம்செய்ய ஆரம்பித்து, முக்கியாம்ஶமாக இருக்கும் ஜ்ஞாந ப்ரதாநம் என்பதைக் கைதவறவிட்டு, சில ஸ்வ ப்ரயோஜநங்களை மாத்திரம் தேடிவரும்படி ஸம்பவித்திருக்கிறது. அந்த அநிஷ்டமான பர்யவஸாநத்தின் பரீவாஹத்தை இப்பொழுதும் அநேக இடங்களிற் காணலாம். ஸாத்விக ஶிரோமணிகளாகவும் பாப பீருக்களாகவும் இருக்கும் சில மஹாங்களை விலக்கிவிட்டால், பரம்பராகதமான ஆசார்ய ஸ்தாநத்தை வஹித்துவரும் ஆசார்யர்களில் அநேகர் இந்தத் தர்மத்தை ஒரு வ்ருத்தியாக வைத்துக்கொண்டு அதனால் ஜீவித்து வருகிறார்கள் என்பதில், ஏதாவது விப்ரதிபத்தி உண்டாகுமோ? அப்படி வர்த்தித்துவரும் ஸ்வாமிகளின்மீது தோஷாவிஷ்கரணம் செய்யவேணுமென்கிற எண்ணத்துடன் அடியேன் இவ்விதமாக விஜ்ஞாபநம் செய்துகொள்ள ஆரம்பிக்கவில்லை. யதார்த்தமாகவே தாபத்ரயத்தாற் பீடிக்கப்பட்டு ஜீவநாந்தரம் ஒன்றும் கிடைக்காமல், 'குடும்ப போஷணம் எவ்விதமாகச் செய்யப் போகிறோம்?' என்கிற சிந்தையால் ஒருவன் க்ரஸிக்கப்பட்டால், அவனுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தம் இருக்கும் வரையில் இந்த வ்ருத்தி ஶாஸ்த்ர ஸம்மதமன்று என்றும், இந்த வ்ருத்திக்குத் தனக்கு அதிகாரமில்லை என்றும், இந்த வ்ருத்தியில் தர்மலோபம் ஸம்பவிக்கிறது என்றும், இத்யாதியான விசாரம் சிறிதேனும் உண்டாகாதுதான். இது ஸர்வஜந ஸாமாந்யமே. ஆனால், விவேகிகளாக இருப்பவர்கள், சற்று ஆலோசித்தே ப்ரவ்ருத்திப்பார்கள். கஷ்டதஶையால் உண்டாகும் ஆந்த்யம் அவர்களை அவ்வளவாக மூடிவிடாது. ஆனாலும், வ்ருத்திகளுடைய குணதோஷ



தாரதம்யத்தைப் பார்க்குமளவில், பரம்பராகதமான ஆசார்யகத்தை வ்ருத்தியாகக் கொள்வது மிகவும் துஷ்டமன்று என்றே சொல்லவேண்டும். அத்யந்தம் நிக்ருஷ்டமாகவும், ஶாஸ்த்ர அஸம்மதமாகவும் அநநுரூபமாகவும் இருக்கும் ஹீந வ்ருத்திகளை விட இது எவ்வளவோ மடங்கு ஶ்லாகநீயமே! ஆனால், இந்த வ்ருத்தியை அநுஷ்டிக்குமவர்கள், தமது ஆசார்யகத்திற்கு அவஶ்யமான தர்மத்தைச் செய்துவராமல் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட வ்யவஸ்தையின் ஸாராம்ஶத்திற்கு லோபத்தை ஸம்பாதித்து விட்டார்களே! என்கிற துக்கம்தான் அடியேனை இவ்விதமாக விஜ்ஞாபநம் செய்துகொள்ளும்படி ப்ரேரிப்பித்தது. அதை க்ஷமிக்கவேணும். ப்ரிய வசநமன்றிக்கே வஸ்து ஸ்திதியை விஜ்ஞாபநம் செய்துகொள்வதும் தர்ம்யமாகையால், இந்த வ்யாபாரத்தில் அடியேன் துணிந்தேன். ஒருகால், ஆசார்யர்கள் இவ்விதமாக ஸ்வ தர்மாநுஷ்டாநத்திலிருந்து வழுவினதற்குக் காரணம், ஶிஷ்யர்களுடைய அஶ்ரத்தையும் அநர்ஹதையுமாகவே இருக்கலாம். எந்தக் காரணமாக இருந்தாலும், வ்யவஸ்தை வைகுண்யத்தை அடைந்துவிட்டது என்பதில் சிறிதும் ஆக்ஷேபமில்லை.

இதர ஆசார்ய ஸ்தாநங்களும், இம்மாதிரியாகவே வரவர ஶிதிலமாகிக்கொண்டே வருகின்றன. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ஆஜ்ஞையை முன்னிட்டு ஸ்ரீ ஆதிவண்ஶடகோபஸ்வாமியினால் ஏறக்குறைய 500-வருஷங்களுக்குமுன் ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீ அஹோபிலமடம் என்னும் ஒரு வ்யவஸ்தாந்தரத்தைப்பற்றி மாத்திரம் அடியேன் இப்பொழுது விசாரிக்க ப்ரவ்ருத்திக்கிறேன். இந்த வ்யவஸ்தையில் சில விஶேஷித்த குணபாகங்கள் உண்டு. 'ஸந்ததியை ஆசார்யகம் அவலம்பித்து நின்றால், ஜ்ஞாநாநுஷ்டாநாதிகள் பொருந்தாத ஆசார்யர்கள் ஸம்பவிக்கக் காரணமுண்டு' என்று கருதி, ஸ்ரீ ஆதிவண் ஶடகோபஸ்வாமீ, இந்த ஸம்ப்ரதாயத்தில் அந்தந்தக் காலங்களில் ஜ்ஞாநாநுஷ்டாநாதிகளால் ஸம்பந்நர்களான மஹாங்களையே ஆசார்யர்களாக வரிக்கும்படியாகவும், அவர்களிடமிருந்து ஶிஷ்யர்கள் வித்யையைப் பெற்றுக்கொள்ளும்படியாகவும் ஏற்பாடு செய்திருக்கிறார்; ப்ரமாதாதிகளுக்குப் பெரும்பாலும் காரணமான கார்ஹஸ்த்யத்தைத் தூரீகரிக்க வேணுமென்று எண்ணி, துரீய ஆஶ்ரமத்தையே ஆசார்யர்களுக்கு அஸாதாரணமான ஆஶ்ரமமாகவும் செய்திருக்கிறார். தவிரவும், ஸம்ஸ்ருதியில் ப்ரவ்ருத்தித்திரு

க்கும் ஶிஷ்யர்கள் தங்களுடைய ப்ரயத்நத்தையே கைக்கொண்டு ஆசார்யர்களை வரித்தால் தவறுதலுக்குக் காரணமாகும் என்கிற பீதியுடன் 'ஸ்வயமேவ க்ருபயா ப்ராப்யதே' என்கிற நிர்த்தாரணம் செய்யவேண்டிய அதிகாரமும், ஶிஷ்யர்களுடைய ஹிதத்திலேயே அபிநிவிஷ்டரான பூர்வ பூர்வ ஆசார்யர்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. தாரித்ர்யத்தால் வருந்தி அதனால் உண்டாகும் பலகஷ்டங்களாற் பீடிக்கப்படும் ஆஸ்திகர்களுக்கு யதோசிதம் அர்த்தத்தால் உபகரித்து, ஆத்மவித்யையை உபதேஶம் பெற்றுக்கொள்வதற்கு அவஶ்யமான ஐகாக்ர்யத்தை அவர்களுக்கு ஸம்பாதித்துக் கொடுப்பதும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திருவுள்ளத்திற்கு உகப்பு என்று எண்ணி, இந்த ஆஸ்தாநத்திற்கு ஏராளமான அர்த்தமும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாக ஆபந்நஜநஸாமாந்யத்திற்கே ஒரு ஶரண்ய ஸ்தாநமாக இது இருக்கவேண்டியது என்பதும், இந்த ஸ்ரீ மடத்தின் ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளி ஸகல அதிகாரத்தையும் வஹிக்கும் ஸ்ரீ ஸ்வாமீ ஸூர்யாம்ஶுக்களால் ஸூர்யன் போல ஸர்வ ஜநமநோரஞ்ஜநங்களாகிற கல்யாண குணங்களாலே ஶோபித்துக்கொண்டு பண்டிதபாமர விஶேஷமற்று எல்லாரையும் ரஞ்ஜிப்பித்துத் தாமும் அவர்களுடைய அநுராக விஷயீக்ருதராக இருக்கவேண்டுமென்பதும், இப்படி நித்யம் ப்ரஶாந்தாத்மாவாகவும் ம்ருதுபூர்வாபிபாஷியாகவும் தீநாநுகம்பியாகவும் ஸ்ரீ ஸ்வாமி எழுந்தருளியிருந்து ஆஶ்ரிதர்களுக்கு ஜ்ஞாநத்தை உண்டுபண்ணிக்கொண்டிருக்கவேண்டுமென்பதும், இவ்விதமாக ஶோபிக்கும் இந்த ஸ்ரீ ஸந்நிதியை ஆசார்யவரணம்பண்ணி அடைந்த ஸகல ப்ரஜைகளும் ஜ்ஞாநஸம்பந்நர்களாகிக் கைங்கர்யைகரஸர்களாய் இந்தப் பூமியையே வைகுண்டம்போல அநுபவித்து "ஸம்ஸார வனஷ ஹமவஹுவ வமஹுவனவ" என்று பெருத்த நிர்வ்ருதியை அடையவேண்டுமென்பதும், இந்த வ்யவஸ்தையை உண்டு பண்ணின மஹாநுபாவரின் ப்ரத்யாஶை. யதார்த்தமாகவே, இப்படி ஸகலவிதத்திலும் நமக்குப்பரமோபகாரகராக இருந்து கொண்டு, யாத்ருச்சிகமாக நம்மிடத்திலிருந்து ஸம்பவிக்கும் உபகாரலேஶத்தை மஹத்தாகப் பாவித்து நாம் புத்திபூர்வகமாகச் செய்யும் அபராத ஸஹஸ்ரங்களை மறந்து, நம்முடைய வ்யஸநங்களில் ப்ருஶ துக்கிதராகவும் நம்முடைய உத்ஸவங்களில் ப்ருஶ ஸந்துஷ்டராக



வும் ஒரு ஸுஹ்ருத் இந்த லோகத்தில் நமக்குக் கடி, அதுகாரணமாக வாசாமகோசரமான நிர்வ்ருதியை அநுபோம் என்பதில் என்ன ஆக்ஷேபம்? "ஸுகா ஸோமஸ்யாய பாஸ்ய விதிதாத்மந: - க்ருஶம்ஸதே ஜநஸ்ஸர்வ ராமே ப்ரவ்ரஜதே யதா ॥ ஹ்ரியா வ்ரீடா ஹர்ஷ ஸுப்ரஸ்ய ஸாயம் வ்ராத ஸம்ஹிதா: - ஸர்வ தேவ நக்ஷத்ர ராமஸ்ய யஶஸ்விந:" என்கிறபடியே ப்ரேம பாரவஶ்யத்தால் ஆநந்தத்தை அடைந்து ப்ரார்த்தநீய அப்ரார்த்தநீய தேவதா விவேகமன்றிக்கே கண்ட விடங்களிலெல்லாம் இப்படிப்பட்ட சிறந்த உபகாரிகளுக்கு மங்களங்களை ப்ரார்த்தித்துக்கொண்டு ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் காலத்தில் ப்ரஜைகள் ஆநந்தித்ததுபோலவன்றோ ஆஶ்ரிதர்கள் எல்லாரும் ஆநந்தித்து நிற்பார்கள்? "ஸர்வம் ஸுதி தமேவாஸீ ஸர்வோ தர்மபரோஹமவத்" என்பது தான் அபார கருணா நிதியாகிற இந்த வ்யவஸ்தையை உண்டு பண்ணினவருடைய மநோரதம்.

இவ்வளவு குணபூர்த்தியையும் மஹாந்களுடைய கடாக்ஷத்தையும் பெற்று இந்த லோகத்திலே ஜநித்த இந்த வ்யவஸ்தை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடையதிருவுள்ளத்திற்குஉகப்பாகவே கொஞ்சகாலம் அபிவ்ருத்தமாகி, ஆத்ம வித்யாப்ரசாரத்தை பஹுஶ: ஸாதித்து, பிறகு வ்யவஸ்தாந்தரங்களைப் போலவே இதுவும் தோஷதுஷ்டமாகி ஶைதில்யத்தை அடைந்து வருகின்றது. எந்த ப்ரகாரத்தில் இந்தவ்யவஸ்தைக்கு ஶைதில்யம் உண்டாகிறது? என்று ஆலோசித்துப் பார்த்தால், அதிக உத்ஸாஹத்திற்குக் காரணம் ஒன்றையும் காணோம். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திருவாராதநம், அந்த ஆராதநத்திற்கு உபயுக்தமாகும் சொத்துக்களை அபிவ்ருத்தி செய்தல், அந்தச் சொத்துக்களை ஸத்பாத்ரத்தில் விநியோகித்தல், ப்ரதி க்ராம நகர ஸஞ்சாரம் பண்ணுதல், ஆஶ்ரித ஜநங்களுக்குத் திருவிலச்சினை திருமந்த்ர மந்த்ரார்த்த ப்ரதிபாதநம் செய்தல், ஶக்தர்களின் விஷயத்தில் க்ரந்த காலக்ஷேப புரஸ்ஸரமாகத் தத்வோபதேஶத்தைச் செய்தல், ஆஶ்ரித ஸாமாந்யமாகப் பராந்யாஸம் முதலிய உஜ்ஜீவநஉபாயங்களைச் செய்தல், இவை முதலிய பஹுப்ரகாரமான தர்மம் இந்த ஆஸ்தாநத்திற்கு

...னும் ஸ்ரீஸ்வாமியைப் பொறுத்ததாக இருக்கிறது. இவை ...ற்றையும் த்ருப்திகரமாகவும் ஶாஸ்த்ர ஸம்மதமாகவும் ...ஹிக்க, விஶேஷித்த ஶக்தியையுடைய வ்யக்தியே அபேக்ஷி தம். 'ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிஹ்மன் யாரைத் திருவுள்ளம்பற்றி இந்தப் ...த்தை வஹிக்கும்படி ஸங்கல்பிக்கிறானோ, லக்ஷ்மீந்ருஸிஹ்ம ...டாக்ஷம்பெற்ற அவர் மிகவும் அஶக்தராகவும் அநர்ஹராகவும் இருந்தாலும் ஸ்ரீ ந்ருஸிஹ்மன் திருவுள்ளம் பற்றின மாத்திரத் தாலே ஸகலகுணமும் நிறைந்தவராக ஆகிவிடுகிறார்,' என்றுசொல் வது அபிஜ்ஞர்களுக்கு லக்ஷணமன்று. நமது ஸித்தாந்தத்தின் ரஹஸ்யத்தை அறிந்தவர்கள் இந்தச் சொல்லை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். திருவாராதநாதிகளின் சிறப்பு, ஸ்ரீ ஸ்வாமிகளின் அர்ஹதாதீநமே. விரக்தாக்ரேஸரர்களும் ஜ்ஞாநாநுஷ்டாநம் முத லிய ஸம்பத்துக்கள் பொருந்தினவர்களுமான ஸ்ரீ ஸ்வாமிகளின் காலங்களில் ஆராதநாதிகள் வெகு சிறப்பாக நடப்பதும், தத்விப ரீதமான ஸ்ரீ ஸ்வாமிகளின் காலங்களில் அந்தத் தர்மங்களுக்கு லோபம் ஸம்பவிப்பதும் நமக்கு அநுபவஸித்தம். இப்படிப்பட்ட காரணத்தாலோ, கலிப்ராபல்யத்தாலோ, வேறுஎவ்விதமான ஶிஷ்ய தௌர்ப்பாக்யத்தாலோ ஸ்வல்ப காலமாக இந்தத் தர்மங்களில் பெரும்பாலும் எல்லாம் நஷ்டமாகிக்கொண்டேவருகின்றன. 'ராஜ சிஹ்நங்களாகிற ஶிபிகைமுதலிய பிருதுகள் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிஹ்ம னுக்கே தவிர நமக்கு இல்லை' என்கிற எண்ணங்கொண்ட வை ராக்ய நிதிகள் ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளி எப்பொழுதாவது ஸ்ரீ ஸந்நிதி அபிவ்ருத்தியை அடையும் மார்க்கத்தில் வரும்போல இருந்தாலும் அந்த ஸ்திதி நீடித்து நிற்பதில்லை. ஸ்ரீ லக்ஷ்மீந்ரு ஸிஹ்மனுடைய ஆராதநோபயுக்தமாக வேண்டும் சொத்துக்க ளும் பலவிடங்களில் அந்யாக்ராந்தங்களாகவும் இதரதா நஷ்டங் களாகவும் ஆகிக்கொண்டு வருகின்றன. பலவிடங்களில் இன்னும் நஷ்டமாகாமலிருக்கும் சொத்துக்களிலிருந்து ந்யாய்யமாகக்கிடை க்கவேண்டிய வ்ருத்தியம்ஶங்கள் ஸரிவர வஸூலாகாமல் குறைவு பட்டு வருகின்றன. புதிதாக ஸ்ரீ ஸந்நிதிக்குச் சொத்துக்கள் ஸமீப காலத்தில் சேர்ந்ததாகவும் தெரியவில்லை.

கைவசத்தில் வரும் அர்த்தத்திற்கும் ஏதோ அநவேக்ஷித மான செலவு நடந்து வருகிறதே தவிர ஸந்த்ருஷ்டமாகவும் நட ந்து வரக்காணோம். 'பகவத்ராமாநுஜ ஸித்தாந்தத்திற்குப் பெரு த்த லோபம் வந்துவிடுகின்றதே! அந்த லோபத்தை வரவொட்டா மல் தடுத்து அந்த ஸித்தாந்தத்தைத் தழைக்கும்படி செய்யவேண் டியதன்றோ நம்முடைய முக்கிய தர்மம்?' என்று அறிந்து, தமக்கு அஶக்தியாக இருந்தாலும், இதர ஆஸ்திக வித்வான்களைக்கொண்டு சில விடங்களிலாவது க்ரந்த காலக்ஷேபாதிகளை ஸ்ரீ ஸ்வாமிகள் நடத்திவரக்கூடாதா? ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதாத்யயநங்கள் வரவர லுப்தங்களாகி விடுகின்றனவே! ஆலயங்களில் உத்ஸவத் திற்கு முக்கிய அங்கமான அத்யயந ரூப கைங்கர்யமே இன்னும் ஸ்வல்பகாலம் சென்றால் ஒளிந்துவிடும்போல் இருக்கின்றதே! அநேக ஆலயங்களில், இப்பொழுதே வேதபாராயண கோஷ்டி களுக்கு ஸ்வாமிகள் துர்லபமாகி அத்யயநம் என்கிற அங்கமின் றிக்கே உத்ஸவங்கள் நடந்துவருவதை நாம் பார்க்கிறோம். க்ரு ஹங்களிலும் ஶுப காலங்களில் வேதாத்யயநம் செய்த ஸ்வாமி கள் பெருத்த கோஷ்டியாகச் சேர்வதும், ததீயாராதநத்திற்கு அஸா தாரணஶோபையைக் கொடுக்கும் ஶ்ருதி ஸுகமான ஸம்ஹிதா ஶாகா பாராயணம் செய்வதும் துர்லபமாகிவிட்டது. ப்ராஹ்ம ணர்களுக்கு அஸாதாரண சிஹ்நமான இந்த வேதாத்யயநத்தை லோபமாகாமல் தடுப்பது, நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களின் தர்மமாகத்தானே ஆகிவிட்டது!

தவிரவும், தேஶாந்தர வாஸிகளால் ராஜ்யாதிகாரம் வஹிக் கப்பட்டு வரும் இந்தக்காலத்தில், ராஜபாஷையை அப்யஸிப்ப தும், தத்ஸம்பந்தமான ஶாஸ்த்ரங்களில் ப்ராவீண்யத்தை ஸம் பாதிப்பதும், அப்படி ஸம்பாதித்து ராஜபுருஷர்களால் அபி மாநிக்கப்பட்டுச் சிறந்த பதவியை அடைய முயல்வதும் சாதுர் வர்ண்ய ஸாமாந்யமான தர்ம மாகிவிட்டது. அப்படிச்செய் வது தோஷமென்பது அடியேனுடைய அபிப்ராயமன்று. காலாநு குணமாக ப்ரவ்ருத்தி பேதங்கள் உண்டாவது நைஸர்க்கிகமான படியால், அது அநிவாரணீயமே. ஆனால், வடதாக்ஷூஶ யோக்ய தையை ஸம்பாதிக்கும் பொருட்டு, இளவயதிலேயே பாலர்களைப் பெரியோர்களுடைய பராமர்ஶிப்பு இல்லாமல் பலவித ஜநங்களால் வஸிக்கப்படும் பெரிய நகரமான ஸ்தலாந்தரங்களுக்கு அனுப்பி மனம்போன போக்கெல்லாம் அவர்களைப் போகவொட்டாதபடி தடுக்கவேண்டிய வ்யவஸ்தைகள் ஒன்றையும் செய்யாமல், ஶக் திக்கு மீறி அர்த்த வ்யயமும் செய்து, 'நமது குமாரர்கள் வித்

யாஸமாபநம் செய்து தகுந்த அதிகாரத்திற்கு யோக்யர்களாகச் சீக்கிரத்தில் வந்துவிடுவார்கள்' என்கிற ப்ரத்யாஶையுடன் அநேக குடும்பிகள் படும் பரிஶ்ரமத்தின் பலத்தைப் பார்க்கும்பொழுது, மநஸ் கேதத்தை அடைகின்றது. நமது பாலர்கள் ஸதாசார ஹீநர்களாகவும், பெரும்பாலும் நாஸ்திகர்களாகவும் மாறிவிடுவது, அவர்களது தோஷமன்று. "ஸம்ஸர்கஜா தோஷகுணா பவந்தி"; அவர்களுக்கு ஸாதுக்களின் ஸங்கம் நேராமல், அவர்கள் விபரீதமாக மாறிவிடுகிறார்கள். ப்ரத்யக்ஷங்களான தேஹாதிகளைக் காட்டிலும் அதீதமாக ஆத்மா ஒன்று இருக்கின்றது என்றும், அதன் உஜ்ஜீவநத்தைத் தேடுவதே அவஶ்யம் என்றும், அப்படித் தேடுவதில் நமது ஶாஸ்த்ரம் சாதுர்வர்ண்யாதி ரூபமான சில நியமங்களை விதித்திருக்கிறது என்றும், அந்த நியமங்களுக்குக் கட்டுப்பட்டு வர்த்தித்தால்தான் நமக்கு ஶ்ரேயஸ் உண்டு என்றும் இத்யாதியான ஜ்ஞாநம் ஜநிக்க அவர்களுக்கு அவகாஶமே இல்லை. இவ்விதமான காரணங்களால் பாஷாந்தராப்யாஸம் செய்யும் நமது பாலர்கள் மிகுந்த ஶோச்ய தஶையை அடைந்திருக்கிறார்கள். இந்த ஸ்திதியை நாம் அநாதரித்திருப்பது நமக்குத் தர்மமாகுமா? ஏராளமான சொத்தை வஹித்துக்கொண்டு ப்ரஜைகளின் ஆநுகூல்யத்திற்காகவே ஆஸ்தாநாதிகாரத்தைப் பெற்றுநிற்கும் ஸ்ரீ ஸ்வாமிகள், இம்மாதிரியாக நமது பாலர்களுக்கு நேரும் விபத்தைப் பார்த்து உதாஸித்து வரலாமா? தம்மிடத்திலிருக்கும் சொத்தில் ஒரு பாகத்தையாவது இந்த நாஶத்தின் ப்ரதீகாரத்தைத் தேடுவதில் செலவிடவேண்டுவதில்லையோ? ஆசாராதிகள் குறையாமலிருக்கவும், நமக்குப் பரம்பராகதமான வேதாந்த வித்யையை ப்ரசாரம் செய்யவும், பாலர்களுக்கு உசிதங்களான க்ரந்தங்களை எழுதி ப்ரசுரம் செய்யவாவது, அதற்காகச் சில போதகாசார்யர்களை ஏற்படுத்தவாவது, தக்ஷவிதமான பாடஶாலைகளையும் வித்யார்த்தி நிலயங்களையும் ஏற்படுத்தவாவது ஸ்ரீ ஸ்வாமிகள் முயற்சியை எடுத்துக்கொள்ளக்கூடாதா? நமது தேஶத்திற்கு நேரும் இந்தத் தைந்யத்தைத் தேஶாந்தரத்திலிருந்து வந்திருக்கும் சில உதாரர்கள் பார்த்துத் தத் ப்ரதீகாரத்தை அவர்கள் தேடும்படியாகத்தானே நேர்ந்துவிட்டது!

இன்னும் பகவதநுக்ரஹத்தைப்பெற்று ஜ்ஞாநசக்ஷுஸ்ஸை அடைந்து அஸாதாரணமான ஜ்ஞாநத்துடன் மஹர்ஷிகளால் எழு



தப்பட்டும், ஜநங்களுக்குப் பலவிதத்தில் உபகாரகமாகவுமுள்ள தந்வந்த்ர்யாதி ப்ரணீத ஶாஸ்த்ரங்களில் அநேகம் காலவைபரீத்யத்தால் லுப்தமாகி வருகின்றன என்பது எல்லாருக்கும் தெரியும். அப்படி அவைகள் லோபத்தை அடையவொட்டாமல் அவைகளைப் பாதுகாப்பதும் ஒரு நன்மையன்றோ? அந்த வழியிலும் ஸ்வல்பமேனும் செலவு நடந்ததாகத் தெரியவில்லை.

பூர்வகாலத்தில், பஹுவான அர்த்தவ்யயத்தைச் செய்து அநேக ஸ்தலங்களில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் நித்யோத்ஸவம் கண்டருளும்படியாகவும், அங்கேயிருக்கும் ஜநங்கள் அப்படி உத்ஸவம் கண்டருளும் ந்ருஸிம்ஹனை ஸேவித்து அதனால் ஐஹிக ஆமுஷ்மிக ரூபமான பலத்தை அடையும்படியாகவும் கணக்கற்ற ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. ஸ்வல்பகாலமாக ஸ்ரீ அழகிய சிங்கர்கள் அவைகளைக்குறித்துக் கிஞ்சித் ஔதாஸீந்யத்தை வஹிக்கவே, பஹு இடங்களில் அவ்வித உத்ஸவார்த்தம் நிர்மிக்கப்பட்டிருந்த ஸ்தலங்கள் ஜீர்ணமாகியும் அந்த உத்ஸவங்களுக்கென்று விடப்பட்டிருக்கும் சொத்துக்கள் அந்யதா உபயுக்தமாகியும் வருகின்றன. இவைகளைக் கொஞ்சம் பராமர்ஶித்துப் பூர்வர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த வ்யவஸ்தைகளுக்கு மாலிந்யம் வராமல் ஸம்ரக்ஷிக்கவேண்டியது ஸ்ரீ அழகிய சிங்கர்களின் முக்கிய தர்மங்களில் ஒன்றே. இப்பொழுது ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கர், இந்த விஷயத்தில் தமது தர்மத்தை உணர்ந்து, திருநாராயணபுரத்திலுள்ள ஸ்ரீ ஆதிவண் ஶடகோபஸ்வாமியின் ப்ருந்தாவநத்தை இரண்டொரு ஸஹஸ்ர ரௌப்யங்களைச் செலவிட்டுப் பரிஷ்கரித்திருக்கிறார். இது, மிகவும் புகழத்தக்கதே. ஆனால், இன்னும் இப்படியே கவனிக்கவேண்டிய அம்ஶங்கள் பஹுவாக இருக்கின்றன.

இம்மாதிரியாக ஜநங்களுக்கு ஐஹிகத்திலும் ஆமுஷ்மிகத்திலும் ஶ்ரேயஸ்ஸைச் செய்யக்கூடிய மார்க்கங்கள் அஸங்க்யேயங்களாக இருக்கின்றன. இவைகள் எல்லாவற்றையும் பர்யாலோசித்துச் செலவிட்டாலன்றோ ஸந்த்ருஷ்ட வ்யயம் நடக்கிறது என்று சொல்லலாம்?

ஸ்ரீ ஸந்நிதிக்கு உரிய மற்றைய தர்மங்களும் இப்பொழுது செழிப்பாக வளர்ந்துவரவில்லை. ஸஞ்சாரமென்பதே நின்று எவ்

வளவோ காலமாகிவிட்டது. நமது ஸ்ரீ ஸந்நிதிக்கு மூல ஸ்தாநமா
யுள்ள ஸ்ரீ அஹோபிலத்திற்கு ஸமீபத்தில் வஸிக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ
ந்ருஸிம்ஹாநுக்ருஹீதர்களான ஶிஷ்யர்கள், தங்களுக்கே அஸா
தாரணமாகச் சொந்தமாயிருந்த குலதைவத்தை யாரோ அப
ஹரித்துப் போய்விட்டதுபோலக் கதறுகிறார்கள். தங்களுக்குக்
கொஞ்சகாலமாக நேரும் துஸ்ஸ்திதிக ளெல்லாம் அந்த லக்ஷ்மீந்ரு
ஸிம்ஹா பஹாரத்தாலேயே ஜநிக்கின்றன என்று நினைத்து அநு
வரதம் ஶோகிக்கிறார்களாம். அவர்களுடைய தேஶத்திற்கு ஸ்ரீ
லக்ஷ்மீந்ருஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணி அவர்களுக்கு இருக்
கும் மனத்துயரத்தைப் போக்கி ஸ்ரீ ந்ருஸிம்ஹனிடத்தில் அவர்
களுக்கு உண்டான பக்தியை வ்ருத்திசெய்வதன்றோ, ஸ்ரீ ஸ்வாமி
களுக்கு லக்ஷணமாகும்? அப்படிச் செய்யாமல், ஆர்த்தரான ஶிஷ்
யர்களைக் கதறவிட்டு அந்தக்கதறுதலைத் தாம் சற்றும்திருச்செவி
சாத்தாமல் எழுந்தருளியிருப்பதும், அபார கருணையை யுடைய
ஸ்ரீ அழகியசிங்கர்களுக்கு உப்பந்நமாகுமா? இன்னும் அநேக ஸ்த
லங்களில் கணக்கற்ற ஶிஷ்யர்கள், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் எழுந்
தருளியிருக்கும் இடத்திற்குத் தாமே போகத் திறமையற்றவர்க
ளாய், ஸ்ரீ வைஷ்ணவஸ்வரூபங்களான திருவிலச்சினை மந்த்ர மந்
த்ரார்த்தம் முதலியவற்றை இழந்து, தத்வ ஜ்ஞாநத்தைப் பெறாம
லும், உஜ்ஜீவந உபாயங்களை அநுஷ்டியாமலும், மஹத்தான ஶோ
கத்தால் வருந்தினவர்களாகவே தேஹவியோகத்தை அடைகிறார்
கள். மற்றும் பலர், இந்தத் துர்த்தஶையை ஸஹிக்கமாட்டாமல்
ஆசார்யாந்தரங்களை வரித்துத் தமக்கு ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக்
கொள்ள முயல்வதையும் நாம் பார்க்கிறோம். இவை யெல்லாம்
ஸ்ரீ மடத்தின் அபிவ்ருத்தி லக்ஷணங்களாகுமா? மஹா வித்வாந்க
ளுடைய பெருத்த ஸமாஜமாகவும், வித்யைகளுக்கெல்லாம் உத்
பத்தி ஸ்தாநமாகவும், எவ்விதமான நாஸ்திகர்களுக்கும் பாப பயத்
தையும் தைவ பக்தியையும் ஜநிப்பிக்கக் கூடியதாகவும், ஸாதுக்க
ளுக்கெல்லாம் ஒரு நிவாஸ வ்ருக்ஷமாகவும், ஸம்ஸார மருகாந்தா
ரத்தில் பச்யமாநர்களான ஜீவன்களுக்கு ஶாஶ்வதமான ஆறுதலைக்
கொடுக்கக்கூடிய ஒரு ஶீதள ஸரஸ்ஸாகவும் இருக்கவேண்டிய
இந்த மடம் மிகவும் விபரீதமாக மாறியிருக்கின்றதே! இந்த மாறு
தல் இன்னும் ஸ்வல்ப காலத்திற்கு நடந்துவந்தால், 'ஸ்ரீ மடமும்
இருந்ததோ?' என்று எண்ணும்படியாக ஆகிவிடுமன்றோ!



'இதற்கு ஏதாவது ப்ரதீகாரம் உண்டா? என்ன செய்தால்,
பூர்வர்களால் உத்திஷ்டமான ஹிதம் ஸாதிக்கப்படும்?' என்று
கேட்டால், அடியேனுக்குத் தோன்றுகிற ப்ரத்யுத்தரம் ஒன்றே.
அதாவது:—ஸ்ரீ ஸந்நிதியின் உத்கர்ஷத்தைக் கோரும் ஶிஷ்யர்கள்
தாங்கள் அடிக்கடி ஸ்ரீ ஸந்நிதிக்கு நேரில் வந்து, ஸ்ரீ அழகியசிங்கர்க
ளிடம் க்ருத்ய அக்ருத்யங்களை விண்ணப்பஞ்செய்து, அவர்களு
க்கு ப்ரமாதாதிகள் ஏற்படும் காலங்களில் யதோசிதம் ஸ்மரிப்
பித்து, அப்ரமத்தர்களாக அவர்கள் ஆஶ்ரித ஸம்ரக்ஷணம் செய்து
வரும் காலங்களில் தங்களுடைய க்ருதஜ்ஞதையையும் அப்படிப்
பட்ட பரமோபகாரிகளிடம் தமக்கு இருக்கும் பக்தியையும்
விஜ்ஞாபநஞ் செய்துகொண்டு, ஸ்ரீ ஸந்நிதிக்கு ந்யூநதாவஹமான
கார்யம் ஏதாவது ஸம்பவிக்கும்போ லிருந்தால் ஸ்ரீ லக்ஷ்மீந்ரு
ஸிம்ஹாநுக்ருஹீதமான தங்களுடைய பலத்தால் அதைத் தடு
த்து, ஸ்ரீ ஸந்நிதிக்குப் பலாதிஶயத்தைக் கொடுக்கும் அம்ஶங்கள்
ஏற்பட்டால் அவைகளைத் தங்களுடைய ஶக்தியைக்கொண்டும்
ஒன்று நூறாக அபிவ்ருத்தங்களாக்கி, இம்மாதிரி ஸ்ரீ அழகியசிங்கர்
களுக்கு ஓர் பெருத்த உபபலமாக ஶிஷ்யர்கள் எல்லாரும் ஆக
வேண்டும் என்பதுதான். இம்மாதிரியான கைங்கர்யத்தை ஶிஷ்
யர்கள் ஸரிவர நடத்திக்கொண்டுவந்தால், அஸாதுவான கார்யம்
ஒன்றும் நடவாது என்பதில் ஆக்ஷேபமில்லை.

ஆனால், 'இப்படி விஜ்ஞாபநம் செய்துகொள்வது ஶிஷ்யர்க
ளுடைய தர்மமாகுமா? ஸ்ரீ அழகியசிங்கர் ஶிஷ்யர்களுக்கு ஸ்வாமி
யன்றோ?' என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். இதுஸம்பந்தமாக
இரண்டொரு விஷயங்களை நாம் கவனிக்கவேணும். ஆஸ்தாநத்
திற்கு எழுந்தருளும் ஸ்ரீ அழகியசிங்கர்கள் நமக்கு ஸ்வாமிகள்,
நாம் அவருக்குத் தாஸபூதர்கள் என்பது உண்மையே. ஸர்வ ப்ர
காரத்தாலும் ஸ்ரீ ஸ்வாமியை ஸர்வவித ப்ரதிபத்தியுடனும் நாம்
ஆஶ்ரயிக்கவேண்டியது யதார்த்தமே. ஆனால், இந்தத் தாஸ்யம்
கேவலம் ஸ்தாநாதீநமன்று; "[illegible]"
என்று குணாதீநமென்பதை நாம் ஒருபொழுதும் மறக்கக்கூடாது.
ஆஸ்தாநத்திலும் தத்ஸம்பந்தமான அதிகாரத்திலும் ஓர் ஆஸ்தா
விஶேஷத்தால், உபாயங்களின் ஸாத்வஸாது பாவத்தை விசாரியா
மலே ஒரு ஸ்வாமீ ஆஸ்தாநத்தை ஆக்ரமித்து ஸ்ரீ அழகியசிங்க
ராக எழுந்தருளிவிடும் பக்ஷத்தில், அவர்விஷயத்திலே நாம் எவ்

விதமான ப்ரதிபத்தியைச் செய்யக்கூடும்? பலாம்ஶத்தில் ஒரு வ்யாபாரம் ஸித்தாந்தாபிவ்ருத்தியின் பொருட்டு ஆகிறது என்கிற காரணத்தைக்கொண்டு, வஸ்து ஸ்தித்யபலாபத்தையும் 'அந்தஃகரணத்திற்கு விருத்தமான ப்ரவ்ருத்தியையும் ஒருவர் செய்ய ஆரம்பித்தால், அவரிடம் நாம் எப்படி விஶ்வஸிக்கக்கூடும்? 'ஆபத்தஶையை அடைந்துவிட்டோம்' என்கிற வ்யாஜத்தைக் கொண்டு ஆஶ்ரமத்திற்கு அநநுகுணமான கர்மாக்களைச் செய்யவும், 'நாம் அதிகாரத்தில் இருக்கிறோம்; நம்முடைய கோஷ்டியும் பலிஷ்டமாக இருக்கிறது' என்கிற தைர்யத்தைக்கொண்டு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மனுடைய சொத்துக்களை அந்யதா விநியோகிக்கவும் இன்னும் மற்ற க்ரமவிரோதங்களைச் செய்யவும் ஒருவர் துணிந்துவிட்டால், அவரைப்பற்றி ஶிஷ்யர்களுக்கு எப்படி தாஸ்யபுத்தி ஜநிக்கும்? "ஸிஷ்ஶஂஸஸுஂஸ்ஞாயெ" என்கிறபடி ஸதாசார்யனுக்கு உரிய கல்யாணகுணம் ஒருவரிடம் நிறைந்திருந்தாலன்றோ, அவர் நமக்கு ஸ்வாமியாவார்; நாம் அவருக்கு தாஸர்கள் ஆவோம்? குணபூர்த்தி இல்லாதவிடத்தில் ஸ்வாமிதாஸ ஸம்பந்தத்தைக் கொண்டாடுவது மௌட்ய பரீவாஹமேதவிர ஜ்ஞாந ஜந்ய கார்யமாகாது.

மேலும், ஸ்ரீ ஸ்வாமீ ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளிவிட்ட மாத்திரத்தில் அப்ராக்ருத ஶக்தி அவரிடம் ஏற்பட்டுவிடவில்லை. ப்ரக்ருதி ஸம்பந்தம் ஒட்டிக்கொண்டிருக்கும் வரையில் ஜ்ஞாநத்திற்குத் திரோதாநாதிகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். வைராக்யாதிகளால் மிகவுஞ் சிறந்தவராக இருந்தாலும், "ஸூாரமெக்ஷாஂ" என்கிற ரீதியாகச் சிலஸமயங்களில் ஸ்மரிப்பிக்கும் ஸ்திதி அவருக்கும் உண்டு. கல்யாணகுண ஸம்பத்தால் அபரதேஶிகனைப் போல எழுந்தருளியிருந்த மஹான்களின் காலங்களிற்கூட ஶிஷ்யர்கள் ஸ்மரிப்பிக்கிறது என்றும், அவர்களுடைய யுக்தியுக்தமான விஜ்ஞாபநத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் திருவுள்ளம்பற்றுகிறது என்றும் இத்யாதியான பரிபாடி நடைபெற்று வந்திருக்கிறது. ஆகையால், தாஸர்களாக இருக்கும் நாம் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் க்ருத்ய அக்ருத்யங்களைப்பற்றி ஸ்மரிப்பிக்கிறதும், ஸ்ரீ ஸ்வாமிகளாக எழுந்தருளியிருக்கும் அந்த ஆசார்யர்கள் நம்முடைய விஜ்ஞாபநங்களை ஸதஸத்விவேகம்செய்து அங்கீகரிப்பதும் அநுபபந்நங்களல்ல.

ஆனால், அவ்யவஸ்திதமாக யார் வேணுமானாலும் விஜ்ஞாபநங்களைச் செய்து கொள்ளலாமென்றாவது, அல்லது யத்ருச்சை



யாக யார் அந்தந்தக் காலங்களில் ஸ்ரீ ஸ்வாமியின் ஸமீபத்தில் இருக்கும்படியாக நேர்கிறதோ அவர் மாத்திரம் விஜ்ஞாபநங்களைச் செய்துகொள்ளுகிறது என்றாவது ஒரு மார்க்கம் ஏற்பட்டுவிட்டால், கார்ய நிர்வாஹம் துஸ்ஸாத்யமானாலும் ஆகலாம்; அல்லது விபரீதமாகப் பர்யவஸித்தாலும் பர்யவஸிக்கலாம். அநேக ஸமயங்களில் இம்மாதிரியான ரீதியால் தோஷங்கள் ஸம்பவித்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். சிலஸமயங்களில், ஸாத்விககுணம் கொண்ட மஹான்கள், ஸ்ரீ ஸ்வாமிகளின் அந்தரங்க விஶ்வாஸத்திற்குப் பாத்ரராகி ஸ்ரீ ஸந்நிதிக்கு ஏராளமான ஆநுகூல்யத்தைச் செய்து வைத்திருக்கிறார்கள். அவ்விதமான ஸாதுக்கள் ஸதா நேர்வதை நாம் எப்படி நம்பியிருக்கலாம்! லோகாநுபவத்தைப் பார்த்தால், யத்ருச்சையாக நன்மை நேர்வதைவிட யத்ருச்சையாகத் தீமை நேர்வதே அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகையால், ஸ்வாமிகளிடத்தில் ஶிஷ்யர்கள் விஜ்ஞாபநம்செய்துகொள்ளுகிறது என்கிற இந்த மார்க்கத்திற்குச் சில நியமங்களைக் கொடுத்து, அதற்கு ஒரு ஸ்வரூபத்தை உண்டுபண்ணுவது நலமாகும். அந்த ஸ்வரூபம் எப்படிப் பட்டதாக இருக்கவேண்டும் என்பதை நிர்ணயிக்க அடியேன் ஶக்தனல்லேன். ஆனாலும், பின்வருமாறு ஒரு சாயையை அது அநுஸரித்திருக்கலாம் என்று சொல்லத் துணிகிறேன்.

ஸ்ரீ ஸந்நிதியைச் சேர்ந்த ஶிஷ்யர்கள் எல்லாரும் ஒருவர் விடாமல் தங்கள் பெயரை ஒரு புஸ்தகத்தில் தாக்கல் செய்து, அப்படி தாக்கல் செய்யப்பட்ட பெயர்கள் அடங்கிய ஒரு ஸதஸ்ஸை ஏற்படுத்தி அதற்கு ராஜாங்கீகாரத்தை ஸம்பாதிக்கவேண்டியது என்றும், பலவிடங்களிலிருக்கும் இந்த ஸதஸ்யர்கள் ஒன்றுசேர்ந்து ஆலோசனைகளைச் செய்வது துஸ்ஸாத்யமாதலால், இவர்களால் நியமிக்கப்படும் பெயர் ஐம்பது, இவர்களிலிருந்து ஸ்ரீ ஸ்வாமியால் நியமிக்கப்படும் பெயர் ஐம்பது, ஆக நூறு பெயர்கள் அடங்கிய ஒரு கமிட்டி கார்ய நிர்வாஹார்த்தம் ஏற்படுத்தப்படவேண்டியது என்றும், இந்தக் கமிட்டி அங்கத்தினர்களாக இருப்பதற்குக் கேவலம் தநிகதையையாவது உயர்ந்த பதவியில் இருப்பதையாவது அர்ஹதையாகச் செய்யாமல் ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பத்தையும் ஒரு யோக்யதையாகப் பாவிக்க வேண்டியது என்றும், இப்படி உண்டாக்கப்படும் கமிட்டி உத்திஷ்டமான ஒரு

காலாவதிவரையில் இருந்து பிறகு அவர்களைக் கொண்டாவது மற்றவர்களைக்கொண்டாவது முற்கூறியபடி மற்றொரு கமிட்டியை ஏற்படுத்துகிறது என்றும், இந்தக் கமிட்டிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் அத்யக்ஷராக எழுந்தருளியிருந்து கமிட்டி அங்கத்தினர்களோடு கலந்து ஸகல காரியங்களையும் கடாக்ஷித்துவரவேண்டுமென்றும், ஸ்ரீ அழகியசிங்கருடைய நியமநத்தின்பேரில் வ்யவஸ்திதமான திநங்களில் இந்தக்கமிட்டியார் ஸங்கம் சேர்ந்து ஸ்ரீ ஸந்நிதி விஷயகமான ஆலோசனைகளைச் செய்து ஸ்ரீ அழகிய சிங்கரிடம் தங்களுடைய அபிப்ராயங்களை நிவேதநம் செய்துகொள்ளவேண்டுமென்றும், இத்யாதியான வ்யவஸ்தை ஏற்படுத்தினால் விஶேஷித்த ஆநுகூல்யம் ஸித்திக்கும் என்று அடியேனுடைய புத்தியில் தோன்றுகிறது. ஸ்ரீ ஸ்வாமிக்கு மிகுந்த ஸ்வாதந்த்ர்ய ஹாநியின்றிக்கே இந்த வ்யவஸ்தையை ஏற்படுத்தக்கூடும். கமிட்டியாருடைய ஆலோசனையன்றிக்கே சில விஷயங்களில் ஸ்ரீ ஸ்வாமி ப்ரவ்ருத்திக்கவும், நியமநங்களைச் செலுத்தவும் ஸாத்யமாகும்படி சில நிர்ணயங்களைச் செய்துகொள்ளலாம். கமிட்டியார் செய்துகொள்ளும் விஜ்ஞாபநங்களையெல்லாம் ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளம் பற்றியே தீரவேணும் என்கிற நிர்ப்பந்தம் ஒன்றும் வேண்டுவதில்லை. அந்த விஜ்ஞாபநங்களில் பலீயஸ்ஸான அநுபபத்திகள் இருந்தால் அந்த அநுபபத்திகளை எடுத்து ஸ்ரீமுக ரூபமாகக் கமிட்டியாருக்கு நியமிக்க ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸர்வவித ஸ்வாதந்த்ர்யம் உண்டு. ப்ரக்ருத காலத்தை அநுஸரித்து, ஸ்ரீ ஸந்நிதியின் ஆயவ்யயங்களின் கணக்கை ஆதுநிகரீதியின்படி வைத்துக் கொள்வதும், ப்ரதி ஸம்வத்ஸரமும் கணக்கில் தேர்ந்த ஒருவரைக்கொண்டு ஸம்வத்ஸராந்தக் கணக்கைப் பரிஶீலநம் செய்துவைத்து அப்படிப் பரிஶீலிக்கப்பட்ட கணக்கின் ஸங்க்ரஹத்தை ஸ்ரீ ஸந்நிதியில் நடந்திருக்கும் ஸாம்வத்ஸரிக விஶேஷங்கள் அடங்கிய ஒரு ஸ்ரீமுகத்துடன் ஶிஷ்யர்கள் எல்லாரும் ஸேவித்துக்கொள்ளும்படி ப்ரசுரிப்பதும், ஸ்ரீ ஸ்வாமியின் ஸ்வாதந்த்ர்ய பங்கத்திற்குக் காரணங்கள் ஆகா; ப்ரத்யுத மிகவும் ஶோபாவஹங்களாகவே இருக்கும். ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு வார்த்தகத்தால் அபாடவம் ஜநித்துப் புத்திக்கு மாலிந்யம் உண்டாகும் காலங்களில், தமக்குப்பிறகு ஆஸ்தாநத்திற்கு எழுந்தருள வேண்டிய ஸ்வாமியை நியமிக்கும் காலங்களில் இந்தக்



கமிட்டியாருடைய ஸஹாயம் மிகவும் உபகாரகமாகவே இருக்கும். இப்பொழுது ஸ்ரீ ஸந்நிதியையும் அதை ஆஶ்ரயித்து நிற்கும் ஶிஷ்யர்களையும் க்ரஸித்து விடும்போலிருக்கும் விபத்து நிவாரணமாக வேண்டுமானால், கீழ்க்கூறிய சாயையை அநுஸரித்து ஏதாவது ஒரு வ்யவஸ்தை சீக்கிரத்தில் செய்யவேண்டுவது அவஶ்யமே.

'இந்த ஆலோசனை உசிதமாகவே இருக்கிறது; ஆனால்,இதை ஸாதித்துக்கொள்ளும் மார்க்கம் யாது?' என்கிற ப்ரஶ்நம் ஜநிக்கலாம். இதற்கு உத்தரமாகப் பலபெயர் பலவித உபாயங்களைச் சொல்வார்கள். அடியேனுக்குத் தோன்றுகிறதாவது - நமக்கெல்லாம் உபேய வஸ்துவாக இருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரே இதற்கு உபாயம் என்பது தான். இப்பொழுது கிஞ்சித் உதாஸீநர்களாக இருக்கும் ஶிஷ்யர்கள் எல்லாரையும் ஒன்று சேர்த்து, நம்முடைய மநோரதம் என்னவென்பதை அவர்களுக்குப் போதித்து, 'அநவேக்ஷிதமாக விட்டுவிட்டால் ஸ்ரீமடம் ஶாந்தமாகிவிடும் போல இருக்கிறது' என்பதையும் எடுத்துச்சொல்லி, இந்த ப்ரயத்நத்தில் அபசாராவஹமான அம்ஶம் ஒன்றுமில்லை என்பதையும் விவரித்து, இவ்விதமான உத்போதநத்தால் தெளிந்த புத்தியுடன்கூடிய ஶிஷ்யர்கள் எல்லாருடனும் நாம் எல்லாரும் ஸமவேதர்களாக ஸ்ரீ ஸந்நிதிக்கு விடைகொண்டு, ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடிகளைப் பிடித்து இந்த ஆலோசனையின் ஸாதுபாவத்தை அவருடைய திருவுள்ளத்தில் வற்புறுத்தி விண்ணப்பித்து அவரைக்கொண்டு இதை ஸாதித்துக்கொள்வதே உசிததமமான மார்க்கம். ஸ்ரீ ஸ்வாமி கடாக்ஷித்து இந்தச் சீர்திருத்தத்தைச் செய்ய யத்தனித்தால், ஒரு க்ஷணத்தில் முழுவதும் ஸாதிதமாகிவிடும்; அவருடைய கடாக்ஷமன்றிக்கே நாம் இதர பலங்களைக் கொண்டு ஸாதிக்க முயல்வது அதிமாத்ரம் ஶ்ரமாவஹமாக இருக்கும். தவிரவும், பெருத்த ஔதார்யமும் பரார்த்தைக ப்ரவணதையும் பொருந்தியிருக்கும் ஸ்ரீ ஸ்வாமி என்ன காரணத்தால் நம்முடைய விஜ்ஞாபநத்தை நிராகரிக்கக்கூடும்? “ [illegible]

नाथ, विद्धि व्रजभवं स्वतन्त्रो यो यदूत्तमः
स्वयमजनि सत्यस्य भजतां - प्रतिज्ञां स्वाभिज्ञां स्व-
कपिनी सत्यनाम समेत'' विहाय सम्भवाय प्रतिनिय-
मितीदं विद्धि भवेषा ॥

இம்மாதிரியான நோக்கங்களைத் தமது மநஸ்ஸில் வைத்துக் கொண்டே, சில ஆஸ்திகர்கள், ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை என்னும் ஒரு ஸபையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்களை ஒன்றுசேர்க்கவும், அவர்களுக்கு வஸ்து ஸ்திதியை உள்ளபடி தெரிவிக்கவும், மூன்று ஸம்வத்ஸர காலமாக அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் பரிஶ்ரமம் இவ்வளவு என்று சொல்லி முடியாது. அர்த்தவிஷயமாகவும் தேஹ ஶ்ரம விஷயமாகவும் அவர்கள் கொஞ்சமேனும் ஸங்கோசிக்கவில்லை. மூன்று வருஷமாக அவர்கள் நடத்திவரும் வருஷாந்த மஹா ஸங்கமும், ப்ரதிமாஸம் அவர்கள் ப்ரசுரித்துவரும் ஸ்ரீ வேதாந்ததீபிகை என்னும் பத்ரிகையுமே, அதற்கு நிதர்ஶநங்கள். ஆனால், 'இந்த மாதிரியான ஸங்கங்களாலும் இந்தப் பத்ரிகையாலும் அவர்கள் என்ன ஸாதித்து விட்டார்கள்?' என்று கேட்கலாம். யதார்த்தமாகவே சிலர், 'இந்த ஸபை என்ன கார்யத்தை ஸாதித்து விட்டது? மூன்று வருஷமாக ஶ்ரமப்பட்டும் இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியை அபிமுகராகச் செய்துகொள்ள ஸாத்யப்படவில்லையே!' என்று இத்யாதியாக அநுவதிக்கக்கூட அநர்ஹங்களான வாக்யங்களைச் சொல்லி ஸ்ரீ ஸபையை நிந்திக்கிறார்கள். ஸ்ரீ ஸ்வாமியினிடத்தில் அந்த மாதிரியாக அபசாரப்படுவது இந்த ஸபைக்கு நோக்கமாக இருந்தால், ஸபையின் ப்ரயத்நம் விதததமாகிவிட்டது என்றே சொல்ல வேணும். அப்படிப்பட்ட அஸப்ய மார்க்கத்தில் ஸப்யர்கள் ப்ரவேஶிப்பதாக ஸ்வப்நத்திலும் சிந்தித்ததில்லை. குடும்ப கார்ய வ்யக்ரதையால் கிஞ்சித் உதாஸீநர்களாக இருக்கும் ஶிஷ்யர்களை ப்ரபோதித்து, ஸ்ரீ ஸந்நிதி விஷயங்களில் ஒரு ஶ்ரத்தையை அவர்கள் எடுத்துக்கொள்ளும்படி செய்யவும், கீழ்ச்சொல்லியிருக்கிறபடி ஸ்ரீ ஸந்நிதியின் ஸ்திதியை அவர்களுடைய மநஸ்ஸில் தெளிய விளக்கவும், அதனால் ஶுத்தியை அடைந்த மநஸ்ஸையுடைய ஶிஷ்யர்களைச் சேர்த்துக்கொண்டு ஸ்ரீ ஸ்வாமியிடம் போய் அவரது திருவடிகளை அவலம்பித்து ஸமவேதர்களாக அவருடைய மநஸ் இளகும்படி கதறவுமன்றோ, இந்த ஸப்யர்களுடைய ப்ரயத்நம்? அது பெரும்பாலும் நிஷ்பந்நமாகி யிருக்கிறது என்பதில் கொஞ்சமேனும் ஸந்தேஹமில்லை. ஸ்ரீ ஸந்நிதி விஷயத்தில் ஶ்ரத்தாளுக்களாக இருக்கும் ஶிஷ்யர்கள் முன்னிருந்ததைக் காட்டிலும் இப்பொழுது எவ்வளவோ மடங்கு வ்ருத்தியாகி யிருக்கிறார்கள். இந்த வ்ருத்தியின் ஹேதுவில் ஶிஷ்ய ஸபைக்கு ஏதாவது ஸ்வல்ப பாகம் இருந்தாலும் ஸபை க்ருதார்த்தமென்று சொல்வதில் யாதுதான் ஆக்ஷேபம்?

ஆனால், 'இந்த உபாயத்தால் பலத்தை அந்வேஷிப்பது சிர கால ஸாத்யமாச்சுதே' என்கிற பீதி ஒன்று உண்டு. அது ஸகாரணமான பீதிதான். ஆனால், பஹுகாலமாக வ்ருத்தியாகி யிருக்கும் நோய்க்கு க்ஷணகாலத்தில் ப்ரதீகாரத்தைத் தேடுவதுதான் ஸபலமாகுமா?

“यद्यप्येषा भवेद्भूतिः हितकृद्विविधा ततः ।
कर्या भयप्रसिद्धा हि विहितार्थप्रयोजया”

श्री लक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः.

---

[stamp] ... 600 003.

ஸ்ரீ:

# ஸ்ரீ சதுஸ்லோகீ விவரணம்.

(தொடர்ச்சி.)

ஈஸ்வரத்வித்வம் என்னும் தோஷம் வராதென்பதற்கு 'பத்நீ' என்னும் நிர்த்தேசம் எப்படிப் பரிஹாரமென்றால், இங்கே யாகங்களிலும் லோகத்திலும் பத்நீ பதியுடன் சேர்ந்து எல்லா வ்யாபாரங்களையும் செய்தாலும், பதிக்கு ப்ராதாந்யம் ப்ரஸித்தமாயிருப்பது அநுபவஸித்தம். பத்நியுடன் சேர்ந்திருந்தாலும் யஜமானன் ஒருவரே. அதுபோலப் பகவான் தன்னைப்போல விபுவாய் உபய விபூதிக்கும் சேஷியாய் ஸர்வாவஸ்தையிலும் அந்வயித்தவளாய் எப்போதும் விட்டுப் பிரியாதவளுமான ஸ்ரீ யுடன் சேர்ந்து எந்த ஸ்ருஷ்டியாதி வ்யாபாரங்களைச் செய்தாலும் அவருக்கு ப்ராதாந்யம் ஏற்பட்டிருப்பதால் பத்நியுடன் சேர்ந்த அவரை ஈஸ்வரனாய்ச் சொல்வதில் ஈஸ்வரன் இரண்டென்று சொன்னதாய் ஆகாதென்று கருத்து. இதை உத்தேசித்துத்தான் 'உபயா ப்ரதிஷ்டாநம் தைவகம் மோக்ஷகம்' 'ஸநகாதக விவோதிதள' என்பது முதலான ப்ரமாணவாக்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த விஷயத்தில் வேறொரு வைதிகமான உதாஹரணமும் சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது யாகப்ரகரணங்களில் சில யாகங்களுக்குச் சேர்ந்த இரண்டு தேவதைகள் உத்தேச்ய தைவமாக விதிக்கப் படுகின்றன. சிலவிடங்களில் அக்நியும் ஸோமனும், சிலவிடங்களில அக்நியும் விஷ்ணுவும், சிலவிடங்களில் அக்கிநியும் இந்த்ரனும் இது போன்றமற்ற தேவதா த்வந்த்வங்களும் ஒரு தேவதையாய் ஆவாஹநாதிகள் செய்யப்பட்டு ஹவிர்ப்பாகம் பெறுகின்றன். இது "தேவதா ஸம்ஸ ஹவிஸ்ப்ராய" என்று குறிப்பிக்கப் பட்டிருக்கிறது. இந்த ந்யாயத்தாலும் ஸ்ரீயும் பகவானும் பின்னர் களாயிருந்தாலும் ஈஸ்வரத்வித்வத்துக்கு இடமில்லை.



இதை ஸ்தோத்ரத்தில் ஆசார்யரும் "உதேஸ்யகம் ஜநநி ஸஜதோ ரஸ்லோதா வாயிமம்யம்" என்கிற ஸ்ரீஸ்துதிஸ்லோகத்திலும் "ஓஹெம்ஹ்ராஹ்ர விஷ்ணுவ்ருஹ்ய திஷ" என்கிற ந்யாஸதிலகஸ்லோகத்திலும் மற்றும் பலக்ரந்தங்களிலும் உபபாதித்திருக்கிறார். 'ஸ்வாமெவாஹ: கதிவிஜவரெ ஸ்வத்வியம்மொகநாயம்" என்கிற ஸ்ரீஸ்துதி ஸ்லோகத்திலும் ஸ்ரீ நிகமாந்த தேசிகன், அபேத பக்ஷத்தையும் ஜீவபக்ஷத்தையும் அநீஸ்வரத்வபக்ஷத்தையும் அவலம்பிக்கிறவர்களை 'கிம்வி ஊத்தீயபூஹ்ர:' என்று நிந்தித்து 'ஹாவிரஹ்பளஸமவதி யாவாம் தெவதம் ஊம்வதீந:' என்று உபயநிஷ்ட ஈஸ்வரத்வபக்ஷத்தை ஸ்வாபிப்ராயமாக நிர்த்தேசிக்கிறார். ஆசார்யர்கள் ஸ்தோத்ரங்களில் சில விடங்களில் அத்யுக்திகள் செய்வது வழக்கமானாலும் இந்த இடத்தில் அத்யுக்தி ஒன்று மில்லையென்று சொல்லவேணும். இதற்கு ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனுடைய இதரக்ரந்தங்களும் ப்ரமாணங்கள். லக்ஷ்மீ விஸிஷ்டனை பகவானே ப்ராப்யனும் உபாயமாகவு மிருப்பதால் ப்ராப்யத்வித்வ மாவது உபாயத்வித்வமாவது ஸம்பவிக்காதென்னுமிடம் ஸ்ரீ மத் ரஹஸ்யத்யரஸாரத்தில் ஸித்தோபாயஸோதநாதி காரத்திலும் மற்ற விடங்களிலும் கண்டு கொள்வது. இந்த ஸகமெஸஷிகவ நிபந்தநமான ஸகத்வத்தை யுத்தேசித்தே "எம்பெருமானைச் சொன்னவிடத்தில் பிராட்டியையும் சொல்லிற்று" மென்கிற உடையவர் வார்த்தையும், "தஜஸஹ்ராவாகவாம் நவ்ரய மஹியதெ ஸ்ருதிரவி" என்கிற பட்டர்வர்க்யமும் உபபந்நங்கள்.

மேலும் பதிபத்நிகளுக்குப் பலவிஷயங்களில் ஸாம்யமிருந்தாலும், பதிப்ராதாந்ய மிருப்பதுபோல், பகவானுக்கும் லக்ஷ்மிக்கும் சேஷித்வாதிகளில் ஸாம்யமிருந்தும் குணங்களில் தாரதம்யம் சில அம்சங்களில் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அதாவது பகவானுக்கு தண்டதரத்வம், பராக்ரமம், ஸ்தைர்யம் முதலான குணங்களும், பிராட்டிக்கு பதிபாரதந்த்ரியம், மார்த்தவம் வாத்ஸல்யம் முதலான குணங்களும் ப்ரதிநியதங்கள். இதைப் பட்டர்,

யாவத்வாசாம் தாத்யேஶ்வர்யம் பராவரதா ஸ்தாநேஷு
ஸ்ரிதாநாம் ஸ்வாமிநீ பவதி பத்யுரபி ஸ்வாநுஸாரிணா ॥
ஸ்ரீஸ்ஸ்வைகாந்தாந் ப்ரதிபதிபாராயணகாரிணா
கடாக்ஷா ஸ்வாஹோத்தம் பவதி யாவயோ ராத்ரி ஸித்தா ॥

என்கிற ஸ்லோகத்தில் வெளியிட்டார். இதனுல், ஸ்ரீ ஸ்ரீசர்களுக்குச்சில பேதம் ஏற்பட்டால் அவருக்கு ஈஸ்வரத்வமும் மோக்ஷப்ரதத்வாதிகளும் சொல்வது கூடுமோ என்னில் இந்த விபாகம் உபயேச்சையால் உண்டான விபாகமென்று சொல்வதால், அந்த தோஷம் வராதென்று ஆசார்யர்கள் பரிஹரித்திருக்கிருர்கள். பிராட்டிக்குப் புருஷகாரத்வம் ஒப்புக்கொள்வதினுல் பகவானுக்கு எப்படி ஶக்திலோபம் இல்லேயோ அது போல் பகவதிச்சையாலும் பிராட்டியின் இச்சையாலும் சில குணங்களே தம்பதிகள் விபஜித்து அநுபவிப்பது அவர்கள் சக்திக்குறைவுக்குக் காரணமாகாதென்று தாத்பர்யம்.

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் இந்த லக்ஷ்மீவிஷயமான அணுத்வபக்ஷத்தையும், விபுத்வபக்ஷத்தில் ஜீவத்வபக்ஷத்தையும், விபுவாயிருந்தும் பாதந்த்ரமாயிருப்பதால் ஜீவனுமல்லாமல் ஈஸ்வரனுமல்லாமல் இருக்கும் பக்ஷத்தையும், ஈஸ்வரகோடியில் சேர்த்தபக்ஷத்தையும் ஆகியநான்கு பக்ஷங்களேயும் விவரித்து

ப்ராப்யத்வேந ஸமே ஹேதுஷு பக்ஷேஷ்வேஷு து பத்ந்யபி ।
ஸ்வதந்த்ர பதிநித்யேச்சா ஸித்தம் ஸர்வம் விபூதிமத் ஶ்ரிய: ॥

என்கிறகாரிகையால் இந்த நான்கு பக்ஷங்களிலும் லக்ஷ்மீக்கு பதியின் நித்யேச்சையாலே மாத்ரம் ஈஸ்வரத்வம் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்று அநுக்ரஹித்து, இதையே

“அத: (அத்த:) பதீச்சாதீநமேவ தை: பத்யா வைஶ்வர்ய விப்ரம:” என்று நிகமநம் பண்ணினுர். ஆகையால் இந்த 4 - பக்ஷங்களில் கடைசியான 4 - வது பக்ஷத்திலும் லக்ஷ்மீக்கு முக்யேஸ்வரத்வம் சொன்னதாய் ஏற்படவில்லே. பதியின் இச்சாதீநமான வைபவமே லக்ஷ்மீக்குச் சொன்னதாய் ஏற்படுகிறது. இந்த 4 - வது பக்ஷத்தில் லக்ஷ்மீக்கு ப்ரதாந ப்ராப்யத்வம், ஸ்ருஷ்டியாதிகளில் அந்வயம், இச்சைக்கு விகாதமில்லாமலிருத்தல், இவைகளெல்லாம் பதியின் இச்சையாலென்றே வ்யக்தமாகிறது. இதற்குமேல் 5 - வது ஒருபக்ஷம் “தஸ்யா தர்மஹாநி உபயோஸ்ஸ ப்ரயுக்த இதி கேசிதாஹு:” என்கிற வாக்யத்திஞல் சொல்லப் படுகிறது. அதில் “உபயோஸ்ஸ ப்ரயுக்தத்வம்” என்பது ஒவ்வொருவருடைய ஸங்கல்பமும் இதரஸங்கல்பத்துக்கு விரோதம் வராமல் நிறைவேறுவது. இத்தால் லக்ஷ்மீக்கு முக்யமான ஈஸ்வரத்வமும், ஸர்வகார்யங்களிலும் கர்த்ருத்வத்துக்கு ஸ்வரூபயோக்யதையும் இருவர்களுடைய அவிருத்தமான இச்சையால் வ்யாபாரங்களில் விபாகமும் சொல்லப் பட்டதாயிற்று. அப்படி பரஸ்பர இச்சைகளுக்கு விகாதமில்லாமலிருப்பதையுத்தேசித்தே “ஸம்ஶ்ரிதாஶ்ரிதாபரௌ” என்றும் “தவம்ஶித பராயீ நோ விபக்தஸ்விஷம்” எறும் ஆசார்யர்கள் ஸ்தோத்ரம் செய்தார்கள். இந்தப் பக்ஷத்தில் பகவானுக்கும் பிராட்டிக்கும் எல்லா அம்சங்களிலும் பரமஸாம்யம் சொல்லபட்டபோதிலும் உபயேச்சா ப்ரயுக்தமாய் சில வ்யாபாரங்களில் மாத்ரம் விபாகம் ஒப்புக்கொள்ளப் படவேண்டுமென்று சொல்லப்பட்டது.



யத்கிஞ்சித் உபபேதஸ்ஸ்யாத் யதி நார்த்தாந்தரேஷ்யதே ।
தயோரைக்ய வ்யவஸ்தாபி நவிருத்தா ஸ்வபாவத: ॥

என்பதனுல்; சிலபேதங்கள் இருப்பது முக்யேச்வரத்வத்துக்குப்பாதகமாக மாட்டாதென்று அநுக்ரஹிக்கப் பட்டது. ஆக இந்த ஐந்து பக்ஷங்களேயும் சொல்லி ஸ்ரீ நிகமாந்ததேசிகன்,

பஞ்சஸ்வேதேஷு பக்ஷேஷு க்ஷ்மாபிதேக: ப்ரமாணவாந் ।
ஸமஸ்தகல்யா ஸாதாரண்யம் ஸதயா ஸாப்ரதிஷ்டிதம் ।
இத்யேவம் ஸ்விதம் ஶேஷாம் ஸம்ஶயேபி விபஶ்சிதாம் ।
உபயாத்தாம் ஶ்ரேயஸ்யா ஸ்வாய ஸர்வஸம்பவ: ॥

என்று ப்ரகரணத்தை முடிக்கிருர்.

இதன் தாத்பர்யம், “மேற்சொன்ன ஐந்து பக்ஷங்களில் ஏதோ ஒன்று ப்ரமாணங்களுக்கு அநுகுணமானது. அதினுல் லக்ஷ்மீ விஸிஷ்டனுன பகவானே ஸர்வேச்வரன் என்பது ஸித்தமாய்

ஏற்படுகிறது. மேல்விவரித்த விவாதங்களினுல் சிலபாகங்களில் ஸந்தேஹ முண்டானுலும், முக்யமான அர்த்தத்தில் ஸம்சயத்துக்கு இடமில்லையாதலால், அவரவர்கள் உசிதமான உபாயத்தை அநுஷ்டித்துப் பலத்தையடைய யாதொரு விரோதமுமில்லை" என்பது தான்.

இந்தக் காரிகைகளினுல், ஆசார்யன் திருவுள்ளத்தில் ஐந்து பக்ஷங்களும் ஸமானம் என்ருவது, அவைகளில் விசேஷநிர்ணயம் வேண்டாமென்ருவது இருந்ததாகத் தோன்றவில்லை. விஷயம் துரூஹமானதாலும் இது ஸம்பந்தமான விவாதங்கள் புத்திக்குச் சலநத்தை உண்டுபண்ணு மானதினுலும் இந்தப் பக்ஷங்களில் ஒன்றிலும் விசேஷ நிர்ப்பந்தம் வேண்டாமென்றே ஆசார்யன் திருவுள்ளம். '[illegible]' என்று இங்கே கூடார்த்தமாய் ஸாதித்தது இதாக்ரந்தங்களிலே தன் அபிப்ராயம் வ்யக்தமாயிருப்பதைக்கொண்டு இங்கு விசேஷ நிர்த்தாரணம் வேண்டாமென்றபடி. அபிப்ராய பேதங்களினுல் வரும் காலுஷ்யங்கள் எப்போதும் ப்ரஸித்தம். ஆகையால் இந்த விஷயத்தில் ஸ்ரீ நிகமாந்த தேசிகன் வசநங்களையே ஸ்மரிப்பித்து இந்த வ்யாக்யாநம் முடிக்கப்படுகிறது.

"இறைநிலையுணர் வரிதென்று ஆழ்வாரருளிச் செய்த நிலத்திலே ஏதேனுமொரு வ்ருதாநிர்ப்பந்த மாகாது. "[illegible]" என்கிறபடியே தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்த தெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச்செய்தேயிறே நாம் ப்ரமாணசரணராய்ப் போருகிறது. ஆகையால் இவ்வீஸ்வர தத்வத்தையும் ஸம்ஶயித தத்த்வங்களையும் யதாப்ரமாணம் தெளிய ப்ராப்தம்"

---

இத்தம் ஶ்ரீநிகமாந்தார்ய [illegible] ।
விஷ்ணுதாஸேந விவ்ருதா [illegible] ஶாஸ்த்ரஸங்கதிஃ ॥
[illegible] ।
[illegible] ॥

ஶுபமஸ்து.

---

ஸ்ரீ:

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**ராஜ ப்ரதிநிதியவர்களின் தேஹஸ்திதி.**

சென்ற ஜனவரீ 27வ திங்கட்கிழமைதினம் இந்தியாவின் சட்ட நிர்மாண மஹாஸபை புதுப்ரதான நகரியான டில்லியில் முதல் முதல் கூடிற்று. அந்த ஆரம்போத்ஸவத்துக்கு ராஜப்ரதிநிதி லார்ட் ஹார்டிஞ்சு அவர்கள் விஜயம்செய்து அக்ராஸநம் வஹித்தார். பகவான் அநுக்ரஹத்தால் அவருக்கு இவ்வளவுவரையில் சரீரம் அநுகூலப்பட்டு இந்த சுபதினத்தில் நேரில் வரக்கூடியதா யிருந்ததைப்பற்றி இந்த தேசத்தில் அனைவரும் ஸந்தோஷமடைந்தார்களென்பதில் ஸந்தேஹமில்லை. ராஜப்ரதிநிதியவர்கள் தன் ச்ரமத்தைப் பாராட்டாமலும், இன்னமும் ஆராத சில வ்ரணங்களிருந்தும், ஓர் கை இன்னும் தூக்கி சிகித்ஸகர்களால் கட்டப்பட்டிருந்தும், இவைகளை யெல்லாம் கவனிக்காமலும் ப்ரஜைகளிடத்தில் ப்ரேமபாரவச்யத்தால் அந்த ஸபையின் ஆரம்பத்தில் எல்லோர்க்கும் ஹ்ருதயாவர்ஜகமாயும் அவர் குணபூர்த்திக்குப் பர்யாப்தமான நிதர்சனமாயுமுள்ள சில வார்த்தைகளைச் சொன்னர். அதாவது, இந்தத் தேசத்து அகில ப்ரஜைகளின் நிரந்தரமான ப்ரார்த்தனைகளினுலேயே ஸர்வ சக்தியான பகவான் தனக்குச் சரீராரோக்யத்தைச்செய்து வருவதாயும், ப்ரஜைகளின் ஸமதுக்கித்வமே தன் வேதனைகளை ப்ராயேண நிவர்த்தித்து விட்டதாயும், இந்த ஸார்வத்ரிகமான ப்ரஜைகளின் விச்வாஸத்தைத் தான் மிகவும் அபிமானிப்பதாயும், தன் விஷயத்தில் அபராதியான ஸர்வஜநத்ரோஹியின் பாபத்துக்காகத் தான் ரொம்பவும் துக்கிப்பதாயும், தன்மூலமான கோபம் தனக்கு இதரப்ரஜைகள் விஷயத்தில் கொஞ்சமேனுமில்லை யென்றும், தான் ஜனங்களுடன் கலந்து ஸௌலப்யத்துடன் வர்த்திக்கவேணுமென்கிற மனோரதத்துக்கு இந்த அக்ருத்யம் இடையூருகாதென்றும், தான் இதுவரையில் செய்துவந்த ப்ரஜாஹித ப்ரவ்ருத்திகள் ஒருகாலும் நிற்காதென்

றும், ஆனாலும் இப்படிப்பட்ட சில துஷ்டர்களால் இந்த தேசத்தாரின் ப்ரஸித்தமான ராஜபக்தி என்னும் குணம் மலினம்போல் ஆகிவிட்டதாயும், இந்த அநர்ஹமான அபக்யாதி நிச்சேஷமாய் விலக்கப்பட்டு இந்த தேசத்தாரின் ராஜபக்தி விஷயத்தில் ஸம்ப்ரதிபன்னமான க்யாதி ஓர் குறைவுமில்லாமல் நிர்மலமாய் விளங்க வேண்டுமென்றும், இன்னும் பல விதமான ஹிதவசனங்களைச் சொல்லி ஸபையாருக்கு நல்வரவளித்தார். அதற்கு மேல் ஸபையாரின் க்ருதஜ்ஞதையையும் ஸந்தோஷத்தையும் ப்ரமுகர்களான ஸர். ஜி. சிட்நாவிஸ் ப்ரபுவும் ஆர்ம்ஸ்ட்ராங் மஹாசயரும் எடுத்துப்பேசினர்கள். கொஞ்சகாலம் ஸமீபித்திருந்து ஸபையை உபக்ரமிப்பித்துப் பிறகு ராஜப்ரதிநிதிகள் விச்ரமிக்க வேறிடம் சென்றனர். இவ்வளவு தேஹச்ரமகாலத்தில் ராஜப்ரதிநிதியவர்கள் விஜயம் செய்து ஸபையை ஆரம்பித்த க்ருபையையும் இந்த மஹாபராதம்செய்த துஷ்டர்களுடைய பாபத்தால் இதர ஜநங்களிடத்தில் ஸௌஹார்த்தம் குறையாமலிருப்பதையும், இந்த தேசத்தின் க்ஷேமத்தில் அவர்களுக்கு இருக்கும் த்ருடமான விச்வாஸத்தையும் நினைத்தால் இந்த தேசத்துக்குப் பகவான் இதுவரையில் அநுக்ரஹித்துவந்த அனுகூலங்கள் எல்லாவற்றையும் காட்டிலும் இந்த ராஜப்ரதிநிதியை உயிர்தப்பவைத்துச் சரீரத்தை ரக்ஷித்துவரும் மஹா கருணையே மேற்பட்டதென்றும், இந்த இங்கிலீஷ் ராஜாக்களின் வசத்தில் இந்தத்தேசம் வந்ததால் உண்டான பாக்யத்தைக்காட்டிலும் இந்த ராஜப்ரதிநிதி நமக்குக் கிடைத்த மஹா பாக்யமே நமக்குப் பெரிதாய் தோன்றுகிற தென்றும் சொல்லத் தடையில்லை. அபாரகாருண்யநிதியாயும் ஸர்வ நியந்தாவுமான பகவான் சீக்ரத்தில் ராஜ ப்ரதிநிதி ஸ்வஸ்த சரீரராய் ஆகிவிடும்படி க்ருபை செய்யவேணுமென்பதே ஆஸேதுஹிமாசலம், ஆபஞ்சநதகேதாரம் உள்ள ஸர்வ ப்ரஜைகளுக்கும் திவாநிசம் நிரந்தரமான ப்ரார்த்தனை.

**ஸ்ரீ அழகியசிங்கரின் அஸ்வாஸ்த்யம்.**

ராஜமன்னர் கோவிலில் ஸ்ரீ அழகிய சிங்கருக்குச் சென்ற ஜனவரிமீ 18உ சனிக்கிழமை தினம் திடீரென்று திருமேனியில் ஒரு பார்ச்வத்தில் நோயுண்டாய் இரண்டுமூன்று தினங்கள் வரையில் எப்படி ஆகுமோவென்கிற சிந்தைக்கு ஹேதுவாயிருந்து இப்போது ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன்



16|99|

அங்கத்தினர்களும் ஸ்ரீமான் நத்தப்பட்டு ர[illegible]சாரியர், இஞ்சினீர் கோபாலய்யங்கார் முதலான இதர ஸந்நிதி சிஷ்யர்களும் ஸ்ரீ ஸ்வாமிக்கு அந்தரங்கராகவும் ஸ்ரீ ஸந்நிதி நல்ல ஹிதத்துக்கு [illegible]வதில் பூர்ணவிருப்பத்துடனுமிருக்கிற கோட்டூர் சடகோபமுதலியாருடன் ஸ்ரீ அழகிய சிங்கரை ஸேவித்து அவர் நியமனத்தினால் எல்லோரும் உட்கார்ந்த பிறகு, ஸ்ரீ ஸ்வாமி தாம்செய்த ஏற்பாடு சிஷ்யர்களுக்கு த்ருப்திகரமாயிருக்குமா வென்பதை சில ப்ரச்நங்களால் ஸூசித்துக்கேட்க ஸபையைச் சேர்ந்தவர்கள் ஸ்ரீ அழகியசிங்கர் இப்போது நியமித்திருக்கும் விஷயத்தைப்பற்றி ஸபையார்களால் கலந்து அபிப்ராயம் கொடுக்க ஸாவகாசப் படவில்லை என்றும், ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமி விஷயத்தில் ஸபையார்களின் அபிப்ராயம் இனித்தான் தெரிந்து அறிவிக்கக்கூடுமென்றும் ஸவிநயமாகத் தெரிவித்தார்கள். அதற்குமேல் ஸபையாரால் நிர்த்தேசிக்கப் பட்டவர்களில் உத்தமரா யிருப்பவரைத் தாம் நியமிக்காவிட்டாலும் தன்னால் ஹிதபுத்தியால் செய்யப்பட்ட நியமனத்தை பித்ருபக்தியுள்ள புத்ரர்கள் பிதாவின் நியமனத்தை அங்கீகரிப்பது போல் அநுவர்த்திக்க வேணுமென்று ஸ்ரீ அழகியசிங்கர் நியமித்து திருமேனியில் ச்ரமத்தைக்காட்ட மேல் வார்த்தைகளுக்கு இடமில்லாமல் எல்லோரும் வெளியில் வரும்படி நேர்ந்தது.

ஸ்ரீ அழகியசிங்கர் சிஷ்யர்களை ஒருவிதமாயும் கலக்காமல் நியமனம்செய்த விஷயத்தில் பலவிடங்களிலிருக்கும் சிஷ்யர்களுக்குப் பின்ன பின்ன அபிப்ராயங்களிருப்பதாகத் தெரியவருகிறது. அந்த அபிப்ராயங்கள் வெளிக்குவரும் வரையில் நாம் இதின் யுக்தாயுக்தத்தை விசாரிக்க இஷ்டப்படவில்லை. ஸ்ரீஸ்வாமியின் நியமனத்தில் தங்கள் தங்கள் அபிப்ராயங்களைச் சிஷ்யஸபையாரும் இதர சிஷ்யர்களும் சீக்ரத்தில் ஸ்ரீ அழகிய சிங்கரிடம் தெரிவிப்பார்களென்று நம்புகிறோம்.

மேலெழுதியது அச்சிட்டபிறகு, இந்த நியமன விஷயமாய் நாம் ப[illegible] சிஷ்யர்களின் அபிப்ராயங்களை அறிவதில், ஸ்ரீ அழகிய சிங்கர் உயில் மூலமாயும் சிஷ்யர்கள் அபிப்ராயத்தைக் கொஞ்ச[illegible]னும் கேட்காமலும் செய்த நியமன[illegible] இந்த ஆஸ்தானத்தின் வழக்

# விள்ம்பரம்.

## 'புட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தியில்லாதவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

### வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் சிவப்பு சன்னக்கம்பி பட்டைக்கரை ருத்திராக்ஷக்கரை போட்டவை கீழேகண்ட விலைகளுக்குக் கிடைக்கும்.

| நீளம் | முழம் | அகலம் | | விலை ரூபா. | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | ,, | $2\frac{1}{2}$ | ,, | 6 | முதல் | 8 | வரை |
| 5 | ,, | 3 | ,, | 7 | ,, | 9 | ,, |
| 6 | ,, | $2\frac{1}{2}$ | ,, | 8 | ,, | 9 | ,, |
| 6 | ,, | 3 | ,, | 9 | ,, | 12 | ,, |
| 7 | ,, | 3 | ,, | 10 | ,, | 13 | ,, |
| 8 | ,, | 3 | ,, | 12 | ,, | 15 | ,, |
| 9 | ,, | 3 | ,, | 14 | ,, | 16 | ,, |
| 10-12 | ,, | 3 | ,, | 15 | ,, | 20 | ,, |
| 15-16-18 | ,, | $2\frac{1}{2}$-3, சேலைகள் | | | | | |

நயம் விலை ரூபா. 20 முதல் 30 வரை.

இந்த வேஷ்டிகள், ஜரிகைக்கரை போட்டும் கிடைக்கும். உடல் சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், சேகவர்ணம், காஷாயநிறம் இன்னமும் வேண்டிய நிறங்களிலும் கிடைக்கும்.

### பீதாம்பரப் பட்டுச்சேலைகள்.

16-முழம் நீளம் $2\frac{1}{2}$ - அகலம் விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள் உடல் சாதா. சகல நிறங்களிலும் சேலைகள் கிடைக்கும். சேலை 1-க்கு ரூ. 30-முதல் 200-வரை. மட்டம் சேலைகள் ரூ. 20 முதல் 30-வரை. ஷை சேலைகள் உடலிலும் ஜரிகைப்பூபுட்டா போட்டது. நயம் ரூ. 35-முதல் 300-வரை. மட்டம் ரூ. 25-முதல் 30 -வரை.

### ரவிக்கைகள்.

ரவிக்கைகள் விளிம்பு முந்தி ஜரிகைவேலைசெய்ததும், உடலிலும் ஜரிகை பூக்கள்போட்டதும். ரவிக்கை 1-க்கு ரூ. 2-முதல் ரூ. 15-வரை கிடைக்கும்.

### பட்டுதுப்பட்டாக்கள்.

6-முதல் நீளம், $2\frac{1}{2}$-முதல் அகலம்; விளிம்பு முந்தி ஜரிகை வேலைகளும் உடலில் ஜரிகை பூக்கள்போட்டது. மட்டம் ரூ. 7 - முதல் 15 - வரை. நயம் 15-முதல் 50 - வரை.

### காஷ்மீர் சால்வைகள்.

கம்பளி (Woollen) காஷ்மீர் சால்வைகள் 6-முழம் நீளம், $2\frac{1}{2}$- அகலம். விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள், மூலையில் மாங்காய்போட்டது. மட்டம் ரூ. 9-முதல் 15-வரை. நயம் 15-முதல் 100-வரை.

சகல பட்டு பீதாம்பர காட்லாகு இனமாக அனுப்பப்படும்.

விலாசம் :—மானேஜர்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.